கலைஞரின்
கடிதங்கள்



52

02.09.2014 - முதல்
17.05.2015 - வரை

சீதை பதிப்பகம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 52

02.09.2014 - 17.05.2015

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
அய்வகம் நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

தலைவர் கலைஞர்

சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549/97907 06548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்

9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக
வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

GOWRA PUTHAGA MAIYAM

9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

AVAILABLE @ :

கௌரா ஏஜென்ஸீஸ்

எண்.1 சாமி தெரு,
சாய் பாபா கோவில் பின்புறம்
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

GOWRA AGENCIES

NO : 1 SAMY STREET,
SAI BABA TEMPLE BACK SIDE
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்


KALAIGNARIN KADITHANGAL

விலை : ரூ.300.00 CODE :2300

எழுதியவர் : கலைஞர்
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஓய்வு
கலைஞரின் செயலாளர்கள்
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE
© RIGHTS :
PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2022
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
CLASSIC PRINTERS, CHENNAI - 2.
ISBN :

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூலகம்
நினைவகம்
அண்ணா அறிவாலயம்



அம்மாவுக்கு...

கௌரா பதிப்பகக் குழுமம்

மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

“கலைஞரின் கடிதங்கள்” அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய - பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை - சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் - பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், “கலைஞரின் கடிதங்கள்” தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் “அணி”யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 36 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் "கோகிலாம்பாள் கடிதங்கள்", இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய "அன்னைக்கு', "தம்பிக்கு", "நண்பர்க்கு', "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் "தம்பிக்கு" கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய "உடன்பிறப்புக்கு" கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க.'' என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

“எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, “அன்பு நண்பா !” என விளித்து, “ஜாக்குலின்கள்” என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்”
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”

“படமும் பாடமும்”
“மூலவர் மூவர் முரசொலி”

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். –

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

“நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!”
“எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?”
“கண்ணுக்கு விருந்தானாய் – மனப் புண்ணுக்கு மருந்தானாய்!”
“அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?”
“இடர் எது வரினும், ஏற்பேன்“
“பறித்து வராத பாரிஜாதம்“

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! “யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!”

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. 4051 **கடிதங்களைக் கொண்ட 54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	ஆண்டு	பக்கம்
3916. மாற்றுத் திறனாளிகளை ஏமாற்றும் அ.தி.மு.க. ஆட்சி!	2-9-2014	21
3917. கழகப் பொறுப்புக்கு போட்டியிட்டு வெற்றி பெறுகிறவர்களும், வெற்றிவாய்ப்பை இழப்பவர்களும் என்றைக்கும் என் உடன்பிறப்புகள்தான்!	05-09-2014	28
3918. “தாமதமாகும் நீதி; தடுக்கப்படும் நீதியா?”	9-9-2014	35
3919. புது வகை ஜனநாயகம் பூத்துக் குலுங்குது; பாரீர்!	10-9-2014	41
3920. உன் வருகையை எதிர்பார்த்துக் காத்திருப்பேன்!	12-9-2014	48
3921. தளர்ச்சிப் பாதையில் தடுமாறும் தமிழக ஆட்சி!	18-09-2014	54
3922. இனியும் நம்புவதற்கு மக்கள் தயாராக இல்லை!	22-9-2014	60
3923. வென்றது ஜனநாயகமா? பணநாயகமா?	24-9-2014	68
3924. பொய்யாகிப் போன “புஸ்வாணத்” திட்டங்கள்!	26-9-2014	75
3925. நம்மீது பழி கூறுபவருக்கு நாக்கு ஒன்றா? இரண்டா?	11-10-2014	82

3926. எத்தனை தொழில்களைத்தான் மூடுவது?	12-10-2014	92
3927. ஒய்யாரக் கொண்டையாம்; தாழம்பூவாம்! (1)	20-10-2014	98
3928. ஒய்யாரக் கொண்டையாம்; தாழம்பூவாம்! (2)	21-10-2013	106
3929. ஒய்யாரக் கொண்டையாம்; தாழம்பூவாம்! (3)	22-10-2014	115
3930. ஒய்யாரக் கொண்டையாம்; தாழம்பூவாம்! (4)	24-10-2014	122
3931. ஒய்யாரக் கொண்டையாம்; தாழம்பூவாம்! (5)	25-10-2014	129
3932. ஒய்யாரக் கொண்டையாம்; தாழம்பூவாம்! (6)	26-10-2014	138
3933. பதவி நிலைத்திடவாவது; பதறி எழுவீர்!	27-10-2014	150
3934. நம்பிக்கைக் கருவூலம்தானே நமது கழகம்!	28-10-2014	158
3935. ஜனநாயகம் சரிவரச் செயல்பட!	2-11-2014	166
3936. கேடு கெட்ட ஆட்சியும், “பஜனை” பாடும் சில ஏடுகளும்!	7-11-2014	172
3937. செயல்படுகிற ஆட்சி சீக்கிரம் வருமா?	8-11-2014	179
3938. தொடர்ந்து மௌன சாட்சிகளாக இருப்பதா?	14-11-2014	186
3939. இருள் அகலவும், இதயங்கள் மலரவும் இதோ திட்டங்கள்!	22-11-2014	191
3940. ஆச்சார்யா தரும் அதிர்ச்சித் தகவல்கள்!	23-11-2014	199

3941. நல்ல சமயம் இது; நழுவ விடலாமா?	25-11-2014	207
3942. அன்று நடந்தது என்ன? என்ன?	28-11-2014	214
3943. பன்னீருக்கு அழகு, மௌனம் காத்தல்!	30-11-2014	226
3944. எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே!	02-12-2014	235
3945. எல்லோரின் மனத்திலும் எழுந்துள்ள அய்யப்பாடு!	4-12-2014	242
3946. இடர் பல கடந்து; இந்தத் தொடர் பணியை ஆற்றுவோம் வாரீர்!	17-12-2014	252
3947. என்றும் வாழும் இந்தக் கழகம்!	3-1-2015	260
3948. வெட்கமில்லை; வெட்கமில்லை; யாருக்கும் வெட்கமில்லை!	9-1-2015	267
3949. தை முதல் நாளே; தமிழர் புத்தாண்டு திருநாள்!	12-01-2015	274
3950. முன்னாள் பிரதமர்களின் உறுதிமொழி காப்பாற்றப்படுமா?	24-01-2015	281
3951. அகதிகள் பிரச்சினையில் அ.தி.மு.க. அரசின் பொறுப்பற்ற செயல்!	31-1-2015	289
3952. நம்பிக்கை வீண் போகலாமா?	05-02-2015	296
3953. அதிர்ச்சி வைத்தியம் அவசியம் அல்லவா?	12-2-2015	304
3954. நீதித்துறை வழங்கியது பாராட்டுரையா? இடித்துரையா?	22-2-2015	312

3955. பூ சுற்றும் கதை எவ்வளவு நாளைக்கு?	23-2-2015	320
3956. அ.தி.மு.க. ஆட்சியில் இருட்டு, புரட்டு - அனைத்தும் உண்டு!	26-2-2015	327
3957. கொள்கை காத்திட குவியட்டும் தேர்தல் நிதி!	12-03-2015	335
3958. நீதி என்றும் வெல்லும்; நிச்சயமாக வெல்லும்!	13-3-2015	341
3959. ஆர்ப்பாட்டப் போர்ப்பாட்டு!	18-3-2015	351
3960. “நீதியே, நீ இன்னும் இருக்கின்றாயா?”	15-4-2015	358
3961. கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவர்கள்!	23-4-2015	366
3962. மெட்ரோ, மோனோ ரெயில் திட்டங்கள் - ஒரு விளக்கம்!	26-4-2015	372
3963. அரசு அலுவலர்களும், அ.தி.மு.க. அரசும்,	06-05-2015	379
3964. இந்த ஆட்சிக்குத்தான் எத்தனை பெயர்கள்?	9-5-2015	385
3965. காயப்படுத்தப்படும் நீதி; கட்டாயம் எழுந்து நின்று ஜெயிக்கும்!	17-05-2015	392

3916. மாற்றுத் திறனாளிகளை ஏமாற்றும் அ.தி.மு.க. ஆட்சி!

உடன்பிறப்பே,

மனித சமுதாயத்தில், காது கேளாதவராய், கண் தெரியாதவராய், வாய் பேச முடியாதவர்களாய், கை கால்களைப் பயன்படுத்த இயலாதவர்களாய், மன நோயாளிகளாய் உள்ள அனைவரையுமே "ஊனமுற்றோர்" என்பதற்குப் பதிலாக, ஓர் அவயவத்தின் செயல்பாட்டுக் குறையால் அவர்களுடைய மற்றைய திறன் மேலும் ஒரு பங்கு சிறப்புறுகிறது என்ற அடிப்படையில் அவர்களை "மாற்றுத் திறனாளிகள்" என்று அழைக்கின்ற முறை குறித்து 2007 ஆம் ஆண்டிலேயே ஐக்கிய நாடுகள் அவையில் விவாதிக்கப்பட்டது.

அந்த விவாதத்தின் அடிப்படையில் மாற்றுத் திறனாளிகள் உரிமைக்கான ஐக்கிய நாடுகள் இணக்க ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு, அதில் நமது இந்திய நாடு ஏழாவது நாடாகக் கையொப்பம் இட்டுள்ளது.

அந்த இணக்க ஒப்பந்தம் 2008 ஆம் ஆண்டு மே மாதம் 3 ஆம் நாள் முதல், "சர்வதேச மனித உரிமைச் சட்டம்" ஆக அமைந்துள்ளது.

அதன்படி, தமிழகத்தில் இனி "ஊன முற்றோர்" என்ற சொல்லால் அழைக்கப்படுபவர்கள், "மாற்றுத் திறனாளிகள்" என அழைக்கப்படுவார்கள் என்று அறிவித்தேன்.

அதனைத் தொடர்ந்து 19.3.2010 அன்று புதிய சட்டப்பேரவையில் முதன்முதலாக அளிக்கப்பட்ட 2010-2011 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் "மாற்றுத் திறனாளிகளுக்கான தனித்துறை முதலமைச்சரின் நேரடி மேற்பார்வையில் இயங்கும்" என அறிவிக்கப்பட்டு அன்றே அரசாணையும் பிறப்பிக்கப்பட்டது.

அதன்பின்னர், தலைமைச் செயலகத்தில் "மாற்றுத் திறனாளிகள் நலத்துறை" எனும் புதிய துறை 27.3.2010 அன்று உருவாக்கப்பட்டு, அத்துறையின் அரசுச் செயலாளராக ஓர் ஐ.ஏ.எஸ். அதிகாரி பொறுப்பேற்றார்.

அதன் தொடர்ச்சியாக, தமிழக அரசு நிர்வாகத்தின்கீழ்ச் செயல்பட்டு வரும், "ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் அலுவலகம்" "மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரகம் (Commissionerate for the Welfare of the Differently Abled) " எனவும்,

"தமிழ்நாடு ஊனமுற்றோர் நல வாரியம்" "தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நல வாரியம் (Tamil Nadu Welfare Board for the Differently Abled)" எனவும் குறிப்பிடப்படும் என்றும்,

"ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர்" "மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் (Commissioner for the Differently Abled)" எனவும்,

"மாவட்ட ஊனமுற்றோருக்கான மறுவாழ்வு அலுவலர்" "மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் (District Differently Abled Welfare Officer)" எனவும், குறிப்பிடப்படுவார்கள் என்று கழக அரசு 27.3.2010 அன்று ஆணை பிறப்பித்து, நடைமுறைப்படுத்தியுள்ளது.

2010-2011இல் முதன்முறையாக மாற்றுத் திறனாளிகள் நலத் துறைக்கென பேரவையில் தனியே, "மானியக் கோரிக்கை" அளிக்கப்பட்டு, அதன்மீது மாற்றுத் திறனாளிகள் நலம் குறித்து விரிவாக ஆராய்ந்து புதிய திட்டங்களை உருவாக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

மாற்றுத் திறனாளிகள் நலனுக்கென முந்தைய அ.தி.மு.க. ஆட்சியில் 2005-2006 ஆம் ஆண்டில் 49 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிலையில்; கழக அரசு மாற்றுத் திறனாளிகளுக்கான நிதி ஒதுக்கீட்டினைப் படிப்படியாக உயர்த்தி, 2010-2011ஆம் ஆண்டில் 176 கோடி ரூபாய் என மூன்றரை மடங்கு உயர்த்தி ஒதுக்கீடு செய்தது.

தமிழக முதலமைச்சரைத் தலைவராகக் கொண்டு மாற்றுத் திறனாளிகள் நல வாரியம் 26.4.2010 அன்று தி.மு.கழக

ஆட்சியில் திருத்தி அமைக்கப்பட்டது. 10 வயதிற்கு மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் நல வாரிய உறுப்பினராகப் பதிவு செய்யப்பட்டனர். கழக ஆட்சிக் காலத்தில் 1 இலட்சத்து 99 ஆயிரத்து 856 மாற்றுத் திறனாளிகள் நல வாரிய உறுப்பினர்களாகச் சேர்ந்தனர்.

நான் கதை வசனம் எழுதிய இளைஞன் திரைப்படத்திற்காக கிடைத்த 45 இலட்சம் ரூபாய் தொகையினை முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வழங்கி, பின்னர் அதனை 2010-2011 ஆம் ஆண்டில் மாற்றுத் திறனாளிகளின் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்கு அளித்திட தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நல வாரியத்திற்கு வழங்கப்பட்டது.

பார்வையற்ற கல்லூரி மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள் சங்கத்தினர் ஒன்பது அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி மூன்று நாட்களாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த போது, அவர்கள் தமிழக முதலமைச்சரைச் சந்தித்து தங்களது குறைகளைத் தெரிவிக்கக்கூட அனுமதி மறுக்கப்பட்டு, 200 மாற்றுத் திறனாளிகள் கைது செய்யப்பட்டனர்.

இதுகுறித்துப் பார்வையற்ற பட்டதாரிகள் மற்றும் கல்லூரி மாணவர் சங்கத் தலைவர் நாகராஜன் என்பவர் “ஒவ்வொரு ஆண்டும், மாற்றுத் திறனாளிகளின் நலனுக்காகப் பல கோடி ரூபாய் செலவிடப்படுவதாக அரசு கூறுகிறது. ஆனால் மடக்கு குச்சிகள், கண்ணாடி போன்றவற்றை வழங்கியதைத் தவிர்த்து, வேறு எதையும் நடைமுறைப் படுத்தவில்லை” என்று அ.தி.மு.க. அரசின் மீது குற்றஞ்சாட்டிய செய்தி “தினமலர்” நாளேட்டில் 19-9-2013 அன்று வெளிவந்தது.

ஆனால், தி.மு. கழக ஆட்சியில் மாற்றுத்திறனாளிகள் போராட்டம் நடத்தியபோது அரசின் அணுகுமுறை என்ன தெரியுமா? சென்னை ராஜீவ் காந்தி பொது மருத்துவமனையில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவதாகக் காலை ஏடுகளில் செய்தியைப் படித்துவிட்டு, காலை உணவு கூட அருந்தாமல் அப்படியே கீழே இறங்கி காரில் ஏறி நேராக அவர்கள் போராட்டம் நடத்திய இடத்திற்கே சென்று அவர்களின் கோரிக்கைகள்

உடனடியாக ஏற்கப்படும் என்று கூறிப் போராட்டத்தை நிறுத்தச் செய்தவன் நான்.

மாற்றுத் திறனாளிகளை அ.தி.மு.க. அரசு சந்திக்கவே பல முறை மறுத்து, அவர்கள் போராட்டம் நடத்தியபிறகு முதலமைச்சர் பெயரால் சில அறிவிப்புகள் மட்டும் வந்தன. அந்த அறிவிப்பில் "பி.எட்., படித்துப் பணியில்லாமல் இருக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கு எளிதில் பணி கிடைக்க ஏதுவாக, தனியாக ஒரு சிறப்பு ஆசிரியர் தகுதித் தேர்வு, ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும். இத்தேர்வில் தகுதி பெறும் பி.எட்., பட்டதாரிகள் தற்போதுள்ள பின்னடைவு காலிப் பணியிடங்களிலும் மற்றும் இனிமேல் ஏற்படக்கூடிய காலிப் பணியிடங்களிலும் பணி அமர்த்தப்படுவர்" என்று கூறப்பட்டிருந்தது. ஆனால் "இதற்கான அரசாணைகூட இன்னும் வராமல் மாற்றுத் திறனாளிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்" என்று 24-11-2013 தேதிய "தி இந்து" (தமிழ்) செய்தி வெளியிட்டது.

ஈரோடு மாவட்டம், சென்னிமலையிலிருந்து இன்றைய முதல் அமைச்சர் ஜெயலலிதாவைப் பார்த்து உதவித் தொகை பெறலாம் என்று நம்பிக்கையோடு வந்த செல்வராஜ் என்ற மாற்றுத் திறனாளியை பாதுகாப்பு அதிகாரிகள் தடுத்துவிட்ட காரணத்தால் அவர் தற்கொலை செய்துகொண்டு மாண்டுவிட்டார் என்ற செய்தியும் இந்த ஆட்சிக் காலத்திலேதான் வந்தது.

கழக ஆட்சிக் காலத்தில் மாற்றுத் திறனாளிகளுக்காக எந்த அளவுக்கு சாதனைகளைச் செய்தோம் என்பதற்கு மாறாக இன்று அ. தி.மு.க. ஆட்சியில் மாற்றுத் திறனாளிகள் நிலை என்ன? இதோ இன்று (1-9-2014) வெளி வந்துள்ள செய்தி!

"தமிழகத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கு எதிரான சட்டம், கடுமையாகப் பின்பற்றப்பட்டு வருகிறது என்று அனைத்துவகை மாற்றுத் திறனாளிகள் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது. தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத் திறனாளிகள் மற்றும் பாதுகாப்பு உரிமை சங்கத் தலைவி ஜான்சி ராணி கூறும்போது, தமிழகத்தில் 2011இல், அனைத்து வகை மாற்றுத் திறனாளிகள் எண்ணிக்கை 22 இலட்சம் என தமிழக அரசு அறிவித்தது. ஆனால் 2014இல் அ.தி.மு.க. ஆட்சியில் 16 இலட்சம் எனக் குறைத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் அதற்கான கணக்கெடுப்பு, புள்ளி விவரம், ஆவணம் எதுவும் வெளியிடப்படவில்லை. எதன் அடிப்படையில் இந்த எண்ணிக்கை குறைந்தது, அதற்கான காரணங்களை அரசு அறிவிக்கவில்லை. தமிழகத்தில் 30 லட்சத்துக்கும் அதிகமாக மாற்றுத் திறனாளிகள் உள்ளனர். பல ஆண்டாகக் கோரியும் மாற்றுத்திறனாளிக்குப் பராமரிப்புத் தொகையாக 1000 ரூபாய் வழங்க அரசு முன்வரவில்லை. ஆந்திரா, கர்நாடகா, கேரளா உள்ளிட்ட அனைத்து மாநிலங்களிலும்,

40 சதவீதம் ஊனம் இருந்தாலே மாற்றுத் திறனாளிக்கான சான்று அளிக்கப்பட்டு, நிதி உதவிச் சலுகை வழங்கப்படுகிறது. தமிழகத்தில், 60 சதவீதம் தொடங்கி அதற்கும் அதிகமான ஊனம் இருந்தால் மட்டுமே, மாற்றுத் திறனாளி அங்கீகாரம் வழங்கப்பட்டு நல உதவி பெறும் நிலை உள்ளது. அத்துடன் அந்தக் குடும்பத்தின் சொத்து, 5000 ரூபாய்க்கு மேல் இருக்கக்கூடாது. அக்குடும்பத்தில் 18 வயதுக்கு மேற்பட்ட ஆண் இருக்கக் கூடாது. ஆண்டு வருவாய், 24 ஆயிரம் ரூபாய்க்குள் இருக்க வேண்டும். இங்கு மாற்றுத் திறனாளிக்கு எதிரான சட்ட விதிமுறை கடுமையாகப் பின்பற்றப்படுகிறது" என்று மாற்றுத்திறனாளிகள் சங்கத்தின் தலைவி ஜான்சி ராணி தெரிவித்திருக்கிறார்.

இதிலிருந்து மாற்றுத் திறனாளிகள் இந்த ஆட்சியிலே எப்படியெல்லாம் நடத்தப்படுகிறார்கள் என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. மேலும் இன்று வந்துள்ள செய்தியில் மாற்றுத் திறனாளிகளுக்கு இங்கே சர்க்கரை, கோதுமை உள்ளிட்ட இதர ரேஷன் பொருள்கள் வழங்குவது கிடையாது என்றும், மாற்றுத் திறனாளிகளுக்கு எதிரான சட்ட விதிமுறை கடுமையாகப் பின்பற்றப்படுகிறது என்றும் அரசுப் பணிகளில் மாற்றுத் திறனாளிகளுக்கான மூன்று சதவீத இட ஒதுக்கீடு வெளிப்படையாக அறிவிக்கப்படவில்லை என்றும் நீதிமன்றத்தின் மூலமே பெறவேண்டி உள்ளது என்றும் அந்த அம்மையார் வேதனைப்பட்டுள்ளார். மேலும் மாற்றுத் திறனாளிகளின் பிரதிநிதிகளிடம் பேச்சு நடத்தாமல் அரசு தன்னிச்சையாகச் செயல்பட்டு வருகிறது என்றும் எந்த ஒரு பிரச்சினையும் இதுவரை தீர்க்கப்படவில்லை என்றும் அந்தச் செய்தியிலே கூறப்பட்டுள்ளது.

மாற்றுத் திறனாளிகள் சலுகைகளைப் பெற வருவாய் வரம்பு இருப்பதாக இந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. ஆனால் கழக ஆட்சியில் 2010-2011ஆம் ஆண்டு பேரவையில் நிதியமைச்சர் பேராசிரியர் படித்த நிதிநிலை அறிக்கையில், பக்கம் 42, பத்தி 89இல் "மாநில அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாற்றுத் திறனாளிகள் பெற்றிட நிர்ணயிக்கப்பட்டுள்ள வருவாய் உச்ச வரம்பு முற்றிலும் நீக்கப்படும். மாற்றுத் திறனுடையோர் உயர்கல்வி பயிலுவதற்கு ஏதுவாகக் கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்த கழக அரசு, வரும் கல்வி ஆண்டிலிருந்து தனிக் கட்டணம் செலுத்துவதிலிருந்தும் விலக்களிக்கும்" என்றெல்லாம் அறிவித்திருந்தது. ஆனால் தற்போது ஆண்டு வருவாய் 24 ஆயிரம் ரூபாய்க்குள் இருக்க வேண்டுமென்று நிர்ணயம் செய்திருப்பது மாற்றுத் திறனாளிகளுக்குப் பெரும் பின்னடைவாகவே ஆகிவிடும்.

கழக ஆட்சியில் படிக்கப்பட்ட அந்த நிதிநிலை அறிக்கையிலேயே "தங்களைத் தாங்களே பராமரித்துக்கொள்ள இயலாத மன வளர்ச்சி குன்றியவர்களுக்கு, வருவாய் உச்ச வரம்பு இன்றி, 500 ரூபாய் வீதம் மாதாந்திர உதவித் தொகையைக் கழக அரசு வழங்கி வருவதால் 50 ஆயிரம் பேர் பயன்பெற்று வருகின்றனர். கண் பார்வையற்றோர் மற்றும் இதர மாற்றுத் திறனாளிகளுக்குப் பல்வேறு உதவித் தொகைகள் இரட்டிப்பாக்கப்பட்டுள்ளன. அவர்கள் ஆசிரியப் பணி புரிய சிறப்பு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. காது கேளாதோருக்குக் குழந்தைப் பருவத்தின் தொடக்கத்திலேயே கண்டறிந்து சிறப்புக் கல்வி அளிக்கும் பள்ளிகள் மாவட்டந்தோறும் தொடங்கப்பட்டுள்ளன. கை, கால் ஊனமுற்றோருக்குப் பயணச் சலுகைகளுடன், நாட்டிலேயே முதல் முறையாக மோட்டார் பொருத்தப்பட்ட மூன்று சக்கர வண்டிகள் முதலான பல்வேறு உதவிக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. வேலைவாய்ப்பற்ற பார்வையற்றோருக்கு நிவாரணத்தொகை வழங்கும் திட்டம், அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டு 60 ஆயிரம் பேர் இத்திட்டத்தில் பயன் அடைந்துள்ளனர். இந்தியாவிலேயே முதல் முறையாக தசைச் சிதைவு நோயினால் பாதிக்கப் பட்டவர்களுக்கு உதவிடும் வகையில் 2008-2009ஆம்

ஆண்டிலிருந்து 1000 பேருக்கு மாத உதவித் தொகையாக 500 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. 2005-2006ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகள் நலனுக்குச் செலவிடப்பட்ட தொகை ரூபாய் 49 கோடி அளவாக இருந்ததை, வரும் நிதியாண்டில் ரூபாய் 176 கோடியாக உயர்த்தியுள்ளதுடன் மாற்றுத் திறனாளிகளுக்கான தனித்துறை என்னுடைய நேரடி மேற்பார்வையில் இயங்கும்"

- என்று கழக ஆட்சியின் நிதிநிலை அறிக்கையிலே எழுதப்பட்டிருந்தது. இந்த விவரங்களிலிருந்து மாற்றுத் திறனாளிகள் கழக ஆட்சியில் எந்த அளவுக்குப் பாதுகாக்கப்பட்டார்கள் என்ற விவரத்தையும், தற்போது அவர்கள் எந்த அளவுக்கு அவதியுறுகிறார்கள் என்பதையும் தெரிந்து கொள்ளலாம். காது கேளாதோர் குறைகளைக் காது கொடுத்துக் கேட்பதற்கோ, கண் தெரியாதோர் தமது தேவைகளைத் தெரிவிக்க வந்தால் அவர்களைக் கண் திறந்து பார்ப்பதற்கோ, வாய் பேச முடியாதோரின் வாழ்க்கை நிலையை வாய்விட்டுப் பேசுவதற்கோ, கை கால்களைப் பயன்படுத்த இயலாதோருக்கு உதவிக் கரம் நீட்டுவதற்கோ ஜெயலலிதா ஆட்சியினர் யாரும் முன்வரவில்லை; மொத்தத்தில் மாற்றுத் திறனாளிகளிடம் பரிவு காட்ட அ.தி.மு.க. ஆட்சிக்கு மனமில்லை!

அன்புள்ள,

மு.க.

2-9-2014

3917. கழகப் பொறுப்புக்கு போட்டியிட்டு வெற்றி பெறுகிறவர்களும், வெற்றிவாய்ப்பை இழப்பவர்களும் என்றைக்கும் என் உடன்பிறப்புகள்தான்!

உடன்பிறப்பே,

நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் 14வது அமைப்புத் தேர்தல் தற்போது நடைபெற்று வருகிறது. 17-9-1949இல் கழகம் தொடங்கப்பட்ட போது நிறுவப்பட்ட சட்டதிட்டக் குழு தயாரித்த நகல் சட்ட திட்டம் - முறைப்படி கழகப் பொதுக் குழுவில் ஏற்கப்பட்டு, 1951ஆம் ஆண்டு டிசம்பரில் சென்னையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெற்ற முதல் மாநில மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதற்குப் பிறகு பல முறை சட்டதிட்டத் திருத்தக் குழுக்கள் அவ்வப்போது ஏற்பட்ட தேவைகளுக்கேற்ப கொண்டு வந்த திருத்தங்கள் முறைப்படி பொதுக் குழுவிலே வைத்து விவாதிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. கிளைக்கழகம், பேரூர்க் கழகம், ஒன்றியக் கழகம், நகரக் கழகம், மாவட்டக் கழகம், தலைமைக் கழகம் என்ற வரிசைப்படி இதுவரை கழகத்தில் 13 அமைப்புத் தேர்தல்கள் நடைபெற்று, தற்போது 14வது அமைப்புத் தேர்தல்கள் நடைபெற்று வருகின்றன. தலைமைக் கழகத் தேர்தல் இதுவரை எவ்வெப்போது நடைபெற்றன என்று பார்த்தால், 1949இல் முதல் தேர்தலும், 4-4-1955இல் 2வது தேர்தலும், 25-9-1960இல் 3வது தேர்தலும், 27-7-1969இல் 4வது தேர்தலும், 7-7-1974 இல் 5வது தேர்தலும், 18-6-1978இல் 6வது தேர்தலும், 26-5-1983இல் 7வது தேர்தலும், 2-2-1988இல் 8வது தேர்தலும், 2-6-1992இல் 9வது தேர்தலும், 27-7-1997இல் 10வது தேர்தலும், 8-4-2000இல் 11வது தேர்தலும், 2-6-2003இல் 12வது தேர்தலும், 27-12-2008இல் 13வது தேர்தலும் நடைபெற்றுள்ளன.

கழகத்தின் இந்த 14வது அமைப்புத் தேர்தலில் கழக உறுப்பினர்களின் எண்ணிக்கை 84 இலட்சத்து 36 ஆயிரத்து 744. 1997இல் பத்தாவது கழக அமைப்புத் தேர்தலின் போது 62 இலட்சம் உறுப்பினர்களாக இருந்து, பதினோறாவது தேர்தலில் 2000ஆம் ஆண்டு 73 இலட்சமாகப் பெருகி, இந்த பதினான்காவது தேர்தலில் சுமார் 85 இலட்சம் உறுப்பினர்களாக ஆகியுள்ளது. ஏற்கனவே கிளைக் கழகங்களின் மேல் அமைப்பாக ஒன்றியக் கழகங்கள் செயல்பட்டு வந்தன. தற்போது இந்த அமைப்புகளுக் கிடையில் புதிய அமைப்பாக 12,514 ஊராட்சிக் கழகங்கள் அறிவிக்கப்பட்டு, அதற்கான தேர்தல் நடைபெற்று வருகிறது.

13வது அமைப்புத் தேர்தலுக்கும், தற்போது நடைபெறும் 14வது அமைப்புத் தேர்தலுக்கும் இடையே சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக 13வது தேர்தலில் மதுரை, கோவை மாநகர் உட்பட கழக மாவட்டங்களாக 36 இருந்தன. அந்த மாவட்டங்கள் தற்போது நிர்வாக வசதிக்காக 65 கழக மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அது போல ஏற்கனவே 392 ஒன்றியக் கழகங்கள் இருந்ததற்கு மாறாக தற்போது 578 ஒன்றியக் கழகங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. மேலும் நகரக் கழகங்கள் 129 - பகுதிக் கழகங்கள் 97 - பேரூராட்சிகள் 538 - இவை தவிர வார்டுக் கிளை என்று எடுத்துக் கொண்டால், கழகத்தில் 1 லட்சத்து 12 ஆயிரத்து 247 வார்டுகள் உள்ளன. அதில் மாநகராட்சி வார்டுகள் 820 - பேரூராட்சி வார்டுகள் 8,397 - நகர வார்டுகள் 3,735 - 12,514 ஊராட்சிகளில் உள்ள 99,295 ஊராட்சி வார்டுகள் உள்ளன. இவற்றில் ஊராட்சி வார்டுகள், நகர வார்டுகள், பேரூராட்சி வார்டுகள் ஆகியவற்றுக்கான தேர்தல்கள் முடிந்துவிட்டன. மாநகராட்சி வார்டுகளில் தேர்தல்கள் நடந்து கொண்டு வருகின்றன. அது தவிர தற்போது ஒன்றிய, நகரங்களுக்கான தேர்தல்களும் நடைபெற்று வருகின்றன.

புதிதாக அமையவிருக்கும் மாவட்டக் கழக எல்லைகளுக்குள் அடங்கக்கூடிய ஒன்றிய மற்றும் நகரக் கழகங்கள் எவையெவை என்பது அறிவிக்கப்படுவதற்கு முன்பாகவே 65 மாவட்டங்களிலும் எந்தெந்த சட்டப்பேரவைத் தொகுதிகள் இடம் பெறும் என்ற விவரம் கடந்த 16-6-2014 அன்று அறிவிக்கப்பட்டுள்ளது. அது போலவே எந்தெந்த மாவட்டங்களில், எந்தெந்த ஒன்றியங்கள்,

நகரங்கள் இடம் பெறும் என்ற விவரமும் ஏடுகள் வாயிலாக அறிவிக்கப்பட்டுவிட்டன.

கழகத்தில் கடந்த 13வது பொதுத் தேர்தல் வரை, கிளைக் கழக அமைப்பில் உள்ளவர்கள் அளிக்கும் பெயர்களை வைத்தே உறுப்பினர் உரிமைச் சீட்டு வழங்கப்பட்டுவந்தது. ஆனால் இந்த 14வது கழகத் தேர்தலின் போது, உறுப் பினர் படிவத்தில் உறுப்பினர் சேர்க்கும்போதே, பெயர் மற்றும் விவரங்களை அடுத்து, கட்டாயமாக இந்தியத் தேர்தல் ஆணையத்தால் வழங்கப் பட்ட வாக்காளர் அடையாள அட்டை எண் குறிக்கப்படுவதோடு, அந்த வாக்காளர் அட்டையின் "ஜெராக்ஸ்" நகல் ஒன்றையும் இணைத்தாக வேண்டும். அவ்வாறு வாக்காளர் அடையாள அட்டை நகல் இணைத்தவர்களுக்கு மட்டுமே உறுப்பினர் உரிமைச் சீட்டு இந்த முறை வழங்கப்பட்டுள்ளது. வாக்காளர் அடையாள அட்டை இணைக்கும்போது கூட, பழைய வாக்காளர் அடையாள அட்டையின் நகலை இணைத்திருந்தால், அவர்களுக்கு உறுப்பினர் உரிமைச் சீட்டு வழங்கப்படவில்லை. அரசு தேர்தல் ஆணையத்தால் புதிதாகத் தரப்படும் அடையாள அட்டை நகலைக் கொடுத்தால் மட்டுமே, அவர்களுக்கு உறுப்பினர் உரிமைச் சீட்டு வழங்கப்பட்டுள்ளது.

14வது தேர்தலுக்காகத் தரப்பட்ட உறுப்பினர் உரிமைச் சீட்டு தொழில்நுட்ப முன்னேற்றத்தின் காரணமாக நவீன முறையில் "ஸ்மார்ட் கார்டு" முறையில், உறுப்பினர் உரிமைச் சீட்டில் பெயர், வயது, தந்தை/கணவர் பெயர், கிளை, ஊராட்சி, ஒன்றியம்/நகரம்/ பகுதி, மாவட்டம் மற்றும் அவரது உறுப்பினர் எண், வாக்காளர் அடையாள அட்டை எண் ஆகிய விவரங்கள் குறிக்கப்பட்டு, தலைவர், பொதுச் செயலாளர் ஆகியோரின் கையொப்பங் களோடு, அனைத்து உறுப்பினர்களுக்கும் நேரடியாகத் தலைமைக் கழகப் பிரதிநிதிகளால் வழங்கப்பட்டது. இந்தத் தேர்தலுக்கான இந்தப் புதிய உரிமைச் சீட்டுகள் 29-10-2012 அன்று எனக்கும், பொதுச்செயலாளர், பொருளாளர் ஆகியோருக்கும் வழங்கப்பட்டு, மாவட்டங்களில் 1-11-2012 முதல் 5-4-2013 வரை முறையாக வழங்கப்பட்டன. ஊராட்சிக் கழகத்திற்கு உட்பட்ட வார்டுக் கிளை, வட்டக் கிளைக்கழகத் தேர்தல்கள் 15-4-2013 அன்று தொடங்கி 31-12-2013 வரை நடைபெற்று ஊராட்சிக் கழகங்களின் பட்டியல் அறிவிக்கப்பட்டன.

ஊராட்சிக் கழகத் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் நான்கு கட்டங்களாகவும், பேரூர்க் கழகத் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் நான்கு கட்டங்களாகவும் செய்யப்பட்டுள்ளன. அந்த வரிசையில் தற்போது ஒன்றிய, நகரக் கழகத் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கலுக்கான தேதிகள் அறிவிக்கப்பட்டு, அதற்கான அறிக்கைகளும் வெளியிடப்பட்டுள்ளன.

பொதுத் தேர்தலில் தலைமைத் தேர்தல் ஆணையம் வழங்கும் வாக்காளர் பட்டியல் போலவே, வார்டு உட்கிளைக் கழகத் தேர்தலின் போது, உறுப்பினர் உரிமைச் சீட்டில் உள்ள அனைத்து விபரங்களும் அடங்கிய கழக வாக்காளர் பட்டியல் அளிக்கப்பட்டு, அதன் அடிப்படையிலேதான் உட்கிளைக் கழகத் தேர்தல்கள் நடைபெற்றன.

தலைமைக் கழகத்திலிருந்து செல்கின்ற ஆணையாளர்கள், தாங்கள் தலைமைக் கழகத்தின் நம்பிக்கைக்குரிய பிரதிநிதிகள் என்பதை உணர்ந்து கடமையாற்றிடுவதோடு, நிர்வாகப் பொறுப்புகளுக்குப் போட்டியிடுகின்ற இரு தரப்பினருமே கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்ற அடிப்படை உண்மையையும் நினைவிலே கொள்ள வேண்டும். இந்த முறை ஐந்தாண்டு காலத்திற்கு கழகத்திற்காக உழைக்கின்ற பொறுப்பை ஏற்றுக் கொள்ள விரும்பிப் போட்டியிடுகிறார்கள். இதிலே பெரும்பான்மை உறுப்பினர்களிடம் வாக்குகளைப் பெறுகிறவர்தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

நான் ஏன் இதை அடிக்கோடிட்டுச் சொல்கிறேன் என்றால், இந்த அமைப்புத் தேர்தலில் எந்த இடத்திலும் சட்டதிட்டங்களுக்கு மாறாகச் சிறு தவறுகள் கூட நடைபெற்று விடக்கூடாது என்பதிலே அனைவரும் மிகுந்த எச்சரிக்கையோடு இருந்து ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என்பதற்காகத்தான்.

5-8-2014 அன்று தலைமைக் கழகத்தின் சார்பில் வெளியிடப்பட்ட முக்கிய அறிவிப்பில், வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்ய யாராவது விரும்பி, அதனைத் தலைமைக் கழகப் பிரதிநிதிகளிடம் கொடுக்க முடியாத நிலை ஏற்படுமேயானால், அவர்கள் நேரடியாகத் தலைமைக் கழகத்திற்கே வந்து, வேட்பு மனுக்களைப் பெற்று, பூர்த்தி செய்து தாக்கல் செய்யலாம் என்று

தெரிவிக்கப்பட்டதன் நோக்கத்தைக் கழகத் தோழர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள் என நம்புகிறேன்.

தலைமைக் கழகத்திற்கும் எனக்கும், பொதுச் செயலாளர் பேராசிரியருக்கும், பொருளாளர் தளபதிக்கும் இந்தத் தேர்தல் குறித்து சில புகார்க் கடிதங்கள் வரத்தான் செய்கின்றன. மிகப் பெரியதொரு ஜனநாயக இயக்கத்தில் பல இலட்சக்கணக்கானவர்கள் கலந்து கொள்ளும் தேர்தலில், போட்டிகள் இருப்பது இயற்கைதான். அதுவும் திராவிட முன்னேற்றக் கழகம் போன்ற மக்கள் இயக்கத்தில் ஒரே பொறுப்புக்குப் பலர் வர விரும்புவதும், அதன் காரணமாகப் போட்டி கடுமையாக இருப்பதும் புரிந்து கொள்ளக்கூடிய ஒன்றுதான். நாம் மேற்கொண்டிருக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மீறி எங்கேயாவது சிறு தவறுகள் நடந்தால்கூட, அவற்றைப் பற்றி விசாரித்துக் களைவதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கு முன்னுதாரணங்கள் உண்டு. தற்போதுகூட புகார்கள் வந்தால் அவற்றின் உண்மைத்தன்மை பற்றி அறிவதற்காக அன்றாடம் தலைமைக் கழகத்தில் இரண்டு அமைப்புச் செயலாளர்கள் விசாரிப் பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஜனநாயக முறைப்படி, கட்சியின் சட்ட திட்டங்களைப் பின்பற்றி நடைபெறும் இந்தக் கட்சித் தேர்தலில் கழகத்தின் தலைமை எந்தச் சூழ்நிலையிலும் யாருக்கும் ஆதரவாக ஒரு தலைப்பட்சமாக நிச்சயம் நடந்து கொள்ளாது. போட்டியிடுபவர்கள் அனைவரும் கட்சி உறுப்பினர்கள். அதிலே ஜனநாயக ரீதியாக அதிக வாக்குகளைப் பெற்று வெற்றி பெறுகிறவர்களுக்குத்தான் தலைமையின் இசைவு கிட்டும். வெற்றி வாய்ப்பினை இழந்தவர் களும் கழகத் தோழர்கள்தான். அவர்கள் அடுத்த முறை நடைபெறும் தேர்தலில் வெற்றி பெற, கழகத் தோழர்களின் பெரும்பான்மையான ஆதரவைப் பெறத் தொடர்ந்து அயராமல் பாடுபட வேண்டுமே தவிர, கழகத்தில் குறுக்கு வழி எதுவும் இல்லை என்பது எல்லோருக்கும் தெரியும். என்னைப் போலவே, கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் கட்சிக் கட்டுப்பாட்டுக்கு அதிமுக்கியத்துவம் அளிப்பவர் என்பதையும், பொருளாளர் தளபதி ஸ்டாலின் முறைகேடுகள் எந்த வடிவத்தில் நடைபெற்றாலும் சிறிதும் பொறுத்துக் கொள்ளாதவர் என்பதையும், அவர் அமைப்புத் தேர்தலில் அனுதினமும் அக்கறை காட்டி விரைவாகவும்,

முறையாகவும் தேர்தல்கள் நடைபெற வேண்டும் என்பதிலே கவனம் செலுத்தி வருகிறார் என்பதையும் கழகத்தினர் அறிவர். எனவே நடைபெறும் இந்த உள்கட்சி அமைப்புத் தேர்தலை நேர்மையாகவும், நடுநிலையோடும் நடத்தி, கழகம் மேலும் வலிவும் பொலிவும் பெற்றிட கழக உடன்பிறப்புகள் அனைவரும் தேவையான ஒத்துழைப்பினை நல்கிட வேண்டுமென்று மிகுந்த அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் கழகம் வெற்றி வாய்ப்பினை இழந்து விட்டது. எதனால் வெற்றியை இழந்தது என்பது வேறு. ஆனால் இந்த அளவுக்குத் தோல்வியைக் கண்ட பிறகும், கழகத்தின் உள்கட்சித் தேர்தலில் பொறுப்புக்கு வர இத்தனை பேர் அணி அணியாக முன் வருவதும், போட்டியிடுவதும் மகிழ்ச்சிக்கும், பெருமிதத்திற்கும் உரிய ஒன்று. இந்த அமைப்புத் தேர்தலில் போட்டியிடுகின்ற இரு தரப்பினருமே கழக உடன்பிறப்புகள்தான். வெற்றி பெறுகிற வரும் என் உடன்பிறப்புதான் - வெற்றி வாய்ப்பினை இழப்பவரும் என் உடன்பிறப்புதான்! வெற்றி பெற்றவருக்காக நான் மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்ற அதே நேரத்தில் வெற்றி வாய்ப்பினை இழந்தவர்களுக்காக ஆறுதல் தருபவனும் நான்தான். எனவே போட்டியிடுபவர்கள் கழகத் தோழர்களின் பெரும்பான்மை ஆதரவு இருந்தால் வெற்றி பெறலாம், இல்லாவிட்டால் இந்த முறை வெற்றி வாய்ப்பினை நழுவ விட்டாலும் அடுத்த முறை வெற்றி பெறுவதற்கேற்ப மேலும் பன்மடங்கு ஆர்வத்துடன் பாடுபடுவோம் என்று சிந்தித்துச் செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

"திராவிட முன்னேற்றக் கழகம் ஓர் அரசியல் கட்சி மட்டுமல்ல; இது ஒரு சமுதாயச் சீர்திருத்த இயக்கம். இதில் ஈடுபட்டிருக்கின்ற அத்தனை பேரும், யார் யார் எந்தெந்த இடத்தில் இருப்பது என்பதல்ல; யார் யார் எந்தெந்த நேரத்தில் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வது என்பதும் முக்கியமல்ல; ஒவ்வொருவரும் ஒவ்வொரு பொறுப்பை ஏற்றிருப்பது இந்த இயக்கத்திலே அமைந்திருக்கின்ற போர்ப் பாசறை போன்றதாகும். இதிலே பகைவர்கள் உள்ளே புக நினைத்தால், அவர்கள் எங்கள் நெருக்கத்தின் இடையில் சிக்கிக் கூழாகிப் போவார்கள். திராவிட முன்னேற்றக் கழகம், ஒவ்வொருவரும்

ஒவ்வொரு இடத்திலிருந்து பணியாற்ற வேண்டுமென்பதற்கு ஏற்பட்டிருக்கிற ஓர் அமைப்பே தவிர, வேறு ஏற்றத் தாழ்வுகள், மனமாச்சர்யங்கள் எங்களுக்குள் இருக்கிறதென்று மாற்றார்கள் கருதினால், நாங்கள் வளர்ந்த வரலாற்றை அவர்கள் தெரிந்து கொண்டவர்கள் அல்லர் என்றுதான் சொல்ல வேண்டும். நாங்கள் ஒரு தாயின் வயிற்றில் பிறக்காததற்குக் காரணம், ஒரு தாயின் வயிறு இத்தனை பிள்ளைகளையும் தாங்காது என்பதுதான்!"

- என்று 26-9-1960 அன்று சென்னை கடற்கரையில் நடைபெற்ற கூட்டத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய உருக்கமிகு உரையினை உடன்பிறப்புகள் அனைவரும் நினைவிலே நிறுத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன்.

அன்புள்ள,

மு.க.

05-09-2014

3918. "தாமதமாகும் நீதி; தடுக்கப்படும் நீதியா?"

உடன்பிறப்பே,

உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு.ஆர்.எம்.லோதா மற்றும் நீதிபதிகள் குரியன் ஜோசப், ரொகின்டன் பாலி நாரிமன் ஆகியோர் அடங்கிய அமர்வு 5-9-2014 அன்று பொதுவான ஒரு தீர்ப்பினை முக்கியமானதொரு வழக்கில் அறிவித்து, அந்தச் செய்தி அனைத்து நாளேடுகளிலும் வெளிவந்துள்ளது. குற்ற வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்களுக்குத் தண்டனை விதிக்கப்படும் காலத்தில் பாதியை, சம்பந்தப்பட்டவர் சிறையிலேயே விசாரணைக் கைதியாகக் கழித்திருந்தால், அவரை விடுதலை செய்ய வேண்டுமென்று நாடு முழுவதும் உள்ள மாவட்ட நீதிமன்றங்களுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மரண தண்டனை விதிக்கப்படும் தன்மைக்குரிய குற்றச் சாட்டுகளுக்கு ஆளாகியிருக்கும் விசாரணைக் கைதிகளுக்கு இந்த உத்தரவு பொருந்தாது என்றும் கூறப்பட்டுள்ளது. நீதியரசர் லோதா அவர்கள் விரைவில் உச்ச நீதிமன்றத்திலிருந்து ஓய்வு பெறவிருக்கும் நேரத்தில் இந்த முக்கியமானதொரு தீர்ப்பினை வெளியிட்டுள்ளார். மாவட்ட நீதிமன்றங்கள் அவற்றின் வரம்புக்கு உட்பட்ட சிறைகளுக்கு வாரம் ஒருமுறை சென்று ஆய்வு நடத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். குற்ற வழக்கில் தண்டனை விதிக்கப்பட்டிருந்தால் ஒரு கைதி எவ்வளவு காலத்துக்குச் சிறையில் அடைக்கப்பட்டிருப்பார் என்பதை ஆராய்ந்து, சம்பந்தப்பட்டவர் ஒரு வேளை தண்டனைக் காலத்தில் பாதிக்கும் மேற்பட்ட காலத்தை விசாரணைக் கைதியாகச் சிறையிலேயே கழித்திருந்தால், அவரை அடையாளம் கண்டு, குற்றவியல் நடைமுறைச் சட்டம் 436-ஏ பிரிவின்படி, உடனடியாக விடுதலை செய்யலாம் என்றும், இந்த ஆய்வை மேற்கொள்ள இரண்டு மாதங்கள் அவகாசம் அளிக்கப்படுகிறது என்றும், வரும் அக்டோபர் மாதம் 1ஆம் தேதி முதல் இந்த ஆய்வை மாவட்ட

நீதிபதிகள் மேற்கொள்ள வேண்டும் என்றும், தங்கள் வரம்புக்கு உட்பட்ட மாவட்டத்தில் செஷன்ஸ் நீதிபதிகள் உள்ளிட்ட நீதிபதிகள் சிறைகளுக்குச் சென்று ஆய்வு செய்து தண்டனைக் காலத்தில் பாதியைச் சிறையிலேயே கழித்த விசாரணைக் கைதிகள் யார் என்பதைக் கண்டறிய வேண்டுமென்றும், அந்த விசாரணைக் கைதிகளை விடுதலை செய்யும் உத்தரவை மாவட்ட நீதிபதிகள் பிறப்பிக்க வேண்டுமென்றும் உச்ச நீதிமன்றம் தெரிவித்திருக்கிறது.

இந்த வழக்கின் அடுத்த விசாரணையை டிசம்பர் 8ஆம் தேதிக்கு ஒத்திவைத்த உச்ச நீதிமன்ற அமர்வு, அப்போது இந்தத் தீர்ப்பின்படி எத்தனை விசாரணைக் கைதிகளை மாவட்ட நீதிமன்றங்கள் விடுதலை செய்தன என்பது பற்றிய அறிக்கையை மாநிலங்களிலே உள்ள உயர் நீதிமன்றங்களின் தலைமைப் பதிவாளர்கள் கண்டறிந்து, உச்ச நீதிமன்றத் தலைமைப் பதிவாளருக்கு அறிக்கையாக அனுப்பிவைக்க வேண்டுமாம்.

இந்தியா முழுவதும் உள்ள சிறைச்சாலைகளில் 3 இலட்சத்து 81 ஆயிரம் பேர் கைதிகளாக அடைபட்டிருப்பதில், விசாரணைக் கைதிகளாக மட்டும் 2 இலட்சத்து 54 ஆயிரம் பேர் விசாரணைக் கைதிகள் ஆவார்கள். அதாவது 66.6 சதவிகிதம் பேர் சிறைச்சாலைகளில் விசாரணைக் கைதிகளாக உள்ளனர். தமிழகத்தில் 9 மத்திய சிறைச்சாலைகளும், 5 சிறப்பு கிளைச் சிறைச்சாலைகளும், 9 மாவட்ட சிறைச்சாலைகளும், 95 கிளைச் சிறைச் சாலைகளும், 3 பெண்கள் சிறப்புச் சிறைச்சாலை களும் உள்ளன. இதில் சென்னை புழல் சிறையிலே மட்டும் விசாரணைக் கைதிகளாக 2,223 ஆண் களும், 120 பெண்களும் இருக்கிறார்கள். தமிழகம் முழுவதும் எடுத்துக்கொண்டால் 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விசாரணைக் கைதிகள் சிறைச்சாலைகளிலே இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்த விசாரணைக் கைதிகளில் ஏராளமான பேர், அவர்கள் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால், அதிகப்பட்சமாகக் கிடைக்கும் தண்டனைக் காலத்தைவிட, அதிகக் காலம் சிறையிலே இருந்து வருகிறார்கள். இப்படிப்பட்ட விசாரணைக் கைதிகள், தாங்கள் செய்த குற்றத்துக்காக அதிகப்பட்சமாக எவ்வளவு காலம் சிறைத் தண்டனைக் கிடைக்குமோ, அந்தத் தண்டனைக் காலத்திலே பாதி நாட்களை அவர்கள் சிறையிலே கழித்திருந்தால், அவர்களைச்

சொந்த ஜாமீனிலோ அல்லது உத்தரவாதத் தொகை இன்றியோ விடுதலை செய்யலாமென்று குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 436-ஏ பிரிவு தெரிவிக்கிறது. சிறைகளிலே இருக்கும் கைதிகளின் உரிமைகளுக்காகச் சட்டரீதியாகப் போராடிவரும் காஷ்மீர் சட்ட உதவிக் குழு என்ற அமைப்பின் தலைவரும், மூத்த வழக்கறிஞருமான திரு. பீம்சிங் அவர்கள் தான் 2005ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்திலே பொது நல வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தார். அவர் தாக்கல் செய்த மனுவிலே, பாகிஸ்தானைச் சேர்ந்த பல கைதிகள் பத்தாண்டுகளுக்கும் மேலாக விசாரணை இல்லாமல் சிறைகளிலே அடைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்திருந்தார். அந்த மனுவினை விசாரித்த உச்ச நீதிமன்றம், விசாரணைக் கைதிகள் குறித்த வழக்குகளை ஓர் ஆண்டு காலத்திற்குள் விரைந்து விசாரித்து முடிக்கவேண்டுமென்று 2008ஆம் ஆண்டிலேயே உத்தரவிட்டிருந்தது. இந்த வழக்கிலே தான் தற்போது உச்ச நீதிமன்றம் மேலே நான் தெரிவித்த தீர்ப்பினை வழங்கியிருக்கிறது. இந்தத் தீர்ப்பின் பயனாக இந்தியா முழுவதும் பல்வேறு சிறைச்சாலைகளிலே இருக்கும் பலர் விடுதலை பெறுகின்ற நல்வாய்ப்பு கிடைக்கும். இந்தியாவில் சுமார் 3 கோடி கிரிமினல் வழக்குகள் நிலுவையிலே இருக்கின்றன. ஆனால், இவற்றை விசாரிக்க 16 ஆயிரம் நீதிபதிகள் மட்டுமே உள்ளனர் என்றால், இப்படியொரு தீர்ப்பு வராத நிலையில், இந்த வழக்குகள் எந்தக் காலத்தில் விசாரித்து முடிவது, இன்னும் எத்தனை ஆண்டுக் காலத்திற்கு விசாரணைக் கைதிகள் சிறையிலே இருப்பது என்பதற்கெல்லாம் விடை அளிப்பது போல உச்ச நீதிமன்றத்தில் வெளியான தீர்ப்பு அமைந்துள்ளது என்று சொன்னால் மிகையல்ல. எனவே இந்தத் தீர்ப்பினை வரவேற்பதோடு, இந்தத் தீர்ப்புக்குக் காரணமான நீதியரசர்களுக்கெல்லாம் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விசாரணைக் கைதிகள் விடுதலை செய்யப் பட்டுவிட்டால், சிறைச்சாலைகளில் பெருமளவுக்குக் கூட்டம் குறைந்து, சிறை நிர்வாகத்திலே பணியாற்றுபவர்களுக்கும் வேலைப்பளு எளிதாகி, அவர்கள் நிர்வாகத்தைத் திறம்பட நடத்திட உதவியாக அமையும்.

“A Classic Case of Judicial Delay” - என்ற தலைப்பில் 7-9-2014 தேதிய “இந்து” நாளேட்டில் ஒரு வழக்கு பற்றிய விவரம்

வெளியிடப்பட்டுள்ளது. தமிழ்நாளேடுகள் சிலவற்றிலும் இந்தச் செய்தி வந்துள்ளது. அதாவது, கோவையில் உள்ள சார்பு நீதிமன்றத்தில், கலைவாணி, பரிமளம் ஆகியோருக்கும் - பாலகிருஷ்ணன், பிரதீப்குமார் ஆகியோருக்கும் இடையே சிவில் வழக்கு ஒன்று நடைபெற்று வந்தது. இந்த வழக்கில் சார்பு நீதிமன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து, கோவை மாவட்ட நீதிமன்றத்தில் "அப்பீல்" செய்யப்பட்டது. அந்த "அப்பீல்" வழக்கை விசாரிப்பதற்கான ஆவணங்கள் சார்பு நீதிமன்றத்திலிருந்து மாவட்ட நீதிமன்றத்துக்கு வரவில்லை. இந்த வழக்கில் "ஆவணங்களுக்காக காத்திருக்கிறோம்" ("Await Records") என்ற காரணம் கூறப்பட்டு, 89 முறை இந்த வழக்கு தள்ளிவைக்கப்பட்டுள்ளது. இதில் ஓரிரு முறை மட்டும் "நீதிபதி இடமாற்றம்" என்ற காரணம் கூறப்பட்டது. இந்தத் தள்ளிவைப்புகளுக்கான ஒரே காரணம், மாவட்ட நீதிமன்றப் புத்தகத்திலே பதிவு செய்யப்பட்டுள்ளது. இதனால், 5 ஆண்டுகள் 4 மாத காலம் வழக்கு விசாரணை காலதாமதமாகியுள்ளது. இந்த நிலையில்தான், இந்த வழக்கை விரைந்து முடிக்கு மாறு உத்திரவிட வேண்டுமென்ற கோரிக்கை கலைவாணி, பரிமளம் ஆகியோரால் உயர் நீதிமன்றத்திலே வைக்கப்பட்டு, அந்த வழக்கு நீதிபதி விமலா முன்னிலையிலே விசாரணைக்காக வந்துள்ளது.

அந்த வழக்கை விசாரித்த நீதிபதி விமலா அவர்கள் அளித்த தீர்ப்பில், "வழக்கு தொடரப்பட்ட சார்பு நீதிமன்றமும், அப்பீலை விசாரித்த மாவட்ட நீதிமன்றமும் ஒரே வளாகத்தில்தான் உள்ளன. இருந்தாலுங்கூட, ஆவணங்களுக்காகக் காத்திருப்பதாக வழக்கு 89 முறை தள்ளிவைக்கப்பட்டுள்ளது. இதனால் வழக்கு விசாரணையில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. இந்த வழக்கில் சிவில் வழக்கை விசாரித்த கோவை சார்பு நீதிமன்றம், அப்பீல் வழக்கை விசாரிக்கும் மாவட்ட நீதிமன்றத்துக்கு உடனடியாக வழக்கு ஆவணங்களை அனுப்ப வேண்டும். மாவட்ட நீதிமன்றம் அந்த வழக்கை ஒரு மாதத்துக்குள் முடிக்க வேண்டும்" என்றெல்லாம் கூறியிருப்பதோடு மேலும் சில சீர்திருத்தங்களை நீதித் துறையிலே செய்ய வேண்டுமென்றும் தனது தீர்ப்பிலே தெரிவித்திருக்கிறார்.

வழக்குகள் நீதிமன்றத்தாலேயே எந்த அளவுக்குக் கால தாமதம் செய்யப்படுகின்றன என்பதற்கான நல்ல உதாரணமாக இந்த வழக்கு நடந்துள்ளது. உயர் நீதிமன்ற நீதிபதியின் தீர்ப்பு

பற்றி "இந்து" ஆங்கில நாளேடு எழுதும்போது, "She asked whether the court was justified in not rendering timely justice and waiting for records for years together in an era of information and communication technology" என்று தெரிவித்திருப்பது நீதிமன்றங்களில் சில வழக்குகள் எந்த அளவுக்கு காலதாமதத்திற்கு ஆளாகின்றன என்பதற்கான நல்ல விளக்கமாகும்.

உச்ச நீதிமன்றம் சில வாரங்களுக்கு முன் அளித்த வேறொரு தீர்ப்பில், குற்றச்சாட்டுக்கு ஆளானவர்களை அமைச்சர்களாக நியமிக்க வேண்டாமென்று பிரதமர் மற்றும் அனைத்து மாநில முதல் அமைச்சர்களுக்கும் தெரிவித்தது. அப்போது முதல் அமைச்சர்களே குற்றச்சாட்டுக்கு ஆளானவர்களாக இருந்தால் என்ற கேள்வியும் எழத்தான் செய்தது. மேலும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டப்பேரவை உறுப்பினர்கள் மீதான விசாரணையைத் துரிதப்படுத்தவும், குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்ட நாளில் இருந்து ஒரு ஆண்டுக்குள் வழக்கை முடிவுக்குக் கொண்டுவரவும் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் உச்ச நீதிமன்றம் தெரிவித்தது. இதைத் தொடர்ந்து மத்திய சட்ட அமைச்சகம் கடந்த வாரம் டெல்லியிலே ஆலோசனை நடத்தியது. அதன் பின் அனைத்து மாநில முதல் அமைச்சர்கள் மற்றும் அனைத்து மாநிலத் தலைமை நீதிபதிகளுக்கு மத்திய சட்ட அமைச்சர், திரு. ரவிசங்கர் பிரசாத் கடிதம் ஒன்றை எழுதினார். அதிலே, நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டப்பேரவை உறுப்பினர்கள் மீதான வழக்குகளைத் துரிதமாக விசாரித்து முடிவுக்குக் கொண்டுவர தேவையான நடவடிக்கைகள் எடுக்குமாறும், கீழ்க் கோர்ட்டுகளில் நடைபெற்று வரும் வழக்கு விசாரணைகளைக் கண்காணிக்குமாறும் தெரிவித்திருக்கிறார்.

இவ்வாறு கடிதம் எழுதிய மத்திய சட்ட அமைச்சர் அவர்கள்தான், கடந்த சில நாட்களுக்கு முன்பு சொத்துக் குவிப்பு வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட முதலமைச்சர் ஜெயலலிதாவின் மீதான வழக்கு கடந்த 18 ஆண்டுகளாக நடைபெற்றுத் தீர்ப்பு கூறவிருக்கும் இந்த நேரத்தில் சென்னையில் தலைமைச் செயலகத்தில் முதல் அமைச்சரைச் சந்தித்து உரையாடினார் என்ற செய்தி ஏடுகளில் வெளிவந்தது. இவர் தான் ஏற்கனவே முதலமைச்சர் ஜெயலலிதா மீதான வழக்கில், ஜெயலலிதாவுக்காக வாதாடியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இருந்தபோதிலும்,

முதல் அமைச்சரும் மத்திய சட்ட அமைச்சரும் சந்தித்து உரையாடியதை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள் என்று செய்தியாளர் என்னிடம் கேட்டபோது, இதற்காக மத்திய அரசைக் குறை கூறுவது முறையுமல்ல, நியாயமுமல்ல; மோடி தலைமையிலே பணியாற்றுகின்ற சட்ட அமைச்சர் எந்தவிதமான இழுக்கும் மத்திய அரசுக்கு ஏற்படாமல் நடந்து கொள்வார் என்று நான் நம்புகிறேன் என்றுதான் நான் பதிலளித்தேன்.

நீதிமன்றங்களில் எந்த அளவுக்குக் காலதாமதம் சாதாரண காரணங்களுக்காக ஆண்டுக் கணக்கில் நடைபெறுகின்றன என்பதற்கும், விசாரணை என்ற பெயரால் ஆண்டுக்கணக்கிலே சிறையிலே வாடிக் கொண்டிருப்பதற்கு ஒரு முடிவு காணவும், நீதியரசர்கள் சிலர் பெரிதும் முயன்று வருகிற இதே காலகட்டத்தில்தான், உச்ச நீதிமன்றம் ஒரு வழக்கிலே நான்கு மாத காலத்திலே வழக்கினை விசாரித்து முடிக்க வேண்டுமென்று தீர்ப்பளித்ததற்குப் பிறகும், அந்த வழக்கினை அவ்வாறு குறிப்பிட்ட காலத்திற்குள் விசாரித்து முடிக்காமல் ஏதோ ஒரு காரணத்தைக் கூறி, மேலும் மூன்று மாதங்கள் உச்ச நீதிமன்றத்திடமே கோரிப் பெறுவதும், அந்த மூன்று மாதங்களிலும் விசாரணையை முடிக்காமல், மேலும் இரண்டு மாதங்கள் அவகாசம் கேட்பதும் நடைபெறுகின்றன என்றால், அப்படியெல்லாம் வளைந்து கொடுத்து, வாய்தா கொடுக்கின்ற நிலைமை, குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சாதாரணமானவர்களாக இருந்தாலும், அவர்களுக்குக் கிடைக்குமா என்பதுதான் கேள்விக்குறி! உச்ச நீதிமன்றம் தற்போது அளித்திருக்கும் தீர்ப்பின் அடிப்படையில் தமிழகம் முழுவதிலுமிருந்து சுமார் 2,500 பேர் ஒரே நாளில் விடுதலை பெற்றிருக்கிறார்கள். ஏற்றத்தாழ்வுக்கு இடம் அளிக்காமல், அனைவருக்கும் பொதுவாக, விசாரணைக் கைதிகளுக்கெல்லாம் விடிவு காலம் ஏற்படுகின்ற வகையில் "தாமதமாகும் நீதி; தடுக்கப்படும் நீதி" என்ற பழமொழியை நன்குணர்ந்து, அமைந்த தீர்ப்பு இது என்பதைச் சுட்டிக்காட்டி, அந்தத் தீர்ப்பினைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வரவேற்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

9-9-2014

3919. புது வகை ஜனநாயகம் பூத்துக் குலுங்குது; பாரீர்!

உடன்பிறப்பே,

நெல்லை மேயர் தேர்தலில் பா.ஜ.க. வேட்பாளர் தனது வேட்பு மனுவினை வாபஸ் பெற்றதால், அ.தி.மு.க. வேட்பாளர் போட்டியின்றித் தேர்வாகியிருக்கிறாராம். அங்கே மட்டும்தான் இந்த நிலையா? நான்கு நகராட்சித் தலைவர் பதவியையும் அ.தி.மு.க. கைப்பற்றியதாம். "தினத்தந்தி" யின் இன்றைய எட்டு கால செய்தியே இதுதான். ஆனால் இந்த வெற்றிகளை மக்களிடம் வாக்குகளைப் பெற்றா பெற்றார்கள்? ஆளுங்கட்சியாக உள்ள அ.தி.மு.க. இந்த உள்ளாட்சி மன்ற இடைத் தேர்தலை முறையாக நடத்தாது என்பதை உணர்ந்துதான் தி.மு.க. மட்டுமல்ல; இங்கேயுள்ள பெரும்பான்மையான எதிர்க்கட்சிகள் இந்த உள்ளாட்சி மன்றத் தேர்தலைப் புறக்கணித்து முன்பே அறிக்கைகளை விடுத்தன. ஆனால் பா..ஜ.க.வும், கம்யூனிஸ்ட் கட்சிகளும் இந்தத் தேர்தலில் போட்டியிடுவதாக அறிவித்தன. ஆனால் அந்தக் கட்சிகளின் வேட்பாளர்களை ஆளுங்கட்சி என்ன பாடுபடுத்துகிறது?

உள்ளாட்சி அமைப்புகளுக்கான இடைத் தேர்தல்கள் இத்தனை தொகுதிகளுக்கு நடைபெறுகிறது என்றால், எதிர்க்கட்சிகள் எல்லாம் தங்கள் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்க உரிய அவகாசம் கொடுத்து, தேர்தல் அறிவிப்பு தேர்தல் ஆணையத்தால் செய்யப்பட வேண்டும். அவ்வாறு செய்யப்பட்டதா?

செப்டம்பர் 18ஆம் தேதி அன்று உள்ளாட்சி இடைத்தேர்தல்கள் நடைபெறும் என்றும், அதற்கான மனு தாக்கல், தேர்தல் அறிவிக்கப்பட்ட ஆகஸ்ட் 28ஆம் தேதியன்றே தொடங்கும் என்றும் மனுதாக்கல் செய்ய இறுதி நாள் 4-9-

2014 என்றும் மாநிலத் தேர்தல் ஆணையம் ஆகஸ்ட் 28ஆம் தேதியன்றுதான் திடீரென அறிவித்தது.

இதிலே வேடிக்கை என்னவென்றால், இதே உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல் பற்றிய அறிவிப்பு ஏற்கனவே ஒரு முறை அதாவது 6-8-2014 அன்று தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்டு - அறிவிக்கப்பட்ட அன்றைய தினமே, அதே தேர்தல் ஆணையத்தால், தேர்தல் பற்றிய அறிவிப்பினைத் திரும்பப் பெற்ற கோமாளித்தனமும் நடைபெற்றது.

ஏற்கனவே ஒரு முறை தேர்தல் பற்றி அறிவிப்பு கொடுத்து, அந்த அறிவிப்பை ரத்து செய்த பிறகு, இருபது நாட்களுக்குப் பிறகு மீண்டும் ஒரு முறை தேர்தல் பற்றிய அறிவிப்பினைத் தேர்தல் ஆணையம் செய்தபோது, ஏற்கனவே விடுத்த அறிவிப்பில் கூறியிருந்த தேர்தல் நடைபெறும் செப்டம்பர் 18 என்பதை மாற்றினார்களா என்றால் கிடையாது. 6-8-2014 அன்று எந்தத் தேதியில் தேர்தல் நடைபெறுமென்று அறிவித்து, பிறகு அதே நாளில் ரத்து செய்தார்களோ, அதே தேதியில் தேர்தல் நடைபெறும் என்றுதான், 20 நாட்களுக்குப் பிறகு மீண்டும் தேர்தல் ஆணையம் கொடுத்த அறிவிப்பிலும் தெரிவித்தார்கள்.

தேர்தல் அறிவிப்பு வெளிவந்ததற்கு முதல் நாள் தான் அ.தி.மு.க. அமைச்சர் மற்றும் நகராட்சி ஆணையரோடு ஏற்பட்ட பிரச்சினைகளைத் தொடர்ந்து, கடலூர் நகராட்சி மன்றத் தலைவராக இருந்தவர் தன் பதவியை ராஜினாமா செய்தார். அந்தக் கடலூர் நகராட்சிக்கும் இடைத்தேர்தல் என்று அவர் ராஜினாமா செய்த மறுநாளே அறிவிக்கப்பட்டது. தமிழக உள்ளாட்சி தேர்தல் வரலாற்றில் இது போல, பதவி காலியான மறுநாளில் இடைத் தேர்தல் அறிவிக்கப்பட்டதே இல்லை என்று "தினமலர்" நாளேடே குறிப்பிட்டிருந்தது.

அ.தி.மு.க. வேட்பாளர்களையெல்லாம் தயார் செய்து வைத்துக்கொண்ட பிறகு மற்ற எதிர்க் கட்சிகளுக்கெல்லாம் நேரம் கொடுக்காமல் தேர்தல் தேதி மாநிலத் தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்டது.

இவ்வளவிற்கும் பிறகு பா.ஜ.க.வும், கம்யூனிஸ்ட் கட்சிகளும் இந்தத் தேர்தலில் போட்டியிட முன் வந்திருக்கும்போது, இந்தத் தேர்தல்களையாவது ஜனநாயக அடிப்படையில் நடத்திட

ஆளுங்கட்சியினர் முன்வந்தார்களா? உள்ளாட்சி இடைத் தேர்தல்களில் எப்படியெல்லாம் அ.தி.மு.க. நடந்து கொண்டது என்பதற்கு ஒரு சில உதாரணங்களைக் கூறட்டுமா?

புதுக்கோட்டை நகர் மன்றத் தலைவர் பதவிக்கு பா.ஜ.க. சார்பிலும், கம்யூனிஸ்ட்கள் சார்பிலும் வேட்புமனு தாக்கல் செய்ய வந்தபோது, அவர்களை உள்ளேயே விடாமல் அ.தி.மு.க.வினர் தடுத்து, அதனை எதிர்த்து அந்தக் கட்சிகள் ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கிறார்கள். கடைசி வரை அங்கே வேட்பு மனு தாக்கல் செய்யவே விடாமல் செய்துவிட்டு, ஆளுங்கட்சி வேட்பாளர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டு விட்டார்.

நெல்லை மேயர் தேர்தலில் பா.ஜ.க. சார்பில் போட்டியிட்டவர், திடீரென்று வாபஸ் பெற்றுக் கொண்டாராம், அ.தி.மு.க. வேட்பாளர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டாராம்! ஆனால் அங்கே நடந்தது என்ன தெரியுமா? நெல்லையில் பா.ஜ.க. உட்பட பத்து பேர் வேட்பு மனு தாக்கல் செய்திருந்தார்கள். இதில் பா.ஜ.க., அ.தி.மு.க. வேட்பாளர்களின் மனுக்கள் தவிர, மற்ற அனைவரது மனுக்களையும் தள்ளுபடி செய்துவிட்டார்கள். மனுவை வாபஸ் பெற கடைசி நாளான நேற்றையதினம் பா.ஜ.க. வேட்பாளர் தனது மனுவினை வாபஸ் பெற்றிருக்கிறார். ஆனால் அதுபற்றி பா.ஜ.க.வின் தமிழகத் தலைவர் அளித்த பேட்டியில், "பல இடங்களில் பா.ஜ. வேட்பாளர்கள் போட்டியிடக் கூடாது என்று மிரட்டப்பட்டும், தாக்குதலுக்கு உள்ளாகியும் வருகின்றனர். இதுகுறித்து போலீசில் புகார் தெரிவித்தால் மனுக்களை வாங்க மறுக்கின்றனர். இந்நிலையில் திருநெல்வேலி பா.ஜ. மேயர் வேட்பாளர் வெள்ளையம்மாள் கடந்த 3 நாட்களாக மிரட்டப்பட்டு வந்தார். இது தொடர்பாகக் கட்சிக்கும் தெரிவித்துவந்தார். அவரை மிரட்டிக் கையெழுத்து வாங்கி மனுவை வாபஸ் பெற வைத்துள்ளனர். மேலும் அவரை அ.தி.மு.க.வில் சேர்த்துக் கொள்வதாகவும் கூறியுள்ளனர். எதிர்க்கட்சிகள் தேர்தலில் போட்டியிடக் கூடாது என்ற மோசமான நிலை தற்போது தமிழகத்தில் உருவாகியுள்ளது. மனு தாக்கல் செய்யப்பட்ட பல இடங்களில், பா.ஜ.க. வினரின் மனுக்கள் ஏற்கப்பட்டதாக முதலில் நோட்டீஸ் போர்டில் தகவல் வெளியிடப்படுகிறது. அதன் பின்னர் மனு நிராகரிக்கப்பட்டு விட்டதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இது எந்த விதத்தில் நியாயம்? வேட்பாளர்களை

மிரட்டுவது, தாக்குவது, மனுக்களை வாபஸ் பெறவைப்பது என்று ஆளுங்கட்சியினர் அராஜகத்தில் ஈடுபட்டு வருகின்றனர். எதிர்க்கட்சிகள் வெற்றி பெறக் கூடாது, போட்டியிடாமலே வெற்றி பெற வேண்டும் என்றே இதுபோன்ற நடவடிக்கைகளில் ஆளுங்கட்சியினர் ஈடுபட்டு வருகின்றனர்" என்றெல்லாம் தெரிவித்திருக்கிறார்.

உள்ளாட்சி இடைத் தேர்தலில் முறைகேடு நடப்பதைக் கண்டித்து கம்யூனிஸ்ட் கட்சியினர் கோயம்பேட்டில் உள்ள மாநிலத் தேர்தல் ஆணையம் முன்பாக முற்றுகைப் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். நூற்றுக்கும் மேற்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியினர் போலீசாரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

நெல்லையில் நடைபெற்ற ஒரு சம்பவம் மாத்திரமல்ல; திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றிய 2வது வார்டு உறுப்பினர் பதவிக்கு வேட்பு மனு தாக்கல் செய்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளரின் வேட்புமனு தவறாகத் தள்ளுபடி செய்யப்பட்டது பற்றி அந்தக் கட்சியின் மாநிலச் செயலாளர், தோழர் ஜி. ராமகிருஷ்ணன் புகார் தெரிவித்து, அதன் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று வலியுறுத்தி யிருக்கிறார். இதுபற்றி விசாரித்து தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையச் செயலாளர், ஜோதி நிர்மலா வெளியிட்ட அறிவிப்பில், இந்தப் புகார் குறித்து மாவட்டக் கலெக்டர் விசாரித்து அனுப்பிய அறிக்கை விரிவாகப் பரிசீலிக்கப்பட்டது. திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றிய 2வது வார்டு உறுப்பினர் பதவிக்கான இடைத்தேர்தலுக்கு வேட்பு மனுக்கள் பெறப்பட்டு 5ஆம் தேதி வேட்பு மனு பரிசீலனை செய்யப்பட்ட போது, தேர்தல் நடத்தும் அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோர் தேர்தல் விதிகளைச் சரியாகக் கடைப்பிடிக்கவில்லை. எனவே அவர்களை உடனடியாகத் தற்காலிக பணி நீக்கம் செய்யவும், விசாரணை நடத்தவும் ஆணையிட்டிருப்பதாகத் தெரிவித்ததோடு, இந்தத் தேர்தலை ரத்து செய்தும் உத்தரவிட்டிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் தேர்தல் ஆணையம் முறையான நடவடிக்கை எடுக்கக் கூடக் காரணம், கம்யூனிஸ்ட் கட்சியினர் அந்த இடத்தில் ஒட்டப்பட்ட வேட்பாளர் பட்டியலை

புகைப்படமாக எடுத்துக் காட்டிட, அதனை மறுக்க முடியாமல்தான் தீவிர நடவடிக்கை அங்கே எடுக்கப்பட்டதாம்!

தாம்பரம் நகராட்சியில் 7வது வார்டு, 33வது வார்டு இரண்டுக்கும் இடைத் தேர்தல் நடைபெற விருந்தது. அந்த இடங்களில் பா.ஜ.க. சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டு, அங்கே வேட்பு மனு தாக்கல் செய்த அ.தி.மு.க.வினர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவித்து விட்டனர்.

பல்லாவரம் நகராட்சியில் 2வது வார்டில் பாஜ.க. உட்பட ஆறு பேர் வேட்பு மனு தாக்கல் செய்திருந்தனர். ஆளுங்கட்சி வேட்பாளரைத் தவிர மற்றவர்களின் வேட்பு மனுக்கள் வாபஸ் பெறச் செய்யப்பட்டு, அ.தி.மு.க. வேட்பாளர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டார்.

ஆவடி நகராட்சியில் 33வது வார்டில் பா.ஜ.க. உட்பட 11 பேர் வேட்பு மனு தாக்கல் செய்தனர். இதில் 2 பேர் மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன.

8-9-2014 அன்று பா.ஜ.க. உட்பட எஞ்சிய எட்டு பேரும் வாபஸ் பெற்றதாகக் கூறி, ஆளுங்கட்சி வேட்பாளர் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டார். இங்கே போட்டியிட்ட பா.ஜ.க. வேட்பாளரும், மாற்று வேட்பாளரும் அ.தி.மு.க.வில் சேர்ந்ததாகக் கூறப்பட்டது. இதனைக் கண்டித்து பா.ஜ.க. சார்பில் ஆர்ப்பாட்டமும், மறியலும் நடைபெற்று, காவல் துறையினர் அவர்களைக் கைது செய்து இரவில் விடுதலை செய்திருக்கிறார்கள்.

ஆலந்தூரில் 166வது வார்டுக்கான இடைத் தேர்தல். பா.ஜ.க. சார்பில் வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் பா.ஜ.க. வேட்பாளரை நேற்று காலை முதலே காணவில்லையாம். செல்போனில் தொடர்பு கொண்டும் பதில் வராததால், சந்தேகம் அடைந்த அந்தக் கட்சியினர் 25க்கும் மேற்பட்டோர், ஆலந்தூர் மண்டல தேர்தல் அலுவலகத்திற்கு வந்து, தங்கள் கட்சி வேட்பாளர் வருகிறாரா என்று கவனத்தோடு காத்திருந்தார்களாம். ஆனால் 1.35 மணிக்கு பா.ஜ.க. வேட்பாளர் தனது வேட்பு மனுவினைத் திரும்பப் பெற்று விட்டதாகத் தேர்தல் அலுவலர் கூற, பா.ஜ.க.வினர் அவரிடம் தாங்கள் அலுவலக வாசலில் நிற்கும்போது எப்படி அங்கே வந்து மனுவை வாபஸ் பெற்றிருக்க முடியும் என்று

வாக்குவாதம் செய்திருக்கிறார்கள். அதற்குத் தேர்தல் அதிகாரி அவர் எப்படி உள்ளே வந்தார் என்பதெல்லாம் எங்களுக்குத் தெரியாது என்று கூறிவிட்டாராம். பா.ஜ.க. வேட்பாளருக்குப் பெருந்தொகை கொடுத்து அ.தி.மு.க.வில் சேர்ப்பதாகக் கூறி அவரது வேட்பு மனுவினை வாபஸ் பெறச் செய்யப்பட்டதாம்.

மதுரை மாநகராட்சி 85வது வார்டில் இடைத் தேர்தல். அங்கே பா.ஜ.க. வேட்பாளர் வேட்பு மனு தாக்கல் செய்துவிட்டு, தேர்தல் பிரச்சாரத்தையும் தீவிரமாகச் செய்து வந்தார். ஆனால் பா.ஜ.க. வேட்பாளரும், பா.ஜ.க. மாற்று வேட்பாளரும் வேட்பு மனுக்களை வாபஸ் பெற்றுவிட்டதாகக் கூறி, அ.தி.மு.க. வேட்பாளர் போட்டியின்றி வெற்றி பெற்றுவிட்டதாகத் தேர்தல் நடத்திய அதிகாரி அறிவித்தார். ஆனால் பா.ஜ.க. வேட்பாளரோ, மாற்று வேட்பாளரோ தங்கள் வேட்பு மனுக்களை கையெழுத்திட்டு வாபஸ் பெற்றார்களா என்றால் கிடையவே கிடையாது. இவர்களது வேட்பு மனுக்களை முன்மொழிந்தவர்கள் என்று கூறிக் கொண்டு, யாரோ இருவர் மதுரை மாநகராட்சி அலுவலகத்திற்கு வந்து, வேட்பு மனுக்களை வாபஸ் பெறுவதாகக் கூறியதன் பேரில் வேட்பு மனுக்கள் திரும்பப் பெறப்பட்டுவிட்டன என்று அதிகாரி தெரிவித்திருக்கிறார். உண்மையில் பா.ஜ.க. வேட்பாளரின் மனுவை முன்மொழிந்தவர் வேட்பாளருடன் அதே நேரத்தில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்திருக்கிறார். அவருடைய பெயரைச் சொல்லிக் கொண்டு யாரோ இருவர் கையெழுத்திட்டதை நம்பி அதிகாரி அ.தி.மு.க. வேட்பாளர் போட்டியின்றி வெற்றி பெற்றதாக அறிவித்த நாடகமும் நடந்துள்ளது.

ராமனாதபுரம் நகராட்சித் தலைவர் பதவிக்கு பா.ஜ.க. சார்பில் போட்டியிடும் வேட்பாளர், அ.தி.மு.க.வினர் தன்னை மிரட்டுவதாக கலெக்டர் மற்றும் எஸ்.பி. இடம் புகார் கொடுத்துள்ளார். அந்தப் புகாரில், அ.தி.மு.க.வினர் அவரிடம் வந்து, "உன்னுடைய கையெழுத்தை நாங்களே போட்டு, போட்டியிலிருந்து நீ விலகிக் கொள்வதாக எழுதிக் கொடுத்துவிட்டோம். அதனால் நீ போட்டியிட முடியாது" என்று கூறியதாகத் தெரிவித்திருக்கிறாராம்.

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூரில் ஊராட்சிக்குப் போட்டியிட்ட பா.ஜ.க. வேட்பாளர் பிரபாகரனைக் காணவில்லை என்று அவர்களுடைய வீட்டாரே கூறியிருக்கிறார்களாம்.

இப்படியெல்லாம் தில்லுமுல்லுகளும், அக்கிரமங்களும், அராஜகங்களும் நடைபெறும் என்று எதிர்பார்த்துத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் இந்த உள்ளாட்சி இடைத் தேர்தல்களில் பங்கு பெறுவதில்லை என்று புறக்கணித்தது. தமிழகத்திலே உள்ள வேறு சில கட்சிகளும் இந்தத் தேர்தலில் பங்கேற்காமல் தவிர்த்தன. ஆனால் போட்டியிடும் ஒன்றிரண்டு கட்சிகளின் வேட்பாளர்களையும் அ.தி.மு.க.வினர் மிரட்டி ஒடுக்கி பயமுறுத்தி வாபஸ் பெறச் செய்திருக்கிறார்கள் என்றால் இதைவிடப் பெரிய வெட்கக்கேடு ஒன்று ஆளுங்கட்சிக்கு இருக்க முடியுமா?

அன்புள்ள,

மு.க.

10-9-2014

3920. உன் வருகையை எதிர்பார்த்துக் காத்திருப்பேன்!

உடன்பிறப்பே,

இந்த ஆண்டு முப்பெரும் விழாவிற்கு இன்னும் மூன்று நாட்களே உள்ளன. மாநாடுகள் என்றாலோ, போராட்டங்கள் என்றாலோ கழக உடன்பிறப்புகளை எல்லாம் அதற்கு அழைத்து நான்கைந்து கடிதங்கள் எழுதுவேன். இது ஆண்டுதோறும், தலைமைக் கழகத்தின் சார்பில் நடத்தப்படும் முப்பெரும் விழா - பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 136வது பிறந்த நாள் - பேரறிஞர் அண்ணா அவர்களின் 106வது பிறந்த நாள் - திராவிட முன்னேற்றக் கழகத்தின் 66வது பிறந்த நாள் - இந்த மூன்று நாள்களையும் இணைத்துத்தான் ஆண்டுதோறும் முப்பெரும் விழாவாக நாம் கொண்டாடி வருகிறோம்.

செப்டம்பர் 15! கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற தாரக மந்திரத்தை நம் நினைவில் பதித்து - நெஞ்சில் செதுக்கிய - நிகரில்லாத் தமிழர் கோமான் யார் என்ற கேள்விக்கு - ஒரே விடையாக விளங்குகின்ற வித்தகர் - தன்மானக் குன்றம் - தரணி வாழ் தமிழர்க்கெல்லாம் பெரு மன்றம் - தகைமைக்கு இலக்கணமாய் - பகைமைக்கும் பரிவு காட்டும் நற்குணச் செல்வமாய்த் திகழும் பேரறிஞர் அண்ணாவின் 106வது பிறந்த நாள்! அந்த நாளிலேயே இந்த ஆண்டு முப்பெரும் விழாவினை நாம் சென்னையில் நடத்துகின்றோம்.

செப்டம்பர் திங்கள் 15ஆம் நாள் காலை 7.30 மணியளவில், சென்னை வள்ளுவர்கோட்டத்திற்கு எதிரே அமைந்துள்ள அண்ணாவின் திரு உருவச் சிலைக்கு நானும், பொதுச் செயலாளர் பேராசிரியரும், பொருளாளர் தளபதி ஸ்டாலினும் மற்றும் கழக முன்னணியினரும் வழக்கம் போல மாலை அணிவித்து மரியாதை செலுத்தவிருக்கிறோம்.

அன்று மாலையில் முப்பெரும் விழா விருது வழங்கும் நிகழ்ச்சி - தி.மு.க. அறக்கட்டளை சார்பில் மாணவர்களுக்கு நிதியளிப்பு நிகழ்ச்சி - முரசொலி அறக்கட்டளை சார்பில் பரிசு வழங்கும் நிகழ்ச்சி - சிறந்த ஆட்டோ ஓட்டுநர்களுக்குப் பண முடிப்பு, பதக்கம் வழங்கும் நிகழ்ச்சி அத்தனையும் அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கத்தில் நடைபெறவுள்ளது.

முப்பெரும் விழா மேடையில் - அண்ணா அவர்கள் தன் வாழ்வில் மாணவர்கள்பால் பெரிதும் அன்பும் அக்கறையும் கொண்டு, அவர்களை முன்னேற்றப் பாடுபட்டார் என்பதற்கு அடையாளமாக - மேல்நிலைப் பள்ளித் தேர்வில் உயர் மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்குத் தி.மு.கழக அறக்கட்டளை சார்பில் நிதியளிப்பு மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சியும் - புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடல்கள் ஒப்பித்தல் போட்டியில் மாநில அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட கல்லூரி மற்றும் மேல் நிலைப் பள்ளி மாணவர்களுக்கு முரசொலி அறக் கட்டளை சார்பில் நிதியளிப்பு மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சியும் முந்தைய ஆண்டுகளைப் போலவே இந்த ஆண்டும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அது மாத்திரமல்ல, தொழிலாளர்கள்பால் அண்ணா நேசம் கொண்டவர் என்பதை மெய்ப்பிக்கும் வகையில் ஆண்டுதோறும் வழங்குவதைப் போலவே இந்த ஆண்டும் சிறந்த ஆட்டோ ஓட்டுநர்களுக்கான நற்சான்று, பண முடிப்பு, பதக்கம் வழங்குதல் போன்ற நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

இவற்றைத் தொடர்ந்து முப்பெரும் விழா விருதுகள் வழங்கும் நிகழ்ச்சி - அந்த விழாவிற்கு பொதுச் செயலாளர் இனமானப் பேராசிரியர் தலைமை தாங்கிட தந்தை பெரியார் விருதினைப் பழம்பெரும் கழக உடன்பிறப்பு, கர்நாடக மாநிலத்தில் கழகம் வளர்த்தவர்களில் ஒருவரான பெங்களூரு வி.டி.சண்முகம் அவர்களுக்கும், அண்ணா விருதினைக் கழக உடன்பிறப்பு திருமதி முனவர் ஜான் அவர்களுக்கும், பாவேந்தர் பாரதிதாசன் விருதினை சிறு வயது முதல் பட்டிதொட்டியெங்கும் கழகப் பிரச்சாரம் செய்து வரும் திருமதி புதுக்கோட்டை விஜயா அவர்களுக்கும் என் பெயரால் உள்ள கலைஞர் விருதினைக் கலையுலக உடன்பிறப்பு, எதையும் எதிர்பாராது இயக்கப் பணியாற்றும் குமரிமுத்து அவர்களுக்கும், என்னால் வழங்கப்படவுள்ளது. தென் சென்னை

மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி ஜெ. அன்பழகன் எம்.எல்.ஏ., வரவேற்புரை ஆற்றிடவுள்ளார்.

பொருளாளர் தம்பி தளபதி மு.க.ஸ்டாலின், முதன்மைச் செயலாளர் ஆர்க்காடு நா. வீராசாமி, துணைப் பொதுச் செயலாளர்கள் துரைமுருகன், வி.பி.துரைசாமி, திருமதி சற்குணபாண்டியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கிட இருக்கிறார்கள்.

தி.மு.கழகம் எடுக்கும் முப்பெரும் விழாவில் கழகச் சான்றோர்களுக்கு விருது வழங்கும் நிகழ்ச்சி என்பது 1985ஆம் ஆண்டு முதல் ஒரு ஆண்டு கூட தொய்வின்றி நடைபெற்று வருகிறது. தொடக்கத்தில் பெரியார் விருது, அண்ணா விருது, கலைஞர் விருது ஆகிய மூன்று விருதுகள் மட்டுமே வழங்கப்பட்டு வந்தன. 2000 ஆண்டு முதல் பாவேந்தர் விருதும் சேர்த்துக் கொள்ளப்பட்டு, ஆண்டுதோறும் நான்கு விருதுகள் வழங்கப்படுகின்றன. இந்த ஆண்டு விருது வழங்கும் நிகழ்ச்சி என்பது முப்பதாவது ஆண்டாகும். இதுவரை 101 பேருக்கு இந்த விருதுகள் அளிக்கப்பட்டுள்ளன. இந்த முப்பதாவது ஆண்டில் விருதுக்குரியவர்கள் யார் யார் என்பதை முதலில் நான் குறிப்பிட்டிருக்கிறேன்.

பெரியார் விருது பெறும் பெங்களூரு வி.டி.சண்முகம் கழகத்தின் வளர்ச்சியே தனது உயிர்மூச்செனக் கொண்டு கழகத்தில் பணியாற்றி வருபவர். கருநாடக மாநிலத்தில் கழகத்திற் கென சொந்த தலைமை அலுவலகம் அமைந்திட வேண்டும் என அரும்பாடுபட்டுப் பெங்களூர் இராமச்சந்திராபுரம் பகுதியில் மூன்று அடுக்குமாடிக் கட்டிடத்தைக் கட்டி அதற்கு "கலைஞரகம்" என்ற பெயரைச் சூட்டியதுடன், பெங்களூர் சீராமபுரம், சுதந்திர நகர் பகுதியில் கழகத்தின் எந்தவொரு கிளைக் கழகத்திற்கும் சொந்தக் கட்டிடம் இல்லாத நிலையில் மூன்று அடுக்கு மாளிகை கட்டி அதற்கு "கலைஞர் அறிவாலயம்" என பெயர் சூட்டப்பட்டதற்காகப் பெரிதும் உழைத்தவர். இத்தகு சிறப்புக்குரிய பெங்களூரு வி.டி.சண்முகம் அவர்கள் ஆற்றி வரும் கழகத் தொண்டினைப் பாராட்டிடும் வகையில் தலைமைக் கழகத்தின் சார்பில் பெரியார் விருது இந்த ஆண்டு வழங்கப்படுகிறது.

அண்ணா விருது பெறும் திருமதி எஸ்.ஏ.முனவர் ஜான் தன்னுடைய இளம் வயதிலேயே பொதுப்பணியில் ஆர்வம் கொண்டு, அதற்கேற்ற இடம் திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்றுணர்ந்து அதில் தன்னை இணைத்துக்கொண்டு பணியாற்றி வருபவர். தலைமைக் கழகம் மற்றும் மாவட்டக் கழகம் அறிவிக்கும் அனைத்து மக்கள் நலப் போராட் டங்கள், பேரணிகள், கூட்டங்கள், மாநாடுகளில் தவறாது பங்கேற்பவர். போராட்டத்தின் காரணமாக இருமுறை கைதானவர். ஒவ்வொரு தேர்தலிலும் நமது கழகத்தின் வேட்பாளர்களுக்காக வீடுவீடாகச் சென்று வாக்குகளைச் சேகரிக்க முழுமூச்சுடன் ஈடுபட்டு, கழக வேட்பாளரின் வெற்றிக்குப் பாடுபட்டு வருபவர். இத்தகைய சிறப்புக்குரிய திருமதி எஸ்.ஏ. முனவர் ஜான் அவர்களது கழகப்பணியினைப் பாராட்டிடும் வகையில் தலைமைக் கழகத்தின் சார்பில் இவருக்கு அண்ணா விருது வழங்கப்படவுள்ளது.

பாவேந்தர் விருது பெறும் திருமதி. புதுக்கோட்டை விஜயா கழகக் கொள்கை முழக்கம் செய்வதையே தனது கடமையாகக் கொண்டவர். தமிழகத்தின் பட்டிதொட்டியெங்கும் பிரச்சாரம் செய்தவர். தமிழகத்தில் அவர் பேசாத நகரங்கள் இல்லை. மகளிர் அணி பிரச்சாரக் குழு செயலாளராக, புதுக்கோட்டை மாவட்டக் கழகத் துணைச் செயலாளராக, பின்னர் மகளிர் அணி பிரச்சாரக் குழுச் செயலாளராகப் பணியாற்றி, மகளிர் அணிச் செயலாளராகத் தொடர்ந்து பணியாற்றி வருகிறார். இவர் ஆற்றும் தொண்டினைப் பாராட்டிடும் வகையில் தலைமைக் கழகத்தின் சார்பில் முப்பெரும் விழாவில், இவருக்குப் பாவேந்தர் விருது வழங்கப்படவுள்ளது.

என் பெயரால் வழங்கப்படும் கலைஞர் விருது இந்த ஆண்டு நகைச்சுவை நடிகர் குமரி முத்து அவர்களுக்கு வழங்கப்படுகிறது. தன்னுடைய இளம் வயதிலேயே பேரறிஞர் அண்ணா அவர்களின் சொற்பொழிவினைக் கேட்டு, கழகத்தின் அபிமானியாக மாறியவர் இவர். திரைத்துறையில் புகழ்பெற்று விளங்கிய நடிகர் நம்பிராஜன் அவர்களின் உடன்பிறந்த தம்பி என்பதால் நடிகவேள் எம்.ஆர்.இராதா அவர்கள் தனது நாடகக் குழுவில் இவரைச் சேர்த்துக் கொண்டார். இவருடைய சிரிப்பே இவரது புகழை அதிகப்படுத்தியுள்ளது. திரைப்படங்களில் தன்னுடைய நடிப்புத் திறனை வெளிப்படுத்தியதால் “கலைமாமணி”, “கலைச்செல்வம்”, “கலைவாணர்” ஆகிய விருதுகளைப் பெற்றவர். பகுத்தறிவுப்

பாசறையாம் திராவிடர் கழகம் இவருக்கு "பெரியார் விருது" வழங்கி கௌரவித்துள்ளது. இத்தகைய சிறப்புக்குரிய குமரிமுத்துவின் பெருமைகளுக்கு மேலும் சிறப்புச் சேர்த்திடும் வகையிலும், அவரது தொண்டினைப் பாராட்டிடும் வகையிலும் இந்த ஆண்டு கலைஞர் விருது இவருக்கு வழங்கப்படுகிறது.

விருது பெற்றவர்கள் ஒவ்வொருவருக்கும் கேடயமும் ஐம்பதாயிரம் ரூபாய் பொற்கிழியும் தலைமைக் கழகத்தின் சார்பில் அளிக்கப்படுகிறது.

உடன்பிறப்பே,

இந்த விழாக்கள் பற்றிய செய்திகள் ஏற்கனவே ஏடுகளில் வெளிவந்து அவற்றில் கலந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணத் தோடு நீ இருக்கிறாய் என்பதை நான் அறிவேன். இருந்தாலும், அண்ணாவின் விழாவிற்கு, அண்ணன் நான் அழைக்கவில்லையே என்ற குறை உனக்குமிருக்கு மல்லவா? அதற்காகவே இந்தக் கடிதம்! தலைமைக் கழகம், அண்ணாவிற்கு விழா எடுத்த போதும், உனது சொந்த ஊரில் உன்னால் முடிந்த அளவிற்கு அண்ணாவிற்கு விழா எடுப்பாய் என்பதை நான் நன்கறிவேன். அதுதான் குன்றின் மேலிட்ட விளக்காக ஒளி வீசும். இருந்தாலும் சென்னையில் தலைமைக் கழகம் எடுக்கும் இந்த விழாவிற்கு நீ உன் குடும்பத்தோடு புறப்படத் தயாராகு!

மனக் கலக்கத்தில் ஒரு மணல் துளியளவுகூடத் தலைவனுக்கு வருதல் கூடாது என்று என் தம்பிமார்கள் எண்ணிடுவார்களேயானால்;

அண்ணா போல் புன்னகை தவழும் முகத்துடன்
அய்யா போல் நெஞ்சு நிமிர்த்திய நடையுடன்
வயதான இந்தக் காலத்திலும் வாலிப முறுக்கு
எனக்கும் வந்தே தீரும் தம்பீ!

என்று திடம் கொள்கிறேன் - திசையெட்டுமிருந்து தீபரவினாலும் - தீயோர் வலை நாள்தோறும் விரிக்கப்பட்டாலும் - கணைகள் ஆயிரமாயிரம் கடுகிப் பறந்து வரினும் கவலைப் படாது;

கருமமே கண்ணாக -
கழகமே பாசறையாக -

பெரியாரே துணையாக –
பேரறிஞர் அண்ணாவே என் உயிரின் இணையாக –

இருக்கும்போது; இந்த முப்பெரும் விழா நடைபெறுகிறது என்று நான் முன்பொருமுறை எழுதியதை மீண்டும் நினைவூட்டுகின்றேன்.

முப்பதாண்டு காலமாக முப்பெரும் விழாவிலே தொடர்ந்து நான் கலந்து கொண்டு கழகத் தீரர்களுக்கு, கழகத்துக்காக உழைத்தவர்களுக்கு என்கையால் இந்த விருதுகளை வழங்கும் வாய்ப்பு பெறுகிறேன் என்பதை நினைத்தால்; என் மகிழ்ச்சிக்கு எல்லைதான் ஏது? விழாவிற்கு இன்னும் மூன்று நாட்கள் தான் உள்ளன. அதற்கான ஏற்பாடுகளைச் சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி அன்பழகனும், தலைமைக் கழகத்தினரும் இணைந்து செய்து கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டினைப் போலவே இந்த ஆண்டு முப்பெரும் விழாவினையும் சிறப்பிக்கச் செய்ய உன் வருகையை எதிர்பார்த்துக் காத்திருப்பேன்!

அன்புள்ள,
மு.க.

12-9-2014

3921. தளர்ச்சிப் பாதையில் தடுமாறும் தமிழக ஆட்சி!

உடன்பிறப்பே,

18.9.2014 நடை பெறும் உள்ளாட்சி மன்ற இடைத் தேர்தல்களில் திராவிட முன்னேற்றக் கழகம், தே.மு.தி.க, பா.ம.க., ம.தி.மு.க., மனித நேய மக்கள் கட்சி, புதிய தமிழகம், விடுதலைச் சிறுத்தைகள், இந்திய யூனியன் முஸ்லீம் லீக், காங்கிரஸ் போன்ற கட்சிகள், ஜனநாயக நெறிமுறைகளுக்கெதிரான ஆளுங்கட்சியின் அராஜகங்களையும், அக்கிரமங்களையும் எதிர்த்துப் போட்டியிட இயலாது என்று கூறிப் போட்டியிடாமல் புறக்கணித்து விட்டன. இதிலே பா.ஜ.க.வும், கம்யூனிஸ்ட் கட்சிகளும் மட்டும் இந்த இடைத்தேர்தலில் போட்டியிட்ட போதிலும், 3,075 இடங்களுக்கு நடை பெற வேண்டிய தேர்தலில், 1,589 இடங்களில் வேட்பு மனுக் களைத் தள்ளுபடி செய்தோ, மாநிலத் தேர்தல் ஆணையமும், அ.தி.மு.க.வும் கூட்டாக இணைந்து, ஆளுங்கட்சியினர் போட்டியின்றி வெற்றி பெற்றதாக அறிவித்து விட்டனர். அந்த அளவுக்குத் தமிழ்நாட்டில் அ.தி.மு.க. ஆட்சியில் ஜனநாயகம் கொடி கட்டிப் பறக்கிறது(?.?). இந்தக் கூத்தில், தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா - களத்தில் எதிரிகளையே காணவில்லை என்று கூறி விட்டு - கதாநாயகி ஒருவர் "காமெடி" காட்சிகளில் நடிப்பதைப் போல - தேர்தல் பிரச்சாரம் செய்யப் போகிறேன் என்று கூறிக் கொண்டு, பெரும் பணச் செலவில் தூத்துக்குடியில் புதிதாக கெலிகாப்டர் தளம் அமைக்கச் செய்து, அங்கேயும், கோவையிலும் பயணம் செய்து, அவருக்கு எழுதித் தரப்பட்ட பிரச்சார உரைக் குறிப்பை அப்படியே படித்து விட்டு, அதை ஏடுகளுக்கும் கொடுத்து விட்டுத் திரும்பி விட்டார்.

கோவையில் பேச்சினைப் படித்த முதல் அமைச்சர் ஜெயலலிதா "தமிழ்நாடு வளர்ச்சிப் பாதையில் செல்கிறது" என்றுகூறி, அதற்காக

அதிகாரிகள் கொடுத்த புள்ளிவிவரங்களைத் தெரிவித்திருக்கிறார். "மத்திய புள்ளியியல் அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள 2012-2013ஆம் ஆண்டிற்கான புள்ளி விவரங்களை மேற்கோள்காட்டி, தமிழகத்தில் வளர்ச்சி குறைந்து விட்டதாக, இங்குள்ள அரசியல் கட்சித் தலைவர்கள் குற்றம் சாட்டி வருகின்றனர். இதில் உள்ள உண்மை நிலையை உங்களுக்கு எடுத்துரைப்பது எனது கடமை" என்று தனது பதிலைத் தொடங்கிய முதலமைச்சர் என்ன புள்ளி விவரத்தைக் கூறி வாதத்தை முறியடித்திருக்கிறார் என்று பார்த்தேன்.

14-9-2014 அன்று நான் "கேள்வி-பதில்" பகுதியில் கூறும்போது, "வழக்கமாக பொருளாதார வளர்ச்சி போன்ற புள்ளி விவரங்களில், மாநில புள்ளியியல் இயக்குனரகங்கள் வெளியிடும் விவரங்களுக்கும், மத்திய புள்ளியியல் அலுவலகம் தெரிவிக்கும் விவரங்களுக்கும் அதிக வேறுபாடு இருக்கும். மாநில புள்ளியியல் இயக்குனரகங்கள் வெளியிடும் புள்ளி விவரங்கள் மாநில அரசின் அனுமதி பெற்ற பிறகே வெளியிடப்படும்; எனவே அந்தப் புள்ளி விவரங்கள் மாநில அரசுக்குச் சாதகமாக இருப்பதோடு, அவற்றில் முழுமையான நம்பகத்தன்மையும் இருப்பதில்லை. ஆனால் மத்திய புள்ளியியல் அலுவலகம் யாரிடமும் அனுமதி பெறுவதில்லை. பிரதமர்கூட இதிலே தலையிட முடியாது. எனவே அவற்றின் நடுநிலையையும், நம்பகத்தன்மையையும் யாரும் சந்தேகிப்பதில்லை. அவ்வாறு மத்திய புள்ளியியல் அலுவலகம் மாநிலங்களின் பொருளாதார வளர்ச்சி பற்றி வெளியிட்ட அறிக்கை 10-9-2014 அன்று "இந்து" நாளேட்டில் வெளிவந்துள்ளது. அந்தச் செய்தியின் முதல் பத்தியே, "Bihar is the fastest growing State while Tamil Nadu is the worst performer, the latest data released by the Central Statistics Office has revealed" GOMI தான் தொடங்குகிறது. அதாவது மத்திய புள்ளியியல் அலுவலகம் அண்மையில் வெளியிட்ட 2012-2013ஆம் ஆண்டுக்கான விவரப்படி, பீகார் வேகமாக வளர்ந்து வரும் முதல் நிலை மாநிலம் என்றும், தமிழ்நாடு படுமோசமான - கடைநிலை மாநிலம் என்றும் கூறப்பட்டுள்ளது. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி மற்றும் மாநில வாரியான வளர்ச்சி ஆகியவற்றை மத்திய புள்ளியியல் அலுவலகம் வெளியிட்டுள்ள விவரப்படி, நாட்டின் சராசரி உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 4.5 சதவிகிதம். பீகார் மாநிலம் 10.73 சதவிகித வளர்ச்சியை எட்டி நாட்டிலேயே முதல்

இடத்தைப் பிடித்துள்ளது. கிட்டத்தட்ட எல்லா மாநிலங்களும் நாட்டின் சராசரி வளர்ச்சி வீதமான 4.5 சதவீதத்தை ஒட்டியோ அல்லது அதைவிடக் கூடுதலாகவோ வளர்ச்சியைப் பெற்றுள்ளன. மாநிலங்களின் வளர்ச்சிப் பட்டியலில், ஒப்பீட்டுத் தர வரிசைப்படி கடைசி இடத்தைப் பிடித்துள்ளது தமிழ்நாடு. இங்கே வளர்ச்சி விகிதம் 3.9 சதவிகிதம்தான். இது நாட்டின் சராசரி வளர்ச்சி விகிதத்தை விட மிகக் குறைவாகும். 18 மாநிலங்களின் தர வரிசைப் பட்டியல் மத்திய புள்ளியியல் அலுவலகத்தால் வெளியிடப்பட்டிருப்பதில், கடைசி இடத்தைப் பெற்றிருக்கும் "பெரும்பேறு (!)," ஜெயலலிதாவை முதலமைச்சராகக் கொண்டிருக்கும் தமிழ்நாட்டிற்கே கிடைத்துள்ளது" என்று விரிவாகக் குறிப்பிட்டிருந்தேன்.

தமிழகத்திலே உள்ள மற்றக் கட்சித் தலைவர்களும் இந்தப் புள்ளி விவரங்களை எடுத்துக்காட்டி, இந்த மிக மோசமான நிலைக்குக் காரணமான அ.தி.மு.க. ஆட்சிக்குக் கண்டனம் தெரிவித்திருந்தார்கள். அதற்குத்தான் தமிழக முதல் அமைச்சர் ஜெயலலிதா கோவை தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திலே பதில் கூறியிருக்கிறார். என்ன பதில் தெரியுமா?

"2012-2013ஆம் ஆண்டு தமிழ்நாடு மிகப் பெரிய வறட்சியைச் சந்தித்தது. தென் மேற்குப் பருவ மழை மற்றும் வடகிழக்குப் பருவ மழை பொய்த்ததன் காரணமாகவும், கர்நாடகம் நமக்கு உரிய தண்ணீரைத் திறந்து விட மறுத்ததன் காரணமாகவும் வேளாண் உற்பத்தியில் எதிர்மறையான வளர்ச்சியைத் தமிழ்நாடு சந்தித்தது" என்று கூறியிருக்கிறார். அதாவது எதிர்க்கட்சிகள் கூறிய புள்ளி விவரங்கள் தவறு என்று கூறவில்லை. அந்த ஆண்டு தமிழ்நாட்டில் மிகப் பெரிய வறட்சி என்று கூறி "வாய்தா" வாங்கியிருக்கிறார்.

மேலும் ஜெயலலிதா 2013-2014ஆம் ஆண்டில் இந்த நிலை முற்றிலும் மாறிவிட்டதாகவும், மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி கூடுதலாக ஆகியிருப்பதாக மத்திய புள்ளியியல் அமைப்பு மதிப்பிட்டுள்ளது என்றும் கோவையில் தெரிவித்திருக்கிறார். 2012-2013ஆம் ஆண்டுக்கான மொத்த உற்பத்தி வளர்ச்சியைத்தான் மத்திய புள்ளியியல் அமைப்பு வெளியிட்டிருப்பதாக ஏடுகளில் செய்தி வெளிவந்துள்ளது.

மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி பற்றி பதில் கூறியபோது, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி பற்றியும் "டைம்ஸ் ஆப் இந்தியா" வெளியிட்ட புள்ளிவிவரங்களை எடுத்துக் கூறி அதற்கு என்ன பதில் என்று கேட்டிருந்தேனே; அதற்கு ஏன் முதலமைச்சர் ஜெயலலிதா பதிலளிக்கவில்லை? அந்தப் புள்ளி விவரங்கள் எல்லாம் உண்மை என்று ஒப்புக் கொள்கிறாரா? தொழில் முதலீட்டாளர்கள், தொழில்களை நடத்த உகந்த மாநிலமாகத் தமிழ்நாடு இல்லை என்றும், கடந்த மூன்றாண்டுகளாக தொடர் மின்வெட்டு காரணமாகத் தொழிற்சாலைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும், முதலமைச்சர் உள்ளிட்ட உயர் மட்ட முடிவுகளை எடுப்பவர்களுடன் எளிதில் அணுகிப் பேச முடியாத நிலை இருக்கிறது என்றும், 2012-2013ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சி மிகவும் குறைந்த அளவான 4.14 சதவிகிதம்தான் என்றும், தமிழகத்தின் தொழில் வளர்ச்சி என்பது ஆண்டுக்கு ஆண்டு குறைந்து கொண்டே போகிறது என்றும், தமிழ்நாட்டின் உற்பத்தி வளர்ச்சி, 2009-2010ஆம் ஆண்டில் (தி.மு. கழக ஆட்சியில்) 29.18 சதவிகிதமாக இருந்தது, 2012-2013ஆம் ஆண்டில் (ஜெயலலிதா ஆட்சியில்) மைனஸ் 1.31 சதவிகிதமாகக் குறைந்து விட்டது என்றும், தொழில் வளர்ச்சியை எடுத்துக் கொண்டால், 2009-2010ஆம் ஆண்டில் (தி.மு.கழக ஆட்சியில்) 20.93 சதவிகிதம். 2012-2013ஆம் ஆண்டில் (ஜெயலலிதா ஆட்சியில்) 5.38 சதவிகிதமாகக் குறைந்து, 2013-2014ஆம் ஆண்டில் 1.61 சதவிகிதமாக மேலும் குறைந்து விட்டது என்றும் கூறியிருக்கிறார்களே, இதற்கெல்லாம் கோவை கூட்டத்திலே முதலமைச்சரால் ஏன் பதிலளிக்க இயலவில்லை ?

World Economic Forum's Competitiveness of Indian Cities என்ற அமைப்பு அண்மையில் "தொழில் தொடங்க சென்னை ஒரு சரியான இடம் கிடையாது. அகமதாபாத்தான் முதல் நிலையில் இருக்கிறது. ஆனால் நான்காண்டுகளுக்கு முன்பு சென்னை பற்றிய நிலைமையே வேறு. 2010ஆம் ஆண்டு வெளியான அறிக்கையின்படி, தர வரிசையில் சென்னை, பெங்களூருவைப் பின்னுக்குத் தள்ளி விட்டது என்பதுதான்" என்று கூறியிருக்கிறதே; அதற்கு முதல் அமைச்சரின் பதில் என்ன ?

கோவையில் மின்சாரம் பற்றியும் முதலமைச்சர் பேசியிருக்கிறார். ஆனால் தொழிலதிபர் ஒருவர் "டைம்ஸ் ஆப்

இந்தியா" நாளேட்டுக்கு அளித்த பதிலில், "மின்சாரம் இல்லாமல் ஒன்றும் செய்ய முடியாது. தமிழ்நாட்டில் மின்சாரத்தை வெளியில் வாங்கித் தொழிலை நடத்த வேண்டியிருக்கிறது. தமிழகத்தில் பெரும்பாலான மின் நிறுவனங்கள், குறிப்பாகக் காற்றாலை நிறுவனங்கள் மின்சாரத்தை அரசுக்கு விற்று விட்டு, பணத்தைப் பெறுவதற்காக மாதக்கணக்கில் காத்துக் கொண்டிருக்கின்றன. தமிழக அரசு பல்வேறு செயல் திட்டங்களை மேற்கொள்ள வேண்டிய நிலையில், எதையும் செய்யாமல் இருக்கிறது. செப்டம்பருக்குப் பிறகு காற்றாலைகள் மின் உற்பத்தியைச் செய்யாத நிலையில், நாங்கள் என்னதான் செய்வது என்று அக்டோபர் வரை காத்திருக்கப் போகிறோம்" என்றெல்லாம் பேட்டியளித்து பத்து நாட்கள் ஆகிறதே, அதற்கு என்ன பதில்?

மேலும் அதே நாளேட்டில் வேறொரு செய்திக் கட்டுரையில், "NAMMA CHENNAI, NOT A GLOBAL CITY" என்ற தலைப்பில் தி.மு. கழக ஆட்சிக் காலத்தில் "போர்டு", "மிச்சலின்", "ஹுண்டாய்" ஆகிய கார் நிறுவனங்கள் இந்தியாவில் அவற்றின் தலைமை அலுவலகங்களை சென்னையிலே நிறுவியிருந்தன. ஆனால் தற்போது அ.தி.மு.க. ஆட்சியில் எதிர்மறை நடவடிக்கைகளின் காரணமாக அந்த மூன்று கார் நிறுவனங்களும் தங்களுடைய தலைமை அலுவலகங்களை வேறு மாநிலங்களுக்கு மாற்றிவிட்டன என்ற தகவலும் தெரிவிக்கப்பட்டுள்ளதே, அதற்கு முதல் அமைச்சர் ஜெயலலிதாவின் பதில் எங்கே?

தி.மு. கழகம் ஆட்சியை விட்டு இறங்கும்போது 2011 ஆம் ஆண்டில் பேரவையில் படிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை, பத்தி 5இல், "தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் உறுதியான பொருளாதார வளர்ச்சித் திட்டங்களின் காரணமாக, மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி வலுவான நிலையில் உள்ளது. நிலையான விலை விகிதத்தின் அடிப்படையில், 2006-2007 ஆம் ஆண்டில் விவசாயத் துறையின் வளர்ச்சி 12.64 சதவீதமாகவும், தொழில் துறையின் வளர்ச்சி 12.91 சதவீத மாகவும், சேவைத் துறையின் வளர்ச்சி 16.33 சதவீதமாகவும், மாநிலத்தின் மொத்த உற்பத்தி வளர்ச்சி 14.85 சதவீதமாகவும் இருந்தது. 2005-2006 ஆம் ஆண்டில் 39 ஆயிரத்து 692 ரூபாயாக இருந்த தனி நபர் வருமானம், 2009-2010 ஆம் ஆண்டில் 69 ஆயிரத்து 377 ரூபாயாக உயர்ந்துள்ளது" என்றெல்லாம் தெரிவித்திருந்தோம்.

ஆனால் இந்த ஆண்டு, அ.தி.மு.க. ஆட்சியில் 13-2-2014 அன்று பேரவையில் படிக்கப்பட்ட நிதி நிலை அறிக்கையில், "சரிநிகர் வளர்ச்சியை எட்ட மாநில அரசு கடுமையாக முயன்று வரும் அதே வேளையில், வளர்ச்சியைத் தூண்டவும், நலிவுற்று வரும் பேரியல் பொருளாதாரச் சூழ்நிலைகளை மேம்படுத்தவும், மத்திய அரசு தவறியதன் காரணமாக, பொருளாதார வளர்ச்சியும், முதலீடுகளும் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாகப் பாதிப்புக்குள்ளாகியுள்ளன" என்று மத்திய அரசின் மீது பழி போடப்பட்டுள்ளதே தவிர, தமிழ் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி உயர்ந்திருப்பதாக எந்தத் தகவலும் இல்லை.

"தமிழகத்தை முதல் மாநிலமாக மாற்றிக் காட்டுவேன்" என்ற ஜெயலலிதாவின் முழக்கம் வெற்று முழக்கமாகி விட்டது. தமிழகத்திற்கான தொலைநோக்குத் திட்டம் - என்பது வெறும் காகிதத் திட்டமாகி விட்டது. தமிழகத்தின் வளர்ச்சி அனைத்து முனைகளிலும் தரை தட்டிய கப்பலாகி விட்டது. இந்த நிலையில் "தமிழ்நாடு வளர்ச்சிப் பாதையில் செல்கிறது" என்று ஜெயலலிதா, தேர்தலுக்காக வாக்காளர்களைத் திசை திருப்புவதற்காக, பேசியிருப்பதில் எந்தவிதப் பொருளும் இல்லை. உண்மையில் தமிழ்நாடு வளர்ச்சிப் பாதையில் செல்லவில்லை; வாட்டத்தைப் பெருக்கிடும் தளர்ச்சிப் பாதையில்தான் தடுமாறிக் கொண்டிருக்கிறது!

அன்புள்ள,

மு.க.

18-09-2014

3922. இனியும் நம்புவதற்கு மக்கள் தயாராக இல்லை!

உடன்பிறப்பே,

கடந்த 15-9-2014 அன்று கோவையில் உள்ளாட்சித் தேர்தலுக்காகப் பிரச்சாரம் செய்த தமிழக முதல்அமைச்சர் ஜெயலலிதா மின்சாரம் பற்றி நீண்ட நேரம் பேசியிருக்கிறார்.

"கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் 2,793 மெகாவாட் கூடுதல் மின் நிறுவு திறன் சேர்க்கப்பட்டுள்ளது. இதுவன்றி நடுத்தர கால அடிப்படையில் 500 மெகாவாட் மின்சாரம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. 1000 மெகாவாட் திறன் கொண்ட கூடங்குளம் அணு மின் நிலையத்தின் முதல் அலகிலிருந்து தற்போது 562 மெகாவாட் மின்சாரம் கிடைத்து வருகிறது. தமிழகத்தில் மேலும் பல புதிய மின் திட்டங்கள் மூலம் இன்னும் ஒருசில மாதங்களில் 737 மெகாவாட் மின்சாரம் தமிழகத்திற்குக் கிடைக்கவிருக்கிறது. 1000 மெகாவாட் திறன் கொண்ட கூடங்குளம் அணு மின் நிலையத்தின் இரண்டாம் அலகு, இந்த ஆண்டு இறுதியில் மின் உற்பத்தியைத் தொடங்க விருக்கிறது. இதன் மூலம் 463 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும். 2014-2015ஆம் ஆண்டில் தலா 250 மெகாவாட் திறன் கொண்ட நெய்வேலி நிலக்கரி விரிவாக்கத் திட்டம் நிலை 2ன் இரண்டு அலகுகள் மின் உற்பத்தியைத் தொடங்க இருக்கின்றன. இவற்றின் மூலம் 230 மெகாவாட் மின்சாரம் கிடைக்கவிருக்கிறது. இது தவிர 3,330 மெகாவாட் மின்சாரத்தை 15 ஆண்டுகளுக்குப் பெறத்தக்க வகையில் நீண்ட கால அடிப்படையில் கொள்முதல் ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன. இதில் 224 மெகாவாட் மின்சாரம் தற்போது பெறப்பட்டு வருகிறது. இது டிசம்பர் மாதத்திற்குள் 1000 மெகாவாட்டாக உயரும். மொத்தத்தில் 2014-2015ஆம் நிதி ஆண்டிற்குள் தமிழகத்திற்குக் கூடுதலாக 2,430 மெகாவாட் மின்சாரம் கிடைக்கவிருக்கிறது. இதையும் சேர்த்துக் கூடுதலாக

5,723 மெகாவாட் மின்சாரம் கிடைக்க எனது தலைமையிலான அரசு வழி வகுத்துள்ளது" என்று பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறார்.

இந்தப் பேச்சில் முக்கியமாக, மொத்தத்தில் 2014-2015ஆம் நிதி ஆண்டிற்குள் தமிழகத்திற்குக் கூடுதலாக 2,430 மெகாவாட் மின்சாரம் கிடைக்கவிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். "கெட்டிக்காரன் புளுகு எட்டு நாட்களுக்குத்தான்" என்று சொல்வார்கள்! முதலமைச்சரின் பொய் 5 நாட்களுக்குக் கூட நீடிக்கவில்லை.

இதோ; 20-9-2014 தேதிய "தினமலர்" நாளேடு "தமிழகத்திற்கு 2,430 மெகாவாட் மின்சாரம் சாத்தியமா? முதல்வருக்கு அவப்பெயர் ஏற்படுத்தும் மின் வாரியம்" என்ற தலைப்பில் ஒரு பெரிய செய்திக் கட்டுரை வெளியிட்டுள்ளது. அதில், "நடப்பு நிதியாண்டு முடிவடைய இன்னும் ஆறு மாதங்களே உள்ளதால், முதல்வர் ஜெயலலிதா அறிவித்தபடி, தமிழகத்திற்கு 2,430 மெகாவாட் மின்சாரம் கூடுதலாகக் கிடைக்குமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

தூத்துக்குடியில், என்.எல்.சி., மற்றும் மின்வாரியம் இணைந்து, தலா 500 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு அலகுகள் உடைய அனல் மின் நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. இதில் தமிழகத்திற்கு 387 மெகாவாட் மின்சாரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த அனல் மின்நிலைய முதல் அலகில் 2012 மார்ச் மாதத்திலும், இரண்டாம் அலகில் 2012 ஆகஸ்ட் மாதத்திலும் உற்பத்தியைத் துவக்கத் திட்டமிடப்பட்டது. ஆனால் இதுவரை மின் உற்பத்தி துவக்கப்படவில்லை. (ஆனால் இங்கிருந்து 387 மெகாவாட் மின்சாரம் கிடைக்குமென்று கோவையில் ஜெயலலிதா பேசியிருக்கிறார்.) வல்லூரில் இரண்டு அலகுகளில் மட்டும், மின் உற்பத்தி செய்யப்படுகிறது. மூன்றாம் அலகில் வணிகரீதியாக மின் உற்பத்தி இதுவரை துவங்கப்படாததால், தமிழகத்திற்கு 350 மெகாவாட் மின்சாரம் கிடைக்கவில்லை. (ஆனால் வல்லூர் மூன்றாவது அலகிலிருந்து 350 மெகாவாட் மின்சாரம் கிடைக்குமென்று ஜெயலலிதா எதிர்பார்க்கிறார்) கூடங்குளத்தில் தலா 1000 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு அணு உலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் தமிழகத்திற்கு 1,025 மெகாவாட் மின்சாரம் ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போது, முதல் அணு உலையில், சோதனை மின் உற்பத்தி நடக்கிறது. இரண்டாவது

அணு உலை, இதுவரை செயல்பாட்டிற்கு வரவில்லை. (ஆனால் ஜெயலலிதா கூடங்குளத்திலிருந்து 463 மெகாவாட் மின்சாரம் கூடுதலாகக் கிடைக்குமென்று கோவையிலே பேசியிருக்கிறார்) நெய்வேலியில் விரிவாக்கம் என்ற பெயரில் தலா 250 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு புதிய அலகுகள் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு வணிக மின் உற்பத்தி துவங்காததால் தமிழகத்திற்கு 230 மெகாவாட் மின்சாரம் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. (ஆனால் முதலமைச்சர் ஜெயலலிதா நெய்வேலியிலிருந்து 230 மெகாவாட் மின்சாரம் கூடுதலாகக் கிடைக்கப் போவதாகக் கோவையில் சொல்லியிருக்கிறார்.) முதலமைச்சர் தன்பேச்சில் தனியார் நிறுவனங்களிடமிருந்து தற்போது 224 மெகாவாட் மின்சாரம் பெறப்படுகிறது, இது டிசம்பரில் 1,000 மெகாவாட்டாக உயருமென்று தெரிவித்திருக்கிறார். தனியார் நிறுவனங்களிடமிருந்து கடந்த பிப்ரவரி மாதம், 1,000 மெகாவாட் மின்சாரம் கிடைக்க வேண்டிய நிலையில், தற்போது 224 மெகாவாட் மின்சாரம் மட்டுமே கிடைக்கிறது. நடப்பு நிதியாண்டு முடிவு அடைய இன்னும் ஆறு மாதங்களே எஞ்சியுள்ளது. இந்நிலையில், கூடங்குளம் இரண்டாவது அணு உலை, தூத்துக்குடி என்.டி.பி.எல். உள்ளிட்ட மின் நிலையங்களில் தற்போதுவரை சோதனை மின் உற்பத்தி கூடத் துவங்கப்படவில்லை. எனவே முதல்வர் அறிவித்தபடி, நடப்பு நிதியாண்டிற்குள் 2,430 மெகாவாட் மின்சாரம் கிடைக்குமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது" என்று "தினமலர்" நாளேடு ஜெயலலிதாவின் கோவைப் பேச்சு பற்றி விளக்கமளித்துள்ளது.

மேலும் அந்த நாளிதழ், இதுகுறித்து எரிசக்தித் துறை அதிகாரி ஒருவர் கூறியதாக வெளியிட்டுள்ள செய்தியில், "முதல்வரிடம் மின் வாரிய அதிகாரிகள், நல்லபெயர் வாங்க வேண்டுமென்பதற்காக உண்மையான, மின் நிலைமையைத் தெரிவிக்காமல் மறைக்கின்றனர். இதை நம்பி, முதல்வரும் மின் தடை இருக்காது என பொதுமக்களிடம் கூறி வருகிறார். இதனால், மின் பற்றாக்குறையால் மின் தடை செய்யும்போது மக்களிடம் அரசுக்கு அவப்பெயர் ஏற்படுகிறது" என்றும் தெரிவித்துள்ளது.

முதலமைச்சரின் பேச்சு உண்மைக்கு மாறானது என்பதை நான் கூறவில்லை. "தினமலர்" எழுதியிருப்பதைத்தான் அப்படியே எடுத்துத் தெரிவித்திருக்கிறேன். ஜெயலலிதா கடந்த

மூன்றாண்டுகளாக இதுபோன்ற உறுதிமொழிகளை எத்தனை முறை தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரிவித்திருக்கிறார்?

அ.தி.மு.க. ஆட்சிக்கு வருவதற்கு முன் பாகவே "ஆட்சிக்கு வந்த மூன்றே மாதங்களில் மின்வெட்டு இல்லாமல் செய்வோம்" என்று சொல்லிவிட்டுத்தான் ஆட்சிக்கு வந்தார்கள். ஆட்சிக்கு வந்தவுடன் 2011ஆம் ஆண்டு ஆளுநர் உரை மீதான விவாதத் திற்குப் பதிலளித்த ஜெயலலிதா "தற்போதுள்ள மூன்று மணிநேர மின்வெட்டினை இரண்டு மணிநேரமாகக் குறைப்போம்; ஜூலை மாதம் முதல் தமிழ்நாட்டில் மின் பற்றாக்குறை முழுவதும் தீர்க்கப்படும்" என்று சொன்னார். அந்தத் துறையின் அமைச்சர், "இந்தியா டுடே" இதழுக்கு 2012ஆம் ஆண்டு பிப்ரவரியில் அளித்த பேட்டியில், "2012 மார்ச் முதல் மே மாதம் வரையில் மட்டும்தான் தமிழகம் மின் பற்றாக்குறையை அனுபவிக்கும். இந்த மூன்று மாதங்களை மட்டும் பொறுத்துக் கொண்டால், தமிழகத்தில் மின் பற்றாக்குறையே இருக்காது" என்றார். 2012ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் ஒரு விழாவில் பேசிய முதல் அமைச்சர் ஜெயலலிதா 2013ஆம் ஆண்டு இறுதிக்குள் மின் பற்றாக்குறை முழுவதும் தீர்க்கப்படும் என்றார். 25-4-2013 அன்று சட்டப்பேரவையில் முதலமைச்சர் 110வது விதியின் கீழ்ப் படித்த அறிக்கையில், "நாம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மூலம், தமிழகம் விரைவில் மின் மிகை மாநிலமாக மாறும் என்பதோடு, மின் நுகர்வோருக்குத் தடையற்ற சீரான மின்சாரம் வழங்குவது உறுதி செய்யப்படும்" என்றார். 25-10-2013 அன்று தமிழகச் சட்டப்பேரவையில் பேசிய முதலமைச்சர் ஜெயலலிதா, "உறுப்பினர்கள் யாரும் கவலை கொள்ளத் தேவையில்லை, வெகு விரைவில், மிக விரைவில், தமிழ்நாடு மின் மிகை மாநிலமாக ஆக்கப்படும் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன், அதைச் சாதித்தே தீருவோம்" என்றார். 2013ஆம் ஆண்டு நவம்பர் 28ஆம் தேதி ஏற்காடு இடைத் தேர்தலில் உரையாற்றிய ஜெயலலிதா, "மத்திய அரசினால் தான் மின்வெட்டு ஏற்பட்டுள்ளது; அந்தச் சூழ்நிலையையும் வெற்றிகரமாக எதிர்கொண்டு தமிழகத்தில் ஏற்பட்டுள்ள மின் பற்றாக்குறையைச் சரி செய்து, மின்வெட்டே இல்லாத ஒளிமயமான சுபிட்சமான நிலைமையை விரைவில் உருவாக்கியே தீருவேன்" என்றார். மீண்டும் இந்த ஆண்டு மே மாத இறுதியில் "ஜூன் 1ந்தேதி முதல் மின் வெட்டு முழுவதுமாக நீங்கும்" என்றார். இதைத்

தொடர்ந்து 18-6-2014 தேதிய "ஜூனியர் விகடன்" இதழில், "கப்சா கரண்ட்! இருளில் தவிக்கும் தமிழகம்" என்ற தலைப்பில் ஒவ்வொரு மாவட்டமும் மின்வெட்டு காரணமாக எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளது என்பதைப் பத்து பக்கங்களுக்கு ஒரு நீண்ட கட்டுரையாக வெளியிடப்பட்டிருந்தது. அந்தக் கட்டுரையின் துணைத் தலைப்புகளை மட்டும் இடம் கருதிச் சுருக்கமாகக் கூற வேண்டுமேயானால்; நெல்லையின் சோகம் -மிரட்டி ஓட வைக்கும் சென்னை - சிவகங்கையில் திடீர் மின்வெட்டு - விழுப்புரத்தில் ஆறு மணிநேர மின்வெட்டு - வெக்கையில் தவிக்கும் வேலூர் - கடலூரில் மூன்று "பேஸ்" முடக்கம் - திக் திக் திருவண்ணாமலை - ராமநாதபுர ஐஸ் பிரச்சினை - முதல்வர் தொகுதியிலும் மின் தட்டுப்பாடு - சேலம் தொழிற்சாலைகள் பாதிப்பு - நாமக்கல்லில் நேரம் தெரியவில்லை - விருதுநகரில் ஆகா! - மதுரையில் படுத்துவிட்ட நெசவுத் தொழில் - தேனி மருத்துவமனையிலும் மின்வெட்டு - கிருஷ்ணகிரியில் காரணம் தெரியவில்லை - தர்மபுரியில் அப்பாடா!" என்ற துணைத் தலைப்புகளில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மின்வெட்டு எவ்வாறு இருக்கின்றது என்பதை எழுதியிருக்கிறார்கள்.

ஜெயலலிதா தனது பேச்சில் 2,500 மெகாவாட் மின்சாரம் தற்போது அவருடைய ஆட்சியில் கிடைக்கத் தொடங்கியிருக்கிறது என்று பேசியதற்குக்கூட பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ், "தி.மு.கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டங்களிலிருந்துதான் இந்த 2,500 மெகாவாட் மின்சாரம் இப்போது கிடைக்கத் தொடங்கியிருக்கிறதே தவிர, ஜெயலலிதா புதிதாகத் தொடங்கப் போவதாக அறிவித்த மின் திட்டங்களால் இல்லை. ஜெயலலிதா தனது அறிக்கையில் 3,300 மெகாவாட் மின்சாரத்தை நீண்ட கால அடிப்படையில் வாங்குவதற்கான ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன என்றும் தெரிவித்திருக்கிறார். இந்த மின்சாரம் யாரிடமிருந்து வாங்குவதற்கு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது? அதற்காக முறைப்படி டெண்டர் கோரப்பட்டதா? அரசு சார்பில் ஒரு வெள்ளை அறிக்கை வெளியிடப்பட்டால் அனைவரும் விவரங்களைப் புரிந்துகொள்ள முடியும்" என்று பதில் அறிக்கை விடுத்தார். வெள்ளை அறிக்கைக் கோரிக்கை, அ.தி.மு.க. ஆட்சியில் காற்றில் கரைந்து போனது!

ஜெயலலிதா மேலும் பேசும்போது, "கோவை மாநகரம் தொழில் வளர்ச்சி நிறைந்த மாநகரம் என்பதைக் கருத்தில் கொண்டு சிறு குறு தொழில்களுக்கு மின்வெட்டு இல்லாமல் பார்த்துக் கொண்டேன்" என்றும் தெரிவித்திருக்கிறார். அவர் எவ்வாறு பார்த்துக்கொண்டார் என்பதை, ஆளுங்கட்சியை விழுந்து விழுந்து அன்றாடம் ஆதரிக்கும் "தினமணி" நாளேடு, 20-11-2013 அன்று, "கோவையில் எட்டு மணிநேர மின்வெட்டு - குறுந்தொழில் நிறுவனங்கள் பாதிப்பு" என்ற தலைப்பிலே விரிவாக வெளியிட்டுள்ளது.

தமிழகத்திலே மின்பற்றாக்குறை இந்த நிலையில் இருக்கும்போது, இந்த மாதம் 9ஆம் தேதியன்று டெல்லியில் முக்கியத்துவம் வாய்ந்த மாநில மின் துறை அமைச்சர்கள் மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில் தமிழக மின்துறை அமைச்சர் கலந்துகொண்டாரா என்றால் கலந்துகொள்ளவில்லை. இதைப் பற்றி இன்று வெளிவந்த செய்தியிலேகூட, மத்திய மின் நிலையங்களிலிருந்து கிடைக்க வேண்டிய மின்சாரம், தமிழகத்தின் ஒதுக்கீடு குறைந்திருப்பதாகவும், ஆனால் நிரந்தரத் தீர்வுக்கு மின் வாரிய அதிகாரிகள் முயற்சிக்கவில்லை என்றும், டெல்லி மாநாட்டில் தமிழக அமைச்சர் கடந்த 9ஆம் தேதி கலந்துகொண்டு, இந்தப் பிரச்சினையை எழுப்பியிருந்தால் இது போன்ற பிரச்சினைகளையெல்லாம் பேசித் தீர்வு கிடைத்திருக்குமென்றும், ஆனால் அமைச்சர் போகவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வேறு ஒரு கட்சி ஆளுங்கட்சியாக இருந்து, அந்தக் கட்சியின் அமைச்சர் ஒருவர், இப்படிப்பட்ட நெருக்கடியான சூழ்நிலையில், மத்திய அரசின் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை என்றால் முதலமைச்சர் ஜெயலலிதா எப்படியெல்லாம் ஏசியும், எள்ளி நகையாடியும், எடுத்தேன் கவிழ்த்தேன் என்னும் பாணியில் அறிக்கை விடுத்திருப்பார்?

''சூரிய சக்தியைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்வதிலும் தமிழ்நாடு முன்னிலையில் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் மூன்றாண்டுகளில் 3000 மெகாவாட் அளவுக்கு சூரியஒளி மூலம் மின் உற்பத்தி செய்யப் போவதாக" ஜெயலலிதா அறிவித்தார். தமிழக அரசு, சூரிய சக்தி மூலம், 2013இல் 1000 மெகாவாட், 2014இல் 1000 மெகாவாட், 2015இல் 1000 மெகாவாட் என்று மூன்றாண்டுகளுக்குள்

3000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப் போவதாகப் பேரவையில் சொன்னார்கள். அறிவிப்பு செய்து இரண்டாண்டுகள் ஓடிவிட்டன. தற்போது என்ன நிலை? 2012 இல் 52 முதலீட்டாளர்களிடமிருந்து 708 மெகாவாட் மின்சாரம் கொள்முதல் செய்ய முடிவெடுத்து, அதை வாங்க மின் வாரிய அதிகாரிகள் 2013ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில்தான் தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையத்தின் அனுமதிக்காக விண்ணப்பிக்கிறார்கள். சூரிய சக்தி மின்சாரத்தை வாங்குவதற்கான விரிவான கட்டண ஆணையை, கடந்த வெள்ளிக்கிழமைதான் மின்சார ஒழுங்கு முறை ஆணையம் வெளியிட்டுள்ளது. அதில், சூரிய சக்தி மின் உற்பத்தியாளரிடமிருந்து ஒரு யூனிட் மின்சாரம் 7.01 ரூபாய்க்கு வாங்க மின் வாரியத்திற்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இந்த விலை தேசிய அளவில் 9.30 ரூபாய்க்கு மேல் உள்ளதாகக் கூறப்படுகிறது. அதனால் நிர்ணயம் செய்துள்ள விலை குறைவு என்று கூறி முதலீட்டாளர்கள், மேல் முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் முறையிட முடிவு செய்திருக்கிறார்களாம். மேலும் ஏற்கனவே மின்வாரியம் 52 முதலீட்டாளர்களிடமிருந்து 708 மெகாவாட் மின்சாரம் கொள்முதல் செய்ய அனுமதி கோரியிருந்தார்கள் அல்லவா; அந்த அனுமதியையும் தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையம் மறுத்ததுடன், அந்த மனுவையும் ரத்து செய்து15-9-2014 அன்று உத்தரவிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இதுதான் ஜெயலலிதாவின் சூரிய மின் உற்பத்தித் திட்டத்தின் சோகமான வரலாறு.

சூரிய மின் உற்பத்தியின் கதிதான் இது என்றால், காற்றாலைகள் மூலம் கிடைக்கும் மின்சாரத்தின் கதி என்ன தெரியுமா? தமிழகத்தில் தென்மேற்குப் பருவக் காற்று கடந்த மே மாதத்திலே தொடங்கியதால், காற்றாலை மின் உற்பத்தி நாள் ஒன்றுக்கு 2,500 மெகாவாட்டாக உள்ளது. காற்றாலைகள் மூலம் நாள் ஒன்றுக்கு 3,400 மெகாவாட் வரை மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும். தமிழக மின் வாரியத்தின் செயற்கையான கட்டுப்பாடுகளால் சுமார் 20 சதவிகிதக் காற்றாலைகள் இயங்காமல் உள்ளன. ஒரு யூனிட் மின்சாரம் தற்போது ரூ.3.39 வுக்கு கொள்முதல் செய்யப்படுகிறது. இந்நிலையில், சில ஆண்டுகளாக அரசு கடைப்பிடித்து வரும் விதிமுறைகளால் ஓரிரு காற்றாலைகளை இயக்கி வரும் காற்றாலை மின் உற்பத்தியாளர்கள் கடும் நெருக்கடியில் சிக்கியுள்ளார்கள். இப்படிப்பட்டவர்கள் 1,400

பேர் இருக்கிறார்கள். இவர்களின் பிரதிநிதிகளை அழைத்து அரசு பேச வேண்டும். தற்போது இவர்களின் ஆலைகள் இயங்காமல் உள்ளன. மேலும் காற்றாலை நிறுவனங்கள் மின்சாரத்தை அரசுக்கு விற்றுவிட்டு, பணத்தைப் பெறுவதற்காக மாதக்கணக்கில் காத்துக் கொண்டிருக்கின்றன. தமிழக அரசு பல்வேறு செயல் திட்டங்களை மேற்கொள்ள வேண்டிய நிலையில் எதையும் செய்யாமல் இருக்கிறது. செப்டம்பருக்குப் பிறகு காற்றாலைகள் மின் உற்பத்தியைச் செய்யாத நிலையில் தொழிலதிபர்கள் என்னதான் செய்யப் போகிறார்களோ என்ற கேள்விக்குறியோடு இருக்கிறார்கள். ஆனால் முதலமைச்சர் இத்தனையையும் மறைத்துவிட்டு யாரோ எழுதிக்கொடுத்த ஏமாற்றுப் புள்ளி விவரங்களைக் கோவையில் படித்துவிட்டு வந்திருக்கிறார். மின்வாரிய அதிகாரி ஒருவர் தெரிவித்திருப்பதைப் போல, ஒருசில அதிகாரிகள் முதல் அமைச்சரிடம் தவறான விவரங்களை எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் முதலமைச்சர் ஜெயலலிதா கூறுவதை, இத்தனைக் காலமும் நம்பிக் காத்திருந்தது போதும் என, இனியும் நம்புவதற்குத் தமிழ்நாட்டு மக்கள்தான் தயாராக இல்லை!

அன்புள்ள,

மு.க.

22-9-2014

3923. வென்றது ஜனநாயகமா? பணநாயகமா?

உடன்பிறப்பே,

தமிழகத்தில் உள்ளாட்சி மன்றங்களுக்கான இடைத்தேர்தல் நடைபெற்று, முன்கூட்டியே ஏற்பாடுகள் செய்து முடித்து, எதிர்பார்த்தபடி அ.தி.மு.க. வெற்றி பெற்றுள்ளது. ஆகா! அந்தத் தேர்தலில் தான் ஜனநாயகம் எந்த எந்த அளவுக்குக் கொடி கட்டிப் பட்டொளி வீசிப் பறந்தது தெரியுமா? அது பற்றி ஏடுகளில் எல்லாம் எப்படியெப்படி செய்திகள் வந்தன தெரியுமா? நானே அது பற்றி இரண்டு மூன்று முறை கருத்துத் தெரிவித்திருக்கிறேன். "துஷ்டரைக் கண்டால் தூர விலகு" என்பது பழமொழி. அதுபோல அ.தி.மு.க. ஆட்சியில் இடைத் தேர்தல் என்றால், தமிழகத்திலே உள்ள முக்கிய எதிர்க்கட்சிகள் எல்லாம், "அதைப்பற்றி எங்களுக்கு என்ன?" என்பதைப் போல, சர்வாதிகாரச் சதிராட்டங்களும், அராஜகச் சேட்டைகளும் எங்கணும் அரங்கேறும் எனச் சரியாக யூகித்தே தேர்தலையே புறக்கணித்துவிட்டார்கள். குறிப்பாகத் தி.மு.க., தே.மு.தி.க., ம.தி.மு.க., பா.ம.க., விடுதலை சிறுத்தைகள், காங்கிரஸ், இந்திய யூனியன் முஸ்லீம் லீக், மனித நேய மக்கள் கட்சி, புதிய தமிழகம் ஆகிய கட்சிகள் இந்தத் தேர்தலில் போட்டியிடாமல் ஒதுங்கிவிட்டன. காரணம் அவர்களுக்கெல்லாம் அ.தி.மு.க. வினர் இடைத் தேர்தல்களில் என்னென்ன திருகுதாளங்களில் ஈடுபடுவார்கள் என்பது முன்பே தெரிந்திருந்தது. முதலில் தேர்தல் தேதியே தேர்தல் ஆணையத்தால் முறையாக அறிவிக்கப்பட்டதா?

செப்டம்பர் 18ஆம் தேதி உள்ளாட்சி மன்றங்களுக்கான இடைத் தேர்தல்கள் நடைபெறுமென்று ஆகஸ்ட் 6ஆம் தேதியன்று தமிழ்நாடு தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்டது. ஆனால் என்ன காரணத்தாலோ அறிவிக்கப்பட்ட அன்றைய தினமே, அதே தேர்தல் ஆணையம் தேர்தல் பற்றிய தனது அறிவிப்பினைத்

திரும்பப் பெற்றது! பிறகு 22 நாட்கள் கழித்து, ஆகஸ்ட் 28ஆம் தேதியன்று தமிழ்நாடு தேர்தல் ஆணையம், உள்ளாட்சி மன்ற இடைத் தேர்தலுக்கான அறிவிப்பினைச் செய்தது. 22 நாட்கள் கழித்து, தேர்தல் தேதியை அறிவித்தபோது, ஏற்கனவே அறிவித்த தேதியையும் மாற்றி அல்லவா அறிவிக்க வேண்டும்! ஆனால் அப்படி அறிவிக்கவில்லை. மாறாக ஏற்கனவே அறிவித்த செப்டம்பர் 18ஆம் தேதியன்று தேர்தல் நடைபெறும் என்றுதான் அறிவித்தார்கள்! எங்கேயாவது, எந்தத் தேர்தலிலாவது எடுத்த எடுப்பிலேயே இப்படிப்பட்ட கோமாளித்தனங்கள் நடைபெற்றிருக்கின்றனவா? ஏன் இவ்வாறு தேதியை மாற்றாமல் அதே தேதியை அறிவித்தார்கள் என்றால் அந்த நாள் தான் முதலமைச்சருக்கு "ராசியான" நாளாம்!

இறுதியாக இந்தத் தேர்தலில் ஆளுங்கட்சியை எதிர்த்து பா.ஜ.க.வும், கம்யூனிஸ்ட் கட்சிகளுமே போட்டியிட முன் வந்து, வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தார்கள். ஆனால் அவர்களையாவது இந்தத் தேர்தலில் ஜனநாயகரீதியாகப் போட்டியிட ஆளுங்கட்சியினர் அனுமதித்தார்களா? இதோ ஒன்றிரண்டு உதாரணங்கள்!

மூன்று இடங்களில் மேயர் பதவிக்கான தேர்தல்! நெல்லை, தூத்துக்குடி, கோவை மாநகராட்சிகளில் மேயர் பதவிக்கான தேர்தல். இதில் ஒரு இடத்தில், அதாவது நெல்லையில் தேர்தலே நடைபெறாத அளவுக்குச் செய்துவிட்டார்கள். எப்படித் தெரியுமா? ஆளுங் கட்சிக்கு எதிராக யார் யார் வேட்பு மனு தாக்கல் செய்தார்களோ, அவர்களில் பலருடைய வேட்பு மனுக்களை அது சரியில்லை, இது சரியில்லை என்று நொண்டிக் காரணம் கூறித் தள்ளுபடி செய்துவிட்டார்கள். தள்ளுபடி செய்யப்பட முடியாதவர்களை யெல்லாம் சரிக்கட்டி, செய்ய வேண்டியதைச் செய்து, சொல்ல வேண்டியதைச் சொல்லி, எதிர்த்த வேட்பு மனுக்களையெல்லாம் வாபஸ் பெறச் செய்துவிட்டார்கள். முக்கியமாகப் போட்டியிட்ட பா.ஜ.க. வேட்பாளரின் வேட்பு மனுவினையும் கடைசி நாளன்று வாபஸ் பெறச் செய்ததோடு, அந்த வேட்பாளரையே அ.தி.மு.க.விலே சேர்த்து விட்டார்கள்! இப்படிப்பட்ட முழு நீள நகைச்சுவைக் கூத்து நெல்லையிலே மட்டுமா நடைபெற்றது?

செங்கல்பட்டு நகராட்சியில் 1வது வார்டு மற்றும் 6வது வார்டுக்கு இடைத் தேர்தல் நடந்தது. இதில் அ.தி.மு.க. வேட்பாளரை எதிர்த்துப் போட்டியிட்ட சுயேச்சை வேட்பாளர்களான தணிகைவேலு, பசியுல்லா ஆகியோர் வருமான வரிக் கணக்கைத் தாக்கல் செய்யவில்லை என்று கூறி வேட்பு மனுவைத் தள்ளுபடி செய்து நகராட்சி ஆணையரும், தேர்தல் அலுவலருமான முத்து வெங்கடேஷ் உத்தரவிட்டிருக்கிறார். மேலும், அ.தி.மு.க.வைச் சேர்ந்த 2 வேட்பாளர்கள் வெற்றி பெற்றதாகவும் அறிவித்துச் சான்றிதழ்களையும் தந்துவிட்டார். இதனை எதிர்த்துச் சுயேச்சை வேட்பாளர்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்கள். வழக்கை விசாரித்த நீதிபதி, தேர்தல் அதிகாரிகளை இதுபற்றி விசாரிக்க உத்தரவிட்டார். அதன்படி நடந்த விசாரணையில், நகராட்சி ஆணையர் சட்ட விரோதமாக வேட்பு மனுக்களைத் தள்ளுபடி செய்தது தெரிந்து, அது தொடர்பாக நீதிபதியிடம் அறிக்கைதரப்பட்டது. நீதிபதி அ.தி.மு.க. வேட்பாளர்களின் வெற்றி செல்லாது என்றும், மறு தேர்தல் நடத்தவும் உத்தரவிட்டார். அதன் தொடர்ச்சியாக வேறு வழியின்றித் தேர்தல் ஆணையம், தற்போது நகராட்சி ஆணையர் முத்து வெங்கடேசை 21-9-2014 அன்று "சஸ்பென்ட்" செய்துள்ளது. இந்த "சஸ்பென்ட்" நடவடிக்கை வெறும் கண் துடைப்பா? நீதிமன்றத்தை ஏமாற்றுவதற்காக மேடை ஏற்றப்பட்ட நாடகமா? என்பதெல்லாம் பிறகு வெளியேவரும்!

கோவையிலே என்ன நடைபெற்றது தெரியுமா?

கோவையில் பா.ஜ.க. வேட்பாளர் நந்தகுமார்! நெல்லையில் நடந்ததைப் போல அவர் வாங்க வேண்டியதை வாங்கிக் கொண்டு வேட்பு மனுவினை வாபஸ் பெற மறுத்துவிட்டார். என்ன நடைபெற்றது? அவர் மீதே தாக்குதல் நடைபெற்றது. வாக்குப்பதிவுக்கு முதல் நாள் 17-9-2014 அன்று காலையில், கோவை மாநகராட்சியில் 65வது வார்டு சவுரிபாளையம் பகுதியில் அ.தி.மு.க.வினர் வாக்காளர்களுக்குப் பணம் கொடுக்கும் தகவல் கேட்டு, பா.ஜ.க. வேட்பாளர் நந்தகுமார் தனது கட்சியினரோடு அங்கே சென்று வாக்காளர்களுக்குப் பணம் கொடுக்க முயன்ற போடிபாளையம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் பழனிசாமி உட்பட சிலரைக் கையும் களவுமாகப் பிடித்து, காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றிருக்கிறார்கள். அந்தத் தகவல் அறிந்ததும், அ.தி.மு.க.வினர் நூறுக்கும் மேற்பட்டோர் அங்கே திரண்டு வந்து

பா.ஜ.க. வேட்பாளரைத் தாக்கியிருக்கிறார்கள். பா.ஜ.க.வினர் தங்கள் வேட்பாளரைச் சுற்றி நின்று பாதுகாத்ததோடு, காருக்கு அழைத்துச் சென்றிருக்கிறார்கள். ஆனால் அ.தி.மு.க.வினர் அந்தக் காரையும் முற்றுகையிட்டு, கார் கண்ணாடியை உடைத்து ரகளையில் ஈடுபட்டிருக்கிறார்கள். நடைபெற்றதா இல்லையா?

புதுக்கோட்டை நகர் மன்றத் தலைவர் பதவிக்கு பா.ஜ.க. சார்பிலும், கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலும் வேட்புமனு தாக்கல் செய்யவே அனுமதிக்கவில்லை. அவர்கள் சாலை மறியல் போராட்டம் எல்லாம் நடத்தியும் பயனில்லை. எதிரிகளை வேட்பு மனு தாக்கல் செய்யவே விடாமல் தடுத்துவிட்டு, அ.தி.மு.க. வெற்றி பெற்றதாக அறிவித்துவிட்டார்கள்.

சென்னையிலே என்ன நிலை? சென்னை மாநகராட்சி வட்டம் 35இல் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் காலை 11 மணிக்கெல்லாம் அனைத்து வாக்குச் சாவடிகளையும் கைப்பற்றி விட்டார்கள். அங்கே ஆளுங்கட்சி வேட்பாளரை எதிர்த்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர் போட்டியிட்டார். அந்தக் கட்சியினர் தேர்தல் அதிகாரிகளிடம் முறையிட்டபோது, அவர்கள் தலையிட மறுத்துவிட்டார்களாம்.

கடலூரில் நடைபெற்ற நகர்மன்றத் தேர்தலில், அ.தி.மு.க.வினர் தேர்தல் விதிமுறைகளை மீறி, வாக்குச்சாவடிகளைக் கைப்பற்றிக் கள்ள வாக்குகளைப் போட்டனர் என்றும், எதிர்க்கட்சி முகவர்களை வெளியேற்றிக் கொலை மிரட்டல் விடுத்தனர் என்றும், எனவே கடலூர் நகர் மன்றத் தலைவர் பதவிக்கு மறு தேர்தல் நடத்த வேண்டுமென்றும் மாநிலத் தேர்தல் ஆணையர் மற்றும் கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நகர் மன்றத் தலைவர் வேட்பாளர் மாதவன் மனுவே அளித்திருக்கிறார்.

இராமனாதபுரம் நகராட்சித் தலைவராக இருந்த சேகர் இறந்து விட்ட காரணத்தால் அங்கே இடைத் தேர்தல் நடைபெற்றது. ஆனால் நடைபெற்ற இடைத் தேர்தலில், இறந்துவிட்ட அந்த நகர்மன்றத் தலைவரின் வாக்கையே பதிவு செய்திருக்கிறார்கள் என்றால் இதைவிட மோசடி வேறு இருக்க முடியுமா?

குறிப்பாக இந்த இடைத்தேர்தல்களில் வேட்புமனு தாக்கல் செய்த 3,075 பேரில், 1,589 பேரின் வேட்பு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றன அல்லது வாபஸ் பெறச்

செய்யப்பட்டிருக்கின்றன என்றால், எந்த அளவுக்குப் பெருவாரியாக முறைகேடுகள் நடைபெற்றுள்ளன என்பதற்கு வேறு ஆதாரங்கள் தேவையா என்ன?

எதிர்க்கட்சிகளின் கைகளையும், கால்களையும் கட்டிப் போட்டு, வாய்ப்பூட்டும் போட்டுவிட்டு, தேர்தலை நடத்துவதாகக் கூறி அனைத்து மோசடி முறைகேடுகளிலும் ஈடுபட்டு வெற்றி பெற்றதாக மார்தட்டிக் கொள்வதற்குப் பெயரா வெற்றி? இப்படிப்பட்ட இழிவான வெற்றியைப் பெறவேண்டுமா என்ன? அதனால்தான் நடுநிலை ஏடான "கல்கி"யே மனம் வெதும்பி தலையங்கம் எழுதியுள்ளது.

அதன் முக்கிய பகுதிகள் வருமாறு :-

"தமிழகத்தில் நடைபெறும் உள்ளாட்சி இடைத் தேர்தல் எதிர்க் கட்சியினரிடமும் மக்கள் மனத்திலும் பெரும் அருவருப்பை ஏற்படுத்தியுள்ளது. தேர்தல் அறிவிக்கப்பட்ட முறையே சரியில்லை என்று தமிழகத்தின் முக்கிய எதிர்க்கட்சிகளான தி.மு.க., ம.தி.மு.க., தே.மு.தி.க. ஆகியவை புறக்கணித்து விட்டன. மக்களின் மாற்றுக் கருத்துகளுக்கு இடமளிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தேர்தல் களத்தில் குதித்தன பா.ஜ.க.வும், கம்யூனிஸ்ட் கட்சிகளும். ஆனால் பல இடங்களிலிருந்து வரும் செய்திகள் அவ்வளவு உவப்பாக இல்லை. மத்திய அமைச்சரான பொன். ராதாகிருஷ்ணன், "பல உள்ளாட்சி அமைப்புகளில் பா.ஜ.க. வேட்பாளர்களைப் போட்டியிடவே அனுமதிக்காத வகையில் ஆளுங்கட்சி காவல் துறை மூலம் தடுத்துவிடும் போக்கு நடைபெற்றுள்ளது. அதையும் மீறித் தாக்கல் செய்யப்பட்ட பல மனுக்கள் போலி காரணங்களுக்காக நிராகரிக்கப்பட்டுள்ளன. வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட இடங்களில் பா.ஜ.க. வேட்பாளர்களை வாபஸ் பெற வைக்க அனைத்து முறைகளும் கையாளப்பட்டன" என்றவர் ஒரு படி மேலே போய், "பல பகுதிகளில் வாக்காளர்களுக்குப் பணப் பட்டுவாடா நடந்துள்ளது" என்றும் தெரிவித்துள்ளது, இடைத்தேர்தல் முறைகேடுகளுக்குச் சரியான உதாரணங்கள். எதிர்க்கட்சிகளைப் போட்டியிட விடாமல் தடுப்பதாகக் கூறி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பல இடங்களில் போட்டியின்றித் தேர்வு என்று பெருமைப்பட்டுக் கொள்கிறது ஆளுங்கட்சி. மாற்றுக்

கட்சியினர் முறையாகத் தேர்தலை எதிர்கொள்ள முடியாத சூழலை ஏற்படுத்திய பின்னர் பெறும் வெற்றிக்கு என்ன மரியாதை இருக்க முடியும்? இத்தகைய முறைகேடுகளுக்குக் காரணம், தோற்று விடுவோமோ என்ற அச்சம். நாடாளுமன்றத் தேர்தலில் பெற்ற வெற்றிக்குப் பிறகு, நூறு சதவிகித வெற்றி ஆசை ஆளுங்கட்சியைப் பற்றிக் கொண்டிருக்கிறது. மக்களின் வாழ்வாதாரத் தேவைகள் நிறைவேற்றப்பட்டு, அவர்கள் சுயமாக வாழ்வதற்கான வழிமுறைகள் ஏற்படுத்தப்பட்டு இருந்தால், தோல்விகுறித்து அச்சம் ஏற்படத் தேவையே இல்லை. ஆனால் முறைகேடுகள் நடந்துள்ளன என்பது நிரூபணமாகும் போது, இதுவரை ஆளுங்கட்சி பெற்றுள்ள வெற்றிகளும் சந்தேகத்துக்குரியனவாகவே ஆகிவிடுகின்றன. நாடாளுமன்றத் தேர்தலில் பெற்ற 37 தொகுதிகள் வெற்றி மேல் கூட சந்தேகத்தின் நிழல் விழுவதைத் தவிர்க்க முடியாது”

“கல்கி” எழுதிய தலையங்கம் இது. ஏன், அ.தி.மு.க.வுடன் கடந்த ஆண்டு வரை தோழமையோடு பழகிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நாளேடான “தீக்கதிர்”, இன்று எழுதியுள்ள தலையங்கத்தில்கூட, “இடைத் தேர்தல் முடிவு ஜனநாயகத்திற்கு மிகப் பெரிய தோல்வியாக அமைந்துள்ளது. உள்ளாட்சித் தேர்தலில் அனைத்துவகையான ஜனநாயக நடைமுறைகளையும், தேர்தல் விதிமுறைகளையும் அ.தி.மு.க.வினர் காலில் போட்டு மிதித்துள்ளனர். தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதிலிருந்தே மாநிலத் தேர்தல் ஆணையத்தின் துணையோடு ஆளுங்கட்சியின் திருவிளையாடல்கள் துவங்கிவிட்டன. சாம பேத, தான, தண்ட என்று சொல்லப்படும் அனைத்து வழிகளையும் ஆளுங்கட்சி பின்பற்றியது என்று சொன்னால் அது மிகையல்ல. ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு வகையில் ஜனநாயகத்தை ஆளுங்கட்சி இழிவுபடுத்தியுள்ளது. மொத்தத்தில் ஆளுங்கட்சியினர் ஜனநாயகத்தைத் தலைகுனிய வைத்துவிட்டனர் என்பதுதான் உண்மை” என்றெல்லாம் எழுதியுள்ளது.

இந்தத் தலையங்கங்களில் கூறப்பட்டுள்ள வார்த்தைகள் ஒவ்வொன்றும் உண்மை என்பதை நிரூபிப்பதைப் போலத்தான் ஆளுங்கட்சியின் அத்துமீறிய நடைமுறைகள் இந்தத் தேர்தலைப் பொறுத்தவரை இருந்திருக்கின்றன.

தேர்தல் நடைபெற்ற இடங்களில் அமைச்சர்கள் எல்லாம் எவ்வாறு முகாமிட்டிருந்தார்கள்? எந்த அளவுக்குப் பணப்

பட்டுவாடா நடைபெற்றது? அடக்குமுறைகள் எப்படியெல்லாம் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தன. ஏன் முதல் அமைச்சரே எதிரிகளையே கண்களுக்குத் தெரியவில்லை என்று கூறிவிட்டு, விமானப் பயணம் மேற்கொண்டு தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார் என்றால், அவர் வருகைக்காகப் பெரும் பொருள் செலவில் செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகள் என்னென்ன? அவையெல்லாம் தேவைதானா? எங்கே தோற்றுவிட்டால், தங்களின் அமைச்சர் பதவி பறிக்கப்பட்டு விடுமோ என்ற அச்சத்தால், அமைச்சர்கள் தாங்கள் குவித்துவைத்திருந்த நிதியிலிருந்து கணிசமாகச் செலவழிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். பதவி நீடித்தால் செலவழிப்பதை மீட்டுக் கொள்ளலாம் என்ற தைரியம்தான்! இவ்வளவு பெரிய விலையையும் கொடுத்து, தற்போது பெற்றிருப்பதற்குப் பெயர் வெற்றியா? வெற்றி பெற்று தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கும் அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களே சிரிக்க மாட்டார்களா? “வரலாற்று வெற்றியை வழங்கிய வாக்காளப் பெருமக்களுக்கு முதலமைச்சர் அம்மா நன்றியாம்; மகிழ்ச்சி வெள்ளமாம்; பட்டாசு வெடித்து, இனிப்பு வழங்கிக் கொண்டாட்டமாம்”! ஆளும் அ.தி.மு.க.வும், மாநிலத் தேர்தல் ஆணையரும் கூட்டணி அமைத்துக் கொண்டு, காவல் துறையின் துணையோடு பெற்ற வெற்றிக்குப் பட்டாசும், இனிப்பும் ஒரு கேடா? மல்யுத்தப் போட்டியில் எதிரிகள் அனைவரையும் செயலிழக்கச் செய்து விட்டு, நடுவரையும் கைக்குள் போட்டுக் கொண்டு தற்போது ஆளுங்கட்சி அடைந்துள்ள வெற்றியில் ஏதாவது பொருளோ, பொருத்தமோ உண்டா? நிலைமைகள் தங்குதடையின்றி இப்படியே நீடிக்கு மானால் ஜனநாயகத்தை அருங்காட்சியகத்திலே தான் காண நேரிடும்! உள்ளாட்சி இடைத் தேர்தலில் வென்றது ஜனநாயகமா? பணநாயகமா?

அன்புள்ள,

மு.க.

24-9-2014

3924. பொய்யாகிப் போன “புஸ்வாணத்” திட்டங்கள்!

உடன்பிறப்பே,

தமிழ்நாடு மின் வாரியத்திற்கு, 6,805 கோடி ரூபாய் வருவாய் கிடைக்கும் வகையில், மின் கட்டணங்களை 15 சதவிகிதம் முதல் 17 சதவிகிதம் வரை உயர்த்த, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் முடிவுசெய்து, உத்தேசக் கட்டண உயர்வுப் பட்டியலையும் ஏடுகளிலே வெளியிட்டுள்ளது. வீடுகள், தொழிற்சாலைகள், அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள், வணிகம், நீரேற்று நீர்ப் பாசனம், தற்காலிக மின்வினியோகம் ஆகியவற்றுக்குப் புதிய உத்தேச மின் கட்டணத்தை ஒழுங்கு முறை ஆணையம் அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பு காரணமாகப் பொதுமக்களிடம் மிகப் பெரிய எதிர்ப்பு வரக் கூடுமென்று எதிர்பார்த்து, முதல் அமைச்சர் ஜெயலலிதா மின்சாரக் கட்டணம் உயர்ந்தாலும் ஏழை மக்களுக்குப் பாதிப்பு இருக்காது என்றும் கூடுதல் மானியத்தை அரசே வழங்கும் என்றும் குறிப்பிட்டுச் சொல்லாமல் தெளிவின்றி ஓர் அறிவிப்பினைச் செய்திருக்கிறார். ஆனால் ஏழை மக்களுக்குப் பாதிப்பு இருக்காது என்றால், ஏழை மக்கள் என்பதற்கு என்ன வரம்பு அவர் வைத்திருக்கிறார் என்று தெரியவில்லை. தற்போது அறிவிக்க உத்தேசித்துள்ள மின் கட்டண உயர்வு காரணமாக, ஏழை மக்கள் மாத்திரமல்ல; நடுத்தர வகுப்பைச் சேர்ந்த மக்களும் பெரிய அளவில் பாதிக்கப்படுவார்கள்.

ஏழை மக்களுக்குப் பாதிப்பு இருக்காது என்ற முதலமைச்சர் ஜெயலலிதாவின் அறிக்கையை முதல் பக்கத்தில் வெளியிட்ட “தினத்தந்தி” நாளேடு, மின்சாரக் கட்டண உயர்வு பற்றிய செய்தியை 7 ஆம் பக்கத்திலேதான் வெளியிட்டுள்ளது. மேலும் தொழிற்சாலைகளுக்குச் செய்யப்பட்டுள்ள மின்வெட்டு பற்றிய செய்தியை அந்த நாளேடு வெளியிடவே இல்லை.

தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ள மின் கட்டண உயர்வு வீடுகளுக்கு எவ்வளவு என்றால், இரண்டு மாதங்களுக்கு, 201 யூனிட் முதல் 500 யூனிட் வரை பயன்படுத்துவோருக்கு யூனிட் ஒன்றுக்கு ரூபாய் 4 என்பது, ரூ. 4.60 எனவும், 501 யூனிட்டுக்கு மேல் பயன்படுத்துவோருக்கு ஒரு யூனிட் ரூபாய் 5.75 என்பதிலிருந்து ரூபாய் 6.60 என்ற அளவுக்கும் உயர்த்தப்பட்டுள்ளது. தமிழக அரசு மானியமாகத் தற்போது 500 யூனிட்வரை மட்டுமே வழங்கிவருகிறது. 500 யூனிட்டுக்கு மேல் மின்சாரத்தைப் பயன்படுத்துவோருக்குத் தமிழக அரசு மானியம் அளிப்பதில்லை. இந்த நிலையில் சாதாரண நடுத்தர மக்கள் தற்போது வளர்ந்து வரும் வாழ்க்கை முறைச் சூழ்நிலையில் இரண்டு மாதங்களுக்கு 600 யூனிட்டுக்குக் குறையாமல் பயன்படுத்துவார்கள். இப்போது உயர்த்தப்படும் மின் கட்டண உயர்வால் 600 யூனிட்டுக்கு - யூனிட் ஒன்றுக்கு 85 பைசா வீதம் - இதுவரை 3,450 ரூபாய் மட்டுமே கட்டணமாகச் செலுத்தி வந்தவர்கள், இனிமேல் கூடுதலாக 510 ரூபாய் சேர்த்து 3,960 ரூபாய் கட்டணமாகச் செலுத்த வேண்டும்.

ஜெயலலிதா ஆட்சிக்கு வரும்போதெல்லாம் இவ்வாறு மின் கட்டண உயர்வு, பேருந்துக் கட்டண உயர்வு, பால் விலை உயர்வு என்று தொடர்ந்து அறிவித்து, மக்களைக் கசக்கிப் பிழிவதை வாடிக்கையாகக் கொண்டவர் என்பதைத் தமிழ்நாட்டு மக்கள் நன்கறிவார்கள். 2001ஆம் ஆண்டு ஜெயலலிதா முதல் அமைச்சராக வந்தபோது 1-12-2001 முதல் மின் கட்டணங்களை உயர்த்தினார். மீண்டும் 2003ஆம் ஆண்டு ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த காலத்தில்தான் 15-3-2003 அன்று 1,398 கோடி ரூபாய்க்கு மின் கட்டண உயர்வுகளைச் செய்தார்.

தி.மு. கழக ஆட்சிக் காலத்தில், தமிழ்நாடு மின்சார வாரியம் 18-1-2010 அன்று மின் கட்டணத்தை மாற்றி அமைப்பதற்கான மனுவைத் தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையத்திடம் தாக்கல் செய்தது. அதனைப் பல்வேறு கட்டங்களில் பரிசீலித்து, 31-7-2010 அன்று மின் கட்டண மாற்றங்கள் அறிவிக்கப்பட்டன. அதன்படி இரண்டு மாதங்களுக்கு 600 யூனிட்களுக்குக் குறைவாக மின்சாரம் பயன்படுத்தும் வீட்டு மின்நுகர்வோர், குடிசைவாசிகள், விசைத்தறி மின்நுகர்வோர், கைத்தறி மின் நுகர்வோர், பொது வழிபாட்டிடங்கள் மற்றும் வேளாண் மின்

நுகர்வோர் ஆகியோருக்கு எந்தவிதமான மின் கட்டண உயர்வும் செய்யப்பட வில்லை. ஆனால் தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ள அறிவிப்பில், வீடுகளுக்கு 2 மாதத்திற்கு 50 முதல் 100 யூனிட் வரை பயன்படுத்துவோருக்கு ஒரு யூனிட் ரூ. 2.60 லிருந்து ரூ. 3 ஆகவும், 101 முதல் 200 யூனிட்வரை பயன்படுத்துவோருக்கு ரூ.2.80 லிருந்து ரூ. 3.25 ஆகவும், 201 யூனிட் முதல் 500 யூனிட் வரை பயன்படுத்துவோருக்கு ரூ. 4 லிருந்து ரூ. 4.60 ஆகவும், சராசரியாக 501 யூனிட்டும் அதற்கு மேலும் பயன்படுத்தினால் ஒரு யூனிட் ரூ. 5.75லிருந்து ரூ. 6.60 ஆகவும் கட்டணம் உயர்த்தப்படவுள்ளது.

கழக ஆட்சியில் 2010ஆம் ஆண்டு, மின் கட்டண உயர்வு 1,651 கோடி ரூபாய்தான்! ஆனால் 2011இல் ஆட்சிக்கு வந்த பிறகு 2012ஆம் ஆண்டு 7,874 கோடி ரூபாய் அளவிற்கு மின் கட்டண உயர்வுகளை அறிவித்துவிட்டு, அப்போது அதிலே வெறும் 740 கோடி ரூபாய் அளவிற்குக் கண்துடைப்பிற்காகத் திரும்பப் பெற்றார். 2012ஆம் ஆண்டு 7 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு மின் கட்டண உயர்வுகளைச் செய்துவிட்டு, இரண்டு ஆண்டுக் காலத்தில் தற்போது மேலும் உயர்த்த முன்வந்திருப்பது 6,805 கோடி ரூபாய் என்பதையும் ஒப்பிட்டுப் பார்த்தாலே எந்த அளவுக்குப் பல்வேறு அடிப்படைப் பிரச்சினைகள் பற்றியெல்லாம் சிறிதும் கவலைக் கொள்ளாமல் ஜெயலலிதா ஆட்சியில் மிகையாக மின் கட்டணம் உயர்த்த முன்வந்திருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ளலாம். கழக ஆட்சியில், வீடுகளுக்கு மின்சாரம் உபயோகிப்போர் மொத்தம் 149.86 இலட்சம் பேரில், 134.67 இலட்சம் பேருக்கு அதாவது 90 சதவிகிதம் பேருக்குக் கழக ஆட்சியில் எந்தவிதமான மின் கட்டண உயர்வும் செய்யப்பட வில்லை.

அதற்கே இன்றைய முதலமைச்சர், ஜெயலலிதா 2-8-2010 அன்று விடுத்த அறிக்கையில்,

“விலைவாசியைக் குறைக்க நடவடிக்கை எடுக்கச் சொன்னால், விலைவாசியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கிறார் முதல்வர் கருணாநிதி. இரண்டு மாதத்துக்கு 600 யூனிட் மின்சாரத்துக்கு மேல் பயன்படுத்தும் வீடுகளுக்கு மின் கட்டண உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான வீடுகளில்

மாதம் 300 யூனிட் மின்சார பயன்பாடு என்பது சர்வ சாதாரணம். மேலும் வாடகை வீடுகளில் குடியிருக்கும் ஏழை எளிய மக்கள் கூடுதல் மின்சாரக் கட்டணத்துக்கு ஆளாக்கப்படுவார்கள். மின் கட்டண உயர்வால் வீட்டு வாடகையும் உயரலாம். தொழிற்சாலைகள், சிறு, குறுந் தொழில்கள், குடிசைத் தொழில்கள், கல்வி நிறுவனங்கள் என எல்லா தரப்புக்கும் மின் கட்டண உயர்வால் கடும் பாதிப்பு ஏற்படும். மின் கட்டண உயர்வால் அத்தியாவசியப் பொருள்களின் விலையும் மேலும் உயரக் கூடும். சாமானிய மக்கள்மீது திணிக்கப்பட்டுள்ள இந்தக் கூடுதல் சுமையை உடனடியாக நீக்க தி.மு.க. அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்"

என்று என்னைக் கேட்டுக் கொண்ட அம்மையார் ஜெயலலிதா, இப்போது அவருடைய இந்தப் பழைய அறிக்கையினை நினைவுபடுத்திக்கொண்டு இந்த மின் கட்டண உயர்வு முழுவதையும் திரும்பப் பெற்றுக்கொண்டு, அந்தத் தொகை முழுவதையும் மின் வாரியத்திற்கு மானியமாக அளித்திட முன்வர வேண்டும்.

24-9-2014 அன்று இந்தச் செய்தியை வெளியிட்ட "தி இந்து" ஆங்கில நாளிதழ், "Double Shock from T.N. Electricity Authority - Tariff Hike by 15-30 p.c. - Up to 90 p.c. cut for industries" என்ற தலைப்பில் தொழிற்சாலைகளுக்கு மின் வெட்டு செய்யப்படுவது பற்றியும் குறிப்பிட்டுள்ளது.

தமிழகத்தில் தொழிற்சாலைகளுக்கு மீண்டும் மின் தடை என்ற செய்தி ஒரு சில நாளேடுகளில் மட்டும் வந்திருக்கிறது. ஆனால் கடந்த மே மாத இறுதியில் ஜெயலலிதா ஒரு அறிவிப்பினைச் செய்தார். 28-5-2014 அன்று ஆளுங்கட்சி நாளேடான "நமது எம்.ஜி.ஆர்" பத்திரிகையில் அந்தச் செய்தி வந்திருந்தது. முதல் பக்கத்தில் வந்த அந்தச் செய்தி என்ன தெரியுமா?

"தமிழக மக்களுக்கு இனிப்பான செய்தி - மீண்டும் மின்மிகை மாநிலமாக்குவேன் என்ற சூளுரையை நிறைவேற்றிய புரட்சித் தலைவி அம்மா - கருணாநிதி ஆட்சியில் இருண்டு கிடந்த தமிழகம் அம்மா ஆட்சியில் ஒளி பெற்று மிளிர்கிறது - மூன்றே ஆண்டுகளில் மின்வெட்டே இல்லாத மாநிலமாக மாற்றிச் சாதனை - ஜூன் 1 ஆம்

தேதி முதல் தமிழகம் முழுவதும் மின் கட்டுப்பாடுகள் அனைத்தும் ரத்து - முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அறிவிப்பு - அம்மா பெருமிதம் - அனைத்துக் கட்சிகளும் பாராட்டு - மக்கள் பெருமகிழ்ச்சி" - இது அந்தப் பத்திரிகை செய்திக்கான தலைப்பு. அந்த அறிவிப்பில், "தமிழகத்தில் இதுவரை நடைமுறையில் உள்ள மின் கட்டுப்பாட்டு முறைகள் அனைத்தையும் 1-6-2014 முதல் அறவே நீக்க நான் உத்தரவிட்டுள்ளேன். இதன்படி, தற்போது உயர் மின் அழுத்தத் தொழில் மற்றும் வணிக மின் நுகர்வோர்களுக்கு மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை நடைமுறையில் உள்ள 90 விழுக்காடு மின் கட்டுப்பாடு 1-6-2014 முதல் நீக்கப்படும். இதே போன்று, உயர் மின் அழுத்த தொழில் மற்றும் வணிக மின் நுகர்வோர்களுக்கு மற்ற நேரங்களில் தற்போது நடைமுறையில் உள்ள 20 விழுக்காடு மின் கட்டுப்பாடும் 1-6-2014 முதல் நீக்கப்படும். இதன் மூலம் 1-11-2008 முதல் தமிழ்நாட்டில் முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியினரால் அமல்படுத்தப் பட்ட மின் கட்டுப்பாடுகள் அனைத்தும் முற்றிலும் நீக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நடவடிக்கையின் காரணமாகத் தமிழ்நாட்டில் தொழில் வளம் மேலும் பெருகவும், புதிய வேலை வாய்ப்புகள் உருவாகவும் வழிவகை ஏற்படும். நான் ஏற்கனவே உறுதி அளித்தபடி மின்வெட்டே இல்லாத மாநிலம் என்ற நிலைக்குத் தமிழ்நாட்டை மூன்றே ஆண்டுகளில் கொண்டுவந்ததில் நான் பெருமிதம் அடைகிறேன்" என்றெல்லாம் பெருமையோடு அறிவித்திருந்தார்.

இந்தச் செய்தி வெளிவந்து நான்கு மாதங்கள் கூட ஆகவில்லை. கடந்த சில நாட்களுக்கு முன்பு கூட, உள்ளாட்சி மன்றங்களுக்கான இடைத்தேர்தல் பிரச்சாரத்தில் கோவையில் பேசிய முதலமைச்சர் ஜெயலலிதா மின்தடையை ரத்து செய்தது பற்றித் தன்னைத்தானே பாராட்டிக் கொண்டார். அப்போதே இது பற்றி நான் விளக்கமளித்திருந்தேன்.

24-9-2014 அன்று பெரும்பாலான ஏடுகளில் வெளிவந்த செய்திகளில் ஒன்று "தொழிற்சாலைகளுக்கு மீண்டும் மின்தடை அறிவிப்பு" என்பதாகும். ஆனால் இந்த மின்தடை அறிவிப்பு, ஆளுங்கட்சியின் நாளேட்டில் வெளிவந்திருக்கிறதா என்று பார்த்தால், அறவே கிடையாது. அவர்களுக்கே அதை வெளியிட வெட்கமாக இருந்தது போலும்!

மின்தடையை நீக்குவதாக மகிழ்ச்சியுடன் செய்தி வெளியிட்ட முதலமைச்சர் தொழிற்சாலைகளுக்கு மீண்டும் மின்தடை என்ற அறிவிப்பினைச் செய்தாரா என்றால் கிடையாது. மின்வாரிய அதிகாரிகள்தான் இந்த அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள். அதன்படி தொழிற்சாலை மற்றும் வணிக மின் இணைப்பு களுக்கு 20 சதவிகித மின்தடை; மாலை 6 மணி முதல் 10 மணி வரை 90 சதவிகித மின்தடை 23ஆம் தேதி முதல் அமலுக்கு வருவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். "இதன் மூலம் ஜூன் முதல் மின்தடை ரத்து செய்யப்படும் என்ற அரசின் உத்தரவு, மூன்று மாதங்களில் புஸ்வாணம் ஆகியது, தொழிற்துறையினரிடம் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது" என்று நாளேடுகளே விமர்சனம் செய்துள்ளது. மேலும் ஒரு பத்திரிகையில், தொழிற்துறையினர் கூறியதாக வந்துள்ள செய்தியில், "கடந்த 2008ல் மின்தடை அமல்படுத்தப்பட முடிவு செய்தபோது, மின்வாரிய அதிகாரிகள், மின்சார ஒழுங்கு முறை ஆணையத்திடம் முறைப்படி அனுமதி பெற்று, மின் நுகர்வோரிடம் கருத்து கேட்டு, அதன் அடிப்படையில் மின்தடையை அமல்படுத்தினர். ஆனால், தற்போது புதிதாக மின்தடை அமல்படுத்தும்போது, கடந்த முறை பின்பற்றிய நடைமுறைகளை, மின்வாரிய அதிகாரிகள் பின்பற்றவில்லை. இதனால், தமிழகத்தின் தொழில் வளர்ச்சி பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது" என்று எழுதப்பட்டுள்ளது.

"தற்போது அறிவிக்கப்பட்டிருக்கும் மின் கட்டண உயர்வு மற்றும் தொழிற்சாலைகளுக்கு மின்வெட்டு ஆகியவற்றினால் தொழில் போட்டியில் நம்மால் மேலும் ஈடுபடுவது மிகவும் கடினம்; தொழிற்சாலைகளை நடத்துவதே பெரும் பாரமாகி விட்டது" என்று இந்தியத் தொழில் கூட்டமைப்பின் தலைவர் கே. இளங்கோ அவர்களும்; "பஞ்சாலைத் தொழிலுக்குப் பெரும் பாதகம் ஏற்பட்டு விட்டது; பஞ்சாலைத் தொழிலதிபர்கள் வேறு மாநிலங்களுக்குச் செல்லத் தொடங்கி விடுவார்கள்" என்று தென்னிந்தியப் பஞ்சாலைத் தொழிற்சங்கத் தலைவர் டி. ராஜ்குமார் அவர்களும்; "ஆயத்த ஆடைத் தொழிலில் நிலவும் போட்டிக்கு இப்போதைய நிலையில் நம்மால் ஈடு கொடுக்க முடியாமல் போய்விடும்" என்று திருப்பூர் ஏற்றுமதியாளர் சங்கத் தலைவர் ஏ. சக்திவேல் அவர்களும்; "மின் கட்டண உயர்வின் காரணமாகத் தமிழ்நாட்டுக்கென சிறப்பாக இருந்த தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி பெரும் பாதிப்புக் குள்ளாகும்" என்று "நாஸ்காம்" இயக்குனர் கே. புருசோத்தமன்

அவர்களும் கூறியதாக இன்றைய (25-9-2014) "இந்து" ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் ஜெயலலிதா 23-9-2014 அன்று விடுத்துள்ள அறிக்கையில், 2011இல் ஆட்சிப் பொறுப் பேற்றதிலிருந்து கடந்த மூன்றாண்டு காலமாக மின் உற்பத்தியைப் பெருக்கத் தேவையான ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளைத் தனது தலைமையிலான அரசு தொடர்ந்து எடுத்து வந்துகொண்டிருக்கிறது என்று கூறிக் கொண்டிருக்கிறார். 2011ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப் பேற்றவுடன் வைத்த கொள்கை விளக்கக் குறிப்பில், தி.மு. கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டங்களான வடசென்னை நிலை 2, மேட்டூர் நிலை 3, தமிழ்நாடு மின்சார வாரியமும், தேசிய அனல் மின் கழகமும் கூட்டு முயற்சியில் தொடங்கிய வல்லூர், தமிழ்நாடு மின்சார வாரியமும், நெய்வேலி பழுப்பு நிலக்கரி கூட்டு நிறுவனமும் கூட்டு முயற்சியில் உருவாக்கிய தூத்துக்குடி ஆகிய நான்கு திட்டங்களின் மூலம் 2012ஆம் ஆண்டு இறுதிக்குள் 3,228 மெகாவாட் மின்சாரம் கிடைக்குமென்று சட்டமன்றத்தில் தெரிவித்தார்களே, அந்த நான்கு திட்டங்களில் அ.தி.மு.க. ஆட்சியினர் முனைப்பு காட்டினார்களா? காட்டியிருந்தால் தற்போது தொழிற்சாலைகளுக்கு மின்வெட்டு அறிவிக்க வேண்டிய நிலைமையே ஏற்பட்டிருக்காதே? கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட மின் திட்டங்களையும் நிறைவேற்றவில்லை; அ.தி.மு.க. ஆட்சியில் புதிதாக அறிவித்த திட்டங்களிலிருந்தும் ஒரு மெகாவாட் மின்சாரம்கூடக் கிடைக்கவில்லை; இன்னும் சொல்லப்போனால் புதிய திட்டங்கள் எதுவும் தொடங்கப்படவே இல்லை. நான் ஏற்கனவே தெரிவித்ததைப் போலவும், மின்வாரிய அதிகாரிகளே கூறுவதைப் போலவும், ஒரு சிலர் எழுதிக் கொடுக்கும் குறிப்புகளை மட்டும் முதலமைச்சர் படித்துக் கொண்டிருக்கிறாரே தவிர, அவர் கூறியதெல்லாம் பொய், பொய், பொய்யைத் தவிர வேறில்லை என்பதற்குத் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள மின்வெட்டும், மின் கட்டண உயர்வும் நாட்டுமக்களுக்கு எடுத்துக்காட்டும் சான்றுகளாகும்!

அன்புள்ள,

மு.க.

26-9-2014

3925. நம்மீது பழி கூறுபவருக்கு நாக்கு ஒன்றா? இரண்டா?

உடன்பிறப்பே,

பெங்களூரில் நடைபெற்ற சொத்துக் குவிப்பு வழக்கு பற்றி பல "உடன்பிறப்பு" மடல்களில், தொடர்ந்து பல தகவல்களை தீர்ப்பு வருவதற்கு முன்பு உனக்குத் தெரிவித்திருக்கிறேன். தீர்ப்பு வந்த பிறகு நான் எந்தக் கருத்தையும் தெரிவிக்க வில்லை, மௌனமாக இருக்கிறேன் என்ற கருத்து பரவலாகப் பேசப்படுகின்ற காரணத்தாலும், இன்று அரசு வழக்கறிஞர் பவானி சிங் அளித்த பேட்டி ஒன்றில் தி.மு. கழகத்தைக் குறை கூறியிருப்ப தாலும், அரசு வழக்கறிஞர்கள் பற்றியும், குறிப்பாக வழக்கறிஞர் பவானி சிங் அவர்களைப் பற்றியும் சில கருத்துகளைத் தெரிவிக்கின்றேன். ஏனென்றால் பவானி சிங் அளித்துள்ள பேட்டியில், "நான் குற்றவாளி களுக்கு ஆதரவாகச் செயல்பட்டேன் என்று எப்படி சொல்ல முடியும்? சட்டம் தெரியாதவர்கள் வேண்டுமானால் எனது நிலைப்பாட்டை விமர்சிக்கலாம். நான் மனசாட்சியுடன் நடந்து கொண்டேன். இந்த வழக்கில் என்னை உச்ச நீதிமன்ற உத்தரவின் பேரில் கர்நாடக அரசு வக்கீலாக நியமனம் செய்யப்பட்ட நாள் முதல், குற்றவாளிகளுக்கு ஆதரவாக செயல்படுவதாக தி.மு.க.வினர் கூறினர். அதை தீர்ப்பின் மூலம் பொய்யாக்கினேன். இப்போதும் அதே விமர்சனம் வைக்கிறார்கள். இது சரியல்ல" என்றெல்லாம் தெரிவித்திருப்பதால், அவரது செயல்பாடுகள் குறித்து விளக்குகிறேன்.

ஜெயலலிதா உள்ளிட்டவர்கள் மீதான சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணை முதலில் தமிழகத்தில் நடைபெற்ற போது, ஆளுங்கட்சியாக அ.தி.மு.க. இருந்தது. விசாரணை முறையாக நடக்கத் தவறியது கண்டும், ஏற்கனவே முறையாக சாட்சியம் அளித்தவர்களையெல்லாம் மிரட்டி மாறுபட்ட கருத்தினை வலியுறுத்தி வாங்கிய காரணத்தாலும், அந்த வழக்கினை

வேறு மாநிலத்திற்கு மாற்றக் கோரி கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் தொடுத்த வழக்கில் 2003ஆம் ஆண்டு நவம்பர் 18ஆம் தேதியன்று தீர்ப்பளித்த உச்சநீதி மன்ற நீதிபதிகள் எஸ்.என்.வரியவா, எச்.கே.சேமா ஆகியோர் கொண்ட பெஞ்ச்தான், வழக்கினை பெங்களூருக்கு மாற்றி தீர்ப்பளித்தது.

அந்தத் தீர்ப்பில் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்த கருத்து என்ன தெரியுமா?

"It does appear that the new public prosecutor is hand in glove with the accused thereby creating a reasonable apprehension of likelihood of failure of justice in the minds of the public at large. There is strong indication that the process of justice is being subverted." (புதிய அரசு வழக்கறிஞர்; குற்றவாளி களான ஜெயலலிதா குழுவினரோடு இணைந்து செயல்படுவது நன்றாகத் தெரிகிறது. அதன் காரணமாக பொதுவாக நீதி கிடைக்காது என்ற ஒரு நம்பத் தகுந்த ஐயம் மக்கள் மனதிலே எழுந்துள்ளது. நீதி திசை திரும்பிச் செல்வது நிச்சயமாகத் தெரிகின்றது).

313வது விதிப்படி நீதிமன்றத்தில் கேள்வி எழுப்பப்படும்போது, ஜெயலலிதா நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகாமல் இருக்க, அவர்கள் சார்பாக தாக்கல் செய்த தவறான மனுவிற்கு அரசு வழக்கறிஞர் எதிர்ப்பே தெரிவிக்காமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது வருந்தத்தக்கது. (The conduct of the Public Prosecutor in not opposing such a frivolous application has to be deprecated).

ஜெயலலிதா நேரில் ஆஜராகாமல் இருக்க விசாரணை நீதிமன்றம் அனுமதி கொடுத்த தற்கு உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தங்களுடைய கடுமையான எதிர்ப்பை இந்தத் தீர்ப்பிலே தெரிவித்திருப்பதோடு, "நீங்கள் எவ்வளவு பெரியவராக இருந்த போதிலும், உங்களை விட சட்டம் பெரியது. நேரில் ஆஜராகாமல் இருக்க விதிவிலக்கு கொடுக்கக்கூடிய அளவிற்கு அவரது மனுவிலே காரணங்கள் கூறப்படவில்லை. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், நீதியின் பாதையிலே குறுக்கிட்ட செயல்தான் நடைபெற்றுள்ளது". (The Judges took serious exception to the trial court dispensing with the personal appearance of Ms. Jayalalithaa and said "be you ever so

high, the law is above you. The grounds cited by her in the application were not all mitigating circumstances to have granted dispensation of personal appearance. To say the least, that was a ploy adopted to circumvent the due process of law.)

மேலும் அந்தத் தீர்ப்பில், "குற்றவாளிகள் அனைவரும் கேள்வி எழுப்பப்படும்போது நீதிமன்றத் தில் தவறாது ஆஜராவதுடன், **இவ்வழக்கை தினமும் (Daily Basis) எடுத்து விசாரிக்க வேண்டும்.** வழக்கு தொடர்புடைய அனைத்து ஆவணங்களையும் தமிழ்நாடு அரசு உடனடியாக சிறப்பு நீதி மன்றத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்" என்று உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பில் கூறப்பட்டது.

உச்ச நீதிமன்றம் இந்த வழக்கினை விரைவாக விசாரிக்க வேண்டுமென்றும், அன்றாடம் விசாரிக்க வேண்டுமென்றும் ஆணை பிறப்பித்து அது வெளிவந்தது 18-11-2003. அப்போது தமிழகத்தில் நடைபெற்றது அ.தி.மு.க. ஆட்சி. இந்த உச்ச நீதிமன்ற உத்தரவை ஏற்று, சென்னை தனி நீதிமன்றம், வழக்கை பெங்களூருக்கு மாற்றம் செய்வதற்கான அதிகாரப்பூர்வ உத்தரவை எப்போது பிறப்பித்தது தெரியுமா? 10-9-2004. அதாவது பத்து மாதங்களுக்குப் பிறகுதான் அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இது அப்போதைய நிலைமை. தற்போது என்ன நிலை தெரியுமா? அரசு வழக்கறிஞர், குற்றஞ் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக வாதாட வேண்டியவர். ஆனால் தற்போது அரசு வழக்கறிஞராக உள்ள பவானி சிங் அவர்கள், அவ்வாறு வாதாடாமல் அரசு வழக்கையே குலைக்கும் வகையில், வழக்கின் புலன் விசாரணை அதிகாரியையே குற்றவாளிகள் தரப்புச் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதித்ததோடு, இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட தங்க மற்றும் வைர நகைகளை, வழக்கை விசாரிக்கும் நீதிமன்றத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வராமலே, வழக்கின் இறுதி வாதத்தை முடிக்க ஆர்வம் காட்டினார். இந்தக் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில், நம்முடைய பேராசிரியர் அவர்கள், கர்நாடக உயர் நீதிமன்றத்தில் பவானி சிங்கை பதவி நீக்கம் செய்ய வேண்டுமென்று ஒரு வழக்கினைத் தாக்கல் செய்தார். அதன் காரணமாக கர்நாடக மாநில அரசும் உடனடியாக செயல்பட்டு அரசு வழக்கறிஞர் பதவியிலிருந்து பவானி சிங்கை நீக்கி உத்தரவிட்டது. ஆனால்

குற்றம் சாட்டப்பட்ட ஜெயலலிதா தரப்பினர் உச்ச நீதிமன்றம் வரை சென்று, தங்களுக்கு எதிராக வாதாட வேண்டிய அரசு வழக்கறிஞராக பவானி சிங் அவர்கள் நீடிக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள்.

குற்றஞ்சாட்டப்பட்ட ஜெயலலிதா தரப்பினருக்கு ஆதரவாகவும், அரசு தொடுத்துள்ள வழக்குக்குப் பாதகமாகவும் பவானி சிங், எந்தெந்த வகையில் நடந்து கொள்கிறார் என்பதற்கான பல சான்றுகளும் அப்போது உச்ச நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்ட போதிலும், அரசு வழக்கறிஞரான பவானி சிங் அவர்களை கர்நாடக மாநில அரசே மாற்றிய நிலையில்கூட, உச்ச நீதிமன்ற நீதிபதி, திரு. சவுஹான் அவர்கள் இந்த வழக்கினை பவானி சிங் அவர்களே தொடர்ந்து அரசு சார்பில் நடத்தலாம் என்று முடிவு செய்து அறிவித்தார்.

27-1-2014 அன்று நடைபெற்ற விசாரணையின் போது, வழக்கிலே குற்றம் சாட்டப்பட்டவர்கள் நீதிமன்றத்திற்கு நேரில் ஆஜராகாமல் இருப்பதற்காக விலக்களிக்க வேண்டுமென்று கோரி, அவர்களுடைய வழக்கறிஞர்கள் நீதிபதியின் முன்னால் மனுக்கள் தாக்கல் செய்திருக்கிறார்கள். அதில் ஜெயலலிதா, தமிழக முதல்வராக இருப்பதால் அரசுப் பணி இருப்பதாகவும், சசிகலாவுக்கு கண் வலி இருப்பதாகவும், சுதாகரனுக்கு மூட்டு வலி இருப்பதாகவும், இளவரசிக்கு நீரிழிவு நோய் இருப்பதாகவும், அதனால் நீதிமன்றத்திற்கு வர இயலவில்லை என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதற்கு ஆட்சேபணை தெரிவிக்க வேண்டிய எதிர் தரப்பு வழக்கறிஞர், அதாவது அரசு வழக்கறிஞர் பவானி சிங் அவர்கள், எந்த விதமான ஆட்சேபமும் தெரிவிக்கவில்லை. அரசு வழக்கறிஞர் பவானி சிங் ஆட்சேபணை தெரிவிக்காத காரணத்தால், நீதிபதி அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டார். அப்போதுகூட நீதிபதி, "நீதிமன்றத்தில் ஆஜராவதில் இருந்து விலக்குக் கோரும் மனுவில் உரிய மருத்துவச் சான்றிதழ்கள் இணைக்கப்படவில்லை. இருப்பினும் இந்த முறை மட்டும் இம்மனுக்களை ஏற்றுக் கொள்கிறேன்" என்று கூறியிருக்கிறார்.

அடுத்து ஜெயலலிதாவின் வழக்கறிஞர், தங்கள் கட்சிக்காரர்களின் வீடுகளில் சோதனை செய்த போது கைப்பற்றப்பட்ட பொருள்களில் வழக்குக்குத்

தொடர்பில்லாதவற்றை திரும்பக் கொடுக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு ஒரு மனுவினை புதிதாக தாக்கல் செய்தார். கைப்பற்றப்பட்ட பொருள்களைத் திரும்ப கொடுக்க வேண்டுமா, வேண்டாமா என்பதற்கு ஆட்சேபணையைத் தெரிவிக்குமாறு நீதிபதி அரசு வழக்கறிஞரைக் கேட்டால், அதற்கு அரசு வழக்கறிஞர் இரண்டு வார காலம் அவகாசம் வேண்டும், 2 வாரத்திற்கு வழக்கு விசாரணையை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டார்.

அரசுத் தரப்பு வழக்கறிஞர் இவ்வாறு கால அவகாசம் கேட்டபோது, அதிருப்தி தெரிவித்த நீதிபதி, "இது குற்றவியல் நீதிமன்றமா அல்லது ஒத்திவைப்பு நீதிமன்றமா?" என்று முக்கியமான கேள்வி ஒன்றை எழுப்பியிருக்கிறார். மேலும் நீதிபதி அவர்கள், "இந்த வழக்கு விசாரணை கடந்த பதினைந்து ஆண்டுகளாக நடந்து வருகிறது. விசாரணை நடந்த நாட்களைக் காட்டிலும், ஒத்தி வைக்கப்பட்ட நாட்கள்தான் அதிகம் இருந்துள்ளது. தனி நீதிமன்றம் மற்றும் தனி நீதிபதி நியமனம் செய்ததின் நோக்கம், விசாரணை தினமும் நடந்து விரைவில் முடிக்க வேண்டும் என்பதற்காகத்தான். அந்த நோக்கம் முழுமையாக நிறைவேறவில்லை. இனியாவது வழக்கு தடை இல்லாமல் நடக்க வேண்டும்" என்றெல்லாம் சிறப்பு நீதிமன்ற நீதிபதி குன்ஹா கருத்து தெரிவித்தார்.

ஜனவரி 20ஆம் தேதியன்று விசாரணை நடந்த போது, சென்னையிலிருந்து பெங்களூர் கொண்டு வரப்பட்ட அசையும் சொத்துக்கள் தொடர்பான அத்தனை விவரங்களையும், பரிசுப் பொருள்களின் பட்டியலையும் தங்களுக்கு வேண்டும் என்று ஜெயலலிதா தரப்பு வழக்கறிஞர்கள் மனு தாக்கல் செய்து, நீதிபதி அப்போது அதனைத் தள்ளுபடி செய்தார்.

மேலும் நீதிபதி அவர்கள், இந்த வழக்கை விரைந்து முடிக்க வசதியாக, வழக்கறிஞர்களின் இறுதி வாதம் பிப்ரவரி மாதம் 3ஆம் தேதி முதல் தொடங்கப்படும் என்றும், உச்ச நீதிமன்ற உத்தரவின்படி தினமும் விசாரணை நடக்கும் என்றும், முதலில் அரசு தரப்பு வழக்கறிஞர் வாதம் செய்தபின், குற்றம் சாட்டப்பட்டவர்களின் தரப்பு வழக்கறிஞர் வாதம் செய்ய வேண்டும் என்றும், இறுதிக் கட்ட வாதம் தொடங்குவதை எந்த நிலையிலும் காலம் கடத்த முடியாது என்றும் தெரிவித்தார்.

ஏற்கனவே 15 ஆண்டுகளுக்கும் மேலாகத் திட்டமிட்டு, வழக்கு தாமதப்படுத்தப்பட்ட இந்த நிலையிலும் இந்த வழக்கினை மேலும் தொடர்ந்து தாமதப்படுத்த பல்வேறு தந்திரங்களும் உத்திகளும் கையாளப்பட்டன. அதிலே ஒன்றுதான் அரசு வழக்கறிஞர், பவானி சிங் அவர்களே சில நாட்களுக்கு முன் ஒரு மனுவினைத் தாக்கல் செய்தார். அதாவது சென்னையில் உள்ள பாஸ்கரன் என்பவரிடம் கொடுக்கப்பட்ட ஜெயலலிதாவுக்குச் சொந்தமான 1,116 கிலோ வெள்ளிப் பொருள்களை, பெங்களூர் நீதிமன்றத்துக்குக் கொண்டு வர வேண்டுமென்று ஒரு மனுவினை பவானிசிங் நீதிபதியிடம் தாக்கல் செய்தார். வழக்கு முடிகின்ற நேரத்தில், அரசு வழக்கறிஞர் இவ்வாறு ஒரு மனுவினைத் தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் என்ன? வழக்கினை தாமதப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு அந்த மனு, அரசு வழக்கறிஞரால் தாக்கல் செய்யப்பட்டது. ஆனால், பேராசிரியர் சார்பில் ஒரு மனு மூலமாக அந்த பாஸ்கரன் ஏற்கனவே இறந்து விட்டார் என்ற விவரம் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்த மனுவினை தள்ளுபடி செய்துதான், சிறப்பு நீதிபதி 28-2-2014 அன்று தீர்ப்பு அளித்திருக்கிறார். அந்தத் தீர்ப்பில்தான், -

“இந்த வழக்கு கடந்த 9 ஆண்டுகளுக்கும் மேலாக பெங்களூரில் நடந்து வருகிறது. நீதிபதி பி.ஏ. மல்லிகார்ஜுனையா, இந்த வழக்கினை விசாரித்தபோது, குற்றவியல் நடைமுறைச் சட்டம், 313இன் கீழ், குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் நேரில் ஆஜராகி, வாக்குமூலம் கொடுத்து விட்டனர். நீதிபதி பாலகிருஷ்ணா இந்த வழக்கினை விசாரித்த போது, சாட்சிகள் விசாரணை நடத்தி முடிக்கப்பட்டது. அரசு மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பு வழக்கறிஞர்களும் வாதத்தை முடித்து விட்டனர். இந்த வழக்கு தொடர்பாக அனைத்து விவகாரங்களும் முடிந்துள்ளதாக நீதிபதி பாலகிருஷ்ணா 14-8-2013 அன்றே குறிப்பிட்டிருந்தார். தற்போது வழக்கு இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. கடந்த 13 ஆண்டுகளாக அரசுத் தரப்பில் ஜெயலலிதா தரப்புக்குச் சொந்தமான இந்த வெள்ளிப் பொருள்களை பாஸ்கரனிடமிருந்து பெற்றுக் கொண்டு வந்து நீதிமன்றத்தில் ஒப்படைப்பது குறித்து எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் சார்பில் இதுபற்றி தாக்கல் செய்யப்பட்ட மனுவை ஏற்று, சென்னையில் இருந்த

தங்க, வெள்ளி ஆபரணங்கள் பெங்களூருக்கு கொண்டுவரப்பட்ட நேரத்தில், பாஸ்கரனிடமிருந்து இந்த வெள்ளிப் பொருள்களைக் கொண்டுவர வேண்டுமென்று அரசு வழக்கறிஞர் பவானி சிங் ஏன் மனு தாக்கல் செய்யவில்லை ?

அரசு வழக்கறிஞரான, பவானி சிங் கடந்த 2013ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலிருந்து பணியாற்றி வருகிறார். அந்தக் கால கட்டங்களில் இதுபோன்ற மனு எதையும் அவர் தாக்கல் செய்ய வில்லை.

இந்த வழக்கில் அரசு வழக்கறிஞராக நியமனம் செய்யப்பட்டு மூன்று நாட்கள் வாதம் செய்ததாகச் சொல்லும் பவானி சிங்கிற்கு, முதல் குற்றவாளியின் வெள்ளிப் பொருள்கள் சென்னையில் இருப்பது தெரியவில்லையா? வழக்கில் இறுதி வாதத்திற்காக ஆவணங்களைப் படித்த போது தான் வெள்ளிப் பொருள்கள் குறித்த விவரம் அவருக்குத் தெரிந்ததாகச் சொல்வது உண்மை யாகவும், நம்பும் வகையிலும் இல்லை. மேலும் வெள்ளிப் பொருள்களை வாங்கிச் சென்ற பாஸ்கரன் உயிருடன் இல்லை என்பது தெரிந்தும், அவரிடம் பொருள்களை கேட்கச் சொல்வதும், அவர் இறந்து விட்ட தகவல் நீதிமன்றத்தில் மரணச் சான்றிதழுடன் உறுதி செய்யப்பட்ட போதும், அரசு வழக்கறிஞர் அதனை ஏற்காமல், தனது கருத்தில் உறுதியாக இருந்து, தொடர்ந்து மனுவை வலியுறுத்துவதும் சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல.

இதனைப் பார்க்கும்போது, வழக்கைக் காலதாமதம் செய்யும் நோக்கத்தில் அரசு வழக்கறிஞர் பவானி சிங் நடந்து கொண்டார் என்றே கருதத் தோன்றுகிறது. கால நேரத்தை வீணாக்க வேண்டிய அவசியமில்லை. அந்த வாதமும் சரியானதல்ல. எனவே வெள்ளிப் பொருள்களைக் கொண்டுவர வேண்டுமென்ற அரசு வழக்கறிஞரின் மனுவில் எவ்வித முகாந்திரமும் இல்லை. இது தேவையற்ற மனு என்று கருதி தள்ளுபடி செய்கிறேன்”

- என்று அரசு வழக்கறிஞர், பவானி சிங் அவர்களின் மனு பற்றி சிறப்பு நீதிபதி அவர்கள் தன்னுடைய உத்தரவில் குறிப்பிட்டிருக்கிறார் என்றால், இந்த வழக்கில் அரசு வழக்கறிஞர், பவானி சிங் எவ்வாறெல்லாம் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு அனுசரணையாக நடந்து கொண்டார் என்பதைப் புரிந்துகொள்ள வேறு உதாரணம் வேண்டுமா?

நீதிபதி ஜான் மைக்கேல் டி. குன்கா 7-3-2014 அன்று இறுதி வாதம் தொடங்குமென்று அறிவித்தார். ஆனால் அன்றையதினம் அரசு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜராகவே இல்லை. வழக்கு 10ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. 10ஆம் தேதியன்றும் அரசு வழக்கறிஞர், பவானி சிங் ஆஜராகவில்லை . இதை அடுத்து வழக்கு 14-3-2014 அன்று விசாரணைக்கு வந்தது. நீதிபதி இறுதி வாதத்தைத் தொடங்க உத்தரவிட்டார். அன்றைய தினம் பவானி சிங் நீதி மன்றத்தில் ஆஜராகி, உடல் நிலை சரி யில்லை என்று காரணம் கூறி, வழக்கு விசாரணையைத் தாமதப்படுத்த அவர் மேற்கொண்டு வரும் முயற்சியின் தொடர்ச்சியாக பத்து நாட்கள் அவகாசம் கேட்டுக் கொண்டதோடு, அதற்கான மருத்துவச் சான்றிதழ்களையும் சமர்ப்பித்தார். நீதிபதி அந்தச் சான்றிதழ்களைப் பார்த்து அதிருப்தி அடைந்த நிலையில், நீதிமன்றத்தில் ஆஜராகியும் வாதிடாத அரசு வழக்கறிஞர் பவானி சிங் அவரது ஒரு நாள் ஊதியமான 65 ஆயிரம் ரூபாயை அபராதமாக செலுத்த வேண்டுமென்று உத்தரவிட்டார். 15ஆம் தேதியன்றும் பவானி சிங் நீதிமன்றத்தில் எந்தவித அறிவிப்புமின்றியும், காரணத்தைத் தெரிவிக்காமலும் ஆஜராகவில்லை. அவரது உதவியாளர், முருகேஷ் அரசு வழக்கறிஞர் வராதது பற்றித் தனக்கு எதுவும் தெரியாது என்றார். எனவே அரசு வழக்கறிஞரின் அன்றைய நாள் சம்பளமான 65 ஆயிரம் ரூபாயையும் அபராதமாக செலுத்த நீதிபதி உத்தரவிட்டார்.

ஜெயலலிதா சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள், அரசு வழக்கறிஞரின் வாதம் முடிந்த பிறகுதான் தங்கள் வாதத்தைத் தொடங்க முடியுமென்று கூறி விட்டார்கள். அதற்குப் பிறகு நீதிபதி அவர்கள் அரசு வழக்கறிஞர் 21-3-2014 அன்று வாதத்தைத் தொடங்க வேண்டுமென்று கண்டிப்பாக உத்தர விட்டார்.

இதற்கிடையே அரசு வழக்கறிஞர் பவானி சிங், நீதிமன்றத்தில் ஆஜர் ஆகாததற்காக சிறப்பு நீதிமன்றம் விதித்த அபராதத்தை ரத்து செய்ய வேண்டுமென்று கர்நாடகா உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். அந்த மனுவை கர்நாடக உயர் நீதிமன்ற நீதிபதி சத்திய நாராயண ராவ் தள்ளுபடி செய்தார்.

ஜெயலலிதாவுக்கு எதிராக வாதாடுவதற்காக அரசினால் நியமிக்கப்பட்ட அரசு வழக்கறிஞர், கடமை தவறி நடந்து கொள்கிறார் என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகி, கர்நாடக அரசே

அவரை விலக்கிய நிலையில், ஜெயலலிதா தரப்பினர் உச்ச நீதிமன்றம் வரை அதே அரசு வழக்கறிஞரான பவானி சிங் அவர்களே நீடிக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்து, உச்ச நீதிமன்ற நீதிபதி சவுஹான் அவர்கள் தான் அப்போதும் பவானி சிங் தொடரலாம் என்று உத்தரவிட்டார். அந்த அரசு வழக்கறிஞர், சிறப்பு நீதி மன்றத்தில், தொடர்ந்து ஆஜராகாத காரணத்தால், சிறப்பு நீதிபதி அபராதம் விதித்தார். அதனை எதிர்த்து பவானி சிங் கர்நாடகா உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்து, அங்கேயும் அவருடைய மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்த வழக்கிலே சிறப்பாக வாதிட்டு குற்றவாளிகளுக்குத் தண்டனை வாங்கித்தந்ததாக மார் தட்டிக் கொள்ளும் பவானி சிங்கைப் பற்றி நீதிபதி குன்ஹா அவர்கள், தனது தீர்ப்புரையில், "அரசு வழக்கறிஞர் பவானி சிங், அரசு சாட்சிகளின் முதல் விசாரணையை மட்டும் படித்துவிட்டு, தனது வாதங்களை முடித்துவிட்டார் என்று குறிப்பிட்டிருக்கிறார்" என்பதிலிருந்தே, இந்த வழக்கிலே அரசு வழக்கறிஞர் எவ்வாறு செயல்பட்டிருக்கிறார் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

இப்படிப்பட்ட "புகழ்"களுக்கு உரிய பவானி சிங் அவர்கள்தான் தி.மு.க. அவரைப் பற்றித் தவறாகக் குற்றஞ்சாட்டுவதாக பேட்டி கொடுத்துள்ளார். தற்போது கூட கர்நாடக உயர் நீதிமன்றத்தில் குற்றவாளிகளுக்கு ஜாமீன் கொடுக்கலாமா என்று நீதிபதி கேட்டபோது, ஜாமீன் கொடுக்கக்கூடாது என்று கடுமையாக எழுத்து மூலமாக தனது எதிர்ப்பை காலையிலே தாக்கல் செய்து விட்டு, மாலையில் ஜாமீன் கொடுக்கலாம் என்று வாய்மொழியாகப் பரிந்துரை செய்து, இந்த வழக்கு விசாரணையை உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தவர்களையெல்லாம் குழப்பத்தில் ஆழ்த்தியவர்தான் அரசு வழக்கறிஞர் பவானி சிங்! காலையிலே அவர் எழுதிக் கொடுத்ததற்கும், மாலையில் வாய்மொழியாகக் கூறியதற்கும் இடையிலே நடைபெற்றது என்ன? அவரைப் பற்றி தி.மு.க. அல்ல, ஜாமீன் வழக்கை விசாரித்த கர்நாடக மாநில உயர் நீதிமன்ற நீதிபதி தெரிவித்துள்ள கருத்து என்ன தெரியுமா?

"சொத்துக் குவிப்பு வழக்கில் அரசின் சார்பில் ஆஜராகி வாதிட்டு, குற்றவாளிகளுக்கு சிறைத் தண்டனையும், அபராதமும் வாங்கிக் கொடுத்த அரசு சிறப்பு வழக்கறிஞர் பவானிசிங், கடந்த 30ஆம் தேதி உயர் நீதிமன்றத்தில் தாக்கல்

செய்த ஆட்சேபணை மனுவில், "குற்றவாளிகளை ஜாமீனில் விடுதலை செய்தால், அவர்கள் தப்பி விடுவார்கள். அதன் மூலம் நீதிமன்றத் தண்டனையை நிறைவேற்றுவதில் சிக்கல் ஏற்படும்" என்று தெரிவித்திருந்தார். அதே வழக்கறிஞர், "குற்றவாளிகளை நிபந்தனை ஜாமீனில் விடுதலை செய்யலாம்" என்று மாற்றிக் கூறியுள்ளார். குற்றவாளிகளை ஜாமீனில் விடுதலை செய்ய அரசு விரும்பினாலும், அவர்கள் மீதான குற்றத்தைப் பார்க்கும்போது, அவர்கள் ஜாமீனில் விடுதலையாகும் தார்மீக உரிமையை இழந்துள்ளதால், நீதிமன்றம் ஜாமீன் வழங்காது" என்று கர்நாடக மாநில உயர் நீதிமன்ற நீதிபதி ஏ.வி. சந்திரசேகரா அவர்கள் தீர்ப்பில் குறிப்பிட்டிருப்பது பவானி சிங் அவர்களுக்கு அளித்த பாராட்டிதழா? பவானி சிங் பதில் கூறுவாரா?

அன்புள்ள,

மு.க.

11-10-2014

3926. எத்தனை தொழில்களைத்தான் மூடுவது?

உடன்பிறப்பே,

சென்னை அருகே, திருப்பெரும்புதூரில் அமைந்துள்ள நோக்கியா மொபைல் போன் உற்பத்தித் தொழிற்சாலை, வரும் நவம்பர் 1ஆம் தேதி முதல் மூடப்படும் என்று அந்த நிறுவனம் அறிவித்துள்ள செய்தி, தொழிலாளர்களிடமும் எதிர்க் கட்சிகளிடமும் அதிர்ச்சியை அளித்துள்ளது என்றபோதிலும், அது பற்றித் தமிழகத்தை ஆளுங்கட்சி ஏதாவது காதில்போட்டுக் கொண்டிருக்கிறதா என்றால் இல்லை என்றே வேதனையோடு கூற வேண்டியுள்ளது.

உலகின் மிகப் பெரிய மொபைல் போன் உற்பத்தி ஆலையாக, சென்னை அருகே, திருப்பெரும்புதூரில் 2005ஆம் ஆண்டு நோக்கியா ஆலை தொடங்கப்பட்டது. தம்பி தயாநிதி மாறன் மத்திய அமைச்சரவையில் இந்தத் துறையின் அமைச்சராக இருந்தபோது, பெரு முயற்சி செய்து, தமிழக அரசின் ஒத்துழைப்போடு இந்தத் தொழிற்சாலையைத் தமிழகத்திற்குக் கொண்டுவந்தார். இந்தியாவில் 93 கோடி கைபேசி உபயோகிப் பாளர்களின் தேவைகளில் 60 சதவிகிதத்தை நோக்கியா நிறுவனம்தான் நிறைவுசெய்து வந்தது. மாதம் ஒன்றுக்கு ஒன்றரைக் கோடி மொபைல் போன்களை உற்பத்தி செய்யும் திறன் கொண்ட இந்தத் தொழிற்சாலையில் 18 வயது முதல் 30 வயதுக்கு உட்பட்ட இளைஞர்கள் வேலை வாய்ப்புப் பெற்றனர். குறிப்பாக 60 சதவிகிதத்திற்கு மேல் இளம் பெண்கள் பணியில் சேர்க்கப்பட்டனர். இலாபகரமாக இயங்கிவந்த இந்தத் தொழிற் சாலையை, கடந்த ஏப்ரலில் உலகின் கணினி மென்மொருள் தொழிலில் முதல் இடத்தில் இருக்கும் மைக்ரோசாப்ட் நிறுவனம் விலைக்கு வாங்கியது. இந்தியா மட்டுமல்லாமல், பிற நாடுகளில் இருந்த நோக்கியா நிறுவனங்களையும், மைக்ரோசாப்ட் நிறுவனம் வாங்கியது.

நோக்கியா தொழிற்சாலையில் நிரந்தரத் தொழிலாளர்கள் 8,500 பேர்; பயிற்சியாளர்கள் 6,000 பேர். ஒப்பந்தத் தொழிலாளர்கள் 6,000 பேர். இந்த நிறுவனத்தின் சார்பு நிறுவனமான "பாக்ஸ்கான்" தொழிற்சாலையில் பணியாற்றியவர்கள் 7,000 பேர். இவர்களில் 6 ஆயிரம் பேருக்கு வெளியே தெரியாமலேயே விருப்ப ஓய்வு கொடுத்து, சில மாதங்களுக்கு முன்பாக அந்த நிறுவனம் வெளியேற்றிவிட்டது. அதற்குப் பிறகு பணியாற்றி வந்தவர்களையும் இப்போது வேலை இழக்கச் செய்கின்ற அளவுக்கு அந்தத் தொழிற்சாலை நிரந்தரமாக மூடப்படும் என்ற அறிவிப்பு வந்துள்ளது.

இந்தத் தொழிற்சாலையை மூடுவது பற்றி அந்த நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "நோக்கியா மொபைல் போன் உற்பத்தி ஆலையைக் கடந்த ஏப்ரல் மாதம் முதல், மைக்ரோசாப்ட் நிறுவனம் விலைக்கு வாங்கியுள்ளது. இதில் திருப்பெரும்புதூரில் உள்ள தொழிற்சாலையும் ஒன்று. ஆனால் மைக்ரோசாப்ட் நிறுவனம், மொபைல் போன்களுக்கான ஆர்டரை அளிக்க வில்லை. ஆர்டர் இல்லாத நிலையில், திருப்பெரும்புதூர் ஆலை, நவம்பர் 1ஆம் தேதி முதல் மூடப்படுகிறது. மொபைல் போன்கள் வாங்க, நோக்கியா நிறுவனத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தம், நவம்பர் 1ஆம் தேதி முதல் ரத்து செய்யப் படுவதாக மைக்ரோசாப்ட் நிறுவனம் அறிவித்துள்ளதால், ஆலையை மூடும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவல் நிறுவனத்தின் பங்குதாரர்கள், தொழிலாளர் ஆணையருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது" என்று கூறப்பட்டுள்ளது. ஒரு நிறுவனத்தை மற்றொருவருக்கு விற்றாலோ அல்லது வேறு நிறுவனம் வாங்கினாலோ இந்தியக் கம்பெனி சட்டத்தின் அனுமதியைப் பெற வேண்டும். கம்பெனிலா போர்டு (Company Law Board), மத்திய, மாநில அரசுகளின் தடையில்லாச் சான்றிதழ் பெறாமல் ஒரு நிறுவனத்தை விற்கவோ, வாங்கவோ இயலாது.

2013ஆம் ஆண்டு ஜனவரியில் இந்திய வருமான வரித் துறை நோக்கியா தொழிற் சாலையில் சோதனை நடத்தியது. இந்திய வருமான வரித் துறைக்கு, சென்னை நோக்கியா நிறுவனம், 21 ஆயிரம் கோடி ரூபாய் வரிபாக்கி வைத்துள்ளதைச் செலுத்த வேண்டுமென்று சம்மன் அனுப்பியது. அந்தத் தொகையைத் தவணை முறையில் கட்ட சலுகையும் வழங்கியது. ஜூன்

2013இல் நோக்கியா நிறுவனம் 700 கோடி ரூபாயை முதல் தவணையாக இந்திய வருமான வரித்துறைக்குச் செலுத்தியது. செப்டம்பர் 2013இல் நோக்கியா நிறுவனம் இந்தியாவில் உள்ள தங்களது தொழிற்சாலை, சேவை மற்றும் அனைத்துச் சொத்துக்களையும் மைக்ரோசாப்ட் நிறுவனத்திற்கு அமெரிக்க டாலர் 7.7 பில்லியன், அதாவது இந்திய மதிப்புப்படி 47 ஆயிரம் கோடி ரூபாய்க்கு விற்கப்போவதாக அறிவித்தது. எனவே வருமானவரியைச் செலுத்தும்வரை சென்னை நோக்கியா தொழிற்சாலையின் சொத்துக்கள் மற்றும் கணக்குகளை முடக்கியது. அதை எதிர்த்து நோக்கியா நிறுவனம் டெல்லி உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்தது. டெல்லி உயர் நீதிமன்றம் நோக்கியா நிறுவனத்தின் கணக்குகளை மட்டும் ரிலீஸ் செய்ய உத்தரவிட்டது. சொத்துக்களை அல்ல. டிசம்பர் 2013ஆம் ஆண்டு டெல்லி உயர் நீதிமன்றம் நோக்கியா நிறுவனத்தின் சொத்துக்களையும் ரிலீஸ் செய்து மைக்ரோசாப்ட் நிறுவனத்திற்கு விற்க சில நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கியது. அந்த நிபந்தனைகளுக்கு எதிராக பிப்ரவரி 2014இல் நோக்கியா நிறுவனம் உச்ச நீதிமன்றத்தை அணுகியது. நோக்கியா நிறுவனம் மைக்ரோசாப்ட் நிறுவனத்திற்கு விற்பனை செய்யத் தடைவிதிக்கக் கூறி மார்ச் 2014 அன்று இந்திய வருமானவரித் துறையும், உச்ச நீதிமன்றத்தை அணுகியது.

மேலும், தமிழக வணிகவரித் துறைக்கு 2,400 கோடி ரூபாய் நோக்கியா நிறுவனம் விற்பனைவரி செலுத்த வேண்டும் என்று வணிகவரித் துறை நோக்கியா நிறுவனத்துக்கு நோட்டீஸ் அனுப்பி யிருக்கிறது. இந்தச் சட்டச் சிக்கல்களாலும், சென்னை நோக்கியா நிறுவனம் செய்துகொண்ட விற்பனை ஒப்பந்தம் முடங்கியது. மைக்ரோசாப்ட் நிறுவனத்துடன் செய்து கொண்ட விற்பனை ஒப்பந்தம் முடங்கியதால், நோக்கியா நிறுவனம், மொபைல் போன் உற்பத்தியைப் படிப்படியாகக் குறைத்தது. அதைத் தொடர்ந்துதான் நிரந்தர ஊழியர்களுக்கு விருப்ப ஓய்வுத் திட்டத்தைக் கடந்த ஏப்ரல் மாதம் அறிவித்து தொழிலாளர்களை வலியுறுத்தியபோது, 7 ஆயிரம் ஊழியர்கள் அதனை ஏற்றுக்கொண்டார்கள். 1,600 தொழிலாளர்கள் அதனை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்கள். 2014 ஏப்ரல் 25ஆம் தேதியன்று மைக்ரோசாப்ட் நிறுவனம் நோக்கியா நிறுவனத்தை வாங்கும் முடிவைக் கைவிட்டது. அதைத் தொடர்ந்துதான் நோக்கியா நிறுவனம் தங்களது

தொழிற்சாலையை நவம்பர் மாதம் முதல் மூடப்போவதாக அறிவித்துள்ளது. அதை எதிர்த்து நோக்கியா தொழிலாளர்கள் நடத்திய போராட்டத்திற்குப் பலன் ஏற்படவில்லை. தற்போது எஞ்சியிருக்கும் 1,100 தொழிலாளர்களையும் வீட்டுக்கு அனுப்பும் முயற்சியிலே உற்பத்தியை நிறுத்தி வைப்பு என்ற போர்வையில் நிறுவனத்தை மூட முயன்றுள்ளது.

நோக்கியா தொழிற்சாலைகள் மாத்திரமல்ல; மேலும் பல நிறுவனங்கள் தமிழகத்தில் கடந்த மூன்றாண்டுகளாகத் தொடர்ந்து மூடப்பட்டதின் காரணத்தினால் சுமார் ஒரு இலட்சம் பேர் வேலை இழந்துள்ளனர். மின் பற்றாக்குறை, அரசின் தவறான அணுகுமுறை, தொழில் துறை அக்கறை கொள்ளாதது, தொழிலாளர் உறவு முறை சரியில்லாமல் இருப்பது போன்ற அரசின் அலட்சியப் போக்கினால், தொழிற்சாலை மூடல், தொழிலாளர்கள் வேலை இழப்பு என்பது இந்த ஆட்சியில் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

ஆளுங்கட்சியின் ஆதரவு நாளேடான "தினத்தந்தி" இன்றையதினம் (11-10-2014) எழுதியுள்ள தலையங்கத்தில், "புதிய தொழிற்சாலைகள் தொடங்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், இப்போது சில தொழிற்சாலைகள் மூடப்படுவது பெரிய கவலையை ஏற்படுத்தியுள்ளது. சென்னைக்கே பெருமை அளித்துக் கொண்டிருந்தது, நோக்கியா செல்போன் தொழிற்சாலை. திருப்பெரும்புதூரில் உள்ள இந்தத் தொழிற்சாலை ஒரு வெளிநாட்டுக்கம்பெனியாகும். 2006ஆம் ஆண்டு உற்பத்தியைத் தொடங்கியது. இங்குத் தயாரிக்கப்பட்ட செல்போன்களுக்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் கடும் கிராக்கி இருந்தது. பொதுவாகத் தொழிற்சாலைகள் மூடப்படும் நிலையைத் தடுக்க, மத்திய, மாநில அரசுகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுபோன்ற தொழிற்சாலைகள் மூடப்படுவதால் ஏராளமான தொழிலாளர்கள் வேலை இழப்பது மிகவும் வருத்தத்துக்கு உரியது" என்றெல்லாம் எழுதியுள்ளது. ஆம்; "தினத்தந்தி" தான் அப்படி எழுதியுள்ளது.

நோக்கியா நிறுவனத்தில் பணியாற்றும் தொழிலாளர்கள் எல்லாம் தங்கள் துயரத்தைக் கொட்டி, பேட்டி கொடுத்துள்ளார்கள். இந்தத் தொழிற்சாலை மூடப்படுவதால் அதைச் சார்ந்துள்ள நிறுவனங்களும் மூடப்படக் கூடுமென்றும், அங்கே பணியாற்றும்

அலுவலர்களும் பாதிக்கப்படுவார்கள் என்றும் கூறப்படுகிறது. இந்தத் தொழிற்சாலை மூடப்படுவதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம் தெரிவித்து அந்தக் கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் ராமகிருஷ்ணன் அறிக்கை விடுத்துள்ளார். நோக்கியா பொதுத் தொழிலாளர் சங்க கவுரவத் தலைவரும், சட்டப்பேரவை உறுப்பினருமான தோழர் சவுந்தரராஜன், சட்டத்திற்குப் புறம்பாக நோக்கியா நிர்வாகம் அறிவித்துள்ள ஆலை மூடலை எதிர்த்து வழக்குத் தொடருவோம் என்றும், ஆலையை மூடுகிறோம் என்றால் மாநில அரசிடம் அனுமதிபெற வேண்டும் என்றும் அதிலிருந்து தப்பிக்க, "உற்பத்தி நிறுத்தி வைப்பு" என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறார்கள் என்றும் தெரிவித்திருக்கிறார். நோக்கியா தொழிற்சாலையில் தொழிலாளர்கள் நலம் பேணுவது குறித்து நீண்ட நாட்களாக மார்க்சிஸ்ட் கட்சிக்கும், தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைக்கும் இடையில் கருத்து மாறுபாடுகள் உண்டு என்றபோதிலும், இரண்டு தொழிற்சங்கங்களுமே அந்தத் தொழிற்சாலை மூடப்படக் கூடாது என்பதிலும், அங்கே பணியாற்றும் தொழிலாளர்களின் நலம் பேணப்பட வேண்டும் என்பதிலும் தனித்தனியாகப் போராடி வருகிறார்கள்.

நோக்கியா தொழிற்சாலையை மீண்டும் திறக்கக்கோரி, மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தி வருகின்ற 17-10-2014 வெள்ளிக் கிழமை காலை 10 மணி அளவில் திருப்பெரும்புதூரில் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைச் செயலாளர் மு.சண்முகம் அவர்களின் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளது.

ஆனால் தமிழகத்தில் அரசு என்று ஒன்று நடந்து கொண்டிருக்கிறது. அந்த அரசின் சார்பில் இதுவரை என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது? இந்தத் தொழிற்சாலை தொடங்கப்பட்டபோது மத்திய, மாநில அரசுகளின் சலுகைகளைப் பெற்ற இந்நிறுவனம், ஆலையை நிறுத்தும்போது மட்டும் மத்திய, மாநில அரசுகளைக் கேட்க வேண்டாமா? இந்தத் தொழிற்சாலையைத் தொடர்ந்து நடத்துவதற்கு என்ன பிரச்சினையை அந்த நிறுவனம் சொல்கிறது என்று தெரிந்து கொள்ள வேண்டாமா? மிக இலாபகரமாக நடைபெற்ற இந்தத் தொழிற்சாலையினை ஏன் மூட வேண்டும்? அங்கே பணியாற்றிய

தொழிலாளர்களின் வருங்காலத்தை உத்தேசித்துப் பார்த்து, அந்தத் தொழிற்சாலையைத் தமிழக அரசே கையகப்படுத்தி, தொடர்ந்து நடத்தலாம் அல்லவா? அதைப்பற்றியெல்லாம் அந்தத் துறையின் அமைச்சர் நடவடிக்கை மேற்கொண்டாரா? தொழிலாளர்களில் ஒருவர், தொழிற்சாலை வாசலிலேயே இந்த ஆலை மூடுவதைக் கண்டித்துத் தற்கொலை செய்துகொள்ள முயன்று, நல்ல வேளையாகக் காப்பாற்றப்பட்டிருக்கிறார்.

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் சார்பில் 6-6-2014 அன்று மத்திய நிதி அமைச்சர் அவர்களுக்கும், 1-7-2014 அன்று மத்திய தொழில் வர்த்தகம் மற்றும் நிதித் துறை இணையமைச்சர் அவர்களுக்கும் நோக்கியா தொழிற்சாலை பற்றிக் கடிதங்கள் எழுதப்பட்டு, மத்தியஅரசின் சார்பில் அமைச்சர்கள் நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாக "தி எகானமிக் டைம்ஸ்" நாளேட்டிலும் செய்திகள் வந்தன.

உள்நாட்டில் உற்பத்தியான நோக்கியா கைபேசியைக் குறைந்த விலையில் வாங்கியவர்கள், இனி அயல்நாட்டுக் கைபேசியை வாங்க நிர்ப்பந்திக்கும் ஒரு நிலையை அ.தி.மு.க. அரசுதான் ஏற்படுத்தியுள்ளது. கடந்த இரண்டாண்டு காலமாக இந்தப் பிரச்சினை பேசப்பட்டுவரும் நிலையில் அ.தி.மு.க. அரசு அந்த நிர்வாகத்தினரை அழைத்துப்பேசி இந்தத் தொழிற்சாலை தொடர்ந்து நடைபெறுவதற்கும், அங்கே பணியாற்றிய தொழிலாளர்களின் வேலை போகாமல் பார்த்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டாமா? அங்கே பணியாற்றிய தொழிலாளர்கள் எல்லாம் தமிழகத்தைச் சேர்ந்த இளைஞர்கள் அல்லவா? அவர்களைப் பாதுகாக்க வேண்டிய கடமை இந்த அரசுக்கு இல்லையா? இனியாவது தமிழக அரசு விழித்துக் கொண்டு, நோக்கியா ஆலைத் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கான முயற்சியிலே ஈடுபடுவார்களா என்றுதான் நாடு எதிர்பார்க்கிறது.

அன்புள்ள,

மு.க.

12-10-2014

3927. ஒய்யாரக் கொண்டையாம்; தாழம்பூவாம்! (1)

உடன்பிறப்பே,

“ஒய்யாரக் கொண்டையாம்; தாழம்பூவாம்” - இப்படி ஒரு பாடலுக்கான முதல் வரியைப் படித்திருப்பாய்! அடுத்தடுத்த வரிகளைப் படித்தால்தான் என்ன சொல்ல வந்தேன் என்பது உனக்குப் புரியும். முழுப் பொருளும் விளக்கமாகத் தெரியும். ஜெய லலிதாவின் சொத்துக் குவிப்பு வழக்கு பற்றிய விவரங்களும், 18 ஆண்டுக் காலம் நடைபெற்ற வழக்கும், இறுதியாக அளிக்கப்பட்ட தீர்ப்பும், நான் புதிதாகச் சொல்லி நீ தெரிந்துகொள்ள வேண்டிய ஒன்றல்ல. நாட்டு மக்களுக்கே நன்றாகப் புரியும். இந்த விவகாரங்களில் கைது, சிறை, தண்டனை தொடர்ந்து நிபந்தனை ஜாமீன், இடைக்கால விடுதலை என்ற அத்தியாயங்களில் இந்தச் சொத்துக் குவிப்பு வழக்கைப் பிரித்துப் படிக்கலாம் என்றாலும் முழுமையாக விரித்துச் சொன்னால்தான் உனக்கும் நல்லது; நாட்டிற்கும் நல்லது என்பதால் - நாட்டின் எதிர்காலத்திலாவது வாய்மை நிலை நாட்டப்படும்; எதிர்கால இளைஞர்களுக்குப் பயனுடையதாகவும், எச்சரிக்கையாகவும் இருக்கும் என்ற நம்பிக்கையோடு - கடந்த சில நாட்களாக வாய் மூடியிருந்த நான், விவரமாகவே சற்று விளக்கமாகவே விரித்துச் சொல்வதற்காக, கடிதத் தொடரைத் தொடங்கியிருக்கிறேன்.

இந்தக் கடிதத்திற்கான தலைப்பே “ஒய்யாரக் கொண்டையாம்; தாழம்பூவாம்” என்பதாகும். அடுத்த வரியான “உள்ளே இருக்குமாம் ஈரும் பேனும்” என்ற வாசகத்தை வெளியிடாமலே நீ புரிந்து கொள்வாய் என்ற நம்பிக்கையோடு இந்தக் கடிதத்தைத் தொடங்கி ஓரிரு நாட்கள் தொடருகிறேன்.

பதினெட்டு ஆண்டுகளாக பல்வேறு கட்டங்களிலும் இழுத்தடிக்கப்பட்டுக் காலம் கடத்தப்பட்டு வந்த ஜெயலலிதா உள்ளிட்ட நான்கு பேர் மீதான சொத்துக் குவிப்பு வழக்கில்

பெங்களூரு தனி நீதிமன்றத்தில் நீதிபதி ஜான் மைக்கேல் டி.குன்ஹா அவர்கள் கடந்த செப்டம்பர் 20ஆம் தேதியன்று தீர்ப்பளிக்கப் போவ தாக அறிவித்தார். ஆனாலும் குற்றஞ்சாட்டப் பட்டோர் தங்களின் பாதுகாப்புக் கருதி, தீர்ப்பினை செப்டம்பர் 27ஆம் தேதிதான் வெளியிட வேண்டுமென்று கோரிக்கை வைத்து, அதையும் நீதிபதி ஏற்றுக்கொண்டு, செப்டம்பர் 27ஆம் தேதியன்றே தீர்ப்பினை அளித்தார்.

அந்தத் தீர்ப்பில் ஜெயலலிதாவுக்கு நூறு கோடி ரூபாய் அபராதமும், நான்காண்டுகள் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. மேலும் சசிகலா, இளவரசி, வி.என். சுதாகரன் ஆகியோருக்கும் நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனையும், தலா பத்துக் கோடி ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. இதற்கான ஆதாரங்களையும், சாட்சியங்களையும் சட்ட விதி முறைகளின் அடிப்படையில் குறிப்பிட்டு நீதிபதி ஜான் மைக்கேல் டி.குன்ஹா 1136 பக்கங்களில் விரிவான தமது தீர்ப்பில் விளக்கியிருக்கிறார்.

இந்தத் தீர்ப்பு வெளியானவுடன், அதைப் பற்றி நான் எந்தவிதமான கருத்தும் தெரிவிக்கவில்லை. காரணம், இது முக்கியமான வழக்கு என்பதால், எச்சரிக்கை உணர்வுடன் பொறுமையாக இருந்து தீர்ப்பு முழுவதையும் கவனமாகப் படித்த பிறகு விளக்கலாம் என்று எண்ணினேன். மேலும் அ.தி.மு.க.வின் தலைவிக்கு தண்டனை வழங்கப்பட்டுவிட்டது என்பதற்காக நான் மகிழ்ச்சி அடையவும் இல்லை; தற்போது அவர் உச்சநீதிமன்றத்தில் நிபந்தனை ஜாமீனில் விடுதலை பெற்றுவிட்டார் என்பதற்காக வருத்தப்படவும் தயாராக இல்லை. ஆனால் அ.தி.மு.க.வினர் சிலர் நான்தான் ஏதோ ஜெயலலிதா மீது பொய் வழக்குப் போட்டதாகக் கூறிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் உண்மை என்ன? பெங்களூரு சிறப்பு நீதிமன்ற நீதிபதி அவர்கள் வழங்கிய அந்தத் தீர்ப்பில் என்னென்ன கூறப்பட்டுள்ளது என்பதை உன்னுடன் பகிர்ந்து கொள்வதற்காகத்தான் இந்தத் தொடர் கடிதம்!

ஜெயலலிதாவின் சொத்துக் குவிப்பு வழக்கு சென்னையில் தொடங்கிய போதிலும் பெங்களூருக்கு ஏன் மாற்றப்பட்டது என்ற விபரத்தை நீதிபதி ஜான் மைக்கேல் டி.குன்ஹா தனது தீர்ப்பின் தொடக்கத்தில் தெரிவித்துள்ளார்.

தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா மற்றும் சசிகலா, வி.என்.சுதாகரன், ஜெ.இளவரசி ஆகிய நால்வரும் ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழும், இந்தியக் குற்றவியல் சட்டப் பிரிவுகள் 120 பி மற்றும் 109ன் கீழும் தண்டனைக்குரிய குற்றங்கள் செய்ததாக வழக்குத் தொடரப்பட்டது.

ஜெ. ஜெயலலிதா 24.6.1991 முதல் 13.5.1996 வரை தமிழக முதலமைச்சராக இருந்தார். அதற்கு முன்பு 1960களில் திரைப்படத்தில் நடித்து வந்த மறைந்த என்.ஆர்.சந்தியாவின் மகளான அவர், 1971 ஆம் ஆண்டு தனது தாயார் மறைவுக்குப்பின், நாட்டிய கலா நிகேதனின் சொத்துக்களுக்கு மட்டுமே உரிமையாளராக இருந்தார்.

இரண்டாவது குற்றவாளியான சசிகலா, தமிழக அரசின் மக்கள் தொடர்புத் துறையில் துணை இயக்குநராகப் பதவி உயர்வு பெற்றிருந்து, பின்னர் பதவி விலகிய நடராஜனின் மனைவி; 1970ல் நடராஜனுக்குத் திருமணம் செய்து கொடுக்கப்பட்ட சசிகலா, அவ்வப்போது ஜெயலலிதா வீட்டுக்கு வந்து போய்க் கொண்டிருந்தவர் 1988க்குப் பின் அவருடைய உடன்பிறவாச் சகோதரியாக ஆகி ஜெயலலிதாவுடன் அவரது வீட்டிலேயே தங்கிவிட்டார்.

சசிகலாவின் சகோதரி வனிதாமணி - டி.டி.விவேகானந்தன் ஆகியோரின் மகனான வி.என். சுதாகரனைத் தனது வளர்ப்பு மகனாக வெளிப்படையாக ஏற்றுக்கொண்ட ஜெயலலிதா, 7.9.1995ல் அவருக்குச் சென்னையில் சத்தியலட்சுமியுடன் மிகவும் ஆடம்பரமாகத் திருமணத்தை நடத்தி வைத்தார்.

நான்காவது குற்றவாளியான இளவரசி, சசிகலாவின் மூத்த சகோதரர் வி. ஜெயராமனின் மனைவி. ஜெயராமன் இறந்ததற்குப் பிறகு, இளவரசியும் 1992 தொடக்கத்தில் இருந்து ஜெயலலிதாவின் வீட்டில் சசிகலாவைப்போலவே தங்கியிருந்தார்.

அரசு வழக்கில் குறிப்பிட்டுள்ளபடி 17.1991 அன்று ஜெயலலிதாவும், சசிகலாவும் பங்குதாரர்களாக உள்ள ஜெயா பப்ளிகேஷன்ஸ், சசி எண்டர்பிரைசஸ், நமது எம்.ஜி.ஆர். மற்றும் அவற்றின் பேரால் வாங்கப்பட்ட சொத்துக்கள் உள்பட 2 கோடியே ஒரு லட்சத்து 83 ஆயிரத்து 957 ரூபாய் அளவுக்குச் சொத்துக்களைப் பெற்றிருந்தார்கள்.

A 894-6116
2500.52

1.7.1991க்குப் பிறகு அதாவது ஜெயலலிதா முதலமைச்சராக ஆன பிறகு, ஜெயலலிதா, சசிகலா, இளவரசி, சுதாகரன் தரப்பினருக்கு சொத்துக்கள் பல மடங்கு பெருகின. அவை வருமாறு :

1. ஜெ. பண்ணை வீடுகள்
2. ஜெ.எஸ். வீட்டு வசதி மேம்பாடு
3. ஜெ. ரியல் எஸ்டேட்
4. ஜெயா ஒப்பந்ததாரர்கள் மற்றும் கட்டிடங்கள்
5. ஜெ.எஸ். லீசிங் மற்றும் பராமரிப்பு
6. பசுமைப் பண்ணை இல்லங்கள்
7. மெட்டல் கிங்
8. சூப்பர் டூப்பர் டி.வி லிமிடெட்
9. ஆஞ்சனேயா பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்
10. ராம்ராஜ் அக்ரோ மில்ஸ் லிமிடெட்
11. சிக்னோரா பிசினஸ் என்டர்பிரைசஸ் பி.லிட்.
12. லெக்ஸ் பிராபர்ட்டி டெவலப்மெண்ட் பி.லிட்.
13. ரிவர்வே அக்ரோ ப்ராடக்ட்ஸ் பி.லிட்.
14. மீடோ அக்ரோ பார்ம்ஸ் பி.லிட்.
15. இன்டோ டோஹா கெமிக்கல்ஸ் மற்றும் பார்மசூட்டிக்கல்ஸ் லிட்.
16. ஏ.பி. விளம்பரச் சேவைகள்
17. விக்னேஸ்வரா பில்டர்ஸ்
18. லக்ஷ்மி கன்ஸ்ட்ரக்சன்ஸ்
19. கோபால் புரோமோட்டர்ஸ்
20. சக்தி கன்ஸ்ட்ரக்சன்ஸ்
21. நமசிவாயா வீட்டு வசதி மேம்பாடு
22. அய்யப்பா சொத்து மேம்பாடு

23. சீ என்கிளேவ்

24. நவசக்தி ஒப்பந்ததாரர்கள் மற்றும் கட்டுநர்கள்

25. ஏசியானிக் கன்ஸ்ட்ரக்சன்ஸ்

26. கிரீன் கார்டன் அபார்ட்மெண்ட்ஸ்

27. மார்பிள் மார்வல்ஸ்

28. வினோத் வீடியோ விஷன்

29. பேக்ஸ் யுனிவர்சல்

30. ப்ரஷ் மஷ்ரூம்ஸ் மற்றும்

31. கொடநாடு தேயிலை எஸ்டேட்

குறிப்பிடப்பட்ட இந்த நிறுவனங்களில் 1.7.1991 முதல் 30.4.1996 வரை நிலம், எந்திரம், கட்டிடம் போன்ற சொத்துக்கள் வாங்கிச் சேர்ப்பதைத் தவிர, ஒரு வணிக நிறுவனத்தில் சாதாரணமாக நடைபெற வேண்டிய எந்தக் காரியங்களும் நடைபெறவில்லை. இந்த நிறுவனங்கள் மூலம் வருமான வரி அறிக்கைகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. இந்த நிறுவனங்கள் குறித்து விற்பனை வரி மதிப்பீடுகளும் செய்யப்படவில்லை. ஜெயலலிதாவும்; 1987 - 88ஆம் ஆண்டு முதல் 1992 நவம்பர் வரை வருமான வரி அறிக்கை தாக்கல் செய்யவில்லை.

1.7.1991க்குப் பின் அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் ஜெயலலிதா பெயரில் மட்டுமின்றி மற்ற மூவர் பெயரிலும்; அவர்கள் பெயரில் தொடங்கப்பட்ட நிறுவனங்கள் பெயரிலும் வாங்கப்பட்டன. 4 பேரின் வங்கிக் கணக்குகளையும் பரிசீலனை செய்ததில் அவர்களுடைய வருவாய்க்கு மீறிய வகையில் பல்வேறு கணக்குகளில் அடிக்கடி தொகை வரவு வைக்கப்பட்டிருந்தது. சட்ட விரோதமாக சொத்துக்களை வாங்குவதற்காக ஒரு கணக்கிலிருந்து மற்றொரு கணக்குக்கு அடிக்கடி பணம் மாற்றப்பட்டது. இவை ஜெயலலிதா ஆட்சியில் இருந்த காலத்தில் நடந்ததாலும், ஜெயலலிதா, சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர் ஒரே வீட்டில் இருந்ததாலும் அந்தச் சொத்துக்கள் முழுவதும் ஜெயலலிதாவினாலேயே உண்மையில் வாங்கப்பட்டதாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

மேலும் பொது ஊழியரான ஜெயலலிதாவும், அவருடைய சகாக்களான மற்ற மூவரும் குற்றச் சதியில் ஈடுபட்டு, ஜெயலலிதா பெயரிலும் மற்றவர்கள் பெயரிலும் அவர்கள் நிறுவனங்கள் பெயரிலும் 66 கோடியே 65 லட்சத்து 20 ஆயிரத்து 395 ரூபாய் அளவுக்கு சொத்துக்கள் வாங்கிக் குவிக்கப்பட்டன. இது அவர்களுடைய வருவாய்க்கு மீறிய சொத்தாகும்.

அரசு வழக்கறிஞர் தரப்பின்படி, 1.7.1991 முதல் 30.4.1996 வரை வாடகை வருவாய், வங்கிக் கணக்குகள் மற்றும் இதர டெபாசிட்டுகளில் பெற்ற வட்டி, அவராலும் மற்ற மூவராலும் பெறப்பட்ட விவசாய வருமானம், கடன்கள் மற்றும் முதலமைச்சர் என்ற முறையில் பெற்ற சம்பளம் எல்லாம் சேர்த்து 9 கோடியே 34 இலட்சத்து 26 ஆயிரத்து 54 ரூபாய் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

அதேபோல், இந்தக் காலக் கட்டத்தில் ஜெயலலிதாவும் மற்றவர்களும் கடனுக்கு வட்டி, திருப்பிச் செலுத்திய கடன் மற்றும் இதர செலவுகளில் 11 கோடியே 56 இலட்சத்து 56 ஆயிரத்து 833 ரூபாய் செலவழித்ததாகக் கணக்கிடப்பட்டது. இவ்வாறு 30.4.1996 அன்று பொது ஊழியர் என்ற முறையில் ஜெயலலிதா வுக்குரிய வருவாய்க்கு அதிகமாக 66,65,20,395 ரூபாய் அளவுக்கு சொத்துக்கள் பெற்றுள்ளார். லஞ்ச ஒழிப்புச் சட்டத்தின்படி இது தண்டனைக்குரிய குற்றமாகும்.

அன்றைய ஜனதா கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிர மணியம் சுவாமி அவர்கள் தமிழக ஆளுநரிடம் அளித்த புகார் மனுவின் காரணமாக ஜெயலலிதாவுக்கு எதிரான இந்த வழக்கு ஆரம்பமானது. 14.6.1996 அன்று சென்னை முதன்மை செசன்ஸ் மற்றும் தனி நீதிபதி முன்னிலையில் ஜெயலலிதா முதலமைச்சராக வந்தபிறகு வருவாய்க்கு அதிகமாகச் சொத்து சேர்த்திருப்பதாகப் புகார் ஒன்றை சுப்பிரமணியம் சுவாமி தாக்கல் செய்தார். அந்தப் புகாரை நீதிபதி வழக்காகப் பதிவு செய்து, அதுபற்றி விசாரணை நடத்தி 2 மாதங்களில் அறிக்கை அளிக்கும்படி மூத்த ஐ.பி.எஸ். அதிகாரி திருமதி லத்திகா சரணுக்கு 21.6.1996 அன்று உத்தரவிட்டார்.

அதன்படி லத்திகா சரண் பல்வேறு வங்கிகள் மற்றும் பதிவுத் துறை அலுவலகங்களிலும், நிறுவனங்கள், பதிவாளர் அலுவலகத்திலும் அறிக்கைகள் பெற்று விசாரணை நடத்தி

வந்தார். இந்த உத்தரவை எதிர்த்து ஜெயலலிதாவும், சசிகலாவும் சென்னை உயர்நீதிமன்றத்தை அணுகியதால் 14.08.1996 உத்தரவுப்படி சிறிது காலத்திற்குப் புலனாய்வு நிறுத்தப்பட்டது. பின்னர் உயர்நீதிமன்றமே, 4.9.1996 அன்று தடையை நீக்கி விசாரணையைத் தொடர ஒப்புதல் அளித்தது. ஜெயலலிதா தனக்கு முன் ஜாமீன் அளிக்க வேண்டுமென்று கோரியபோது அதனை நிராகரித்த உயர்நீதிமன்றம், "ஜெயலலிதா மீது சாட்டப்பட்டுள்ள ஊழல் வழக்கிற்கு அடிப்படை ஆதாரம் உள்ளது. அரசியல் பகை காரணமாக இவ்வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது என்று கூறுவது சரியல்ல" என்று தீர்ப்பளித்தது.

4.9.1996இல் சென்னை உயர்நீதிமன்றம்; லஞ்ச ஒழிப்புத் துறை ஆணையர் விசாரிக்க அனுமதி அளித்ததால்; லஞ்ச ஒழிப்புத்துறை ஆணையர் திரு. வி.சி. பெருமாள், அப்போது லஞ்ச ஒழிப்புத்துறை கூடுதல் எஸ்.பி.யாக இருந்த திரு. நல்லம்ம நாயுடுவை இந்த வழக்கை விசாரிக்கும்படி உத்தரவிட்டார். பின்னர் ஐ.ஜி.யாக பதவி உயர்வு பெற்ற வி.சி.பெருமாள் ஜெயலலிதாவுக்கு எதிரான முதல் தகவல் அறிக்கையை 18.9.1996 அன்று தாக்கல் செய்தார்.

திரு. நல்லம்ம நாயுடு புலன் விசாரணையைத் தொடங்கி, சோதனைக்கான வாரண்டுகளோடு, ஜெயலலிதாவின் வீடுகளிலும் சோதனைகள் நடத்தி, ஏராளமான சாட்சியங்களையும் ஆதாரங்களையும் சேகரித்தார். ஜெயலலிதாவுடன் மற்ற மூவரையும் வழக்கில் சேர்க்க அனுமதி கோரி 22.01.1997 அன்று தனி நீதிமன்றத்தில் விண்ணப்பம் தாக்கல் செய்தார். முறைப்படி வழக்கு விசாரணையை முடித்து ஜெயலலிதா மீதான குற்றப் பத்திரிகை 4.6.1997 அன்று தனி நீதிமன்றமான சென்னை கூடுதல் செசன்ஸ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

சென்னை தனி நீதிபதி 5.6.1997 அன்று குற்றங்களைப் பரிசீலித்து குற்றம் சாட்டப்பட்ட நால்வருக்கும் சம்மன் அனுப்ப உத்தரவிட்டார். குற்றப்பத்திரிகையுடன் ஜெயலலிதா தவிர்த்த மூவருக்கும் அவர்கள் கோரிக்கையின் பேரில் தமிழ் மொழிபெயர்ப்பையும் அளிக்க உத்தரவிட்டார். அந்த வழக்கிலிருந்து விடுவிக்கக்கோரி குற்றஞ்சாட்டப்பட்டோர் தாக்கல் செய்த மனுக்களை 21.10.1997 அன்று தள்ளுபடி செய்து குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்தார்.

ஜெயலலிதா தரப்பினர் மீதான சொத்துக் குவிப்பு வழக்கில் தனி நீதிமன்றம் அமைக்கப்பட்டதையும், தனி நீதிபதி நியமனம் செய்யப்பட்டதையும் எதிர்த்து ஜெயலலிதா தரப்பினர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். இந்திய அரசமைப்புச் சட்டத்தைப் பின்பற்றியே விசாரணைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்பதால், ஜெயலலிதா தரப்பினரின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. அதனை எதிர்த்து ஜெயலலிதா தரப்பினர் உச்சநீதி மன்றத்தில் தாக்கல் செய்த மேல்முறையீடும், 14-5-1999 அன்று நீதிபதிகள் ஜி.டி.நானாவதி, எஸ்.பி.குர்துக்கர் ஆகியோரால் தள்ளுபடி செய்யப்பட்டது. தனி நீதிமன்றம் அமைக்கப்பட்டதும், தனி நீதிபதி நியமனம் செய்யப்பட்டதும் இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி சரியானது என்பது நிலைநாட்டப்பட்டது.

அன்புள்ள,

மு.க.

20-10-2014

(தொடரும்)

3928. ஓய்யாரக் கொண்டையாம்; தாழம்பூவாம்! (2)

உடன்பிறப்பே,

நேற்று தொடங்கி, இன்றைக்கும் தொடருகின்ற இந்தக் கடிதத் தொடர், யாரையும் புண்படுத்துவதற்காக அல்ல! ஆளுங்கட்சி, எதிர்க்கட்சிகளுக்கும் உள்ள ஜனநாயக நெறிமுறைகளை - தவறு என்று தெரிந்தே நடத்தப்படும் எதேச்சாதிகார முறைகள் தங்கு தடையின்றி நிறைவேற்றப்படுவதற்கு ஒரு தடைக் கல்லாக விளங்கிட வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு - ஆளுங்கட்சி, எதிர்க் கட்சி என்ற இரு தரப்பிலும் உள்ளவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காகவும் - பகுத்துணர்ந்து அவர்கள் கடந்துசெல்லும் பாதையை செப்பனிட்டுக் கொள்ள வேண்டுமென்பதற்காகவும் வெளியிடப்படுகிறதே தவிர - வெறுப்புணர்வோடு, பகைமைப் பாராட்டி, பழி நோக்கோடு வெளியிடப்படுபவை அல்ல என்பதையும் - அரசியலில் கண்ணியம் தவறாத கடமை உணர்வுடன் தமக்கு வாக்களித்த மக்களை வாய்மை தவறாமல் வழிநடத்திட ஆளவந்த வர்க்கத்தினர் அகந்தைக்கு இடம் தராமல், அன்புக்கு - அறவழிக்கு - எடுத்துக்காட்டாக விளங்கிடச் சிறிதேனும் பயன்படுமாயின், இந்தக் கடிதத்தை எழுதிடுவதால் நாட்டுக்கு நற்தொண்டாற்றினேன் என்ற நிம்மதியுடன் மேலும் தொடருகிறேன்.

நேற்றைய கடிதத்தில், ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கில் தனி நீதிமன்றம் அமைக்கப்பட்டதும், தனி நீதிபதி நியமனம் செய்யப்பட்டதும் இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி சரியானது என்பது உச்ச நீதிமன்றம்வரை சென்று நிலைநாட்டப்பட்டது என்பதுவரை கூறியிருந்தேன்.

அவ்வாறு அமைந்த தனி நீதிமன்றத்தில், ஆதாரங்கள் பதிவுசெய்யும் நடவடிக்கை 28.12.1998 முதல் 24.8.2000

வரை நடைபெற்றது. அரசு வழக்கறிஞர் தரப்பில் 258 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். வழக்கிற்கான ஆதாரங்களும், பொருள்களும் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த நிலையில் தமிழகத்தில் மீண்டும் 2001 மே மாதம் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, ஜெயலலிதா முதலமைச்சரானார். அ.தி.மு.க. ஆட்சியில் நீதிபதி ஆர். ராஜ மாணிக்கம் முன்னிலையில் ஜெயலலிதா மற்றும் மூன்று பேர் மீதான வழக்கு 2002 நவம்பரில் சென்னையில் தொடங்கியது. ஏற்கனவே ஆஜர்படுத்தப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்ட 76 சாட்சிகளை மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய அ.தி.மு.க. ஆட்சியில் அழைத்தனர். அவர்களில் 64 பேர்; தாங்கள் முன்னர் கூறியவற்றிலிருந்து பின்வாங்கிவிட்டனர். அவர்களை "பிறழ் சாட்சிகள்" என்று சட்டப்படி அறிவிக்க வேண்டிய அரசு வழக்கறிஞர், அவர் அ.தி.மு.க. அரசினால் நியமனம் செய்யப்பட்டவர் என்ற காரணத்தால், அவ்வாறு செய்யவில்லை.

அதைத் தொடர்ந்து குற்றவியல் நடைமுறைச் சட்டம் 313 விதியின்படி, வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் நேரில் ஆஜராகி கேள்விகளுக்குப் பதில் தரவேண்டும். ஆனால் அ.தி.மு.க. ஆட்சியில் குற்றம் சாட்டப்பட்டவர்களை நீதிமன்றத்திற்கு அழைக்காமலேயே, குற்றம் சாட்டப்பட்டவர்களின் வீட்டிற்கே சென்று கேள்வி கேட்டு வாக்குமூலம் பெற்ற கொடுமையும் அனுமதிக்கப்பட்டது. நடைமுறைக்கு முற்றிலும் மாறான இந்த முறைகேட்டினை எதிர்த்து ஆட்சேபித்திருக்க வேண்டிய அரசு வழக்கறிஞர், எந்தவித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை.

அப்போதுதான், தி.மு.க. பொதுச் செயலாளர் பேராசிரியர் அன்பழகனார் அவர்கள் விசாரணையை வேறு மாநிலத்திற்கு இடமாற்றம் செய்யக் கோரி உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் "அந்த விசாரணைக்கு உச்ச நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்தது என்று தெரிவிக்கப்பட்டதால் வழக்கு விசாரணை சிறிது காலத்திற்கு நிறுத்தப்பட்டது." ஆனால், பேராசிரியர் தொடர்ந்த அந்த வழக்கில் 18.11.2003 அன்று அளிக்கப்பட்ட தீர்ப்பில் உச்சநீதி மன்றம் வழக்கு விசாரணையைக் கர்நாடக மாநிலத்திற்கு மாற்றி உத்தரவிட்டது.

அந்த உத்தரவில், உச்ச நீதிமன்ற நீதிபதிகள், எஸ்.என். வரியவா அவர்களும், எச்.கே. சீமா அவர்களும் கூறும்போது,

"ஜெயலலிதா சார்பில் ஆஜரான வழக்கறிஞர் தனது வாதத்தில்; மனுதாரரான பேராசிரியர் அரசியல் எதிரி என்ற முறையில் இந்த வழக்கை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பதாகவும், அரசியல் காரணங்களுக்காகவே இந்த வழக்கு தொடுக்கப்பட்டிருப்பதாகவும் கூறியிருக்கிறார். இந்த வாதம் ஏற்புடையதல்ல. ஜனநாயகத்தில் எதிர்க்கட்சிகளுக்குச் சட்டப் பேரவைக்குள்ளும், வெளியேயும் முக்கியமானதோர் இடம் உண்டு. ஆட்சியிலே இருப்பவர்களைக் கண்காணிக்க வேண்டிய முக்கியப் பொறுப்பு எதிர்க் கட்சிகளுக்கு உண்டு. ஆட்சியிலே உள்ள கட்சியின் தவறான செயல்முறைகளையும், நடவடிக்கைகளையும் எதிர்ப்பதுதான் அவர்களுடைய முக்கியமான ஆயுதமாகும். பொதுவாக மக்களுடைய குறைகளை எதிரொலிக்கக் கூடியவர்களே இவர்கள்தான். அந்த நிலையில் எதிர்க்கட்சி என்ற முறையில் மனுதார் (பேராசிரியர்) உண்மையில் மாநிலத்தின் அரசு நிர்வாகத்திலும், நீதி நிர்வாகத்திலும் அக்கறை உள்ளவராவார். அப்படிப்பட்டவரிடமிருந்து தாக்கல் செய்யப்படுகின்ற மனு, அரசியல் காரணத்திற்காகப் போடப்பட்ட ஒன்று என்று கூறி அலட்சியப்படுத்தப் படக்கூடியதல்ல. இந்த வழக்கில் மனுதார் (பேராசிரியர்) பல நியாயமானதும், ஏற்கத்தக்கதுமான காரணங்களை அதாவது, இதிலே நீதி மறுக்கத்தக்க வகையிலும், ஒருதலைப்பட்சமாகவும் வழங்கக்கூடிய நிலை ஏற்படலாம் என்ற வலுவான ஐயங்களை எழுப்பியிருப்பதை எங்கள் கருத்தின் அடிப்படையில் ஒப்புக் கொள்கிறோம்.

குற்றஞ்சாட்டப்பட்டவர்களுடன் எந்த அளவுக்கு அரசுத் தரப்பினர் இணைந்து செயல்பட்டிருக்கிறார்கள் என்பது தெரிகிறது. ஜெயலலிதா முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, சாதாரணமான ஏதோவொரு காரணத்தைக் கூறி இந்தச் சாட்சிகள் மீண்டும்

அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்கு ஜெயலலிதாவின் அரசினால் நியமிக்கப்பட்ட அரசாங்க வழக்கறிஞர் எந்த எதிர்ப்பும் தெரிவிக்காமல் அனுமதி கொடுத்திருக்கிறார். இது ஒன்றே எந்த அளவுக்கு நீதி இந்த வழக்கிலே திசை திருப்பப்பட்டுள்ளது என்பதை நன்றாக விளக்குகின்றது. அரசின் புதிய வழக்கறிஞர், குற்றவாளிகளோடு (ஜெயலலிதா குழுவினரோடு) இணைந்து செயல்படுவது நன்றாகத் தெரிகிறது. அதன் காரணமாகப் பொதுவாக நீதி கிடைக்காது என்ற ஒரு நம்பத்தகுந்த ஐயம் மக்கள் மனதிலே எழுந்துள்ளது. நீதி திசை திரும்பிச் செல்வது நிச்சயமாகத் தெரிகின்றது. 313வது விதிப்படி நீதிமன்றத்தில் கேள்வி எழுப்பப்படும்போது, ஜெயலலிதா நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகாமல் இருக்க தாக்கல் செய்த தவறான மனுவிற்கு அரசு வழக்கறிஞர் எதிர்ப்பே தெரிவிக்காமல் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தது வருந்தத்தக்கது. நீங்கள் எவ்வளவு பெரியவராக இருந்தபோதிலும், உங்களைவிடச் சட்டம் பெரியது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், நீதியின் பாதையிலே குறுக்கிட்ட செயல்தான் நடைபெற்றுள்ளது. எங்களின் கருத்துப்படி; மனுதாரர் (பேராசிரியர்) நியாயப்பூர்வமான, அர்த்தம் பொதிந்த சந்தேகங்களை எழுப்பி, அதாவது நீதி திசை திரும்பியும் பாரபட்சமாகவும் செல்வதால் எங்களுடைய குறுக்கீடு அவசியம் தேவை என்று கோரிக்கையை வைத்திருக்கிறார்கள் என்பதுதான் உண்மை”

என்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் இருவர், இப்போதல்ல; 2003ஆம் ஆண்டிலேயே அதாவது 11 ஆண்டுகளுக்கு முன்பே, இந்த வழக்கைத் தமிழகத்திலிருந்து பெங்களூருக்கு மாற்றிய போதே, கருத்து தெரிவித்திருக்கிறார்கள் என்பதை, நாம் ஏதோ பொய் வழக்கு போட்டதாக இன்றைக்குப் பழி சுமத்துபவர்கள் தயவுசெய்து எண்ணிப்பார்க்க வேண்டுமென்பதற்காகத்தான், மீண்டும் உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் வார்த்தைகளை இங்கே நினைவூட்டியுள்ளேன்.

உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுகளை ஏற்றுக் கர்நாடக அரசு 19.2.2005 தேதியிட்ட அறிவிப்பின்படி தனி நீதிமன்றம் அமைக்க

அனுமதி அளிக்கப்பட்டதோடு, அரசுத் தரப்பு வழக்கறிஞராக மூத்தவழக்கறிஞர் பி.வி. ஆச்சார்யா நியமிக்கப்பட்டார்.

வழக்கு விசாரணை தொடர்ந்தது பற்றிய ஆவணங்களைப் பார்க்கும்போது, குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சிறப்பு நீதிமன்றத்தில் "மனுக்களைத் தொடர்ந்து மனுக்கள்" என்ற வகையில் பல்வேறு காரணங்களைக் குறிப்பிட்டுத் தாக்கல் செய்தார்கள். வழக்கு நேர்மையாகவும், நியாயமாகவும் நடைபெற வேண்டுமென்ற அடிப்படையில், அவ்வாறு செய்வதற்கு அவர்களுக்குள்ள உரிமை காரணமாக அனுமதிக்கப்பட்டது. பெங்களூரு தனி நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட ஒவ்வொரு உத்தரவையும் எதிர்த்துக் கர்நாடக மாநில உயர் நீதிமன்றத்திற்கும், அதன் பிறகு உச்ச நீதிமன்றத்திற்கும் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சென்றதன் காரணமாக இந்த வழக்கு விசாரணையில் மிகுந்த கால தாமதம் ஏற்பட நேர்ந்தது என்று நீதிபதி குன்ஹா தனது தீர்ப்பில் தெரிவித்திருக்கிறார்.

இந்நிலையில் அரசு சிறப்பு வழக்கறிஞர் 45 சாட்சிகளைக் குறுக்கு விசாரணைக்காக அழைத்தார். அப்போது சாட்சிகளின் வாக்குமூலங்களின் ஆங்கில மொழிபெயர்ப்புகள் அனைத்தையும் ரத்து செய்துவிட்டு, புதிதாக சரியான மொழிபெயர்ப்பு செய்யவும், அனைத்து சாட்சிகளையும் வரவழைத்து, புதிதாக வாக்குமூலங்கள் பெறவும் கோரித் தனி நீதிமன்றத்தில் 14-7-2010 அன்று ஜெயலலிதா மனு தாக்கல் செய்தார்.

இந்த மனுவை நிராகரித்துத் தனி நீதிமன்றம் 22.7.2010 அன்று ஆணை பிறப்பித்தது. அதை எதிர்த்து ஜெயலலிதா கர்நாடக உயர் நீதிமன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் மேல் முறையீடு செய்தார்.

குற்றப் புலனாய்வுச் சட்டம் 313ன் கீழ் ஜெயலலிதா மீதான விசாரணை 20.10.2011 அன்று தொடங்கியது. அவர் 1337 கேள்விகளுக்குப் பதிலளித்த பின்னர் 23.11.2011 அன்று எழுத்துப்பூர்வமான வாக்குமூலத்தையும் தாக்கல் செய்தார். சசிகலா மீதான விசாரணை பாதி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, குறிப்பிடப்படாத மற்றும் தாக்கல் செய்யப்படாத ஆவணங்களை வழங்கக் கோரி 29.2.2012ல் தனி நீதிமன்றத்தில் சசிகலா மனுத்

தாக்கல் செய்தார். 3.4.2012 அன்று அந்த மனு நிராகரிக்கப்பட்டது. அதை எதிர்த்துச் சசிகலா கர்நாடக உயர்நீதி மன்றத்தை அணுகினார். அந்த மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து அவர் உச்சநீதி மன்றத்தை அணுகினார். இந்த மனுவை விசாரித்த உச்சநீதிமன்றம், குறிப்பிட்ட ஆவணங்களை 21 நாட்களுக்குள் சசிகலா, சுதாகரன் மற்றும் இளவரசியும் பார்வையிட அனுமதி அளித்து 27.9.2012 அன்று தீர்ப்பளித்தது. அதன்பின் சசிகலா தனக்கு அளிக்கப்பட்ட மற்ற கேள்விகளுக்குப் பதிலளித்தார். சுதாகரன் மற்றும் இளவரசியும் விசாரிக்கப்பட்டனர். சுதாகரன் எழுத்துப்பூர்வமான வாக்குமூலம் ஒன்றை 21.1.2013 அன்று தாக்கல் செய்தார்.

ஜெயலலிதா மற்றும் சசிகலாவின் வழக்கறிஞர்கள் 5.8.2013 முதல் 14.8.2013 வரை வாதம் செய்தனர். இந்தக் காலகட்டத்தில், அரசு வழக்கறிஞருக்கு உதவிசெய்ய அனுமதிகோரி பேராசிரியர் அவர்கள் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார். அந்த விண்ணப்பம் ஏற்கப்பட்டு, வாதங்களை எழுத்துப்பூர்வமாகத் தெரிவிக்க அனுமதி அளிக்கப்பட்டது. அரசுசிறப்பு வழக்கறிஞருக்குத் தேவைப்படும் அளவுக்கு உதவி செய்யும்படியும் கூறப்பட்டது.

அரசு சிறப்பு வழக்கறிஞர் தனது வாதத்தை 23.8.2013 அன்று தொடங்கினார். அவர் வாதம் செய்து கொண்டிருந்த நிலையில், அரசு சிறப்பு வழக்கறிஞராகப் பணியாற்றி வந்த பவானி சிங் அவர்களைக் கர்நாடக அரசு திரும்பப் பெற்று அரசாணை வெளியிட்டது. இந்த உத்தரவை எதிர்த்து, பவானிசிங் அவர்களே அரசு வழக்கறிஞராக நீடிக்க வேண்டுமென்று கோரி ஜெயலலிதா தரப்பினர் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

ஜெயலலிதா தரப்பினரின் அந்த மனுவை விசாரித்த உச்சநீதிமன்றம், கர்நாடக அரசின் உத்தரவு வழக்கை விரைவில் முடிக்க உதவுமா என்பதைப் பரிசீலிக்குமாறு கர்நாடக உயர்நீதி மன்றத்துக்கு அதை அனுப்பிவைத்தது.

இதற்கிடையே செப்டம்பர் 2013 இறுதியில் ஓய்வு பெற இருந்த தனி நீதிபதியின் பதவிக் காலம் நீட்டிக்கப்பட்டது. எனினும் 31.10.2013ல் அவர் ஓய்வு பெற்றதால், நீதிபதி, திரு. குன்ஹா அவர்கள் தனி நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.

இவர் பதவி ஏற்ற பின்னர் சென்னை தனி நீதிமன்றப் பொறுப்பில் இருந்த பொருள்களும், விலையுயர்ந்த சொத்துக்களும் பெங்களூருக்குக் கொண்டுவரப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு 7.3.2014 முதல் மீண்டும் வாதங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த நிலையில் லெக்ஸ் பிராபர்ட்டி மேம்பாட்டு லிமிடெட், மெடோ அக்ரோ பார்ம்ஸ் பி.லிட், ரிவர்வே அக்ரோ புராடக்ட்ஸ் பி.லிட்., சிக்னோரா பிசினஸ் எண்டர்பிரைசஸ் பி.லிட்., ராம்ராஜ் அக்ரோ மில்ஸ் லிட். ஆகிய 5 நிறுவனங்கள், சென்னை சிறு வழக்குகள் நீதிமன்றத் தலைமை நீதிபதி தங்கள் சொத்துக்களை முடக்கிப் பிறப்பித்த உத்தரவை நீக்கக் கோரி தாக்கல்செய்து நிலுவையில் உள்ள வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளிக்கும்படி, வேண்டுமென்றே பிரதான வழக்கினைத் தாமதப்படுத்த வேண்டுமென்று எண்ணத்தோடு, தனித்தனியாக மனுக்களைத் தாக்கல் செய்தனர். இந்த வழக்குகளின் வாதங்கள் முக்கிய வழக்குடன் சேர்த்து ஏக காலத்தில் கேட்கச் சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டது. அதன்படி 3வது முறையாக வாதம் தொடங்கியது. சிறப்பு நீதிமன்ற நீதிபதி குன்ஹா பின்வருமாறு தனது தீர்ப்பிலே கூறுகிறார் :-

"அரசு சிறப்பு வழக்கறிஞர் விரிவாக எடுத்துவைத்த விவாதத்தை நான் கேட்டேன். அரசுத் தரப்பு சாட்சிகளின் விசாரணைகளைப் படித்தபின் அவர் தனது வாதத்தைத் தொகுத்து வழங்கினார். எதிரிகளின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் பி. குமார் வழக்கின் ஒவ்வொரு அம்சம் குறித்தும் விவரித்து 80 மணி நேரம் விரிவாக விவாதம் செய்தார். புலனாய்வு அதிகாரி புலனாய்வு நடத்திய முறையையே கடுமையாக எதிர்த்த அவர், அதில் பல தவறுகள் நடைபெற்றதாகக் குறிப்பிட்டார்.

அரசு சிறப்பு வழக்கறிஞர் அளித்த சுருக்கமான பதில் விவாதத்தில், தேவையான நடைமுறைகளின் படியே வழக்கு தொடரப்பட்டதாகவும் சென்னை உயர் நீதிமன்ற உத்தரவின்படியே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும், அதில் சட்ட விரோதம் எதுவும் இல்லை என்றும் அனைத்து ஆவணங்களும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதாகவும், இந்த நிலையில் குற்றவாளி ஆட்சேபணை எதையும் எழுப்ப முடியாது என்றும் தெரிவித்தார். பொதுப் பணித்துறைப் பொறியாளர்கள் செய்த

மதிப்பீடுகள் சரியானவை என்றும் குற்றவாளிகளால் தாக்கல் செய்யப்பட்ட பெரும்பாலான ஆவணங்கள் 25.6.97ல் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டபின்தான் உருவாக்கப்பட்டவை என்றும் கூறினார்.

பெங்களூரு தனி நீதிபதி, திரு. குன்ஹா அவர்கள் தனது தீர்ப்பில் தொடர்ச்சியாக இவைகளைக் குறிப்பிட்டபோதிலும், தீர்ப்பின் இறுதிப் பகுதியில்தான் தனது முடிவினைச் சுருக்கமாகத் தொகுத்துக் குறிப்பிட்டிருக்கிறார். அந்தச் சுருக்க வரலாற்றை முதலிலே தெரிவிக்க விரும்புகிறேன்.

"ஜெயலலிதா, தமிழக முதலமைச்சராக இருந்த 1991-1996 காலகட்டத்தில் அவருடைய வருமானம் 9 கோடியே 91 இலட்சத்து 5 ஆயிரத்து 94 ரூபாயாக இருந்தது. ஆனால், அந்த வருமானம் எந்த வழியில் வந்தது என்பதற்குக் குற்றம் சாட்டப்பட்டவர்களிடம் உரிய ஆவணங்கள் இல்லை. அதுபற்றி அவர்களால் நியாயமான கணக்கு வழக்குகளைச் சமர்ப்பிக்க முடிய வில்லை. தீர்ப்பு அளிக்கப்படும் இந்த நேரத்தில், தங்களுக்குத் தண்டனை வழங்குவதற்கு முன்பாக நீதிமன்றம் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய விஷயங்களாகக் குற்றவாளிகள் தரப்பினர் சில தகவல்களைத் தந்துள்ளனர்.

முதல் குற்றவாளியான ஜெயலலிதா, இந்த வழக்கு தன்னுடைய அரசியல் எதிரிகளால், அரசியல் காரணங்களுக்காகவும் தன்னைப் பழிவாங்குவதற்காகவும் போடப்பட்டது என்றும், வழக்கு தொடுக்கப்பட்டபோது, தன்னுடைய வயது 48 என்றும், அதன்பின் 18 வருடங்களுக்கு வழக்கு இழுத்தடிக்கப்பட்டு உள்ளது என்றும், இப்போது தன்னுடைய வயது 66 என்றும், இந்த இடைப்பட்ட காலத்தில் வழக்கின் காரணமாக, தீராத மன உளைச்சலுக்கு ஆளாகி, தன்னுடைய உடல்நலம் கடுமையாகப் பாதிக்கப்பட்டு நீரிழிவு நோய், உயர் ரத்த அழுத்தம், மூச்சுத் திணறல் போன்ற நோய்களால் அவதிப்படுவதாகவும், அதனால் நீதிமன்றம் தீர்ப்புச் சொல்லும்போது, தனக்கு இருக்கும் இந்தப் பிரச்சினைகளையும் கவனத்தில்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

குற்றவாளி தரப்பினர் என்ன சொன்னார்கள் என்பதைப் பற்றி இவ்வாறு சுருக்கமாகத் தெரிவிக்கும் நீதிபதி அவர்கள், தனது தீர்ப்பாக என்ன சொல்கிறார் என்றால்;

"இந்த நீதிமன்றம், 'நிரஞ்சன் ஹேமச்சல் - மகாராஷ்டிரா அரசு' என்ற வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின் சாரத்தை நினைவுபடுத்த விரும்புகிறது. அந்தத் தீர்ப்பில்,

> "ஊழலையும் அதன் தாக்கத்தையும் எடைபோடும் போது, குற்றம் செய்தவரின் தகுதியை வைத்து அதை எடை போடக் கூடாது. அப்படிச் செய்யவும் முடியாது. ஏனென்றால், ஊழல் என்பது ஒரு தேசத்தின் வளர்ச்சி. தொலைநோக்குத் திட்டம் என தேசத்தின் முன்னேற்றத்துக்கான அனைத்து அம்சங்களையும் சிதைத்து, தேசத்தைப் பாழாக்கக்கூடியது. அது பொருளாதார வளர்ச்சியைச் சீர்குலைத்துக் குழிதோண்டிப் புதைத்துவிடும்' என்று உச்ச நீதிமன்றம் நிரஞ்சன் ஹேமச்சல் வழக்கில் குறிப்பிட்டு உள்ளது. அதைக் கருத்தில் கொண்டே இந்த வழக்கின் தீர்ப்பை நோக்கி நாம் போக வேண்டும். ஏனென்றால், அதிகாரத்தில் உள்ளவர்களின் அதிகார மீறல், பொறுப்பில் உள்ளவர்களின் பேராசை காரணமாகத் தவறான வழிமுறைகளில் பொருளீட்டும் வேட்கை போன்றவற்றுக்கு இந்த வழக்கு மிகச் சிறந்த உதாரணம். அதிகாரத்தில் உள்ளவர்களின் இதுபோன்ற செயல்பாடுகள் ஜனநாயக நாட்டின் கட்டமைப்பைத் தகர்த்துவிடும்"

என்று ஏற்கனவே உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு ஒன்றினைக் கோடிட்டுக் காட்டியதோடு மேலும் தனது தீர்ப்பிலே என்ன கூறினார் என்பதை நாளை தெரிவிக்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

21-10-2013

3929. ஓய்யாரக் கொண்டையாம்; தாழம்பூவாம்! (3)

உடன்பிறப்பே,

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா பற்றிப் பெங்களூரு சிறப்பு நீதிமன்ற தனி நீதிபதி தன்னுடைய தீர்ப்பில் எழுதியிருப்பதைச் சுட்டிக்காட்டுவதாக நேற்றைய கடிதத்தின் இறுதியில் தெரிவித்திருந்தேன். நீதிபதி குன்ஹா தனது தீர்ப்பில்,

“பொது ஊழியர் (அதாவது முதலமைச்சராக) ஆவதற்கு முன்பாக ஜெயலலிதா காட்டிய வருமானம் 2 கோடி ரூபாய். ஜெ. - சசி என்டர்பிரைசஸ் நிறுவனம், ஜெயா பப்ளிகேஷன்ஸ் ஆகியவற்றின் வருமானங்களும் இந்த இரண்டு கோடி ரூபாய்க்குள் அடங்கி விடுகிறது. ஆனால், முதலமைச்சர் பொறுப்பில் இருந்த ஐந்து ஆண்டுகளில் அவர்களின் வருமானம் உயர்ந்துள்ள வேகத்தை நம்மால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியவில்லை. இவர்கள் தரப்புக்குச் சொந்தமான பண்ணை 900 ஏக்கர் பரப்பை உடையது. அதை வெறும் ஏழு கோடி ரூபாய்க்கு வாங்கி உள்ளதாகக் கணக்கு சமர்ப்பித்துள்ளனர். அரசு நிர்ணயிக்கும் குறைந்தபட்ச விலையில்கூட இப்படி வாங்க முடியாது. அதாவது வெறும் 10,000 ரூபாய்க்கு ஒரு ஏக்கர் நிலம் என்ற வகையில் வாங்கி உள்ளனர். இப்படிப் பார்த்தால் ஏழு கோடி ரூபாயில் ஒரு முழு கிராமத்தையே வாங்கிச் சொந்தமாக்கிக் கொள்ள முடியும். இவர்களின் நிறுவனங்கள் மூன்று ஆயிரம் ஏக்கர் நிலங்களைத் தங்களுக்குச் சொந்தமாக வைத்துள்ளனர். ஆனால், அந்த 3 ஆயிரம் ஏக்கர் நிலம் அவர்களுடைய எந்த வருமானத்தில் வாங்கப்பட்டது என்பதை அவர்களால் சொல்ல முடியவில்லை. அவற்றின் மதிப்பு எல்லாம் அரசு நிர்ணயித்த விலைப்படி கணக்கிடப்பட்டு, இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது. வெளிச்சந்தை மதிப்பீட்டின்படி கணக்கிட்டால், இவற்றின் மொத்த மதிப்பு நாம் கற்பனையில்கூட கணக்குப் போட முடியாத அளவுக்கு மிகவும் அதிகமாகும்.

ஜெயலலிதா இப்படிச் சொத்துகளை வாங்குவதற்கு மற்றவர்கள் உதவி செய்துள்ளனர். புதிது புதிதாக நிறுவனங்களைத் தொடங்கியும் செயல்படாத நிறுவனங்களின் வங்கிக் கணக்குகளைப் பயன்படுத்தியும் ஜெயலலிதா சொத்துகளைச் சேர்க்க மற்றவர்கள் உதவியுள்ளனர். அந்த நிறுவனங்களில் யாரும் எந்த முதலீடும் செய்யவில்லை. அவற்றின் பங்குகளை யாரும் வாங்கவுமில்லை. அவற்றில் வர்த்தக ரீதியாக எந்தக் காரியமும் நடக்கவில்லை. ஆனால், நிறுவனங்கள் மட்டும் இவர்களுக்குச் சொந்தமாக உள்ளன. அவற்றின் வங்கிக் கணக்குகளைப் பயன்படுத்தி, வருமானத்திற்கு அதிகமாகச் சேர்த்த சொத்துகளை அந்தக் கணக்கில் வரவுவைத்து, அவற்றைத் தங்களுக்கு உரியதாக்கிக் கொள்ளும் காரியம் மட்டுமே நடந்துள்ளது. வாதப் பிரதிவாதங்களில் இவை எல்லாம் எவ்விதச் சந்தேகத்துக்கும் இடமின்றி நிரூபணமாகி உள்ளன. அதாவது சொத்துகளை வாங்கிக் குவிப்பதற்குத் தேவைப்படும் பணப் பரிமாற்றங்கள் மட்டுமே இந்த வங்கிக் கணக்குகளில் நடந்துள்ளன.

தமிழ்நாடு அரசாங்கத்தின் (முதலமைச்சர் என்ற) மிகப் பெரிய பொறுப்பில் இருந்துகொண்டு, ஜெயலலிதா இந்தக் குற்றங்களில் ஈடுபட்டது, குற்றத்தின் கனத்தை அதிகரிக்கிறது. ஏன் அதிகரிக்கிறது என்றால், 'மன்னன் எவ்வழியோ மக்கள் அவ்வழி' என்று நீதிமொழி அறிவுறுத்துவதை இங்கு உணர வேண்டும். அந்த வகையில் பார்த்தால், ஜெயலலிதா தனக்குக் கீழ் இருந்த அரசு இயந்திரங்கள், கட்டமைப்புகள், அவற்றைச்சார்ந்த பொதுமக்கள் என ஒட்டுமொத்த சமூகத்துக்கும் தீமை பயக்கும் தவறான வழியைக் காண்பித்துள்ளார்.

இப்போது இவர்களுக்குத் தண்டனை வழங்கும்போது, 'பி.சுப்பையா ஏள கர்நாடக அரசு'க்கும் இடையில் நடந்த வழக்கு ஒன்றில் கர்நாடக உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் சாரத்தை நினைவுபடுத்த விரும்புகிறேன். அந்தத் தீர்ப்பில், 'உயர்ந்த பொறுப்பில் இருப்பவர் தவறு செய்யும்போது, அதில் சலுகை எதுவும் காட்டப்படுமானால், அது மொத்த சமூகத்துக்குமே கேடாக முடியும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், தன் மீது கருணைகாட்ட வேண்டும் என்பதற்காகக் குற்றவாளிகள் சொன்ன காரணங்கள் எதுவும் ஏற்கத்தக்க நியாயமான காரணங்கள் அல்ல. வழக்கு 18 ஆண்டுகள் நடந்தது

என்பதில் சந்தேகம் இல்லை. அதற்குக் காரணம் யார் என்பதையும் இப்போது ஆராயவேண்டிய அவசியம் இல்லை. ஆனால், நீதிக்குச் சமாதி கட்ட முயற்சிகள் நடந்ததால் தான் இந்த வழக்கு பெங்களூருக்கு மாற்றப்பட்டது. அதன் பிறகு நிறைய நேரத்தை வீணடித்தவர்கள் குற்றம் சாட்டப்பட்டவர்களே!. அதை யாரும் மறுக்க முடியாது. இந்த வழக்குக்கு எந்த வகையிலும் பயன்தராத விஷயங்களை முன்வைத்தும், எவ்விதத் தொடர்பும் இல்லாத சட்ட நடைமுறைகளைச் சொல்லியும் தாமதம் செய்து, நீதிமன்றத்தின் நேரத்தை வீணடித்தனர்.

மேலும், குற்றத்தின் தீவிரம், சொத்துகளின் அளவு, அவற்றைச் சம்பாதிக்கக் குற்றவாளிகள் பின்பற்றிய வழிமுறைகள் ஆகியவற்றின் அடிப்படையில்தான் தண்டனையைத் தீர்மானிக்க முடியும். இந்த வழக்கில் குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனையாக 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை அளிக்க சட்டத்தில் இடம் உள்ளது. சட்டம் அனுமதித்துள்ள அதிகபட்ச தண்டனையில் பாதிக்கும் மேலாகவாவது இவர்களுக்கு வழங்கினால்தான், இந்த வழக்கில் நீதி நிலைநாட்டப்பட்டதாகப் பொருள்படும். அந்த வகையில் ஒவ்வொரு குற்றவாளிக்கும் 4 ஆண்டுகளை சிறைத் தண்டனையாக விதிக்கிறேன்”

என்று நீதிபதி குன்ஹா அவர்கள் தனது தீர்ப்பிலே ஆணித்தரமாக எழுதியிருக்கிறார்.

அது மாத்திரமல்ல; ஜெயலலிதாவின் மேற்பார்வையில், அவர் விரும்பியபடியே, அவருக்காக, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் தவறான வழிகளில் பணம் மற்றும் சொத்துகளை வாங்கினர் என்பதையும் தன்னுடைய தீர்ப்பில் குன்ஹா விளக்கியிருக்கிறார். அதுபற்றிய விவரம் வருமாறு :-

“1996-ம் ஆண்டு இறுதியில் ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோரிடம் இருந்த சொத்துகளின் கையிருப்பு மதிப்பு 55 கோடியே 2 லட்சத்து, 48 ஆயிரத்து 215 ரூபாய். அந்தக் காலகட்டத்தில் இவர்கள் 8 கோடியே 49 லட்சத்து 6 ஆயிரத்து 833 ரூபாய் செலவுசெய்துள்ளார்கள். ஆக, மொத்தம் 63 கோடியே 51 லட்சத்து 55 ஆயிரத்து 48 ரூபாய். இவர்களால் வரவுக் கணக்கு காட்டப்பட்டவை 9 கோடியே 91 லட்சத்து 5 ஆயிரத்து 94 ரூபாய் மட்டுமே. இதன்படி பார்த்தால் கணக்குக் காட்டப்படாத தொகை

53 கோடியே 60 லட்சத்து 49 ஆயிரத்து 954 ரூபாய் என்ற முடிவுக்கு இந்த நீதிமன்றம் வருகிறது!

கணக்கில் காட்ட முடியாத இந்தத் தொகையை ஜெயலலிதாவும் மற்றவர்களும் தங்களின் பூர்வீகச் சொத்தாகக் காட்ட முடியாது. ஏனென்றால், ஜெயலலிதா 1991-ஆம் ஆண்டுக்கு முன்பு தன்னுடைய சொத்துக்களாக அதிகாரப்பூர்வமாகக் காட்டியுள்ள தொகை இரண்டு கோடி ரூபாய்தான். இதை அரசுத் தரப்பு மிகத் தெளிவாக நிரூபித்துள்ளது. சசிகலாவும் இளவரசியும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆவணங்களே அதற்குப் போதுமானவையாக உள்ளன. அரசுத் தரப்பு சாட்சி ஆர். கிருஷ்ணமூர்த்தியின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்களின்படி, சசிகலாவின் வருவாய் ஆதாரம் அவருடைய கணவர் நடராஜன் மட்டும்தான். நடராஜன் அரசுப் பணியில் இருந்தவர். அவர் மக்கள் தொடர்பு அதிகாரியாக இருந்தபோது அவருடைய சொந்த உபயோகத்திற்காக மோட்டார் சைக்கிள் வாங்குவதற்கான முன்பணமாக 3 ஆயிரம் ரூபாய் தமிழக அரசிடமிருந்து கடனாகப் பெற்றுள்ளார். அதன் பிறகு 1987-ம் ஆண்டு அரசாங்கத்தில் வாங்கிய லோன் மூலமாக ஒரு வீட்டை வாங்கி உள்ளார். அதற்குத் தெளிவான ஆவணங்கள் உள்ளன. அவற்றின்படி நடராஜன் சசிகலா தம்பதியரின் சொத்து மதிப்பு அவ்வளவுதான். அதன்பிறகு 1988-ஆம் ஆண்டில் நடராஜன் தன்னுடைய அரசு வேலையை ராஜினாமா செய்துவிட்டார். இதன்மூலம் கணவர் நடராஜனின் வகையில் சசிகலாவுக்கு மிகப்பெரிய சொத்துகள் எதுவும் வந்து சேரவில்லை என்பது ஊர்ஜிதமாகிறது. சசிகலாவுக்கு அவருடைய தந்தை வழியில் ஏதாவது சொத்துகள் வந்திருக்க வாய்ப்பிருக்கிறதா என்று பார்த்தால் அதுவும் இல்லை. சசிகலாவுக்கு அவருடைய பூர்வீகச் சொத்துகள் எனப் பெரிதாக எதுவும் இல்லை. இந்த இடத்தில் மிக முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், ஜெயலலிதாவுடன் சேர்ந்து போயஸ் கார்டனில் நிரந்தரமாகத் தங்க ஆரம்பித்தபிறகுதான் சசிகலா வருமானவரி கணக்கே தாக்கல்செய்ய ஆரம்பித்துள்ளார்.

மாவட்டப் பதிவாளர் தங்கவேலு அளித்த சாட்சியம், ஆவணங்களின்படி ஜெ.எஸ். ஹவுசிங் டெவலப்மென்ட், ஜெ.ஜெ. லீசிங், கிரீன் ஃபார்ம் ஹவுஸ், ஜெ. ஃபார்ம் ஹவுஸ், ஜெ. ரியல் எஸ்டேட், ஜெயா கான்ட்ராக்டர்ஸ் அண்டு பில்டர்ஸ், மெட்டல்

கிங், மார்பிள் மார்வெல்ஸ் போன்ற நிறுவனங்கள் ஜெயலலிதா முதலமைச்சர் பதவியில் இருந்த காலகட்டத்தில் ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோரால் தோற்றுவிக்கப்பட்டு உள்ளன. ஒவ்வொரு நிறுவனத்திலும் இவர்கள் இரண்டு பேராகவோ அல்லது மூன்று பேராகவோ அல்லது அவர்கள் அனைவருமாகவோ பங்குதாரர்களாக இருந்துள்ளனர். மேலும், இந்த நிறுவனங்களைப் பதிவுசெய்ய தன்னுடைய மேலதிகாரி எஸ்.அய்யர் (இவர் தற்போது அ.தி.மு.க. அரசால் மாநிலத் தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்டுப் பணியாற்றி வருகிறார்) தனக்கு உத்தரவிட்டதாகவும் அவருக்கு முதலமைச்சர் தொலைபேசியின் வாயிலாக உத்தரவிட்டதாகவும் மாவட்டப் பதிவாளர் தங்கவேலு தன்னுடைய சாட்சியத்தில் தெரிவித்துள்ளார்.

சுதாகரன் நடத்திய 'சூப்பர் டூப்பர் டி.வி' நிறுவனம் தொடங்க இளவரசியும் சுதாகரனும் கையெழுத்திட்ட விண்ணப்பத்தைக் கொடுத்துள்ளனர். அதை வணிகவரித் துறை அதிகாரி கண்ணனின் சாட்சியம் உறுதிப்படுத்தி உள்ளது. அதுபோல, வணிகவரித் துறை அதிகாரி, சுந்தர்ராஜ் அளித்த சாட்சியத்தின்படி, ஆஞ்சநேயா பிரின்டர்ஸ் நிறுவனத்துக்கான விண்ணப்பத்தில் சசிகலாவும் சுதாகரனும் கையெழுத்திட்டு விண்ணப்பித்து உள்ளனர். அதுபோல, மார்பிள்ஸ் மார்வெல்ஸ் நிறுவனத்துக்கான பதிவைப்பெற அளித்த விண்ணப்பத்தில் சசிகலாவும் சுதாகரனும் கையெழுத்துப் போட்டுள்ளனர். இதன் மூலம் இந்த நிறுவனங்களைத் தொடங்கி நடத்தியவர்கள் இவர்கள்தான் என்பது சந்தேகத்துக்கு இடமின்றி உறுதியாகியுள்ளது.

ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் ஏற்று நடத்திய நிறுவனங்கள் அனைத்திலும் இவர்கள் யாரும் முதலீடாக எந்தத் தொகையையும் செலுத்தவில்லை. பங்குகளை விற்றும் முதலீடுகளைத் திரட்டவில்லை. நிறுவனத்தில் வந்த லாபம் இவர்கள் நால்வரைத்தவிர வேறு எந்தக் கணக்குக்கும் போகவில்லை. சசிகலாவுக்கும் இளவரசிக்கும் ஆடிட்டராக இருந்த பாலாஜி அளித்த வாக்குமூலம் மிகமிக முக்கியமானது. அவர் கூற்றுப்படி, இந்த நிறுவனங்கள் எந்தக் காலகட்டத்திலும் எதையும் உற்பத்தி செய்யவில்லை. பொருள்களை வாங்கிவிற்கவும் இல்லை. ஆனால், நிறுவனங்களின் கணக்குகளில் மட்டும் பணப் பரிவர்த்தனைகள் தொடர்ந்து நடந்துகொண்டே இருந்தன என்று

குறிப்பிட்டு உள்ளார். இதையடுத்து அந்த நிறுவனங்களின் வங்கிக் கணக்குகள் மற்றும் பணப் பரிவர்த்தனைகள் பற்றிய ஆதாரங்களை அரசுத் தரப்பு நீதிமன்றத்தில் அளித்துள்ளது. அப்படிச் சமர்ப்பிக்கப்பட்ட வங்கிப் பரிவர்த்தனை விவரங்களைப் பார்க்கும்போது மலைப்பாகவும் ஆச்சர்யமாகவும் இருக்கிறது. மூலதனமே இல்லாத ரப்பர் ஸ்டாம்ப் நிறுவனங்களும், எந்த வியாபாரத்திலும் ஈடுபடாத நிறுவனங்களும் ஒவ்வொரு முறையும் பல ஆயிரங்களிலும் லட்சங்களிலும் பணப்பரிவர்த் தனைகளைச் செய்து காட்டியுள்ளன. இப்படி பணத்தைச் சுற்றி வளைத்துப் போட்டு எடுப்பதற்காகவே, 1991-க்கு முன்புவரை 12 வங்கிக் கணக்குகளை மட்டுமே வைத்திருந்த ஜெயலலிதா வும் சசிகலாவும், அதன்பிறகு 52 வங்கிக் கணக்குகளைத் தொடங்கியுள்ளனர்.

வடக்குக் கடற்கரை சப்-ரிஜிஸ்ட்ரார், தோட்டக்கலைத் துறை அதிகாரி ராதாகிருஷ்ணன் ஆகியோர் சாட்சியம் மிக முக்கியமானவை. அவர்கள் அளித்த சாட்சியத்தில், அவர்கள் மேலதிகாரிகளின் உத்தரவுப்படி ஜெயலலிதாவின் போயஸ் கார்டன் வீட்டுக்கு அழைக்கப்பட்டு, விதிமுறைகளைப் பின்பற்றாமல், பத்திரங்களைப் பதிவுசெய்துள்ளனர். அவர்கள் பதிவுசெய்த நிலங்களின் பத்திரங்கள் அனைத்தும் அடிமாட்டு விலைக்கு, பத்திரப்பதிவு செய்துகொடுத்துள்ளனர். மிகவும் அதிர்ச்சியான விஷயம் என்னவென்றால், அதில் ஆறு பத்திரங்கள் யார் வாங்குகிறார் என்ற விவரம் இல்லாமல், பெயர்கூட குறிப்பிடாமல் பதிவுசெய்யப்பட்டு உள்ளன. இப்போது அதை ஒவ்வொன்றாக யாருடைய அனுபவப் பாத்யதையில் இருக்கின்றன என்று பார்த்தால் அவை அனைத்தும் ஜெயலலிதாவுக்காக வாங்கப்பட்டுள்ளன என்பது தெரியவந்துள்ளது.

'நமது எம்.ஜி.ஆர்' வங்கிக்கணக்கில் பல்வேறு தேதிகளில் 423 முறை (ஒவ்வொரு முறையும் பல ஆயிரக்கணக்கில் மற்றும் லட்சங்களில்) வரவுவைக்கப்பட்ட பணத்துக்குக் கணக்கே இல்லை. அதுபோல ஜெயா பப்ளிகேஷன்ஸ், வினோத் வீடியோ விஷன், மஹா சுப்புலெட்சுமி கல்யாண மண்டபம், ஆஞ்சநேயா பிரின்டர்ஸ் போன்றவற்றில் வரவுவைக்கப்பட்ட பல கோடி ரூபாய்க்கு எந்த விளக்கமும் ஜெயலலிதா தரப்பால் சொல்ல முடியவில்லை. இதுதொடர்பாக ஜெயலலிதா தரப்பு வைத்துள்ள

பேலன்ஸ் ஷீட், லாப - நட்டக் கணக்கு விவரங்கள் அனைத்தும் போலியாகத் தயாரிக்கப்பட்டு இருப்பதும், ஆடிட்டர்கள் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் நிரூபிக்கப்பட்டு உள்ளன. ஆனால், பணத்தை வங்கிகளில் போட்டதும், அவற்றை வேறு கணக்குகளுக்கு மாற்றச் சொன்னதும் சசிகலா என்பது அரசுத் தரப்பு சாட்சி ஜெயராமன் மூலம் உறுதிபடத் தெரியவந்துள்ளது.

ஜெயராமன் போயஸ் கார்டனில் வேலைபார்த்த கார் டிரைவர். அவரிடம் ஒவ்வொரு முறையும் பை மற்றும் சூட்கேஸில் லட்சக்கணக்கான ரூபாய்களை வைத்து, நிரப்பப்பட்ட வங்கி "சலான்"களைக் கொடுத்து அவற்றின் அடிப்படையில் வரவுவைக்க சசிகலாதான் உத்தரவு பிறப்பித்துள்ளார். அதை ஜெயராமன் செய்துள்ளார். அதாவது அந்தப் பணத்தை, இவர்கள் நடத்தும் நிறுவனத்தின் கணக்குகளில் வரவுவைத்து, அவற்றை நிறுவனத் தின் பணமாக மாற்றி, அதன்பிறகு நிறுவனத்தில் இருந்து தங்கள் பெயரில் உள்ள வங்கிக் கணக்குக்கு மாற்றியுள்ளனர். சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் ஜெயலலிதாவுக்காகவே இப்படிப்பட்ட வேலைகளில் ஈடுபட்டுள்ளனர்"

உடன்பிறப்பே, இவையெல்லாம், இந்த விவரங்கள் எல்லாம் நீதிபதி குன்ஹா அவர்கள் எழுதியுள்ள தீர்ப்பிலே கூறப்பட்டவையாகும். மொத்தம் 1,136 பக்கங்களில் அவர் தீர்ப்பு எழுதிய போதிலும், அதிலே முக்கியமானவைகளை மட்டுமே எடுத்து உனக்கு நான் தெரிவித்துள்ளேன்.

அன்புள்ள,

மு.க.

22-10-2014

3930. ஓய்யாரக் கொண்டையாம்; தாழம்பூவாம்! (4)

உடன்பிறப்பே,

நீதிபதி குன்ஹா கடந்த 27ஆம் தேதி வெளியிட்ட தீர்ப்பில் உள்ள முக்கியமான கருத்துகளைத் தொகுத்து கடந்த மூன்று தொடர் கடிதங்களில் நான் தெரிவித்திருப்பதை நீ படித்திருப்பாய். தொடர்ந்து நீதிபதி குன்ஹா அவர்கள் மேலும் தனது தீர்ப்பில்,

- "ஜெயா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தைப் பொறுத்தவரை சசிகலாவுக்கு ஜெயலலிதா பவர் கொடுத்து விட்டார். அதனால், அந்த நிறுவனத்தில் நடந்த எதுவும் ஜெயலலிதாவுக்குத் தெரியாது' என்ற தற்காப்பு வாதத்தை ஜெயலலிதாவின் வழக்கறிஞர் முன்வைத்தார். இந்த வாதத்தை ஏற்க முடியாது. ஏனென்றால், ஜெயலலிதா சசிகலாவுக்கு 'பவர் ஆஃப் அட்டர்னி' கொடுத்திருந்தாலும் இல்லை என்றாலும், ஜெயா பப்ளிகேஷன்ஸில் ஜெயலலிதாவும் சசிகலாவும் சமமான அதிகாரம் படைத்த பங்குதாரர்கள் என்பது மாற்ற முடியாதது. ஜெயலலிதா சசிகலாவுக்குக் கொடுத்த பவர் என்பது, சசிகலா சுதந்திரமாக ஜெயா பப்ளிகேஷன்ஸில் நிர்வாகத்தைக் கவனித்துக்கொள்ளவும், அதன் மூலமாகத்தான் மறைமுகமான உரிமையாளராக இருப்பதற்காகவுமே. அதாவது தன்னுடைய ஏஜென்டாக சசிகலாவை அவர் நியமித்து உள்ளார். ஆனால், அந்த நிறுவனத்தின் மூலம் நடைபெற்ற பணப் பரிமாற்றங்கள் உள்ளிட்ட அனைத்தும் ஜெயலலிதாவின் ஒப்புதலுக்குப் பிறகே நடைபெற்றுள்ளன. அதற்கான ஆதாரங்களை அரசுத்தரப்பு கொடுத்துள்ளது. ஜெயாபப்ளிகேஷன்ஸில் நடைபெற்ற பரிவர்த்தனைகள் அனைத்தையும்

ஜெயலலிதாவுக்குத் தெரியாமல் சசிகலாவோ அல்லது சசிகலாவின் பங்கு இல்லாமல் ஜெயலலிதாவோ செய்யவில்லை. அந்த நிறுவனத்துக்கு வந்த பணம், அந்த நிறுவனத்தில் இருந்து வேறு வங்கிக் கணக்குகளுக்கு மாற்றப்பட்ட பணம் என அனைத்தும் இருவருக்கும் தெரிந்தே நடந்துள்ளது.”

“தன்னுடைய வீட்டில் வசித்த சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் இதுபோன்ற வேலைகளில் ஈடுபட்டது தனக்குத் தெரியாது என்று ஜெயலலிதா சொல்வதை ஏற்கவே முடியாது. ஒரு மாநிலத்தின் முதலமைச்சர், தன்னுடைய வீட்டில் இருக்கும் தன்னுடைய சகாக்களின் நடவடிக்கை பற்றி எதுவும் தெரியாது என்று சொன்னால் அதை எப்படி ஏற்க முடியும்? அதுபோல அந்த மூன்று பேரும் தன்னுடைய வீட்டில் வசிக்கவே இல்லை என்பதை ஜெயலலிதாவினால் மறுக்கவும் முடியாது. வாக்காளர் பட்டியலில் சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோருக்கு 36, போயஸ் கார்டன் முகவரிதான் இருக்கிறது. மேலும் ஜெயலலிதாவிடம் நடத்திய விசாரணையில், சசிகலாவும் இளவரசியும் என்ன காரணத்துக்காக அங்கு வசிக்கிறார்கள் என்று கேட்கப்பட்டபோது, அதற்கு பதில் சொல்ல விரும்பவில்லை என்று ஜெயலலிதா பதில் அளித்துள்ளாரே தவிர, அவர்கள் தன்னுடன் வசிக்கவே இல்லை என்று கூறவில்லை. மேலும், சசிகலாவும் இளவரசியும் ஜெயலலிதாவுக்கு ரத்த பந்தமோ அல்லது வேறுவகையில் சொந்தமோ இல்லாதபோது அவர்கள் ஏன் தன்னுடன் வசிக்கிறார்கள் என்பதை ஜெயலலிதாவால் தெளிவுபடுத்த முடியவில்லை.”

“இந்தக் கேள்விக்குச் சசிகலாவும் இளவரசியும்கூடப் பதில் சொல்லவில்லை. இத்தனைக்கும் அவர்களுக்குத் தனியாகக் குடும்பம் இருக்கிறது. இருவரும் திருமணமானவர்கள். அவர்கள் ஏன் தங்களுடைய குடும்பத்தைப் பிரிந்து ஜெயலலிதாவுடன் இத்தனை ஆண்டுகளாக ஒரே வீட்டில் வாழ வேண்டும்? அதற்கு என்ன காரணம்? ஜெயலலிதாவுக்கு வந்த பரிசுப் பொருள்கள், ஜெயலலிதாவின் பெயரைப் பயன்படுத்தித் தவறான வழிகளில் சம்பாதித்த பணம் ஆகியவை அனைத்தும் சசிகலாவின் வழியாகவே வந்துள்ளன. அவற்றை ஜெயலலிதா வீட்டுக்குக் கொண்டு சேர்க்கும் வேலைக்காக இளவரசி பயன்படுத்தப்பட்டுள்ளார்.”

"சசிகலாவும் இளவரசியும் நடத்திய நிறுவனங்கள் பற்றித் தனக்கு எதுவும் தெரியாது என்றும் ஜெயலலிதாவால் சொல்ல முடியாது. ஏனென்றால், சசி என்டர்பிரைசஸ் நிறுவனத்துக்கு ஜெயலலிதா ஒரு கோடி ரூபாய் கொடுத்துள்ளார். மேலும், அவர்கள் நிறுவனம் வாங்கிய வங்கிக் கடன்களுக்கு எல்லாம் ஜெயலலிதா தன்னுடைய பெயரில் "ஷ்யூரிட்டி செக்" கொடுத்துள்ளார். இதன்மூலம் அவர்கள் அனைவரும் கூட்டாகச் சேர்ந்து, தாங்கள் என்ன செய்கிறோம் என்பதை முழுவதுமாக அறிந்தே செய்துள்ளனர். ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோரின் பெயர்களில் உள்ள சொத்துகள் எப்படி வந்தன என்பதற்கு இவர்களால் கணக்குச் சொல்ல முடியவில்லை என்பது சரியாக நிரூபிக்கப்பட்டுள்ளது" என்று நீதிபதி குன்ஹா தனது தீர்ப்பில் விளக்கியுள்ளார்.

வருமானத்துக்கு அதிகமாகச் சேர்த்த சொத்துகள் மட்டுமல்லாமல், வருமானத்துக்கு அதிகமாகச் செய்த செலவுகளும்தான் ஜெயலலிதாவுக்கு இன்று பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. பெங்களூரு சொத்துக்குவிப்பு வழக்கில், வருமானத்துக்கு அதிகமாகச் செய்த செலவுகளுக்கு அடிப்படை உதாரணமாகத் திகழ்கிறது ஜெயலலிதாவின் அன்றைய வளர்ப்பு மகன் சுதாகரனின் ஆடம்பரத் திருமண அத்தியாயம்.

ரசீதுகள், வருமான வரி அலுவலகத்தில் தாக்கல் செய்யப்பட்ட கணக்குகள், சாட்சிகள், பொதுப்பணித் துறை அதிகாரிகளின் மதிப்பீடுகள் என சுதாகரனின் ஆடம்பரத் திருமணத்தை ஜெயலலிதா நடத்திய விதத்துக்கு எதிராக ஏராளமான ஆதாரங்களைத் தாக்கல் செய்தது தமிழ்நாடு லஞ்ச ஒழிப்புத் துறை. ஆனால், அவற்றை இல்லை என்று மறுப்பதற்கு ஜெயலலிதா தரப்பிடம் எவ்வித ஆதாரமும் இல்லை. அதை நீதிபதி குன்ஹா அவர்கள் தன்னுடைய தீர்ப்பில் விவரித்துள்ள விதத்தைப் பார்க்கலாமா?

"ஜெயலலிதாவின் வளர்ப்பு மகன் சுதாகரனுக்கும் நடிகர் சிவாஜி கணேசனின் மகள் (சாந்தி) வழிப் பேத்தி சத்தியலட்சுமிக்கும் ஜூலை 7, 1995 அன்று திருமணம் நடைபெற்றது. அப்போது பந்தல்கள் அமைப்பதற்கு 5 கோடியே 21 லட்சத்து 23 ஆயிரத்து 532 ரூபாயும் உணவு, தண்ணீர், தாம்பூலம் கொடுத்த செலவு 1 கோடியே 14 லட்சத்து 96 ஆயிரத்து

125 ரூபாயும் நான்கு லட்சம் ரூபாய்க்கு வெள்ளித் தட்டுகளும் அழைப்பிதழ்களைத் தபாலில் அனுப்பிய வகையில் 2 லட்சத்து 24 ஆயிரம் ரூபாயும் செலவாகியுள்ளது. இந்தத் திருமணத்துக்காகச் செய்யப்பட்ட அனைத்து செலவுகளும் சாட்சியங்களின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.”

“இந்த வழக்கின் 181-வது சாட்சி தங்கராஜன். பொதுப்பணித் துறை உதவிப் பொறியாளரான இவர்தான், சுதாகரன் திருமணச் செலவுகளை மதிப்பிட்டவர். திருமணத்துக்குப் பந்தல் அமைத்த ஆர்க்கிடெக்ட் விஜயசங்கர், ஆர்ட் டைரக்டர் தோட்டா தரணி, கோபிநாத், தோட்டா தரணியின் உதவியாளர்கள் ரமேஷ், சீனிவாசன், மின்விளக்கு அலங்காரம் செய்த எலெக்ட்ரீசியன் பி.எஸ்.மணி, சையத் முகமத் ஆகியோரைச் சந்தித்து ஆதாரங்களைத் திரட்டி இந்த மதிப்பீட்டைச் செய்துள்ளனர். திருமணம் நடைபெற்றபோது, பொருள்களின் விலை சந்தை மதிப்பில் என்ன இருந்ததோ, அந்த விலையை வைத்தே கணக்கிட்டு உள்ளனர். அதன்படி, சுதாகரன் திருமணச் செலவாக இவர்கள் கணக்கிட்ட தொகை ரூ. 5 கோடியே 91 இலட்சம்”.

வழக்கின் சாட்சிகளை எதிர்த்து வாதிட்ட ஜெயலலிதா தரப்பு வழக்கறிஞர் பி.குமார், “சுதாகரனின் திருமணம் நடைபெற்று இரண்டரை ஆண்டுகள் கழித்துத் தயாரிக்கப்பட்ட இந்த மதிப்பீடுகள் ஏற்றுக்கொள்ளத் தக்கவை அல்ல. அதை மதிப்பீடு செய்துள்ள சாட்சிகள் சுதாகரனின் திருமணத்தை நேரில் பார்க்காதவர்கள். அங்கு அமைக்கப்பட்டு இருந்த வேலைப்பாடுகள், பந்தல்கள் பற்றி இவர்களுக்கு என்ன புரிதல் இருக்க முடியும்? எனவே, இந்தச் சாட்சிகளை ஏற்றுக்கொள்ளக் கூடாது” என்று வாதிட்டார்.

வழக்குச் சாட்சியாகப் பொதுப்பணித் துறையின் மூத்தப் பொறியாளர் முத்துச்சாமி விசாரிக்கப்பட்டார். இவர், அரசு நிகழ்ச்சிகளில் பந்தல் அமைக்கும் பணிகளை மேற்பார்வை செய்பவர். முதலமைச்சர் ஜெயலலிதாவின் உதவிச் செயலாளராக இருந்த ஐ.ஏ.ஏஸ் அதிகாரி ஜவஹர் பாபு, முத்துச்சாமியைத் தொலைபேசியில் அழைத்து, “முதலமைச்சர் வீட்டில் நடைபெற உள்ள திருமணம் குறித்து உங்களிடம் பேச வேண்டும். எனவே, போயஸ் கார்டன் வீட்டுக்கு வாருங்கள்” என்று கூறி உள்ளார். அதன்படி முத்துச்சாமி மறுநாள் ஜவஹர் பாபுவை

சந்தித்து, சசிகலாவிடம் அறிமுகமாகியுள்ளார். இதையடுத்து சசிகலா, அவரிடம் 'சுதாகரன் திருமணத்துக்கான பந்தல் அமைக்கும் வேலைகளை எல்லாம் நீங்கள் கவனித்துக் கொள்ளுங்கள்' என்று கூறியுள்ளார். முத்துச்சாமியின் சாட்சிப்படி, பந்தல்கள் அமைப்பதற்கு விஜயசங்கர் வரைபடம் தயாரித்துக் கொடுத்துள்ளார்.

"இதையடுத்து எம்.ஆர்.சி நகரில், ஐந்து முக்கிய பந்தல்கள் 70' x 50' அளவில் போடப்பட்டு உள்ளன. தூத்துக்குடி ராஜப்பநாடார் அதை செய்து கொடுத்துள்ளார். தென்னை ஓலைகளால் வேயப்பட்ட பந்தல்கள் 60' x 450' என்ற அளவில் எட்டு அமைக்கப்பட்டு உள்ளன. வி.ஐ.பி-களுக்கான உணவுப் பந்தலை 60' x 200' என்ற அளவில் மன்னார்குடி ராஜகோபால் என்பவர் அமைத்துக் கொடுத்துள்ளார். சமையலறை பந்தல்கள் 45' x 1,356' என்ற அளவில் குமரேசன் நாடார் என்பவர் அமைத்துக் கொடுத்துள்ளார். திருமணமேடை, மணமக்கள் ஏ.சிகள், அவர்களுக்கான ஓய்வறைகள், கழிப்பறைகள் போன்றவற்றை எத்திராஜ் அமைத்துக் கொடுத்துள்ளார். இதற்கான செலவுகள் அனைத்தும் ஜெயலலிதாவின் குடும்பம் ஏற்றுக்கொண்டதாகக் கூறி உள்ளார். வி.ஐ.பி-களுக்கான அமரும் இடம், அதில் உள்ள வேலைப்பாடுகள், அவர்களின் உணவறைகள் போன்றவற்றை ஆர்ட் டைரக்டர் கோபிநாத் செய்து கொடுத்துள்ளார். தண்ணீர் வசதிக்காக 5 போர்வெல்களைப் பால்தாசன் என்பவர் அமைத்துக் கொடுத்துள்ளார். அதுபோக, லாரிகள் மூலமாகவும் தண்ணீர் சப்ளை நடந்துள்ளது. சி.எஸ்.சந்திரசேகரன் என்பவர் மின் இணைப்பு கொடுத்துள்ளார். இதற்காக 2-10 கிலோ வாட் ஜெனரேட்டர்களையும் 4 மொபைல் ஜெனரேட்டர்களையும் அவர் பயன்படுத்தி உள்ளார். இந்த வேலைகள் நடந்து கொண்டிருந்தபோது, 'ஜெயலலிதாவும் சசிகலாவும் அவற்றை மேற்பார்வையிட்டனர்' என்றும் முத்துச்சாமி சாட்சியம் அளித்துள்ளார்."

மணமகளின் தந்தை நாராயணசாமி இவர்களுக்குக் கொடுத்த தொகை போக மீதித் தொகை அனைத்தையும் ஜெயலலிதா கொடுத்துள்ளார். அதுவும் தன்னுடைய பெயரில் செக் கொடுத்துள்ளார். அவை அனைத்தும் வங்கியில் இருந்து பெறப்பட்ட ஆதாரங்களின் மூலம் நிரூபிக்கப்பட்டு உள்ளன.

பால்பாபு என்ற வட இந்திய அலங்கார நிபுணருக்கு போயஸ் கார்டனில் இருந்து, 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செக் கொடுக்கப்பட்டு உள்ளது. அடையாறு விநாயகர் கோயிலில் இருந்து எம்.ஆர்.சி நகர் வரையிலான பாதையைச் செப்பனிட்டு இரண்டு பக்கமும் விளக்குகளால் அலங்காரம் செய்த சுப்பிரமணி மற்றும் சாமி ஆகியோருக்கு ஜெயலலிதா தன்னுடைய பெயரில் செக் கொடுத்துள்ளார்.

இப்படி... பந்தல் தொடங்கி, சுதாகரன் திருமணத்தில் நடைபெற்ற அனைத்து வேலைகளையும் மேற்பார்வை பார்த்த பொதுப்பணித் துறையின் மூத்த பொறியாளர் முத்துச்சாமியிடம் விசாரித்துத்தான் பொறியாளர் தங்கராஜ், பந்தலுக்கான செலவு மற்றும் இதர விஷயங்களை மதிப்பிட்டுள்ளார். அதுவும், திருமணம் நடந்த 1995-ம் ஆண்டில் அந்தப் பொருள்கள் சந்தையில் என்ன விலைக்கு விற்றதோ அந்த விலையிலேயே மதிப்பிட்டுள்ளார்.

சுதாகரனின் திருமணம் பற்றி ஜெயலலிதா நேரில் ஆஜராகி சாட்சி சொன்ன போது, அந்தத் திருமணத்திற்காக, தான் எதுவும் செலவழிக்கவில்லை என்றும், வருமான வரித்துறைக்கு அளித்த பதிலிலும் அதனைத் தெளிவுபடுத்தியிருப்பதாகவும் கூறினார். ஆனால் ஜெயலலிதா 1996-97ம் ஆண்டு தாக்கல் செய்த வருமான வரி கணக்கில் திருமணச் செலவுகள் என்று குறிப்பிட்டு 25 லட்சத்து 98 ஆயிரத்து 521 ரூபாய் என்றும், ரொக்கமாக 3 லட்சத்து 94 ஆயிரத்து 240 ரூபாய் செலவு செய்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். ஜெயலலிதாவின் ஆடிட்டர் வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்ட ஆவணங்களின்படி, சுதாகரனின் திருமணத்துக்கு ஆன செலவுகளாக அவர்கள் வருமானவரித் துறையினருக்குத் தாக்கல் செய்த கணக்கில் தெளிவாக 12 இலட்சத்து 50 ரூபாய் பத்திரிகைகள் மற்றும் விளம்பரங்களுக்குச் செலவு செய்ததாகக் குறிப்பிட்டுள்ளனர்.

திருமணத்துக்கான எல்லா செலவு களையும் மணமகள் வீட்டாரே செய்தார்கள் என்றால், பந்தல், விளக்கு அலங்காரம், கார்கள், அழைப்பிதழ் செலவுகளுக்கு ஜெயலலிதா கையெழுத்துப் போட்டு "செக்" கொடுத்தது ஏன் என்ற இந்தக் கேள்விகளுக்கு ஜெயலலிதா தரப்பால் பதில் சொல்ல முடியவில்லை என்றும் நீதிபதி குன்ஹா தெரிவித்திருக்கிறார். அந்தத் திருமணத்திற்கான வேலைகளைச் செய்த பலரும் இந்த வழக்கில்

சாட்சியமளித்திருக்கிறார்கள். அனைத்தையும் நான் கூறிக் கொண்டே போக விரும்பவில்லை.

உடன்பிறப்பே, "ஒய்யாரக் கொண்டையாம்; தாழம்பூவாம்" என்ற தலைப்பினான இந்தக் கடிதத் தொடர் நான்கு நாட்களாக வந்து கொண்டிருக்கிறது. பெங்களூரு சிறப்பு நீதிமன்றத் தனி நீதிபதியின் தீர்ப்பு இன்னும் விரிவானது. அந்தத் தீர்ப்பு பற்றி முதலிலே நான் தெரிவித்தவாறு கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லைதான்! ஆனால் என்னைக் கருத்துத் தெரிவிக்கத் தூண்டியவர்கள் ஆளுங்கட்சியினரான அ.தி.மு.க.வினரும்; சில நாளேடுகளும்தான். ஆம், ஜெயலலிதாவுக்கு நிபந்தனை ஜாமீன் உச்ச நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட நாளன்று, ஆளுங்கட்சியின் அதிகாரபூர்வ நாளேட்டில் வந்த விளம்பரங்களின் வாசகங்கள் - ஏதோ தவறாக நீதிமன்றம் தீர்ப்பளித்துவிட்டது - ஜெயலலிதா மீது பொய் வழக்கு போடப்பட்டுவிட்டது என்றெல்லாம் செய்த பிரச்சாரம் காரணமாகத்தான் சில உண்மைகளைத் தெளிவுபடுத்த வேண்டும் என்பதற்காகவே இந்த விரிவான தொடர் கடிதம்! உதாரணமாக இன்றைய கடிதத்தை மட்டும் எடுத்துக் கொண்டால் கூட, ஜெயா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தில் நடந்த எதுவும் தனக்குத் தெரியாது என்றும், தன்னுடைய வீட்டில் வசித்த சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் இதுபோன்ற வேலைகளில் ஈடுபட்டது தனக்குத் தெரியாது என்றும், சசிகலாவும் இளவரசியும் நடத்திய நிறுவனங்கள் பற்றித் தனக்கு எதுவும் தெரியாது என்றும், சுதாகரன் திருமணத்திற்காக தான் எதுவும் செலவழிக்கவில்லை என்றும் ஜெயலலிதா சொன்ன அடுக்கடுக்கான பொய்களை எல்லாம் ஆதாரத்தோடு நீதிபதி குன்ஹா அவர்கள் தனது தீர்ப்பில் நிரூபித்திருக்கிறார். அவைகளை வெளிப்படுத்த வேண்டுமென்பதைத் தவிர நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல யாரையும் புண்படுத்த வேண்டுமென்பது என்னுடைய நோக்கமல்ல என்பதை மீண்டும் ஒருமுறை தெளிவாக்கிட விரும்புகிறேன்.

அன்புள்ள,

மு.க.

24-10-2014

3931. ஓய்யாரக் கொண்டையாம்; தாழம்பூவாம்! (5)

உடன்பிறப்பே,

ஓரிரு "உடன்பிறப்பு" கடிதங்களின் வாயிலாக "குன்ஹா" அவர்களின் தீர்ப்பினைச் சுருக்கி உனக்கு விளக்கிடலாம் என்று எண்ணினேன். ஆனால் அது நான்கு மடல்கள் வரை விவரித்த போதிலும் முடிவுக்கு வந்தபாடில்லை. இருந்தாலும் இன்னும் ஒன்றிரண்டு கடிதங்களுடன் முடித்துவிட எண்ணியுள்ளேன். இதுவரை நான் விளக்கியிருப்பதில் இருந்தே ஜெயலலிதா சொத்துக் குவிப்பு பற்றிய உண்மை விவரங்களை நீ புரிந்து கொண்டிருப்பாய்; நீ புரிந்து கொண்டதை நாட்டு மக்களுக்கு விளக்கிப் புரிய வைக்கும் பணியிலே ஈடுபட வேண்டும். ஏனென்றால் ஒரு பெண்மணிக்குச் சிறைத் தண்டனை என்றதும், தாய்மார்கள் அனுதாபப்படுவது சகஜம்தான்! குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு நீதிபதியாலோ, நம்மாலோ, எந்தவிதமான தீங்கும் இழைக்கப்பட்டு விடவில்லை; ஏற்பட்ட பாதகம் எல்லாம் அவர்களாகவே தங்களுக்குத் தாங்களே தேடி உருவாக்கிக் கொண்டதுதான்; இதில் மற்றவர்களைக் குறை சொல்வதற்கு ஏதுமில்லை என்ற உண்மையைப் புரியவைக்கும் முயற்சியிலே ஈடுபட்டாக வேண்டும். அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் - பக்கம் பக்கமாக விளம்பரம் கொடுத்தால்தான் தங்களுடைய பதவி நிலைக்கும் என்று பதவியிலே இருப்போரும் - மீண்டும் பதவி கிடைக்கும் என்று பதவி பறிக்கப்பட்டோரும் - ஏதாவது ஒரு பதவி கிடைக்காதா, அதன்மூலம் மேலும் வசதி வாய்ப்புகளைப் பெருக்கிக்கொள்ள முடியாதா என்று ஏங்கித் தவிப்போரும் நம்மைத் தாக்கி வெளியிட்ட விளம்பரங்களும் அறிக்கைகளும்தான் இந்த நீண்ட கடிதத் தொடரினை எழுதுவதற்கான காரணம் என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வழக்கு விசாரணையைத் தாமதப்படுத்தி இழுத்தடிக்க எப்படியெல்லாம் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் செயல்பட்டார்கள் என்பதை அவர்கள் 2010ஆம் ஆண்டிலிருந்து மட்டும் 130 முறை வாய்தா வாங்கியதிலிருந்தே தெரிந்துகொள்ள முடியும். மேலும் ஓர் உதாரணமாக, ஜெயலலிதா மீதான சொத்துக்குவிப்பு வழக்கில், தீர்ப்பு வெளிவரவிருந்த நேரத்தில், தங்களது சொத்துக்களையும் இந்த வழக்கில் இணைத்திருப்பதாகவும், வழக்கிலிருந்து தங்களை விடுவிக்க வேண்டுமென்றும் கோரி ஐந்து நிறுவனங்கள் சிறப்பு நீதிமன்றத்தில் திடீரென்று தனித்தனியாகக் கடந்த மார்ச் மாதத்தில் தாக்கல் செய்த மனுவினை விசாரித்த சிறப்பு நீதிபதி குன்ஹா அவர்கள், மனுவினைத் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்த நேரத்தில், மூல வழக்கிற்குத் தடை விதிக்கக் கோரியதற்குக் கண்டனம் தெரிவித்து, "நீதிமன்ற நேரத்தை வீணாக்கியதற்காக" பத்தாயிரம் ரூபாய் அபராதமும் விதித்து 14-3-2014 அன்று உத்தரவிட்டார்.

அந்தத் தீர்ப்பை எதிர்த்து வழக்கம் போல, லெக்ஸ் பிராபர்ட்டீஸ் சார்பில் கர்நாடகா உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்தபோது, கர்நாடக உயர் நீதிமன்ற நீதிபதி திரு. சத்யநாராயணா அவர்கள் 29-4-2014 அன்று அளித்த தீர்ப்பில், அந்த மனுவைத் தள்ளுபடி செய்ததோடு, மேலும் நீதிமன்ற நேரத்தை வீணாக்கும் வகையில் செயல்பட்டதற்காக தனி நீதிமன்றம் விதித்த ரூ.10 ஆயிரம் அபராதம் குறைவானது என்பதால் அதனை 10 மடங்கு உயர்த்தி ரூ.1 லட்சம் அபராதம் விதித்து, அபராதத் தொகையை 15 நாட்களில் செலுத்தவேண்டுமென்று உத்தரவிட்டார். அந்தத் தீர்ப்பை எதிர்த்து, லெக்ஸ் பிராப்பர்டீஸ் நிறுவனம் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தது. அதனை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள் சௌகான், செல்லமேஷ்வர், இக்பால் ஆகியோர், சொத்துக் குவிப்பு விசாரணைக்குத் தடை விதிக்குமாறு லெக்ஸ் பிராப்பர்டீஸ் நிறுவனம் முன்வைத்த கோரிக்கையை நிராகரிப்பதாக 8-5-2014 அன்று தெரிவித்தனர். மேலும் வழக்கு விசாரணையைத் தடுத்திடும் வகையில் செயல்படுவதாக அந்த நிறுவனத்திற்கு உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கண்டனம் தெரிவித்தனர்.

லெக்ஸ் பிராப்பர்டீஸ் நிறுவனத்தைப் போலவே, சொத்துக் குவிப்பு வழக்கிலிருந்து மெடோ ஆக்ரோ பார்ம் மற்றும் ரிவர்வே

ஆக்ரோ பார்ம் ஆகிய கம்பெனிகளை விடுவிக்க வேண்டுமென்று தாக்கல் செய்த மனுவை விசாரணை நடத்த வேண்டும், அதுவரை மூல வழக்கு விசாரணைக்குத் தடை விதிக்க வேண்டுமென்று அந்தக் கம்பெனிகள் சார்பில் தனித்தனியாகத் தாக்கல் செய்யப் பட்ட மனுக்கள் மீது விசாரணை நடத்திய நீதிபதி குன்ஹா, மூலவழக்கிற்குத் தடை விதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை நிராகரித்ததுடன் நீதிமன்ற நேரத்தை வீணாக்கியதற்காக இரண்டு கம்பெனிகளுக்கும் தலா ஐந்தாயிரம் ரூபாய் அபராதம் விதித்தார்.

பெங்களூரு தனி நீதிமன்றத்தில் நடைபெற்ற சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெ.தரப்பு வாதங்கள் ஒவ்வொன்றுக்கும் பதிலளித்த நீதிபதி ஜான் மைக்கேல் டி.குன்ஹா, ஜெயலலிதா மீது வழக்கு தொடர ஆளுநர் உத்தரவிட்டது சரியே என்றும், வழக்கை விசாரிக்க நல்லம்ம நாயுடுவுக்கு உத்தரவிடப்பட்டதில் சட்டவிரோதம் எதுவும் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

“வாக்குமூலங்கள் தீயநோக்கத்துடன் பயன்படுத்தப் பட்டதாக வாதாடிய ஜெ. வழக்கறிஞரால், விசாரணையின்போது, ஒரு வாக்குமூலத்தைக்கூட தன்னுடைய குற்றச்சாட்டுக்கு வலுசேர்க்கும் வகையில் எதிர்க்க முடியவில்லை” என்றும் நீதிபதி குன்ஹா தெரிவித்துள்ளார்.

இந்த வழக்கு கர்நாடகத்துக்கு மாற்றப்பட்ட பிறகு, ஜெயலலிதா, பெங்களூருவில் உள்ள கர்நாடக உயர்நீதிமன்றத்தில் தன்மீது சென்னை தனி நீதிபதியின் 5.6.1997 தேதியிட்ட உத்தரவின் பேரில் தொடரப்பட்ட குற்ற நடவடிக்கைகள் முழுவதுமே செல்லாதவை என்று கூறி ரத்து செய்ய வேண்டும் எனக்கேட்டு, மனு ஒன்றைத் தாக்கல் செய்தார். அந்த மனு 10.3.2010ல் பிறப்பிக்கப்பட்ட கர்நாடக உயர் நீதிமன்ற உத்தரவின் மூலம் தள்ளுபடி செய்யப்பட்டது. அதை எதிர்த்து அவர் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவும் 19.3.2010 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. எனவே ஜெயலலிதா தரப்பினர் மீது தொடரப்பட்ட குற்ற நடவடிக்கைகள் சட்ட விரோதமானவை என்று கூறிய வாதம் தள்ளுபடி செய்யப்படுகிறது என்று நீதிபதி குன்ஹா தெரிவித்திருக்கிறார்.

நீதிபதி குன்ஹா மாத்திரமல்ல; 28-3-2005 அன்று ஜெயலலிதா உட்பட நான்கு பேர் மீதான சொத்துக் குவிப்பு

வழக்கு விசாரணை பெங்களூரில் இரண்டாண்டுகளுக்குப் பிறகு தொடங்கியபோதும் ஜெயலலிதா தனி நீதிமன்றத்தில் ஆஜராகாமல் ஜெயலலிதா தரப்பில் ஒரு மாதம் அவகாசம் கேட்டார்கள். அப்போதைய சிறப்பு நீதிபதி பச்சாபுரே அவகாசம் தர மறுத்து, 18-4-2005க்கு வழக்கை ஒத்திவைத்தார். அந்த 18ஆம் தேதியன்றும் ஜெயலலிதா, சசிகலா ஆஜராகவில்லை. ஜெயலலிதாவின் வழக்கறிஞரும் ஆஜராகவில்லை. குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கான மூத்த வழக்கறிஞரின் உதவியாளர், மூத்த வழக்கறிஞர் உடல் நலம் சரி இல்லாமல் மருத்துவமனையிலே இருப்பதாகக் கூறினார். "அவர் வராமல் போகட்டும், குற்றஞ்சாட்டப்பட்ட 4 பேரும் எங்கே? குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஆஜராகாமல் இருப்பதை வைத்தே தீர்ப்பு வழங்கி விடுவேன்" என்று கண்டிப்புடன் எச்சரிக்கை செய்தார் நீதிபதி. விசாரணையை 2005, மே 9ந்தேதிக்கு ஒத்திவைத்த நீதிபதி அன்று ஜெயலலிதா, சசிகலா உட்பட அனைவரும் கண்டிப்பாக கோர்ட்டில் ஆஜராக வேண்டும் என்று உத்தரவிட்டார்.

9-5-2005 அன்று வழக்கு விசாரணைக்கு வந்தபோது, ஜெயலலிதா தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் கே.டி. துளசி நீண்ட நாள் அவகாசம் கேட்டார். அப்போது நீதிபதி பச்சாபுரே கடும் கோபமடைந்து, "வருகிற 16ந்தேதி இறுதி அவகாசம் தருகிறேன். அதற்கு மேல் அவகாசம் தர மாட்டேன்" என்றும், "அன்று ஜெயலலிதா, சசிகலா உட்பட நான்கு பேரும் கண்டிப்பாக ஆஜராக வேண்டும்" என்றும் உத்தரவிட்டார். அவரது வழக்கறிஞர்கள் அன்றைய தினமும் வழக்கைத் தள்ளிவைக்க வேண்டுமென்று கூறியபோது, நீதிபதி பச்சாப்புரே என்ன சொன்னார் தெரியுமா?

"நீண்ட அவகாசம் கேட்பதை ஏற்க முடியாது. வழக்கை தினந்தோறும் நடத்தவுள்ளேன். இப்படி அடிக்கடி வாய்தா கேட்டால் எப்படி வழக்கை விரைவாக நடத்துவது? இரண்டரை ஆண்டுகளாக வழக்கை வாய்தா கேட்டு இழுத்தடித்துவிட்டு தற்போது மீண்டும் வாய்தா கேட்பது சரிதானா? சுப்ரீம் கோர்ட்டு இந்த வழக்கை விரைவாக நடத்த வேண்டுமென்று எனக்கு உத்தரவிட்டு உள்ளது. கடந்த ஆறு மாதமாக இந்த வழக்கில் எந்த விசாரணையும் நடக்கவில்லை. நான் தனியாகக் கடந்த ஆறு மாதமாக நீதிமன்றத்தில் உட்கார்ந்து வருகிறேன். தனிச் சிறையில் அடைக்கப்பட்டு உள்ளது போல உணருகிறேன்"

என்று நீதிபதி பச்சாப்புரே மனம் நொந்து அப்போதே சொன்னார். உடன்பிறப்பே, இந்த வழக்கு விசாரணையைத் தாமதப் படுத்துவதற்காக ஒவ்வொரு கட்டத்திலும், ஒவ்வொரு விதமான உத்தியை ஜெயலலிதா தரப்பினர் கையாண்டு, நீதிமன்ற நடவடிக்கைகளைக் கேலிக் கூத்தாக்கிட முயற்சித்தனர் என்பது இந்த விவரங்களிலிருந்து உனக்குத் தெளிவாகப் புரியுமென்று கருதுகிறேன்.

ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கின் விசாரணை அதிகாரியாக இருந்த நல்லம்ம நாயுடுவுக்குப் பிறகு, அ.தி.மு.க. ஆட்சியில் நியமிக்கப்பட்டு, இதனை விசாரித்த டி.எஸ்.பி. சம்பந்தம் என்பவர், சட்டப்படி ஆற்றிட வேண்டிய கடமையை மறந்து, குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு ஆதரவாக ஆஜராகி சாட்சியம் அளித்தார். ஒரு விசாரணை அதிகாரியை அதே வழக்கில் குற்றவாளிகள் தரப்புச் சாட்சியாக விசாரிப்பது என்பது இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டத்திற்கு எதிரானது. இந்தக் குறைந்தபட்ச சட்ட நடைமுறை கூட இந்த வழக்கிலே பின்பற்றப்படவில்லை. கடைசி சாட்சியாக (99வது சாட்சி) டி.எஸ்.பி. சம்பந்தத்தை ரகசியமாகக் கொண்டு வந்து நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கச் செய்தார்கள். லஞ்ச ஒழிப்புத் துறையைச் சேர்ந்த இந்த அதிகாரி, அரசு அதிகாரி என்ற முறையில் ஆற்ற வேண்டிய அடிப்படைக் கடமையைக் குழி தோண்டிப் புதைத்துவிட்டு, குற்றம் சாட்டப்பட்டவர்களின் தரப்பு சாட்சியாக விசாரிக்கப்பட்டு, சாட்சி ஆவணங்களைக் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு ஆதரவாகக் குறிப்பிடவும் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதே பொறுப்பு விசாரணை அதிகாரி சம்பந்தம்தான், அரசு வழக்கறிஞரை மீறி, நேரடியாகச் சிறப்பு நீதிபதிக்கு இந்த வழக்கு தொடர்பாக மறு விசாரணை செய்யப்பட வேண்டுமென்று முன்பு கடிதம் எழுதியவர். இதுகுறித்துக் கர்நாடக உயர் நீதிமன்றத்தில் நாம் தாக்கல் செய்த புகார் மனுவை, கர்நாடக உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு, டி.எஸ்.பி. சம்மந்தத்தின் கோரிக்கையை நிராகரித்ததுடன், தமிழகத்தின் அன்றைய முதல்வர் செல்வி ஜெயலலிதா உத்தரவுப்படி செயல்படும் பொறுப்பு விசாரணை அதிகாரி சம்பந்தத்தையும் கண்டித்தது. உடன்பிறப்பே, தமிழகத்தின் ஆட்சி அதிகாரம் கைக்குவந்தவுடன், இந்த வழக்கு விசாரணையைத் திசை திருப்பிடச் சட்டத்திற்குப் புறம்பான

நடவடிக்கைகளில் ஜெயலலிதாதரப்பினர் வெளிப்படையாகவே ஈடுபட்டனர் என்பதற்கு இதுவும் ஓர் உதாரணம்.

ஜெயலலிதா தரப்பினர் குவித்து வைத்திருந்த நகைகளைப் பற்றிக் கூற வேண்டுமேயானால், ஜெயலலிதாவின் வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்ட தங்கத்தின் எடை அளவு 23 கிலோ, 113 கிராம். அதன் விலை அன்றைய தேதியில் 91 லட்சத்து 57 ஆயிரத்து 253 ரூபாய். அவர் வீட்டில் இருந்த வைரத்தின் விலை அன்றைய தேதியில் 2 கோடியே 43 இலட்சத்து 92 ஆயிரத்து 790 ரூபாய். மொத்தமாக தங்க, வைர ஆபரணங்களின் மதிப்பு 3 கோடியே 35 இலட்சத்து 50 ஆயிரத்து 43 ரூபாய்.

இது தவிர்த்து போயஸ் கார்டன், வீட்டில் நடத்திய சோதனையில் 42 நகைப் பெட்டிகள் கைப்பற்றப்பட்டு, அவற்றிலும் நகைகள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டன. அதில் சில பெட்டிகளில் கைக்கடிகாரங்களும், மற்றவற்றில் 131 நகைகளும் இருந்தன. அதன் எடை 4 கிலோ 475 கிராம். அதன்மதிப்பு அன்றைய விலையில் 17 இலட்சத்து 37 ஆயிரத்து 266 ரூபாய். வைரம் பதிக்கப்பட்ட தங்கக் கம்மல் விலை 47 இலட்சத்து 61 ஆயிரத்து 816 ரூபாய் என்று கணக்கிடப்பட்டது.

ஜெயலலிதாவின் வழக்கறிஞர் பி. குமார், தன்னுடைய வாதத்தில், அரசுத் தரப்பு பட்டியலிட்டுள்ள நகைகளில், வரிசை எண் 284 மற்றும் 285ல் உள்ள நகைகள், முதல் அமைச்சர் பொறுப்புக்கு வருவதற்கு முன்பே ஜெயலலிதா விடம் இருந்தவை என்று கூறியுள்ளார். 1987லிருந்து அடுத்த நான்கு ஆண்டுகளுக்கான வருமான வரிக்கணக்கை மொத்தமாக 1992இல் ஜெயலலிதா தாக்கல் செய்துள்ளார். 1992ஆம் ஆண்டுக்கான வருமான வரியை 1993ஆம் ஆண்டு மார்ச் 26ஆம் தேதி செலுத்தியுள்ளார். அடுத்தடுத்த ஆண்டுகளில் செய்யப்பட்ட இந்த வருமான வரி கணக்குத் தாக்கலில் மிகப் பெரிய வித்தியாசம் இருக்கிறது. அதுபற்றி வருமான வரித் துறை கேள்வி எழுப்பிய போது ஓர் ஆண்டில் தங்க, வைர ஆபரணங்களின் விலை பல மடங்கு உயர்ந்து விட்டதாகவும், மேலும் தங்களுக்கு இந்தக் காலத்தில் அதிக எண்ணிக்கையில் பரிசுப் பொருள்கள் கிடைத்ததாகவும் காரணம் சொல்லியுள்ளனர். இதையடுத்து, வருமானவரித் துறை உதவி ஆணையர், "கடந்த ஆண்டில் உங்களுக்கு அன்பளிப்பாக 19 புதிய ஆபரணங்கள் கிடைத்துள்ளன.

அவற்றின் எடை 7,040 கிராம். 101.49 "கேரட்" எடையுள்ள வைரங்களும் கிடைத்துள்ளன என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், அவற்றை முறையாகப் பட்டியலிடவில்லை" என்று கூறி நோட்டீஸ் அனுப்பியிருக்கிறார். இந்த ஆதாரங்கள் நீதிமன்றத்தில் தெளிவாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் பரிசுப் பொருள்கள் மற்றும் புதிய நகைகள் 1992க்குப் பிறகே வந்துள்ளன என்பது நிரூபணமாகிறது என்று நீதிபதி குன்ஹா விளக்கியுள்ளார்.

மேலும் நீதிபதி குன்ஹா, "இதிலிருந்து நமக்குத் தெரிய வருவது என்னவென்றால், 1991க்குப் பிறகு அவர்களிடம் குவிந்த நகைகளை பழைய தேதியிட்டுக் கணக்குக் காட்டி, வருமான வரி அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளனர். அப்படி வரி கட்டியதால் மட்டுமே இந்த வருமானம் நல்ல வழியில் வந்த வருமானமாக ஏற்றுக்கொள்ள முடியாது. அந்த வருமானம் எந்த வழியில் வந்தது என்பதை "பொது ஊழியர்" என்ற முறையில் ஜெயலலிதா ஏற்கத் தக்க வகைகளில் சொல்லியாக வேண்டும். ஆனால், கிலோக் கணக்கில் தங்கமும், வைரமும் தனது வீட்டுக்கு எப்படி வந்தது என்பதை ஜெயலலிதாவினால் கடைசிவரை சொல்லவே முடியவில்லை. இவை அனைத்தும் சசிகலாவின் பெயரில் இருப்பதாக ஜெயலலிதாவின் வழக்கறிஞர் நினைவூட்டினார். அப்படியானால் சசிகலாவுக்கு இவ்வளவு நகைகள் எப்படி வந்தன? அவர் அதையாவது நிரூபிக்க வேண்டுமல்லவா? அவர் இந்த நகைகளை எப்படி வாங்கினார்? எந்தத் தேதியில் வாங்கினார்? என்ற விவரங்களையும் சொல்ல முடியவில்லை. ஆதாரங்களின் மூலம் தங்கமும் வைரமும் ஜெயலலிதாவால் சசிகலாவின் பெயரில் வாங்கிக் குவிக்கப்பட்டன என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதை மறுப்பதற்கு ஜெயலலிதா, சசிகலா ஆகிய இருவரிடமும் எந்த ஆதாரங்களும் இல்லை. எனவே குற்றச்சாட்டு நிரூபணமாகிறது" என்று நீதிபதி குன்ஹா தெரிவித்திருக்கிறார்.

மேலும் அவர் கூறும்போது, "ஜெயலலிதாவிடம் இருந்து கைப்பற்றப்பட்ட நகையின் எடை 27 ஆயிரத்து 588 கிராம். அதில் ஜெயலலிதா பதவிக்கு வருவதற்கு முன்பே அவரிடம் இருந்த நகைகளாக, தற்காப்புச் சாட்சிகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட அளவு 7 ஆயிரத்து 40 கிராம். எனவே அவற்றை இந்த வழக்கிலிருந்து தள்ளுபடி செய்து விடுகிறேன். அப்படிச் செய்தால் மீதம் இருக்கும் 20 ஆயிரத்து 548 கிராம் எடை தங்கம், ஜெயலலிதாவின் பதவிக்

காலத்தில் சம்பாதித்தவை என்றாகிறது. இதற்கு விலையாக, இரு தரப்பினருமே ஏற்றுக்கொண்ட 1992ஆம் ஆண்டின் தங்க விலை நிலவரப்படி கணக்கிடுவது என்று நீதிமன்றம் முடிவுசெய்கிறது. அதன்படி கணக்கிட்டால் 89 இலட்சத்து 5 ஆயிரத்து 503 ரூபாய் வருகிறது. மேலும் ஜெயலலிதாவிடம் இருந்த வைரங்களின் மதிப்பு 1 கோடியே 62 இலட்சத்து 61 ஆயிரத்து 820 ரூபாய் என்று கணக்கிடப்பட்டுள்ளது. அந்தத் தொகையை தங்க நகையின் மதிப்போடு சேர்த்துக் கணக்கிட்டால் 2 கோடியே 51 இலட்சத்து 59 ஆயிரத்து 144 ரூபாய். இவ்வளவு மதிப்புடைய தங்கத்தாலும், வைரத்தாலும் இழைக்கப்பட்ட நகைகள் அனைத்தும் ஜெயலலிதாவால் முறைகேடான வழியில் சம்பாதிக்கப்பட்டதாக நீதிமன்றம் அறிவிக்கின்றது" என்று நீதிபதி குன்ஹா அவர்கள் தனது நீண்ட தீர்ப்பில் விளக்கியிருக்கிறார்.

சசிகலா 1990-91ஆம் ஆண்டுக்கான சொத்துக் கணக்கை 1993ஆம் ஆண்டு தாக்கல் செய்துள்ளார். அதில், அவர் தன்னிடம் தங்க வைர ஆபரணங்களின் மதிப்பு 12 லட்சத்து 95ஆயிரத்து 704 ரூபாயும், 5 கிலோ வெள்ளிப் பொருள்களின் மதிப்பு 27 ஆயிரத்து 468 ரூபாய் என்றும் கணக்குக்காட்டியுள்ளார். ஆனால் 1991-92ஆம் ஆண்டுக்கான சொத்துக் கணக்கை, சசிகலா தாக்கல் செய்த போது, தன்னிடம் இருக்கும் தங்க, வைர ஆபரணங்களின் மதிப்பு 1 கோடியே 10 லட்சத்து 13 ஆயிரத்து 946 ரூபாய் என்றும், வெள்ளிப் பொருள்களின் மதிப்பு 70 இலட்சத்து 61 ஆயிரத்து 400 ரூபாய் என்றும் குறிப்பிட்டுள்ளார். அதாவது சசிகலாவுக்கு 1990-91ஆம் ஆண்டில் இருந்த 12 லட்சத்து 95 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள நகை, அதற்கு அடுத்த ஆண்டில், அதாவது 1991-92இல் இருந்த நகைகளின் மதிப்பு ஒரே ஆண்டில் 1 கோடியே 10 இலட்சம் ரூபாய் என்று உயர்ந்துள்ளது என்றால், எந்த அளவுக்கு சொத்துக் குவிப்பு வேக வேகமாக நடந்துள்ளது என்பது உறுதியாகிறதல்லவா?

உடன்பிறப்பே, நீதிபதி குன்ஹா அவர்கள் இந்தத் தீர்ப்பின் 900ஆவது பக்கத்தில், "Heady mix of power and wealth is the bottom line in this case. Huge accumulation of wealth by accused in a short span of five years is a telling example how power would lead to concentration of unlawful wealth posing veritable danger to the democratic structure". அதாவது, "இந்த வழக்கின் அடித்தளமாக இருப்பதே

குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் பெற்றிருந்த ஆட்சி அதிகாரமும், அதன் மூலம் குவித்த சொத்துக்களும்தான். குற்றஞ்சாட்டப் பட்டவர்கள் மிகக் குறைந்த ஐந்தாண்டு காலத்தில் ஏராளமான சொத்துக்களைக் குவித்தார்கள் என்பது ஒன்றே, அதிகாரத்தைப் பயன்படுத்திச் சட்டத்திற்குப் புறம்பான வகையில் சொத்துக்களைச் சேகரிப்பது எப்படி ஜனநாயகக் கட்டமைப்புக்கு ஆபத்தாக முடியும் என்பதற்கான சிறந்த சான்றாக விளங்குகின்றது" என்று நீதிபதி குன்ஹா அவர்கள் சுட்டிக்காட்டியிருப்பதில் இருந்தே, ஜெயலலிதா தரப்பினரின் சொத்துக் குவிப்பு எந்த அளவுக்கு ஜனநாயக அமைப்புக்கு கேடு விளைவிக்கக் கூடியது என்பது விளங்குகிறது அல்லவா?

ஜெயலலிதா தரப்பினர் குவித்த நகைகள் பற்றிய விவரத்தைக் குறிப்பிட்டுள்ளேன். மேலும் சில முக்கியமான விவரங்கள் தீர்ப்பிலே உள்ளன. அவற்றைப் பற்றி நாளை தொடருகிறேன்.

அன்புள்ள,

மு.க.

25-10-2014

3932. ஓய்யாரக் கொண்டையாம்; தாழம்பூவாம்! (6)

உடன்பிறப்பே,

தமிழகத்தில் நாள்தோறும் சாவு, கொலை, கொள்ளை, வழிப்பறி, செயின் பறிப்பு, சட்டம் ஒழுங்கு சீர்குலைவு என எத்தனையோ பிரச்சினைகள்! அதிலும் குறிப்பாகக் கடந்த ஒரு வாரமாக கனமழை பொழிந்து கொண்டிருக்கிறது. அதன் காரணமாகப் பல இலட்சம் ஏக்கர் நிலத்தில் பயிர்கள் மூழ்கிக் கிடக்கின்றன. இந்நாள் முதல்வர் பன்னீர்செல்வம் அவர்களே மழை காரணமாகப் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டு, காரிலேயே 30 நிமிடங்கள் இருந்ததாகச் செய்திகள் வந்துள்ளன. வெள்ள நிவாரணப் பணிகள் எதுவும் நடைபெறவில்லை. சட்டம் ஒழுங்கு பற்றி எழுதவே தேவையில்லை. அமைச்சரின் தம்பி ஒருவரே கொலை செய்யப்பட்டுள்ளார். ராமனாதபுரம் மாவட்டத்தில், திருவாடானை அருகே காவல் நிலையத்திற்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட இளைஞர் ஒருவர், சப் இன்ஸ்பெக்டரால் தாக்கப்பட்டு இறந்துவிட்டார் என்றும், அதை மறைக்க அந்த சப் இன்ஸ்பெக்டரே அவரைத் துப்பாக்கியால் சுட்டுவிட்டு, தன்னைத் தற்காத்துக் கொள்வதற்காகச் சுட்டேன் என்று கூறிப் பரபரப்பாக அந்தச் செய்திகள் வெளிவந்துள்ளன. நெய்வேலியில் ஒப்பந்தத் தொழிலாளர்கள் ஒன்றரை மாத காலமாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு நேற்றிரவுதான் ஏதோ ஊதிய உயர்வு கொடுப்பதாகக் கூறி வேலை நிறுத்தத்தை வாபஸ் பெறச் செய்திருக்கிறார்கள். ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரம் செய்வது பற்றி எந்த உறுதி மொழியும் கொடுத்ததாகத் தெரியவில்லை. சகாயம் விசாரணைக் கமிஷன் பணியைத் தொடங்க வேண்டுமென்று உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் ஆகியவை உத்தரவிட்டும், அ.தி.மு.க. அரசு அந்த நீதிமன்றத் தீர்ப்புகளை மதிக்கவில்லை. மூன்றாண்டு காலமாக வணிகர் நல வாரியம் முடங்கிக்கிடப்பதாக ஒரு செய்தி. அந்த ஒரு வாரியம் மட்டும்தானா முடங்கிக் கிடக்கின்றது? அமைப்புச்

சாராத் தொழிலாளர் நல வாரியங்கள் அனைத்தும் முடங்கிக் கிடக்கின்றன. தமிழ்நாடே முடங்கித்தான்கிடக்கின்றது. இந்த நிலையில் இதையெல்லாம் சற்று ஒதுக்கி வைத்துவிட்டு, கடந்த ஒரு வார காலமாக, ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கின் தீர்ப்பு பற்றி எழுதி வருகிறேன் என்றால், முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா மீதே குற்றச்சாட்டு உறுதிப்படுத்தப்பட்டு, அவருக்குத் தண்டனை அளிக்கப்பட்டு, பதவியும் பறிபோன நிலையில், அதற்கு முழு முதல் காரணம் வேறு அல்ல என்பதையும், வினை விதைத்தவர்களே அவர்கள்தான் என்பதையும், அதே நேரத்தில் தீர்ப்பில் என்னதான் கூறப்பட்டுள்ளது என்பதை தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் புரிந்து தெளிவடைய வேண்டும் என்பதற்காகத்தான்!

நேற்றைய என் கடிதத்தில், "ஒரு பெண்மணிக்குச் சிறைத் தண்டனை என்றதும், தாய்மார்கள் அனுதாபப் படுவது சகஜம்தான்" என்று குறிப்பிட்டிருந்தேன். சட்டம் எல்லோர்க்கும் பொது என்றால்; சட்டம் ஆண், பெண் இருபாலார்க்கும் பொதுவானது என்றுதான் பொருள். ஒரு பெண்மணி, பெண்ணாக நடந்து கொள்ளத் தவறி, பேராசைகளுக்கு ஆட்பட்டு, தனக்குப் பொதுமக்களால் வழங்கப்பட்ட ஆட்சி அதிகாரத்தைத் தவறான முறையில் பயன்படுத்தினால், பெண்ணாயிற்றே என்று சட்டம் வளைந்து கொடுக்க இயலாது. இந்த வழக்கிலும், தீர்ப்பிலும், மேலும் மேலும் எடுத்துக் கூறுவதற்குக் கடல் அளவு உண்மைகள் இருந்தபோதிலும், கடுகு அளவுதான் இந்தத் தொடரிலே இடம் பெற்றுள்ளது.

இன்னும் கூற வேண்டுமேயானால், ஜெயலலிதா மீது தற்போதுதான் முதன் முதலாக இப்படியொரு தீர்ப்பு வந்திருப்பதாகக் கருதக்கூடாது. அவரைப் பற்றி இதற்கு முன்பே வேறு சில வழக்குகளில் நீதிபதிகள் என்ன கருத்து தெரிவித்திருக்கிறார்கள் என்பது குறித்து, சுருக்கமாக நினைவுப்படுத்துகிறேன்.

24-11-2003இல் ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த போதுதான், உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ராஜேந்திர பாபு, பி.வி. ரெட்டி ஆகியோர் டான்சி வழக்கில் தீர்ப்பு கூறும்போது, "முதலமைச்சர் ஜெயலலிதா, அவருடைய கையெழுத்தையே, தன் கையெழுத்தே இல்லை என்று கூறும் அளவுக்குச் சென்றுள்ளார்.

ஜெயலலிதா மனச்சாட்சிப்படி நடந்து, இதற்குப் பரிகாரம் தேட முற்பட வேண்டும். முதலமைச்சர் போன்று உயர் பதவியில் இருப்போர், விதிகளை மதித்து நடக்க வேண்டியது அவசியம். சாதாரண அரசு ஊழியர் ஒருவர் எப்படி அரசு சொத்துக்களை வாங்க முடியாதோ, அதே போல முதல்வர் பதவியில் இருக்கும் ஒருவரும் அரசு நிறுவனத்தின் சொத்துக்களை வாங்க முயற்சிப்பது தவறு. சட்டம் என்பது சாதாரண அரசு ஊழியருக்கும், உயர் பதவியில் இருப்பவருக்கும் ஒன்றுதான். தவறுக்கு வருந்தி, வாங்கிய நிலத்தை டான்சி நிறுவனத்துக்கே திரும்ப ஒப்படைக்க வேண்டும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதை மறந்துவிட முடியுமா?

1993-94ஆம் ஆண்டுக்கான; ஜெயலலிதா, சசிகலா வருமானவரிக் கணக்கு வழக்கில் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் அகர்வால், மாத்தூர் ஆகியோர் 24-2-2006 அன்று வழங்கிய தீர்ப்பில், "நீதி பரிபாலன முறையையே நீங்கள் (ஜெயலலிதா தரப்பினர்) கேலிக் கூத்தாக்கி வருகிறீர்கள். இன்னும் எவ்வளவு காலத்திற்கு இந்த நீதிமன்ற நடவடிக்கைகளை இழுத்துச் செல்ல முடியும்? மற்றவர்களுக்கு எல்லாம் முன் மாதிரியாக நீங்கள் இருக்க வேண்டும். இந்த விஷயத்தில் என்ன பதில் மனுவை உங்களால் தாக்கல் செய்ய முடியும்?" ("You (Jayalalithaa) are making a mockery of the Judicial Process. How long you can drag the Proceedings") என்று கேட்ட முன் உதாரணமும் உள்ளது.

வருமானத்திற்கு அதிகமாகச் சொத்து குவித்த காலகட்டமான 1991-1996ஆம் ஆண்டுக் காலத்தில், கொடைக்கானல் பிளசன்ட் ஸ்டே ஓட்டலுக்கு விதிமுறையை மீறி அனுமதி கொடுத்தது தொடர்பாக முதல்வராக இருந்த ஜெயலலிதா மீது வழக்குத் தொடரப்பட்டு, அதற்காக ஜெயலலிதாவுக்கு ஓராண்டு சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. அதை எதிர்த்து அப்போதும் அ.தி.மு.க.வினர் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டு, தர்மபுரி அருகே கோவை வேளாண்மைக் கல்லூரி மாணவிகள் சென்ற பேருந்து தீ வைத்துக் கொளுத்தப்பட்டு மூன்று மாணவிகள் எரிந்து சாம்பலானார்கள். அந்த வழக்கில் அரசுத்தரப்பில் கால தாமதம் செய்தபோது உயர் நீதிமன்ற நீதிபதி கனகராஜ் அளித்த தீர்ப்பு, அ.தி.மு.க. அரசுக்குக் கொடுத்த பாராட்டிதழா?

இதே சொத்துக் குவிப்பு வழக்கினைக் கர்நாடக மாநிலத்திற்கு மாற்றியபோது உச்ச நீதிமன்ற நீதிபதிகள் எஸ்.என். வரியவா அவர்களும், எச்.கே. சேமா அவர்களும் அளித்த தீர்ப்பின் வார்த்தைகளை இந்தத் தொடரின் தொடக்கத்திலேயே தெரிவித் திருந்தேனே, அவை என்ன சாதாரணமான வார்த்தைகளா?

ஜெயலலிதாவுக்கெதிரான இந்தப் பட்டியலிலே இணைக்கப்படவேண்டிய தீர்ப்பாகத்தான் பெங்களூர் சிறப்பு நீதிமன்றத் தீர்ப்பும் அமைந்துள்ளது.

ஜெயலலிதாவுக்குச் சொந்தமாக எவ்வளவு நகைகள் தொடக்கத்தில், அதாவது அவர் முதலமைச்சராக ஆவதற்கு முன்பு 1991இல் இருந்தன என்றும், 1996ஆம் ஆண்டில் அவை எந்த அளவுக்குப் பன்மடங்குப் பெருகின என்றும் நேற்றைய கடிதத்தில் எழுதியிருந்தேன் அல்லவா; அதே ஜெயலலிதா 30-7-1990 அன்று "மாலைமலர்" நாளேட்டில் அரை பக்கத்திற்கு ஒரு அறிக்கை விடுத்திருந்தார். அந்த அறிக்கையில், "தேர்தல் முடிந்ததும் தொண்டர்கள் கொடுத்த தொகையைத் திரும்பக் கொடுக்கும் கடமையைச் செய்தேன். கழக உடன்பிறப்புகள் என்னிடம் வைத்த நம்பிக்கையைக் காப்பாற்றும் பொருட்டு எனது சொந்த நகைகளை விற்று, என் மூதாதையர்கள் விட்டுச் சென்ற புராதன நகைகளையும், வெள்ளிச் சாமான்களையும் விற்று எனது சொத்தினை அடகுவைத்து, சில நண்பர்களிடம் கடனும் பெற்று வைப்புநிதியை முழுவதுமாகத் திரும்பக் கொடுத்தேன்" என்றெல்லாம் தெரிவித்திருந்தார். நகைகளையெல்லாம் விற்று விட்டேன் என்று 1990ஆம் ஆண்டு அவர் தெரிவித்ததையும், 1991ஆம் ஆண்டு அவரிடம் எந்த அளவுக்கு நகைகள் இருந்தன என்று தெரிவித்ததையும், 1996ஆம் ஆண்டு எந்த அளவுக்கு அவரிடம் நகைகளின் எண்ணிக்கை பெருகியது என்பதையும் ஒப்பிட்டுப்பார்த்தாலே, உண்மையைத் தெளிவாக உணர்ந்துகொள்ள முடியும்.

ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கில், முக்கியமாக நிரூபிக்கப்பட வேண்டிய விஷயங்கள் என்று வரையறுக்கப்பட்டவை என்று பார்த்தால், முதலில் அவர் தனது சட்டப்பூர்வமான வருமானத்தைவிட, 66 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கூடுதல் சொத்துக்களைச் சேர்த்தாரா என்ற குற்றச்சாட்டைப் பொறுத்தவரை, நீதிபதி திரு. குன்ஹா அவர்கள்

தனது தீர்ப்பிலே, ஜெயலலிதா மற்றும் பினாமிகள் பெயரில் உள்ள 55 கோடியே 79 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள், சட்டப்பூர்வமான வருமானத்திற்குமேல் சேர்க்கப்பட்டவை என்று சந்தேகத்திற்கு இடம் இல்லாமல் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், இவற்றுக்கு குற்றம் சாட்டப்பட்டவர்களால் சரியான கணக்குக் காண்பிக்க முடியவில்லை என்றும், சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் சூழ்ச்சிக்காரர்கள் என்றும், சொத்துக் குவிப்பில் ஜெயலலிதாவுக்கு மற்றவர்கள் உதவினர் என்றும் சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் எழுதியிருக்கிறார்.

குற்றவாளிகள் பங்குதாரர்களாக இருந்த நிறுவனங்களின் கணக்குகளில் சட்டத்துக்குப் புறம்பாகச் சேர்த்த பல இலட்சக்கணக்கான ரூபாய் விளக்கிச் சொல்ல முடியாத வகையில் வரவு வைக்கப்பட்டிருக்கிறது; ஏராளமான சொத்துகள் வாங்கிக் குவிக்கப்பட்டுள்ளன. 3000 ஏக்கர் நிலங்கள் வாங்கப்பட்டுள்ளன. நிறுவனங்களின் கணக்குகளில் எந்த அளவுக்கு முறைகேடாக வந்த பணம் வரவு வைக்கப்பட்டுள்ளது என்பதற்கு ஒரு உதாரணம் கூற வேண்டுமேயானால், சென்னை அபிராமபுரம் இந்தியன் வங்கியின் மேலாளர் அருணாசலம் என்பவர் கொடுத்துள்ள சாட்சியத்தில், "ரிவர்வே அக்ரோ ப்ராடக்ஸ்" என்ற குற்றஞ் சாட்டப்பட்டவர்களின் நிறுவனத்தின் பெயரில் உள்ள கணக்கில், 29-11-1994 அன்று 15 லட்சத்து 45 ஆயிரம் ரூபாயும், 30-11-1994 அன்று 19 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும், 3-12-1994 அன்று 22 இலட்சத்து 41 ஆயிரம் ரூபாயும், 7-1-1995 அன்று 15 இலட்சம் ரூபாயும், 10-1-1995 அன்று 25 இலட்சம் ரூபாயும், 12-1-1995 அன்று 25 இலட்சம் ரூபாயும், 25-4-1995 அன்று 19 இலட்சம் ரூபாயும், 27-4-1995 அன்று 20 இலட்சம் ரூபாயும், 28-4-1995 அன்று 19 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாயும் வரிசையாக வரவு வைக்கப்பட்டுள்ளது. இப்படி ஒவ்வொரு நாளும் அல்லது ஒரு நாள் விட்டு அடுத்த நாளும் வங்கியில் இலட்சக்கணக்கில் வரவு வைக்கப்பட்டிருக்கிறதென்றால், இந்தத் தொகை எங்கிருந்து கொட்டியது அல்லது எப்படிக் குவிந்தது என்பதை நீதிபதி குன்ஹா அவர்களே எண்ணி வியப்பிலே ஆழ்ந்திருக்கிறார் என்பதை குன்ஹா அவர்களின் தீர்ப்பில் 752வது பக்கத்தில் புரிந்து கொள்ள முடிகிறது.

நிலம் வாங்கிக் குவித்த சம்பவங்களைப் பற்றியும் நீதிபதி அவர்கள், பலரும் அளித்துள்ள சாட்சியங்களின் வாயிலாகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். எந்த அளவுக்கு நிலம் வாங்கப்பட்டுள்ளது என்பதற்கும் ஒரு உதாரணம் கூறுகிறேன். 22-8-1994 அன்று 53 ஏக்கர்; 17-11-1994 அன்று 281 ஏக்கர்; 22-12-1994 அன்று 507 ஏக்கர்; 6-1-1995 அன்று 166 ஏக்கர்; 21-2-1995 அன்று 158 ஏக்கர் என்றும் பட்டியல் நீளுகிறது. 17-11-1994 அன்று மட்டும் 281 ஏக்கர் என்றும், 73.90 ஏக்கர் என்றும், 69.78 ஏக்கர் என்றும், 60.65 ஏக்கர் என்றும், 42.31 ஏக்கர் என்றும், 34.815 ஏக்கர் என்றும் தொடர்ச்சியாக நிலங்கள் வாங்கப்பட்டுள்ளன. இப்படி ஏராளமான ஏக்கர் நிலங்களைத் தாராளமாக வாங்கிக் குவிக்க எங்கிருந்து பணம் வந்தது? எப்படி வந்தது? என்றெல்லாம் தனி நீதிமன்றம் வியப்போடு கேட்டால், அந்த நீதிமன்றத்தையே குற்றஞ் சாட்டி "போஸ்டர்" ஒட்டுகின்ற குணாளர்கள் (?) சிந்திப்பதற்குப் பகுத்தறிவைப் பயன்படுத்த வேண்டாமா?

ஜெயலலிதா தரப்பினரால் காட்டப்பட்ட செலவுக் கணக்குகள் பற்றியும், குறிப்பாக சுதாகரன் திருமணத்திற்காகச் செய்யப்பட்ட செலவுகள் பற்றியும், அந்தத் தொகை யாரால் செலவழிக்கப்பட்டன என்பது பற்றியும் ஏற்கனவே கூறியிருந்தேன். அதுபோலவே அவர்களால் காட்டப்பட்ட ஒருசில வருமானங்கள் எப்படி வந்தன என்பது பற்றியும் ஒருசில எடுத்துக்காட்டுகளைக் கூற வேண்டும். ஸ்பிக் நிறுவனத்திடமிருந்து, சென்னை கிண்டி தொழிற்பேட்டையில் ஒரு கட்டடத்தை ஜெயா பப்ளிகேஷன்ஸ் நிறுவனம் (ஜெயலலிதா மற்றும் சசிகலா இதற்கு உரிமையாளர்களாக இருந்தனர்) மூன்று ஆண்டுகளுக்கு (1993-96) குத்தகைக்கு எடுத்து, அதை வேறு ஒரு நிறுவனத்திற்கு வாடகைக்கு விட்டு 37.67 இலட்சம் ரூபாய் வாடகை வருமானம் கிடைத்துள்ளதாகக் கணக்கில் காட்டப்பட்டுள்ளது. அதுபோலவே கடலூர் சிப்காட் தொழிற்பேட்டையில், இண்டோ தோஹா கெமிக்கல்ஸ் நிறுவனத்திற்குச் சொந்தமான இடத்தை, ஸ்பிக் நிறுவனத்திற்குக் குத்தகைக்கு விட்டதன் மூலம் 30.40 இலட்சம் ரூபாய் குத்தகை வருமானம் கிடைத்துள்ளது என்றும் கணக்கிலே தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில்; ஜெயலலிதாவின் வருமானமாகத் தெரிவிக்கப்பட்டதைவிடக் கூடுதலாக 4.29 கோடி ரூபாயை சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைக்கப்பட்டது. அதாவது கட்சியினரிடமிருந்து ஜெயலலிதாவின் 44வது பிறந்த நாளை முன்னிட்டுக் கிடைத்த அன்பளிப்புகள் 2 கோடியே 15 இலட்சம் ரூபாயையும், வெளிநாட்டிலிருந்து கிடைத்த அன்பளிப்புகள் 78 இலட்சம் ரூபாயையும் அன்னியில், வட்டி வருமானமாக 78 இலட்சம் ரூபாயையும், திராட்சைத் தோட்ட வருமானமாக 47 இலட்சம் ரூபாயையும், வருமானக் கணக்கில் கூடுதலாகச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று ஜெயலலிதா தரப்பில் கோரிக்கை வைக்கப்பட்டது. அதுபோலவே சசிகலா 19.28 கோடி ரூபாயைத் தன்னுடைய வருமானக் கணக்கில் கூடுதலாகச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றார். அதாவது "நமது எம்.ஜி.ஆர்." பத்திரிகை மூலம் வருவாய் 14 கோடியே 1 இலட்சம் ரூபாயையும், வெளிநாட்டிலிருந்து பெறப்பட்ட நிதி 52 இலட்சம் ரூபாயையும் தனது வருமானத்தில் சசிகலா சேர்த்துக்கொள்ள வேண்டு மென்றார்.

விசாரணைக்கு உட்பட்ட காலகட்டத்தில் இவர்களது வருமானம் 9.34 கோடி ரூபாய் என்று ஏற்கனவே அரசுத் தரப்பு கணக்கு கொடுத்திருந்ததை விட 24.9 கோடி ரூபாயையும் சேர்த்து, தங்களது வருமானக் கணக்கு 34.24 கோடி ரூபாய் என்று தெரிவித்தார்கள்.

பிறந்த நாள் அன்பளிப்புகளைப் பொறுத்த வரையில், குறுக்கு விசாரணையின்போது, கட்சி நிர்வாகிகளாக ஆஜர்படுத்தப்பட்டவர்களிடம், தாங்கள் குறிப்பிட்ட பதவியை வகித்து வந்ததற்கான சான்று எதுவும் இல்லை; இப்படி நிதி திரட்ட கட்சியில் எந்தவிதமான தீர்மானமும் போடப்பட வில்லை; தொண்டர்களின் பங்களிப்பிற்காக அவர்களுக்கு ரசீது கொடுக்கப்படவில்லை; கட்சியின் தலைமை அலுவலகத்தில் டி.டி.க்கள் பெறப்பட்டதாக எந்த ஒப்புதல் சான்றும் அளிக்கப்படவில்லை. ஜெயலலிதா தரப்பில் சண்முகசுந்தரம் என்ற ஆடிட்டர் சாட்சி அளிக்கையில் பிறந்த நாள் பரிசாகப் பெறப்பட்ட டி.டி.க்கள் அனைத்தும் ஜெயலலிதாவின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டன என்றும், அதற்கான வருமானவரி விவரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார். ஆனால்

குறுக்கு விசாரணையின்போது, இது நடந்த கால கட்டத்தில் இவர் ஜெயலலிதாவின் ஆடிட்டரே அல்ல என்று தெரிந்தது. மேலும் வருமான வரி கமிஷனர் "அன்பளிப்புகள் பற்றிய விவரங்கள் உரிய ஆண்டுகளில் தெரிவிக்கப்படவில்லை; பல ஆண்டுகளுக்குப் பின்தான் தெரிவித்துள்ளார். அதிலும் 1991 வரை வெறும் நகைகள் மட்டும்தான் அன்பளிப்பாகப் பெற்றதாகத் தெரிவித் துள்ளார். மேலும் அவர் கூறுவதைத் தவிர அன்பளிப்பாகப் பணம் பெற்றதற்கான வேறு எந்த ஆதாரமும் இல்லை" என்று தெரிவித்திருக்கிறார். இந்த அன்பளிப்புகள் பற்றி நீதிபதி குன்ஹா அவர்கள் விளக்கமாகத் தீர்ப்பில் குறிப்பிட்டதோடு இறுதியாக என்ன தெரிவித்திருக்கிறார் என்றால்,

"பிறந்த நாள் அன்பளிப்புகள் சட்ட விரோதமானவையல்ல; ஆனால் இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர் முதல்வராகப் பதவியேற்றபின் இவ்வளவு பெரிய தொகை அன்பளிப்பாக வந்திருப்பது, அந்த நிதியின் ஆதாரத்தைப் பற்றிச் சந்தேகத்தை எழுப்புகிறது. மேலும், எதிர் தரப்பு கேள்வி எழுப்புவதைப் போல, இப்படி அன்பளிப்புகள் வருவது வழக்கமென்றால், 1992க்கு பின் ஏன் வரவில்லை? கிடைத்த பணம் அன்பளிப்புதான் என்ற வாதத்தை நாம் ஏற்றுக்கொண்டாலும், அதை முதல்வராக இருந்த ஜெயலலிதா பெற்றுக்கொண்டது சட்ட விரோதமானதுதான். இத்தகைய அன்பளிப்புகள் பற்றி உச்ச நீதிமன்றம் தீர்ப்பளிக்கையில், "அரசு ஊழியர்கள் லஞ்சம் வாங்குவதிலிருந்து தடை செய்யப்பட்டுள்ள நிலையில், அன்பளிப்புகள் வாங்கிக் கொள்ள அனுமதிக்கப்பட்டால் லஞ்சத்தை அன்பளிப்பாக வாங்கிக் கொள்வார்கள். இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 165வது பிரிவின்படி, குறிப்பிட்ட காரணத்திற்காகத் (வேலை நடப்பதற்காக) தான் அன்பளிப்பு (லஞ்சம்) பெறப்பட வேண்டும் என்பது அல்ல. குறிப்பிட்ட காரணம் இல்லாமல் பெறப்படும் அன்பளிப்புகளும் தடை செய்யப்பட்டவை. ஏனெனில், அவை, அன்பளிப்பு கொடுத்தவருக்குச் சாதகமாக, அரசு ஊழியரைச் செயல்பட வைக்கும்" என்று குறிப்பிட்டுள்ளது. அதனால், அன்பளிப்பு மூலம் பெறப்பட்ட பணத்தைச் சட்டப்பூர்வமான வருமானமாகக் கருத முடியாது" என்று நீதிபதி குன்ஹா அவர்கள் இந்தத் தீர்ப்பிலே குறிப்பிட்டுள்ளார்.

இதுபோலவே "நமது எம்.ஜி.ஆர்." பத்திரிகையின் மூலம் 14 கோடியே 1 இலட்சம் ரூபாய் வருமானம் உட்பட 19 கோடியே 28 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாயைத் தன்னுடைய கூடுதல் வருமானமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று சசிகலா வைத்த கோரிக்கை பற்றி, நீதிபதி குன்ஹா அவர்கள் கூறும்போது, "வருமான வரித்துறை விசாரணையின்போதே ஜெயலலிதா மற்றும் சசிகலா "நமது எம்.ஜி.ஆர்." பத்திரிகையின் வைப்புநிதித் திட்டம் குறித்து ஆவணங்கள் எதையும் கொடுக்கவில்லை. வருமான வரித் துறை "நமது எம்.ஜி.ஆர்." கணக்குப் புத்தகங்களைப் பறிமுதல் செய்தபோது, அதிலும் இந்தத் திட்டத்திற்கான வரவுகள் குறித்து, குறிப்புகள் எதுவும் இல்லை. ஜெயலலிதா மற்றும் சசிகலா இந்தத் திட்டம் குறித்து ஒரு கதையை, 1998இல் தங்கள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் ஆன பிறகு, வருமான வரி தாக்கல் செய்யும்போது உருவாக்கி இருக்கின்றனர். 2001 வரையில் கூட வருமான வரித் துறையிடம், இந்தத் திட்டத்திற்காகப் பெறப்பட்ட விண்ணப்பங்கள், ரசீது நகல்கள் தொலைந்து விட்டன என்றும், அது குறித்துப் போலீசில் புகார் கொடுக்கப்பட்டு உள்ளது என்றும் தெரிவித்துவந்தனர். ஆனால் ஆச்சரியப்படுத்தும் விதமாக 2012இல், அவர்களே வருமான வரித் துறையில் இருந்து பெறப்பட்டதாக "தொலைந்த" ஆவணங்களின் அசல்களைச் சமர்ப்பித்துள்ளனர். சமர்ப்பிக்கப்பட்ட அந்த ஆவணங்களைப் பார்க்கையிலேயே, அவை சமீபத்தில் உருவாக்கப்பட்டவை என்று தெரிந்துவிடுகிறது. பழைய ஆவணங்களைப் போல, அவை தோற்றமளிக்க வேண்டும் என்பதற்காக, அந்தத் தாள்களுக்குப் புகை போடப்பட்டுள்ளது அல்லது வெயிலில் வைக்கப்பட்டுள்ளன. ஆனால் அவற்றில் எழுதப்பட்டுள்ள எழுத்துக்கள் புதியதாக "பளிச்"செனத் தோற்றமளிக்கின்றன. மேலும் அவற்றில் ரசீது எண்கள் உள்ளிட்ட அடிப்படைத் தகவல்கள் இல்லை. இத்தகைய விஷயங்களும் இந்த ஆவணங்கள் போலியானவை என்று நிரூபிக்கின்றன" என்று பட்டவர்த்தனமாக நீதிபதி குன்ஹா வெளிப்படுத்தியுள்ளார்.

ஒரு கம்பெனியின் பெயரில் சொத்து வாங்குவதென்றால், அதற்கான விற்பனை பத்திரத்தில் அந்த நிறுவனத்தின் பொது முத்திரை (Common Seal) பதிக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த வழக்கில் சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய கம்பெனிகள் வாங்கிய சொத்துக்களின் எந்த விற்பனைப் பத்திரத்திலும்,

அந்தக் கம்பெனிக்கான பொது "முத்திரை" (Common Seal) வைக்கப்படவே இல்லை என்பதையும் நீதிபதி அவர்கள் தனது தீர்ப்பில் எடுத்துக்காட்டியதோடு, அந்தக் கம்பெனிகளின் சரியான முகவரியையும் அந்த விற்பனைப் பத்திரங்களிலே எடுத்துக் காட்டவில்லை என்பதையும் குறிப்பிட்டு, இவ்வாறு சட்டத்திற்குப் புறம்பான முறையில் இந்தக் கம்பெனிகள் உருவாக்கப் பட்டிருக்கின்றன, சொத்துகள் வாங்கப்பட்டிருக்கின்றன என்பதையும் நீதிபதி விளக்கியிருக்கிறார்.

ஜெ. தரப்பினர் மீது தொடுக்கப்பட்ட சொத்துக் குவிப்பு ஊழல் வழக்கிற்கு உள்ள அடிப்படையைப் பற்றிச் சட்டம் அறிந்த யாரும் கேள்வி எழுப்ப முடியாது. தொடக்க நிலையிலேயே ஜெயலலிதா உயர் நீதிமன்றத்திலே முன் ஜாமீன் கோரியபோது, அதனை நிராகரித்து, ஜெயலலிதா மீது சாட்டப்பட்டுள்ள ஊழல் வழக்கிற்கு அடிப்படை ஆதாரம் உள்ளது என்றும், அரசியல் பகை காரணமாக இந்த வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது என்று கூறுவது சரியல்ல என்றும், சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை மறந்துவிட முடியாது.

பெங்களூர் தனி நீதிமன்றத் தீர்ப்பின் தொடர்ச்சியாக ஜெயலலிதா தரப்பினர் சிறைக்கனுப்பப்பட்டதும் - நீதிமன்றத் தீர்ப்பை எதிர்க்க வேண்டுமானால் நீதிமன்றங்களின் வாயிலாகவே சட்ட ரீதியாகப் போராடிப் பரிகாரம் காண வேண்டுமே தவிர, நடுத்தெருவுக்கு வந்து நாகரிகம் மறந்து நடுங்கா நாக்குடன் நாலாந்தர மொழியில் வசை பொழியக் கூடாது என்பது தெரிந்திருந்தும் - திட்டமிட்டு, தீர்ப்பையும், நீதிமன்றத்தையும், நீதிபதியையும் எண்ணக் கூசும் அளவுக்கு இழிவுபடுத்தி, சொல்லக் கூடாத வார்த்தைகளால் அ.தி.மு.க.வினர் அர்ச்சித்ததை நாடு அதிர்ச்சியோடு கண்டது. தொடர்ந்து நடத்தப்பட்ட வன்முறை வெறியாட்டங்கள், அதிகார ஆணவச் சேட்டைகள், பொது அமைதிக்குப் பங்கம் விளைவித்தும் பொதுச் சொத்தைச் சேதப்படுத்தியும் ஆளுங்கட்சியினர் சட்டம் ஒழுங்கைச் சல்லிக்காசுக்குக் கூட மதிக்காமல் அரங்கேற்றிய கோரக் காட்சிகள், பாதுகாப்புப் பணியைக் கடமை உணர்வோடு ஆற்றிட வேண்டிய காவல் துறையினர் செயலிழந்து வேடிக்கை பார்த்த விபரீதங்கள் அனைத்தையும் சந்தித்துத் தீர வேண்டிய கட்டாயத்திற்குத் தமிழக மக்கள் ஆளாயினர்.

நீதிமன்றத் தீர்ப்பை அலட்சியப்படுத்தி, அவமதித்து தெருப் போராட்டங்களின் மூலம் தீர்வு காணலாம் என்று முயற்சிப்பது, ஒரு சிலரைத் திருப்திப்படுத்திட வேண்டுமானால் பயன்படுமே தவிர, உருப்படியான விளைவேதும் ஒருக்காலும் ஏற்படாது. பொய் வழக்கு, சூழ்ச்சி, வஞ்சகம் என்றெல்லாம் வாய்க்கு வந்தபடி சாலை ஓரத்திலே நின்று சப்தம் போடுவதால் நீதிமன்றத்தின் தீர்ப்பு மாறிவிடாது. இந்திய உச்ச நீதிமன்றம், "நீங்கள் எவ்வளவு பெரியவராக இருந்த போதிலும் உங்களைவிடச் சட்டம் பெரியது" என்று அறிவுறுத்தியதை அனைவரும் உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும். சட்டத்தின் ஆட்சி (ரூல் ஆப் லா) என்பதே நீதிமன்றத்தையும் உள்ளடக்கியதுதான். எனவே நீதிமன்றத் தீர்ப்பை நிந்திப்பது நாம் பாதுகாப்பாகவும், நிம்மதியாகவும் அமர்ந்திருக்கும் ஜனநாயகமெனும் நாற்காலியின் ஒரு காலை உடைப்பதற்குச் சமம் ஆகும்.

பெங்களூர் தனி நீதிமன்றத் தீர்ப்பைப் பற்றி நான் தற்போது விவரித்திருப்பதைத் தவிர ஏடுகள் சில என்ன கருத்து தெரிவித்தன என்று பார்த்தால், "ஆனந்த விகடன்" - "தீர்ப்பு தரும் பாடம்" என்ற தலைப்பில் எழுதியுள்ள தலையங்கத்தில் "இது நிச்சயம் மகத்தான தீர்ப்பு! நீதி நிலை நிறுத்தப்பட்டிருக்கிறது; நீதிமன்றங்கள் மீதான நம்பிக்கை உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தின் தீர்ப்பு இந்திய அரசியல் வரலாற்றில் மிக மிக முக்கியமானது" என்று தெரிவித்திருந்தது.

"டைம்ஸ் ஆப் இந்தியா" ஆங்கில நாளேடு 2-10-2014 அன்று எழுதிய தலையங்கத்தில், "தண்டனை நியாயமற்றது என்று கருதினால், இந்தியாவில் நடைமுறையில் உள்ள சட்டங்களின்படி மேல்முறையீடு செய்துகொள்வதற்கான வழிமுறைகள் நிரம்ப இருக்கின்றன. சட்டத்தின் முடிவுகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டுமென்று கட்சியின் தொண்டர்களுக்கு, தமிழகத்தில் ஆளுங்கட்சியாக உள்ள அ.தி.மு.க.வின் தலைமை முறையாக அறிவுறுத்த வேண்டும்" என்றும் விளக்கமாக கூறியிருந்தது.

"ஜெயலலிதாவின் சொத்துக்குவிப்பு வழக்கைக் கர்நாடக மாநிலத்திற்கு மாற்றியதுகூட, 2003ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் பாரபட்சமற்ற நியாயமான தீர்ப்பு கிடைக்காது என்ற நிலையில் உச்ச நீதிமன்றமே நியாயமான தீர்ப்பு கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த வழக்கினைக் கர்நாடக மாநிலத்திற்கு

மாற்றியது.” இந்த விவரங்களையெல்லாம் “இந்து” நாளேடே வெளியிட்டுள்ளது.

அதே “இந்து” ஆங்கில நாளிதழில் “சஞ்சய் ஹெக்டே” என்ற உச்ச நீதிமன்ற வழக்கறிஞர் “பிரதமர் முதல் சாதாரண போலீஸ்காரர் வரை - செருப்புதைக்கும் தொழிலாளி முதல் சக்கரவர்த்தி வரை சட்டம் என்பது அனைவருக்கும் ஒன்றுதான். நீங்கள் எவ்வளவு பெரியவராக இருந்தாலும், சட்டம் என்பது எப்போதும் உங்களைவிட உயர்ந்தது என்பதை உணர வேண்டும்” என்று எழுதியிருந்தார்.

“பிரண்ட் லைன்” இதழில், டி.எஸ். சுப்பிரமணியன் எழுதிய ஒரு கட்டுரையிலேயே இதுபற்றிக் கூறும்போது, “தீய நோக்கம் என்று யாரும் குறைசொல்லாமல் இருந்திடும் வகையில் புலனாய்வு செய்யும் அதிகாரிகள் ஜெயலலிதா மற்றும் குற்றம் சாட்டப்பட்டோரின் சொத்துக்களை மதிப்பிடும்போது, மிகையாக மதிப்பிட்டுவிடக் கூடாது என்று தி.மு. கழக அரசு தெளிவாக அறிவுறுத்தியிருந்தது. இதுதான் வழக்கை வலிமையாக்கியிருக்கிறது” என்று தெரிவித்திருந்தார்.

உடன்பிறப்பே, இந்த நீண்ட தொடர் கடிதத்தைக் கனத்த இதயத்தோடு நான் முடிப்பதற்கு முன்பு, பெங்களூர் சிறப்பு நீதிமன்ற நீதிபதி குன்ஹா அவர்கள் “வாய்மையே வெல்லும்” என்ற நோக்கில் நீதிக்குக் கட்டுப்பட்டு, யாருக்கும் அஞ்சாமல் வழங்கிய தீர்ப்புக்குத் தலைவணக்கம் செய்து, இந்தத் தீர்ப்பினை வெளிக் கொணரப் பாடுபட்ட கழக வழக்கறிஞர்கள் சண்முகசுந்தரம், குமரேசன், சரவணன், தாமரைச் செல்வன், பாலாஜி, நடேசன் ஆகியோருக்கும், கடமை உணர்வோடு செயல்பட்ட விசாரணை அதிகாரிகள் நல்லம்ம நாயுடு, துக்கையாண்டி, அரசு வழக்கறிஞராகத் திறம்பட பணியாற்றிய ஆச்சார்யா, முருகேஷ் மராடி போன்றவர்களுக்கெல்லாம் என் நன்றிகளையும் பாராட்டுகளையும் குவித்து இந்தத் தொடரை நிறைவு செய்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

26-10-2014

3933. பதவி நிலைத்திடவாவது; பதறி எழுவீர்!

உடன்பிறப்பே,

வட கிழக்குப் பருவம் தொடங்கியுள்ளதை அடுத்து, தமிழகத்தில் கடந்த ஒரு வார காலமாகப் பெய்துவரும் பெரு மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டதோடு, அடித்தட்டு மக்களுடைய வாழ்வாதாரம் சிதறுண்டு, பிழைப்பதற்கான வழிகளனைத்தும் அடைக்கப்பட்டு, என்ன செய்வதென்றே தெரியாமல் தேம்பிக் கிடக்கிறார்கள். சென்னையில் இடைவிடாமல் தொடர்ந்து கொட்டித் தீர்த்த மழையினால் தாழ்வான குடியிருப்புகள், குடிசைப் பகுதிகள் தண்ணீரில் தத்தளிக்கின்றன. பெருமழை காரணமாக டெல்டா மாவட்டங்கள் உட்பட தமிழகம் முழுவதிலுமுள்ள பல லட்சம் ஏக்கர் பயிர்கள் நீரிலே மூழ்கி அழுகிக் கொண்டிருக்கின்றன. முதல் அமைச்சரோ, மற்ற அமைச்சர்களோ, அதிகாரிகளோ ஓரிருவரைத் தவிர வெள்ளப் பகுதிகளைப் பார்வையிடவில்லை. நிவாரணப் பணிகளிலும் அக்கறை காட்டவில்லை. அனைவரும் "நேர்த்திக்கடன்" செலுத்துவதிலேதான் நேரத்தைக் கழிக்கிறார்கள்.

காவிரி டெல்டா மாவட்டங்களான தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் கன மழை காரணமாக 6 இலட்சம் ஏக்கரில், சம்பா, தாளடிப்பருவ நெற்பயிர்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளன. இந்த மாவட்டங்களில் 12 லட்சம் ஏக்கரில் சம்பா மற்றும் தாளடி பருவ நெல் சாகுபடி செய்திருந்தார்கள். இயந்திர நடவு செய்யப்பட்டு 20 நாட்களே ஆன நிலையில், தொடர் மழையினால் 6 இலட்சம் ஏக்கர் பயிர் முழுமையாகத் தண்ணீரில் மூழ்கியுள்ளது. கரூர் மாவட்டத்தில் அமராவதி ஆற்றில் உபரி நீர் திறக்கப்பட்டதால், வெள்ள நீர் வெளியேறி பசுபதி பாளையம் தரைப் பாலம் மூழ்கி, அந்த வழியாகப் போக்குவரத்து நிறுத்தப்பட்டு விட்டதாகத் தகவல் வந்துள்ளது. திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஒன்றியம், திருத்துறைப் பூண்டி பகுதி உட்பட மாவட்டம் முழுவதும் 2 லட்சம்

ஏக்கர் பயிர்களைத் தண்ணீர் சூழ்ந்துள்ளது. இதுபற்றி திருவாரூர் மாவட்ட அனைத்து விவசாய சங்கங்களின் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் பி.ஆர்.பாண்டியன், "பாசனப் பகுதிகளில் பெரும்பாலான வயல்களில் தண்ணீர் சூழ்ந்துள்ளது. தற்போதைய நிலைக்குப் பொதுப்பணித் துறை முழு பொறுப்பேற்க வேண்டும். பல முறை தேவையான இடங்களை விவசாயிகள் சுட்டிக்காட்டித் தூர்வாரவும், பராமரிக்கவும் கேட்டுக்கொண்டும் செய்யவில்லை" என்று வேதனையைத் தெரிவித்திருக்கிறார். காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்கப் பொதுச்செயலாளர் கீவளூர் தனபால் அவர்களும் "நாகை மாவட்டம் முழுவதும் தற்போது 60 சதவிகித பயிர்கள் மழை நீரால் சூழப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு மறு முதலீடு செய்வதற்கு நிதி ஆதாரத்தை ஒதுக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார். நாகை மாவட்டத்தில் வேதாரண்யம், மயிலாடுதுறை, சீர்காழி ஆகிய பகுதிகளில் வெள்ளம் காரணமாக போக்குவரத்து முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. வேதாரண்யம், கோடியக்கரை உள்ளிட்ட பத்துக் கிராமங்களைச் சேர்ந்த ஐந்தாயிரம் மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்லவில்லை. அது போலவே தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் பகுதியில் உள்ள ஆறாயிரம் மீனவர்களும் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லவில்லை. மீனவர்கள் வாழ்வாதாரத்தைப் பறிகொடுத்து வாடிக்கொண்டிருக்கிறார்கள். நெல்லை, தூத்துக்குடி, குமரி மாவட்டங்களில் பெருமழை காரணமாகப் பல ஆயிரம் ஏக்கர் நடவு செய்யப்பட்ட நெற்பயிர்கள் பெரிதும் நாசமாகி விட்டதாகவும், குறிப்பாக அம்பாசமுத்திரம், தென்காசி, கடையம் மற்றும் கடையநல்லூர் பகுதிகளில் அறுவடைக்குத் தயாராக இருந்த பல ஆயிரம் ஏக்கர் நிலங்களில் நெற்பயிர்கள் சேதமடைந்து மீண்டும் முளைவிட்டு விட்டதால், ஆயிரக்கணக்கான விவசாயிகள் வேதனையில் மூழ்கி இருப்பதாகவும், 2006-2011ஆம் ஆண்டுகளில் தி.மு. கழக ஆட்சியில் இவ்வாறு அறுவடைக்குத் தயாராக இருந்த பயிர்கள் இதேபோன்று பாதிக்கப்பட்ட போது, விவசாயிகளுக்குக் கழக அரசு ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 5 ஆயிரம் வீதம் உடனடியாக நிவாரணமாக அளித்தது என்றும், தற்போதும் அது போன்ற உரிய நிவாரணம் விவசாயிகளுக்குக் கிடைத்திட வேண்டுமென்ற கோரிக்கையை நான் முன்னெடுக்க வேண்டுமென்று ராதாபுரம் முன்னாள் சட்டப்பேரவை கழக உறுப்பினர் எம். அப்பாவு எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்.

சென்ற மழையின் போது திருவாரூர் கமலாலயத்தின் வடக்குக்கரை இடிந்து விழுந்தது. இந்த ஆட்சியில் வடக்குக் கரையைச் சீரமைக்கும் பணி நீண்ட நாட்களாக நிறைவேற்றப் படாததால் நானே என்னுடைய சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அந்தப் பணிக்காக நிதி ஒதுக்குவதாக மாவட்ட ஆட்சியரிடம் தெரிவிக்குமாறு கூறியபோது, அறநிலையத் துறை சார்பிலும், பின்னர் சுற்றுலாத் துறையின் சார்பிலும் அந்தப் பணிகளை நிறைவேற்ற விருப்பதாகவும், ஒப்பந்தப் புள்ளி அதற்காகக் கோர இருப்பதாகவும் தெரிவித்து விரைவில் செய்து விடுவதாக அதிகாரிகள் தெரிவித்துவிட்டார்கள். ஆனால் இன்றளவும் அந்தப் பணிகள் நிறைவு செய்யப்படவில்லை. இந்த நிலையில் தற்போது பெய்த மழையில், கமலாலயத்தின் மேல்கரையும் இடிந்து விழுந்துவிட்டதாகத் தகவல் வந்துள்ளது. இதற்கிடையே பணிகளை இந்த அரசு செப்பனிடுகிறார்களோ என்னவோ, அங்கே யாரும் செல்ல முடியாத அளவில் “ 144 தடை உத்தரவு” பிறப்பித்திருக்கிறார்களாம்.

சென்னை மாநகரிலும், அதன் சுற்றுப் பகுதிகளிலும் கடந்த 17ஆம் தேதி முதல் கன மழை விட்டுவிட்டுப் பெய்து கொண்டிருக்கின்றது. சென்னையில் கிண்டி, எழும்பூர், மைலாப்பூர், வேளச்சேரி, திருவல்லிக்கேணி, பெரம்பூர், திருவொற்றியூர், திருவான்மியூர் உள்ளிட்ட பகுதிகளில் பெரு மழை காரணமாக சாலைகள் அனைத்தும் குண்டும், குழியுமாக மாறிப் போக்குவரத்து மிக அதிக அளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளது. நாளேடுகளில் சென்னை மாநகரில் பல பகுதிகளில் சாலைகள் எவ்வாறு இந்த மழையில் பாதிக்கப்பட்டுப் பள்ளங்களாகக் காட்சி அளிக்கின்றன என்பதைப் புகைப்படம் எடுத்து வெளியிட்டிருக்கிறார்கள். ரிப்பன் மாளிகைச் சாலை சேதமடைந்திருப்பதும் புகைப்படத்தோடு வெளியாகி இருக்கிறது. மழை நீர் வடிகால் முறையாகப் பராமரிக்கப்படாததே சென்னை மாநகரின் முக்கியச் சாலைகளில் வெள்ளம் பெருகி, தண்ணீர் தேங்கக்காரணம் என்று வாகன ஓட்டிகளும், பாதசாரிகளும் கூறுகிறார்கள். வியாசர்பாடி செல்லும் சாலையில் கழிவு நீர்க் கால்வாய்கள் பல இடங்களில் மூடப்படாமல் திறந்து கிடக்கின்றன. வாகனங்கள் மணிக் கணக்கில் ஸ்தம்பித்து முன்னேயும் செல்ல முடியாமல், பின்னேயும் திரும்ப முடியாமல் தேங்கி நிற்கின்றன. பள்ளி மாணவர்களின் நிலையோ பரிதாபமாக உள்ளது. பள்ளிகள் நடைபெறுமா? விடுமுறையா? என்று

விசாரிப்பதிலேயே அவர்களின் நேரம் கழிந்து கொண்டிருக்கின்றது. மழை காரணமாகவோ, மின் பற்றாக்குறை காரணமாகவோ பல மணி நேரங்களுக்கு மின்வெட்டு நீடிக்கிறது. திருவல்லிக்கேணி, ராயபுரம், சேப்பாக்கம், தண்டையார் பேட்டை போன்ற பகுதிகளில் மழை நீருடன் சேர்ந்து கழிவு நீரும் கலந்தோடுவதால் சுகாதாரச் சீர்கேடு தலைதூக்கியுள்ளது. 15 பேருக்கு வாந்தி, பேதி ஏற்பட்டு மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். மேலும் மலேரியா, மூளைக்காய்ச்சல், டெங்கு போன்ற நோய்களும் வேகமாகப் பரவி வருவதாகச் செய்திகள் வருகின்றன. உடல் மற்றும் மூட்டு வலியுடன் ஆளை முழுவதும் முடக்கிப் போடுகின்ற ஒரு மர்மக் காய்ச்சலும் பரவி வருவதாகச் செய்திகள் வெளியாகின்றன. நோயைக் கட்டுப்படுத்த வேண்டிய மாநகராட்சி சுகாதாரத் துறை அலட்சியமாக இருக்கிறது.

சென்னையில் தொடர் மழை காரணமாகப் பழுதடைந்துள்ள சாலைகளை உடனே சீரமைப்பதற்காக 87 இலட்சம் ரூபாய்க்கு வாங்கப்பட்ட "கோல்ட் மிக்ஸ் கலவை" (கோல்ட் மிக்ஸ் கலவை என்றால், மழை காலத்திலும் விரைவாக உலரக்கூடிய நவீன காங்கிரீட் கலவை) ஒரு சில இடங்களில் மட்டும் ஏதோ பெயருக்குப் பயன் படுத்தப்பட்டிருக்கிறதே தவிர, மீதம் என்னவாயிற்று என்று சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

மழை சேதங்கள் பெருமளவில் இவ்வாறு ஏற்பட்டிருக்கும்போது, அதைப் பற்றி மாநகராட்சி மன்றக் கூட்டத்தில் பேசுவதற்காக முனைந்த தி.மு. கழக உறுப்பினர்களைத் தமிழகச் சட்டமன்றத்தில் தற்போது வழக்கமாகக் கடைப்பிடிக்கப்படும் பாணியில், மாநகராட்சி மேயர் கூண்டோடு வெளியேற்றியிருக்கிறார். சென்னை மாநகராட்சி சார்பில் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் இன்றைய முதலமைச்சர் பன்னீர் செல்வத்தின் பெயரைக் குறிப்பிடாமல், மக்கள் முதல்வர் புரட்சித் தலைவி வழிகாட்டுதலின்படி என்று குறிப்பிடப்பட்டதைப் பற்றிக் கூட கேள்வியெழுப்ப கழக உறுப்பினர்களுக்கு அனுமதி தரவில்லையாம்.

தமிழகத்திலே உள்ள நாளேடுகள் எல்லாம் தமிழக அரசின் மெத்தனத்தையும், சென்னை மாநகராட்சியின் அலட்சியத்தையும் செயலின்மையையும் விமர்சித்து எழுதியிருக்கிறார்கள். குறிப்பாக இன்றைய "டைம்ஸ் ஆப் இந்தியா" நாளேடு "Corporation

pats itself as City battles rain woes" (சென்னை மாநகரம் மழையினால் ஏற்பட்டிருக்கும் துன்பங்களோடு போராடிக் கொண்டிருக்கும்போது, சென்னை மாநகராட்சி தனக்குத்தானே பாராட்டிக் கொண்டிருக்கிறது) என்ற தலைப்பில் ; கடந்த ஒரு வாரமாகச் சென்னையில் பெய்து வரும் கனமழையின் காரணமாக மாநகரத்தின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. ஆனால் சனிக்கிழமை அன்று நடைபெற்ற மாநகராட்சி மன்றக் கூட்டத்தில் கனமழையால் ஏற்பட்டிருக்கும் சேதங்களைப் பற்றி விவாதிப்பதை முற்றிலும் தவிர்த்துவிட்டு மாநகராட்சியின் மூன்றாண்டு சாதனைகளைப் பேசுவதற்கு முக்கியத்துவம் தரப்பட்டிருக்கிறது என்றெல்லாம் எழுதியுள்ளது. ரோமாபுரி தீப்பற்றி எரியும்போது, பிடில் வாசித்துக் கொண்டிருந்த நீரோவைப் போல, மாநகர மக்கள் எண்ணற்ற பிரச்சினைகளினால் திக்கித் திணறிக் கொண்டிருக்கும்போது, மேயர் சாதனை சாகசத்தில் சந்தோஷப்பட்டிருக்கிறார்.

டெல்டா மாவட்டங்களில் வழக்கமாக அக்டோபர் மாதத்தில் சராசரியாக 24.64 செ.மீ. மழைதான் பெய்யும் என்றும், ஆனால் இந்த ஆண்டு இதுவரை 32.96 செ. மீ. மழை பெய்திருப்பதாகவும் ஏடுகளில் செய்தி வந்துள்ளது. இந்தப் பெருமழையிலும், தீபாவளி நாளன்று மெரினா கடலில் குளிக்கச் சென்ற பதினேழே வயதுடைய மூன்று மாணவர்கள் அலையிலே அடித்துச் செல்லப்பட்டுப் பலியாகியிருக்கிறார்கள்.

சென்னைப் புறநகர் பகுதியான சோழிங்கநல்லூர், காரப்பாக்கம், ஒக்கியம் துரைப்பாக்கம், மேட்டுக்குப்பம், பெருங்குடி ஆகிய பகுதிகளில் தண்ணீர் அதிக அளவுக்கு இன்னமும் தேங்கிக் கிடக்கிறது. காரப்பாக்கத்தில் உள்ள கங்கையம்மன் கோவிலையும் வெள்ளம் சூழ்ந்ததால், கோவிலில் பூஜைகள் எதுவும் இரண்டு நாட்களாக நடைபெறவில்லையாம். அம்பத்தூர் மேனாம்பேடு சுருக்கு பகுதியில் பாதாள சாக்கடைக்காகத் தோண்டிய பள்ளங்கள் இன்னும் மூடப் படாமல் கிடந்ததால், மழைநீரில் அந்தப் பள்ளங்கள் மூழ்கி, சாலையில் பயணம் செய்வோர் பாதிக்கப்படுகிறார்கள் என்றும் செய்தி வந்துள்ளது.

கழகத் தோழர்கள், குறிப்பாகக் கழகச் சட்டப் பேரவை உறுப்பினர்கள், கழகப் பொருளாளர் தம்பி ஸ்டாலின் போன்றவர்கள்

வெள்ளப் பகுதிகளைப் பார்வையிடச் சென்றால், உடன் வந்து பொதுமக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க ஒத்துழைக்க வேண்டிய அதிகாரிகள், ஆளுங்கட்சியினருக்குப் பயந்துகொண்டு ஓடி ஒளிகிறார்களாம்.

தமிழகத்தில் பெருமளவில் சேதம் ஏற்பட்ட நிலையிலும் தமிழக அரசு அதனைக் கண்டுகொள்ளவோ, கவலை அடையவோ இல்லை என்றும், எந்தவிதமான நிவாரணப் பணிகளும் நடைபெறவில்லை என்றும் அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் அடுக்கடுக்காகப் புகார் கூறிய பிறகு, அ.தி.மு.க. அரசுக்கு திடீரென்று ஞானோதயம் ஏற்பட்டு, அவசரக் கோலத்தில் வெள்ளச் சேதத்தைப் பார்வையிட்டு அறிக்கை கொடுக்க 31 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை அனுப்பி அவர்களை ஒரே நாளில் மாவட்டம் முழுவதும் பயணம் செய்து மழை, வெள்ளச் சேதம் பற்றி அறிக்கை தரவேண்டுமென்று பணித்திருக்கிறார்கள். இந்த அதிகாரிகளின் மதிப்பீட்டினையொட்டி மாநில அளவில் வெள்ளச் சேதம் மதிப்பிடப்பட்டு, மத்திய அரசிடம் நிவாரண நிதியைப் பெறுவது என்று முடிவு செய்திருக்கிறார்கள். தற்போது வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாநில அரசின் சார்பில் என்ன உதவி செய்யப் போகிறார்கள்? எந்த அளவுக்கு நிவாரணத் தொகை வழங்கப்போகிறார்கள் என்பதைப் பற்றி எதுவும் தெரிவிக்காமல் மத்திய அரசிடமிருந்து நிதியைப் பெறுவதிலேயே குறியாக உள்ளார்கள். பெருமழை - வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு "உடனடி நிவாரணம்" என்பது மிக மிக முக்கியமானது என்பதையே ஆட்சியாளர்கள் மறந்துவிட்டார்கள் போலும்!

திண்டுக்கல் மாவட்டத்தின் பெரும்பாலான பகுதியில் - குறிப்பாகப் பழனி மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் பெருமழை காரணமாக மக்கள் தங்கள் வீடுகளை இழந்து பொது இடங்களில் தங்கியிருக்கிறார்களாம். எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு இந்த ஆண்டு சேதம் ஏற்பட்டுள்ளதாம். திண்டுக்கல் மாவட்ட அமைச்சர் நத்தம் விசுவநாதன் வெள்ளப் பாதிப்புகளைப் பார்வையிடவோ, நிவாரணப் பணிகளைக் கவனிக்கவோ இதுவரை வரவில்லை. இந்நாள் முதல்வர் பன்னீர்செல்வம் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட வருவதாகக் கூறப்பட்டு, மக்கள் எல்லாம் காத்திருந்திருக்கிறார்கள். ஆனால் பன்னீர்செல்வம் மதுரை வரை

வந்தவர், வெள்ளப் பாதிப்புகளைப் பற்றிக் கவலைப்படாமல் சென்னை திரும்பிவிட்டார்.

சேலம் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் தொடர் மழை காரணமாகப் பல்வேறு நோய்த் தாக்குதல்களுக்குப் பொதுமக்கள் ஆட்பட்டு, சுமார் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வெளி நோயாளிகளாக சேலம் அரசு மருத்துவமனையிலே சிகிச்சை பெற்று வருகிறார்கள். 140 பேர் உள் நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும் திருச்சி, நெல்லை, பழனி போன்ற நகரங்களிலும் காய்ச்சல் வேகமாகப் பரவி வருகிறது. தமிழகமே "காய்ச்சல்" பூமியாக மாறி வருவது கண்டு தீவிரமான தடுப்பு நடவடிக்கைகளைத் திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டிய அரசு செயலற்றிருக்கிறது.

நெல்லையில் கடந்த ஒரு வாரமாகப் பெய்து வரும் மழை நீர் வீணாக, தாமிர பரணியில் கலக்கிறது. தீபாவளிக்கு முன்தினமே "குளம் உடையப்போகிறது, அதிகாரிகளே; வந்து மீட்டுத் தாருங்கள்" என்று விவசாயிகள் கண்ணீருடன் கூக்குரல் இட்டபோதும், உதவிக்கு ஓடிவராத அதிகாரிகள் குளம் உடைந்து, ஊத்துமலை கிராமம் முழுதும் தண்ணீரில் மிதக்கின்ற நேரத்தில், அதைப் பார்வையிட அதிகாரிகள் வந்தபோது, அவர்களைக் கிராம மக்கள் முற்றுகையிட்டிருக்கிறார்கள். அதுபோலவே பழனி பகுதியிலேகூட ஆளுங்கட்சிச் சட்டப்பேரவை உறுப்பினர் ஒருவர் பெரிதும் பாதிக்கப்பட்ட கோம்பைப்பட்டிப் பகுதியைப் பார்வையிட வந்தபோது கிராம மக்கள் அவரை முற்றுகையிட்டிருக்கிறார்கள். ஆளுங்கட்சியினரின் அலட்சியம் மக்களிடையே ஆத்திரத்தை ஏற்படுத்தி வருகிறது. தாமிரபரணி பாசன உரிமைப் பாதுகாப்பு பேரவைத் தலைவர் அ.வியனரசு கூறும் போது, "பொதுப்பணித் துறை அதிகாரிகளின் அக்கறையின்மையால் விவசாயக் குளங்களுக்குத் தண்ணீர் திருப்பிவிடுவதற்குப் பதிலாக, வினாடிக்குப் பத்தாயிரம் கன அடி வீதம் மழை நீர் வீணாகக் கடலில் கலக்கிறது. இதுவரையிலும் 5 டி.எம்.சி. தண்ணீர் யாருக்கும் பயனின்றிக் கடலுக்குச் சென்று விட்டது. நெல்லையில் நதி நீர் இணைப்புக் கால்வாய்த் திட்டத்தைச் செயல்படுத்தியிருந்தால், தண்ணீரை அங்குத் திருப்பி விட்டிருக்கலாம். ஆனால் கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட அந்தத் திட்டத்தையும் தற்போதைய

தமிழக அரசு செயல்படுத்தாமல் புறக்கணிக்கிறது" என்று கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

கடந்த பத்து நாட்களாகப் பெய்த பெரு மழை காரணமாகத் தமிழகம் முழுவதும் என்ன பாடுபடுகிறது என்பதை ஒட்டுமொத்தமாக முடிந்தவரை தொகுத்துக் குறிப்பிட்டுள்ளேன். தமிழகத்தில் ஆட்சி என்று ஒன்றிருக்கிறது என்பதைக் காட்டிக் கொள்வதற்காகவாவது, ஆட்சியினர் பயத்திலிருந்து விடுபட்டு, உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவர்களையெல்லாம் அழைத்துப் பேசி, தேவையான வெள்ள நிவாரணப் பணிகளை விரைவுபடுத்திட வேண்டும். மத்திய அரசை எதிர்பார்த்துக் காத்திருக்காமல், மாநில அரசின் சார்பில் இதற்காகத் தனியாக சிறப்பு நிதி இருக்கும், நிதித் துறைச் செயலாளரை அழைத்துப் பேசினால், அவர் நிவாரண நிதிக்காக முதற்கட்டமாக அறிவிக்க உதவுவார். ஓரிரண்டு நாட்களில் அந்த நிதியை ஒதுக்கிட ஆவன செய்ய வேண்டும். மேலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு நிவாரணமாக எத்தனை ஆயிரம் ரூபாய் தரப்படும் என்பதையும் அறிவிக்க வேண்டும். ஒவ்வொரு அமைச்சரையும் ஒவ்வொரு மாவட்டத்திற்கு உடனே அனுப்பிப் பாதிக்கப்பட்ட மக்களைச் சென்று பார்த்து ஆறுதல் வழங்குவதோடு, அவர்களைக் காப்பாற்றுவதற்கான நடவடிக்கையை முடுக்கிவிட வேண்டும். இக்கட்டான இந்த நேரத்தில் நமது மக்களைக் கைவிட்டுவிடக் கூடாது. இந்த நடவடிக்கைகளை யெல்லாம் "மக்கள் முதல மைச்சர், புரட்சித் தலைவி, அம்மா" அவர்களின் வலியுறுத்தல்படிச் செய்வதாகத் தவறாமல் அறிவிப்பாக ஏடுகளுக்குப் பன்னீர்செல்வம் "பயப்படாமல்" தரலாம். அப்போதுதான் இருக்கும் பதவி நிலைத்திடக் கூடும்!

அன்புள்ள,

மு.க.

27-10-2014

3934. நம்பிக்கைக் கருவூலம்தானே நமது கழகம்!

உடன்பிறப்பே,

பால் விலை உயர்வு, மின் கட்டண உயர்வு ஆகியவற்றைத் திரும்பப் பெறக் கோரியும், பெரு மழை காரணமாகத் தமிழகம் முழுவதும் இலட்சக்கணக்கான ஏக்கரில் பாழாகி கிடக்கும் பயிர்களால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நிவாரண உதவி உடனடியாக அறிவிக்கக் கோரியும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் வரும் நவம்பர் 3ஆம் தேதியன்று காலை 10 மணியளவில் கண்டன "ஆர்ப்பாட்டப் போர்ப்பாட்டு" நடத்துவதென அறிவிக்கப்பட்டுள்ளது. பால் விலை லிட்டருக்கு பத்து ரூபாய் அ.தி.மு.க. ஆட்சியில் உயர்த்தப்பட்டுள்ளது. பால் விலை எந்த ஆட்சிக் காலத்திலும் இது போல லிட்டருக்கு பத்து ரூபாய் உயர்வை ஒரே நேரத்தில் செய்ததில்லை. ஜெயலலிதா ஆட்சிக்கு வந்த இந்த மூன்றரை ஆண்டுக் காலத்தில் தற்போது பாலின் விற்பனை விலையை உயர்த்துவது இரண்டாவது முறை. முதலில் ஆட்சிக்கு வந்தவுடன் 2011ஆம் ஆண்டிலேயே, கழக ஆட்சியில் பாலின் விலை லிட்டர் ஒன்றுக்கு 17 ரூபாய் 75 பைசா என்றிருந்த நிலையினை மாற்றி, 24 ரூபாயாக, அதாவது லிட்டர் ஒன்றுக்கு 6 ரூபாய் 25 பைசா அளவுக்கு உயர்த்தியிருக்கிறார்கள். தற்போது 24 ரூபாய் என்பதிலே யிருந்து மேலும் லிட்டருக்கு 10 ரூபாய் உயர்த்தி, 34 ரூபாய் என்று ஆக்கியிருக்கிறார்கள். இதுபற்றி இந்நாள் முதல்வர் பன்னீர்செல்வத்தைக் கேட்டால், "எங்கள் அம்மா, லிட்டருக்கு 6 ரூபாய் என்று உயர்த்தினார், அதற்குமேல் 10 ரூபாய் என்று உயர்த்தினால் தானே, நான் அம்மா வழிப்படி நடப்பதாகப் பொருள்; எனவேதான் லிட்டருக்கு பத்து ரூபாய் என்று உயர்த்தியிருக்கிறேன்" என்று சொல்லக்கூடும்!

இதுகுறித்து பன்னீர்செல்வம் விடுத்த அறிக்கையில் 1-1-2014 முதல் பாலின் கொள்முதல் விலையை லிட்டருக்கு 3

ரூபாய் உயர்த்திய போது, பாலின் விற்பனை விலையில் எந்த மாற்றமும் செய்யப்பட வில்லை என்று தெரிவித்திருக்கிறார். அப்போது ஏன் பாலின் விற்பனை விலையில் மாற்றம் செய்யவில்லை? ஏழையெளிய பாமர மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதற்காகத்தானே அப்போது பாலின் கொள்முதல் விலையை உயர்த்தி விட்டு, விற்பனை விலையை உயர்த்தாமல் இருந்தீர்கள்? ஆனால் தற்போது மட்டும் பாலின் கொள்முதல் விலையை பசும்பாலுக்கு

லிட்டர் ஒன்றுக்கு 5 ரூபாய் என்றும், எருமைப் பாலுக்கு 4 ரூபாய் என்றும் உயர்த்தி விட்டு, விற்பனை விலையை 10 ரூபாய் என்று உயர்த்தியிருக்கிறீர்களே, அதனால் ஏழையெளிய நடுத்தரக் குடும்பத்தினர் பாதிக்கப்பட மாட்டார்களா? ஏழையெளிய நடுத்தர மக்கள் மீது 2014 ஜனவரியில் இருந்த அக்கறை, தற்போது அற்றுப் போய் விட்டதா? கொள்முதல் விலையை லிட்டருக்கு 5 ரூபாய் என்று உயர்த்தி விட்டு, விற்பனை விலையை மட்டும் இரண்டு மடங்காக லிட்டருக்கு 10 ரூபாய் என்று அறிவித்திருக்கிறீர்களே, இதனால் ஏழையெளிய நடுத்தரக் குடும்பத்தினர், குழந்தைகள், முதியோர் என அனைவரும் பாதிக்கப்பட மாட்டார்கள் என்று நினைக்கிறீர்களா? மிகவும் ஏழையாக உள்ள மக்களேகூட அன்றாடம் காலையிலே ஒரு லிட்டர், மாலையிலே ஒரு லிட்டர் என்ற அளவுக்கு வாங்குபவர்கள்கூட, இனிமேல் மாதம் ஒன்றுக்கு 600 ரூபாய் அதிகமாகச் செலவழிக்க வேண்டிய அளவுக்கு அ.தி.மு.க. ஆட்சியின் அறிவிப்பு உள்ளது. அவர்களுடைய வாங்கும் சக்தி சிறிது சிறிதாக வற்றிப் போய்க் கொண்டிருக்கும் இன்றைய நிலையில் பாலுக்கு அதிகமாகச் செலவழிப்பது இயலக்கூடிய ஒன்றா?

இந்த அறிவிப்பிலேகூட கொள்முதல் விலையை உயர்த்தும்போது, "இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது" என்று குறிப்பிட்டு விட்டு, விற்பனை விலையை உயர்த்தியிருப்பதாகச் செய்துள்ள அறிவிப்பிலே மட்டும் அம்மா வழியில் செயல்படும் தமிழ் நாடு அரசு என்று குறிப்பிடாததைப் பார்க்கும்போது, மக்களைப் பாதிக்காத அறிவிப்பு என்றால் மக்களின் முதல்வர் அம்மாவின் அறிவிப்பு என்றும், மக்களைப்

பாதிக்கின்ற அறிவிப்பு என்றால் பன்னீர்செல்வத்தின் அறிவிப்பு என்றும் கூறிக் கொள்வார்களா?

மேலும் பன்னீர்செல்வத்தின் அறிக்கையில், ஏதோ தி.மு.க. ஆட்சியின் போது ஆவின் நிறுவனம் அதல பாதாளத்திற்குச் சென்று விட்டது என்று கூறியிருக்கிறார்.

தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் 1-9-2009 அன்றும், 5-1-2011 அன்றும் பால் உற்பத்தியாளர்களுக்கு நன்மை பயக்கும் வகையில் பாலின் கொள்முதல் விலை உயர்த்தப்பட்ட போது, பொதுமக்கள் குறிப்பாக ஏழையெளிய நடுத்தரப் பிரிவினர் பாதிக்கப்பட்டு விடக் கூடாது என்பதைக் கருதித்தான் பாலின் விற்பனை விலை லிட்டர் ஒன்றுக்கு 17 ரூபாய் 75 காசு என்பதிலிருந்து ஒரு பைசாகூட உயர்த்த வில்லை என்பதையும், அ.தி.மு.க. ஆட்சி பொறுப்புக்கு வந்த இந்த மூன்றரை ஆண்டுக்குள்; இரண்டு முறை மொத்தம் லிட்டர் ஒன்றுக்கு 16 ரூபாய் 25 பைசா உயர்த்தி, தற்போது லிட்டர் 34 ரூபாய் என்ற அளவுக்கு நிர்ணயித்திருக்கிறார்கள் என்பதையும் ஒப்பிட்டுப் பார்த்தால், கழக ஆட்சியின் மகிமையையும், அ.தி.மு.க. ஆட்சியின் மக்கள் விரோதப் போக்கினையும் புரிந்து கொள்ள முடியும். இதுதான் தி.மு. கழக ஆட்சியில் ஆவின் நிறுவனத்தை அதலபாதாளத்திற்குக் கொண்டு சென்றதற்கான அடையாளமா என்பதை இந்நாள் முதல்வர்தான் விளக்கவேண்டும்.

தி.மு. கழக ஆட்சியில் ஆவின் நிறுவனம் அதல பாதாளத்திற்குச் சென்று விட்டதாக அறிக்கை விடும் இந்நாள் முதலமைச்சர் பன்னீர் செல்வம் அவர்களே, முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா கடைசியாக செய்த அமைச்சரவை மாற்றத்தின் போது பால் வளத் துறை அமைச்சராக இருந்த மாதவரம் மூர்த்தியை மாற்றியது ஏன்? ஆவின் நிறுவனத்தை அதல பாதாளத்திலிருந்து மீட்டு மேல் நிலைக்குக் கொண்டு வந்தார் என்பதற்காகவா? அதற்குப் பிறகு ஆவின் பால் விற்பனையில் பாலிலே பெருமளவு கலப்படம் செய்த குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்ட வைத்தியநாதன் யார்? அ.தி.மு.க. பிரமுகர் இல்லையா? அவர் எதற்காகக் கைது செய்யப்பட்டார்? சாதாரண கூலி வேலை பார்த்த அவர், 83 வாகனங்களுக்கு உரிமையாளராக – பெரும் செல்வந்தராக மாறியது எவ்வாறு? ஆவின் ஊழியர்கள் மூன்று பேர் கடந்த மாதம் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டார்களே, எதற்காக? காண்ட்ராக்டர் வைத்தியநாதனை அ.தி.மு.க.விலேயிருந்து நீக்கி

ஜெயலலிதா உத்தர விட்டாரே, எதற்காக? ஆவின் நிறுவனத்தில் எத்தனை கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது? அதற்குப் பொறுப்பேற்க வேண்டியது தி.மு.கழக ஆட்சியா? அ.தி.மு.க. ஆட்சியா? ஆவின் நிறுவனத்தை அதலபாதாளத்திற்குக் கொண்டு சென்றது யார் என்று இப்போது புரிகிறதா? இவ்வளவு ஊழல்களை முதுகிலே சுமந்து கொண்டு, தி.மு.க. ஆட்சியின் மீது குறை சொல்வதற்கு ஏதாவது தகுதி இருக்கிறதா?

பால் விலை உயர்வை அறிவிப்பதற்கு முன்பாகவே மின் கட்டணத்தை உயர்த்தத் திட்டமிட்டு, அதற்கான திட்டவரைவினை மின் வாரியமும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையமும் ஏற்கனவே அறிவித்து, அந்த மின் கட்டண உயர்வுக்கு பொதுமக்கள், மின் நுகர்வோர், பொறியாளர்கள் எனப் பல்வேறு தரப்பினரிடம் கருத்துக் கேட்கும் கூட்டம் நடந்து முடிந்துள்ளது. அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்துத் தரப்பினரும், மின் கட்டண உயர்வுக்கு கடும் எதிர்ப்பினைத் தெரிவித்து, அந்தச் செய்தியும் நாளேடுகளில் வந்துள்ளன.

தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையம் தன்னிச்சையாக 15 சதவிகிதத்துக்கும் அதிகமாக மின் கட்டண உயர்வை அறிவித்தது. பொதுமக்களின் பிரதிநிதிகள், தமிழ்நாடு மின்சாரப் பொறியாளர்கள் சங்கத்தின் தலைவர் எஸ். காந்தி, அகில இந்திய பி.எஸ்.என்.எல். ஓய்வூதியம் நலச் சங்கத்தின் துணைத் தலைவர் டி. கோபாலகிருஷ்ணன், தெற்கு ரயில்வேயின் முதன்மை எலெக்ட்ரிகல் பொறியாளர் பி.வி. சந்திரசேகர், பிரயாஸ் எனர்ஜி குழுமத்தின் ஆராய்ச்சியாளர் ஆன் ஜோசி மற்றும் பல்வேறு சங்கங்களின் நிர்வாகிகளும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு தங்கள் எதிர்ப்பினைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கூட்டத்தில் எஸ். காந்தி பேசும்போது, மின் வாரியத்தின் வருவாய் அறிக்கை 450 பக்கங்களுக்கு மேல் இருக்கும். ஆனால் இந்த ஆண்டு அறிக்கை 25 பக்கங்கள்கூட இல்லை. சுருக்கப்பட்ட இந்த அறிக்கையிலிருந்து எப்படி மின்வாரியத்தின் செயல்பாடுகளை முழுமையாக அறிந்து கொள்ள முடியுமென்று கேட்டிருக்கிறார்.

அந்தக் கூட்டத்தில் பேசிய தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணைய உறுப்பினர் திரு. நாகல்சாமி, “மின் வாரியம் ஆண்டுதோறும் சட்டப்படி வரவு, செலவுக் கணக்கை மின்சார

ஒழுங்கு முறை ஆணையத்துக்குக் கொடுக்க வேண்டும். ஆனால் என்ன காரணத்தினாலோ அவர்கள் கொடுப்பதில்லை. மின் கட்டண உயர்வு தொடர்பாக அவர்கள் விண்ணப்பம் அளிக்கா விட்டால்கூட, எவ்வளவு செலவாயிற்று? எவ்வளவு வருமானம் வந்தது? என்பதையாவது எங்களுக்குக் கொடுத்திருக்க வேண்டும். மின் வாரியம் எங்களுக்குச் சில தகவல்களைத் தருகிறார்கள். ஆனால், அவற்றின் உண்மைத் தன்மையையும் அவை குறித்த சரியான தகவல்களையும் ஆய்வு செய்வதற்கு வாய்ப்பு இல்லை இந்த நிலையில், மின் வாரியத்தின் வருவாய், செலவு ஆகியவை தொடர்பாக எங்களுக்குக் கிடைத்த தகவலின்படி அனுமானம் செய்து கட்டண உயர்வு தொடர்பாக அறிவிப்பு வழங்கப்பட்டது. பொது மக்கள் தங்களின் கருத்துகளை முழுமையாக எடுத்துச் சொல்லும் வகையில் தேவையான அனைத்து விவரங்களும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அந்தத் தகவல்கள் மின்வாரியத்தால் வழங்கப்படவில்லை. எங்களது அனுமானத்தின் படி வெளியிடப்பட்டுள்ள விவரங்களை நான் ஆதரித்துப் பேசவில்லை. எந்தக் காரணத்தைக் கொண்டும் அனுமதிக்காத இடங்களிலிருந்து யூனிட் ஒன்றுக்கு ரூ.3.50க்கு மேல் வாங்க வேண்டாமென்று உத்தரவிட்டுள்ளோம். அது நிறைவேற்றப்படவில்லை. அதேபோல் அதிக விலை கொடுத்து ஒரு யூனிட்டுக்கு ரூ.12 முதல் 14 வரை கொடுத்து வாங்க வேண்டாம் என்று உத்தரவு கொடுத்துள்ளோம். அதுவும் நிறைவேற்றப்படவில்லை. ஒழுங்குமுறை ஆணையத்தின் அனுமதியின்றி மின்சாரம் வாங்கக் கூடாது எனவும் உத்தரவிட்டுள்ளோம். ஆனால் அந்த உத்தரவுகளும் செயல்படுத்தப்படவில்லை" என்றெல்லாம் மின் வாரியத்தின் மீது, ஒழுங்குமுறை ஆணையத்தின் உறுப்பினர் கடும் குற்றச்சாட்டுகளை அடுக்கடுக்காகச் சுமத்தியிருக்கிறார். இந்த நிதித் துஷ்பிரயோகம் சம்பந்தமான குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் அ.தி.மு.க. அரசு வெளிப்படையாகப் பதில் அளித்தாக வேண்டும். அந்தத் துறையின் அமைச்சர் இருக்கிறாரா? அல்லது அவருடைய முக்கிய "பணி"யை அல்லும் பகலும் ஆற்றிக் கொண்டிருக்கிறாரா?

தி.மு. கழக ஆட்சியில் மிகக் குறைந்த அளவுக்கு மின் கட்டணம் உயர்த்தப்பட்ட போது, அ.தி.மு.க. தலைவி, அதனைக் கண்டித்து அறிக்கை விட்டாரே, தற்போது அவருடைய ஆட்சியில் மின் கட்டணம் உயர்த்தப்படுவது பற்றி வாய் மூடிக் கொண்டிருக்க

லாமா? ஆட்சிக்கு வந்த ஆறே மாதங்களில் ஒரு முறை மின் கட்டணத்தை உயர்த்தினார்களே, அது போதாதா? மீண்டும் மின் கட்டணம் உயர்த்தப்பட வேண்டுமா?

தமிழ்நாடு மின் வாரியத்திற்கு, 6,805 கோடி ரூபாய் வருவாய் கிடைக்கும் வகையில், மின் கட்டணங்களை 15 சதவிகிதம் முதல் 17 சதவிகிதம் வரை உயர்த்த, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் முடிவு செய்து, உத்தேச கட்டண உயர்வுப்பட்டியலையும் ஏடுகளிலே வெளியிட்ட போது, அது பற்றி நான் விரிவாக ஏற்கனவே விளக்கியிருந்தேன்.

தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ள மின் கட்டண உயர்வு வீடுகளுக்கு எவ்வளவு என்றால், இரண்டு மாதங்களுக்கு, 201 யூனிட் முதல் 500 யூனிட் வரை பயன்படுத்துவோருக்கு யூனிட் ஒன்றுக்கு ரூபாய் 4 என்பது, ரூ. 4.60 எனவும், 501 யூனிட்டுக்கு மேல் பயன்படுத்துவோருக்கு ஒரு யூனிட் ரூபாய் 5.75 என்பதிலிருந்து ரூபாய் 6.60 என்ற அளவுக்கும் உயர்த்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது 500 யூனிட் வரை மட்டுமே தமிழக அரசு மானியம் வழங்கி வருகிறது. 500 யூனிட்டுக்கு மேல் மின்சாரத்தைப் பயன்படுத்துவோருக்கு தமிழக அரசு மானியம் அளிப்பதில்லை. இந்த நிலையில் சாதாரண நடுத்தர மக்கள் தற்போது வளர்ந்து வரும் வாழ்க்கை முறைச் சூழ்நிலையில் இரண்டு மாதங்களுக்கு 600 யூனிட்டுக்குக் குறையாமல் பயன்படுத்துவார்கள். இப்போது உயர்த்தப்படும் மின் கட்டண உயர்வால் 600 யூனிட்டுக்கு - யூனிட் ஒன்றுக்கு 85 பைசா வீதம் - இதுவரை 3,450 ரூபாய் மட்டுமே கட்டணமாகச் செலுத்தி வந்தவர்கள், இனிமேல் கூடுதலாக 510 ரூபாய் சேர்த்து 3,960 ரூபாய் கட்டணமாகச் செலுத்த வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

அ.தி.மு.க. ஆட்சிக்கு வரும்போதெல்லாம் இவ்வாறு மின் கட்டண உயர்வு பேருந்துக் கட்டண உயர்வு, பால் விலை உயர்வு என்று தொடர்ந்து அறிவித்து, மக்களை கசக்கிப் பிழிவதை வாடிக்கையாகக் கொண்டவர்கள் என்பதைத் தமிழ்நாட்டு மக்கள் நன்கறிவார்கள். 2001ஆம் ஆண்டு ஜெயலலிதா முதல் அமைச்சராக வந்த போது 1-12-2001 முதல் மின் கட்டணங்களை உயர்த்தினார். மீண்டும் 2003ஆம் ஆண்டு ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த காலத்தில்தான் 15-3-2003 அன்று 1,398 கோடி ரூபாய்க்கு மின் கட்டண உயர்வுகளைச் செய்தார்.

அ.தி.மு.க. ஆட்சி என்றாலே, எல்லாத் தரப்பு எதிர்ப்புகளையும் அலட்சியப்படுத்தி, பால் கட்டண உயர்வு, மின் கட்டண உயர்வு, பேருந்துக் கட்டண உயர்வு என்று தொடர்ந்து உயர்த்திக் கொண் டிருப்பதே வழக்கமாகப் போய் விட்டது என்பதுதான் உண்மை.

அடுத்து, கடந்த பத்து நாட்களாக தமிழகத்திலே பெய்து வரும் கன மழையினால் எந்த அளவுக்கு அனைத்துத் தரப்பு மக்களும் பாதிக்கப்பட்டுள் ளார்கள் என்பதை நேற்றைய தினமே விவரமாகத் தெரிவித்துள்ளேன். குறிப்பாக "பட்ட காலிலேயே படும்" என்பதைப் போல விவசாயப் பெருங்குடி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் இடுபொருள்களுக்காகக் கடன் வாங்கிச் சாகுபடி செய்த பயிர்கள் எல்லாம் வெள்ளத்தில் மூழ்கிக் கிடக்கின்றன. மழை தொடர்ந்து பெய்து கொண்டிருந்த போதிலும், இதுவரை எந்தவொரு அமைச்சரும் வெள்ளப் பகுதிகளுக்கு வந்து பார்வையிடவில்லை. விவசாயிகளின் வேதனைக் கண்ணீர் துடைக்கப்பட வில்லை. அவர்களுக்கு ஆறுதல் கூறவும் ஆள்வோர் இதுவரை முன்வரவில்லை.

இவற்றையெல்லாம் மனதிலே கொண்டுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வரும் நவம்பர் திங்கள் 3ஆம் நாள் காலையில், அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் மாவட்டக் கழகச் செயலாளர்கள் தலைமையில் கண்டன "ஆர்ப்பாட்ட - போர்ப்பாட்டு" நடத்தப்படும் என்று அறிவித்திருக்கிறேன். இந்த ஆர்ப்பாட்டத்தைச் சிறப்பாக நடத்தி, தமிழகத்தை ஆளுவோர் மீது தேவையான அழுத்தத்தை ஏற்படுத்திட இன்று முதல் உரிய முயற்சிகள் எடுக்க வேண்டுமென்று ஒவ்வொரு மாவட்டக் கழகச் செயலாளருடனும் கழகப் பொருளாளர் தளபதி மு.க. ஸ்டாலின் தொடர்பு கொண்டு கேட்டுக் கொண்டிருக்கிறார். பொருளாளர்தானே கேட்டுக் கொண்டார், பொதுச் செயலாளரும், தலைவரும் கேட்டுக் கொள்ளவில்லையே, தலைவர் அறிவிப்பு தானே செய்தார் என்று நீ நினைக்கக் கூடாது அல்லவா? அதற்காகத்தான் இந்தக் கடிதம். நம்முடைய இந்த ஆர்ப்பாட்ட அறிவிப்புகளைக் கண்டு அ.தி.மு.க. அரசு, இதிலே உள்ள நியாய உணர்வுகளைப் புரிந்து கொண்டு, அவர்களாகவே முன்வந்து பாலின் விற்பனை விலையைக் குறைத்து, மின் கட்டணத்தையும் உயர்த்த மாட்டோம் என்று அறிவிப்பதோடு, விவசாயிகளுக்கான நிவாரணத் தொகையையும் அறிவிக்கக் கூடும். நடக்கிறதா என்று

எதிர்பார்ப்போம்! அதற்காகத்தான் ஆர்ப்பாட்டத்திற்கு ஒருவார காலம் இடைவெளி கொடுத்திருக்கிறோம்! அறிவிக்கிறார்களோ இல்லையோ, ஆர்ப்பாட்டத்திற்கான ஏற்பாடுகளை நீ இன்றே முழு வீச்சில் தொடங்கியிருப்பாய் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு! அந்த நம்பிக்கைக் கருவூலம்தானே திராவிட முன்னேற்றக் கழகம்!

அனபுள்ள,

மு.க.

28-10-2014

3935. ஜனநாயகம் சரிவரச் செயல்பட!

உடன்பிறப்பே,

வேளாண்மைத் துறைச் செயலாளராகப் பணியாற்றிய திரு. சந்தீப் சக்சேனா, ஐ.ஏ.எஸ்., தமிழகத் தலைமை தேர்தல் அதிகாரியாக மாற்றம் செய்யப்பட்டு, அந்தப் பணியிலே அவர் பொறுப்பேற்று, செய்தியாளர்களுக்குத் தனது முதல் பேட்டியை அளித்திருக்கிறார். முக்கியமான பொறுப்பை ஏற்றுள்ள அவரைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வாழ்த்துகிறேன். அவர் அளித்துள்ள முதல் பேட்டியில், "2015 ஜனவரி 1ஆம் தேதியுடன் 18 வயது நிரம்பியவர்கள், வாக்காளர் பட்டியலில் தங்களது பெயரைச் சேர்க்கலாம். பெயர் சேர்ப்பதற்காகக் கடந்த அக்டோபர் 15ஆம் தேதி முதல் நவம்பர் 10ஆம் தேதி வரை சிறப்பு முகாம் நடந்து வருகிறது. தமிழகம் முழுவதும் 64,092 வாக்குச் சாவடி மையங்களில் அலுவலக நாளில் விண்ணப்பங்களைப் பெற்று, தங்கள் பெயரைச் சேர்க்கலாம். வேலைக்குச் செல்பவர்கள் அலுவலக நாட்களில் வாக்குச்சாவடி மையங்களுக்கு வந்து தங்களது பெயரை வாக்காளர் பட்டியலில் சேர்க்க முடியாது என்பதற்காக, விடுமுறை நாளான அக்டோபர் 26 மற்றும் நவம்பர் 2ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை தமிழகம் முழுவதும் வாக்குச்சாவடிகள் அமைந்துள்ள 27 ஆயிரம் மையங்களில் சிறப்பு முகாமுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வாக்காளர் பட்டியலில் பெயர் இருந்தால்தான் வாக்களிக்க முடியும். ஞாயிற்றுக்கிழமை அருகில் உள்ள வாக்குச்சாவடி மையம் சென்று பட்டியலில் பெயர் உள்ளதா என்று சரி பார்த்து, இல்லையெனில் பெயரைப் புதிய பட்டியலில் சேர்க்கலாம்" என்று தெரிவித்திருக்கிறார்.

எந்தவொரு தேர்தலாக இருந்தாலும், அது தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டவுடன் அல்லது தேர்தல் அறிவிக்கை நிரல், தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்ட பிறகுதான் தொடக்கம் என்றோ, அல்லது கட்சியின் அதிகாரப்பூர்வமான வேட்பாளராக

அறிவிக்கப்பட்டவுடன்தான் தேர்தல் பணிகளைத் தொடங்க வேண்டுமென்று நினைப்பது முற்றிலும் தவறாகும். தேர்தலுக்குப் பல மாதங்களுக்கு முன்பே புதிய வாக்காளர்களைச் சேர்த்தல், வாக்காளர் பட்டியலைச் சரிபார்த்தல் போன்ற பணிகள் மிகவும் இன்றியமையாதவைகளாகும். தலைமைக் கழகத்தின் சார்பில் ஒவ்வொரு தேர்தலுக்கு முன்பும், தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பு வந்தவுடன், ஓர் அறிக்கையினை முறைப்படி வெளியிட்டு, கழகத் தோழர்கள் புதிய வாக்காளர்களைச் சேர்த்திடும் பணியிலே உடனடியாக ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்வதும், அதனைக் கழக நாளேடான "முரசொலி" கட்டம் கட்டிப் பெரிதாக வெளியிடுவதும்தான் நடைபெறுகிறதே தவிர, "அந்தப் பணி கழக வேட்பாளர்களாக நிறுத்தப்படுபவர்களுக்கு மட்டுமே உரியது" என்றோ, "நமக்கும் அதற்கும் சம்பந்தமில்லை" என்றோ கழகத் தோழர்கள் எண்ணிக் கொண்டு, வாளாவிருந்தால் அது மிகவும் தவறானதாகும்.

தமிழகத்தில் கடந்த அக்டோபர் 15ஆம் தேதி முதல் நவம்பர் 10ஆம்தேதிவரை புதிய வாக்காளர்களைச் சேர்த்திடும் பணி நடைபெறும் என்று ஏற்கனவே தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பு வந்தவுடன் தலைமைக் கழகத்தின் சார்பிலும், நம்முடைய தம்பி முரசொலி செல்வம், முரசொலி இதழில் "எச்சரிக்கை, எச்சரிக்கை" என்ற தலைப்பிலே வெளியிட்ட "பெட்டிச் செய்தி" மூலமாகவும், வாக்காளர் சேர்க்கும் பணியில் கழகத் தோழர்கள் உடனடியாக ஈடுபட வேண்டுமென்ற வேண்டுகோள் விடுக்கப்பட்டது. ஆனால் அந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுப் பல நாட்களாகிய போதும், அந்தப் பணியில் கழக உடன்பிறப்புகள் போதுமான அளவுக்கு ஈடுபட்டதாக எனக்குத் தெரியவில்லை. அதே நேரத்தில் மாற்றுக் கட்சியினர், ஏன் அமைச்சர்களாக இருப்பவர்களே புதிய வாக்காளர்களைச் சேர்க்கும் பணியிலும், முக்கியமான கழக உறுப்பினர்கள் என்று வெளிப்படையாகத் தெரிபவர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலிலேயிருந்து நீக்குவதற்கான முறைகேடுகளிலும் ஈடுபடுவதாக எனக்குத் தகவல்கள் வருகின்றன.

25-4-2014 அன்று "இந்து" ஆங்கில நாளிதழில் ஒரு முக்கியமான செய்தி வெளிவந்திருந்தது. அதாவது ஒவ்வொரு மாநிலத்திலும், கடந்த தேர்தலைவிட வாக்காளர்களின்

எண்ணிக்கை எந்த அளவுக்குப் பெருகியுள்ளது என்று கணக்கெடுத்து அறிவித்திருந்தது. மிகப் பெரிய மாநிலமான உத்தரப்பிரதேசத்தில் 2009இல் வாக்காளர்களின் எண்ணிக்கை 11 கோடியே 60 இலட்சம் ஆகும். இந்த எண்ணிக்கை 2014இல் 13 கோடியே 44 இலட்சம் என்ற அளவுக்குப் பெருகியது. அதாவது 15.8 சதவிகிதம் கூடுதலாகும். மற்றொரு பெரிய மாநிலமான பீகார் மாநிலத்தில் 5 கோடியே 45 இலட்சம் என்ற அளவில் இருந்த வாக்காளர்களின் எண்ணிக்கை 2014இல் 6 கோடியே 21 இலட்சம் என்ற அளவுக்கு அதாவது 13.9 சதவிகிதம் கூடுதலாயிற்று. மராட்டிய மாநிலத்தில் 7 கோடியே 30 லட்சம் வாக்காளர்கள் என்பது 7 கோடியே 90 இலட்சம் என்ற அளவுக்கு, அதாவது 8.2 சதவிகிதம் அளவுக்குப் பெருகியது. ஆந்திராவில் 5 கோடியே 79 இலட்சம் வாக்காளர்கள் என்பது 6 கோடியே 24 இலட்சம் வாக்காளர்களாக, அதாவது 7.8 சதவிகிதம் கூடுதலாயிற்று. அதே நேரத்தில் தமிழகத்தில் வாக்காளர்களின் எண்ணிக்கை எப்படிப் பெருகிற்று தெரியுமா?

2009ஆம் ஆண்டு தமிழக வாக்காளர்களின் எண்ணிக்கை 4 கோடியே 16 இலட்சத்து 20 ஆயிரத்து 460 பேர். இந்த எண்ணிக்கை 2014இல் 5 கோடியே 37 இலட்சத்து 52 ஆயிரத்து 682 பேராக உயர்ந்துள்ளது. அதாவது 2009ஆம் ஆண்டை விட 29.1 சதவிகிதம் வாக்காளர்களின் எண்ணிக்கை உயர்ந்தது.

உத்தரப்பிரதேசத்தில் 15.8 சதவிகிதம் உயர்வு - பீகாரில் 13.9 சதவிகிதம் உயர்வு - மராட்டியத்தில் 8.2 சதவிகிதம் உயர்வு - ஆந்திராவில் 7.8 சதவிகிதம் உயர்வு - கர்நாடகாவில் 6.9 சதவிகிதம் உயர்வு - ஆனால் தமிழ்நாட்டில் மட்டும் 29.1 சதவிகிதம் உயர்வு என்றால், இதற்கு என்ன காரணம்?

இன்னும் சொல்லப்போனால், 1999ஆம் ஆண்டு தமிழக வாக்காளர்களின் எண்ணிக்கை 4 கோடியே 77 இலட்சம் பேர். 2004ஆம் ஆண்டு 4 கோடியே 72 இலட்சம் பேர். அதாவது வாக்காளர்களின் எண்ணிக்கை குறைந்தது. அதற்குப் பிறகு 2009ஆம் ஆண்டில் தமிழக வாக்காளர்களின் எண்ணிக்கை 4 கோடியே 16 இலட்சம் பேர். அதாவது 12 சதவிகிதம் அளவுக்கு ஐந்தாண்டுகளில் வாக்காளர்களின் எண்ணிக்கை குறைந்தது. ஆனால் இந்த எண்ணிக்கை கடந்த காலங்களில் குறைந்துகொண்டு வந்ததைப் போல், 2014ஆம் ஆண்டு மேலும்

குறைந்து விடவில்லை; மாறாக 29.1 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது என்றால், என்ன பொருள்? புதிதாக வாக்காளர்களின் சேர்க்கை இந்த அளவுக்குப் பெருகியதற்கு என்ன காரணம்? அந்த அளவுக்குப் புதிய வாக்காளர்கள் 2014ஆம் ஆண்டு, நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பாகத் தமிழகத்திலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அவ்வாறு புதிய வாக்காளர்கள் சேர்க்கப்பட்ட காரணத்தால்தான் அ.தி.மு.க.வுக்கு 37 இடங்கள் கிடைத்தன என்பது, ஆதாரப் பூர்வமாகத் தெரிகிறது அல்லவா?

2009 நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு, 2011ஆம் ஆண்டு சட்டப்பேரவைக்கான தேர்தலின் போதே, புதிய வாக்காளர் சேர்க்கையின் எண்ணிக்கை 20 சதவிகிதம் அளவுக்கு அதிகரித்திருந்தது. இந்த எண்ணிக்கை 2014இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின்போது, மேலும் பத்து சதவிகித அளவுக்குப் புதிய வாக்காளர்கள் என்ற அளவில் அதிகரித்தது.

ஐந்தாண்டு காலத்தில் இந்தியாவின் பிற மாநிலங்களில் 6லிருந்து 19 சதவிகிதம் அளவுக்குத்தான் புதிய வாக்காளர்களின் எண்ணிக்கை பெருகியிருக்கிறது எனும்போது, தமிழகத்திலே மட்டும் 29 சதவிகித அளவுக்குப் பெருக என்ன காரணம்? உண்மையான புதிய வாக்காளர்கள் மட்டுமே சேர்க்கப்பட்டார்களா? அல்லது வாக்காளர்கள் என்ற பெயரில் புதிது புதிதாகப் போலி வாக்காளர்கள் பெரிய எண்ணிக்கையில் சேர்க்கப்பட்டார்களா? சந்தேகம் வருமா வராதா?

உடன்பிறப்பே, இந்தச் சந்தேகங்களை யெல்லாம் போக்குகின்ற வகையில், தற்போது புதிய உறுப்பினர்களைச் சேர்க்கும்போது, பழைய வாக்காளர் பட்டியலிலே உள்ளவர்கள் உண்மையிலேயே இருக்கிறார்களா என்பதைச் சரிபார்க்கும் பணியிலும் நீ ஈடுபட்டாக வேண்டும்.

புதிய வாக்காளர்களைச் சேர்ப்பதற்கான அட்டவணை "முரசொலி" நாளிதழில் 15-10-2014 அன்று தலைமைக் கழகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. எனவே புதிய வாக்காளர்களைச் சேர்ப்பது என்பது, பொறுப்பிலே உள்ளவர்களின் பணிதானே என்று நினைக்காமல், கழக உடன்பிறப்புகள் ஒவ்வொருவரும் அது தங்களுக்கு உரிய பணி என்று எடுத்துக்கொண்டு, பொறுப்பிலே இருப்பவர்களின்

துணையோடு புதிய வாக்காளர்களைச் சேர்ப்பதிலும், பழைய வாக்காளர்களின் பெயர்களைச் சரிபார்ப்பதிலும் உடனடியாக ஈடுபட வேண்டும். இந்தப் பணி ஒவ்வொரு மாவட்டத்திலும் எவ்வாறு மேற்கொள்ளப்படுகிறது என்பதை நான் கூர்ந்து கவனித்துக்கொண்டே இருப்பேன். ஒவ்வொரு கிளையிலும், கழகத் தேர்தலில் போட்டியிடுவதற்காக, அதுபற்றிய குறைகளைத் தலைமைக் கழகத்தில் தெரிவிப்பதற்காக, கழக உடன்பிறப்புகள் எத்தகைய முயற்சிகளிலே ஈடுபடுகிறீர்களோ, அதற்குச் சற்றும் குறைந்திடாமல் - இன்னும் சொல்லப்போனால், அதைவிட ஆர்வத்தோடு, வாக்காளர் பட்டியலிலே புதியவர்களைச் சேர்ப் பதிலும் மிகுந்த அக்கறை காட்டிட வேண்டும்.

உடன்பிறப்பே, புதிய வாக்காளர்களைச் சேர்ப்பதில் அக்கறை காட்டுவதைப் போலவே, கடந்த முறை சேர்க்கப்பட்ட வாக்காளர்கள் முறையாகச் சேர்க்கப்பட்டுள்ளார்களா என்பதை யும் நீ உன்னிப்பாகக் கவனித்து விசாரித்து அறிய வேண்டும். ஏனென்றால், மாவட்டத் தேர்தல் அதிகாரிகளாக உள்ளவர்கள், குறிப்பாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள், புதிய வாக்காளர்களாகச் சேருவதற்கான மனுக்களைப் பெற்ற போதிலும், வாக்காளர்களாகத் தவறுதலாகப் பட்டியலிலே இடம்பெற்றிருப்பவர்களை நீக்குவதிலே அவ்வளவாக அக்கறை காட்டவில்லை அல்லது அலட்சியப்படுத்துகிறார்கள் என்ற புகார் வந்துள்ளது. ஏற்கனவே இறந்தவர்களின் பெயர்கள், வேறு இடத்திற்குப் பெயர்ந்து சென்றவர்கள், இரண்டு மூன்று இடங்களிலே வாக்காளர்களாக இருப்போர், ஒருவரே பல பெயர்களில் வாக்காளர்களாக இடம் பெற்றோர் என்று ஏராளமானவர்கள் தவறான வழிமுறைகளைக் கையாண்டு அந்தப் பட்டியலில் இடம்பிடித்திருக்கிறார்களாம். அவ்வாறு கடந்தமுறை சேர்த்தகாரணத்தால்தான் 2009ஆம் ஆண்டினைவிட 2014ஆம் ஆண்டில் வாக்காளர்களின் எண்ணிக்கை 29.1 சதவிகிதம் கூடுதலாகி, அப்படி வாக்காளர் பட்டியலிலே தவறாக - சட்டத்திற்குப் புறம்பாக இடம் பெற்றவர்கள் எல்லாம் வாக்களித்த காரணத்தால்தான் நாடாளுமன்றத் தேர்தலிலே ஒரு கட்சிக்கு அபரிமிதமான வாக்குகள் கிடைக்கப்பெற்றன என்று கூறப்படுகிறது. அப்படிக் கூறப்படுவதில் அடிப்படை இருப்பதாகவே தோன்றுகிறது. எனவே உண்மையான வாக்காளர்கள் அல்லாதவர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலிலே இடம்பெற்றிருந்தால், அந்த விபரங்களை

உரிய அதிகாரியிடம் கொடுத்து, போலியாக இணைக்கப்பட்ட அந்தப் பெயர்களை நீக்குவதற்கான முயற்சிகளிலும் கழக உடன்பிறப்புகள் உறுதியாக ஈடுபட்டாக வேண்டும். அவ்வாறு போலியான வாக்காளர்களின் பெயர்களை நீக்கவேண்டுமென்று தரப்படும் மனுக்களை யாராவது அதிகாரிகள் ஏற்க மறுத்தாலோ அல்லது அந்த மனுக்களின் மீது நடவடிக்கை எடுக்காமல் இருந்தாலோ, அதுபற்றி உடனடியாகத் தலைமைக் கழகத்திற்குத் தகவல் தெரிவித்தால் சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்க ஏதுவாகும். எனவே கழக உடன்பிறப்புகளும், வரவிருக்கின்ற கழகத் தேர்தலில் போட்டியிட விரும்புவோரும், கழகத்தின் சார்பில் பொதுவாக மேற்கொள்ளப்பட வேண்டிய இந்தப் பணியிலே தத்தமது பங்களிப்பைச் செலுத்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

"இடையறாத விழிப்புணர்வே ஜனநாயகத்திற்கு நாம் தரும் விலை" என்பதால், வெற்றி மீது மட்டும் கவனம் இருந்தால் போதாது; அந்த வெற்றிக்கு அடித்தளமான வாக்காளர் பட்டியல் தயாரிப்பிலும், கண்ணும் கருத்துமாக இருந்தால்தான் தேர்தல்கள் நேர்மையாக நடைபெறும்; சட்டமன்ற ஜனநாயகம் நெறி பிறழாமல் செழுமை அடையும்!

அன்புள்ள,

மு.க.

2-11-2014

3936. கேடு கெட்ட ஆட்சியும், “பஜனை” பாடும் சில ஏடுகளும்!

உடன்பிறப்பே,

நெடுஞ்சாலைத் திட்டங்கள் நிறைவேற தமிழக அரசு தேவையான அளவு ஒத்துழைப்பதில்லை என்ற குற்றச்சாட்டு மத்திய அரசால் தொடர்ந்து முன்வைக்கப்பட்டு வந்ததைப் போலவே, இரண்டு நாட்களுக்கு முன்பு தமிழகத்திற்கு வந்த மத்திய புதிய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின்கட்காரி அவர்களும் வேதனையோடு கருத்து தெரிவித்திருக்கிறார்.

“மத்திய அரசு தருவதை மாநில அரசு மறுப்பதா?” என்ற தலைப்பில் 14-8-2013 அன்றே; மத்தியில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி நடைபெற்றபோதே, நான் விரிவாகக் கூறியிருந்தேன். 2006ஆம் ஆண்டு தி.மு. கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றதும், 5.6.2006 அன்று பிரதமர் மன்மோகன்சிங் அவர்களுக்கு நான் எழுதிய கடிதத்தில், சென்னைத் துறைமுகத்தையும் மதுரவாயலையும் இணைத்திட உயர் மட்டப் பறக்கும் சாலை அமைக்கும் திட்டத்தை அனுமதித்திட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டதை அடுத்து, மத்திய அரசு ஒப்புதல் அளித்ததோடு, பிரதமர் மன்மோகன் சிங் அவர்களே நேரில் வந்து 8.1.2009 அன்று முதலமைச்சராக இருந்த என் தலைமையில், அந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார். முக்கியமான இந்த நான்கு வழிப் பறக்கும் சாலைத் திட்டம் என்னதான் ஆயிற்று என்று 2013இல் மத்திய அரசின் தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர், திரு. ஆஸ்கார் பெர்னாண்டஸ் அவர்களிடம் செய்தியாளர்கள் கேட்ட நேரத்தில், “Banks were refusing to finance the project in the absence of clear-cut information from the State Government about its stand and a delay in clearing encroachments” என்று தெரிவித்தார். அதாவது மாநில அரசு அதன் நிலை பற்றித் தெளிவாகத் தெரிவிக்காததாலும், நில

ஆக்கிரமிப்புகளை அகற்றுவதிலே ஏற்படும் தாமதத்தைப் போக்காததாலும் வங்கிகள் இந்தத் திட்டத்திற்காக நிதி அளிக்க மறுத்து வருகின்றன என்று சொன்னார்.

மதுரவாயல் பறக்கும் சாலைத் திட்டம் பற்றித் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் திட்ட இயக்குனர் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில்,

"சம்பந்தப்பட்ட துறைகளிடம் இருந்து ஒப்புதல் பெற்ற பின், திட்டப் பணிகள் துவங்கப்பட்டன. ஆட்சி மாறியபின், மாநில அரசின் துறைகளில் இருந்து போதிய ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. நில ஆர்ஜிதம் மற்றும் பாதிக்கப்பட்டோர்க்கான மறுவாழ்வுப் பணிகளில், மாநில அரசிடம் இருந்து தேவையான ஒத்துழைப்பு இல்லை. இதற்குக் காரணம் என்னவென்றும் தெரியவில்லை. இந்தத் திட்டத்தில் மாநில அரசு ஆர்வம் காட்டவில்லை. மேம்பாலத் திட்டத்தைத் தொடர்ந்து அமல்படுத்தி, குறிப்பிட்ட காலத்துக்குள் முடிக்க, மாநில அரசு ஒத்துழைப்பு அளிக்க உத்தரவிட வேண்டும்" என்று தெரிவித்திருந்தார்.

இந்தச் செய்தியினை வெளியிட்ட "தினத்தந்தி" நாளேடே, "சென்னை நகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் ரூ. 1,815 கோடியில் செயல்படுத்தப்பட்டு, தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ள துறைமுகம் - மதுரவாயல் எக்ஸ்பிரஸ் பறக்கும் சாலைத் திட்டம் முற்றிலும் கைவிடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. பணிகளை மேற்கொள்வதில் உண்டான கால தாமதத்திற்கு காண்ட்ராக்டர் 872 கோடி ரூபாய் அளவுக்கு அதிக இழப்பீடு கேட்பதால் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் திட்டத்தைக் கைவிடும் நிலைக்கு வந்துள்ளது. இந்தத் திட்டம் கைவிடப்பட்டால் ஏற்றுமதியாளர்களும், இறக்குமதியாளர்களும் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். அதோடு சென்னைத் துறைமுகத்தின் வருவாய் அடியோடு குறையும். தற்போது ஏற்றுமதி செய்வதற்கான கண்டெய்னர்களை தென் மாவட்டங்களிலிருந்து கொண்டு வரும் டிரக்குகள் சென்னை புறவழிச் சாலை, மதுரவாயல், மாதவரம், புழல், நூறடி சாலை வழியாகத் துறைமுகத்தை வந்தடைகின்றன. அதேபோல் வட மாவட்டங்களில் இருந்து வரும் டிரக்குகள், மணலி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ரோடு, எண்ணூர் நெடுஞ்சாலை வழியாகத் துறைமுகத்திற்கு வருகின்றன. மீஞ்சூர், மாதவரம் சாலையில் போக்குவரத்து

நெரிசல் காரணமாக இந்த டிரக்கு வண்டிகள் ஊர்ந்தபடிதான் செல்கின்றன. இதனால் போக்குவரத்து நெரிசல் பன்மடங்கு அதிகரிக்கிறது. மணலி நெடுஞ்சாலையில் இருந்து துறைமுகத்தை வந்தடைவதற்குச் சில நேரங்களில் டிரக்கு வண்டிகளுக்கு இரண்டு நாள்கூட ஆகிவிடுவதுண்டு. இதன் காரணமாகக் காலதாமதம் ஏற்படுவதுடன் எரி பொருளும் வீணாகிறது என்பது டிரக்கு வண்டி உரிமையாளர்களின் தொடர் குற்றச் சாட்டாகும். துறைமுகம் - மதுரவாயல் எக்ஸ்பிரஸ் சாலைதான் மேற்கண்ட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் உரிய தீர்வாக அமையும். இந்தத் திட்டம் கைவிடப்படும் அபாயம் குறித்து தேசிய நெடுஞ்சாலை ஆணைய அதிகாரிகளிடம் கேட்டபோது, "உகந்த சூழ்நிலை வந்தால் இந்தத் திட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்" என்று தெரிவித்தனர்" என்று "தினத்தந்தி" விரிவாகச் செய்தி வெளியிட்டது.

தேசிய நெடுஞ்சாலைத் துறை ஆணையம் இது பற்றிக் கூறும்போது, "It was the "motivated, tainted" action of the State Government which had led to the situation of stalling of the project work" என்று தெரிவித்திருக்கிறது.

தமிழகத்திற்குப் புதிய திட்டங்களை ஒதுக்குவது பற்றித் தேசிய நெடுஞ்சாலைத் துறை ஆணையம் கூறும்போது, "மாநில அரசு தனது ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு விட்டு, அதன்படி , உதவிட முன்வராத வரையில், மாநிலத்தில் புதிய திட்டங்களுக்கு அனுமதி வழங்க இயலாது" என்று தெரிவிப்பதாகவும் "இந்து" இதழ் எழுதியிருக்கின்றது.

சென்னைத் துறைமுகக் கழகத்தின் அதிகாரி ஒருவர், "The stoppage of Maduravoyal Project is ruining us. We will be losing crores of rupees every year" என்று கூறியிருக்கிறார். இந்தத் துறையின் மத்திய அமைச்சராக இருந்த ஜி.கே. வாசன் அளித்த பேட்டியில், "மதுரவாயல் சாலைத் திட்டம் மாநில அரசினால் தடை செய்யப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. துறைமுகத்திற்கும், மாநகரத்திற்கும் அது ஒரு முக்கியமான திட்டம். அந்தத் திட்டத்தை விரைவுபடுத்தும்படி மாநில அரசைப் பலமுறை கேட்டுக்கொண்டோம். அண்மையில் இந்தத் துறையின் மத்திய அரசுச் செயலாளர் மாநில தலைமைச் செயலாளரிடமும் இதுபற்றி விவாதித்தார்" என்றெல்லாம் தெரிவித்திருந்தார்.

உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பில், "மதுரவாயல் - துறைமுகம் வரை பறக்கும் சாலை அமைப்பதற்கு ஆயிரம் கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இது மிகப் பெரிய திட்டம். இதைப் பிரதமர் தொடங்கிவைத்தார். தமிழகத்தில் புதிய அரசு பொறுப்பேற்றதில் இருந்து வேண்டுமென்றே பாலம் கட்டத் தடை விதித்து வந்துள்ளது. மத்திய அரசுத் தரப்பில் கூறப்படும் வாதத்தை ஏற்றுக் கொள்கிறோம். எனவே பறக்கும் சாலை அமைக்கும் பணியைத் தொடர்ந்து செய்யலாம். இந்தப்பாலம் அமைக்கத் தமிழக அரசு முழு ஒத்துழைப்பு தரவேண்டும். எந்தவித இடையூறும் ஏற்படுத்தக் கூடாது" என்று தெரிவித்திருந்தது.

இந்த நிலையில்தான் மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் நிதின்கட்காரி அவர்கள் கட்டமைப்புத் திட்டங்களை நிறைவேற்றுவதற்குத் தமிழக அரசு மத்திய அரசுக்கு மேலும் ஒத்துழைப்பு தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார். "இந்திய தேசிய நெடுஞ்சாலை வாரியம் தமிழகத்திலே 1,840 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 407.26 கிலோ மீட்டர் நீளத்திற்கு ஐந்து புதிய சாலைத் திட்டங்களை மேற்கொள்ளத் தயாராக உள்ளது. மேலும் நில ஆர்ஜிதப் பணிகளில் 90 சதவிகிதம் நிறைவடையுமென்றால், இரண்டு நான்கு வழிப்பாதை திட்டங்களைக் கூடுதலாக மேற்கொள்ளவும் உள்ளது. இதில் மாநில அரசுதான் முக்கிய இடத்தை வகிக்க வேண்டும். நாங்கள் சாலைப் பணிகளை நிறைவேற்றத் தயாராக உள்ளோம். ஆனால் நில ஆர்ஜிதம், ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் போன்றவற்றில், மாநில அரசிடமிருந்து அதிக ஒத்துழைப்பு வேண்டும்" என்று தேசிய நெடுஞ்சாலை வாரியத் தலைமை மேலாளர் திரு. வி. சின்னப்ப ரெட்டி தெரிவித்திருக்கிறார்.

தமிழகத்திற்காக மத்திய அரசு அறிவித்துள்ள சாலைத் திட்டங்கள்: திருமயம் - மானாமதுரை 78 கிலோ மீட்டர் நீளம் - மதிப்பு 252 கோடி ரூபாய்; தஞ்சாவூர் - புதுக்கோட்டை 55 கிலோ மீட்டர் நீளம் - மதிப்பு 159 கோடி ரூபாய்; காரைக்குடி - ராமனாதபுரம் 80 கிலோ மீட்டர் நீளம் - மதிப்பு 280 கோடி ரூபாய்; மதுரை - ராமனாதபுரம் 116 கிலோ மீட்டர் நீளம் - மதிப்பு 734 கோடி ரூபாய்; நாகப்பட்டினம் - தஞ்சாவூர் 79 கிலோ மீட்டர் நீளம் - மதிப்பு 415 கோடி ரூபாய். இவை தவிர நான்கு வழிச் சாலைகள் இரண்டு - கன்னியாகுமரிக்கும் காவல் கிணறுக்கும் இடையிலும்;

விக்ரவாண்டி - கும்பகோணம் - தஞ்சாவூர் இடையிலும் நிறைவேற்றும் திட்டம். தமிழக அரசு முறையாக ஒத்துழைப்பு நல்குமானால் இந்தத் திட்டங்கள் எல்லாம் மத்திய அரசின் நிதி உதவியோடு விரைவில் நிறைவேறும்.

இந்த விவரங்களையெல்லாம் தொகுத்து வெளியிட்ட "டைம்ஸ் ஆப் இந்தியா" ஆங்கில நாளேடு, மேலும் இன்று (6-11-2014) "Infra Shutdown slows Down State" அதாவது "அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்கு மூடுவிழா நடத்தி விட்டதால் தமிழகத்தின் வளர்ச்சி தள்ளாடுகிறது" என்ற தலைப்பில், தொடர்ந்து நெடுஞ்சாலைத் துறை பற்றிய அதிர்ச்சி தரும் பல தகவல்களைத் தெரிவித்துள்ளது. அவையாவன :-

- 25 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான தேசிய நெடுஞ்சாலைத் திட்டப் பணிகள் கிடப்பில் போடப்பட்டுள்ளன. (மதுரவாயல் - சென்னைத் துறைமுகம் வரையிலான பறக்கும் சாலைத் திட்டம், எண்ணூர் - மணலி வரையிலான நெடுஞ்சாலைத் திட்டம், சென்னை - திருப்பதி நெடுஞ்சாலைத் திட்டம், சென்னை - தடா நெடுஞ்சாலைத் திட்டம், திருச்சி பை-பாஸ் திட்டம், கிருஷ்ணகிரி - வாலாஜாபாத் நெடுஞ்சாலைத் திட்டம் உள்ளிட்ட திட்டங்கள் பல்வேறு செயற்கையான காரணங்களைத் தமிழக அரசு முன்னிறுத்தி வருவதால் தொடங்கப்படவில்லை)
- 38 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பிலான மின் உற்பத்தித் திட்டங்கள் தொடங்கப்படாமல் உள்ளன. (660 மெகாவாட் எண்ணூர் அனல் மின் உற்பத்தித் திட்டம் - 1,600 மெகாவாட் உடன்குடி அனல் மின் உற்பத்தித் திட்டம் - 1600 மெகாவாட் உப்பூர் அனல் மின் உற்பத்தித் திட்டம் - 800 மெகாவாட் வடசென்னை அனல் மின் உற்பத்தித் திட்டம் - 1200 மெகாவாட் வடசென்னை சிறப்புப் பொருளாதார மண்டல அனல் மின் உற்பத்தித் திட்டம் - 660 மெகாவாட் எண்ணூர் விரிவாக்க அனல் மின் உற்பத்தித் திட்டம்)
- மேலும் 5 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்கள், கருத்துரு கட்டத்தையே

தாண்டவிடாமல் கிடப்பில் போடப்பட்டிருக்கின்றன. மோதல் போக்கைக் கைவிட்டுத் தேசிய நெடுஞ்சாலைத் திட்டப்பணிகள் விரைவாக நிறைவேற்றப்பட ஒத்துழைப்பு நல்கிட வேண்டுமென்று தமிழக அரசைப் பல முறை மத்திய அரசு வற்புறுத்திக் கேட்டும்கூட, எவ்விதப் பலனும் ஏற்படவில்லையாம்.

- மிகப் பெரிய நோக்கியா தொழிற்சாலை மூடப்பட்டதன் மூலம் தமிழக அரசின் தொழில் வளர்ச்சிக்கு முற்றிலும் எதிரான போக்கு வெளிப்பட்டிருக்கிறது.

- மதுரவாயல் - சென்னைத் துறைமுகம் பறக்கும் சாலைத் திட்டம் நிறைவேற்றப்படாததன் காரணமாக கார் தொழிற்சாலைகள் பல்வேறு பிரச்சினைகளைச் சந்தித்து வருகின்றன. குறிப்பாக, துறைமுகம் மூலம் அனுப்பப்படும் கார்கள் 48 மணி நேரத்திற்கு மேலாக துறைமுகத்திலேயே வீணாகக் காத்திருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் பண விரயமும், கால விரயமும் ஏற்படுகின்றன.

- உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்குத் தமிழக அரசு ஒதுக்கீடு செய்யும் தொகை குறைந்து கொண்டே வருகிறது. இந்தியாவின் சராசரி செலவுத் தொகையான 7 சதவிகிதத்திலிருந்து 8 சதவிகிதம் என்பது, தமிழகத்தைப் பொறுத்தவரை வெறும் 5 சதவிகிதமாகச் சுருங்கி விட்டது. முக்கியமான இந்தக் காரணத்தினாலேதான் தமிழ்நாட்டின் வளர்ச்சி விகிதம் 2012-2013ஆம் ஆண்டில் தேசிய சராசரியான 4.4 சதவிகிதம் என்பதற்கு மாறாக 3.39 சதவிகிதமாகக் குறைந்து விட்டது.

- ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி, திரு. தேவசகாயம், "ஒரு திட்டத்தைத் தமிழகத்தில் தொடங்குவதற்கே எடுத்துக் கொள்ளப்படும் நேரம் அரசியல் தலையீடுகளின் காரணமாக மிகவும் அதிகமாகி விட்டது. தொழில் தொடங்குவதற்காக, முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவைச் சந்திப்பது என்பதே குதிரைக் கொம்பாக இருந்ததால், எதிலும் முடிவெடுப்பது

இயலாத ஒன்றாக ஆகி விட்டது" என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

- ஒரு இலட்சம் கோடி ரூபாய் முதலீட்டினைத் தமிழகத்திற்கு ஈர்ப்பதற்காக உலகம் முழுதும் உள்ள முதலீட்டாளர்களை அக்டோபர் மாதத்திலேயே சந்திப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றும் அந்தச் சந்திப்பு இதுவரை நிகழவில்லை. ஜெயலலிதாவுக்குக் கிடைத்த தண்டனை மாநில நிர்வாகத்தை மேலும் முடமாக்கிவிட்டது. வேறு முதலமைச்சர் பதவியேற்றிருந்தாலுங்கூட, தொழில் வளர்ச்சிக்கு எந்தவிதமான உந்துதலும் இல்லை.

உடன்பிறப்பே, இந்த விவரங்கள் எல்லாம், முக்கியமான ஆங்கில நாளேட்டில் வெளிவந்த செய்திகளாகும். ஆனால் தமிழ் நாளேடுகள் எல்லாம் இந்தச் செய்திகளை மறைத்து, அ.தி.மு.க. ஆட்சியையும், அதை நடத்துபவர்களையும் காப்பாற்ற எண்ணி, அவர்கள் மூச்சு விட்டாலும் அதனையும் எட்டு பத்தித் தலைப்பிட்டு பெரிய செய்தியாக்கி, எதிர்க்கட்சிகளின் கருத்துகளை முடக்கிவைக்கின்றன. தமிழ்நாடு எக்கேடு கெட்டால் என்ன என்று நினைக்கின்ற ஆட்சியும் அதற்கு "பஜனை" பாடுகின்ற சில ஏடுகளும் இருக்கின்ற வரையில் இப்படித்தான் நடக்கும்.

அன்புள்ள,

மு.க.

7-11-2014

3937. செயல்படுகிற ஆட்சி சீக்கிரம் வருமா?

உடன்பிறப்பே,

முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டத்தை 136 அடியாகக் குறைக்கக் கோரி, மீண்டும் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ய தீர்மானித்திருப்பதாக, கேரள அரசின் நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு.பி.ஜே. ஜோசப் கூறியிருக்கிறார். முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டத்தை 142 அடியாக உயர்த்திக்கொள்ள உச்ச நீதிமன்றம் தமிழக அரசுக்கு அனுமதியளித்து உத்தரவிட்டுள்ளது. அதையடுத்து நீர் மட்டத்தை உயர்த்துவதற்கான நல்வாய்ப்பு தமிழக அரசுக்குக் கிட்டியுள்ளது. கேரளாவில் பெய்துவரும் கனமழை காரணமாகவே முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டமானது, விரைவாக உயர்ந்து வருகிறது. சுமார் 35 ஆண்டுகளுக்குப் பிறகு, இப்போதுதான் அணையின் நீர் மட்டம், 5-11-2014 நிலவரப்படி 138 அடியை எட்டியுள்ளது.

அணையின் நீர் மட்டம் உயர்ந்து கொண்டே வருவதால், அணைப் பகுதியிலே உள்ள மக்களிடையே அச்சம் ஏற்பட்டுள்ளதாகவும், அதனால் அந்த மக்களின் பாதுகாப்பைக் கருதி, நீர் மட்டத்தை 136 அடியாகக் குறைக்க வேண்டும் என்றும் கேரள அதிகாரிகள் உச்ச நீதிமன்றக் குழுவிடம் கோரினார்கள். ஆனால் கேரளாவின் கோரிக்கையை உச்ச நீதிமன்றக் குழு ஏற்கவில்லை.

எனவே 5-11-2014 அன்று திருவனந்தபுரத்தில் கேரள நீர்ப்பாசனத் துறை அமைச்சர், பி.ஜே. ஜோசப் அவர்களின் தலைமையில் நீர்ப்பாசனத் துறை அதிகாரிகளின் அவசர ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றுள்ளது. அந்தக் கூட்டம் முடிந்த பிறகு தான், அமைச்சர் செய்தியாளர்களிடம் கூறும்போது, "முல்லைப் பெரியாறு அணையில் நீர்மட்டம் 138.10 அடியைத் தாண்டியுள்ளது. இதனால் அந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள்

பீதியடைந்துள்ளார்கள். எனவே நீர் மட்டத்தை 136 அடியாகக் குறைக்க வேண்டுமென்று 7ஆம் தேதி உச்ச நீதிமன்றத்தை அணுக உள்ளோம். 11ஆம் தேதிக்குள் விசாரணை தொடங்க வேண்டுமென்று உச்ச நீதிமன்றத்திலே கேட்கவிருக்கிறோம்" என்றெல்லாம் தெரிவித்திருக்கிறார்.

இந்தச் செய்தியை ஏடுகளில் கண்டதும், முல்லைப் பெரியாறு பிரச்சினையில் அதிக அக்கறை காட்டி வரும் கம்பம் தொகுதி சட்டப் பேரவை கழக உறுப்பினர் தம்பி கம்பம் நா. இராம கிருஷ்ணனைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு, முல்லைப் பெரியாறு பற்றித் தற்போதைய உண்மை நிலைமைகளை அறிந்து கூறுமாறு கேட்டுக்கொண்டேன். அவர் சில செய்திகளைத் தெரிவித்திருக்கிறார். அதனைத் தொடர்ந்துதான் இந்த மடலை எழுதுகிறேன்.

முல்லைப் பெரியாறு அணை குறித்துக் கேரளா மற்றும் தமிழ்நாட்டில் உள்ள உயர் நீதிமன்றங்களில் தனித்தனியாக வழக்கு தொடுக்கப்பட்டிருந்த நேரத்தில், தி.மு. கழக ஆட்சியில்தான் இதனை ஒரே வழக்காக விசாரித்திட 14-2-1998 அன்று உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவினை விசாரித்த உச்ச நீதிமன்றம், 1-2-1999இல் இந்த வழக்குத் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் உயர் நீதிமன்றங்களிலே தடை செய்ததோடு, இந்த வழக்கினை உச்ச நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்ய ஆணை பிறப்பித்தது.

உச்ச நீதிமன்றம் வழக்கை விசாரித்த பின்னர் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான வழிமுறைகளை ஆராயுமாறு மத்திய அரசை வலியுறுத்தியது. அதற்கிணங்க மத்திய நீர் வளத் துறை அமைச்சர், தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களின் முதல் அமைச்சர்களை நேரடியாகப் பேச்சு வார்த்தை நடத்துமாறு கோரினார். 5-4-2000 அன்று திருவனந்தபுரத்திலும், 19-5-2000 அன்று புதுடெல்லியிலும் பேச்சுவார்த்தை நடைபெற்ற போதிலும், கேரள அரசின் பிடிவாதப் போக்கினால் எந்த முடிவும் எட்டப்படவில்லை. அதனை அடுத்து உச்ச நீதிமன்றம் நிபுணர் குழு ஒன்றை அமைத்திட ஆணை பிறப்பித்தது. அதன்படி, மத்திய நீர்வள அமைச்சகம், டாக்டர் மிட்டல் தலைமையில், கே.எஸ். கான்பூர், டாக்டர் ஆர்.எஸ்.வார்ஸ்னே, ஜெ.கே.திவாரி, ஏ.கே. காஞ்சூ, ஏ.மோகனகிருஷ்ணன், எம்.கே.பரமேஸ் வரன் நாயர்

ஆகியோரைக்கொண்ட குழுவினை அமைத்தது. அந்த நிபுணர்கள் குழு 10-10-2000 மற்றும் 11-10-2000 ஆகிய நாள்களில் முல்லைப் பெரியாறு அணையை விரிவாக ஆய்வு செய்தது.

மிட்டல் தலைமையிலான ஆய்வுக் குழுவானது, முல்லைப் பெரியாறு அணையை ஆய்வுசெய்த பின்னர், அதன் துணை அணையான பேபி அணையையும் ஆய்வுசெய்ய எண்ணியது. பேபி அணையை ஆய்வு செய்திட திரு. பிரார் தலைமையிலான குழு 20-11-2000 முதல் 25-11-2000 வரை பல ஆய்வுகளை மேற்கொண்டது. இந்த இரு ஆய்வுக் குழுவினரும் தங்களது இறுதி ஆய்வு அறிக்கையினை 30-8-2001 அன்று மத்திய நீர்வள அமைச்சகத்திடம் தாக்கல் செய்தனர். அந்த ஆய்வு அறிக்கையில் பேபி அணையைப் பலப்படுத்தும் பணி முடிவடையும் வரை, பெரியாறு அணையில் 142 அடி வரை நீரைத் தேக்கவும், பின்னர் அந்தப் பணி முடிவடைந்தவுடன் 152 அடி வரை நீரைத் தேக்கலாம் என்றும் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது.

கழக ஆட்சியில் தொடரப்பட்ட முல்லைப் பெரியாறு அணை வழக்கின், வரலாற்றுச் சிறப்பு மிக்கத் தீர்ப்பு 27-2-2006 அன்று உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு. சபர்வால் தலைமையிலான அமர்வினால் வழங்கப்பட்டது. அதில் முல்லைப் பெரியாறு அணை பலமாக இருப்பதாகவும், அணை யில் 142 அடி வரை நீரைத் தேக்கிக் கொள்ளலாம் என்றும், எஞ்சியிருக்கும் பலப்படுத்தும் பணிகள் முடிவடைந்தவுடன் மேலும் ஒரு குழு அமைத்து, அணையின் நீர் மட்டத்தை அதன் நிறை மட்டமாகிய 152 அடிக்கு உயர்த்திட ஆவன செய்யலாம் என்றும் கூறப்பட்டிருந்தது. ஆனால் தீர்ப்பு வெளியான அன்றையதினம் ஆட்சியிலே இருந்த அ.தி.மு.க. அரசு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பையேற்று, தமிழ்நாட்டின் உரிமையை உடனடியாக நிலைநாட்டிட, முல்லைப் பெரியாறு அணையில் 142 அடி நீர் தேக்கும் வகையில் அணையின் வெளிப்போக்கிகளை (ஷட்டர்) இறக்கவில்லை. இதுபற்றிச் சட்டப்பேரவையில், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏன் உடனடியாக நடைமுறைப் படுத்தவில்லை என்று அரசைக் கேட்டபோது, அணையில் போதுமான நீர் இல்லை என்றும், கோடைக் காலமாக இருப்பதால் மழை இன்றி நீர்வரத்து முழுமையாகக் குறைந்து விட்டது என்றும், அன்றைக்கு முதல் அமைச்சராக இருந்த ஜெயலலிதா கூறினார்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, கேரள மாநில அரசு, ஓர் அவசரச் சட்டத்திருத்த மசோதாவினைத் தாக்கல் செய்து, முல்லைப் பெரியாறு அணையில் 136 அடிக்கு மேல் நீரைத் தேக்கக்கூடாது என்று நிறைவேற்றியது. மேலும் கேரளாவில் உள்ள முல்லைப் பெரியாறு அணை உட்பட அனைத்து அணைகளையும் பராமரிக்கவும், தேவை ஏற்பட்டால் புதிய அணை கட்டிக் கொள்ளவும் கேரள அரசுக்கு உரிமை உள்ளது என்று தீர்மானமும் கேரளச் சட்டப்பேரவையிலே நிறைவேற்றிக் கொண்டார்கள்.

தமிழகத்திற்கு ஆதரவாக உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பினை ஜெயலலிதா அரசு உடனடியாக அமல்படுத்தாத காரணத்தினால், 142 அடி வரை நீரைத் தேக்கிக் கொள்ளும் அந்த உரிமையை அப்போது இழக்க நேரிட்டது. இதற்குப் பின்னர் உச்ச நீதிமன்றத்தின் நேரடிப் பார்வையில் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு இறுதியாக முல்லைப் பெரியாறு அணையில் 142 அடி நீரைத் தேக்கிக் கொள்ளலாம் என்ற இறுதித் தீர்ப்பு 7-5-2014 அன்று கிடைத்தது.

இந்த நிலையில்தான் முல்லைப் பெரியாறு அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் கன மழை பெய்து வருவதால், முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து கொண்டே வருவதாகச் செய்தி வந்துள்ளது. எனவே நீண்ட சட்டப் போராட்டத்திற்குப் பிறகு உச்ச நீதிமன்றம் நமக்கு வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் 142 அடி நீரைத் தேக்குவதற்கான வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்வதற்கான தக்க நேரம் கனிந்துள்ளது.

ஆனால் 5-11-2014 வரை 456 கன அடி நீரைக் குடிநீருக்காக வெளியேற்றி வந்ததற்கு மாறாக, அந்த அளவை அதிகப்படுத்தி 6-11-2014 அன்று 1,816 கன அடி நீரை உடனடியாக வெளியேற்றுவதன் காரணம் என்ன? நீர்வரத்து 1973 கன அடியாக இருக்கின்ற நேரத்தில் தண்ணீரை அதிகப்படியாக வெளியேற்றுவது, இந்த அரசுக்கு உச்ச நீதிமன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்த விருப்பமில்லையோ என்று அந்தப் பகுதியிலே வாழும் விவசாயிகள் மற்றும் அங்கேயுள்ள ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த பொதுமக்கள் எண்ணுகிறார்களாம். குறிப்பாக அந்தப் பகுதியிலே உள்ள தமிழக விவசாயிகள், "முல்லைப் பெரியாறு அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கட்டப்பட்டுள்ள, ஆக்கிரமிப்பு கட்டடங்களைப் பாதுகாக்கவே உச்ச நீதிமன்றத்தில் கேரள அரசு

வழக்கு தொடரும் நாடகத்தை அரங்கேற்றுகிறது, இதில் வேறு எந்த மர்மமும் இல்லை" என்று கூறியுள்ளனர். மிக முக்கியமாக விவசாயம் மற்றும் குடிநீர்த் தொடர்பான இந்தப் பிரச்சினை பற்றி அ.தி.மு.க. அரசின் சார்பில் எவ்வித விளக்கமும் இதுவரை வரவில்லை.

கழக ஆட்சிக் காலத்தில் உச்ச நீதிமன்றத்தில் முல்லைப் பெரியாறு அணை குறித்து வழக்குத் தொடுத்து, அந்த வழக்கினால் தமிழக மக்களுக்கு நியாயம் கிடைத்த உண்மை வரலாற்றையே மறைத்து, அ.தி.மு.க.வினர் அவர்களாகவே தங்களுக்குத் தாங்களே மதுரையில் பாராட்டு விழா நடத்திக் கொண்டதையும், முல்லைப் பெரியாறு பிரச்சினைக்காகக் குரல் கொடுத்தவர்களையும், போராடியவர்களையும் அழைக்காமலே அந்த விழா நடத்தப்பட்டது பற்றி அப்போதே எள்ளி நகையாடப்பட்டதையும் தமிழகம் இன்னும் மறக்கவில்லை. மேலும் தற்போது முல்லைப் பெரியாறு அணையில் 142 அடிவரை தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டு உச்ச நீதிமன்றத் தீர்ப்பு நிறைவேற்றப்பட்டால், அந்தப் பகுதியைச் சேர்ந்த பினாமி முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வத்திற்குப் பெயர் வந்துவிடுமோ என்று ஜெயலலிதா கருதுகிறாரோ என்ற சந்தேகம்தான் அந்தப் பகுதி மக்களிடையே தற்போது ஏற்பட்டுள்ளதாம்.

தொடர் மழை காரணமாக எல்லா குளங்களும் நிரம்பி, எல்லா நிலங்களிலும் ஈரப்பதம் மிகுந்துள்ள நேரத்தில், தேவையில்லாமல் அணையிலிருந்து அதிகப்படியான நீரை வெளியேற்றுவதன் மூலம், 142 அடிவரை நீரைத் தேக்கும் வாய்ப்பினைத் தமிழகம் இழக்க நேரிடும் நிலை உள்ளது. எனவே உடனடியாகக் குடிநீர்த் தேவைக்காக மட்டும் முல்லைப் பெரியாறு அணையிலிருந்து நீரைத் திறந்துவிட்டு, அணையை வந்தடைகின்ற நீரை முழுவதுமாகச் சேமித்து, கழக ஆட்சியில் தொடரப்பட்ட வழக்கின் மீது உச்ச நீதிமன்றம் இறுதியாக அளித்த தீர்ப்பினை நிலைநாட்டி விவசாயிகளின் நீண்ட கால விருப்பத்தை நிறைவேற்றிடத் தமிழக அரசு முன்வர வேண்டுமென வலியுறுத்துகிறேன்.

கடந்த ஆகஸ்ட் 22ஆம் தேதி மதுரையில் நடை பெற்ற பாராட்டு விழாவில், முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டத்தை 152 அடி வரை உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று ஜெயலலிதா தெரிவித்தார். அதற்காக இதுவரை என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டார் என்பது

அவருக்குத்தான் வெளிச்சம். ஏனெனில் கேரள அரசு முல்லைப் பெரியாறு நீர் மட்டத்தினை 136 அடியாகக் குறைக்கக்கோரி உச்ச நீதிமன்றத்தில் கோரிக்கை வைக்கப்போவதாக அறிவித்திருக்கின்ற நேரத்தில், 142 அடிவரை நீரைத் தேக்கிக் கொள்ளலாம் என்ற உச்ச நீதிமன்ற உத்தரவை நிலைநாட்டிக்கொள்ள முன்வர வேண்டுமென்பது அவசர அவசியமான தேவை. கேரள அரசு உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்வதால், தமிழக அரசு "கேவியட்" மனு தாக்கல் செய்ய வேண்டுமென்று தமிழகத்தைச் சேர்ந்த மூத்த பொறியாளர்கள் எதிர்பார்க்கிறார்கள். எனவே தமிழக அரசு இனியும் காலம் தாழ்த்தாமல், இந்த உண்மையைப் புரிந்து கொண்டு, மூத்தப் பொறியாளர்கள் மோகனகிருஷ்ணன், சுப்ரமணியம் போன்றவர்களின் ஆலோசனைகளையும் பெற்று, எப்போதும் போல நமக்கென்ன என்று இருக்காமல், இப்போதாவது சற்றுச் சுறுசுறுப்பாக இயங்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறேன்.

மேலும், திருப்பூர் மாவட்டம், உடுமலைப் பேட்டையை அடுத்துள்ள அமராவதி அணையின் மூலம் திருப்பூர், ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்களில் சுமார் ஒரு இலட்சம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. இதனால் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் பயனடைந்து வருகிறார்கள். அமராவதி ஆற்றின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் 26 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் மூலம் 300க்கும் மேற்பட்ட கிராமங்களில் வசிக்கும் இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான மக்களின் குடிநீர்த் தேவை பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. கேரள மாநிலத்திலிருந்து வரும் பாம்பாறு, வால்பாறை வழியாக வரும் சின்னாறு, கொடைக்கானல் பகுதியிலிருந்து வரும் தேனாறு ஆகிய 3 நதிகள் தான் அமராவதி அணைக்கு முக்கிய நீர் ஆதாரம். இதில் பாம்பாற்றின் பங்குதான் அதிகம். இந்த நிலையில் கேரள முதலமைச்சர், காணொலி வாயிலாகப் பாம்பாற்றின் குறுக்கே பட்டிசேரி அணைத் திட்டத்தைத் தொடங்கிவைத்துள்ளார். இந்தத் திட்டம் அமல்படுத்தப்பட்டால், அந்தப் பகுதியிலே உள்ள தமிழக விவசாயிகளைத்தான் பெரிதும் பாதிக்கும்.

காவிரி ஒப்பந்த அடிப்படையில், காவிரியின் கிளை நதிகளில் ஒன்றான அமராவதிக்கு வரும் தண்ணீரைத்தடுக்கவும், அதில் அணை கட்டவும் கூடாது என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும் காவிரி தொடர்பாகத் தமிழகம் மற்றும் கேரள மாநில அரசுகள்

தொடர்ந்த வழக்கு உச்ச நீதிமன்றத்திலே விசாரணையில் உள்ளது. கேரள அரசு தொடங்கும் திட்டத்திற்கு மத்திய அரசின் சுற்றுச் சூழல், மின்சார வாரியம், வனத்துறை, காவிரி நடுவர் மன்றம் என்று யாரிடமும் எவ்வித அனுமதியும் பெறவில்லை என்றும் கூறப்படுகிறது. எனவே கேரள அரசின் இந்த முயற்சியைத் தடுக்க தமிழக அரசு, மத்திய அரசின் மூலமாக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஜனநாயக அமைப்பில் தேர்தலில் போட்டியிட்டு யார் வேண்டுமானாலும் ஆட்சிக்கு வரலாம், போகலாம், ஆனால் அரசு நிலையானது. அது தேங்காமல் இயங்க வேண்டும். "அம்மா"வையே நினைத்து கொண்டிருந்தால் ஆட்சிச் சக்கரம் சுழலாது. எனவே மக்கள் நலனைப் பாதுகாத்திடத் தமிழக அரசு இயங்க முன்வர வேண்டும். அதை விட்டு இப்போதைய நிலையே நீடித்தால், அதனால் விளையும் எல்லா தவறுகளையும், பாதிப்புகளையும் களைவது பெருந்துன்பமாகி விடும். எனவே மாநில மக்களுக்கான ஆட்சி இயங்க முன்வரட்டும்; இடர்ப்பாடுகளைக் களையட்டும்!

அன்புள்ள,

மு.க.

8-11-2014

3938. தொடர்ந்து மௌன சாட்சிகளாக இருப்பதா?

உடன்பிறப்பே,

தாய்மொழிக் கல்வியின் இன்றியமையாமை குறித்து திராவிட முன்னேற்றக் கழகம் பல ஆண்டுகளாக எடுத்துரைத்து; அதற்காகப் பாடுபட்டு வருகிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், கழகத்தின் உயிர்க் கொள்கைகளிலே ஒன்றுதான் தாய்மொழிக் கல்வி. தாய்மொழித் தமிழுக்குத் தொண்டு செய்வது தமிழனின் உடன் பிறந்த கடமை என்ற உணர்வும், எழுச்சியும் நம் ஒவ்வொரு வருக்கும் வர வேண்டும்.

"குழந்தைகளின் மன வளர்ச்சிக்கு உகந்தது தாய்மொழி வழிக் கல்வியே. வேறெந்த மொழியையும் மாணவர்கள் மீது சுமத்துவது தாய்நாட்டுக்குச் செய்யும் பாவம்" என்று அண்ணல் காந்தி அடிகளே அறிவுறுத்தியிருக்கிறார். கழகம் ஆட்சியிலே இருக்கும் போதெல்லாம் தாய்மொழிக் கல்வியின் முதன்மைக்காகப் பாடுபட்ட போதிலும், அது முழுமையான வெற்றியை அடைய முடியாத அளவுக்கு ஒரு குறிப்பிட்ட பிரிவினரால் தடுக்கப்பட்டே வந்தது. அந்த அளவுக்கு ஆங்கில மோகம் பெருகி, அதன் காரணமாகத் தாய்மொழிக் கல்வி வளர்ச்சி ஆழ வேரூன்றாமல் இருந்து மேலோங்காமல் பார்த்து வருகிறது.

சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, ஜப்பான் போன்ற வல்லரசு நாடுகளில் ஆங்கில ஆதிக்கத்துக்கு அடிபணியாமல், தத்தமது தாய்மொழியிலேயே கல்வியை வழங்கி வருகிறார்கள். தாய்மொழியிலேயே மேற்படிப்பினைத் தொடரும்போது, அவர்களால் படிப்பதை நன்றாகப் புரிந்துகொண்டு வேகமாக முன்னேற முடிகிறது.

இந்த நிலையில் பஞ்சாப் மாநிலத்தில் மருத்துவம் படிக்கும் மாணவர்கள் தங்கள் மருத்துவ நூல்களை இனிமேல் ஆங்கிலத்

திலே படிக்கத் தேவையில்லை; அந்த நூல்களை பஞ்சாபி மொழியிலே மொழி மாற்றம் செய்ய அரசு முடிவு செய்திருப்பதாகச் செய்தி வந்துள்ளது. தாய்மொழியிலே படித்தால் மாணவர்களுக்குப் புரிந்துகொள்ளும் திறன் அதிகமாகி அறிவு தொடர்ந்து கூர்மையாகும் என்பதைப் பஞ்சாப் அரசு ஒப்புக்கொண்டுள்ளது. இதற்காக பஞ்சாப் அரசு பிறப்பித்த உத்தரவின்பேரில், பாபா பரீத் பல்கலைக் கழகத்தின் சுகாதார அறிவியல் துறை, மருத்துவ நூல்களைத் தங்களது சொந்த மொழியில் மொழிபெயர்க்கும் பணியில் இறங்கிவிட்டதாம்.

60 டாக்டர்கள் மொழிபெயர்க்கும் பணியிலே ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும், அந்தப் பணி முடிவடைந்ததும் பஞ்சாப் மாநில மருத்துவ மாணவர்கள் மருத்துவ நூல்களையெல்லாம் அவர்களுடைய சொந்தத் தாய்மொழியிலேயே படிப்பார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பஞ்சாப் மாநில அரசு எடுத்துள்ள முடிவு தமிழகத்திலேயும் எடுக்கப்பட வேண்டும்.

தி.மு. கழக அரசு பொறுப்பிலே இருந்தபோது இப்படிப்பட்ட முடிவு வர வேண்டுமென்பதற்காகத்தான், அதற்கு முதற்கட்டமாக, கழக ஆட்சியில் 2010ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில், அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தில் கட்டுமானவியல், இயந்திரவியல் ஆகிய பாடப் பிரிவுகளில் மாணவர்கள் இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தாய்மொழியில் கற்க - தமிழ் மொழி மூலமாகக் கற்க வகை செய்து, ஆணையிட்டு, அந்த ஆண்டிலேயே 1,378 மாணவர்கள் தமிழ்வழிப் பொறியியல் வகுப்பு களில் சேர்ந்துள்ளனர். கழக ஆட்சிக்குப் பிறகு தமிழ் வழிக் கல்வியில் பொறியியல் கல்லூரியில் படிக்க மாணவர்களுக்குத் தொடர்ந்து ஊக்கமளிக்கப்படவில்லை. இதிலே மேலும் ஆர்வம் காட்டப்பட்டிருந்தால் பொறியியல் பட்டப் படிப்பின் அனைத்துப் பிரிவுகளிலும் தமிழ்வழிக் கல்வி தொடங்கப்பட்டிருப்பதோடு, தமிழ் வழிக் கல்வி மருத்துவம் போன்ற ஏனைய தொழில் படிப்புகளிலும் பரவியிருக்கும். கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டம் என்பதால் அதற்கும் ஏற்படுத்தப்பட்டது தடைக்கல்.

பொறியியல் பட்டப் படிப்புக்கான பல்கலைக் கழக வினாத்தாள்கள் ஆங்கிலத்திலே மட்டும் வழங்கப்பட்டு

வந்த நிலையை தி.மு. கழக ஆட்சிக்காலத்திலேதான் 2010-2011ஆம் ஆண்டு முதல், ஆங்கிலம் அல்லது தமிழில் வினாத்தாள்கள் வழங்கவும், விடைகளை ஆங்கிலம் மற்றும் தமிழில் எழுதும் முறையை அறிமுகப்படுத்தவும், பல்கலைக் கழகங்கள் அறிவுறுத்தப்பட்டன. மேலும் இளங்கலை பட்டப் படிப்பில் தமிழைக் கட்டாயமாக ஒரு பாடமாக எடுத்து அதிலே தேர்ச்சிபெற வேண்டுமென்று ஆணையிடப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டது. இப்படித் தமிழ்வழிக் கல்வியை ஒவ்வொரு கட்டமாகக் கொண்டு சென்று வளர்த்தெடுக்கும் பணி தி.மு. கழக ஆட்சியில் தொடங்கப்பட்டது.

தி.மு. கழகம் ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றதும், 31-5-2006 அன்று தமிழ் மொழிக் கல்வி 1ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை கட்டாயம் என்று சட்டம் இயற்றி நடைமுறைப்படுத்தப்பட்டது.

10 மற்றும் 12ஆம் வகுப்புகளில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ்வழிப் பயிலும் மாணவர்கள் பொதுத் தேர்வுக் கட்டணம் செலுத்துவதில் இருந்து கழக ஆட்சியில் விலக்களிக்கப்பட்டு அதன் காரணமாக ஆண்டுக்கு ஏறத்தாழ பத்து இலட்சம் மாணவர்கள் பயனடைகிறார்கள்.

மாணவர்களின் நலன் கருதி, கழக ஆட்சிக் காலத்தில், 2008-2009ஆம் கல்வி ஆண்டு முதல் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் செலுத்த வேண்டிய சிறப்புக் கட்டணத்தை ரத்து செய்து, அதன் காரணமாக 21 கோடியே 40 இலட்ச ரூபாயினை அரசு ஏற்றுக் கொண்டது. ஆண்டுக்கு ஏறத்தாழ 50 இலட்சம் மாணவர்கள் இத்திட்டத்தின்கீழ்ப் பயன் பெற்றார்கள்.

1970ஆம் ஆண்டிலேயே நவம்பர் திங்களில் கழக அமைச்சரவை கூடி ஒரு முடிவெடுத்தது. அதுதான், தமிழைப் பயிற்று மொழியாக எடுத்துப் படித்தவர்களுக்கே - தமிழை ஆட்சி மொழியாகக் கொண்ட அரசின் வேலை வாய்ப்புகளில் முதல் இடம். அதில் மிச்சமிருந்தால்தான் ஆங்கிலத்தின்வழிப் படித்தவர்களுக்கு இடம். அதே நேரத்தில் சிறுபான்மை மக்களின் நலனும் பாதிக்கப்படாது என்று முடிவெடுக்கப்பட்டது.

இந்த வழியிலேதான் பஞ்சாப் மாநிலத்தில் தற்போது மருத்துவப் படிப்பையே தாய்மொழியில் படிக்கலாம் என்ற முடிவினை அரசு அறிவித்துள்ளது. "மாணவனின் தாய்மொழியே மிகச் சிறந்த பலன் அளிக்கக்கூடிய பயிற்று மொழி என்பதிலே உறுதியான எண்ணம் உடையவர்களில் நானும் ஒருவன்" என்று பண்டித நேரு அவர்களும் குறிப்பிட்டுள்ளார். பண்டித நேரு அவர்களின் 125வது ஆண்டு பிறந்த நாள் விழாவைக் கொண்டாடும் இந்த வேளையிலாவது நேருவின் கருத்தை ஆழச் சிந்தித்துப் பார்த்து நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும்.

தாய்மொழிவழிக் கல்வியே எளிமையும், இனிமையும் உடையது. அறிவைச் செழுமையாகத் தீட்டக் கூடியது. சிந்தனை வளத்தைச் சேர்க்கக் கூடியது. இதற்குப் பிறகாவது தாய்மொழியில் படிக்கும் ஆர்வத்தை நம்முடைய குழந்தைகளுக்கு ஏற்படுத்த வேண்டும். அதற்காக ஆங்கிலத்தை அறவே புறந்தள்ள வேண்டுமென்பது நம்முடைய கருத்து அல்ல. மொழிப் பாடமாகவே ஆங்கிலம் தொடரலாம். தற்போது ஆங்கிலக் கல்விக் கூடங்கள் பெருகி விட்டன. தமிழ்ப் பள்ளிகளில் பயிலும் மாணவர் எண்ணிக்கை குறைந்து வருகின்றது. உலக நாடுகளில் ஆங்கிலத்தின் பயன்பாடு சிறிதுசிறிதாகக் குறைந்து வருகிறது. எனினும், ஆங்கில மொழி அறிவும் வேண்டும் என்ற கருத்துக்கு நான் என்றைக்கும் மாறுபட்டவன் அல்லன். அதே நேரத்தில் தமிழ் வழிக் கல்விக்கு எதிரான எந்தக் கருத்தையும் என்னால் ஏற்றுக் கொள்ள இயலாது.

1968ஆம் ஆண்டு தமிழகச் சட்டப்பேரவையில் அன்று முதல் அமைச்சராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள், "இன்னும் ஐந்தாண்டுக் காலத்திலே தமிழ் மொழி செயல் வடிவில் பயிற்று மொழியாக ஆகும்" என்ற ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார். ஐந்தாண்டுகள் என்பது ஐம்பதாண்டுகளாக ஆன போதும் அண்ணாவின் தீர்மானம் இன்னமும் நடைமுறைப்படுத்த முடியாத நிலையில்தான் உள்ளதே எனும் ஏக்கம்தான் எஞ்சி நிற்கிறது.

தாய் மொழிக் கல்வி என்பதைப் போலவே, தமிழ் ஆட்சி மொழியாக வேண்டும் என்பதும் நம்முடைய உயிர்க் கொள்கைகளிலே ஒன்று தான். பேராசிரியர் அ. இராமசாமி அவர்களின் நூல் வெளியீட்டு விழாவில் 2006ஆம் ஆண்டு ஜனவரி இறுதியில் நான் உரையாற்றும் போதே, "இந்தியாவிலே

இருக்கின்ற மாநில ஆட்சி மொழிகள் அனைத்தையும், இந்திய ஆட்சி மொழிகளாக ஆக்க வேண்டும், மலையாள மொழியாகட்டும்; தெலுங்கு மொழியாகட்டும்; பஞ்சாபி மொழியாகட்டும், எல்லா மொழிகளும் ஆகட்டும், அவ்வளவு மொழிகளும் ஆவதற்கு இயலுமா, பல சிக்கல்கள் வருமே என்றெல்லாம் யாராவது வாதிப்பார்களேயானால், அவர்களுக்குச் சொல்கிறேன்; அவைகள் எல்லாம் ஆவதற்கு இன்னும் பருவம் அடையாமல் இருந்தால், பருவம் அடைந்த மொழி, திருமணத்திற்காகக் காத்துக் கொண்டிருக்கின்ற மொழி தமிழ் மொழி. மற்றவைகளைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம். முதலில் எல்லா வளமும் நிறைந்த இலக்கண, இலக்கியப் பொருத்தமும் வாய்ந்த தமிழை ஆட்சி மொழி ஆக்குங்கள். மற்ற மொழிகளை ஆக்கக் கூடாது என்பது நம்முடைய வாதம் அல்ல. எந்தெந்த மொழிகள் மாநில ஆட்சி மொழிகளாக இருக்கின்றனவோ, அந்த மொழிகள் எல்லாவற்றையும் இந்தியாவின் பொது ஆட்சி மொழிகளாக ஆக்குங்கள். அப்போதுதான் இந்தியாவின் ஒற்றுமை ஏதோ கட்டி வைக்கப்பட்ட பொட்டலம் என்று இல்லாமல், அது உறுதிமிக்க ஒன்றாக இருக்க முடியும்" என்று தெரிவித்திருக்கிறேன். அதே அடிப்படையில், ஒவ்வொரு தேர்தலின்போதும் வெளியிடப்படும் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் "தமிழ் ஆட்சி மொழி" எனும் கருத்தைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

குதிரையை வண்டிக்குப் பின்பக்கம் பூட்டுவதைப் போல, தமிழ்வழிக் கல்வியைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லாமல், அரசு ஆரம்பப் பள்ளிகளிலும்கூட ஆங்கில வழிக் கல்வியைப் புகுத்தத் துணிந்திருக்கும் அ.தி.மு.க. அரசு தமிழ்வழிக் கல்வியை ஆதரித்து ஊக்கப்படுத்தப் போவதில்லை. இத்தகைய எதிர்மறை நடவடிக்கைகளை இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் தமிழக மக்கள் மௌன சாட்சிகளாகப் பார்த்துச் சகித்துக் கொண்டிருக்கப் போகிறார்களோ!

அன்புள்ள,

மு.க.

14-11-2014

3939. இருள் அகலவும், இதயங்கள் மலரவும் இதோ திட்டங்கள்!

உடன்பிறப்பே,

பொதுப் பிரச்சினைகள் பற்றியும் தமிழகத்தில் நடை பெறுகின்ற ஆட்சியின் அலங்கோலங்கள் பற்றியும் தினந்தோறும் கருத்துகளை எடுத்துரைக்கும் நான், இன்று நம்முடைய கழகம் திட்டமிட்டு அவசியம் நடத்திட வேண்டிய பிரச்சாரக் கூட்டங்கள் பற்றிச் சில விவரங்களை உன்னுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

உடன்பிறப்பே, உனக்குத் தெரியும்; எனக்கு 90 வயது முடிவுற்று 91 வயது நடக்கிறது. இந்த வயதிலும் என்னால் தூங்க முடிவதில்லை. எனக்கு நல்ல தூக்கம் வருவதில்லை. காரணம், என் வீட்டைப் பற்றிய கவலையில்லை ; நம் கட்சியைப் பற்றியும், நம் கட்சிக்கு வாளும் - கேடயமுமாக இருந்து வரும் பிரச்சாரக் கூட்டங்கள் சிலகாலம் முறையாகவும் பரவலாகவும் நடைபெறாமல் தொய்வு ஏற்பட்டு இருக்கிறதே என்பதை பற்றியும்தான் கவலை.

நம் கழகத்தை இந்த அளவுக்கு உயர்த்தி வளர்த்தது, கழகச் சொற்பொழிவாளர்கள் ஒவ்வொரு ஊராக, நகரமாக, கிராமமாகச் சென்று செய்த கொள்கைப் பிரச்சாரம் அல்லவா? இன்று இந்த வயதிலும் என்னால் பயணம் மேற்கொண்டு பிரச்சாரம் செய்ய முடிகிறதோ இல்லையோ என்பதற்காக, கழகத்தின் கருத்துகளை அறிக்கைகளாக, “உடன்பிறப்பு” மடல்களாக வெளியிட்டு வருகிறேன். இந்த கருத்துகளை நம்முடைய “முரசொலி” நாளேட்டைத் தவிர, வேறு எந்த நாளேடும் ஆளுவோர் மீது கொண்டுள்ள அச்சத்தின் காரணமாக முழுமையாக வெளியிடுவதில்லை. நான் வெளியிட்டு வரும் கருத்துகளை முறையாகத் தொடர்ந்து படித்து வந்தாலே பிரச்சாரத்திற்கான கருப்பொருள் கிடைத்து விடும்.

"நம்மிடையே நீண்ட நாள்களாக இருந்து வரும் மடமைகளையும், முன்னேற்றத் தடைகளையும், குறைபாடுகளையும் நீக்கவும், மக்கள் யாவரையும் ஒன்றுபடுத்தி ஒரு சமுதாயமாக ஆக்கவும், சிறப்பாக நமக்கு - திராவிட மக்களுக்கு இருந்து வரும் சமுதாய இழிவு, மத மூட நம்பிக்கை, சாதிப் பிரிவு வேறுபாடு அடியோடு அழிக்கப்பட்டு, உயர்சாதிக் கொடுமையிலிருந்து மீளவுமே பாடுபட்டு வரும்படியான, அதாவது மக்களுக்கு வலியுறுத்தி வரும்படி யான ஒரு பிரச்சார ஸ்தாபனமே திராவிடர் கழகம்" என்று தந்தை பெரியார் அவர்கள் திராவிடர் கழகத்தை, பிரச்சார இயக்கம் என்றே வர்ணித்தார்.

திராவிடர் கழகத்திலிருந்து திராவிட முன்னேற்றக்கழகம் தோற்றுவிக்கப்பட்டபோது பேரறிஞர் அண்ணா அவர்கள் அதை "ஒட்டு மாஞ்செடி" என்றும்; தி.க.வும், தி.மு.க.வும் "இரட்டைக் குழல் துப்பாக்கி" என்றும் விளக்கியதன் காரணமாக, திராவிட முன்னேற்றக் கழகம், திராவிடர் கழகத்தின் நீட்சி என்றே கருதப்பட்டு வருகிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் "பாசறை" என்றும், பாசறைப் பயிற்சி, பிரச்சாரத்திற்குப் பெரிதும் தேவைப்படும் என்றும் கருதினார். இலட்சியங்களை வென்றெடுக்க பிரச்சாரம் மிகவும் அவசியம். பிரச்சாரத்திற்கு பாசறைப் பயிற்சியில் தேர்ச்சி பெற்றவர்கள் நிரம்பத் தேவை.

அதனால்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள், "ஸ்தாபனம் - அதாவது அமைப்பு - பலருடைய எண்ணங்களைத் திரட்டி, பலருடைய சக்திகளை ஒருங்கு சேர்த்து வைக்கப்பட்டிருக்கும் ஒரு பொது இடம் - ஒரு பாசறை. பாசறையிலே, பலவிதமான போர்க் கருவிகளும், வீரர்களும் தேவை. கருவிகளின் எண்ணிக்கையும் வகையும் வளர்ந்து கொண்டிருக்க வேண்டும். பாசறையின் உபயோகம் அதிகப்பட வேண்டுமானால்; வாள் மட்டும் போரெனக் குவித்து வைத்துக் கொண்டு, கேடயம் தேடாமல் இருப்பதோ, வில்களைக் குன்றெனக் குவித்து வைத்துக் கொண்டு அம்புகள் இல்லாமல் இருப்பதோ, துப்பாக்கிகளைக் கிடங்குகளில் குவித்து வைத்துக் கொண்டு, வெடி மருந்து தேடாமல் இருந்து விடுவதோ, இவை யாவும் ஒழுங்காகவும் தேவைக்கேற்ற அளவும் இருந்து இவைகளைத் திறம்பட உபயோகிக்கும் ஆற்றலுள்ள வீரர்கள் இல்லாதிருந்தால், பாசறை

இருந்தென்ன பயன்?" என்று வகைவகையான பொருள்கள் - அந்தப் பொருள்களைப் பொருத்தமாகக் கையாளக் கூடிய அறிவுக் கூர்மையும் நாவன்மையும் மிக்க பேச்சாளர்கள் - அவர்கள் மூலம் ஒருங்கிணைக்கப்பட்டு நாட்டில் தொடர்ந்து நடைபெற வேண்டிய பிரச்சாரம் பற்றி அருமையாக விளக்கியிருக்கிறார் அண்ணா.

தி.மு.கழகத்தில் பிரச்சாரம் செய்வோர், பொது மக்கள் மத்தியில் "பிரச்சாரப் பீரங்கிகள்" என்றும், "சந்து முனைச் சிந்துபாடிகள்" என்றும் அழைக்கப்பட்டனர். தி.மு.கழகத்தின் பிரச்சாரக் கூட்டங்கள் "கழகத்தின் மாலை நேரக் கல்லூரிகள்" எனக் கருதப்பட்டன. தி.மு. கழகம் அரசியலில் காலடியெடுத்து வைப்பதற்கு முன்பெல்லாம், மேடைப் பொழிவு, பிரசங்கமாக இருந்தது; பொழிஞர், பிரசங்கியாக இருந்தார். பிரசங்கம், சொற்பொழிவாகவும், பிரசங்கியார் சொற் பொழிவாளராகவும் நற்றமிழில் நாடு போற்றும் மாற்றம் பெற்றது நமது இயக்கச் சொற்பொழிவாளர்களால்தான்.

அறிஞர் அண்ணா அவர்களும் அவருடைய ஆற்றல் மிக்க தம்பிமார்களும் கையாண்ட பிரமிக்கத்தக்க பிரச்சார உத்திகள்தான், தமிழக அரசியலையே புரட்டிப் போட்டன. அரசாங்கம், ஜனநாயகம், வாக்குரிமை, கருத்துரிமை - என்பதெல்லாம் ஏதோ எங்கோ இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அந்நியப் பொருள்கள் என்ற எண்ணம் மாறி, நமக்காகவும், நாட்டின் பொது நலனுக்காகவும் ஏற்பட்டவைதான் இவை அனைத்தும் என்ற ஒளிபிறந்து, நமது மக்கள் விழிப்பும் எழுச்சியும் பெற்றது கழகத்தின் இடையறாத பிரச்சாரத்தின் காரணமாகத்தான். பட்டிதொட்டியெங்கும் - ஏன், தெருமுனைகளிலும் திண்ணைகளிலும் நடத்தப்பட்ட பிரச்சாரத் தினால்தான், கழகம் ஆல் போல் தழைத்து வந்திருக்கிறது. 1996 வரை கழகம் பெற்ற தேர்தல் வெற்றிகள் அனைத்தும் அதனுடைய பிரச்சாரப் பலத்தினால்தான்.

தந்தை பெரியார், இறுதி மூச்சு இருந்தவரை தமது வேனிலேயே இடைவிடாது சுற்றுப்பயணம் செய்து பிரச்சாரப் பணியை மேற்கொண்டவர். அவர் மறைந்த போது, தமிழக மக்கள், "பெரியாரின் பிரச்சாரச் சுற்றுப்பயணம் நின்று விட்டதே" என்றுதான் கலங்கிக் கண்ணீர் சிந்தினர். பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்தைச் சுற்றிச் சுற்றி வந்து விடிய விடியச் சோர்வின்றிப் பிரச்சாரம் செய்தவர்; "இரவு முழுதும் பிரச்சாரம் செய்து, தொழுதூர் வந்தோம்; பொழுது விடிந்தது" என்று

முதல் நாள் மாலையிலிருந்து மறுநாள் விடியல் வரை செய்த பிரச்சாரத்தைப் பற்றிப் பெருமிதத்தோடு சுட்டிக்காட்டியிருக்கிறார்.

கழகப் பிரச்சாரப் பணியில் காடு மேடு கழனி என்றும், கிராமம், குக்கிராமம், நகரம் என்றும் கண் துஞ்சாது ஆர்வத்தோடு ஈடுபட்டவன் நான். சைக்கிளிலும், கட்டை வண்டியிலும் கல்லும் முள்ளும் நிறைந்த கரடுமுரடான பாதைகளில் பயணம் செய்து, "பெட்ரோமாக்ஸ்" விளக்கொளியில் பிரச்சாரக் கூட்டங்களில் பேசிய காலமெல்லாம் உண்டு. இன்று காலம் மாறிவிட்டது; போக்குவரத்து வசதிகளிலும், மேடை அமைப்பு - விளம்பரம் போன்ற பொதுக்கூட்ட ஏற்பாடுகளிலும் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. நாடகங்கள், திரைப்படங்கள், எழுத்தோவியங்கள், மேடைகள் எனப் பல்வேறு பிரச்சாரச் சாதனங்களையும் தொடர்ந்து பயன்படுத்தியவன் நான். பிரச்சாரப் பயணங்களின்போது நான் சந்தித்த விபத்துகள், அதனால் எனக்கு நேர்ந்த இழப்புகள் பல.

1996க்குப் பிறகு நடந்த தேர்தல்களில் "பிரிண்ட் மீடியா" எனப்படும் அச்சியற்றி வெளிவரும் பத்திரிகைகள் மட்டுமல்லாமல், "எலெக்ட்ரானிக் மீடியா" என்றழைக்கப்படும் ஊடகங்களும் பெரும் பங்கு வகிக்கலாயின. தொடக்க காலத்தில் பத்திரிகைகள் சில, கழகத்திற்கு எதிரானவையாகவே இருந்து வந்தன. அந்த வகைப் பத்திரிகைகளுக்குத் தி.மு.கழகம் என்றாலே ஒரு வகை ஒவ்வாமை, வெறுப்பு இருந்தன. தி.மு.கழகத்தின் பிரச்சாரம் ஏற்படுத்திய எழுச்சியினால் ஏற்றம் பெற்றோரில் பெரும்பான்மையினர் பிற்படுத்தப்பட்டோர் - மிகப் பிற்படுத்தப்பட்டோர் - தாழ்த்தப் பட்டோர் என்பதாலும், தி.மு.கழகத்தின் சமுதாயக் கருத்துகளையும் அரசியல் கொள்கைகளையும் சமுதாயத்தின் சில பிரிவினரால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை என்பதாலும், தி.மு.கழகம் முன்னேற்றப் பாதையில் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் தங்கள் தலை மேல் விழும் இடி என்று அவர்கள் கருதினர். அந்த ஒரு சிலரின் கட்டுப்பாட்டில் இயங்கிய பத்திரிகைகள் - அவைகளுக்கு இடையே எழுதப்படாத ஒப்பந்தம் ஒன்றை உருவாக்கிக் கொண்டதைப்போல - கழகத்தை அழித்தொழிக்க ஒவ்வொரு கட்டத்திலும் முயற்சி செய்து பார்த்தன. இந்த அணுகுமுறையை ஒட்டியே புதியதாக வந்த ஊடகங்களும் செயல்

படலாயின. பத்திரிகை பலமோ, ஊடக வலிமையோ தி.மு.கழகத் திற்கு இல்லை.

சில பத்திரிகைகளும் ஊடகங்களும் ஜனநாயக மாண்புகளையே சவாலுக்கு அழைக்கின்றன. கருத்துச் சுதந்திரத்தை, கருத்துகளைத் திணிப்பதற்கும், மக்களின் எண்ண ஓட்டங்களை ஆக்கிரமித்துக் கொள்வதற்கும் அவை பயன்படுத்துகின்றன. செய்திகளைச் சொல்லி, காய்தல் உவத்தலகற்றி நடுநிலையோடு கண்ணியமான விமர்சனங்களைச் செய்து, பொது மக்களின் சிந்தனையைச் செழுமைப்படுத்த வேண்டும் என்ற அடிப்படை நோக்கத்திற்கு விடை கொடுத்து விட்டு; தகவல்களைத் தங்கள் விருப்பத்திற்கேற்றபடி திரித்தும் வளைத்தும் கற்பனை கலந்தும் வெளியிட ஆரம்பித்தன. இதிலே அவைகளுக்கு இடையே வணிக ரீதியிலான போட்டி வேறு. யார் செய்தியை முந்தித் தருவது, யார் தரும் செய்தி கேட்போரைப் பெரிதும் கவர்ந்து ஈர்க்கிறது, யார் தரும் செய்தியை அதிகமான வர்கள் கேட்டு ஆனந்தம் கொள்கிறார்கள் என்ற அடிப்படையில் போட்டி கடுமையாகி; பேனைப் பெருமாளாக்குவதும், துரும்பைத் தூணாக்குவதும், பூனையைப் புலியென உருவகப்படுத்துவதும், புழுதியைக் கிளப்பிவிட்டு அதை பூதம் எனச் சித்தரிப்பதும் சர்வ சாதாரணமாக ஊடகங்களில் நடைபெறுகின்றன. முழுத் தகவலும் மறுக்கப்படும் இந்தத் தந்திரங்களினால் மக்களிடையே ஒருவித மயக்கம் ஏற்பட்டு; வெண்ணைக்கும் சுண்ணாம்புக்கும் உள்ள வேறுபாடு மறைந்து விடுகிறது.

இனி ஒரு அரசு இப்படிப்பட்ட சாதனைகளைச் செய்திட முடியுமா? என்று எண்ணியெண்ணிப் பெருமைப்படத்தக்க அளவுக்கு கழக அரசு, 1996-2001 காலகட்டத்தில் தமிழ் மாநிலத்தைப் பல்வேறு முனைகளிலும் முன்னெடுத்துச் சென்று, வளர்ச்சியின் அனைத்து அளவுகோல்களையும் விஞ்சி, முதன்மை மாநிலமாக ஆக்கிக் காட்டியது. எனினும் என்ன? கழக ஆட்சியில் பணப் புழக்கம் இல்லை - என்ற கற்பனையைச் சில ஊடகங்கள் உள்நோக்கத்தோடு தொடர்ந்து பரப்பி மக்களை நம்பச் செய்து, தேர்தலில் தோற்கடிக்கச் செய்தனர். 2006-2011 காலகட்டத்திலும் கழக அரசு நிகழ்த்திக் காட்டாத சாதனைகளா? 2ஜி என்பது கானல் நீரைத் தேடும் மாயமானைப் போன்றது; ஆனாலும் அந்த அனுமானப் பூதத்தை நடமாடவிட்டு, மக்களைத் திகைத்திட

வைத்துத் திசைதிருப்பித் தேர்தலில் கழகத்தைத் தோற்கடித்தனர். மிகைப் படுத்தல், அதீத கற்பனை - அவற்றின் ஊடே இரண்டறக் கலந்திருக்கும் கவர்ச்சி, ஆகியவை காரணமாகக் கழகம் தோற்கடிக்கப்பட்டது. வாக்காளர்களின் கண்கள் ஊடகங்களின் திட்டமிட்டப் பிரச்சாரத் தால் கட்டப்பட்டுவிட்டதால், நமது சாதனைகள் அவர்களுக்குப் புலப்படாமலேயே போய்விட்டன. அந்தச் சிலருடைய வெற்றிக்கும், நம் பலருடைய தேர்தல் தோல்விக்கும் என்ன காரணம் என்பதைச் சற்று ஆழமாக எண்ணிப் பார்த்தால் பின்னணியை உணர்ந்து கொள்ள முடியும்.

ஊடகத்தினர், ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்ட ஒருவரைத் தாங்கிப் பிடிக்கிறார்கள்; அனுதாப அலை அடிக்கிறது என்ற மாயையை ஏற்படுத்துகிறார்கள். தண்டிக்கப்பட்டது ஒரு சதி என்றும்; தண்டித்த நீதிபதி கண்டிக்கப்பட வேண்டியவர் என்றும் உள்நோக்கத்தோடு சொல்பவர்களைத் தூக்கி நிறுத்துகிறார்கள்.

ஆனால் அதேநேரத்தில் விசாரணையே முடிவுறாத நிலையில் உள்ள வழக்கை ஊதிப் பெரிதாக்கி, அதில் தீர்ப்பு வழங்கிடத் துடிப்போடு இவர்களே முன்வருகிறார்கள். சட்டம் - நியாயம் - நீதி என்பனவெல்லாம் இவர்களுக்கு வேறு, நமக்கு வேறு என்று பாகுபாடு படுத்தப் பார்க்கிறார்கள். சட்டத்தின்முன் அனைவரும் சமம் என்ற தத்துவமே தவறானது என்று நம்ப வைக்க எத்தனிக்கிறார்கள். எங்கு பார்த்தாலும் குறைகளும் எல்லாவற்றிலும் ஊழலும் நிறைந்த ஆட்சிக்கு எதிரான மனோபாவம் இல்லை என்று சொல்லிச் சொல்லி, தெளிவான சிந்தனை உடையவர்களைக்கூட, அது உண்மையாக இருக்குமோ என்று குழப்பம் அடையச் செய்கிறார்கள்.

இந்த நிலைமைகளையெல்லாம் மாற்றிட நம்மிடம் இருக்கும் ஒரே ஆயுதம் பிரச்சாரம்தான். கழகத்தில் உள்ள ஒவ்வொருவரும் பிரச்சாரகராக மாற வேண்டும். கழகப்பிரச்சாரக்கூட்டங்கள் - தலைமைக் கழகம் அறிவித்தால்தான் நடத்துவது என்ற நடைமுறையை மாற்றி - நாடெங்கும் நாள்தோறும் நடத்தப்பட வேண்டும். அடுத்துவரும் ஓராண்டுக்குள் குறைந்தது ஐந்தாயிரம் பொதுக் கூட்டங்களையாவது கழகத்தின் சார்பில் நடத்திட வேண்டும். கழகத்தில் தற்போது புதியதாகப் பிரிக்கப்பட்டவை உட்பட 65 மாவட்டக் கழகங்களும் - 578 ஒன்றியக் கழகங்களும் - 129 நகரக் கழகங்க ளும்-122 பகுதிக் கழகங்களும் - 538 பேரூர்க்

கழகங்களும் உள்ளன. 578 ஒன்றியக் கழகங்களும், 129 நகரக் கழகங்களும், 122 பகுதிக் கழகங்களும் ஒவ்வொரு மாதமும் ஒரு பிரச்சாரக் கூட்டம் நடத்தினாலே மாதம் ஒன்றுக்கு 829 கூட்டங்களாகின்றன. இந்த முறைப்படி பனிரெண்டு மாதங்களில் ஒன்றியக் கழகங்களும் - நகரக் கழகங்களும்-பகுதிக் கழகங்களும் மொத்தம் 829X12 = 9,948 கூட்டங்களை அதாவது பத்தாயிரம் பிரச்சாரப் பொதுக் கூட்டங்களை நடத்திட முடியும். எனவே கழகப் பிரச்சாரத்தை மேலும் வலுப்படுத்தி முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்ற நோக்கில் ஒன்றியக் கழகங்களும், நகரக் கழகங்களும், பகுதிக் கழகங்களும் 2015 ஜனவரி மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு பிரச்சாரக் கூட்டத்தை நடத்தி, கழகத்திற்குப் புதிய உத்வேகத்தை உருவாக்கித் தர வேண்டுமென்றும்; ஒவ்வொரு மாதமும் கூட்டம் நடத்தியதற்குப் பிறகு, கூட்டம் பற்றிய விவரங்களை தலைமைக் கழகத்திற்கு அனுப்பிட வேண்டுமென்றும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். கூட்டங்கள் பற்றி கணினியில் பதிவு செய்யப்படும் தொகுப்பு விவரங்களை ஒவ்வொரு மாதமும் நானும், பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்களும், பொருளாளரும் ஆய்வு செய்ய இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

20-11-2014 அன்று திருமண நிகழ்ச்சி ஒன்றில் நான் பேசும்போது குறிப்பிட்டதை இங்கே நினைவு படுத்துகிறேன். “தி.மு.கழகக் கூட்டம் என்றால், தி.மு.கழகத்தின் பிரச்சாரம் என்றால், அது ஏதோ அரசாங்கத்தை மாற்றுகின்ற கூட்டம் என்ற எண்ணத் தோடு மட்டும் அணுகக் கூடாது. சமுதாயத்தை அடியோடு மாற்றுகின்ற சமுதாயப் புரட்சிக்கான சூழலை உருவாக்குகின்ற, மானமுள்ள சமுதாயத்தை ஏற்படுத்துகின்ற பிரச்சாரத்திற்கான கூட்டம் என்றே கருத வேண்டும். நமது பிரச்சாரக் கூட்டங்களில் சுயமரியாதைக் கருத்துகள், சமுதாயக் கருத்துகள், சமுதாய மாற்றத்திற்கு அடிப்படையான கருத்துகள் எடுத்துவைக்கப்பட வேண்டும். நேற்றைய தினம் நானும், நம்முடைய பேராசிரியர் அவர்களும், தமிழர் தலைவர் வீரமணி அவர்களும் என்னுடைய இல்லத்திலே அமர்ந்து இந்தச் சமுதாயத்தை மேலும் சீர்படுத்த என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி யோசித்து எடுக்கப்பட்ட முடிவின்படி இந்தக் கருத்துகளை வெளியிடுகிறேன்.”

ஆலோசித்து வகுக்கப்பட்டு, அறிவிக்கப்பட்டுள்ள இந்த நிரல்படி மாநிலம் எங்கும் பரவலாகத் தொடர்ந்து முறைப்படி நடைபெற உள்ள நமது பிரச்சாரக் கூட்டங்களில் நமது கருத்துகளை வகைப்படுத்தித் திரும்பத் திரும்பச் சொன்னால் தான் அவை பொதுமக்கள் மனதில் பசுமரத்தாணி போல் பதியும்; மாற்றத்திற்கான கதவுகள் திறக்கும். கழகக் கருத்துகள் குன்றின் மேலிட்ட விளக்காக ஒளிரட்டும்; இருள் அகலட்டும்; இதயங்கள் மலரட்டும்!

அன்புள்ள,

மு.க.

22-11-2014

3940. ஆச்சார்யா தரும் அதிர்ச்சித் தகவல்கள்!

உடன்பிறப்பே,

செல்வி ஜெயலலிதா தரப்பினர் மீது பெங்களூரு தனி நீதிமன்றத்தில் நடைபெற்ற சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணையின்போது, அரசுத் தரப்பு வழக்கறிஞராகப் பணியாற்றிய திரு.பி.வி.ஆச்சார்யா தனது வாழ்க்கைப் பயணத்தை "அனைத்தும் நினைவுகளிலிருந்து (All from Memory)" என்ற தலைப்பில், ஆங்கிலத்தில் நூல் ஒன்றை எழுதி இருக்கிறார். இந்த நூலை பெங்களூருவில் 15-11-2014 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் கர்நாடக உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு. வகேலா வெளியிட்டிருக்கிறார். நீதிபதி திரு. வேணுகோபால் அவர்களும், மத்திய அரசின் முன்னாள் சட்டத்துறை அமைச்சர் திரு.வீரப்பமொய்லி அவர்களும் நூல் வெளியீட்டு நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருக்கிறார்கள்.

மொத்தம் 33 அத்தியாயங்களும், 336 பக்கங்களும் கொண்ட இந்த ஆங்கில நூலில், இருபத்தைந்தாவது அத்தியாயத்தின் தலைப்பே, "Case Against Selvi J.Jayalalitha - Chief Minister of Tamil Nadu" என்பது தான்! அதில் 206ஆம் பக்கம் முதல் 220ஆம் பக்கம் வரை, ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கில் அரசு வழக்கறிஞராக இருந்தவரும், கர்நாடக மாநில அரசின் தலைமை வழக்கறிஞராக (அட்வகேட் ஜெனரலாக) ஐந்துமுறை பணிபுரிந்தவருமான மூத்த வழக்கறிஞர் திரு.பி.வி. ஆச்சார்யா இந்த வழக்கில் ஆஜரானபோது தனக்கு ஏற்பட்ட அனுபவங்களைப் பற்றி அவரே நேரடியாகச் சொல்வதைப்போல எழுதியிருக்கிறார். இந்த நூலில், ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கு பற்றி அவர் எழுதியுள்ள சில முக்கியமான குறிப்புகளை மட்டும் இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

- ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கின் விசாரணை சென்னையில் தொடங்கியது. அதில் அரசுத் தரப்பில் 250 சாட்சிகள்

விசாரிக்கப்பட்டனர். 2000க்கும் மேற்பட்ட ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டன. அரசுத் தரப்பு விசாரணை முடிவதற்கு முன்னரே, குற்றஞ்சாட்டப்பட்ட செல்வி ஜெயலலிதா தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றார். அதனையடுத்து ஜெயலலிதா அரசு சொத்துக் குவிப்பு வழக்கில் அரசு சார்பில் வாதாடப் புதிய வழக்கறிஞர் ஒருவரை நியமனம் செய்தது. அதற்குப் பிறகு ஏற்கனவே சாட்சியம் அளித்த 76 சாட்சிகள் திரும்பவும் நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டனர். அவர்களுடைய மறு சாட்சியத்தில் அவர்கள் முன்பு சாட்சியம் அளித்தபோது சொன்னவற்றை மறுத்து, அவை உண்மை அல்ல என்று தெரிவித்தனர். மீண்டும் அழைக்கப்பட்ட இந்த சாட்சிகளை புதியதாக நியமனம் செய்யப்பட்ட அரசு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்யவோ, அவர்களைப் பிறழ் சாட்சிகளாக நடத்தவோ முன்வரவில்லை. உச்ச நீதிமன்றம் கருத்துரைத்தபடி, சென்னைத் தனி நீதிமன்றத்தில் நடத்தப்பட்ட இந்த விசாரணையே கேலிக்கூத்தான விசாரணை (farce of a trial) ஆகும்.

● வழக்கு விசாரணை பெங்களூருக்கு மாற்றப்பட்டதற்குப் பிறகு, தனி நீதிமன்றத்தில் 45 சாட்சிகளை மேலும் விசாரணை செய்ய வேண்டும் என்று நான் விண்ணப்பித்தேன். 45 சாட்சிகளில் 21 சாட்சிகள் மட்டுமே மீண்டும் அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டனர். பெங்களூரு தனி நீதிமன்றத்தில் சாட்சிகளை மீண்டும் அழைப்பதற்கு நீண்டகாலம் ஆனது.

● சாதாரணமாக விசாரணை நீதிமன்றத்தின் நடை முறைகளின்படி, அடுத்த கட்டமாக குற்றவியல் நடை முறைச் சட்டம் பிரிவு - 313ன்படி குற்றம் சாட்டப்பட்டோர் விசாரிக்கப்பட வேண்டும். இந்த விசாரணைக்குக் குற்றம் சாட்டப்பட்டோர் அனைவரும் நேரடியாக நீதி மன்றத்தில் ஆஜராக வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தெளிவாக ஆணை வழங்கி உள்ளது. எனினும், குற்றம் சாட்டப்பட்டோரை நேரடியாக நீதிமன்றத்திற்கு அழைத்து விசாரிப்பது என்பது மிகவும் கடினமான காரியமாகிவிட்டது.

● செல்வி ஜெயலலிதா 16-5-2011 அன்று முதலமைச்சராகப் பதவி ஏற்றதற்குப் பிறகு, தமிழக இலஞ்ச ஒழிப்புத்துறை என்னிடமும், அரசுத் தரப்பு வழக்கு குறித்தும் தன்னுடைய அணுகுமுறையை முற்றிலுமாக மாற்றிக் கொண்டது. அந்தத்துறை, குற்றவியல் நடை முறைச் சட்டம் 173(8)-பிரிவின்படி

வழக்கில் தொடர்ந்து மேலும் புலன் விசாரணை செய்யவும், உயர் நீதிமன்றத்தில் வாதாடுவதற்கெனத் தனியே வழக்கறிஞர் ஒருவரை நியமித்துக் கொள்ளவும் முடிவு செய்தது. இந்த இரண்டு பிரச்சினைகள் குறித்தும் எனக்கும் தமிழக இலஞ்ச ஒழிப்புத் துறைக்கும் இடையே கடும் கருத்து வேறுபாடுகள் எழுந்தன. வழக்கில் தொடர்ந்து புலன் விசாரணை செய்வதற்கு சட்டத்தின் அடிப்படையில் நான் எதிர்ப்பு தெரிவித்தேன். உச்ச நீதிமன்றம் வழங்கிய உத்தரவின் காரணமாக, அரசுத் தரப்பு தனி வழக்கறிஞரை (Special Public Prosecutor) மீறி, தமிழக இலஞ்ச ஒழிப்புத் துறைக்கெனத் தனியே வழக்கறிஞர் ஒருவரை நியமனம் செய்து கொள்ள முடியவில்லை. எனக்கும் தமிழக இலஞ்ச ஒழிப்புத் துறைக்கும் இடையே நடந்த கடிதப் போக்குவரத்துகள் அனைத்தும் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக் கின்றன. விசாரணைக்குப் பிறகு உயர் நீதிமன்றம், தமிழக இலஞ்ச ஒழிப்புத்துறை தொடர் விசாரணை மேற்கொள்வது குறித்தும், தனி வழக்கறிஞரை நியமித்துக் கொள்வது குறித்தும் நான் மேற்கொண்ட நிலைப்பாடே சரியானது என்று தீர்ப்பளித்தது. மேலும், அரசின் தனி வழக்கறிஞரே இலஞ்ச ஒழிப்புத்துறைக்காக வாதாட முடியும் என்றும் தெளிவுபடுத்தப்பட்டது.

● கர்நாடக உயர் நீதிமன்றத்தின் இந்த உத்தரவை எதிர்த்து தமிழக இலஞ்ச ஒழிப்புத்துறை உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு அனுமதி மனு ஒன்றைத் தாக்கல் செய்தது. உச்ச நீதிமன்றத்தில் நான் ஆஜரானேன். 30-1-2012 அன்று உச்ச நீதிமன்றம் இருதரப்பு வாதங்களையும் விரிவாகக் கேட்டதற்குப் பின்னர், இலஞ்ச ஒழிப்புத் துறையின் சிறப்பு அனுமதி மனுக்களைத் தள்ளுபடி செய்தும், கர்நாடக உயர் நீதிமன்றத்தின் உத்தரவை உறுதி செய்தும் ஆணையிட்டது.

● குற்றம் சாட்டப்பட்டோர் அனைவரும், குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு - 313ன்படி, அவர்களுடைய வாக்குமூ லங்களைப் பதிவு செய்யும் பொருட்டு நீதிமன்றத்தில் நேரடியாக ஆஜராக வேண்டும் என உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருந்த போதிலும்; நீதிமன்றத்தில் நேரடியாக ஆஜராவதிலிருந்து தனக்கு விதிவிலக்கு அளித்திட வேண்டும் என்றும், தன்னுடைய எழுத்து வடிவிலான வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய அனுமதிக்க வேண்டும் அல்லது காணொலிக் காட்சி வாயிலாக

தன்னுடைய வாக்கு மூலத்தைப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்றும்; செல்வி ஜெயலலிதா சார்பில், விண்ணப்பம் ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. சென்னையில் தனி நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகாமலேயே வினாக்களுக்கு பதில்களை அளித்திட செல்வி ஜெயலலிதாவுக்கு சென்னை தனிநீதிமன்ற நீதிபதி முன்பு அனுமதி அளித்ததே, தற்போது விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்ட தற்கான அடிப்படை ஆகும். சென்னை தனி நீதிமன்ற நீதிபதி, செல்வி ஜெயலலிதாவுக்கு வழங்கிய அனுமதி தொடர்பாக உச்ச நீதிமன்றம் கடும் ஆட்சேபணை தெரிவித்தது.

● ஜெயலலிதாவின் கோரிக்கை விசாரணை நீதிமன்றத்திலும் உயர் நீதிமன்றத்திலும் தள்ளுபடி செய்யப்பட்டதால், அவர் உச்ச நீதிமன்றத்தை அணுகினார். உச்ச நீதிமன்றமும் அவருடைய கோரிக்கையை நிராகரித்து, தனி நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி கேள்விகளுக்குப் பதில் அளிக்க வேண்டும் என்று உத்தரவிட்டது. இவ்வளவுக்கும் பிறகுதான் 23-11-2011 அன்று ஜெயலலிதா அவருடைய வாக்குமூலத்தை அளிக்க பெங்களூரு தனி நீதிமன்றத்தில் நேரில் ஆஜரானார்.

● அரசுத் தரப்புத் தனி வழக்கறிஞர் என்ற முறையில் நான் தொடர்ந்து மேற்கொண்டு வந்த நியாயமானதும் நேர்மையானதுமான நிலைப்பாட்டினாலும்; புலன் விசாரணையை மேலும் தொடர்வது குறித்தும், தமிழக இலஞ்ச ஒழிப்புத்துறை சார்பாக உயர் நீதிமன்றத்தில் தனியே வழக்கறிஞர் ஒருவரை நியமனம் செய்து கொள்வது குறித்தும், நேரடியாக ஆஜராவதிலிருந்து விலக்கு பெறுவது குறித்தும் நீதிமன்றங்கள் மூலம் சாதகமான உத்தரவுகள் கிடைக்காததாலும்; குற்றம் சாட்டப்பட்டோருக்குப் பெரும் பின்னடைவு ஏற்பட்டிருப்பதாக செல்வி ஜெயலலிதாவைப் பின்பற்றுவோர் மற்றும் ஆதரவாளர்கள் ஆத்திரம் அடைந்தனர் (appear to have been deeply annoyed and disturbed). அவர்கள் இனி தன்னலம் மிக்க ஆதிக்க சக்தியினர் எனக் குறிப்பிடப்படுவர். (The supporters / followers of the accused in the case, who are hereinafter referred to as `vested interests')

● அந்த ஆதிக்க சக்தியினர், குற்றம் சாட்டப்பட்டோருக்கு ஏற்பட்ட பெரும் பின்னடைவுக்கு, அரசுத் தரப்பின் தனி வழக்கறிஞர் என்ற முறையில் நான்தான் அடிப்படைக் காரணம் என்று கருதி, தனி வழக்கறிஞர் பதவியிலிருந்து என்னை நீக்குவதற்கு விடாப்பிடியாக முயற்சி செய்தனர்.

● நான் அரசுத் தரப்பு தனி வழக்கறிஞராகவும், அரசின் தலைமை வழக்கறிஞராகவும் பதவிகள் வகித்து வந்த காரணத்தால், ஒரே நபர் இரண்டு பதவிகள் வகிக்கக் கூடாது என்று காரணம் காட்டி, அரசுத் தரப்பு தனி வழக்கறிஞர் பதவியிலிருந்து விலகிவிட வேண்டுமென்று என்னைக் கட்டாயப்படுத்துவதற்கு முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன.

● சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடப்பட்டால், அதன் மூலம் என்னை அரசுத் தரப்பு தனி வழக்கறிஞர் பொறுப்பிலிருந்து விலக்கி விடலாம் என்ற நம்பிக்கையோடு, நான் தலைவராக இருந்த பி.எம்.எஸ். கல்வி அறக்கட்டளையில் முறைகேடுகள் நடந்ததாகச் சொல்லி, அவற்றின்மீது சி.பி.ஐ. விசாரணை கோரி இரண்டு "ரிட்" மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த இரண்டு "ரிட்" மனுக் களையும் உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. "ரிட்" மேல் முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டபோது, அவையும் தள்ளுபடி செய்யப்பட்டன.

● உயர் நீதிமன்றத்திலிருந்தோ அல்லது ஆளுநரிட மிருந்தோ அவர்கள் விரும்பியதை அடைவதில் தோற்றுப் போனதற்குப் பிறகு, எண்ணியதை முடிக்க அரசியல் ரீதியான அழுத்தம் தரப்பட்டது. நான் இரண்டு பதவிகளை வகித்து வந்ததால், அரசுத் தரப்பு வழக்கறிஞர் பதவியிலிருந்து விலகும்படி என்னைக் கேட்டுக் கொள்ள மாநில அரசுக்கு பா.ஜ.க. மேலிடம் உத்தரவிட்டதாகத் தெரிகிறது.

● என்மீது தொடர்ந்து இப்படி அழுத்தம் தரப்பட்டு வந்த நிலையில், நான் மாநில அரசின் தலைமை வழக்கறிஞர் பொறுப்பிலிருந்து விலகி விடுவதென்று தீர்மானித்து, 8-2-2012 அன்று ராஜினாமா செய்தேன். நான் ராஜினாமா செய்த அன்றே, மாநில அரசு அதனை ஏற்றுக் கொண்டது.

● அரசுத் தரப்பு வழக்கறிஞர் பொறுப்பிலிருந்து என்னைத் தூக்கியெறிய மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளிலும் தோல்வி கண்டதற்குப் பிறகு, அந்த ஆதிக்க சக்தியினர் என்னை அரசுத் தரப்பு வழக்கறிஞர் பொறுப்பிலிருந்து விரட்டுவதற்கு தனியார் மகஜர் மூலம் என்மீது புகார் கொடுப்பதென்று முடிவு எடுத்ததாகத் தோன்றுகிறது.

● ஆதிக்க சக்தியின் குழுவைச் சேர்ந்த ஒருவர், நான் அரசுத் தரப்பு வழக்கறிஞர் பொறுப்பை உடனடியாக ராஜினாமா

செய்யாவிட்டால், எனக்கு எதிராகப் புகார் தாக்கல் செய்யப்பட்டு, அதன்மீது தீவிரமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று என்னிடம் தெரிவித்தார்.

● எனக்கு எதிராகப் புலன் விசாரணை நடத்துவதற்கான நீதிமன்ற ஆணை மன உளைச்சலை ஏற்படுத்தியதோடு; சட்டத்துறையில் 56 ஆண்டுகளுக்கும் மேலாக அப்பழுக்கற்ற பணி புரிந்து கொண்டிருப்பவன் என்ற எனது புகழுக்குக் களங்கம் ஏற்பட்டு விடுமோ என்று எனக்குத் தோன்றியது. அந்த ஆதிக்க சக்தியினர் பிரயோகிக்கும் கடைசி ஆயுதம் இதுவாகத்தான் இருக்கும் என்று எனக்குப்பட்டது. எனவே, நான் அரசுத் தரப்பு வழக்கறிஞர் பொறுப்பிலிருந்து விலகி விடுவதென்றும்; என்மீது கொடுக்கப்பட்ட புகாரிலிருந்து நான் நிரபராதி என்று நிரூபிக்கப்படுவதற்கு முன்பு விலகுவதில்லை என்றும் முடிவெடுத்தேன்.

● அனைத்துத் தரப்பினரிடமும் விரிவான விசாரணை மேற்கொண்டதற்குப் பிறகு, கர்நாடக உயர் நீதிமன்றம், தனியார் கொடுத்த புகார் மனுவைத் தள்ளுபடி செய்தும், எனக்கு எதிரான விசாரணைக்கு உத்தரவிடப்பட்டதை ரத்து செய்தும் ஆணையிட்டது. புலன் விசாரணையை நியாயப்படுத்துவதற்கு ஏற்ற குற்றம் நிகழ்ந்ததற்கான ஆதாரம் எதுவும் புகாரில் இல்லை என்றும்; இதுபோன்ற புகாரை ஏற்று விசாரிப்பதற்கு தனி நீதிபதிக்கு அதிகாரம் இல்லை என்றும் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

● எனக்கு எதிராகக் குற்றவியல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு நடந்து கொண்டிருந்தபோது, நான் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளானேன். (During the pendency of the above criminal proceedings against me, naturally I had undergone mental agony.)

● பல்வேறு உத்திகளைக் கடைப்பிடித்ததற்குப் பிறகும் அந்த ஆதிக்க சக்தியினர் எதைச் சாதிக்க முடியாமல் போனதோ, அதை நான் ராஜினாமா செய்திருந்தால் சாதித்திருப்பார்கள்; அவர்களுடைய ஆசையும் நிறைவேறியிருக்கும். எனினும், எனக்கு எதிரான புகாரிலிருந்து நான் நிரபராதி என்று நிரூபிக்கப்பட்டு உயர் நீதிமன்றம் உத்தரவிடும் வரை நான் அரசுத் தரப்பு வழக்கறிஞர் பதவியை ராஜினாமா செய்ய விரும்பவில்லை. புகார் மனுவை

ரத்து செய்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டதற்குப் பிறகு, 13-8-2012 அன்று நான் என்னுடைய ராஜினாமா கடிதத்தை அரசிடம் ஒப்படைத்தேன்.

● கர்நாடக உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி என்னுடைய முடிவை நான் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று பெரிதும் விரும்பினார். ஆனால், அப்போது நானிருந்த மனநிலையில், எக்காரணம் கொண்டும் என்னுடைய ராஜினாமாவை திரும்பப் பெறுவதில்லை என்பதில் நான் உறுதியாக இருந்தேன்.

● இறுதியாக 17-1-2013 அன்று என்னுடைய ராஜினாமா மாநில அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இவ்வாறு சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணையில் எனக்கு இருந்த தொடர்பு முடிவுக்கு வந்தது. என்னுடைய சட்டத்துறை வாழ்க்கையில் என்னிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை நிறைவேற்றாமல் போனது இந்த ஒரே ஒரு நிகழ்வில் மட்டும்தான்.

● இந்த வழக்கில் நான் சந்தித்த பல்வேறு தடைகளை விளக்கிப் பட்டியலிட்டிருக்கிறேன்.

● வாய்தாக்களை எப்படி வெற்றிகரமாகப் பெற முடியும் என்பதற்குத் தேவையான பல்வேறு வகைப்பட்ட புதுமையான அடிப்படைகளை, இந்த வழக்கின் விசாரணை நீதிமன்றத்தில் நான் ஆஜரானதன் மூலம் கற்றுக் கொண்டிருக்கிறேன். "ஒத்திவைத்தல் அல்லது வாய்தாச் சட்டம்" (Law of Adjournments) என்ற பொருளை மையமாக வைத்து ஒரு நூலையே என்னால் எழுத முடியும். எனினும், குற்றவாளி யாராவது விசாரணையைத் தொடர்ந்து இழுத்தடிக்கும் நோக்கில் என்னுடை நூலைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது என்பதால் அவ்வாறு நூல் எழுத நான் விரும்பவில்லை.

உடன்பிறப்பே, இவ்வாறு திரு.பி.வி.ஆச்சார்யா, ஜெயலலிதாவுக்கு எதிரான வழக்கில் அரசுத் தரப்பு வழக்கறிஞராக நேர்மையாகவும், கடமை உணர் வோடும் பணி புரிந்ததற்காகவும், ஜெயலலிதா தரப்பினரின் சட்டத்திற்குப் புறம்பான கோரிக்கைகளுக்கெல்லாம் வளைந்து கொடுக்காததாலும், அவருக்குக் கிடைத்த பரிசு 'மன உளைச்சல்' மட்டும்தான். ஆதிக்கசக்திக் கும்பல் தொடர்ந்து கொடுத்த தொல்லைகளாலும், அரசியல்

ரீதியான அழுத்தத்தாலும், அவர் இறுதியில் ராஜினாமா செய்ய நேரிட்டிருக்கிறது. ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கில் நடந்த வினோத நிகழ்வுகளில் இதுவும் ஒன்று.

ஜெயலலிதா தரப்பினர் மீது நடந்த சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணையின்போது, "இது குற்றவியல் நீதிமன்றமா அல்லது ஒத்தி வைப்பு நீதிமன்றமா" என்று பெங்களூரு தனி நீதிபதி கேள்வி எழுப்பும் அளவுக்கு வாய்தாவுக்கு மேல் வாய்தாக்கள் கோரப்பட்டதை நீதிமன்றத் துறை சந்தித்தது. பல முறை ஏதாவது ஒரு சாக்கில், சட்டத்தின் சந்து பொந்துகளைப் பயன்படுத்தி உயர் நீதிமன்றத்திற்கும், உச்ச நீதிமன்றத்திற்கும் வழக்கு கொண்டு செல்லப்பட்டு - முறையும் குற்றஞ்சாட்டப்பட்டோர் நீதிமன்றங்களின் கண்டனங்களுக்குத் தொடர்ந்து ஆளாயினர். இறுதிக்கட்டத்திலே கூட, தீர்ப்பு வழங்கப்படும் நிலையில், தீர்ப்பு நாளையும், நீதிமன்ற வளாகத்தையும் மாற்ற வேண்டுமென்றுகோரி, அது ஏற்கப்பட்டதற்குப் பின் உச்ச நீதிமன்றம் சென்று, வேறு மாநிலத்திலே தீர்ப்பு வழங்க வேண்டுமென்று கோரி அதுவும் தள்ளுபடி செய்யப்பட்ட விநோதமும் இந்த வழக்கில் நடந்தேறியது. "குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் ஆஜராகாமல் இருப்பதை வைத்தே, தீர்ப்பு வழங்கி விடுவேன்" என்று தனி நீதிபதி பச்சாப்புரே கடும் எச்சரிக்கைவிடும் அளவுக்கு நிலைமை முற்றியதோடு, "நான் தனியாகக் கடந்த ஆறு மாதங்களாக நீதி மன்றத்தில் உட்கார்ந்து வருகிறேன். தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டதைப்போல உணருகிறேன்" என்று அவர் தன்னுடைய மன வேதனையை வெளியிடும் அளவுக்கு நிகழ்வுகள் உருவாக்கப்பட்டன.

இப்படி தனி நீதிமன்ற நீதிபதிகளையும், திரு. பி.வி.ஆச்சார்யா போன்றவர்களையும் மன வேதனைக்கும், மன உளைச்சலுக்கும் ஆளாக்கியவர்கள்தான், இன்றைக்கு உத்தமர்கள் போல வேடமணிந்து கொண்டு உலகத்தை ஏமாற்ற எத்தனிக்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம், வெளுத்ததெல்லாம் பால் என்று நினைக்கும் வெகுளிகள் தமிழ் மக்கள் என்ற எண்ணத்தைத் தவிர வேறு என்ன இருக்க முடியும்?

அன்புள்ள,

மு.க.

23-11-2014

3941. நல்ல சமயம் இது; நழுவ விடலாமா?

உடன்பிறப்பே,

2-11-2014 தேதிய "டைம்ஸ் ஆப் இந்தியா" ஆங்கில இதழில், "Empowerment of women remains on Paper: Report" என்ற தலைப்பில் மகளிருக்கு இட ஒதுக்கீடு பற்றி ஆய்வு அடிப்படையிலான விரிவான செய்தி ஒன்றினைக் காண நேரிட்டது. 1989ஆம் ஆண்டு தி.மு.கழகம் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது மகளிருக்குச் சொத்தில் சம உரிமை என்ற சட்டம் இயற்றப்பட்டது. மேலும் அதே ஆண்டில்தான், அரசு வேலை வாய்ப்புகளில் பெண்களுக்கு 30 சதவிகிதம் வழங்கும் சட்டமும் கழக ஆட்சியிலே நிறைவேற்றப்பட்டது.

இந்தியா விடுதலை பெற்றதற்குப் பிறகு ஒவ்வொரு அரசாங்கமும் மகளிர் உரிய பிரதிநிதித்துவம் பெறவேண்டுமென்பதைத் தங்களுடைய முக்கிய முழக்கமாக ஒலித்த போதிலும்; பெண்கள் ஆண்களுக்குப் பின்னால்தான் இடம் பெற வேண்டிய நிலையிலே உள்ளார்கள் என்றும், கொள்கை முடிவுகளை வடிவமைப்பதிலும், பொருளாதார முன்னேற்றம் பற்றி வரையறை செய்வதிலும், மகளிர்க்கு உரிய முக்கியத்துவம் வழங்கப்படவில்லை என்றும் அரசாங்கத்தின் அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது.

மத்திய புள்ளியியல் துறை சார்பில், "2014இல் இந்தியாவில் பெண்களும் ஆண்களும்" என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள குறிப்பில், மோடி அவர்களின் அமைச்சரவையில் 45 பேர் இடம் பெற்றிருந்த போதிலும், அதிலே பெண்கள் 7 பேர் மட்டுமே என்றும்; 2004ஆம் ஆண்டு 10 சதவிகிதம் என்ற அளவுக்கு இருந்த மகளிர், பத்தாண்டுகளுக்குப் பிறகும் தற்போது 15 சதவிகிதம் பெண் அமைச்சர்கள்தான் என்ற அளவுக்கு இருக்கிறது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2014ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் 62 பெண்கள் மட்டுமே வெற்றிபெற்றார்கள்.

தேர்தலில் போட்டியிடும் மகளிர் என்று பார்க்கும்போது 15வது நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் 56 சதவிகிதம் போட்டியிட்டதற்கு மாறாக, 16வது பொதுத் தேர்தலில் 66 சதவிகிதமாக ஆனது; ஆண்கள் பங்கேற்ற புள்ளி விவரமும் 60 சதவிகிதம் என்பதிலிருந்து 67 சதவிகிதமாக ஆனது. நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் பெண்களில், 20 பேர் 41 வயதிலிருந்து 50 வயதானவர்கள்; அவர்களின் தகுதி நிலை என்ன என்று பார்த்தால், 34 சதவிகிதத்தினர் சமூக மற்றும் அரசியல் பணியாளர்கள் மற்றும் 44 சதவிகிதத்தினர் முதுநிலைப் பட்டதாரிகள். நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கும் ஆண்களைப் பொறுத்தவரை, 31 சதவிகிதத்தினர் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டவர்கள்; 42 சதவிகிதத்தினர் பட்டதாரிகள்; 29 சதவிகிதத்தினர் முதுநிலைப் பட்டதாரிகள்.

மாநிலங்களைப் பொறுத்தவரை என்ன நிலை என்று பார்த்தால், சட்டப்பேரவையிலே 8 சதவிகிதத்தினரே பெண்கள் - சட்டமன்ற மேலவையிலே 4 சதவிகிதத்தினர்தான் என்ற உண்மை தெளிவாகிறது. இந்தியாவில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடையே; அவர்களுக்கு ஜனநாயக அமைப்புகளில் உரிய அதிகாரங்களை வழங்கிடவும், தற்போது பொது வாழ்வில் நிலவி வரும் சமன்பாடற்ற பங்கீட்டினை மாற்றியமைத்திடவும் ஒரே தீர்வாக இருப்பது மகளிர்க்கான இட ஒதுக்கீட்டை உறுதி செய்வதுதான்.

நான் ஏற்கனவே பல முறை தெரிவித்ததைப் போல, மகளிர்க்கான இட ஒதுக்கீடு மசோதா நாடாளுமன்றத்தின் ஒவ்வொரு கூட்டத்தொடரிலும் நிறைவேற்றப்பட்டு விடும் என்ற எதிர்பார்ப்பு இருப்பதும், பிறகு ஏதோ ஒரு காரணத்தால், அந்த மசோதா நிறைவேற்றப்படாமல் போய் விடுவதும் வழக்கமாக இருந்து வருகிறது. நாடாளுமன்றத்திலும், சட்டமன்றங்களிலும் மகளிருக்கு 33 சதவிகிதம் இட ஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை கடந்த பதினேழு ஆண்டுகளாகப் பேசப்பட்டு வருகின்ற ஒரு பிரச்சினையாகும். 2005ஆம் ஆண்டு வேலூரில் நடைபெற்ற தி.மு.கழக மண்டல மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினையொட்டி, “தமிழக மகளிரே ஒன்று கூடுங்கள்” என்று நான் விடுத்த அறிவிப்புக்கிணங்க, அந்த ஆண்டு அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15இல் சென்னையில் மகளிர் பேரணி

ஒன்று என் தலைமையில் நடைபெற்றது. மேலும் 2007 ஆம் ஆண்டு ஜனவரி 6 ஆம் தேதி சென்னையில் நடைபெற்ற கழக உயர்நிலைச் செயல் திட்டக்குழு, மகளிருக்கு 33 சதவிகித இடஒதுக்கீடு கொண்டுவர வலியுறுத்தி, மாவட்டத் தலைநகரங்களில் 2007, பிப்ரவரி 10 ஆம் தேதி மகளிர் பேரணி நடத்தப்பட வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி, அவ்வாறே நடத்தப்பட்டது. 2008, ஜூன் திங்கள் 14, 15 ஆகிய இரு நாட்களில் கடலூரில் தி.மு.க. மகளிர் அணியினர் நடத்திய மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஒன்றுதான், "சட்டமன்ற, நாடாளுமன்றங்களில் பெண்கள் 33 சதவிகிதத் தொகுதிகளில் பங்கேற்கும் வகையில் சட்ட முன்வடிவை நிறைவேற்றிட வேண்டும்" என்பதாகும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் - இன்று நேற்றல்ல, பல ஆண்டுக் காலமாக இந்த மகளிர் இட ஒதுக்கீடு பிரச்சினையில் ஆழ்ந்த அக்கறைகொண்டு, ஒவ்வொரு மாநாட்டிலும், பொதுக் குழுவிலும் தீர்மானங்கள் நிறைவேற்றிடத் தவறியதில்லை.

இளம் தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள் பிரதமராக இருந்த போதுதான் மகளிர்க்கு நாடாளுமன்ற, சட்டமன்றங்களில் 33 சதவிகித இட ஒதுக்கீடு செய்யும் பிரச்சினை பரவலாகப் பேசப்பட்டது. அதற்கு முதற் கட்டமாக உள்ளாட்சி அமைப்புகளுக்கான "பஞ்சாயத்து ராஜ்" சட்டம் நடைமுறைக்கு வந்தபோது, உள்ளாட்சி அமைப்புகளில் மகளிர்க்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு என்பது கட்டாயமாக்கப்பட்டது. அதனால்தான், 1996 ஆம் ஆண்டு நான்காவது முறையாக எனது தலைமையில் கழக ஆட்சி தமிழகத்தில் பொறுப்பேற்றுக் கொண்டவுடன், அதற்கு முன்பு பல ஆண்டுக் காலம் நடைபெறாமல் இருந்த உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தலை அறிவித்து, மாநகராட்சிகள், நகராட்சிகள், ஊராட்சிகள் அனைத்திலும் தேர்தலை நடத்தி, 1,16,747 மக்கள் பிரதிநிதிகள் நிர்வாகப் பொறுப்புகளை யேற்கும் நிலையை உருவாக்கியபோது, மகளிருக்கு உள்ளாட்சி அமைப்புகளில் அனைத்துப் பதவிகளிலும் 33 விழுக்காடு ஒதுக்கீடு செய்து பெரும் சாதனை புரிந்ததின் வாயிலாக, 44,143 மகளிர் அப்போது உள்ளாட்சி அமைப்புகளில் பொறுப்பேற்கும் உன்னதமான நிலைமையைத் தமிழகத்தில் கழக அரசு செய்து காட்டியது.

அதே 1996ஆம் ஆண்டுதான் நாடாளுமன்றம், சட்டமன்றங்களில் மகளிர்க்கு இட ஒதுக்கீடு அளிக்கும் மசோதா முதலில் செப்டம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் முன்மொழியப்பட்டது. அன்றைய பிரதமர் தேவகவுடா அவர்கள் தலைமையிலான ஐக்கிய முன்னணி ஆட்சியில் 81வது அரசியல் சாசன திருத்தத்தின்கீழ் இந்த மசோதாவை அன்றைய மத்திய சட்ட அமைச்சராக இருந்த திரு. ராம்காந்த் காலப் அவர்கள் முன்மொழிந்தார். சமாஜ்வாடி, ராஷ்டீரிய ஜனதாதளம் ஆகிய கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்ததின் காரணமாக அந்த மசோதா - நாடாளுமன்ற உறுப்பினர் கீதாமுகர்ஜி தலைமையிலான நாடாளுமன்றக் கூட்டுக்குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது. அந்தக் குழுவின் அறிக்கையானது அதே ஆண்டு டிசம்பர் 9ஆம் தேதி யன்று பதினோராவது மக்களவையில் முன்மொழியப்பட்டது.

பின்னர் அதற்கடுத்த பன்னிரண்டாவது மக்களவையிலே, தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியிலே - 84வது அரசியல் சாசன திருத்தமாக இந்த மசோதா நாடாளுமன்றத்தில் - 26-6-1998 அன்று மீண்டும் முன்மொழியப்பட்ட போதிலும், எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பால் மக்களவை ஒத்திவைக்கப்பட நேரிட்டது. அதன்பிறகு பதின்மூன்றாவது மக்களவையில், திரு.வாஜ்பய் அவர்கள் பிரதமராக இருந்தபோது 22-11-1999 அன்று மீண்டும் மசோதா நாடாளுமன்றத்தில் முன்மொழியப்பட்டது. அன்று சட்ட அமைச்சராக இருந்த திரு. ராம் ஜெத்மலானி அவர்கள் மசோதாவை முன்மொழிந்த போது - சமாஜ்வாடி, ஆர்.ஜே.டி. கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்து - சட்ட அமைச்சரின் கையிலே இருந்த மசோதாவின் நகலைப் பிடுங்கி, கிழித்தெறிந்தனர். அதன் காரணமாக அப்போதும் இந்த மசோதா நிறைவேற்றப்படவில்லை.

அதன் பின்னர் 2002ஆம் ஆண்டில் ஒரு முறையும் - 2003ஆம் ஆண்டில் இரண்டு முறையும் மகளிர் இடஒதுக்கீடு மசோதா நாடாளுமன்றத்தில் முன்மொழியப்பட்ட போதிலும், அப்போதும் அதனை நிறைவேற்றிட இயலவில்லை. 2008ஆம் ஆண்டு, ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியிலே - சட்ட அமைச்சராக இருந்த திரு. பரத்வாஜ் அவர்கள் மாநிலங்களவையிலே மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை முன்மொழிந்த போதிலும், அப்போதும் அவையிலே ஏற்பட்ட அமளியால் மசோதா நிறைவேறவில்லை.

இப்படித் தொடர்ந்து ஐக்கிய முன்னணி ஆட்சியிலும், தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியிலும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியிலும் மகளிர் இடஒதுக்கீடு மசோதா முன்மொழியப்பட்ட போதிலும், மசோதாவின் பாதையில் இடப்பட்ட தடைக் கற்களின் காரணமாக நிறைவேறாமலேயே போய்விட்டது.

ஏன்; மகளிர்க்கென தனியே இடஒதுக்கீடு சட்டம் கொண்டு வரவேண்டும்? இப்போது மகளிர் அந்தப் பொறுப்புகளுக்குப் போட்டியிட முடியாதா? சட்டம் ஏதாவது தடுக்கிறதா?

சட்டம் தடுக்கவில்லை! சட்டமன்ற வேட்பாளராகவோ, நாடாளுமன்ற வேட்பாளராகவோ; தேர்தலில் ஒரு ஆண் போட்டியிடுவதைப் போல; இப்போது ஒரு பெண்ணும் போட்டியிடலாம்; அரசியல் சட்டம் அதைத் தடுக்கவில்லை. ஆனால் ஆணாதிக்கம் அவர்களைப் போட்டியிட அனுமதிக்கவில்லை. ஆணாதிக்கத்தின் இந்தச் சனாதனச் சம்பிரதாயத்துடன் எவ்வளவு காலத்துக்குச் சண்டை போட்டுக்கொண்டிருக்க முடியும்? அதனால்தான் மகளிர்க்கு இத்தனை இடம் என்று ஒதுக்கீடு செய்து, அந்தச் சட்டப்படி அந்த இடங்களில் மகளிர் மட்டும்தான் போட்டியிட முடியும் என்று செய்துவிட்டால்; அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைக்கான அடிக்கல் நாட்டும் திருப்பணி நிறைவேறத் தொடங்கிவிடும்.

ஏற்கனவே “தலித்” எனப்படும் தாழ்த்தப்பட்ட பெருங் குடி மக்களை; இந்த உரிமைகளைப் பெறக் கூடியவர்களாகக் கைதூக்கிவிட இருக்கின்ற தனித் தொகுதி முறை எல்லா மட்டத்திலும் அரசியல் சட்ட ரீதியாக அமைக்கப்பட்டிருப்பதை “மாதிரி”யாகக்கொண்டு; அந்தப் பழைய நிலைக்குப் பங்கமேதும் நேராமல்; தொடர்ந்து நீண்டகாலமாக வைக்கப்பட்டு வருகின்ற கோரிக்கையான மகளிர் இடஒதுக்கீட்டை ஏற்றுக்கொண்டு, அதற்கான துவக்கத்தை நடத்த சமூகப் பிரக்ஞையுள்ள அமைப்புகளும் மற்றும் உரிமைகள் வழங்கப்படுவதில் உள்ள நியாயங்களை நிலைநாட்டிட நினைத்திடும் இயக்கங்களும் முன்வர வேண்டும்.

மகளிர்க்கு இடஒதுக்கீடு சட்டம் நிறைவேற, “பொதுக் கருத்து” உருவாக வேண்டும் என்ற வாதம் ஏற்புடையதுதான். எனினும் பொதுக் கருத்து உருவாகிட மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு முயற்சியின் போதும், ஏதோ ஒரு காரணத்தினால் அது தள்ளிப்போய் “காலவரையறையற்ற காத்திருப்பு” என்ற

நிலை ஏற்பட்டு விடுகிறது. இதனைத் தவிர்த்திட, சட்டத்தை நிறைவேற்றுவதற்குரிய முயற்சிகளைத் தீவிரமாக மேற்கொண்டு, முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

முன்னர் மத்திய அரசு மகளிர் இடஒதுக்கீடு எனும் நீண்ட காலக் கோரிக்கையை எப்படியும் நிறைவேற்றுவது என்ற நெஞ்சார்ந்த உறுதியுடன்; தானே முன்வந்து அனைத்துக் கட்சிகளையும் தனித்தனியாகவும், பொதுவாகவும் அழைத்து வைத்துப் பேசியுங் கூட இறுதி முடிவு எடுக்க முடியாத நிலை நேரிட்டது.

காரணம் என்ன? விவசாயி, தொழிலாளி, ஆசிரியர், மாணவர் பிரச்சினை என்றால் அவர்கள் கோரிக்கை ஒருமித்த குரலிலேதான் பெரும்பாலும் ஒலிக்கிறது. ஆனால் மகளிர் இட ஒதுக்கீடு கோரிக்கை என்றாலே; முதலில் எல்லாக் கட்சிகளும் ஒருமித்த குரல் எழுப்புவது என்பது இயலாத ஒன்றாக இருக்கிறது. இட ஒதுக்கீடே மகளிர்க்குத் தேவையில்லை என்று சொல்கின்ற சில முற்போக்கு(?)வாதிகளும் இருக்கிறார்கள்; நிறைவேற்றுமாறு தலையசைப்போரிலும் நிபந்தனை விதித்துத் தம்மையறியாமலே தடுத்திடுவோரும் இருக்கிறார்கள். "எந்த வடிவத்தில் வேண்டுமானாலும் வரட்டும்; மகளிர்க்குச் சட்ட ரீதியாக இட ஒதுக்கீடு உரிமை வழங்கக் கதவு திறந்தால் போதும்" என நினைப்போரும் இருக்கிறார்கள். அப்படி நினைப்பவர்கள் மகளிர்க்கான இட ஒதுக்கீட்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோர் எனும் உள் ஒதுக்கீட்டுக்கு எதிர்ப்பான வர்கள் என்று எவரும் எண்ணிடத் தேவையில்லை. அவர்களின் சமூக நீதிக்கான இலட்சியப் பயணத்தைத் திரும்பிப் பார்ப்போருக்கு அந்தத் தவறான எண்ணம் எழவே எழாது!

மகளிர்க்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட சட்டம் கொண்டு வரும்போது, அதிலும் உள் ஒதுக்கீடு செய்து, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்துப் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற கோரிக்கை, புறக்கணிக்கப்படக் கூடியதல்ல! ஆனால் அந்தக் கோரிக்கையே; மூலக் கோரிக்கையான மகளிர் இட ஒதுக்கீடு கோரிக்கைக்கு ஒரு முட்டுச் சந்தாக ஆகிவிடக் கூடாதே என்பதுதான் நம் போன்றார்க்குள்ள கவலையாகும்!

இந்திய சுதந்திரப் போராட்டம் நடந்துகொண் டிருந்தபோதே வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கான உரிமைக் குரலும் ஒலித்து, அதனை உச்சநீதிமன்றம் மறுத்து; சமூகநீதி கண்டிட இட

ஒதுக்கீட்டுக்கான போராட்டத்தைத் திராவிடர் கழகம் மற்றும் திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் முறையே தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் நடத்திப் பெருந் தலைவர் காமராசரின் முறையீட்டினால், "ஆசிய ஜோதி" இந்தியப் பிரதமர் பண்டித நேரு 1951ல், அதற்காக அரசியல் சட்டத்தில் முதல் திருத்தமே கொண்டு வந்தார் என்பது வரலாற்றுச் சான்றாக இருக்கிறது. இது வருங்காலத்தில் மேலும் மேலும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோருக்கான சமூக நீதியை உறுதிப்படுத்திட வழிகாட்டும் பெருவாய்ப்பல்லவா!

இந்த வரலாற்றுச் சான்றினைக் கருத்தில்கொண்டு, முதலில் மகளிர்க்கான இடஒதுக்கீட்டினைச் சட்ட ரீதியாகக் கெட்டிப்படுத்திக் கொள்ளவும்; தொடர்ந்து உள் ஒதுக்கீட்டுக்கான ஏற்பாடுகளைச் செய்து கொள்ளவும் அனைத்து அரசியல் கட்சிகளும் முன்வர வேண்டும். பெண்களுக்கு நியாயமாகச் சேரவேண்டிய அதிகாரப் பங்களிப்பை வழங்கி இந்திய சமுதாயம் உண்மையில் சம நீதியையும், சமூக நீதியையும் போற்றிடும் சமுதாயமே என்று உலகத்தார்க்கு உணர்த்திட உதவிட வேண்டும் என்றும் இப்போதுள்ள பதினாறாவது நாடாளுமன்றத்திலும், மாநிலங்களவையிலும் மகளிர் இடஒதுக்கீட்டை மகிழ்வோடு ஆதரிக்கக்கூடிய கட்சிகளே பெரும்பான்மையாக உள்ளன; வாஜ்பய் பிரதமராக இருந்தபோது மகளிர் இடஒதுக்கீட்டுக்கு மேற்கொள்ளப்பட்ட மனமார்ந்த முயற்சிகளை நினைவில் கொண்டு; நல்ல சமயம் வாய்த்திருக்கிறது, இதை நழுவ விடக்கூடாது என்றெண்ணி, மகளிர் இடஒதுக்கீடு சட்டத்தை நிறைவேற்றிடப் பிரதமர் நரேந்திர மோடி ஆர்வத்தோடு முன்வர வேண்டும் என்றும்; வலியுறுத்துகிறேன்.

24-11-2014 அன்று தொடங்கும் நாடாளுமன்றக் குளிர்காலக் கூட்டத் தொடரில் இன்சூரன்ஸ் திருத்த மசோதா, தொழிலாளர் சட்டங்கள் போன்ற மிகுந்த சர்ச்சைக்குள்ளாகி இருக்கும் மசோதாக்கள் உள்ளிட்ட 67 மசோதாக்களை நிறைவேற்றிட முனைப் புடன் செயல்பட்டுவரும் மத்திய அரசு, நீண்டகாலமாகக் கிடப்பில் போடப்பட்டுள்ள மகளிர் இடஒதுக்கீடு மசோதாவையும் நிறைவேற்றிட முனைப்போடு முயற்சிக்கும் என்று நம்புகிறேன்.

அன்புள்ள,

மு.க.

25-11-2014

3942. அன்று நடந்தது என்ன? என்ன?

உடன்பிறப்பே,

முதலமைச்சர் பதவியிலே இருப்பதற்கு ஒரு கண்ணியம் வேண்டும். அது எந்தக் கடையிலே விற்கும் என்று கேட்பவர்களை அங்கே உட்கார வைத்தால், அவர்கள் தங்கள் குணத்தைக் காட்டத் தான் செய்வார்கள். ஆலை இல்லாத ஊருக்கு இலுப்பைப் பூவாக வாய்த்திருக்கும் பன்னீர்செல்வம், சட்டசபையில் தி.மு.க.வினர் அராஜகம் செய்ததாக நேற்றைய அறிக்கையில் கூறியிருக்கிறார். 1957ஆம் ஆண்டு முதல் திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகச் சட்டப்பேரவையில் இடம்பெற்றிருக்கிறது. 15 பேராக நுழைந்து, 50 பேராக உயர்ந்து, 1967இல் பெரும்பான்மையைப் பெற்றுப் பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் தி.மு.கழகம் ஆட்சி அமைத்தது. அப்போது இந்தியாவையே ஆண்டு வந்த காங்கிரஸ் கட்சி தமிழ்நாடு சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியாக இருந்தது. ஆனால் அ.தி.மு.க. என்ற ஒரு அமைப்பு பேரவையில் நுழைந்த பிறகுதான், அதுவும் குறிப்பாக அருமை நண்பர் எம்.ஜி.ஆர். மறைந்த பிறகுதான், சட்ட சபையில் அராஜகம் - அநாகரீகம் என்பவை நுழைந்தன என்பதைத் தமிழ்நாட்டு மக்களும், பத்திரிகையாளர்களும் நிச்சயம் மறந்திருக்க மாட்டார்கள்.

அதிலும் குறிப்பாக, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், அ.தி.மு.க.விற்கும் இடையே பிரச்சினை எழுவதற்கு முன்பாகவே, அ.தி.மு.க. (ஜா) அணி என்றும், அ.தி.மு.க. (ஜெ) அணி என்றும் பிரிந்து பேரவையிலே 28-1-1988 அன்று, எம்.ஜி.ஆரின் துணைவியார் திருமதி ஜானகி அம்மையார் முதலமைச்சராக இருந்த போது; எதிர் அணியான ஜெயலலிதா அம்மையார் அணியினர், கலவரத்தை ஆரம்பித்து, சட்டப்பேரவையையே ரணகளமாக்கி, பேரவைக்குள் காவல்துறைத் தலைவர் தேவாரம் தலைமையிலே போலீசார் நுழைந்து தாக்குகின்ற அளவுக்கு நிலைமை கட்டுக்கடங்காமல்போய், ஜெயலலிதா எதிர்பார்த்ததைப்

போலவே, அதை வைத்து ஜானகி அம்மையாரின் ஆட்சி கலைக்கப் பட்டது. அப்போது அ.தி.மு.க.வினர் அங்காடித் தகராறு போல, ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்ட சம்பவங்கள் மறந்தா விட்டன? பேசுவதற்காகக் கொடுக்கப்பட்ட "மைக்"குகளைப் பிடுங்கி, ஆயுதங்களாகப் பயன்படுத்தித் தாக்கிய சம்பவங்கள் தெரியாதா? அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் கைகளிலே "மைக்"குகளை ஏந்திக் கொண்டு ஏதோ போர்க்களத்திலே வாளேந்தி நடந்து வரும் வீரர்களைப் (!) போல, வெற்றி நடை நடந்து வெளியே வந்த புகைப்படங்கள் எல்லாம் பழைய ஏடுகளிலே இன்றைக்கும் பார்க்கலாம்! அவையின் நாகரிகம் - பண்பாடு என அனைத்தும் அடித்து நொறுக்கப்பட்ட இந்தச் சம்பவம் பன்னீர்செல்வத்திற்குத் தெரியாதா?

பன்னீர்செல்வம் தேடித் தேடிப் பிடித்து, 25-3-1989 அன்று தமிழகச் சட்டப்பேரவையில் முதலமைச்சராகவும், நிதியமைச்சராகவும் இருந்த நான் 13 ஆண்டு களுக்குப் பிறகு புதிய திட்டங்களையெல்லாம் நிதிநிலை அறிக்கையில் எடுத்துச் சொல்ல முற்பட்ட போது, தி.மு.க. ஏதோ அராஜகத்தில் ஈடுபட்டதாக ஒரு கற்பனைக் கதையைச் சொல்லியிருக்கிறார். இந்தக் கதையை ஒரு நாடகமாகவே அரங்கேற்றிய நிகழ்ச்சியெல்லாம் எப்போதோ வெட்ட வெளிச்சமாகி நாட்டு மக்கள் வேதனையை வெளியிட்டதைப் பன்னீர்செல்வம் மறந்துவிட்டாரா? அவரே அந்தச் சம்பவத்தைப் பற்றி எழுதிவிட்டதால், அன்றையதினம் என்ன நடந்தது என்பது பேரவையிலேயே பேசப்பட்டு, அது அவைக்குறிப்பிலும் இடம்பெற்று, பின்னர் அதனை அவைக்குறிப்பிலேயிருந்து நீக்குவதற்கான முயற்சிகள் எல்லாம் நடைபெற்றன.

25-3-1989 அன்று நான் பேரவையில் நிதிநிலை அறிக்கையைப் படித்தபோது, தற்போது காங்கிரஸ் கட்சியில் மூத்தத் தலைவர்களில் ஒருவராக இருப்பவரும், அப்போது ஜெயலலிதா கட்சியிலே அவருக்கு மிகவும் உதவியாக இருந்தவருமான திரு. திருநாவுக்கரசர் பேரவையிலே விரிவாக உறுப்பினர் களுக்கும், நாட்டிற்கும் அதை விளக்கினார். அந்த நிதிநிலை அறிக்கையினை நான் படித்தபோது சட்டமன்றத்தில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் குறித்து நான் கூறுவதைவிட, அன்றைக்கு எதிர்க் கட்சித் துணைத் தலைவராக அ.தி.மு.க.விலே ஜெயலலிதாவிற்கு ஆதரவாக இருந்த திருநாவுக்கரசு அவர்கள்

அந்தச் சம்பவம் நடைபெற்ற ஓரிரு ஆண்டுகளுக்குப் பிறகு அதே சட்டப்பேரவையில் பேசியதை அப்படியே குறிப்பிடுகிறேன். இதோ நண்பர் திருநாவுக்கரசு பேசுகிறார் :-

"இதே சட்டமன்றத்தில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பட்ஜெட்டைப் படித்தபோது சட்ட மன்றத்திலே ஒரு அசம்பாவிதம் நிகழ்ந்தது அனைவருக்கும் தெரியும். இப்போது நான் சொல்வது; என்னுடைய தாய் மீது ஆணையாக நான் தெய்வமாக வணங்குகிற எம்.ஜி.ஆர். அவர்கள் மீது சத்தியமாகச் சொல்வதாகும். முதல் பட்ஜெட் கூட்டத்தொடர் நடந்தபோது எதிர்க் கட்சித் தலைவராக இருந்த செல்வி ஜெயலலிதா அவர்கள் அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் அவரது வீட்டில் உட்கார வைத்துக்கொண்டு என்னைப் பார்த்து "நான் பிரதான எதிர்க்கட்சித் தலைவர், முதலமைச்சர் பட்ஜெட் படிக்கும் போது நான் பிடித்து இழுத்தால் நன்றாக இருக்காது. எனவே என் பக்கத்திலே இருக்கிற நீங்கள் முதலமைச்சர் கருணாநிதியின் கையிலே இருக்கிற பட்ஜெட் காப்பியைப் பிடித்திழுத்து அடிக்க வேண்டும்" என்று சொன்னார். நான் உடனே மிகுந்த வேதனை யோடு சொன்னேன். "தெரிந்தோ தெரியாமலோ புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் எங்களைப் பத்தாண்டுக் காலம் கௌரவம் மிக்க பதவிகளில் வைத்துவிட்டுப் போயிருக்கிறார். தயவுசெய்து அடியாட்களாக எங்களை மாற்றாதீர்கள். அதற்கு என்னுடைய மனச்சாட்சி இடம்தரவில்லை. இரண்டாவது, இதுபோன்ற சம்பவம் வேண்டாம்" என்று நான் வாதாடியதுடன்; "முதல் அமைச்சர் நமக்குப் பிடிக்காதவராகக்கூட இருக்கலாம். அது வேறு விஷயம். ஆனால் அவருக்குப் பின்னாலே அவரைத் தலைவராக ஏற்றுக்கொண்டிருக்கிற பெரும்பான்மையான சட்டமன்ற உறுப்பினர்கள் உட்கார்ந்து இருக்கிறார்கள். அவர் மீது கைவைக்கிறபோது அவர்கள் உணர்ச்சி வசப்படுவார்கள். அங்கு நிச்சயமாக அடிதடி நடக்கும், ரகளை நடக்கும். புரட்சித்தலைவர் இருக்கும்போது எவ்வளவோ பிரச்சினைகள் நடந்திருக்கின்றன. அவருக்குப் பக்கத்தில் யாராவது போனால்கூட நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கமாட்டோம்; தாக்கியிருப்போம். அதுபோல இன்றைய முதலமைச்சருக்குப் பின்னாலே அவரைத் தலைவராக ஏற்றுக் கொண்டிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் கண்டிப்பாகத் தாக்குவார்கள். அசம்பாவிதம் நடக்கும். அசிங்கமாகப் போய்விடும். பத்திரிகைகளிலே எல்லாம் கேவலமாக எழுதுவார்கள்" என்று

வாதாடியதோடு "மூத்த தலைவர்களை எல்லாம் கேட்டீர்களா?" என்று கேட்டேன். அதற்கு அவர் "அவர்களைக் கேட்டால் அவர்கள் ஒத்துக்கொள்ள மாட்டார்கள் என்ற காரணத்தினாலே அவர்களை எல்லாம் டைனிங் ஹாலிலே உட்கார வைத்திருக்கிறேன்" என்று சொன்னார். "நான் முடியாது" என்று சொன்ன உடனே சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்த்து "சரி, அவர் மாட்டேன் என்று சொல்லுகிறார். உங்களில் யாருக்கு வசதிப்படுகிறதோ அவர்கள் போய் பட்ஜெட் படிப்பதைப் பிடுங்கிக் கிழியுங்கள்" என்று சொல்லி விட்டு மேலே போய்விட்டார்.

டைனிங் ஹாலுக்கு உள்ளே டாக்டர் ஹண்டே, திரு. ராகவானந்தம், திரு. மாதவன், திரு. எஸ்.டி.எஸ். மற்றும் அப்போதிருந்த மூத்த தலைவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். நான் அங்கே போய், "யார் இந்த ஆலோசனையைச் சொன்னது?" என்று அவர்களிடத்திலே சண்டை போட்டேன்.

செல்வி ஜெயலலிதா மாடியிலிருந்து இறங்கிவந்தார். வந்தவுடனே, அங்கே இருந்தவர்களைப் பார்த்து, "புறப்படலாம், நேரம் ஆச்சு" என்றார். மூத்த தலைவர்கள் யாருக்கும் அவர் வந்த வேகத்திலே தடுத்துச்சொல்ல துணிச்சல் இல்லை. அவரை அழைத்துச் சென்று சட்டமன்ற அவையிலே உட்கார வைத்துவிட்டு, "தோழமைக் கட்சி, காங்கிரஸ் கட்சியிடத்திலே இதுபற்றிக் கேட்டீர்களா?" என்றேன். அவர், "எல்லோரையும் கலந்துதான் சொல்லுகிறேன். இன்றைக்குச் சட்டமன்றத்திலே வன்முறை நடந்தால் இன்றைக்கு மாலையே ஆட்சி கலைக்கப்படுகிறது என்று எனக்குத் தகவல் வந்திருக்கிறது" என்று சொன்னார். நான் உடனே தோழமைக் கட்சியான காங்கிரஸ் கட்சித் தலைவர் மூப்பனார் அறைக்குச் சென்று "இன்றைக்கு நாங்கள் எல்லாம் வெளிநடப்பு செய்வதாக இருக்கிறோம். நீங்களும் எங்களோடு ஒத்துழைப்புத் தர வேண்டும்" என்றும், அத்துடன், "இன்றைக்கு ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் நீங்களும் உள்ளேயிருந்து ஏதாவது உதவி செய்வீர்களா?" என்றும் மறைமுகமாகக் கேட்டேன். நேரிடையாகச் சொல்லாமல், அவர் "நான் புறப்படுவதற்கு முன்னாலேயே பாரதப்பிரதமர் ராஜீவ்காந்தியிடம் 8.30 மணிக்கு பேசிவிட்டுத்தான் வந்தேன். அதற்கு காவல் துறையின் மீது ஒரு கண்டன அறிக்கையைப் படித்துவிட்டு எங்களுடைய காங்கிரஸ் கட்சி வெளிநடப்பு

செய்யப் போகிறது. இதுதான் எங்களுக்கு டெல்லியிலிருந்து கொடுக்கப்பட்டிருக்கிற உத்தரவு" என்று சொன்னார். செல்வி ஜெயலலிதா அவையில் உட்கார்ந்திருந்தார். நான் வேகமாக வந்து, "திரு. மூப்பனார் அவர்களிடத்திலே கேட்டேன். அவர்கள் எந்தவிதமான அசம்பாவிதமும் இங்கே நிகழ்த்துவதற்குத் தயாராக இல்லை. காங்கிரஸ் காரர்கள் வெளிநடப்பு செய்யப் போகிறார்கள்" என்று சொன்னேன். "மூப்பனார் எப்போதும் இப்படித்தான். எனக்கு விரோதமாகத்தான் அவர் சொல்லுவார். எனக்கு வேறு மாதிரித் தகவல் வந்திருக்கிறது" என்று கூறியதுடன் "நீங்கள் போய் ஏன் அவரிடத்தில் கன்சல்ட் செய்தீர்கள்?" என்றார். அதன் பிறகு அன்றைக்கு இங்கு சட்டமன்றத்தில் நடந்த நிகழ்ச்சிகள் எல்லாம் அனைவருக்கும் தெரியும். வன்முறையைத் தொடர்ந்து சட்டமன்றத்திற்குள்ளே அடிதடிரகளை எல்லாம் நடந்தது. பிறகு செல்வி ஜெயலலிதா அவர்களை அழைத்துக் கொண்டு வண்டியிலே நானும் திரு. கே.கே.எஸ்.எஸ். ஆரும் முன்னாலேயும், பின்னாலேயும் அமர்ந்துகொண்டு போகிறோம். வீடு போகிறவரை, "இன்றைக்கு மாலையே ஆட்சியைக் கலைக்கப் போகிறார்கள், ஆட்சியைக் கலைக்கப் போகிறார்கள்" என்று சொல்லிக் கொண்டே வந்தார்."

பன்னீர்செல்வம் அவர்களே, தீய எண்ணத்தோடு திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட இந்தச் சம்பவமாவது உங்களுக்கு ஞாபகத்திற்கு வருகிறதா? திருநாவுக்கரசர் அவர்களும் அ.தி.மு.க.விலே உண்மையாக உழைத்து வெளியே வந்து இந்த நாட்டிற்கு உண்மை தெரியாமல் போய்விடக் கூடாது என்பதற்காக இதனை வெளியிட்டார்.

நான் இந்தப் பழைய உண்மைச் சம்பவங்களை வெளியிட்டால், நானும், தம்பி ஸ்டாலினும் தரம் தாழ்ந்து அறிக்கை விடுவதாகச் சொல்வதா முதலமைச்சருக்கு உள்ள அழகு? சட்டசபையைக் கூட்டுங்கள் என்றால், அது தரம் தாழ்ந்த செயலா? இந்த ஆட்சியிலே அப்படித்தானா? சட்டசபையைக் கூட்டும்படி நாங்கள் மட்டுமா கூறினோம்? மற்ற எதிர்க்கட்சிகள் எல்லாம் கூடத்தான் பேரவையைக் கூட்டும்படி கேட்டுக்கொண்டார்கள்? எதற்கெடுத்தாலும் தந்தை, தனயன் என்று பேசுவதா? ஏன், உங்களுடைய தம்பியைப் பற்றிய நிகழ்வுகளைச் சொன்னால் ஊரேசிரிக்குமே? கடந்த தீபாவளியின்போது பொதுப்பணித்

துறை ஒப்பந்ததாரர்கள் எல்லாம் யாரை வந்து சந்தித்தார்கள்? என்ன நடந்தது? வாரப் பத்திரிகையிலே அதைப் பற்றிய கட்டுரை வெளிவந்து எங்கும் நாற்றமெடுத்து எத்தனை நாளாயிற்று? அதற் கெல்லாம் பதில் சொல்ல வக்கில்லை, வகையில்லை. எனக்கா சவால் விடுகிறீர்கள்?

உங்களுக்குத் தெரியுமா? ஓமந்தூரார் மாளிகையிலே புதிய தலைமைச் செயலகம் கட்டப்பட்டபோது, நான் அன்றாடம் அங்கே சென்று பணிகளைப் பார்வையிட்டு வந்தேன். அப்போது எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதா அமருவதற்கு, முதலமைச்சர் அமருவதற்கு எவ்வாறு இடவசதி செய்யப்படுகிறதோ, அதுபோலவே அமைக்கப்பட வேண்டுமென்று கூறியவன் நான்! அது மாத்திரமல்ல; எதிர்க்கட்சித் தலைவருக்காக அமைக்கப்பட்டிருந்த அறையினை நானே சென்று பார்த்து, அது அளவிலே சற்றுச் சிறிதாக இருந்தது என்பதால், அதனை மேலும் பெரிதாக்கிக் கொடுக்க வேண்டுமென்று கூறியவன் நான். தரத்தைப் பற்றி என்னிடமா பேசுகிறீர்கள்?

தமிழகச் சட்டப்பேரவைக் கூட்டம் 8-2-2013 அன்று நடைபெற்றபோது, தே.மு.தி.க. சார்பில் வெற்றி பெற்று, பின்னர் அந்தக் கட்சித் தலைமைக்குக் கட்டுப்படாமல் வெளியேறியதாகக் கூறப்படும் சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் (தமிழழகன்) பேரவையில் பேசும்போது, தான் கட்சியிலிருந்து வெளியேறிய காரணத்தால், ஆட்சியினர் தன் தொகுதிக்கு நன்மைகளைச் செய்கிறார்கள் என்றும், மற்ற தே.மு.தி.க. உறுப்பினர்களும் தன்னைப் போல் முடிவு எடுத்தால், அவர்களும் பயன் பெறலாம் என்றும் வெளிப்படையாக அழைப்புவிடுத்தார். அவரது அந்தப் பேச்சுக்குத் தே.மு.தி.க. சட்டப்பேரவை உறுப்பினர்கள் அவையில் எதிர்ப்புத் தெரிவித்தனர். இருசாராருக்கும் இடையே தகராறு அப்போது ஏற்பட்டது. தே.மு.தி.க. சார்பில் வெற்றி பெற்ற உறுப்பினர்களுக்குள் நடைபெற்ற விவகாரம் இது. இதில் தே.மு.தி.க. சார்பில் வெற்றி பெற்று அக்கட்சியின் கட்டுப்பாட்டுக்குப் புறம்பாகச் செயல்படும் உறுப்பினர் ஒருவர் தாக்கப்பட்டதாகக் கூறி, தே.மு.தி.க.விலே தொடர்ந்து உறுதியாக இருக்கின்ற ஆறு பேர் மீது பிரச்சினை எழுப்பப்பட்டு, உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட்டது.

உரிமைக் குழுவும் ஒரு மாதத்திற்குள் இந்தப் பிரச்சினை பற்றி ஆய்வு செய்து தனது அறிக்கையினைத் தாக்கல் செய்து விட்டது. அதன்படி அந்த ஆறு சட்டப்பேரவை உறுப்பினர்களும் ஓராண்டு காலத்திற்குப் பேரவைக்கு வரமுடியாத அளவிற்குத் தடை செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த ஓராண்டு காலத்திற்கு அவர்களுக்கு ஊதியமும் கிடையாது. இந்த நடவடிக்கையைக் கண்டித்து, தி.மு.க., காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், புதிய தமிழகம் ஆகிய கட்சிகள் வெளிநடப்பு செய்துள்ளன. கடந்த சட்டப்பேரவைத் தேர்தலின்போது அ.தி.மு.க.வுடன் தோழமை கொண்டு அவர்களின் வெற்றிக்காக உழைத்த தோழமைக் கட்சி ஒன்றுக்கு ஏற்பட்ட நிலை இது. இந்த அநாகரீக நிகழ்வுக்கு யார் காரணம்?

24-11-1986 அன்று எம்.ஜி.ஆர். ஆட்சியில், மொழிப் போராட்டத்தின் ஒரு கட்டமாக இந்திய அரசியல் சட்ட நகலை எரித்ததற்காக, பேரவைத் தலைவர்; தி.மு. கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் அவர்களையும், மற்றும் எஸ். பாலன், ஏ. செல்வராசன், பரிதி இளம்வழுதி, பி. பொன்னுரங்கம், கோவை எம். ராமநாதன், தர்மபுரி ஆர். சின்னசாமி, ஆலந்தூர் ம. ஆப்ரகாம், மதுராந்தகம் சி. ஆறுமுகம், அரக்கோணம் வி.கே.இராசு ஆகியோரையும் பேரவையிலிருந்து நிரந்தரமாக நீக்கித் தனது தீர்ப்பினைப் படித்தார். எதிர்க்கட்சிகள் சார்பில் எவ்வளவோ கேட்டுக்கொண்டும் கூட - அந்தத் தீர்மானத்தைத் திரும்பப் பெற அன்றைய ஆளுங்கட்சியான அ.தி.மு.க. கடைசிவரை முன்வரவில்லை.

மற்றொரு உதாரணம் - 1991ஆம் ஆண்டு சட்டமன்றப் பேரவையில் அ.தி.மு.க. ஆட்சியிலே ஜூலை 4ந்தேதி ஆளுநர் உரையாற்றினார். ஆளுநர் உரையாற்றத் தொடங்கிய போது, பா.ம.க. உறுப்பினராக இருந்த பண்ருட்டி ராமச்சந்திரன், ஒரு அறிக்கையை அவையிலே ஆங்கிலத்திலே படிக்கத் தொடங்கினார். அப்போது அ.தி.மு.க. உறுப்பினர் ஒருவர் பண்ருட்டி ராமச்சந்திரனின் அருகில் வந்து தாக்கினார்.

22-3-1999 அன்று ஒரு சம்பவம்! சட்டப் பேரவையில் நிதிநிலை அறிக்கை மீதான விவாதம் நடைபெற்றபோது அ.தி.மு.க. உறுப்பினர் ஒருவர் அமைச்சராக இருந்த வீரபாண்டி ஆறுமுகத்தின் முகத்திலே குத்தினார். அவர் அணிந்திருந்த மோதிரம் வீரபாண்டி ஆறுமுகத்தின் மூக்கிலே குத்தி ரத்தம்

கொட்டியது. தாக்கிய அ.தி.மு.க. உறுப்பினர் அ.தி.மு.க.விலிருந்து பின்னர் விலகி கழகத்திலேயே சேர்ந்தார்.

இதோ மற்றொரு உதாரணம் :- 7-1-2011 அன்று தி.மு. கழக ஆட்சியில் ஆளுநர் உரையாற்றியபோது, அ.தி.மு.க. உறுப்பினர்கள் ரகளையில் ஈடுபட்டு, வெளியேற்ற வந்த அவைக் காவலர்களைக் கடுமையாகத் தாக்கினார்கள். அதிலே ஒருவர், அவைக் காவலர்களை எட்டி உதைத்து, தொப்பிகளைப் பறித்து அவர்கள் முகத்திலேயே அடித்தார். அந்தப் புகைப்படங்கள் எல்லாம் ஏடுகளிலே அப்போதே வெளிவந்தன. ஆளுநர் உரையாற்றிய போது அத்துமீறிச் செயல்பட்ட அ.தி.மு.க. உறுப்பினர்கள் ஒன்பது பேரை மாதக் கணக்கிலோ, ஆண்டுக் கணக்கிலோ அல்ல; அந்தத் தொடர் முழுவதும் நீக்கம்செய்து பேரவைத் தலைவர் திரு. இரா. ஆவுடையப்பன் உத்தரவிட்டார். அதை எதிர்த்து அ.தி.மு.க. உறுப் பினர்கள் வெளிநடப்பு செய்தனர். ஆனால் அதற்கு அடுத்த நாள் என்ன நடந்தது தெரியுமா?

முதல் அமைச்சராக இருந்த நான் மறுநாள் பேரவையில் கூறும்போது, "பேராசிரியர் உள்ளிட்ட பத்து தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களை - அ.தி.மு.க. ஆட்சியிலே நீக்கப்பட்டவர்களை மீண்டும் அந்த ஆட்சியில் அனுமதிக்கவில்லை. ஆனால் வெளியேற்றப்பட்ட அ.தி.மு.க. உறுப்பினர்கள் மீண்டும் அவைக்கு வந்து ஒத்துழைக்க வேண்டுமென்று அண்ணா வழியிலே நடைபெறுகின்ற இன்றைய தி.மு.கழக அரசின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்" என்று தெரிவித்தேன்.

மற்றொரு நிகழ்ச்சி. 18-10-2007 அன்று காலை உள்ளாட்சித் துறை அமைச்சர், தம்பி மு.க. ஸ்டாலின், ஒரு உரிமை மீறல் பிரச்சினை குறித்துப் பேசிக் கொண்டிருந்தார். அப்போது அவையில் இருந்த அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக எழுந்து பயங்கரமாகக் கூச்சலும், குழப்பமும் விளைவித்து, அவரைப் பேச விடாமல் அவை நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவித்துக் கொண்டிருந்தார்கள். மேலும் அவர்கள் அனைவரும் தங்கள் இருக்கைகளை விட்டுக் கும்பலாக எழுந்து, பேரவைத் தலைவரின் இருக்கை முன்பு தரையில் அமர்ந்து கண்ணியக் குறைவாக நடந்து கொண்டார்கள். பேரவைத் தலைவர் பலமுறை அவர்களை இருக்கைக்குத் திரும்புமாறு வலியுறுத்திக் கேட்டுக்கொண்டும் அவர்கள் திரும்பாத

காரணத்தினால், பேரவைத் தலைவர் அவைக் காவலர்களை அழைத்து, அவர்களை வெளியேற்ற உத்தரவிட்டார். அப்போது திருப்பரங்குன்றம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஏ.கே. போஸ் தன்னை அப்புறப்படுத்த வந்த காவலர் பி. மதிவாணனின் தொப்பியைப் பிடுங்கி, பேரவைத் தலைவர் மீது தூக்கி எறிந்தார். அதை அவையின் உறுப்பினர்கள் அனைவரும் பார்த்தார்கள். பேரவைத் தலைவரையே தாக்கிய அந்தச் செயலுக்காகத் தி.மு. கழக ஆட்சியில் முதலில் ஆறு மாத காலத்திற்கு அவரை பதவி நீக்கம் செய்ய வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்ட போதிலும், நான் உடனடியாகத் தலையிட்டு அடுத்த கூட்டத் தொடரின் முதல் பத்து நாள்களுக்கு மட்டும் நீக்கம் செய்தால் போதும் என்று கூறி அவ்வாறே கடைப்பிடிக்கப்பட்டது. இது தி.மு. கழக ஆட்சியில் நடைபெற்ற மற்றொரு உதாரணம்.

எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற விஜயகாந்த் அவர்களையே பத்து நாட்களுக்குப் பேரவை நடவடிக்கைகளில் கலந்துகொள்ளக் கூடாது என்று நடவடிக்கை எடுத்த நிகழ்ச்சி வேறு எப்போதாவது நடந்தது உண்டா? அதுவும் அ.தி.மு.க. ஆட்சியில்தான் நடைபெற்றது.

13-11-2008 அன்று தி.மு.கழக ஆட்சியில் நான் அவையிலே இல்லாத நேரத்தில் - பிரதான எதிர்க் கட்சியான அ.தி.மு.க. உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டு விட்டார்கள் என்ற செய்தியினை அறிந்து - "அவர்கள் மின்சாரவாரிய விவாதத்தில் கலந்துகொள்ள வேண்டுமென்று அக்கறையோடு இருந்தார்களே, வெளியேற்றப்பட்டுவிட்ட காரணத்தால், அந்த விவாதத்தில் கலந்துகொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டு விடுமே" என்று எண்ணி - நானே எதிர்க்கட்சித் துணைத் தலைவருடன் தொலைபேசியிலே பேசிட முயற்சித்து - அது கிடைக்காத காரணத்தால் - ஆளுங்கட்சியைச் சேர்ந்த தம்பிகள் மு.க.ஸ்டாலின், துரைமுருகன், வீரபாண்டி ஆறுமுகம், கே.என். நேரு ஆகிய அமைச்சர்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு - எதிர்க் கட்சித் தலைவரின் அறைக்கே சென்று அ.தி.மு.க.வினரைச் சமாதானம் செய்து மின்சாரம் பற்றிய விவாதத்திலே கலந்துகொள்ள வாருங்கள் என்று அழைக்கச் செய்தேன். மேலும் பேரவைத் தலைவரோடும் தொலைபேசியிலே பேசி, வெளியேற்றப்பட்ட ஆணையைத் திரும்பப்பெற்று,

அவர்களையெல்லாம் கலந்து கொள்ள வாருங்கள் என்று அவையிலேயே அழைப்பு விடுக்கவும் கேட்டுக்கொண்டேன். அவரும் அவ்வாறே அழைப்பும் விடுத்தார்.

25-3-1989 அன்று பேரவையில் நடைபெற்றது பற்றி நண்பர் திருநாவுக்கரசு கூறியதை இந்தக் கடிதத்தில் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். நிதியமைச்சர் என்ற முறையில் நான் நிதிநிலை அறிக்கையைப் படிக்கத் தொடங்கியபோது நடந்தது என்ன? எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஜெயலலிதா எழுந்து, "முதல் அமைச்சர் ஒரு கிரிமினல் குற்றவாளி, அவர் நிதிநிலை அறிக்கையைப் படிக்கக் கூடாது" என்று கூறி, என் கையிலே இருந்த நிதிநிலை அறிக்கையைப் பிடுங்கிட முற்பட்டார். அவருக்குத் துணையாக அ.தி.மு.க. உறுப்பினர்கள், அவரைச் சூழ்ந்து நின்று கொண்டு "படிக்காதே, படிக்காதே" என்று கூச்சலிட்டனர். அந்தியூர் சட்ட மன்ற உறுப்பினராக இருந்தவர் என் கையிலிருந்த நிதிநிலை அறிக்கைப் புத்தகத்தைப் பிடித்திழுத்துக் கிழித்தெறிந்தார். அதைத் தடுக்க முனைந்த போது என் முகத்தில் குத்தி, மூக்குக் கண்ணாடி கீழே நொறுங்கி விழுந்தது. அமைச்சராக இருந்த வீரபாண்டி ஆறுமுகத்தின் தலையில் ஒலிபெருக்கிக் கம்பியால் தாக்கி, ரத்தம் ஒழுகிய நிலையில் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப் பட்டார்.

கொடூரமான இவ்வளவு பெரிய சம்பவத்திற்கே அப்போது என்ன தண்டனை வழங்கப்பட்டது தெரியுமா? கலவரம் செய்த அ.தி.மு.க. உறுப்பினர்களை ஒரு வார காலம் தற்காலிக நீக்கம் செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் 27-3-1989 அன்று சட்டப்பேரவை காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவராக இருந்த இலக்கியச் செல்வர் குமரி அனந்தன், அந்தத் தற்காலிக நீக்கத்தையும் மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டதையொட்டி, நான்;

"எதிர்க்கட்சிகள் இல்லாமல் இந்த அவை நடவடிக்கைகளை நடத்த வேண்டும் என்கிற குறுகிய மனப்பான்மை எனக்கோ, இந்த அரசுக்கோ நிச்சயமாக இல்லை. நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும், இனி நடப்பவை நல்லவைகளாக இருக்கட்டும் என்கிற அந்த எண்ணத்தின் அடிப்படையிலே இந்தப் பிரச்சினையை நான் அணுகுகிறேன். அன்றையதினம் ஏற்பட்ட ஒரு உணர்ச்சியின் காரணமாகக் கொந்தளிப்பின் எதிரொலியாக

நிறைவேற்றப்பட்ட அந்தத் தீர்மானத்தைத் திரும்பப் பெற்று எதிர்க்கட்சித் தலைவரும், மற்றவர்களும் அவையில் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்" என்று குறிப்பிட்டேன். இதுதான் திராவிட முன்னேற்றக் கழகம். இதனை அப்போது "பாரத ரத்னா" சி. சுப்ரமணியம் அவர்களே ஏடுகள் வாயிலாகப் பாராட்டியிருந்தார்.

தி.மு. கழகம் ஆட்சியிலே இருந்தபோது, அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா சட்டமன்றக் கூட்டத்திற்கு வராமலும், ஏன் கையெழுத்துப் போடாமலும் கூட இருந்தார். ஒரு உறுப்பினர் குறிப்பிட்ட இத்தனை நாட்களுக்குமேல் சட்டசபைக்கு வராமல் இருந்தால், அவருக்குப் பதவி போய்விடும். அப்போது அ.தி.மு.க. சார்பில் இதே பன்னீர்செல்வம், ஜெயலலிதா தொடர்ந்து பேரவை உறுப்பினராக நீடிக்கத் தீர்மானம் கொண்டுவர முனைந்த போது, தி.மு.க. நினைத்திருந்தால், அந்தத் தீர்மானத்திற்கு வாக்களிக்காமல் இருந்திருக்கலாம். ஆனால் தி.மு.கழகம் அதற்கே உரிய பெருந்தன்மையோடு ஜெயலலிதா அவைக்கு வராமல் இருந்ததை ஏற்றுக்கொண்டு ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற உதவியது என்பதை அனைவரும் அறிவர்.

ஏன், அ.தி.மு.க.வின் நிறுவனர் எம்.ஜி.ஆர்., கழகம் பிரிந்த போது, பேரவைக்கு வராமல் எத்தனை நாட்கள் இருந்தார்? ஜெயலலிதா எத்தனை கூட்டத் தொடருக்கு வராமல் இருந்தார்? ஏன், இப்போதும் நான் பேரவைக்கு வருவதைப் பற்றி ஏற்கனவே இரண்டு முறை தெரிவித்திருக்கிறேன். என்னுடைய உடல் நிலை காரணமாக நான் அமருவதற்கேற்ப இட வசதி செய்து தந்தால் நான் பேரவைக்கு வரத் தயார் என்று கூறிவிட்டேன். அதை ஏற்படுத்திக் கொடுக்க முன்வராத அ.தி.மு.க. அரசு, நான் ஏன் பேரவைக்கு வரவில்லை என்று கேட்பதற்கு ஏதாவது தார்மீக நியாயம் என்ற ஒன்று இருக்கிறதா?

இறுதியாகச் சட்டமன்றத்திற்கு வந்து பேசக் கூடிய தைரியம் கருணாநிதிக்கு உள்ளது என்றால், பேரவைக்கு வரட்டும் என்கிறார் பன்னீர்செல்வம்! பன்னீர்செல்வம் என்று உங்களுக்குப் பெயர் இருப்பதைப் பார்த்து, ஒரு காலத்தில் உங்களைப் பற்றிய நல்ல எண்ணம் எனக்கு இருந்தது. கறுப்புக் கலரிலே உள்ள ஒருவருக்கு "வெள்ளையன்" என்று பெயர் வைப்பதைப் போன்றதுதான் என்பது இப்போது தான் எனக்குப் புரிகிறது. சட்டமன்றத்திற்கு வந்து

பேசக்கூடிய தைரியம் எனக்கு இருக்கிறதா என்றா கேட்கிறீர்கள்! நான் பெருந்தலைவர் காமராஜர், பெரியவர் பக்தவத்சலம், சி. சுப்ரமணியம், ஆர். வெங்கட்ராமன், ஜி.கே.மூப்பனார், கே.வினாயகம், பொன்னப்ப நாடார், எம்.கல்யாணசுந்தரம், பி. ராமமூர்த்தி, எம்.ஆர். வெங்கட்ராமன், உமாநாத், கே.டி.கே. தங்கமணி, அனந்த நாயகி, குமரி அனந்தன், மணலி கந்தசாமி போன்ற ஜாம்பவான்கள் எல்லாம் கோலோச்சிய பேரவையிலேயே இருந்து வாதம் செய்தவன்.

எனது வாதத்தைக் கேட்டு அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களே மறுநாள் வந்து பதில் கூறுவதாகச் சென்றதை மறந்துவிட வேண்டாம்! உனக்குத் தைரியம் இருந்தால் பேரவையில் நான் அமருவதற்கேற்ற இடத்தினை ஏற்பாடு செய்துவிட்டு, எனக்குத் தகவல் அனுப்புங்கள்! அடிக்கின்ற காற்றின் வேகத்திலே கோபுரத்தின் உச்சியில் ஒட்டிக்கொள்ளும் வாய்ப்புகிடைத்து விட்டதாக எண்ணி இறுமாப்பு கொள்ள வேண்டாம்! காற்று இன்னும் கொஞ்சம் வேகமாக அடித்தால் இலை எங்கே போய் விழும் தெரியுமா? முதலமைச்சர் என்பவர் "பினாமி"யாக இருந்தாலும்; "பிராக்சி"யாக இருந்தாலும், அந்தப் பொறுப்பில் இருப்பதால் நிதானமும் பண்பாடும் தேவை என்பதை அறிக! அதைப் பெறுவதற்கு முயலுக!

அன்புள்ள,

மு.க.

28-11-2014

3943. பன்னீருக்கு அழகு, மௌனம் காத்தல்!

உடன்பிறப்பே,

நம்முடைய தமிழக முதல்வர், ஓ. பன்னீர்செல்வம் அவர்களுக்கு, நாட்டை ஆளும் முதல்வர் என்பது மறந்து போய், ஏதோ கல்லூரியின் முதல்வர் போல, "பினாமி" ஆட்சி என்றால் என்ன, "மைனாரிட்டி ஆட்சி" என்றால் என்ன, "ஆலோசகர்" என்றால் என்ன, "துணை முதல்வர்" என்றால் என்ன என்றெல்லாம் பாடம் சொல்லித் தர முயன்று, ஓர் அறிக்கை தந்திருக்கிறார். எப்படியோ, அவர் அன்றாடம் தமிழக அரசின் பொறுப்புகளைக் கவனிக்கிறாரோ, இல்லையோ, "அம்மா"வின் வழியில், "அம்மா"வின் பாணியில், "அம்மா"வின் ஒப்புதலோடு அறிக்கை விடத் தவறுவதில்லை. உறுப்பினர்களின் உரிமையைப் பறிக்கும் வகையிலும், பேரவைக்கு இழுக்கு ஏற்படுத்தும் வகையிலும் தி.மு.க.வினர் நடந்து கொண்டால், அதற்குரிய பலனைத்தான் அவர்கள் பெறுவர் என்றும் மிரட்டியிருக்கிறார். தி.மு.கழகம் பன்னீர்செல்வத்தின் வெற்றுச் சலசலப்புக்கெல்லாம் அஞ்சாது, தன் கடமையைச் சட்டப்படி முறையாக நிறைவேற்றும். ஆனால் உறுப்பினர்களின் உரிமையைப் பறிக்கும் வகையிலும், பேரவைக்கு இழுக்கு ஏற்படும் வகையிலும் அ.தி.மு.க. வினர் நடந்து கொண்ட பல்வேறு நிகழ்வுகளைப் பற்றி நான் விரிவாகவே குறிப்பிட்டிருக்கிறேன்.

"புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணித்தரமான வாதங்களை நேருக்கு நேர் எதிர்கொள்ள முடியாமல் கோப்புகளுக்குப் பின்னால் கருணாநிதி ஒளிந்து கொண்டதை நாடே அறியும். தைரியம் இருந்தால் வருகிற 4 ஆம் தேதி சட்டப்பேரவையில் பங்கேற்று கருணாநிதி பேசத் தயாரா?" என்றும் பன்னீர்செல்வம் சவால் விடுத்திருக்கிறார். பன்னீர் செல்வம் அவர்களே, நான் 4 ஆம் தேதி சட்டப்பேரவையில் பங்கேற்பதற்கு எந்தவிதமான தடையும் இல்லை. அதற்கு எந்தத் தைரியமும் தேவையில்லை. ஆனால் உங்கள் "அம்மா"? இந்தக் கேள்வியைக்

கேட்கும்படி வைத்தது நீங்கள்தானே? "கண்ணாடி வீட்டிற்குள் இருந்து கொண்டு கல் எறிய முற்படலாமா?"

மேலும் பன்னீர்செல்வம் தனது அறிக்கையில், "சட்டமன்றத்தில் தமிழக அரசை விமர்சிப்பதற்கு ஏதேனும் பொருள் இருக்கிறது என்று கருணாநிதி கருதுவாரேயானால்" என்றெல்லாம் கேட்டிருப்பதால், சட்டமன்றத்தில் அல்ல, இதோ மக்கள் மன்றத்தின் முன்னாலேயே அ.தி.மு.க. அரசைப் பற்றிய பிரச்சினைகள் இந்த மூன்றரை ஆண்டுக் காலத்தில் அடுக்கடுக்காக மலை போல் குவிந்து கிடக்கின்றன; ஆனால் அனைத்தையும் குறிப்பிட இங்கே இடம் இல்லாததால், கடந்த வாரத்தில் மட்டும் நாளேடுகளில் வந்தவற்றை தொகுத்துத் தருகிறேன்.

சகாயம் நீதிமன்றத்தில் மனு (முரசொலி, 22-11-2014)

கோவை மாநகராட்சியில் 3 மாதங்களில் 3 ஆணையர்கள் மாற்றம் (முரசொலி, 22-11-2014)

மேயர் துரைசாமிக்கு மா. சுப்ரமணியன் கேள்வி. (முரசொலி, 22-11-2014)

மோனோ ரெயில் திட்டம் (தி. இந்து, 22-11-2014)

புதிய அணை - டெல்டா மாவட்டத்தில் முழு அடைப்பு (தினகரன், 22-11-2014)

ஸ்டாலின் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்கத் தயாரா? (தினகரன், 22-11-2014)

மாநகர போக்குவரத்துக் கழகத்துக்கு மாதம் 3.75 கோடி ரூபாய் நட்டம். (தினகரன், 22-11-2014)

டாக்டர் ராமதாஸ் மீது அவதூறு வழக்கு (தினகரன், 22-11-2014)

நீதிமன்றம் உத்தரவிட்ட பிறகும் பெண்ணுக்குப் பாதுகாப்பு தராத டி.எஸ்.பி., எஸ்.ஐ.க்கு அபராதம். (தினகரன், 22-11-2014)

69 சதவிகித இட ஒதுக்கீட்டுக்கு எதிரான வழக்கு - விசாரணை டிசம்பர் 1க்கு ஒத்தி வைப்பு. (தினத்தந்தி 22-11-2014)

பள்ளி ஆசிரியரைத் தாக்கிய வழக்கு - ஆறு பேர் கைது (தினகரன், 23-11-2014)

3 ஆண்டுகளில் 5வது எஸ்.பி.யைக் காண்கிறது வேலூர் (தினமலர் 23-11-2014)

சைதை துரைசாமி ராஜினாமாவா? (தினமலர் 23-11-2014)

பொதுப்பணித் துறை கொர்..... பாசனத் திட்டங்கள் முடக்கம். (தினமலர் 23-11-2014)

விஜய் பிங்ளே பணி மாற்றத்தினால் முரண்பாடான கருத்துகள் (தினமலர் 23-11-2014)

தாலிக்குத் தங்கம் - ஏழைகள் அதிருப்தி (தினகரன் 23-11-2014)

நெடுஞ்சாலைத் துறையில் ஆளும் கட்சித் தலையீடு (தினகரன் 23-11-2014)

செம்பாக்கம் தி.மு.க. கவுன்சிலர் மீது தாக்குதல். (தினத்தந்தி, 23-11-2014)

7 days, 9 Murders; is the City Safe? (The Hindu, 23-11-2014)

Rumours of Mayor's quitting spark flurry of Calls (The Hindu, 23-11-2014)

DMK AIADMK workers clash near Tambaram (The Hindu, 23-11-2014)

24-11-2014

தாது மணல் குறித்து அறிக்கை (முரசொலி)

மாற்றுத் திறனாளிகள் உதவித் தொகை (முரசொலி)

தமிழக மீனவர்கள் 14 பேர் சிறை பிடிப்பு. (தினமணி)

அரசுப் பேருந்துகளில் கட்டணச் சலுகை - மாற்றுத் திறனாளிகள் புகார். (தினமணி)

கொலைக்களங்களாக மாறும் நெல்லை, தூத்துக்குடி (தினமலர்)

சாம்பல் விற்பனையில் கொள்ளை (தினமலர்)

சென்னை குடிநீர் ஏரிகள் நீர் மட்டம் கவலைக்கிடம் (தினமலர்)

சுதாகரனின் நண்பர் மோசடி வழக்கில் கைது (தினகரன்)

சென்னையில் தொடர் மழை பெய்தும் குடிநீர் ஏரிகளில் நீர் மட்டம் உயரவில்லை. (தினகரன்)

போக்குவரத்துக் கழகத்தில் காலிப் பணியிடங்கள் - விண்ணப்பதாரர்கள் அதிர்ச்சி. (தினகரன்)

பயணிகளிடம் அதிகக் கட்டணம் வசூலிக்கும் போக்குவரத்துக் கழகம் (தினகரன்)

ஆவின் முறைகேட்டில் ஈடுபட்ட அதிகாரிகளின் மீது நடவடிக்கை எப்போது? (தினகரன்)

தமிழக நீர் வளத் துறையில் முதன்மைத் தலைமைப் பொறியாளர் பதவி யாருக்கு? (தினகரன்)

மேகதாது அணை - பிரதமரைச் சந்திக்க வேண்டும் - டாக்டர் ராமதாஸ் (தினகரன்)

25-11-2014

அரசு அலுவலகங்களில் ஜெ. படம் பற்றி ஐகோர்ட். (தினமலர்)

637 கோடியைத் தராத மத்திய அரசு - மின்வாரிய அதிகாரிகள் பயணம் (தினமலர்)

அங்கன்வாடிப் பணியாளர் நேர்முகத் தேர்வு திடீர் ரத்து - சாலை மறியல் (தினமலர்)

தமிழகத்தில் உரத் தட்டுப்பாடு (தினமலர்) திறப்பு விழா இல்லாத ஓ.பி.எஸ். (தினமலர்)

மெட்ரோ ரெயில் திட்டம் - 10 கோடி பதிவுக் கட்டணத்தை எதிர்த்து மெட்ரோ நிறுவனம் வழக்கு (தினத்தந்தி)

ஆபத்தான 132 கட்டடங்கள் - மாநகராட்சி (தினமலர்)

அருங்காட்சியகத்தில் நவீன கையேடு வழங்குவது நிறுத்தம் (தினமணி)

காண்ட்ராக்டரிடம் 1.29 கோடி ரூபாய் மோசடி - முன்னாள் அமைச்சர் பச்சைமால் மீது புகார் (தினமணி)

நடவடிக்கை எடுக்காத போலீசைக் கண்டித்து பெண் திடீர் தீக்குளிப்பு. (தினமணி)

மணல் குவாரிக்கு எதிர்ப்புத் தெரிவித்த கிராம மக்கள் மீது போலீசார் தடியடி (தினமணி)

26-11-2014

110வது விதியின் கீழ் அறிக்கைகளின் கதி என்ன? கழகப் பொருளாளர் மு.க.ஸ்டாலின் கேள்வி. (முரசொலி)

சைதை துரைசாமி பற்றி "டேப்" (முரசொலி) உத்தரவை மதிக்காத மாநகராட்சி - உயர் நீதிமன்றம் (தினகரன்)

பாதி வழியில் பழுதாகி நிற்கும் மாநகரப் பேருந்துகள் (தினமணி)

மழை நீர் சேமிக்கும் திட்டங்கள் வீண் (தினமலர்)

வீடுகளின் வழிகாட்டி மதிப்பீடு அதிகரிப்பு. (தினமலர்)

தலைமைச் செயலகத்தில் சீட்டு மோசடி (தினமலர்)

ஆறு மாதமாக பயிற்சி ஊதியம் இல்லை - மருத்துவ மாணவர்கள் திணறல். (தினமலர்)

11 ஆயிரம் வணிகர்களின் பதிவு எண் ரத்து (தினமலர்)

நோட்டீஸ் அனுப்பியும் கட்டுமானம் தொடர்கிறதா? ஐகோர்ட் (தினமலர்)

ஊராட்சிப் பணம் கையாடல் - இரு செயலாளர்கள் சஸ்பென்ட் (தினமலர்)

தாது மணல் விசாரணை அறிக்கை என்ன ஆனது? (தினமலர்)

தமிழக அரசின் விலையில்லா மெகா சைஸ் செருப்பு. (தினமலர்)

27-11-2014 சத்துணவு முட்டை கொள்முதல் ஊழல் குறித்து சி.பி.ஐ. விசாரணை வேண்டும் - சி.பி.எம். (தினகரன்)

அடி, உதை தாங்காமல் போலீஸ் நிலையத்தில் ரத்த வாந்தி (தினகரன்)

இலக்கை எட்டாததால் கடந்த ஆண்டு பத்திரப் பதிவுத் துறையில் 1166 கோடி ரூபாய் வருவாய் இழப்பு. (தினகரன்)

மாநகராட்சி சாலைகள் (தினகரன்)

புதுக்கோட்டையில் இலங்கை அகதிகள் மீது தடியடி. (தினகரன்)

மதுரை கலெக்டர் அலுவலகத்தில் பணிகள் சுணக்கம். (தினகரன்)

அ.தி.மு.க. பகுதிச் செயலாளர் காவல் நிலையத்தில் எஸ்.ஐ.உடன் மோதல். (தினகரன்)

மேடவாக்கத்தில் வீட்டில் தனியாக இருந்த 15 வயது சிறுமி கற்பழிப்பு. (மாலைமலர்)

நாகையில் போலீஸ்காரர் சாவு - சி.பி., சி.ஐ.டி. விசாரணைக் கேட்டு மனைவி வழக்கு. (மாலைமலர்)

திருவொற்றியூரில் நள்ளிரவில் 25 குடிசை வீடுகள் எரிந்து நாசம் (மாலைமலர்)

அமைச்சர் ரமணா உறவினர் கொலை - ஊராட்சி மன்றத் தலைவர் குண்டர் சட்டத்தில் கைது. (மாலைமலர்)

சத்தியமங்கலம் அருகே சீனிவாசன் என்ற இளைஞரை அடித்துக் கொன்று இழுத்துச் சென்ற சிறுத்தை . (மாலைமலர்)

சேலம் மாநகராட்சிக் கூட்டத்தில் 27-11-2014 அன்று தி.மு.க. கவுன்சிலருக்கு அடி (தமிழ் முரசு)

பவானியில் ஆக்கிரமிப்பை அகற்றச் சென்ற அதிகாரிகளைத் திட்டிய அ.தி.மு.க. எம்.எல்.ஏ. (தமிழ் முரசு)

விருதுநகரில் பாலியல் புகார் மீது 3 ஆசிரியர்கள் மாற்றம். (தமிழ் முரசு)

திண்டுக்கல்லில் ஒரு கோடி ரூபாய் நகைகள் கொள்ளை . (20-11-2014)

ஆரணி அருகே இஞ்சினீயர் சிவச்சந்திரன் கழுத்தை அறுத்துக் கொலை (20-11-2014)

சென்னைக் கல்லூரி பேராசிரியையிடம் சங்கிலிப் பறிப்பு. (20-11-2014)

வேப்பேரியில் நகைக்காகப் பெண் கொலை. (22-11-2014)

திருவேற்காட்டில் 30 சவரன் நகை கொள்ளை. (22-11-2014)

சென்னையில் ஆட்டோவை மறித்து வியாபாரிகளைத் தாக்கி வழிப்பறி (23-11-2014)

அம்பத்தூரில் 4 பவுன் சங்கிலி பறிப்பு (23-11-2014)

புளியந்தோப்பில் 60 சவரன் திருட்டு. (23-11-2014)

விமான நிலையம் அருகே ஆட்டோவை மடக்கி 80 லட்சம் அமெரிக்க டாலர்கள் கொள்ளை . (23-11-2014)

கோவை நிதி நிறுவனத்தில் 2 கோடி ரூபாய் நகை கொள்ளை . (24-11-2014)

சென்னையில் பூட்டை உடைத்து எட்டு இலட்சம் கம்ப்யூட்டர்கள் கொள்ளை . (25-11-2014)

ஓய்வு பெற்ற வங்கி அதிகாரி திருச்சியில் கொலை. (25-11-2014)

கொளத்தூரில் பெண் கொலை. (25-11-2014)

நெல்லை அருகே ஊனமுற்றவர் கொலை. (25-11-2014)

பெண் எஸ்.ஐ. வீட்டில் 110 பவுன் நகைகள் திருட்டு. (26-11-2014)

சென்னையில் தனியார் நிறுவன அதிகாரி வீட்டின் பூட்டை உடைத்து 30 பவுன் நகைகள் கொள்ளை. (26-11-2014)

திருவல்லிக்கேணி தொழிலதிபர் வீட்டில் இருந்த 15 பவுன் தங்க நகை, 20 ஆயிரம் ரூபாய் திருட்டு. (26-11-2014)

புது வண்ணாரப்பேட்டை தனியார் மருத்துவ மனையில் பெண் ஊழியரைக் கட்டிப் போட்டு நகை கொள்ளை . (26-11-2014)

சேலத்தில் ஒரே நாளில் இரண்டு பெண்கள் கற்பழித்துக் கொலை. (26-11-2014)

கீரப்பாக்கத்தில் கால்-டாக்சி டிரைவர் கொலை. (26-11-2014)

சென்னையில் பேருந்துப் பயணியிடம் 2.60 லட்சம் ரூபாய் கொள்ளை . (26-11-2014)

தாம்பரம், பல்லாவரம் பகுதிகளில் 3 இடங்களில் நகை பறிப்பு. (27-11-2014)

ஆவடியில் பெண்ணிடம் 5 பவுன் சங்கிலி பறிப்பு. (27-11-2014)

ரேஷன் கடையில் விவசாயி குத்திக் கொலை. (27-11-2014)

28-11-2014

சென்னை மாநகராட்சி கழக உறுப்பினர்கள் மேயர் மீது உள்துறைச் செயலாளரிடம் புகார் மனு (முரசொலி)

ஆவடி அருகே கேண்டீனில் சாப்பிட்ட 50 பேர் வாந்தி, மயக்கம் (தினகரன்)

முல்லைப் பெரியாறு அணைக்குச் செல்ல தமிழக அதிகாரிகளுக்கு அனுமதி மறுப்பு. (தினகரன்)

ஆயுதப்படைக்கு நிலம் கையகப்படுத்துதல் - 10.62 கோடி ரூபாய் இழப்பீடு வழங்க டி.ஜி.பி.க்கு ஐகோர்ட் உத்தரவு (தினகரன்)

ஆவின்பால் வழக்கில் அ.தி.மு.க. பிரமுகர் உள்ளிட்ட 8 பேருக்கு ஜாமீன் மறுப்பு. (தினகரன்)

மின் உற்பத்தி குறைவு - மின் தடை நீடிப்பு (தினமலர்)

108 அவசர கால ஆம்புலன்ஸ் ஊழியர்கள் உண்ணாவிரதம் (தினமலர்)

நசியும் மண்பாண்டத் தொழில் - நடவடிக்கை எடுக்குமா அரசு? (தினமலர்)

அணைகள், ஏரிகள் நீர் இருப்புத் தகவல் மறைப்பு (தினமலர்)

உயிரோடு இருப்பவர்களுக்கு இறப்புச் சான்றிதழ் - பணம் கொடுத்தால் எல்லாம் கிடைக்கும். (தினமலர்)

இந்து முன்னணிப் பிரமுகர் மீது தாக்குதல். (தினமலர்)

வேலூர் மருத்துவமனையில் ஒரே நாளில் மூன்று குழந்தைகள் பலி (தினமலர்)

நாகை மாவட்டத்தில் ஒரு கோடி ரூபாய் கையாடல் (தினமலர்)

அயனாவரத்தில் வீடு புகுந்து 14 சவரன் கொள்ளை (தினமலர்)

நிலக்கோட்டை அருகே விவசாயி காமாட்சி குத்திக் கொலை. (தினமலர்)

பீட்டர்ஸ் காலனி குடியிருப்பில் தலைமைச் செயலக அதிகாரிகள் பானுமதி, கீதா ஆகியோர் வீடுகளில் கொள்ளை. (தினமலர்)

பன்னீர்செல்வம் அவர்களே, பேரவையில் பேசுவதற்கு ஏதாவது இந்த அரசின் மீது குறைபாடுகள் இருந்தால் சுட்டிக் காட்டுங்கள் என்று கேட்டதன் விளைவுதான் ஒரு வார காலத்தில்; இந்த ஆட்சியில் நடைபெற்ற இத்தனை முறைகேடுகளைத் தொகுத்துப் பட்டியலிட்டு எடுத்துக் காட்டியிருக்கிறேன். இந்தப் பட்டியல் போதுமா? இன்னும் மாத, ஆண்டு வாரியான விவரம் வேண்டுமா? அ.தி.மு.க. ஆட்சியின் அவலங்களைப் பற்றி நாள் கணக்கில் பேசுவதற்கு ஏராளமான பொருள்கள் தாராளமாகவே இருக்கின்றன. ஏன் நீங்கள் வாயைக் கொடுத்து வம்பை விலைக்கு வாங்கிக் கட்டிக் கொள்கிறீர்கள்? முதலமைச்சராகப் பொறுப்பேற்பதற்கு முன்பு வரை இருந்து வந்ததைப் போல, அமைதியாக இருப்பதுதான் பன்னீருக்கு அழகு; நாட்டிற்கும் நல்லது! எனவே பன்னீருக்கு அழகு, மௌனம் காத்தல்!

அன்புள்ள,

மு.க.

30-11-2014

3944. எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே!

உடன்பிறப்பே,

தமிழகத்தில் மின் உற்பத்தி குறித்தும், புதிதாகத் துவங்கப்படும் மின் உற்பத்தித் திட்டங்கள் எப்போது உற்பத்தியைத் தொடங்கும் என்றும் தமிழக அரசின் மின் துறை அமைச்சர் ஒரு நீண்ட அறிக்கையினைக் கடந்த 29-11-2014 அன்று வெளியிட்டிருக்கிறார். விகள் அந்த அறிக்கைக் குத் தந்துள்ள தலைப்பே, 4. வண்டில் உற்பத்தி தொடங்கும் 10,121 கோடி ரூபாய் என்குடி மின் திட்டம் - விரைவில் உத்தரவு பிறப்பிக்கப்படும்“ என்பதுதான்!

தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையம், மின் வாரியத்தின் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை கோடியாகத் தெரிவித்த நேரத்தில், மின் துறை அமைச்சர் அதற்கு நேரடியாகப் பதில் கூறாமல், கடந்த 19-11-2014 அன்று ஒழுங்கு முறை ஆணையத்தைக் கொட்டுவது போல அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார். அப்போதே, தொழில் துறையினரும், சமூக ஆர்வலர்கள் சிலரும், “மின்சார ஒழுங்கு முறை ஆணையத்திற்கு அமைச்சர் உத்தரவு போடுகிறாரா?” என்றெல்லாம் கேட்டு, தங்களின் கடும் எதிர்ப்பினை வெளிப்படுத்தியிருந்தனர்.

மின் உற்பத்தி குறித்தும், மின் வெட்டு குறித்தும் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களும், அந்தத் துறையின் அமைச்சரும் பேரவையிலே வந்து அளித்த உறுதிமொழிகள்தான் எத்தனை? எத்தனை? ஆனால் தற்போதைய நிலை என்ன? இதுபற்றி 29-11-2014 தேதிய நாளேடு ஒன்று, “அதிகாரப்பூர்வமாக மின்வெட்டு அறிவிக்க மின் வாரியம் தயக்கம் - திடீர் மின்தடையால் வீடு, தொழில் நிறுவனங்கள் பாதிப்பு” என்ற தலைப்பில், “தமிழகத்தில் மின் தேவை, உற்பத்தியைக் காட்டிலும், அதிகம் உள்ளது. இதனால், நிலவும் மின் பற்றாக்குறையைச்

சமாளிக்க, தொழிற்சாலைகளுக்கு 40 சதவிகிதம் மின் தடை நடைமுறைப்படுத்தப்பட்டது. குடியிருப்புகளுக்கு காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை, கழற்சி முறையில், சென்னையில் இரண்டு மணி நேரம், மற்ற இடங்களில் நான்கு மணி நேரம் மின் தடை செய்யப்பட்டது" என்றெல்லாம் எழுதியுள்ளது.

"தமிழகத்தில், கடும் குளிரிலும் மின்தடை செய்யப்படுவது, பொதுமக்களிடம் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. தூத்துக்குடி, வல்லூர் மூன்றாவது அலகில், வணிக மின் உற்பத்தி, கடந்த மாதம் துவங்கி விருக்க வேண்டும். ஆனால் இதுவரை, மின் உற்பத்தி துவங்காததால் தமிழகத்திற்கு 500 மெகாவாட் மின்சாரம் கிடைக்கவில்லை. என்.எல்.சி., சிம்ஹாத்ரி போன்ற மத்திய மின் நிலையங்களில் இருந்து தமிழகத்திற்குக் குறைந்த அளவில் மின்சாரம் வழங்கப்படுகிறது. இதனால், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண, மத்திய அரசுக்கு தமிழக அரசின் மூலம் கடிதம் எழுத, மின் வாரிய அதிகாரிகள் முடிவு செய்துள்ளார்கள்" என்றவொரு செய்தியும் ஏடுகளில் வெளிவந்துள்ளது.

இதற்கிடையே "தனியாரிடம் செய்யும் மின் கொள்முதலில் ஊழல் நடந்துள்ளது; இதுகுறித்து விசாரித்து, மின் துறை அமைச்சர் நத்தம் விஸ்வநாதனை, முதல்வர் பன்னீர்செல்வம் நீக்க வேண்டும் என்று தமிழக காங்கிரஸ் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் பேட்டியளித்துள்ளார். மேலும் அவர், நெய்வேலி மற்றும் கூடங்குளம் போன்ற பொதுத் துறை நிறுவனங்களிடமிருந்து, மின்சாரத்தைக் கொள்முதல் செய்ய, யூனிட்டுக்கு 3 ரூபாய் விலை கொடுக்கும் போது, தனியாரிடமிருந்து கொள்முதல் செய்யும் மின்சாரத்துக்கு, யூனிட்டுக்கு 15.14 ரூபாய் விலை கொடுக்கக் காரணம் என்ன? தமிழக மின் துறை செய்யும் கொள்முதலில், பெரும் ஊழல் நடந்துள்ளது என்றெல்லாம் தெரிவித்திருக்கிறார்.

இந்தத் தகவலுக்கு மற்றுமோர் ஆதாரமாக, நடப்பு நிதியாண்டில், மின்சாரம் வாங்குவதற்கான செலவாக ரூ.27 ஆயிரத்து 147 கோடியை மின் வாரியம் மதிப்பிட்டுள்ளது. இதில் மத்திய மின் நிலையங்கள், காற்றாலை மற்றும் சூரியசக்தி மின் நிலையங்கள், வெளி மாநில மின் விற்பனை நிறுவனங்கள் ஆகியவற்றிடம் இருந்து வாங்கும் விலையைவிட குறிப்பிட்ட நான்கு தனியார் மின் நிலையங்களுக்கு மட்டும் அதிகப்பட்ச

விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனால் மின் வாரியத்துக்குக் கொள்முதல் செலவு பல மடங்கு அதிகரித்துள்ளது.

மத்திய மின் நிலையங்களான நெய்வேலி, கல்பாக்கம், வல்லூர், தேசிய அனல் மின் கழகத்தின் ராமகுண்டம் மற்றும் கூடங்குளம் அணு மின் நிலையம் ஆகியவற்றில் இருந்து சராசரியாக ஒரு யூனிட் ரூ. 2.94 மற்றும் ரூ. 3.85 என்ற விலைக்கு வாங்கத் திட்டமிட்டுள்ளது. காற்றாலை, சூரிய சக்தி, உயிரி தொழில் நுட்பம் போன்ற தனியார் மின் நிலையங்களிலிருந்து ரூ. 4.26க்கும், தனியார் மின் விற்பனை நிறுவனங்கள் மற்றும் சுயதேவை மின் உற்பத்தி தனியார் நிறுவனங்களிடமிருந்து ரூ.4.76க்கும் மின்சாரம் வாங்கப்படுகிறது. இந்த நிலையில், தனியார் மின் நிறுவனங்களான சாமல்பட்டி, மதுரை பவர் கார்ப்பரேஷன், பிள்ளை பெருமாள்நல்லூர் மின் நிறுவனம் மற்றும் ஜி.எம்.ஆர். ஆகிய நான்கு நிலையங்களில் இருந்து ஒரு யூனிட்டுக்கு அதிகப்பட்சமாக ரூ.15.14 என்ற விலையில் மின்சாரம் வாங்கப்படுகிறது. 4 நிறுவனங்களிடம் இருந்து மொத்தம் ரூ.1,208 கோடிக்கு வெறும் 798 மில்லியன் யூனிட் மட்டும் வாங்கப்படுகிறது. எஸ்.டி.சி.எம்.எஸ்., லேன்கோ மற்றும் பயனிர் ஆகிய நிறுவனங்களிடமிருந்து யூனிட்டுக்கு ரூ.5.14க்கு மின்சாரம் வாங்கப்படுகிறது. இந்த நிறுவனங்களில் இருந்து 2,865 மில்லியன் யூனிட் மின்சாரத்தை ரூ.1473 கோடிக்கு வாங்க மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் மொத்தம் 65 ஆயிரத்து 870 மில்லியன் யூனிட் மின்சாரம், ரூ.27 ஆயிரத்து 147 கோடியே 5 இலட்சத்துக்கு வாங்குவதாகத் தமிழக மின்சார ஒழுங்கு முறை ஆணையத்துக்கு மின்வாரியம் விவரங்களை அளித்துள்ளது. தமிழக மின் வாரியத்தின் மொத்த வருவாயில் சுமார் 55 சதவிகிதத்தை மின்சாரம் வாங்குவதற்கே செலவிடுவதால்தான், இழப்பு அதிகரித்து வருகிறது.

தனியார் நிறுவனங்களிலிருந்து மின்சாரம் வாங்குவதற்கு, ஒழுங்கு முறை ஆணையத்தில் மின்வாரியம் முறைப்படி அனுமதி பெற்று நியாயமான விலை நிர்ணயித்து வாங்க வேண்டும். ஆனால் ரூ.5.50க்கு மேல் தனியாரிடம் மின்சாரம் வாங்கினால் நட்டம் அதிகரிக்கும் என்று ஒழுங்கு முறை ஆணையம் எச்சரித்த நிலையிலும், இன்னும் கூறவேண்டுமே யானால் இந்த நான்கு தனியார் மின் நிறுவனங்களிடமிருந்து

மின்சாரத்தைக் கொள்முதல் செய்யக் கூடாது என்று ஒழுங்கு முறை ஆணையம் 30-3-2012இல் வெளியிட்ட ஆணையிலே தெரிவித்த போதும், கடந்த இரண்டாண்டுகளாகக் குறிப்பிட்ட அந்த நான்கு நிறுவனங்களிடமிருந்து எந்த அத்தியாவசியமும் இல்லாத நிலையில், அதிகப்பட்சமாக ரூ. 15 என்ற அளவுக்குத் தொகை கொடுத்து மின்சாரம் வாங்கப்பட்டுள்ளது. கடந்த 2013 ஏப்ரல் முதல் 2014 மார்ச் வரை சுமார் 22 ஆயிரத்து 90 கோடி ரூபாய்க்கு மின்சாரம் வாங்கப்பட்டதில், தனியாரிடமிருந்து மட்டும் 16,280 கோடி ரூபாய்க்கு மின்சாரம் வாங்கப்பட்டுள்ளது.

மற்றவர்களிடம் எல்லாம் மின்சாரத்தைக் குறைந்த விலையில் வாங்கும் மின் வாரியம், தனிப்பட்ட இந்த நான்கு பேரிடமிருந்து மட்டும் அதிக விலை கொடுத்து மின்சாரத்தை வாங்குவதின் காரணம் என்ன? இது ஏற்கனவேயே 10-8-2014 அன்று "டைம்ஸ் ஆப் வ இந்தியா" ஆங்கில நாளேடு, "தமிழகத்தில் காற்றாலை மூலம் மின்சாரம் அதிக அளவில் உற்பத்தியானாலும் அதனை வாங்காமல், வெளி மாநிலங்களிலிருந்து, தனியாரிடம் அதிக விலை கொடுத்து மின்சாரத்தை ஜெயலலிதா அரசு வாங்குகிறது" என்று எழுதியிருந்தது. 20-8-2014 அன்று தமிழ் நாளேடு ஒன்று, "தமிழக மின்வாரிய சாயம் வெளுத்தது - அதிக விலை கொடுத்து மின்சாரம் வாங்கியும் தொடரும் மின்தடை" என்ற தலைப்பில் இது பற்றி விளக்கியிருந்தது. எனவே, இதுபற்றிப் திரும்பத் திரும்ப இந்த அரசின் மீது புகார் கூறப்பட்ட போதிலும், தமிழக அரசோ, முதலமைச்சரோ, அந்தத் துறை அமைச்சரோ அதைப்பற்றிப் பதிலே அளிக்கவில்லையே; பதிலே அளிக்காமல் இருப்பதில் இருந்தே, அதிலே ஏதோ தவறு நடப்பது ஊர்ஜிதமாகிறது அல்லவா?

மின்வாரியம் முறைப்படி ஆண்டு வருவாய், செலவுத் தேவைக் கணக்கை ஒழுங்கு முறை ஆணையத்தில் சமர்ப்பித்து, பொதுமக்கள் பார்வைக்கு வைக்கவில்லை என்றும் பல குற்றச்சாட்டுகள் கூறப்படுகின்றன. இது தொடர்பாகச் சென்னை உயர் நீதிமன்றத்தில் பொது நல வழக்கே தாக்கல் செய்யப்பட்டு, மின் வாரியம், ஒழுங்கு முறை ஆணையத்துக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டு, வழக்கு விசாரணை டிசம்பர் 16க்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கின் காரணமாகவும், மின் கட்டண உயர்வுக்குப் பொதுமக்களிடையே எழுந்த எதிர்ப்பின் காரணமாகவும், விரைவில் வரவிருக்கும் திருவரங்கம் இடைத்

தேர்தல் காரணமாகவும் மின் கட்டண உயர்வு நடைமுறைக்கு வராமல் உள்ளது. மின் வாரியத்திற்கு நடப்பு நிதி ஆண்டின் நிதித் தேவை 39 ஆயிரத்து 92 கோடி ரூபாயாக இருக்குமென்றும், ஆனால் மின் கட்டண வசூலின்படி வருவாய் 32 ஆயிரத்து 238 கோடி ரூபாய்தான் என்றும் எனவே வருவாய்ப் பற்றாக் குறையே 6,854 கோடி ரூபாயாக இருக்குமென்றும் அதிகாரிகள் கூறுகிறார்கள்.

மின் துறை அமைச்சர் தற்போது 29ஆம் தேதி வெளியிட்டுள்ள அறிக்கையில் "இந்த அரசு மின் உற்பத்தியில் தமிழகம் தன்னிறைவு அடைவதற்காக பல நடவடிக்கைகளைச் சீரிய முறையில் எடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது" என்று தெரிவித்திருக்கிறார். என்னென்ன நடவடிக்கைகளைத் தமிழக அரசு எடுத்துள்ளது என்பதை விளக்கும் போது, எண்ணூர் அனல் மின் திட்ட விரிவாக்கம் (660 மெகாவாட்) பற்றிக் குறிப்பிட்டு, அந்தத் திட்டம் 42 மாதங்களுக்குப் பிறகு 2018இல் மின் உற்பத்தியைத் தொடங்கும் என்று கூறியிருக்கிறார். இந்தத் திட்டம் கழக ஆட்சியில் தொடங்கப்பட்டு, அ.தி.மு.க. ஆட்சியில் அக்கறை காட்டாமல் பல ஆண்டுகாலம் இருந்து விட்டது என்பதை அமைச்சர் தனது அறிக்கையில் மறைத்து விட்டார். முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா தமிழகச் சட்டப்பேரவையில் 29-3-2012 அன்று 110வது விதியின் கீழ்படித்த அறிக்கையில், எண்ணூர் அனல் மின் விரிவாக்கத் திட்டம், 2015ஆம் ஆண்டு இறுதிக்குள் தனது உற்பத்தியைத் தொடங்கும் என்று அறிவித்தார். ஜெயலலிதா 2015ஆம் ஆண்டு இந்தத் திட்டம் உற்பத்தியைத் தொடங்குமென்றார்; தற்போது அந்தத் துறை அமைச்சர் 2018ஆம் ஆண்டில் மின் உற்பத்தியைத் துவக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அறிக்கையிலே தெரிவிக்கிறார் என்றால், எந்த அளவுக்கு மின் உற்பத்தியில் தமிழகம் தன்னிறைவு அடைவதற்கான நடவடிக்கைகளை அ.தி.மு.க. அரசு எடுத்து வருகிறது என்பது தெளிவாகிறதல்லவா?

அதுமாத்திரமல்ல; மின் துறை அமைச்சர் தனது அறிக்கையில், உடன்குடி அனல் மின் திட்டக் கட்டுமானப் பணிகளுக்கான ஆணை விரைவில் வழங்கப்படும் என்றும், அந்தத் திட்டம் 2018-2019இல் மின் உற்பத்தியைத் துவக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் குறிப்பிட்டிருக்கிறார். 2011-2012ஆம் ஆண்டு அ.தி.மு.க. அரசு

பேரவையில் 4-8-2011 அன்று படித்த நிதிநிலை அறிக்கையில், உடன்குடி விரிவுத் திட்டம் போன்ற மின் உற்பத்தித் திட்டங்கள் விரைவில் தொடங்கப்படும் என்று அறிவித்தது. அதன்பிறகு 29-3-2012 அன்று ஜெயலலிதா பேரவையில் 110வது விதியின் கீழ் படித்த அறிக்கையில், -800 மெகாவாட் திறன் கொண்ட உடன்குடி விரிவாக்க அனல் மின் திட்டம் துவங்கப்படுவதற்கான முதல் நடவடிக்கையாக, சாத்தியக்கூறு திட்ட அறிக்கை தற்போது தயாரிக்கப்பட்டு வருகிறது, இத்திட்டம் 2015-2016 நிதியாண்டில். செயல்பாட்டிற்கு வரும் என்று தெரிவித்தார். மீண்டும் 25-4-2013 அன்று முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா சட்டப்பேரவையில் 110வது விதியின் கீழ் படித்த அறிக்கையில், "660 மெகாவாட் திறன் கொண்ட எண்ணூர் விரிவாக்கத் திட்டம் அமைப்பதற்கான சர்வதேச ஒப்பந்தப்புள்ளிகள் கோரிப் பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளன. 2ஒ 660 மெகாவாட் திறன் கொண்ட எண்ணூர் சிறப்புப் பொருளாதார மையத் திட்டம் மற்றும் 2 ஒ 660 மெகாவாட் திறன் கொண்ட உடன்குடி அனல் மின் திட்டம் ஆகியவற்றுக்கான ஒப்பந்தப்புள்ளிகளும் கோரப்பட்டுள்ளன என்று படித்தார். தற்போது 29-11-2014 அன்று மின் துறை அமைச்சர் அளித்துள்ள அறிக்கையிலே. உடன்குடி அனல் மின் திட்டம் நிறுவ பொறியியல் கொள்முதல் கட்டுமானப் பணிக்கான ஆணை விரைவில் வழங்கப்படும் : 2018-2019ஆம் ஆண்டில் மின் உற்பத்தியைத் துவக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது" என்று கூறுகிறார் என்றால் இதிலே உண்மைதான் என்ன?

மின்வாரியத்தில் பணியாற்றும் தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்); விரைவில் நடைபெறவுள்ள பேரவைக் கூட்டத்தையொட்டி மின் திட்டங்கள் பற்றிய குறிப்புகளைத் தயாரித்து அனுப்பியிருக்கிறார். அதில் இந்த உடன்குடி அனல் மின் திட்டம் பற்றிக் கூறும்போது, "தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் 19-7-2013 அன்றும், விலைப் புள்ளிகள் 18-10-2014 அன்றும் திறக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டு வருகின்றன என்றும், உடன்குடி விரிவாக்க மின் திட்டம் பற்றி கூறும்போது, இத்திட்டத்திற்கான முன் சாத்தியக் கூறு அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கான குறிப்பு விதிமுறைகளை இறுதி செய்ய மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தை விரைவில் அணுக உள்ளது. இந்தத் திட்டத்திற்கான ஆணை 4-9-2014 அன்று வெளியிடப்பட்டுள்ளது. தமிழக அரசின் கொள்கை

அளவிலான அனுமதி பெற கோரிக்கைக் கடிதம் 15-9-2014 அன்று அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டம் 2019-2020இல் இயக்கத்திற்கு வரும் என்றெல்லாம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதுபோலவேதான், 25-4-2013 அன்று ஜெயலலிதா, பேரவையில் படித்த 110வது விதியின் கீழான அறிக்கையில், "நீலகிரி மாவட்டத்தில், 7,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2,000 மெகாவாட் மின் திறன் கொண்ட சில்லஹல்லா நீரேற்று புனல் மின் திட்டம் உருவாக்கப்படும்" என்றார். உடனே கை தட்டி, அவரது கட்சியினர் எல்லாம் வரவேற்றனர். ஜெயலலிதா படித்து 18 மாதங்கள் ஓடிவிட்டன. மின்வாரியத் தலைமைப் பொறியாளர் கொடுத்துள்ள அறிக்கையில், "இத்திட்டத்திற்கான கொள்கை ரீதியிலான ஒப்புதல் தமிழக அரசின் அரசாணை எண். 87, நாள் 11-9-2014இல் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்திருக்கிறார் என்றால், எப்படிப்பட்ட ஏமாற்று நாடகங்கள் மின் உற்பத்தியைப் பொறுத்து இந்த ஆட்சியில் அரங்கேற்றப்படுகின்றன என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது அல்லவா? இந்த வேதனைகளை எல்லாம் எண்ணும்போது, நான் திரைக்கதை, உரையாடல் தீட்டி, அருமை நண்பர் எம்.ஜி.ஆர். நடித்த மலைக்கள்ளன்" திரைப் படத்தில்,

"எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே ;
இன்னும் எத்தனை காலம்தான் ஏமாற்றுவார்
இந்த நாட்டிலே; சொந்த நாட்டிலே! நம் நாட்டிலே!
சத்தியம் தவறாத உத்தமர் போலவே நடிக்கிறார்.
சமயம் பார்த்து பல வகையிலும் கொள்ளை அடிக்கிறார்!
பக்தனைப் போலவே பகல் வேஷம் காட்டி
பாமர மக்களை வலையினில் மாட்டி
எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே!"

என்ற பாடலைத்தான் நினைவுபடுத்திக் கொள்ளத் தோன்றுகிறது!

அன்புள்ள,

மு.க.

02-12-2014

3945. எல்லோரின் மனத்திலும் எழுந்துள்ள அய்யப்பாடு!

உடன்பிறப்பே,

1991 முதல் 1993ஆம் ஆண்டு வரையிலான வருமான வரிக் கணக்கைத் தாக்கல் செய்யவில்லை என்று முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா, சசிகலா, மற்றும் சசி எண்டர்பிரைசஸ் நிறுவனம் மீது சென்னை எழும்பூர் பொருளாதார குற்றவியல் நீதிமன்றத்தில் வருமான வரித் துறை உதவி ஆணையாளர் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு கடந்த 1997ஆம் ஆண்டு முதல் 17 ஆண்டுகளாக விசாரணையில் இருந்துவந்து தற்போது ஒரு முடிவுக்கு வரும் கட்டத்தை எய்தியுள்ளது. அந்த வழக்கின் விவரம் பற்றி நீ புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அவற்றை இங்கே விளக்கிட விரும்புகிறேன்.

இது குறித்த வழக்கு 21-8-1997 அன்று முதன் முதலாகத் தாக்கல் செய்யப்பட்டது. வருமான வரித்துறையினர் குறிப்பிட்டுள்ள அந்தக் கால கட்டத்தில், தனக்கு வருமானம் இல்லை எனவும், அதனால் கணக்குத் தாக்கல் செய்யவில்லை எனவும் ஜெயலலிதா தரப்பிலே தெரிவிக்கப்பட்டது. ஆனால் அதனை வருமான வரித் துறையினர் ஏற்றுக்கொள்ளவில்லை. வருமான வரிச் சட்டப்படி, வருமான வரி செலுத்துபவர்கள், வருமானம் இல்லாத காலத்திற்கும் கணக்குக்காட்ட வேண்டும் என்பதுதான் சட்டம்.

ஜெயலலிதாவும், அவரது தோழி சசிகலாவும் 1993-94ஆம் ஆண்டுக்கான தங்களது வருமான வரி கணக்கைத் தாக்கல் செய்யாதது பற்றிய வழக்கு உச்ச நீதிமன்றத்தில் 24-2-2006 அன்று நீதிபதிகள் பி.என். அகர்வால், ஏ.கே. மாத்தூர் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. ஜெயலலிதாவின் வக்கீல் ஆறு வாரம் அவகாசம் வேண்டுமென்றார்.

அப்போது நீதிபதிகள் கூறியது என்ன தெரியுமா?

"நீதி பரிபாலன முறையையே நீங்கள் கேலிக் கூத்தாக்கி வருகிறீர்கள். இன்னும் எவ்வளவு காலத்திற்கு இந்த நீதிமன்ற நடவடிக்கைகளை இழுத்துச்செல்ல முடியும்? குற்றவியல் நடைமுறைச் சட்டம் 313வது பிரிவின்கீழ் நீதிமன்றத்தில் ஆஜராகிக் கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதில் சொல்லி மற்றவர்களுக்கெல்லாம் முன்மாதிரியாக நீங்கள் இருக்க வேண்டும். இந்த விஷயத்தில் என்ன பதில் மனுவை உங்களால் தாக்கல் செய்ய முடியும்? (ஜெயலலிதாவின் வழக்கறிஞரைப் பார்த்து) உங்கள் கட்சிக்காரர் நீதிமன்றத்தில் ஆஜராகிக் கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டுமென்று நாங்கள் இன்றைக்கே ஆணை பிறப்பிக்க விரும்புகிறோம்."

Hindu dated 25-2-2006 Court pulls up Jayalalithaa

"You (Jayalalithaa) are making a mockery of the Judicial Process. How long you can drag the proceedings? You must set an example to others by presenting yourself in the court for questioning under section 313 cr. P.C. What counter affidavit you can file in this matter? We want to pass an order today itself directing your client to be present in the Court"

இந்த வழக்கிலிருந்து தன்னை விடுவிக்க வேண்டுமென்று கீழ்க் கோர்ட்டில் ஜெயலலிதா தரப்பினர் முறையீடு செய்ததை, 14-6-2006 அன்று நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. ஜெயலலிதாவும், சசிகலாவும் தங்களை இந்த வழக்குகளிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று கோரி மனுக்களைத் தாக்கல் செய்துவிட்டு, அதனை நடத்தாமல் காலம் கடத்தியதைத் தொடர்ந்து, வருமான வரித்துறை; உயர் நீதி மன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்தை அணுகியது. 4-9-2006 அன்று உச்ச நீதிமன்றம் நான்கு வாரக் காலத்திற்குள் விசாரணை நீதிமன்றத்தில் ஜெயலலிதாவும் சசிகலாவும் தங்களை விடுவிக்க வேண்டுமென்று தொடுத்த வழக்கை முடிவுசெய்ய வேண்டுமென்று உத்தரவிட்டனர். அதன்படி சென்னை முதன்மை மாநகர மாஜிஸ்திரேட் அவர்கள் விசாரித்து ஜெயலலிதாவின் மனுவினைத் தள்ளுபடி செய்தார். அதாவது 1997ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் ஒன்பதாண்டுகளுக்குப் பிறகு, தங்களை அந்த வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் மனு தாக்கல் செய்து, அந்த மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது.

அதன் பிறகு ஜெயலலிதா தரப்பினர் உயர் நீதிமன்றத்தில் "அப்பீல்" செய்து, அதுவும் 2-12-2006 அன்று தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது. எனவே இந்த வழக்கிலிருந்து தம்மை விடுவிக்கக் கோரி, உச்ச நீதிமன்றத்தில் ஜெயலலிதா மனு தாக்கல் செய்தார். உச்ச நீதிமன்றத்தில் ஜெயலலிதா தாக்கல் செய்த "அப்பீல்", உச்ச நீதிமன்றத்தால் 30-1-2014 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. தள்ளுபடி செய்ததோடு, உச்ச நீதிமன்ற நீதிபதிகள், வருமான வரி வழக்கை ஜெயலலிதா எதிர்கொள்ள வேண்டுமென்றும், இந்த வழக்கை நான்கு மாதங்களுக்குள் முடிக்க வேண்டுமென்றும் 2014ஆம் ஆண்டு ஜனவரியில் ஆணை பிறப்பித்தார்கள். மேலும் உச்ச நீதிமன்ற நீதிபதிகள், "வருமான வரி செலுத்த வேண்டியவர்கள் தவறாமல் வருமான வரிக் கணக்கை முறையாகத் தாக்கல் செய்ய வேண்டும். அப்படித் தாக்கல் செய்யாததே குற்றம் ஆகும். வருமான வரித் துறையினர் வழங்கும் ஒவ்வொரு உத்தரவும் மேல் முறையீட்டுக்கு எடுத்துச் செல்லப்படுவது வழக்கமாக இருந்து வருகிறது. அப்படி மேல் முறையீட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்ட நிகழ்வுகள் குறித்த விவரங்கள் இந்த வழக்கில் இணைக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்கும்போது, எந்த அளவுக்கு இந்த வழக்கில் வேண்டுமென்றே தாமதத்தை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது தெளிவாகிறது. எனவே இனி அனைத்து நீதிமன்றங்களும் குற்றம் செய்பவர்கள் தங்கள் மீதுள்ள வழக்குகளைத் தாமதப்படுத்துவதற்காக நீதிமன்றங்களைப் பயன்படுத்துவதைக் கட்டாயம் தவிர்த்திட வேண்டும்" என்று தங்கள் தீர்ப்பில் தெரிவித்திருந்தார்கள்.

உச்ச நீதிமன்றம் அளித்த இந்தத் தீர்ப்பில், "குற்றச்சாட்டுகளை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு குற்றம் சாட்டிய வருமானவரித் துறையின் மீதா அல்லது குற்றம் சாட்டப்பட்ட ஜெயலலிதா மற்றும் சசிகலா மீதா என்பதுதான் தீர்மானிக்கப்பட வேண்டிய முக்கிய அம்சமாகும். இந்த வழக்கைப் பொறுத்தவரையில், குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு, உள்நோக்கம் இருந்திருப்பதை யூகிக்க முடிகிறது என்பதால், குற்றஞ்சாட்டப்பட்டவர்கள்தான்; தாங்கள் எவ்வித அய்யப்பாட்டிற்கும் இடமின்றி நிரபராதிகள் என்பதை நிரூபிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். எனவே குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் எத்தகைய சூழலில் தாங்கள் வருமான வரிக் கணக்கைத் தாக்கல் செய்யவில்லை என்பதை விசாரணை

நீதிமன்றத்தில் நிரூபிக்க வேண்டும்" என்று குறிப்பிட்டிருப்பதில் இருந்து, இந்த வழக்கில் தாங்கள் குற்றமற்றவர்கள் என்று நிரூபிக்க வேண்டிய கடப்பாடு ஜெயலலிதாவுக்கும், சசிகலாவுக்கும்தான் உள்ளது என்பதை மனதிலே கொள்ள வேண்டும்.

வழக்கு தாக்கல் செய்யப்பட்டது 1997ஆம் ஆண்டு. மாஜிஸ்திரேட் கோர்ட்டில் அது 2006ஆம் ஆண்டு அதாவது 9 ஆண்டுகளுக்குப் பிறகு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது 2-12-2006. அதை எதிர்த்து ஜெயலலிதா 2006ஆம் ஆண்டு செய்து கொண்ட அப்பீலை, எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு உச்ச நீதிமன்றம் கடந்த 30-1-2014இல் தள்ளுபடி செய்ததோடு, நான்கே மாதங்களில் விசாரணையை நடத்தி முடிக்குமாறு ஆணை பிறப்பித்தது. அவ்வாறு உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துப் பத்து மாதங்கள் முடிந்து விட்டன. ஆனால் விசாரணை முடிந்து விட்டதா என்றால் இல்லை.

உச்ச நீதிமன்றம் இப்படியெல்லாம் எழுதி; நான்கே மாதங்களில் இந்த வழக்கினை விசாரித்து முடிக்க வேண்டுமென்று தீர்ப்பளித்த அந்த வழக்கில்தான்; அதே உச்ச நீதிமன்றம் நாடாளுமன்றத் தேர்தலில் ஜெயலலிதா பிரச்சாரம் செய்ய வேண்டியிருப்பதால் 3 மாதங்களுக்கு விசாரணையைத் தள்ளிவைத்ததுடன், (அப்போது நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரப் பணிகள் முடிவடைய நான்கு நாட்கள் மட்டுமே இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது) விசாரணை நீதிமன்றம் குறிப்பிடும் நாளில் ஜெயலலிதாவும், சசிகலாவும் தவறாமல் ஆஜராக வேண்டுமென்றும் ஆணை பிறப்பித்தது. உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பாவது மதிக்கப்பட்டதா? ஜெயலலிதாவும், சசிகலாவும் தவறாமல் விசாரணை நீதிமன்றம் குறிப்பிட்ட நாளில் ஆஜரானார்களா?

20-3-2014 அன்று இந்த வழக்கு எழும்பூர் முதலாவது பொருளாதார குற்றப் பிரிவு நீதிமன்றத்தில் நீதிபதி திரு. ஆர். தெட்சிணாமூர்த்தி அவர்கள் முன்பாக விசாரணைக்கு வந்தது. வழக்கில் குற்றச்சாட்டுகள் பதிவுசெய்ய வேண்டியிருப்பதால், ஏப்ரல் 3ஆம் தேதி ஜெயலலிதாவும் சசிகலாவும் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராக வேண்டுமென்று நீதிபதி உத்தரவிட்டார். ஆனால் ஏப்ரல் 3ஆம் தேதி ஜெயலலிதாவும், சசிகலாவும் நேரில் ஆஜராக வில்லை. அவர்களுடைய வழக்கறிஞர், ஜெயலலிதா தேர்தல் பிரச்சாரத்தில் இருப்பதாகவும், சசிகலாவுக்கு முதுகுவலி மற்றும்

சர்க்கரை நோய் என்றும் நேரில் ஆஜராவதிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்றும் கோரினார். அப்போது வருமானவரித் துறை வழக்கறிஞர் அதற்குக் கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

அந்த நிலையில் மாஜிஸ்திரேட் அவர்கள், ஜெயலலிதாவும், சசிகலாவும் ஏப்ரல் 10ஆம் தேதி நேரில் ஆஜராக வேண்டுமென்று உத்தரவிட்டார். ஆனால் அன்றும் அவர்கள் ஆஜராகவில்லை. மே 19ஆம் தேதி அன்று வழக்கு விசாரணைக்கு வந்தபோதும் ஜெயாவும் சசியும் ஆஜராகவில்லை. ஜூன் 3ஆம் தேதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. அவ்வாறு ஜூன் 3ஆம் தேதியன்று இந்த வழக்கு, விசாரணைக்கு வந்தபோது, வழக்கை விசாரித்த நீதிபதி 9-6-2014 அன்று ஜெயலலிதாவும் சசிகலாவும் நீதிமன்றம் வர வேண்டுமென்று உத்தரவிட்டார். ஆனால் அவர்கள் ஆஜராகவில்லை. நீதிபதி தெட்சிணாமூர்த்தி அவர்கள் ஜூன் 30ஆம் தேதி ஜெயலலிதாவும் சசிகலாவும் கண்டிப்பாக விசாரணைக்காக நேரில் ஆஜராக வேண்டுமென்று உத்தரவிட்டார். அந்த உத்தரவாவது நடைமுறைக்கு வந்ததா என்றால் இல்லை.

இப்படியெல்லாம் நீதிமன்ற உத்தரவுகளை அலட்சியப்படுத்தியவர்தான் ஜெயலலிதா. 30-6-2014 அன்று எழும்பூர் 1வது பொருளாதார குற்றப் பிரிவு நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, ஜெயலலிதா, சசிகலா மற்றும் சசி எண்டர் பிரைசஸ் சார்பாகத் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், வருமானவரித் தாக்கல் செய்யாதது தொடர்பாக துறை ரீதியான விசாரணைக்கு வருமானவரித் துறையிடம் ஒரு மனு தாக்கல் செய்துள்ளதாகவும், அது வருமானவரித் துறையில் நிலுவையில் உள்ளதாகவும், எனவே விசாரணையைத் தள்ளிவைக்க வேண்டுமென்றும் கோரினார்கள். வழக்கு விசாரணையை ஜூலை 24ஆம் தேதிக்குத் தள்ளிவைத்தனர்.

இந்த வழக்கு பற்றி மேலும் ஒரு தகவலைக் கூறவேண்டுமேயானால், 1998ஆம் ஆண்டிலேயே, அப்போது மத்திய அரசிலே பா.ஜ.க. ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், அந்த ஆட்சியில் கூட்டணி வைத்திருந்த அ.தி.மு.க. தலைவி, இந்த வருமான வழக்கிலிருந்து தங்களை விடுவிக்க முயற்சி மேற்கொண்டது பற்றி,

15-7-1998 அன்றே "ஸ்டேட்ஸ்மேன்" நாளேடு வெளியிட்ட ஒரு செய்தியில், "மத்திய அரசுடன் ஜெயலலிதா செய்து கொண்டுள்ள தற்காலிக சமாதான உடன்பாட்டைத் தொடர்ந்து, அவர்மீது உள்ள வருமானவரி மற்றும் இதர வழக்குகளில் இருந்து அவரை விடுவிக்க பா.ஜ.க. அரசு வழிவகைகளை மேற்கொண்டுள்ளது. ஜெயலலிதாவுக்கு எதிரான வழக்குகளை மேற்பார்வையிட்டு வந்த ஆணையாளர் எஸ்.சி. ஜாதவ் மும்பையில் சிறந்த பதவி எனக் கருதப்படும் ஒரு பதவிக்கு மாற்றப்பட்டார். அவருடைய பதவியை கே. கோபாலன் என்பவர் ஏற்றுக்கொண்டார். நேர்மையுடன் செயல்படக் கூடியவரான பி.கே. ஸ்ரீதரன் வேறு ஒரு முக்கிய பொறுப்புக்கு மாற்றப்பட்டார். அவரது இடத்துக்கு என்.பி. திரிபாதி என்பவர் நியமிக்கப்பட்டார். இப்படிப்பட்ட மாறுதல்கள் மூலம் ஜெயலலிதாவும், சசிகலாவும் அவருடைய உறவினர்களும் ஒரு தற்காலிக விடுதலையை அடையக்கூடும் என்று வருமானவரித் துறை அதிகாரிகள் குற்றம் சாட்டினர். ஜெயலலிதாவை சமாதானப்படுத்தியதன் மூலம் பா.ஜ.க. அரசு தனக்குத் தேவையான ஆதரவைப் பெற்றது. அதற்குப் பதிலாகத் தமிழ்நாட்டில் தி.மு.க. அரசைக் கலைக்க வேண்டும் என்ற கோரிக்கையைத் தற்காலிகமாக நிறுத்திக் கொண்டுள்ளனர்" என்று எழுதியிருந்தது.

இன்னும் சொல்லப்போனால், பா.ஜ.க.வுடன் அ.தி.மு.க. கூட்டணி வைத்து, மத்திய ஆட்சியில் இருந்தபோது, நிதியமைச்சராக இருந்த பா.ஜ.க.வின் மூத்த தலைவர்களில் ஒருவரான

திரு. யஷ்வந்த் சின்கா அவர்கள் ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். அந்தப் புத்தகத்தின் பெயர் "Confessions of a Swadeshi Reformer" (சுதேசி சீர்திருத்தவாதியின் வாக்குமூலம்). அந்த நூலில் பக்கம் 226இல், "சென்னையில் காலையில் என்னுடைய நிகழ்ச்சிகள் முடிந்தவுடன், நான் ஜெயலலிதா வீட்டிற்குச் சென்றேன். நல்லவேளையாக அங்கே எந்த புகைப்படக்காரரும் காத்திருக்க வில்லை. ஜெயலலிதா இருந்த அறைக்கு நான் சென்று சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு, மதிய உணவு அருந்தினோம். மூன்று பேர் மட்டுமே சாப்பிட்டோம் - ஜெயலலிதா, திலிப் ரே (நிலக்கரித் துறை இணை அமைச்சர்), நான். சாப்பாடு நன்றாக இருந்தது. நான் புறப்படும்போது

என்னிடம் ஜெயலலிதா ஒரு கவரைக் கொடுத்தார். பிறகு நான் அதனைத் திறந்து பார்த்த போது அவருடைய வருமானவரி வழக்குகள் பற்றிய குறிப்புகள் இருந்தன. சில நாட்கள் கழித்து நான் பிரதமரைச் சந்தித்தேன். சென்னையில் ஜெயலலிதாவுடன் நடந்த பேச்சுவார்த்தை விவரங்களை அவரிடம் தெரிவித்தேன். ஆனால் ஜெயலலிதா கொடுத்த கவர் பற்றிச் சொல்ல மறந்து விட்டேன். அப்போது பிரதமர் (வாஜ்பாய்) "ஜெயலலிதா கொடுத்த கவரில் என்ன விஷயங்கள் இருந்தன?" என்றார். நான் திடுக்கிட்டுப் போனேன். நாட்டில் நடக்கும் விஷயங்களைத் தெரிந்துகொள்ள பிரதமர் நினைத்தால் அது முடியுமென்பதை நான் அறிந்து கொண்டேன்." இவ்வாறு யஷ்வந்த் சின்கா, முன்னாள் மத்திய நிதியமைச்சர், தான் எழுதிய நூலிலே குறிப்பிட்டிருக்கிறார்.

இது 1998இல் அ.தி.மு.க., பா.ஜ.க.வுடன் கூட்டணியில் அங்கம் வகித்தபோது நடைபெற்ற ஒரு சம்பவம். அதுவும் வருமானவரி வழக்கு குறித்த சம்பவம். அப்போது மத்திய நிதி அமைச்சரை ஜெயலலிதா அவருடைய வீட்டிற்கே அழைத்து உணவளித்துப் பரிந்துரை கவரையும் கொடுத்தார் என்பதை முன்னாள் மத்திய நிதி அமைச்சர் திரு. யஷ்வந்த் சின்கா அவர்களே தன் புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார். தற்போது என்ன நிலை? இதற்கு முன்பு பிரதமர் தமிழகம் வந்தபோது, அவரை வரவேற்கச் செல்லாத தமிழக முதல்வர் ஜெயலலிதா தற்போது விமான நிலையத்திற்குச் சென்று வரவேற்கிறார், வழி அனுப்புகிறார். பதினைந்து நிமிடம் தனித்து உரையாடுகிறார். அதற்குப் பிறகுதான் எழும்பூர் நீதிமன்றத்தில் வருமானவரித் துறை சார்பாகப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள மனு கொடுத்து, அது பரிசீலனையில் இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார். வருமானவரித் துறை வழக்கறிஞரும் அதற்கு எதுவும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்று பேட்டி அளிக்கிறார்.

இப்படியெல்லாம் 17 ஆண்டுகாலம் பயணம் செய்த இந்த வழக்கில்தான் - தற்போது வருமானவரிச் சட்ட விதிகளின்படி, தாங்கள் செலுத்த வேண்டிய வருமானவரி கட்டணத்தை அபராதத்துடன் சேர்த்துச் செலுத்துவதற்குத் தயாராக உள்ளதாக வருமான வரித் துறை இயக்குனர் ஜெனரலுக்கு ஜெயலலிதா, சசிகலா மற்றும் சசி எண்டர்பிரைசஸ் நிறுவனம் சார்பில் மனு கொடுக்கப்பட்டு, அந்த மனுவைப் பரிசீலித்து வருமானவரித்

துறை இயக்குனர் ஜெனரல் அதை ஏற்றுக்கொண்டு விட்டாராம். இந்த வழக்கு 1ஆம் தேதியன்று விசாரணைக்கு வந்தபோது, நீதிபதி என்ன காரணத்தாலோ (?) விடுப்பு எடுத்துள்ளதால், அவர் வரவில்லையாம். அப்போது ஜெயலலிதா தரப்பினரின் வழக்கறிஞர்கள் தாக்கல் செய்த மனுவில், "ஜெயலலிதா, சசிகலா, சசி எண்டர் பிரைசஸ் நிறுவனம் சார்பில் கொடுக்கப்பட்ட சமரச மனுவை வருமான வரித்துறை ஏற்றுக்கொண்டது. இதையடுத்து சசி எண்டர்பிரைசஸ் நிறுவனம் 1990-91ஆம் ஆண்டுகளுக்கு 75 இலட்சத்து 33 ஆயிரத்து 330 ரூபாயும், 1992-93ஆம் ஆண்டு களுக்கு 65 இலட்சத்து 67 ஆயிரத்து 872 ரூபாயும் அபராதத்துடன் வருமானவரிக் கட்டணத்தைச் செலுத்திவிட்டது. அதுபோல் ஜெயலலிதா 30 இலட்சத்து 83 ஆயிரத்து 887 ரூபாயும், சசிகலா 28 இலட்சத்து 7 ஆயிரத்து 972 ரூபாயும் செலுத்திவிட்டார்கள். ஆக மொத்தம் 1 கோடியே 44 இலட்சத்து 43 ஆயிரத்து 61 ரூபாயும் செலுத்தப்பட்டுள்ளது. இதற்கான இறுதி உத்தரவினை வருமான வரித்துறை பிறப்பிக்கவில்லை. எனவே இந்த வழக்கு விசாரணைக்காக ஜெயலலிதா, சசிகலா ஆகியோர் நேரில் ஆஜராகத் தேவையில்லை. இந்த வழக்கை 2 வாரங்களுக்குத் தள்ளிவைக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவ்வாறே வழக்கும் தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு முடிவடையப் போவதாக ஏடுகள் எல்லாம் எழுதியுள்ளன. இந்த நேரத்தில் நமக்கும் - நாட்டு மக்களுக்கும் இந்த வழக்கு பற்றி எழுந்துள்ள சில கேள்விகள் -

17 ஆண்டுகள் வழக்கு நடைபெற்று; அதற்காகப் பல்வேறு நீதிமன்றங்களும், நீதியரசர்களும், அரசும், வழக்கறிஞர்களும், நீதிமன்ற அலுவலர்களும் பல மணி நேரத்தை இந்த வழக்குக்காகச் செலவிட்டதற்கு யார் பொறுப்பாளி? அவ்வாறு இவர்களது நேரத்தை வீணடித்தவர்களுக்குத் தண்டனை வெறும் அபராதம்தானா? காசு உள்ளவர்கள் அதைச் செலுத்தி விட்டால் அவர்கள் செய்த குற்றம் எல்லாம் மறக்கப்பட்டுவிடுமா? தற்போது அபராதத்துடன் செலுத்திய தொகையை 17 ஆண்டுகளுக்கு முன்பே செலுத்தியிருந்தால், இத்தனை பேருடைய உழைப்பும் வீணடிக்கப்பட்டிருக்காது அல்லவா? இந்த வழக்கில் இதற்கு முன்பு குற்றம் சாட்டப்பட்ட ஜெயலலிதா தரப்பினர் பற்றி உச்சநீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்த கருத்துகள் என்னவாயிற்று? இந்த

வழக்கிற்காகப் பல்வேறு பத்திரிகையாளர்கள் செலவிட்ட நேரம் எவ்வளவு? 1998ஆம் ஆண்டில் மத்தியில் இதே பா.ஜ.க. அரசு நடைபெற்றபோது, இந்த வருமானவரி வழக்கினைத் திரும்பப் பெறச் செய்ய முயற்சி நடைபெற்றதாக ஏடுகளிலே செய்தி வந்ததே, அதுபோன்ற நடவடிக்கை இப்போதும் எடுக்கப்பட்டதாக பலரும் கருதினால் அது தவறா? இந்த வழக்கிலிருந்து தங்களை விடுவிக்க ஜெயலலிதா தரப்பினர் கீழ்க் கோர்ட்டிலும், பிறகு உயர் நீதிமன்றத்திலும், அதன் பின்னர் உச்ச நீதிமன்றத்திலும் அடுத்தடுத்து மனுக்களைத் தாக்கல் செய்தனரே, அதற்குப் பதிலாக அப்போதே வருமானவரித் துறையினரிடம் அபராதத் தொகையைக் கட்டுவதாக கூறியிருக்கலாம் அல்லவா?

நீதிபதி பல முறை, நீதிமன்றத்திலே ஜெயலலிதா ஆஜர் ஆக வேண்டுமென்று வலியுறுத்திய போதிலும், அவர் ஆஜராகாமல் இருந்தது பற்றி, தே.மு.தி.க. தலைவர் குடியரசுத் தலைவருக்கும், பிரதமருக்கும் - சராசரி இந்தியக் குடிமகன் ஒருவர் இவ்வாறு செயல்பட்டிருக்க முடியுமா என்றும், ஜெயலலிதா வருமான வரித் துறைக்கு இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு விடுத்துள்ள வேண்டுகோளை வருமான வரித்துறை ஏற்கலாமா என்றும் கடிதம் எழுதியிருந்தாரே, அந்தக் கடிதங்கள் என்னவாயின? இந்த வழக்கிலிருந்து தங்களை விடுவிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை நீதிமன்றங்கள் 2006ஆம் ஆண்டு தள்ளுபடி செய்தபோதே, ஜெயலலிதா வருமானவரித் துறையோடு சமரசம் செய்து கொள்வதற்கு மனு செய்திருக்கலாம் அல்லவா? அப்போது மத்தியிலே அவருடைய கோரிக்கையைக் கேட்கின்ற அரசு இல்லை என்ற காரணத்தால், அப்போது இந்த வேண்டுகோளை வைக்கவில்லையா?

ஜெயலலிதா தரப்பினர் இப்போது அபராதத் தொகையைக் கட்டியிருக்கிறார்கள் என்றால், தாங்கள் செய்த குற்றத்தை அவர்களே ஒப்புக்கொண்டு விட்டனர் என்றுதானே பொருள்! ஜெயலலிதாவைப்போல வேறு யாராவது 17 ஆண்டுக் காலம் வழக்கை நடத்தித் தீர்ப்பு வெளியிடப்படவுள்ள நேரத்தில், தப்பிக்க வேறு வழியில்லாமல், அபராதத் தொகையைத் தானே கட்டி விடுவதாகக் கூறினால், அதனை வருமானவரித் துறை ஏற்றுக் கொள்ளுமா?

ஜெயலலிதா சமாதானமாகச் செல்லாமல் நீதிமன்றம் தண்டனை விதித்திருக்குமானால், வரி ஏய்ப்புத் தொகை ஒரு இலட்சம் ரூபாய்க்குமேல் இருந்தால், அபராதத்துடன் குறைந்தபட்சம் ஆறு மாதங்கள், அதிகப்பட்சம் 7 ஆண்டுகள் வரை கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்று வழக்கறிஞர்கள் கூறுகிறார்கள். இந்தத் தண்டனையிலிருந்து தப்பிக்கவே ஜெயலலிதா தரப்பினர் பிடிக்க வேண்டியவர்களைப் பிடித்து வருமான வரித்துறையுடன் சமரசம் கண்டு விட்டாரோ என்றும் கூறுகிறார்கள். எப்படியோ வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது ஏற்கப்படாத வேண்டுகோள், மோடி பிரதமராக இருக்கும்போது ஏற்கப்பட்டு விட்டதோ என்ற அய்யப்பாடு எல்லோரின் மனத்திலும் எழுந்துள்ளது!

அன்புள்ள,

மு.க.

4-12-2014

3946. இடர் பல கடந்து; இந்தத் தொடர் பணியை ஆற்றுவோம் வாரீர்!

உடன்பிறப்பே,

நமது கழகத்தின் 14வது பொதுத் தேர்தல், ஜனநாயக முறைப்படியும், அதே நேரத்தில் தொண்டாற்றப் போவதற்கான போட்டி உணர்வோடும்; கிளைக் கழகச் செயலாளர்கள் தொடங்கி மாவட்டக் கழகச் செயலாளர்கள்வரை படிப்படியாக நடந்து முடிந்துள்ளது. அடுத்து, மாவட்டக் கழகச் செயலாளர் களுக்கான தேர்தல் தேதிகளும் அறிவிக்கப்பட்டுவிட்டன. நியமன முறையில் இன்னார்தான் இந்த மாவட்டத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளர் என்று அறிவிப்புகளை மட்டுமே வெளியிடுகின்ற கட்சி நம்முடைய கட்சி அல்ல. கழகம் தோன்றியது முதல் இதுவரை 13 பொதுத் தேர்தல்களை நடத்தி முடித்து, அதாவது 2008ஆம் ஆண்டு டிசம்பர் 27ஆம் தேதியன்று 13வது பொதுத் தேர்தலை நடத்தி முடித்து தற்போது 14வது பொதுத் தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. திராவிட முன்னேற்றக் கழகம் தற்போது ஆளுங்கட்சி அல்ல. ஆனாலும் எந்த அளவுக்குக் கழகப் பணியாற்ற கட்சியினருக்குள் போட்டி எழுந்துள்ளது தெரியுமா?

கழகத்தின் இந்த 14வது அமைப்புத் தேர்தலில் கழக உறுப்பினர்களின் எண்ணிக்கை 84 இலட்சத்து 36 ஆயிரத்து 744. நான் ஏற்கனவே ஒரு முறை எழுதியவாறு, 13வது அமைப்புத் தேர்தலுக்கும், தற்போது நடைபெறும் 14வது அமைப்புத் தேர்தலுக்கும் இடையே கழக அமைப்பில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக 13வது கழக அமைப்புத் தேர்தலில் மதுரை, கோவை மாநகர் உட்பட கழக மாவட்டங்களாக 36 இருந்தன. இந்த மாவட்டங்களைத் தற்போது நிர்வாக வசதிக்காக 65 கழக மாவட்டங்களாகப் பிரித்திருக்கிறோம். அதுபோல ஏற்கனவே 392 ஒன்றியக் கழகங்கள் இருந்ததற்கு மாறாகத் தற்போது 578

ஒன்றியக் கழகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மேலும் நகரக் கழகங்கள் 129 - பகுதிக் கழகங்கள் 97 - பேரூராட்சிக் கழகங்கள் 538 - இவை தவிர வார்டுக்கிளை என்று எடுத்துக்கொண்டால், கழகத்தில் 1 லட்சத்து 12 ஆயிரத்து 247 வார்டுகள் உள்ளன. அதில் மாநகராட்சி வார்டுகள் 820 - பேரூராட்சி வார்டுகள் 8,397 - நகர வார்டுகள் 3,735 - 12,514 ஊராட்சிகளில் 99,295 ஊராட்சி வார்டுகள் உள்ளன. இவற்றில் ஊராட்சி வார்டுகள், நகர வார்டுகள், பேரூராட்சி வார்டுகள், ஒன்றியங்கள், நகரங்கள் ஆகியவற்றுக்கான தேர்தல்கள் முடிந்து விட்டன. மாநகராட்சி வார்டுகளில் தேர்தல்கள் நடந்துகொண்டு வருகின்றன.

அகில இந்தியாவிலும் எடுத்துக்கொண்டால், எந்தவொரு கட்சியிலும் உறுப்பினர் சீட்டுகள் முறையாக உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு, அந்த அடிப்படையிலே கீழ் மட்டத்திலிருந்து மேல் மட்டம் வரை தேர்தல் நடத்துகின்ற கட்சி தி.மு. கழகத்தைத் தவிர வேறு ஒன்று இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இவ்வாறு ஜனநாயக ரீதியாகவும், அறிவியல் முறைப்படியும் நடைபெறும் தேர்தல்களில் ஒன்றிரண்டு இடங்களில் சில பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. இந்த 14வது அமைப்புத் தேர்தலில் ஒரு சில இடங்களில் அப்படிப்பட்ட சிறு சிறு பிரச்சினைகள் நடைபெற்றதாக என்னுடைய கவனத்திற்கு வந்துள்ளன. அந்த முறையீடுகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் மீதோ, தலைமைக் கழக ஆணையாளர் மீதோ உள்ள காழ்ப்புணர்ச்சி காரணமாகக் கூடத் தரப்பட்டிருக்கலாம். அல்லது நடைபெற்ற தேர்தலில் தங்கள் அணி தோற்று விட்டது என்ற காரணத்தால், அப்படிப்பட்ட புகார்களைக் கொடுத்திருக்கலாம். ஒரு ஜனநாயக இயக்கத்தில் போட்டிகள் இருப்பது இயற்கைதான். அதுவும் திராவிட முன்னேற்றக் கழகம் போன்ற மாபெரும் கட்சிகளில் ஒரே பொறுப்புக்குப் பலர் வர விரும்புவதும் புரிந்துகொள்ளக் கூடிய ஒன்றுதான். ஆனால் அந்தப் போட்டி நியாயமாகவும், ஆரோக்கிய மான முறையிலும், ஜனநாயக நெறிப்படியும் நடைபெற வேண்டுமே தவிர, தவறான முறையில், பொறுப்பற்ற தன்மையில் புகைச்சலை உருவாக்கும் வகையிலே அமைந்துவிடக் கூடாது.

“திராவிட முன்னேற்றக் கழகம் ஓர் அரசியல் கட்சி மட்டுமல்ல; இது ஒரு சமுதாயச் சீர்திருத்த இயக்கம்.

இதில் ஈடுபட்டிருக்கின்ற அத்தனை பேரும், யார் யார் எந்தெந்த இடத்தில் இருப்பது என்பதல்ல; யார் யார் எந்தெந்த நேரத்தில் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வது என்பதும் முக்கியமல்ல; ஒவ்வொருவரும் ஒவ்வொரு பொறுப்பை ஏற்றிருப்பது இந்த இயக்கத்திலே அமைந்திருக்கின்ற போர்ப் பாசறை போன்றதாகும். இதிலே பகைவர்கள் உள்ளே புக நினைத்தால், அவர்கள் எங்கள் நெருக்கத்தின் இடையில் சிக்கிக் கூழாகிப் போவார்கள். திராவிட முன்னேற்றக் கழகம், ஒவ்வொருவரும் ஒவ்வொரு இடத்திலிருந்து பணியாற்ற வேண்டுமென்பதற்கு ஏற்பட்டிருக்கிற ஓர் அமைப்பே தவிர, வேறு ஏற்றத்தாழ்வுகள், மனமாச்சர்யங்கள் எங்களுக்குள் இருக்கிறதென்று மாற்றார்கள் கருதினால், நாங்கள் வளர்ந்த வரலாற்றை அவர்கள் தெரிந்து கொண்டவர்கள் அல்ல என்றுதான் சொல்ல வேண்டும். நாங்கள் ஒரே இலையில் சாப்பிடக் கூடியவர்கள்; நாங்கள் ஒரு தாயின் வயிற்றில் பிறக்காததற்குக் காரணம், ஒரு தாயின் வயிறு இத்தனை பிள்ளைகளையும் தாங்காது என்பதுதான்!"

- என்று 26-9-1960 அன்று சென்னை கடற்கரையில் நடைபெற்ற கூட்டத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய உருக்கமிகு உரையினை நான் ஏற்கனவே ஞாபகப்படுத்தியிருக்கிறேன்.

தேர்தலிலே போட்டியிடுகின்ற, வெற்றி பெறுகின்ற, வெற்றி வாய்ப்பை இழக்கின்ற, அவர்களுக்கு வாக்களிக்கின்ற கழகத்தோழர்கள் ஒவ்வொருவரும் பேரறிஞர் அண்ணா அவர்களின் இந்த வார்த்தைகளை மறந்து விடக்கூடாது.

மாவட்டக் கழகச் செயலாளர்களுக்கான தேர்தல்கள் அறிவிக்கப்பட்டு, அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நேரத்தில், போட்டியிடுகின்றவர்கள் ஒன்றை நினைவிலே கொள்ள வேண்டும். அதாவது கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் நாம் மிகப் பெரிய தோல்வியை அடைந்தபோது,

அதற்குக் காரணமாகக் கூறப்பட்ட பலவற்றில் ஒன்று, மாவட்டக் கழகச் செயலாளர்களாக இருந்த ஒரு சிலர், அதிலும் அமைச்சர் பதவியிலே இருந்தவர்கள் நடந்துகொண்ட முறைதான் என்று ஏடுகள் சில எழுதின. ஏன், "குறுநில மன்னர்கள்" போல் மாவட்டக் கழகச் செயலாளர்கள் நடந்துகொண்டதுதான் காரணம் என்றே எழுதியிருந்தன. வேறு கட்சிகளில் என்றால், யார் யார் மீது குறை கூறப்பட்டதோ அவர்களையெல்லாம் எந்தவிதமான விசாரணையுமின்றி உடனடியாக நீக்கி அறிவிப்புச் செய்து விடலாம். ஆனால் தி.மு.கழகம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு போற்றக் கூடியதல்லவா? சர்வாதிகார முறையை அகற்றி, ஜனநாயகத்தைக் காப்பாற்றி வருவதல்லவா? எனவே இந்தத் தேர்தலை எப்படி நடத்துவது என்று நானும், பொதுச் செயலாளர் இனமானப் பேராசிரியரும், பொருளாளர் தம்பி மு.க. ஸ்டாலினும் பல முறை பேசியிருக்கிறோம். எதிர்காலத்தில் தி.மு. கழகத்தை எப்படி நடத்திச் செல்வது என்று விவாதித்திருக்கிறோம். கழகத்தை எப்படிக் கட்டிக் காப்பது, எப்படி வளர்ப்பது, என்ன செய்தால் கழகத்திற்கு வலிமை சேர்க்கும் என்ற நினைவுதான் இரவும் பகலும் என் சிந்தனையில்! கழகத்தின் செயல்பாட்டினை மேலும் செம்மையாக்க வேண்டுமானால், கழகம் ஏதோ சிலரிடம் மட்டும் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்ற ஒரு தவறான எண்ணம் ஒரு சிலரிடையே இருப்பதைப் போக்க வேண்டும்! கழகக் கட்டிடத்தை வலுவோடு தாங்கும் மாவட்டக் கழகச் செயலாளர்கள் என்ற தூண்களைக் கரையான் அரித்துவிடக் கூடாது என்றுதான் எண்ணினோம். அதற்காக என்ன செய்யலாம் என்று பல முறை கலந்து பேசினோம். தற்போதுள்ள 65 மாவட்டங்களில் புதிய மாவட்டங்கள் 31. அங்கே புதியவர்கள்தான் மாவட்டக் கழகச் செயலாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்படப் போகிறார்கள். மற்ற 34 மாவட்டங்களில் என்ன செய்யலாம் என்று யோசித்து அதற்காகவே மாவட்டக் கழகச் செயலாளர்கள் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் முடிந்த பிறகு, வேட்பு மனுத் தாக்கல் செய்தவர்களில் முன்னாள் அமைச்சர்கள், பல முறை மாவட்டக் கழகச் செயலாளர்களாகப் பணியாற்றியவர்கள் என்று பார்த்து, அப்படிப்பட்ட 18 பேரை நேரில் வரவழைத்து நானும், பொதுச்செயலாளர் இனமானப் பேராசிரியரும், பொருளாளர் தம்பி ஸ்டாலினும் நேரடியாகப்

பேசினோம். ஜனநாயக முறைப்படி நடைபெறும் மாவட்டக் கழகச் செயலாளர்கள் தேர்தலில், யாரையும் நிற்கக் கூடாது என்று தடுத்திடலாகாது என்ற வகையில், மாவட்டக் கழகச் செயலாளர்களாகப் போட்டியிட விரும்புவோர் ஒரு உறுதிமொழிப் பத்திரம் தர வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த உறுதிமொழிப் பத்திரத்தில்,

"மாவட்டக் கழகச் செயலாளர் பொறுப்புக்கு இந்தத் தேர்தலில் வேட்பு மனுத்தாக்கல் செய்கிறவர்கள், கட்டுப்பாட்டை ஏற்றுச் செயல்பட வேண்டுமென்பதற்காக, அவர்களிடத்தில் ஒரு உறுதிமொழிப் பத்திரம் பெற வேண்டுமென்று தீர்மானித்தபடி, இந்த உறுதிமொழி அந்த வேட்பாளர்களிடத்தில் வாங்கப்படுகிறது. இதில் கையொப்பமிட்டுத் தலைவரிடம் ஒப்படைப்பவர்கள் அடுத்து வரக்கூடிய சட்டமன்றத் தேர்தலிலோ, நாடாளுமன்றத் தேர்தலிலோ தாங்கள் கட்டாயம் போட்டியிட வேண்டுமென்றோ, தலைவர் நியமிக்கின்ற பதவிகளில் தங்களுக்கோ, தங்கள் குடும்பத்தாருக்கோ இடம் அளிக்க வேண்டுமென்றோ வேண்டுகோள் வைக்க மாட்டோம் என்று இதன் மூலம் உறுதி கூறுகிறோம்"

– என்று கூறப்பட்டுள்ளது.

இந்த உறுதிமொழிப் பத்திரத்திலே கையொப்பமிட்டுக் கொடுத்து விட்டுத்தான் இந்த 18 பேரும் மாவட்டக் கழகத் தேர்தலில் போட்டியிடுகிறார்கள். இவர்களை எதிர்த்துச் சில மாவட்டங்களில் வேறு சிலர் வேட்பு மனுத்தாக்கல் செய்திருக்கிறார்கள். ஒரு சிலரை எதிர்த்து வேறு யாரும் போட்டியிடவில்லை. ஆனால் கழகத்தைப் பொறுத்தவரையில் முன்பு அமைச்சர்களாக இருந்தவர்களையோ, மாவட்டக் கழகச் செயலாளர்களையோ மீண்டும் நிறுத்த வேண்டுமென்று எண்ணாமல், அவர்கள் போட்டியிட்டு வெற்றி பெறுவார்களா னால் மீண்டும் சட்டமன்ற உறுப்பினர் பதவிக்கோ, அமைச்சர் பதவிக்கோ வரவும் எண்ணக் கூடாது என்பதற்காகத்தான் அவர்களிடமிருந்து உறுதிமொழிப் பத்திரம் பெறப்பட்டுள்ளது.

மாவட்டக் கழகச் செயலாளர்கள் தேர்தல் 19-12-2014 அன்று தஞ்சை வடக்கு, தஞ்சை தெற்கு, திருச்சி வடக்கு, கடலூர் மேற்கு, கன்னியாகுமரி கிழக்கு ஆகிய ஐந்து மாவட்டங்களுக்கான தேர்தல், காலை 10 மணியளவில் அண்ணா அறிவாலயத்திலும், அன்றைக்கே மாலை 3 மணி அளவில் அண்ணா அறிவால யத்தில் நாகை வடக்கு, நாகை தெற்கு, கோவை வடக்கு, கோவை தெற்கு, கன்னியாகுமரி மேற்கு மாவட்டங்களுக்கான தேர்தலும், அன்றைக்கே மாலை 3 மணி அளவில் ராயபுரம் அறிவகத்தில் புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு, மதுரை தெற்கு ஆகிய மாவட்டங்களுக்கும், 21-12-2014 அன்று காலை 10 மணியளவில் அண்ணா அறிவாலயத்தில், திருவாரூர், கரூர், தேனி, தர்மபுரி ஆகிய மாவட்டங்களுக்கும், அன்றைக்கு மாலை 3 மணியளவில், அண்ணா அறிவாலயத்திலேயே நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, கோவை மாநகர் வடக்கு, கோவை மாநகர் தெற்கு ஆகிய மாவட்டங்களுக்கும், 22-12-2014 அன்று காலை 10 மணியளவில், அண்ணா அறிவாலயத்தில், திருவண்ணாமலை வடக்கு, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு, திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு ஆகிய மாவட்டங்களுக்கும், அன்றைக்கே மாலை 3 மணியளவில், அண்ணா அறிவாலயத்தில், இராமநாதபுரம், திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மேற்கு, திருநெல்வேலி (மத்திய) ஆகிய மாவட்டங்களுக்கும் தேர்தல்கள் நடைபெறவுள்ளன. இந்தத் தேர்தல்களில் எந்தவிதமான ஜனநாயக விரோதச் செயல்களுக்கும் இடம் தராமல், வரும் ஐந்தாண்டு காலத்திற்குக் குறிப்பிட்ட மாவட்டங்களில் கழகப் பணியினை யார் தலைமையிலே ஆற்றுவது என்பதற்காகத்தான் நடைபெறுகிறது என்பதை மனதிலே கொண்டு நடக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

வெற்றி பெறுகிறவர்கள், தாங்கள் ஏதோ யாரையோ தோற்கடித்து விட்டோம் என்ற எண்ணம் கொள்ளாமல், வெற்றி வாய்ப்பினை இழந்தவர்களும், கழக உடன்பிறப்புதான், நாளை அவரோடு இணைந்துதான் நம்முடைய பொது எதிரியைச் சட்டமன்றத் தேர்தல்களில், நாடாளுமன்றத் தேர்தல்களில் சந்திக்க வேண்டுமென்ற மனப்பான்மையோடு ஒருவருக்கொருவர் கை குலுக்கிக் கொண்டு எங்களைச் சந்திக்க வர வேண்டுமே தவிர,

"என்னை எதிர்த்தா போட்டியிட்டாய்? உன்னை இருக்குமிடம் தெரியாமல் ஆக்கி விடுகிறேன் பார்!" என்றெல்லாம் மமதை கொள்ளாமல், அண்ணா கற்பித்துள்ள அன்பு வழியில், அறவழியில், அமைதி வழியில் நடந்துகொள்ள வேண்டும். வெற்றி வாய்ப்பை இழந்த உடன்பிறப்புகளும் மேலும் மேலும் தொடர்ந்து வெற்றி பெற்றவர்களோடு இணைந்து பணியாற்றி, உழைப்பினால் கழகத் தோழர்களின் உள்ளங்களில் குடியேறி, அடுத்த தேர்தலில் வெற்றி பெறப் பாடுபட வேண்டுமே தவிர, "என்னை எதிர்த்து வெற்றி பெற்று விட்டாயா, பார்க்கிறேன் ஒரு கை" என்று எண்ணுவது நல்லதல்ல.

கல்லூரிகளில் கயிறு இழுக்கும் போட்டிகளில் மாணவர்கள் இரண்டு மூன்று அணிகளாகப் பிரிந்து ஈடுபட்டாலுங்கூட, அதிலே ஏற்படுகின்ற வெற்றி - தோல்விகளால் உள்ளம் பாதிக்கப்படுவதில்லை. வெறும் விளையாட்டு உணர்வேதான் வெளிப்படும் என்பதைப் பார்த்திருக்கிறோம் அல்லவா? அதைப் போலவே, நாமனைவரும் சேர்ந்து, நமது கழகத்தின் ஜனநாயக அமைப்புத் தேர்தலுக்காக பகுதி பகுதியாகப் பிரிந்து - அப்படிப் பிரிவதிலே மனமாச்சர்யமோ, பகை உணர்வோ இல்லாமல் வெறும் போட்டி உணர்வும் - எல்லோரும் சேர்ந்து இந்த இயக்கத்தின் கொள்கைகளை எப்படிக் காப்பாற்றுவது, எப்படி வளர்ப்பது என்ற அந்த ஒரே நோக்கத்தோடு ஈடுபடுகின்ற அந்த உணர்வு தான் நம்முடைய இயக்கத்தின் உள்கட்சித் தேர்தல்களிலும் வெளிப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய தணியாத ஆசையாகும்.

அண்ணா இருந்தபோது அவருடைய நோக்கத்தை எப்படி நாம் நிறைவேற்றியிருக்கிறோமோ, அதைப் போல இன்றும் அண்ணா இருக்கிறார்; உயிரோடுதான் இருக்கிறார்; அணுப்பொழுதும் நம்மை விட்டு அகலாமல் நமது இதய உணர்வோடு ஒன்றிக் கலந்திருக்கிறார்; அவரை என்றைக்கும் நாம் மறப்பதில்லை; மறக்கவும் மாட்டோம் என்பதற்கு அடையாளமாகத்தான் இந்தத் தேர்தலில் கழகத்தினர் பெறுகின்ற வெற்றி தோல்விகளைப் பொறுத்து; இயக்கத்தின் தொடக்கக் காலத்திலிருந்து நாம் ஏற்றுக் கொண்டுள்ள "அண்ணா வழியில் அயராது உழைப்போம்; ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைத்தே தீருவோம்; இந்தித்

திணிப்பை என்றும் எதிர்ப்போம்; வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம்; மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி" என்ற இந்த ஐம்பெரும் முழக்கங்கள் நம்முடைய நெஞ்சத்தில் என்றென்றும் ஒலித்துக் கொண்டிருக்க - கடமை உணர்வுக்கும், கண்ணிய நடவடிக்கைகளுக்கும், அண்ணா வழியை நெஞ்சாரப் பின்பற்றி, எல்லாவற்றுக்கும் மேலாகக் கட்டுப்பாடு குலையாமல் காக்கின்ற, பெரும் பணியில் நம்மையெல்லாம் ஆளாக்கிய தந்தை பெரியாரின் வழியை மறவாமல் பாதுகாத்தும், நமது இயக்கத்தையும் பாதுகாத்து, நம்முடைய எதிர்கால திராவிட சந்ததியினரையும், தன்மான உணர்வோடு, தலை சிறந்து வாழ்ந்திட வழி வகுத்தும், நடைபோடுவதற்கு ஜனநாயக வழியில் நாம் மேற்கொண்டுள்ள இந்தப் பணி மேலும் மேலும் சிறந்தோங்க தொய்வின்றித் தொடர்ந்து நடைபோட இந்த 14வது கழகப் பொதுத் தேர்தலும் பயன்படுமாக!

அன்புள்ள,

மு.க.

17-12-2014

3947. என்றும் வாழும் இந்தக் கழகம்!

உடன்பிறப்பே,

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 14வது பொதுத் தேர்தல் ஜனநாயக அடிப்படையில் படிப்படியாக முறையாக நடைபெற்று, புதியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பொதுக் குழு உறுப்பினர் களின் கூட்டம் வரும் 9-1-2015 அன்று வெள்ளிக் கிழமை காலை 9 மணியளவில் சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கத்தில் நடைபெறவுள்ளது. அன்றையதினம் தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர் ஆகியோர்களுக்கான தேர்தலும் மற்றும் தணிக்கைக் குழு உறுப்பினர்களுக்கான தேர்தலும் நடைபெறவுள்ளது.

கழகத்தின் 13வது பொதுத்தேர்தலில், 35 மாவட்டக் கழகங்களாக இருந்த நிலையை 3-2-2012 அன்று நடைபெற்ற பொதுக் குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, 2-6-2014 அன்று நடைபெற்ற உயர்நிலைச் செயல்திட்டக் குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட கழக நிர்வாகச் சீர்திருத்தக் குழு பரிந்துரை செய்ததின்பேரில், கழக நிர்வாக அமைப்பில் தற்போது 65 மாவட்டக் கழகங்களாகப் பிரிக்கப்பட்டு, அந்த 65 மாவட்டங்களில் சேலம், ஈரோடு மாவட்டங்கள் நீங்கலாக மற்ற 60 மாவட்டங்களுக்கும், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், ஊராட்சி உள்ளிட்ட வட்டக் கழகத் தேர்தல்கள் படிப்படியாக நடைபெற்று முடிந்து தற்போது தலைமைக் கழகத்திற்கான தேர்தல்கள் நடைபெறவுள்ளன.

நடைபெற்று முடிந்த இந்த 14வது பொதுத் தேர்தலில் பங்கேற்ற கழக உறுப்பினர்களின் எண்ணிக்கை சுமார் 85 இலட்சம் ஆகும். ஏற்கனவே கிளைக் கழகங்களின் மேல் அமைப்பாக ஒன்றியக் கழகங்கள் செயல்பட்டு வந்த நிலையில், தற்போது நடைபெற்று முடிந்த இந்த 14வது பொதுத் தேர்தலில், இந்த

அமைப்புகளுக்கிடையே நிர்வாகத் தொடர்பு வசதிகளுக்காகப் புதிய அமைப்பாக 12,514 "ஊராட்சிக் கழகங்கள்" அறிவிக்கப்பட்டு, அதிலே உள்ள ஒரு லட்சத்து 12 ஆயிரத்து 247 வார்டு கிளைகளுக்குத் தேர்தல்கள் நடைபெற்று முடிந்துள்ளன.

இந்தத் தேர்தலில் முதற்கட்டமாக ஊராட்சிக் கழகத் தேர்தல்களுக்கான வேட்புமனுக்கள் நான்கு கட்டமாகப் பெறப்பட்டு, போட்டியிருந்த ஊராட்சிகளுக்கான ஊராட்சிக் கழகத் தேர்தல்கள் ஐந்து கட்டங்களாக நடைபெற்றன. அதில் முதல் கட்டம் 2014 ஜனவரி 26, 27 ஆகிய தேதிகளிலும், இரண்டாவது கட்டம் 2014 ஆகஸ்ட் 12, 13 ஆகிய தேதிகளிலும், மூன்றாவது கட்டம் 2014 ஆகஸ்ட் 18 அன்றும், நான்காவது கட்டம் 2014 ஆகஸ்ட் 26 அன்றும் ஐந்தாவது கட்டம் 2014 செப்டம்பர் 5 அன்றும் நடைபெற்றுள்ளன. அதுபோலவே பேரூர்க் கழகத் தேர்தல் ஐந்து கட்டங்களாகவும், ஒன்றிய, நகரக் கழகத் தேர்தல்கள் எட்டு கட்டங்களாகவும் நடைபெற்று முடிந்துள்ளன.

இந்தத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் உள்கட்சிக் குழப்பம் ஏற்படும், பிரச்சினைகள் உண்டாகும், ஒருவருக்கொருவர் முட்டி மோதிக்கொள்வார்கள், அதை ஊதிப் பெரிதாக்கி, அதிலே குளிர்காயலாம் என்று எதிர்க் கட்சிக்காரர்கள் சிலரும், ஒரு சில இதழாளர்களும் பகல்கனவு கண்டு கற்பனை உலகிலே களிப்போடு சஞ்சரித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் கண்ட கனவு நொறுங்கிப் போனது. ஆங்கிலப் புத்தாண்டு தினத்தையொட்டி என்னைச் சந்திக்க வந்தவர்களின் படங்கள் சில ஏடுகளிலே வந்துள்ளன. அதிலே "மாலைமலர்" நாளேட்டிலே ஒரு படம் வந்துள்ளது. அந்தப் படத்தில், என்னைச் சந்தித்து வாழ்த்த வந்த சென்னைக் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தம்பி சேகர்பாபுவும், அவருக்குப் பக்கத்தில் அவரைக் கடுமையாக எதிர்த்து அந்த மாவட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் பொறுப்புக்கு நிற்க விரும்பிய தம்பி ரெங்கநாதனும் ஒன்றுபட்டு மகிழ்ச்சியோடு நின்று கொண்டிருப்பதைக் கண்டிருக்கலாம். ஆம், இருவரும் சில நாள்களுக்கு முன்பு மாவட்டக் கழகச் செயலாளராக யார் வருவது என்பதற்காகக் கடுமையாகப் போட்டியிட்டவர்கள். ஆனால் பேச்சுவார்த்தையில், ரெங்கநாதன் மனமுவந்து விட்டுக் கொடுத்து, சேகர்பாபு தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு இருவரும்

சேர்ந்து ஒன்றாக என்னைச் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தபோது நான் பெரிதும் மகிழ்ந்தேன். இந்த ஒரு மாவட்டத்தில் மட்டும் நடைபெறும் நிகழ்ச்சியாக இது இருந்துவிடக் கூடாது. தமிழகம் முழுவதுமுள்ள அனைத்து மாவட்டங்களில், போட்டியிட்டு வெற்றி பெற்றவர்கள், வெற்றி வாய்ப்பினை இழந்தவர்கள், முதலில் போட்டியிட நினைத்துப் பின்னர் வாய்ப்பினை விட்டுக் கொடுத்தவர்கள் என்று அனைவரும் உணர்வுபூர்வமாக ஒன்றாக இணைந்து 2016இல் வரவுள்ள சட்டப்பேரவைக்கான பொதுத் தேர்தலில் நம்மை எதிர்ப்பவர்களைத் தோற்கடிப்பதற்குரிய உறுதியான முயற்சியிலே ஈடுபடுவதுதான், நான் பெரிதும் மகிழ்ச்சியுடன் எதிர்பார்த்திருக்கும் செய்தியாகும். இது ஏதோ, தனிப்பட்ட எனக்காகத் தெரிவிக்கப்படும் விருப்பமல்ல. நமது கழகத்திற்கு மேலும் தொடர்ந்து ஆக்கமும், ஊக்கமும் ஊட்டி, வியத்தகு முறையில் வளர்ப்பதற்கு அதுதான் சரியான வழியாகும்.

மாவட்டக் கழகச் செயலாளர்களுக்கான தேர்தல்கள் அனைத்தும் 25-12-2014 முதல் 30-12-2014 ஆகிய ஆறு நாட்களில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்திலும் - இராயபுரம் அறிவகத்திலும் நடத்தி முடிக்கப்பட்டன. மாவட்டக் கழகத் தேர்தல்களைத் தலைமைக் கழகப் பிரதிநிதிகளாக எல். பலராமன், ஜி. செல்வராஜ், ஆ.த. சதாசிவம், வழக்கறிஞர்கள் இரா.கிரிராஜன், கே.எஸ். ரவிச் சந்திரன், இ. பரந்தாமன் ஆகியோரும், இவர்களுடன் சென்னை மாநகர் போக்குவரத்துக் கழக தொ.மு.ச. நிர்வாகிகள் 25 பேரும் இணைந்து நடத்தியிருக்கிறார்கள். ஒரு சில மாவட்டங்களில் மாவட்டக் கழகச் செயலாளர்கள் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் 60 மாவட்டங்களில், மாவட்டக் கழகச் செயலாளர்கள் தேர்தல்கள் நடைபெற்று முடிந்துள்ளதில், மாவட்டக் கழகச் செயலாளர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பவர்களில் 38 பேர் புதுமுகங்கள், அதாவது 63 சதவிகிதம் பேர் மாவட்டக் கழகச் செயலாளர் களாகப் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். எஞ்சிய 22 மாவட்டங்களில்தான் முன்னாள் அமைச்சர்களோ அல்லது முன்னாள் மாவட்டக் கழகச் செயலாளர்களாக இருந்தவர்களோ தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள். அதிலும் முன்னாள் அமைச் சர்கள் என்று பார்த்தால் 10 பேர் மட்டுமே இந்த 60 மாவட்டங்களில் முன்னாள் அமைச்சர்களாவர். அதாவது 17 சதவிகிதம் பேர்

முன்னாள் அமைச்சர்கள். 12 பேர் கடந்த முறை மாவட்டக் கழகச் செயலாளர்களாக இருந்தவர்கள்.

உடன்பிறப்பே, கழகத்தின் 14வது பொதுத் தேர்தல் பற்றிக் கடந்த சில மாதங்களாக நாடும், ஏடும் முறையே நமது கழகத் தேர்தல் பற்றிய செய்திகளை அறியவும், வெளியிடவும் - விபரம் தெரிந்துகொள்ளவும் வாய்ப்புப் பெற்றுள்ளன என்றால், அதற்குக் காரணம் கடந்த 65 ஆண்டுக் காலமாக முறைப்படி 13 பொதுத் தேர்தல்களை நடத்திவிட்டு, தற்போது 14வது பொதுத் தேர்தலை நடத்திக் கொண்டிருக்கிறோம் என்பதுதான். உட்கட்சி ஜனநாயகத்தை உளமாரப் போற்றிக் காப்பாற்றி நாம் கடைப்பிடித்து வருகிறோம் என்பதில் ஒவ்வொரு கழக உடன்பிறப்பும் அடைந்திடும் உள்ள மகிழ்ச்சிக்குத்தான் அளவேது?

1970ஆம் ஆண்டுகளில் தஞ்சை மாவட்டம் ஒன்றுபட்ட ஒரே மாவட்டமாக இருந்தபோது, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் சிலர் மாவட்டக் கழகச் செயலாளராக வரவேண்டுமென்பதற்காக, என்னுடைய சொந்த மாவட்டத்தில் அவ்வாறு வரவேண்டுமென்று விரும்பி, தம்பி தாழை மு. கருணாநிதியை மாவட்டக் கழகச் செயலாளராகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்க நான் எடுத்துக்கொண்ட முயற்சியும் - அதில் பெற்ற வெற்றியும் அனைவரும் அறிந்ததேயாகும். அடுத்தடுத்துத் திருத்தப்பட்ட நமது கழகச் சட்டதிட்டப் புத்தகத்தில் ஊராட்சிக் கழகம் தொடங்கித் தலைமைக் கழகம் வரையில் பொறுப்புகளுக்கு நடைபெறும் தேர்தலில் ஒவ்வொரு அமைப்பிலும் மூன்று பேர் துணைச் செயலாளர்களாகத் தேர்வு செய்யப்பட வேண்டுமென்றும் அவர்களில் கட்டாயமாக ஒருவர் ஆதிதிராவிடர் அல்லது மலைவாழ் வகுப்பினராகவும், ஒருவர் பெண்மணியாகவும், ஒருவர் பொதுத் தொகுதியினராகவும் இருக்க வேண்டுமென்றும் குறிக்கப் பெற்று இந்தத் திருத்தம் நடைமுறையில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. எனவே, கழகத்தின் சட்டதிட்டப்படியுள்ள எந்தவொரு அமைப்பிலும் ஆதி திராவிடர்க்கும், மகளிர்க்கும் கட்டாயம் இடம் உண்டு. இந்தமுறை மாவட்டக்கழகச் செயலாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் இருவர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் பொறுப்புக்கு வந்திருக்கிறார்கள். அதுபோலவே மூன்று நான்கு மகளிராவது மாவட்டக்கழகச் செயலாளர்களாக வரவேண்டுமென்று நான் எண்ணிய போதிலும்,

ஒரே ஒரு பெண்மணி மட்டுமே இந்த முறை மாவட்டக் கழகச் செயலாளராக வந்துள்ளார்.

சாதி மதங்களை வைத்து, அந்த அடிப்படையிலே நடைபெறுவதல்ல நம்முடைய இயக்கம். ஆனால் முக்கியப் பொறுப்பான மாவட்டக் கழகச் செயலாளர்களாக வந்திருப்பவர்கள் எந்தெந்த வகுப்புகளைச் சார்ந்தவர்கள் என்று பார்த்தால் முக்குலத்தோர் 14 பேரும், கொங்குவேளாளர் 8 பேரும், வன்னியர் 8 பேரும், நாயுடு 6 பேரும், இஸ்லாமியர்கள் 4 பேரும், முதலியார் 3 பேரும், உடையார், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பிள்ளைமார், மீனவர், ரெட்டியார் வகுப்பைச் சேர்ந்தவர்கள் தலா 2 பேர்களும், செட்டியார், யாதவர், நாடார், நாடார் கிறித்தவர், கவுடா, முடிதிருத்துவோர், முத்தரையர் ஆகிய வகுப்புகளைச் சேர்ந்தவர்கள் தலா ஒருவரும் இடம்பெற்றுள்ளார்கள். எந்தெந்த வகுப்பினைச் சேர்ந்தவர்கள் என்பதைப் பற்றி நாம் எப்போதும் பார்த்ததில்லை என்ற போதிலும், ஒரு சில நாளேடுகள் இந்த வகுப்பாருக்கு இடம் இல்லை, அந்த வகுப்பாருக்கு வாய்ப்புத் தரப்படவில்லை என்றெல்லாம் தவறான செய்திகளை வெளியிட்டதால், தகவலுக்காக இந்த உண்மை விவரங்களை நான் குறிப்பிட்டுள்ளேன்.

போட்டியிட்டுத் தேர்வு பெற்று; மாவட்டக் கழக - மாநகரக் கழக - ஒன்றியக் கழக - நகரக் கழக - பகுதிக் கழக - பேரூர்க் கழக - ஊராட்சிக் கிளை -ஊர்க்கிளை - உட்கிளைக் கழகச் செயலாளர்களாகப் பொறுப்பேற்றுள்ளவர்கள், போட்டியிட்டோ - போட்டியில்லாமலோ பொறுப்பேற்க இருப்பவர்கள் அனைவரையும் தலைமைக் கழகத்தின் சார்பில் மனதாரப் பாராட்டி வாழ்த்துகிறேன். வருகின்ற 9ஆம் தேதி நடைபெறும் பொதுக் குழுவில் நேரில் சந்தித்து வாழ்த்துகின்ற வாய்ப்பையும் பெறுவேன்.

கழகத்தின் இந்த 14வது பொதுத்தேர்தல் நடைபெற்றுள்ள இரண்டாண்டு காலத்தில் அமைப்புகளுக்கான தேர்தல்களத்தில் நின்ற அருமை உடன்பிறப்புக்கள் ஆயிரக்கணக்கானவர்கள் என் முன்வைத்த பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கும் சந்தர்ப்பங்கள் பலவற்றை நானும், பொதுச் செயலாளர் இனமானப் பேராசிரியர் அவர்களும், பொருளாளர் தம்பி மு.க. ஸ்டாலினும், கழக அமைப்புச் செயலாளர்கள் தம்பிகள் டி.கே.எஸ். இளங்கோவன், ஆர்.எஸ். பாரதி ஆகியோரும், தலைமைக் கழகத்தில் மேலாளராகப்

பணியாற்றும் பத்மநாபன், ஜெயக்குமார் மற்றும் அலுவலாளர் களும் பெற்றிருந்தது உற்சாகமூட்டக் கூடியதாகவே இருந்தன.

கோரிக்கையுடன் எங்களிடம் வந்தார்களே, அவர்களுக்கிடையேதான் என்ன பிரச்சினை? கழகப் பணியினை யார் நிறைவேற்றுவது என்பதிலேதான் போட்டி - ஆளுங்கட்சியின் அடக்கு முறைகளைத் தாங்கிக் கொள்வதிலே யார் முந்தி என்பதிலேதான் போட்டி - நம்முடைய இயக்கம் நாளும் வளரும் ஒரு இயக்கம் - வளர்ந்து பக்குவப்பட்டுவிட்ட ஒரு இயக்கம் - மாபெரும் வரலாறு படைத்திட்ட ஒரு இயக்கம் - மேலும் மேலும் வளர்ந்து வருகின்ற ஒரு இயக்கம் - இதிலே வரவேற்கத்தக்க போட்டிகள்தான் இருந்தன. அதனால்தான் இந்தப் போட்டியிலே வென்றவர்களை; நான் வென்றவர்கள் என்று சொல்லாமல், தேர்வு செய்யப்பட்டவர்கள் என்றே சொல்லி, போட்டியின்றிப் பொறுப்பேற்றுள்ளவர்களையும் - போட்டியிட்டுப் பொறுப்பேற்றிருப்பவர்களையும் - போட்டியிட்டும் பொறுப்பேற்க இயலாமற் போனவர்களையும்; பெற்றோர்க்கு எல்லாப் பிள்ளைகளும் தங்கள் பிள்ளைகள்தான் என்ற பாகுபாடற்ற உணர்வும் பாசமும் இருப்பது போல்; கழகத்தின் எல்லா உடன்பிறப்புகளும் என் உயிரினும் மேலான உடன்பிறப்புகள்தான் எனக் கூறி, வாரி அணைத்து, உளமார வரவேற்கிறேன், வாழ்த்துக் கூறுகிறேன். என்றும் வாழும் இந்தக் கழகம்!

இத்துடன் நமது பணி முடிவடைந்துவிட வில்லை. கழகத்தின் பொதுக் குழு வருகின்ற 9ஆம் தேதி சென்னையிலே நடைபெறவுள்ளது. அந்தப் பொதுக் குழுவிலேதான் அடுத்த ஐந்தாண்டுகளுக்கு கழகத்தைத் தலைமையேற்று நடத்த வேண்டிய கழகத் தலைவர் யார், கழகப் பொதுச் செயலாளர் யார், கழகப் பொருளாளர் யார் என்பதைத் தீர்மானிக்கும் தேர்தல் நடைபெறவுள்ளது. பல்வேறு மட்டங்களில் உள்ள கழகத்தினரின் வாக்குகளைக் கேட்டுப் பெற்று, பொதுக் குழு உறுப்பினர்களாக, செயற்குழு உறுப்பினர்களாக, ஒன்றியக் கழக, நகரக் கழக, மாவட்டக் கழகச் செயலாளர்களாகப் பொறுப்புக்கு வந்துள்ள நீங்கள் எல்லாம் கழகத்தின் தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர் பதவிகளுக்கு வாக்களிக்க உள்ளீர்கள். கழகத்தின் வரவு செலவுக் கணக்குகளை அடுத்த ஐந்தாண்டுகளுக்கு ஆய்வு செய்ய வேண்டிய தணிக்கைக் குழு உறுப்பினர்களையும்

இந்தப் பொதுக் குழுவிலே தேர்ந்தெடுக்க வேண்டும். மேலும் அடுத்து நாம் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்துச் சில தீர்மானங்களையும் பொதுக்குழுவிலே வடித்தெடுக்க வேண்டியுள்ளது. இதற்கெல்லாம் தயாராகக் கழகப் பொதுக் குழு உறுப்பினர்கள், செயற்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் அனைவரையும் பொதுக் குழுவுக்கு வருகை தந்து சிறப்பிக்க வேண்டுமென்ற என்னுடைய அன்பழைப்பினைத் தெரிவித்து, உங்களையெல்லாம் அங்கே நேரில் சந்திக்க விருக்கிறேன் என்ற பெருமகிழ்ச்சியினையும் அறிவித்து, அதற்காகக் காத்திருக்கிறேன் என்று கூறி இந்தக் கடிதத்தை நிறைவு செய்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

3-1-2015

3948. வெட்கமில்லை; வெட்கமில்லை; யாருக்கும் வெட்கமில்லை!

உடன்பிறப்பே,

தமிழக அரசின் நிதி நிலைமை பற்றிப் பல்வேறு செய்திகள் தொடர்ந்து வந்து கொண்டுள்ளன. நாளேடுகளிலும், வார இதழ்களிலும் அதைப் பற்றி விரிவாக எழுதியிருக்கிறார்கள். இருந்தாலும் ஆட்சியினரிடமிருந்து எந்தவிதமான விளக்கமோ பதிலோ இதுவரை வரவில்லை. குறிப்பாக ஆங்கில நாளிதழ், "இந்து", 31-12-2014 அன்று "T.N. facing financial crunch - CM admits to Limited Sources of Revenue" என்ற தலைப்பில் ஒரு செய்திக் கட்டுரையே வெளியிட்டிருந்தது. நாளிதழ்கள் வெளியிடுவதை விட, தமிழக முதலமைச்சர் இந்தியப் பிரதமருக்குக் கடந்த மாதம் எழுதிய கடிதம் ஒன்றில், "தமிழ்நாடு ஏற்கனவே கடும் நிதி நெருக்கடியில் சிக்கியுள்ளது; தமிழக அரசுக்குக் குறிப்பிட்ட வருவாய் ஆதாரங்கள் மட்டுமே உள்ளதைக் கருத்தில்கொண்டு பார்க்கும்போது, கூடுதலாக எந்தவொரு நிதிச் சுமையையும் தமிழக அரசு ஏற்றுக்கொள்வது என்பது மிகக் கடினமானதாகும்" என்றெல்லாம் தெரிவித்திருக்கிறார்.

"இந்து" வெளியிட்டுள்ள செய்தியில், "It's Official and out in the open. The State Government's financial health is quite bad. It was revealed in an innocuous statement by Chief Minister, O. Panner selvam" அதாவது "அது அலுவல் சம்மந்தப்பட்டது; ஆனாலும் வெளியே வந்து விட்டது. மாநில அரசின் நிதி நிலைமை மிக மோசமாக உள்ளது. முதல் அமைச்சர் பன்னீர் செல்வத்தின் அறிக்கையிலேயே இது கூறப்பட்டுள்ளது" என்று எழுதப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டின் துவக்கத்தில் (2014-2015) தமிழ்நாடு அரசு ரூ. 289 கோடி கூடுதல் வருவாய் பெற்று விளங்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. 13-2-2014 அன்று இன்றைய முதலமைச்சரும், அன்றைய நிதியமைச்சருமான ஓ.பன்னீர்செல்வம் பேரவையில் படித்த நிதிநிலை அறிக்கையில்

பக்கம் 68இல்,"2014-2015ஆம் ஆண்டில் வருவாய் உபரி 289.36 கோடி ரூபாயாக இருக்கும்" என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் அவருடைய இந்தக் கணிப்பு தவறாகி விட்டது. இந்த நிதியாண்டின் முதல் ஆறு மாத நிறைவில், தமிழ்நாடு அரசின் வருவாய்ப் பற்றாக்குறை 7,652 கோடி ரூபாயாக இருப்பதாக "இந்து" பத்திரிகையே தெரிவித்துள்ளது. அரசின் வரி வருவாய், மொத்த வருவாயில் மூன்றில் இரண்டு பங்கிற்கும் அதிகமாக இருப்பது வழக்கம். ஆனால் எதிர்பார்த்த அளவுக்கு வருவாய் வரவில்லை என்பது 2014ஆம் ஆண்டின் ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான அரசின் செயல்பாடுகளைப் பார்க்கும்போது தெரிய வந்துள்ளது. 91 ஆயிரத்து 835 கோடி ரூபாய் மாநில அரசின் சொந்த வரி வருவாயாகக் கிடைக்க வேண்டுமென்று மதிப்பிடப்பட்டதற்கு மாறாக, 37 ஆயிரத்து 56 கோடி ரூபாய் மட்டுமே இந்தக் காலக் கட்டத்தில் கிடைத்துள்ளது. மாநில அரசின் வரி வருவாயில் உள்ள பல்வேறு இனங்களின் புள்ளிவிவரங்களைப் பார்க்கும்போது, எந்தத் துறையும் ஒன்றுமே எதிர்பார்த்த அளவுக்கு வருவாயை ஈட்டவில்லை என்பதை அறியலாம். எதிர்பார்க்கப்பட்ட மாநில அரசின் வருவாய் 20.3 சதவிகிதமென்றால், வந்திருப்பது 14.6 சதவிகிதம்தான்; மத்திய வரி மற்றும் மத்திய அரசின் ஒதுக்கீடு மூலமாக 49 சதவிகித வருவாய் கிடைக்குமென்று எதிர்பார்த்ததற்கு மாறாக, 37.68 சதவிகிதம் தான் வரவு வந்துள்ளது. வர்த்தக வரி மூலமாக 23.35 சதவிகிதம் எதிர்பார்க்கப்பட்டது; ஆனால் வந்திருப்பதோ 1.48 சதவிகிதம்தான். மாநில எக்சைஸ் மூலமாக 28.75 சதவிகிதம் எதிர்பார்க்கப்பட்டது; வந்ததோ 10.87 சதவிகிதம்தான். பத்திரப் பதிவுத்துறை மற்றும் ஸ்டாம்ப் பேப்பர் மூலம் 26.89 சதவிகிதம் கிடைக்குமென்று திட்டமிட்டிருந்த நிலையில், - 2.49 சதவிகித அளவுக்கும், வாகன வரியைப் பொறுத்தவரையில் 39.71 சதவிகிதம் கிடைக்கும் என்று எதிர்பார்த்த நிலையில் வெறும் 2.73 சதவிகித அளவுக்கும்தான் கிடைக்குமென்று "இந்து" நாளிதழ் விரிவாக எழுதியுள்ளது.

மூத்த அதிகாரி ஒருவரே, "உள்நாட்டுப் பொருள்கள் மீதான தீர்வை மற்றும் பதிவுத் துறை ஆகியவற்றின் செயல்பாடுகள் திருப்திகரமாக இல்லை" என்று ஒப்புக்கொண்டிருக்கிறார் ("The performance in respect of excise and registration is disappointing" acknowledges a senior official) என்பதை விளக்கிடும் "இந்து" நாளேடு, அந்தக் கட்டுரையை முடிக்கும்போது, "The early signs

of the declining financial health were visible even during the previous year (2013-2014) when the State registered a revenue deficit of about Rs. 1,790 crore, as per supplementary accounts. The revenue deficit came after two successive years of revenue surplus" (சென்ற ஆண்டே, அதாவது 2013-2014 நிதியாண்டிலேயே 1,790 கோடி ரூபாய் அளவுக்கு மாநிலத்தில் வருவாய்ப் பற்றாக்குறை ஏற்பட்ட போதே தமிழக நிதிநிலை மோசமாகிக் கொண்டு வருவதற்கான அறிகுறிகள் வெளிப்படையாகத் தெரிந்தன. இரண்டாண்டுகள் தொடர்ந்து வருவாய் உபரி ஏற்பட்டதற்குப் பிறகு, வருவாய்ப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது) என்று தமிழக அரசின் நிதி நிலையைத் தோலுரித்துக் காட்டியிருக்கின்றது.

இன்னும் சொல்லப்போனால் இந்த வார இதழ் "ஜூனியர் விகடனில்" "நிதி நெருக்கடியில் தமிழக அரசு" என்ற தலைப்பில் செய்தியாளர் எஸ்.ஏ.எம். பரக்கத் அலி விளக்கக் கட்டுரை ஒன்றினைத் தீட்டியிருக்கிறார். அதில், "எந்த இலக்கையும் எட்ட முடியாமல் நிதித் துறை தடுமாறி வருகிறது. டாஸ்மாக் வருவாயை உயர்த்துவதில்தான் அரசு அதிக அக்கறை எடுத்துக்கொண்டது. அந்த அளவுக்கு நிர்வாகத் திறமையை மற்ற துறைகளிலும் காட்டியிருந்தால், மொத்த வருவாய் அதிகரித்திருக்கும். அரசின் மெத்தனம்தான் இதற்குக் காரணம். அடுத்த நிதியாண்டுக்கான பட்ஜெட் அடுத்த மாதம் வெளியிடப்படும். அப்போது வரி வருவாய் பதினெட்டாயிரம் கோடி ரூபாய் குறைவாகக் கிடைக்கும். அதைச் சமாளிக்க கடன் வாங்குவதைத் தவிர அரசுக்கு வேறு வழியில்லை. ஏற்கனவே ஒரு லட்சத்து 80 ஆயிரம் கோடி ரூபாய் கடனில் தமிழக அரசு தத்தளித்துக் கொண்டிருக்கிறது. இதனால் மாநிலத்தின் மொத்த வளர்ச்சியும் பாதிக்கப்படும். பழைய வரி பாக்கிகளை வசூலிக்கவும், வரி ஏய்ப்பைத் தடுக்கவும் அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. தமிழக அரசின் கடன் தவிர மின்வாரியத்தின் கடன் ஒன்றரை இலட்சம் கோடி ரூபாய் இருக்கிறது. பொதுத் துறை நிறுவனங்களின் கடனையும் சேர்த்தால் தமிழகத்தின் மொத்தக் கடன் சுமை நான்கு இலட்சம் கோடி ரூபாயைத் தாண்டும்" என்று நிதித் துறை வட்டாரம் தெரிவித்ததாக விரிவாக எழுதியிருக்கின்றது. மேலும் அந்த இதழின் செய்தியாளரிடம், "தமிழர் குல சாமியே! தன்மானச் சிங்கமே! ஸ்ரீரங்கத்தின் கீதையே! மூன்றெழுத்து மந்திரமே! தியாகமே! மாதரசியே! எனச் சட்டசபையில் பேசுவதற்காகத் தமிழ்ப் புலவரைத்

தேடிப் பிடித்துப் பக்கத்தில் வைத்துக்கொள்ளும் ஓ. பன்னீர் செல்வம், அரசின் நிதிநிலை பற்றியும் கொஞ்சம் கவலைப்பட வேண்டும்" என்று நிதித் துறை அதிகாரிகள் கூறினார்களாம். அந்தக் கட்டுரையின் முடிவில், "தலைமைச் செயலாளருக்கு மேல் ஓர் ஆலோசகர், டி.ஜி.பி.க்கு மேல் ஓர் ஆலோசகர், பொதுப் பணித் துறையிலும் ஓர் ஆலோசகர், எல்லோருக்கும் மேலே ஒரு மக்கள் முதல்வர் என பல எஜமானர்கள் இருந்தும், தமிழக அரசின் நிதி நிலையைத் தூக்கி நிறுத்த ஒருவரும் ஆலோசனை சொல்லவில்லையா?

கூவம் நதியைச் சீரமைக்க ரூ. 3,833.62 கோடியில் பெரும் திட்டம், ஆறுகள் இணைப்பு வெள்ளத் தடுப்புப் பணிக்கு ரூ. 5,166 கோடி, 3 வழித் தடங்களில் ரூ. 8,350 கோடியில் மோனோ ரெயில் திட்டம், ரூ. 1,075 கோடியில் நெமிலிச்சேரியையும் மீஞ்சூரையும் இணைக்கும் இரண்டாம் கட்ட வெளிவட்டச் சாலை, சென்னை டி.பி.ஐ. வளாகத்தில் ஒருங்கிணைந்த அறிவுசார் பூங்கா, தேர்வாய்க் கண்டிகை, திருக்கண்டலம், ராமஞ்சேரி ஆகிய இடங்களில் தலா ஒரு டி.எம்.சி. கொள்ளளவு கொண்ட புதிய ஏரிகள் என கடந்த பட்ஜெட்டுகளில் அறிவிக்கப்பட்ட பல அறிவிப்புகளை எப்போது நிறைவேற்றுவார்கள்? அவற்றுக்கெல்லாம் எங்கிருந்து பணம் கொண்டு வருவார்கள்? பன்னீர் செல்வம் சொல்வது போல... "அறுக்க மாட்டாதவன் இடுப்புல, அம்பத்தெட்டு அருவாளாம்" என்று கூறப்பட்டுள்ளது. நிதி ஆதாரமே இல்லாமல் செய்யப்படும் அறிவிப்புகள் யாரை ஏமாற்ற? பொய் நெல்லைக் குத்தியே பொங்கலாம் என்று நினைத்தார்களோ?

உடன்பிறப்பே, ஆட்சிக்கு வந்து மூன்றரை ஆண்டு களுக்குள்ளேயே தமிழக அரசை திவாலாக்கி, நிதி நிலையைத் தெருவிலே நிறுத்தக்கூடிய நெருக்கடியை உருவாக்கிய பெருமைக்குரியவர்கள்தான் (?) ஜெயலலிதா கட்சியினர்! போக்குவரத்துத் துறை ஊழியர்களுக்கான ஊதிய உயர்வு ஒப்பந்தத்தைக் கடந்த பதினைந்து மாத காலமாக நிறைவேற்றாமல் இருந்து, அவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்த பிறகுதான் அழைத்துப் பேசவே முன்வந்தவர்கள் இந்த ஆட்சியினர்! ஏன்? தமிழக அரசு அலுவலர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் போனஸ் வழங்கப்பட்டு வருகிறது. தமிழர் திருநாள், பொங்கல் விழாவிற்கு இன்னும் ஒரு வார காலம்

மட்டுமே உள்ள நிலையில், தமிழக அரசு உடனடியாக போனஸ் வழங்குவதற்கான அறிவிப்பினைச் செய்திட வேண்டும். உண்மை நிலையை அப்படியே மறைத்து விட்டு, ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது, பேரவை கூடுகிறது என்றால், உடனே நினைவுக்கு வருவது ஜெயலலிதாவின் 110வது விதியின் கீழான அறிக்கைதான். 110வது விதியின் கீழ் அத்தனை அறிக்கைகளையும் முதலமைச்சராக இருந்த ஜெயலலிதாதான் படித்தாரே தவிர, வேறு யாராவது ஓர் அமைச்சரை விட்டு, அவர்களுடைய துறை பற்றிய அறிக்கைகளைப் படிக்கச் செய்தார்களா? ஏன் தமிழக அரசே முதலமைச்சருக்கு மட்டும்தான் சொந்தமானதா? கடந்த மூன்றரை ஆண்டுகளில் ஜெயலலிதா 139 அறிக்கைகளை 110வது விதியின்கீழ்ப் படித்திருக்கிறார். 2013-2014ஆம் ஆண்டில் மாத்திரம் 110வது விதியின் கீழ்ப் படித்த அறிக்கைகளில் 236 திட்டங்களை ஜெயலலிதா அறிவித்தார் என்றும், ஆனால் அதில் 116 திட்டங்களுக்குத்தான் அரசாணைகள் வெளியிடப்பட்டன என்றும் இப்போது முதலமைச்சராக உள்ள ஓ.பன்னீர்செல்வம் சட்டசபையிலேயே தெரிவித்தார். ஜெயலலிதா அறிவித்த எஞ்சிய 120 திட்டங்களுக்கான அரசாணைகளே பிறப்பிக்கப்பட வில்லை என்ற தகவலே பன்னீர்செல்வம் மூலமாகத் தான் நமக்குத் தெரிந்தது. அரசாணைகள் பிறப்பிக்கப்பட்ட போதிலும், 236 திட்டங்களில் 5 திட்டங்களுக்கான பணிகள்தான் முடிக்கப்பட்டுள்ளன என்றும் பன்னீர் செல்வம் பேரவையிலே கூறினார். அப்படியென்றால் இந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட 236 திட்டங்களில் இன்னும் 231 திட்டங்கள் முடிக்கப்படவில்லை. முடிக்கப்படாததற்குக் காரணம் அதற்கான நிதி ஆதாரம் இல்லை என்பதுதான்.

நான் முன்பே விளக்கமாக எழுதியது போல, கடந்த நான்காண்டுகளில் ஜெயலலிதா சட்டப்பேரவையில் படித்த 110வது விதியின் கீழான அறிக்கைகளிலே கூறப்பட்ட திட்டங்களின் மொத்த மதிப்பு மட்டும் எவ்வளவு தெரியுமா? ஒரு இலட்சத்து 27 ஆயிரத்து 500 கோடியே 93 இலட்சம் ரூபாய். கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை படிக்கப்பட்ட போது, ஓர் ஆண்டுக்கான தமிழக அரசின் வருவாய் வரவுகள் என்று குறிப்பிட்ட தொகை எவ்வளவு தெரியுமா? ஒரு இலட்சத்து 27 ஆயிரத்து 389 கோடியே 89 இலட்ச ரூபாய். அதாவது ஓராண்டில் தமிழக அரசின் வருவாய்

வரவுகள் என்று குறிப்பிட்ட தொகை அளவுக்குச் சமமான அளவில் ஜெயலலிதா 110வது விதியின் கீழான அறிக்கையிலே மட்டும் திட்டங்களை அறிவித்திருக்கிறார் என்றால் நடப்பது என்ன அரசா? கேலிக்கூத்தா? நாளேடுகளில் அன்றாடம் தன் பெயரில் ஓர் அறிவிப்பு வரவேண்டுமென்பதற்காகத் திட்டங்களை அறிவித்தால் மட்டும் போதுமா? அதற்கான நிதி இருக்கிறதா என்று பார்க்க வேண்டாமா? "யார் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு நம்மிடம் கேள்வி கேட்கப் போகிறார்கள்" என்று மேம்போக்காக நடந்து கொள்வதா? இப்போது அன்றாடம் பணியாற்றும் அரசு அலுவலர்களுக்கு போனஸ் கொடுக்க நிதி இல்லை என்றால் இதெல்லாம் யாருடைய குற்றம்? 10-12-2014 அன்று 110வது விதியின்கீழ், படிக்கப்பட்ட ஒரு சில திட்டங்களையெல்லாம் நான் எடுத்துக்காட்டி, அவைகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டு விட்டனவா என்று இந்த அரசிடம் கேட்டிருந்தேனே, அதற்கு ஏதாவது இந்த அரசினால் பதில் கூற முடிந்ததா?

இந்த ஆட்சியிலே என்ன நடக்கிறது? முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா நீதிமன்றத்தினால் தண்டனை பெற்று வீட்டுக்குப் போய் விட்டார். தற்போது முதலமைச்சராக இருக்கும் பன்னீர்செல்வத்திடம் எந்த அமைச்சருக்காவது உரிய மரியாதை இருக்கிறதா? எங்கும் ஊழல், எதிலும் ஊழல், அனுதினமும் ஊழல், அத்தனையும் ஊழல் என்ற நிலையில்தானே ஆட்சி நடக்கிறது? கடந்த மூன்றரை ஆண்டுகளில் எத்தனை அமைச்சர்கள் மீது அவர்களே நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்? தவறு செய்தார்கள் என்று முதலமைச்சரே புரிந்துகொண்டு எடுத்த நடவடிக்கைதானே அவை? இல்லை என்று மறுக்க முடியுமா? வேறு எந்த ஆட்சியிலாவது இத்தனை அமைச்சர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? அந்த அமைச்சர்கள் செய்த தவறுகள் வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டதா? தற்போது அது போல எந்த அமைச்சர் மீதாவது முதலமைச்சரால் நடவடிக்கை எடுக்க முடியுமா? அவருடைய நிலையே கேள்விக் குறியாக உள்ளது. இந்த ஆட்சியினர் மீது எத்தனை ஊழல்கள்? ஆவின் பால் கலப்பட ஊழல் ஒன்று போதாதா? பால் கட்டணம் உயர்வு, மின் கட்டணம் உயர்வு, பேருந்துக் கட்டண உயர்வு, கரும்புக்குக் கொள் முதல் விலை அறிவிக்கப் படவில்லை, கிரானைட் ஊழல் பற்றி நீதிபதியே விசாரணைக் கமிஷன் வைத்தால், அதற்கு எத்தனை முட்டுக்கட்டைகள்? சத்துணவு சாப்பிடும் குழந்தை

களுக்கான முட்டைகள் வாங்குவதிலே ஊழல் நடைபெற்றதாகக் கூறப்பட்டதே, ஏடுகளில் செய்தி வந்ததே, என்னவாயிற்று? பருப்புக் கொள்முதலில் விதிமுறைகள் மீறப்பட்டதாக வந்த செய்திக்குப் பதில் எங்கே? புதிய தொழிற்சாலைகள் ஏதாவது உண்டா? வெளி மாநில முதலமைச்சர்கள் எல்லாம் தமிழ்நாட்டிற்கு வந்து இங்கேயுள்ள தொழிலதிபர்களை எல்லாம் அழைக்கிறார்கள் என்றால் என்ன அர்த்தம்? இதுவரை மூடப்பட்ட நோக்கியா, பாக்ஸ்கான் போன்ற தொழிற்சாலைகள் இன்னும் எத்தனை? இதுதான் தொழில் வளர்ச்சிக்கான அடையாளமா? தொலைநோக்குத் திட்டங்கள் என அறிவிக்கப்பட்டவை எல்லாம் என்ன வாயிற்று? சென்னை மாநகர மேயர் மீது குற்றச்சாட்டு, நடவடிக்கை என்றெல்லாம் ஏடுகளிலே செய்திவந்ததே, என்ன ஆயிற்று? வந்த செய்தி பொய்யா? நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டு, ஜாமீனில் ஜெயலலிதா வீட்டிலே இருக்கிறார். மேல் முறையீடு செய்து விசாரணை தொடங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அரசுப் பணியில் இருக்கும் அதிகாரிகள் அவரைச் சென்று சந்திக்கிறார்கள், ஆலோசனை நடத்துகிறார்கள் என்றால் சட்ட நெறிமுறைகளின்படி அது சரிதானா? இதற்கெல்லாம் விடிவு வேண்டாமா? ஆண்டுதோறும் நவம்பர், டிசம்பர் மாதங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களையும், காவல் துறை அதிகாரிகளையும் அழைத்து முதலமைச்சர் நடத்தும் மாநாடு ஏன் இந்த ஆண்டு நடத்தப்படவில்லை? கடந்த ஆண்டு கலெக்டர்கள் மாநாட்டை நடத்தி, முதலமைச்சர் எத்தனையோ அறிவிப்புகளைச் செய்தாரே, அந்த அறிவிப்புகள் எல்லாம் என்ன ஆயிற்று? அது குறித்து வெள்ளை அறிக்கை வேண்டும் என்ற கோரிக்கைக்கு என்ன பதில்? எப்படியோ, அ.தி.மு.க. ஆட்சியினர் மூன்றரை ஆண்டுக் காலத்திலேயே தமிழ்நாட்டின் நிதி நிலைமையைப் பாழ்படுத்தித் திவாலாக்கி விட்டார்கள்; நம்பி வாக்களித்த மக்களின் நம்பிக்கையைக் கொன்று ஏமாற்றி விட்டார்கள் என்பதுதான் அசைக்க முடியாத உண்மை. வெட்கமில்லை; வெட்கமில்லை; இதில் யாருக்கும் வெட்கமில்லை!

அன்புள்ள,

மு.க.

9-1-2015

3949. தை முதல் நாளே; தமிழர் புத்தாண்டு திருநாள்!

உடன்பிறப்பே,

9-1-2015 அன்று சென்னையில் அண்ணா அறிவாலயத்தில் கலைஞர் அரங்கத்தில் நடைபெற்ற கழகப் பொதுக் குழுவில் நடைபெற்ற தேர்தலில் ஒரு மனதாக வெற்றி பெற்ற என்னையும், பேராசிரியரையும், பொருளாளரையும் பாராட்டிச் சிறப்புத் தீர்மானம் ஒன்றும், மத்திய அரசைக் கண்டித்து ஒரு தீர்மானமும், மாநில அரசைக் கண்டித்து மற்றொரு தீர்மானமும் நிறைவேற்றப் பட்டதோடு, மூன்றாவதாக ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டு, ஏடுகளில் அந்தத் தீர்மானம் வெளி வந்திருப்பதைக் கண்டிருப்பாய். அந்தத் தீர்மானம்தான், பொங்கல் திருநாளை - தமிழ்ப் புத்தாண்டாகத் தமிழர்கள் உள்ளம் தோறும் உவகைப் பெருக்குடன் இல்லந்தோறும் இன எழுச்சியோடு கொண்டாட வேண்டும் என்பதாகும்.

23-1-2008 அன்று தமிழகச் சட்டப்பேரவையில் - தி.மு. கழக ஆட்சியில் - மேதகு ஆளுநரும், எனது இனிய நண்பருமான திரு. சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள் ஆற்றிய உரையில், தமிழர்களுக்கென்று ஒரு "தனி ஆண்டு " தேவை என்று கருதி, அய்யன் திருவள்ளுவர் பெயரில் தொடர் ஆண்டு ஒன்றினைப் பின்பற்றுவதென்றும், அதையே "தமிழ் ஆண்டு" எனக் கொள்வதென்றும், திருவள்ளுவர் பிறந்த ஆண்டு கி.மு. 31 என்று பெரும் புலவரும் தனித் தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்தவருமான மறைமலை அடிகளார் தலைமையில் முடிவெடுத்தார்கள் என்றும் அந்தக் கருத்தினை, 37 ஆண்டுகளுக்கு முன்பே, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஏற்றுக் கொண்டு, 1971ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு நாட்குறிப்பிலும், 1972ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசிதழிலும் நடைமுறைப்படுத்திட ஆணை பிறப்பித்தார் என்றும்,

திருவள்ளுவர் ஆண்டு பிறக்கும் தைத் திங்கள் முதல் நாள்தான் தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் என்பது, ஒட்டுமொத்தமாக எல்லாத் தமிழ் அறிஞர்களும் ஒப்புக் கொண்டுள்ள உண்மை என்பதால்; தைத் திங்கள் முதல் நாளையே தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் என அறிவித்து நடைமுறைப்படுத்திட இந்த அரசு முடிவு செய்துள்ளது என்றும், எனவே, பொங்கல் திருநாளைத் தமிழர் திருநாளாகக் கொண்டாடி வரும் தமிழ் நாட்டு மக்கள்; இனி - தமிழ்ப் புத்தாண்டுப் பிறந்த நாளாகவும் இணைத்து இந்நாளை இரட்டிப்பு மகிழ்ச்சியுடன் கொண்டாடும் வகையில், வாழை, மா, பலா என முக்கனித் தருக்களை நாட்டி; வண்ண வண்ணக் கோலங்களிட்டு; வரிசை விளக்குகளால் ஒளியுமிழ் இல்லங்கள் புது எழில் காட்டிட ; புத்தாடை புனைந்து தமிழ் மானம், தன்மானம் போற்றிப் பாடியும், ஆடியும்; சமத்துவ உணர்வு பரப்பியும்; தமிழ்ப் புத்தாண்டு இதுவெனத் துள்ளும் மகிழ்ச்சியால் அன்பை அள்ளிப் பொழிவர் என்றும் அறிவித்தார்.

மறைமலை அடிகள் தலைமையில் தமிழ்த் தென்றல் திரு.வி. கல்யாண சுந்தரனார், தமிழ்க் காவலர் கா. சுப்பிரமணியப் பிள்ளை , சைவப் பெரியார் சச்சிதானந்தப் பிள்ளை, நாவலர் ந.மு. வெங்கடசாமி நாட்டார், நாவலர் சோமசுந்தர பாரதியார், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் உள்ளிட்ட அறிஞர் பெருமக்கள் எல்லாம் கலந்து கொண்ட கூட்டத்தில் அவர்கள் எடுத்த முடிவுகள் மூன்று :

1. திருவள்ளுவர் பெயரில் தொடர் ஆண்டாகப் பின்பற்றுவது;

2. அதனையே தமிழாண்டு எனக் கொண்டாடுவது;

3. வழக்கத்தில் திருவள்ளுவர் காலம் கி.மு. 31ஐக் கூட்டினால் திருவள்ளுவராண்டு வரும் என்பதனை மேற்கொள்வது என்பனவாகும்.

அதன் பிறகு 1939ஆம் ஆண்டு திருச்சியில் அகில இந்தியத் தமிழர் மாநாடு நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில் கூடியது. அதில், தந்தை பெரியார், கரந்தை தமிழ்ச் சங்கத் தலைவர் உமா மகேசுவரனார், பேராசிரியர் கா. சுப்பிரமணியம், தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், திரு.வி.க., மறைமலை அடிகளார், பி.டி. இராஜன், ஆற்காடு ராமசாமி முதலியார், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், பட்டுக்கோட்டை அழகிரி உட்பட பலரும்

பங்கேற்றனர். அந்த மாநாடும் தை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு என்றும், பொங்கல் திருநாளே தமிழர் திருநாள் என்றும் கூறியது.

தி.மு. கழக அரசின் அறிவிப்புகண்டு, திராவிடர் கழகத் தலைவர், தமிழர் தலைவர், இளவல் வீரமணி அவர்களோ, "தைத் திங்கள் முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டின் தொடக்கம் என்ற நமது நீண்ட நாள் கோரிக்கைக்கு வெற்றி கிடைத்துள்ளது. தமிழர் பண்பாட்டு வரலாற்றுத் திசையில் புதியதோர் மறுமலர்ச்சி அத்தியாயம் இது. பாராட்டுகிறோம், மகிழ்ச்சி அடைகிறோம்" என்று குறிப்பிட்டிருந்தார்.

ஆளுநரின் அறிவிப்பு வெளிவந்த மறுநாளே அதாவது 24-1-2008 அன்று தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் விடுத்த அறிக்கையில், "தொன்மைக் காலம் தொட்டே சமயம் சார்ந்தும், இயற்கை வாழ்வு சார்ந்தும், மண்ணும் மனிதர்களும் சார்ந்தும், விவசாய வாழ்வு சார்ந்தும் தைத்திங்கள் முதல் திருநாளே தமிழர் வாழ்வு சார்ந்த எழுச்சியும் மகிழ்ச்சியும் ஊட்டுகின்ற திருநாளாகும். மறைமலை அடிகளார் போன்ற மூத்த தனிப்பெரும் தமிழ் அறிஞர்கள் தைத் திங்கள் முதல் நாளைத் தொடக்கமாய்க் கொண்டு அய்யன் திருவள்ளுவர் பெயரில் தமிழ்ப் புத்தாண்டாய் அறிவித்ததை நடைமுறைப்படுத்த உள்ள முத்தமிழறிஞர் முதல்வர் கலைஞர் அவர்களுக்கு நன்றி, பாராட்டுக்கள்" என்று தெரிவித்திருந்தார்.

கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் விடுத்த அறிக்கையில், "தைத்திங்கள் முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டின் தொடக்க நாள் என்று ஆளுநர் உரையில் கலைஞர் அரசு அறிவித்திருப்பது கண்டு உணர்வுமிக்க தமிழர்கள் கொண்டாடிக் கூத்தாடுகிறார்கள். எல்லா தேசிய இனங்களுக்கும் அழிக்க முடியாத சில அடையாளங்கள் உண்டு. தமிழர்களுக்கு நில அடையாளம் இருக்கிறது; இன அடையாளம் இருக்கிறது; ஆனால் கால அடையாளம் மட்டும் குழப்பத்தில் இருந்தது. அந்தக் குழப்ப இருள் உடைந்து விடிந்து இன்று வெளிச்சம் வந்திருக்கிறது. அய்யன் திருவள்ளுவரை கருத்துலகத்தின் அளவுகோலாய்க் காட்டியது திராவிட இயக்கம். இன்று காலத்தின் அளவுகோலாகவும் திருவள்ளுவரைக் கருதச் செய்திருக்கிறது கலைஞர் அரசு. இது சரித்திரத்தைச் சரி செய்யும் சரித்திரமாகும்" என்று எழுதியிருந்தார்.

மலேசியா நாட்டில் தமிழர்கள் தற்போது தை முதல் நாளையே புத்தாண்டாகக் கொண்டாடி வருகிறார்கள். டாக்டர் மு. வரதராசனார் அவர்கள், "முன் காலத்தில் வருடப் பிறப்பு சித்திரை முதல் நாளாக இருந்ததில்லை. தை முதல் நாளைத்தான் வருடப் பிறப்பாகப் பெரியோர்கள் கொண்டாடினார்கள். அந்த நாளில் புதிய ஆடைகளை வாங்கி உடுப்பார்கள். தெருவில் புது மண் போட்டு, செம்மண் இட்டு, ஒழுங்கு செய்வார்கள். ஊரெல்லாம் திருவிழா நடத்துவார்கள். இப்படி நகரங்களில் புத்தாண்டு பிறப்பாகப் பொங்கல் கொண்டாடுகிறார்கள்" என்று விளக்கியுள்ளார்.

தி.மு. கழக ஆட்சியில் செந்தமிழரெல்லாம் பெரு மகிழ்ச்சியும், பெருமிதமும் கொள்ளத்தக்க வகையில் செய்யப்பட்ட அறிவிப்பாக, ஆளுநர் பர்னாலா அவர்களின் அறிவிப்பு கருதப்பட்டு, தமிழ் மக்கள் எல்லாம் அந்த ஆண்டு பொங்கல் விழாவினை எப்போதும் இல்லாத வகையில் தமிழ்ப் புத்தாண்டாகக் கொண்டாடி மகிழ்ந்தார்கள். அதைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை அ.தி.மு.க.வின் தலைவி ஜெயலலிதாவுக்கு!

2011ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் வராததுமாக எப்படியெல்லாம் கழக ஆட்சியிலே கொண்டு வரப்பட்ட நல்ல திட்டங்களுக்கெல்லாம் மூடுவிழா நடத்த முற்பட்டாரோ, அப்படியே தமிழின அடையாளத்தைக் காட்டும் இந்த அறிவிப்புக்கும் மூடு விழா நடத்திட ஏற்பாடுகளை அவசர அவசரமாகச் செய்தார்.

தமிழக முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா 23-8-2011 அன்று பேரவையில் கூறும்போது, "தமிழ்ப் புத்தாண்டை தை மாதம் தொடங்க எந்த ஆதாரமும் இல்லை. ஆனால் சித்திரையில் தொடங்குவதற்கு பல ஆதாரங்கள் உள்ளன. கருணாநிதி தன் சுய விளம்பரத்துக்காக, மக்கள் மன உணர்வைப் புண்படுத்தும் வகையில் கொண்டு வரப்பட்ட சட்டம் ரத்து செய்யப்பட்டு விட்டது" என்றார்.

கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட நல்ல முயற்சிக்கு எதிராக அ.தி.மு.க. ஆட்சியில், நஞ்சைக் கலந்து நசுக்குவதைப் போல், ஒரு பெரும் ஆபத்து ஏற்பட்டது. தமிழ்நாட்டுச் சரித்திரத்திலே தமிழையே பகைத்துக் கொள்கிற - செம்மொழி என்றாலே வெறுக்கிற - ஒதுக்குகிற - புறக்கணிக்கிற பெரும்

பிற்போக்குத்தனமான ஒரு கூட்டம் இருக்கத்தான் செய்கிறது. அந்தக் காலத்திலும் இப்படித் தமிழையே வெறுக்கின்ற புலவர்கள் ஓரிருவர் இருந்திருக்கிறார்கள். அதைப் பற்றி நான் அப்போதே ஒரு கதையின் மூலம் விளக்கியிருக்கிறேன்.

நக்கீரன் காலத்திலே குயக்கொண்டான் என்று ஒருவர் தமிழ்ச் சங்கத்திலே நடைபெற்ற ஒரு பட்டி மன்றத்திலே "ஆரியம் நன்று, தமிழ் தீது'' என்று சொல்ல - உடனே நக்கீரனுக்குக் கோபம் வந்து, "தமிழ் தீதென்றும், வடமொழி நன்று என்றும் சொன்ன நீ, சாகக் கடவாய்'' என்று அறம் பாடினாராம். உடனே குயக்கொண்டான் கீழே விழுந்து இறந்து விடுகிறார். உடனே அங்கேயிருந்த சிலர் நக்கீரனைப் பார்த்து; குயக் கொண்டாரைப் பிழைக்க வைக்க கேட்டுக் கொண்டார்களாம். அதைக் கேட்ட நக்கீரன், "ஆரியம் நன்று தமிழ் தீ தென் றுரைத்த காரியத்தால் காலன்கோட் பட்டானைச் - சீரிய அந்தண் பொதியில் அகத்தியனார் ஆணையினால் செந்தமிழை தீர்க்க சுவாகா!" என்று பாட, குயக் கொண்டான் உயிர் பெற்று எழுந்தானாம்.

தமிழக அரசின் அறிவிப்பு வந்த நேரத்திலேயே மிகச் சிறந்த தமிழ்க் கல்வெட்டு ஆய்வாளரும் அறிஞருமான ஐராவதம் மகாதேவன் அவர்கள், "இன்றைய பஞ்சாங்கங்களை வான நூல், பருவங்களின் சுழற்சி ஆகியவற்றின் தற்கால நிலையை அறிவியல் கண்ணோட்டத்துடன் - ஆராய்ந்து திருத்திக் கொள்ள நமக்குத் துணிவு இல்லையெனில், அறுவடை நாளாகிய பொங்கல் திருவிழாவைப் புத்தாண்டு என்று கொண்டாடுவதில் என்ன தவறு?" என்றார்.

தி.மு. கழக ஆட்சியில் ஆளுநர் உரையிலே செய்யப்பட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து அதே ஆண்டில் 29-1-2008 அன்று 2008ஆம் ஆண்டு 'தமிழ்நாடு தமிழ்ப் புத்தாண்டுச் சட்ட முன் வடிவை' பேரவை முன் நான் அறிமுகம் செய்தேன். 1-2-2008 அன்று இச்சட்ட மசோதா மீதான விவாதம் நடைபெற்று காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஈ.எஸ்.எஸ். ராமனும், பா.ம.க. சார்பில் கி.ஆறுமுகமும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் சார்பில் என். நன்மாறனும், இந்தியக் கம்யூனிஸ்ட் சார்பில் வை. சிவபுண்ணியமும், ம.தி.மு.க. சார்பில் அப்போது அங்கேயிருந்த மு.கண்ணப்பனும், விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் கு.

செல்வமும் அந்த மசோதாவினை வரவேற்றுப் பேசி அது நிறைவேறியது.

இப்படியெல்லாம் போற்றப்பட்ட, பாராட்டப்பட்ட ஒரு முடிவு நடைமுறைப்படுத்தப்பட தி.மு. கழக ஆட்சியிலே சட்டமாகக் கொண்டு வரப்பட்டு 2008ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வந்தது. தி.மு. கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்டது என்ற ஒரே காரணத்திற்காக ஜெயலலிதா ஆட்சியிலே அது மாற்றப்பட்டு விட்டது. அவரது அந்த அறிவிப்பினை பா.ஜ.க. அப்போதே அவசர அவசரமாக வரவேற்றது.

அ.தி.மு.க. ஆட்சியில் ஜெயலலிதாவினால் கொண்டு வரப்பட்ட அந்த மசோதாவை அவையிலே இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளும் எதிர்த்தன என்ற தகவலை செய்தியாளர்கள் என்னிடம் தெரிவித்து, அதுபற்றி கருத்துக் கேட்ட போது, "கம்யூனிஸ்ட்களின் தமிழ் உணர்வுக்குத் தலை வணங்குகிறேன்" என்று அப்போதே பதில் கூறினேன். பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் அவர்கள் விடுத்த அறிக்கையில், அ.தி.மு.க. அரசின் அந்த முடிவு தமிழ் உணர்வாளர்களை வேதனைப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது என்றும் திடீரென்று தமிழ்ப் புத்தாண்டை மீண்டும் சித்திரை மாதத்துக்கு மாற்றுவது முறையல்ல என்றும் அது மிகப் பெரிய வரலாற்றுப் பிழையாக அமைந்து விடும் என்றும் தெரிவித்தார். தமிழர் தலைவர் கி. வீரமணி அவர்களும் இந்த முடிவினை வன்மையாகக் கண்டித்து செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்தார். அவர்களுடைய அந்தத் தமிழ் உணர்வுக்கு நான் அப்போதே நன்றி தெரிவித்திருக்கிறேன். இன்னும் சொல்ல வேண்டுமேயானால் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களே,

"நித்திரையில் இருக்கும் தமிழா!
சித்திரையல்ல உனக்குத் தமிழ்ப் புத்தாண்டு
அண்டிப் பிழைக்கவந்த ஆரியர் கூட்டம் காட்டியதே
அறிவுக் கொவ்வாத அறுபது ஆண்டுகள்
தரணியாண்ட தமிழருக்கு
தைம்முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு!"

என்று பாடியதையும் நினைவு கூர விரும்புகிறேன்.

இந்த வரலாற்று உண்மையை மறைக்கத்தான் இன்றைக்கு இருக்கும் ஆட்சியாளர்கள் பெரு முயற்சி எடுத்து, சித்திரைத் திங்கள்தான் தமிழ் ஆண்டின் துவக்கம் என்று மாற்றி ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அவர்களின் நடவடிக்கைக்கு தமிழ்நாட்டு மக்கள் எந்த மரியாதையும் கொடுத்ததாகத் தெரியவில்லை. வெளிநாட்டிலே வாழும் தமிழர்கள் கூட இந்த உண்மையைப் புரிந்து கொண்டு; தைத் திங்கள் முதல் நாள்தான் தமிழர் களின் திருநாள், தமிழ்ப் புத்தாண்டின் துவக்கம் என்று உறுதி செய்து கொண்டு, கொண்டாடுகிறார்கள். எனவே அ.தி.மு.க. அரசு அதை ஒப்புக் கொள்கிறதோ இல்லையோ, அதைப் பற்றிக் கவலைப்படாமல், தைத் திங்கள் முதல் நாளை, தமிழர் திருநாளாக, தமிழ்ப் புத்தாண்டின் துவக்கமாகச் சீரும் சிறப்புமாகக் கொண்டாடிட தமிழர்கள் அனைவரும் முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தை முதல் நாளே; தமிழர் புத்தாண்டுத் திருநாள்!

அனபுள்ள,

மு.க.

12-01-2015

3950. முன்னாள் பிரதமர்களின் உறுதிமொழி காப்பாற்றப்படுமா?

உடன்பிறப்பே,

25-1-2015.

மொழிப் போர்த் தியாகிகள் நினைவு நாள் - வீர வணக்க நாள் - அந்த நாளை, கழகத்தின் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் கடைப்பிடித்து வருகிறோம். அந்த நாளில் தமிழகத்தின் ஒவ்வொரு நகரிலும், கழகப் பேச்சாளர்கள் கலந்து கொண்டு, மொழிப்போரிலே கழகம் ஈடுபட்ட வரலாற்றை நினைவுபடுத்தி வருகிறார்கள். அது போல இந்த ஆண்டும் தமிழகம் முழுவதிலும் வீர வணக்க நாள் கடைப்பிடிக்கப்படுகிறது.

பேச்சாளர்களின் பட்டியலை வெளியிட்டுள்ள கழக மாணவரணிச் செயலாளர், தம்பி இள.புகழேந்தி விடுத்துள்ள அறிக்கையில், நான் எழுதிய கவிதை ஒன்றைத்தான் தொடக்கமாகக் கொண்டுள்ளார். ஆம்,

“அடலேறு மொழித் தமிழே - இன்பக்
கடலேறு மலைத் தமிழே - சோலை
மடலேறு சுவைத் தமிழே - நீ என்
உடலேறி உயிரேறி வாழ்விக்கின்றாய்; வணங்குகிறேன்”

- என்பதுதான் அந்தக் கவிதை.

1965ஆம் ஆண்டு கழகம் நடத்திய அந்த மொழிப் போரின் ஐம்பதாம் ஆண்டு நிறைவுதான் 2015. அதாவது மொழிப்போர் வரலாற்றின் பொன் விழா!

ஆனால் அதற்கு முன்பே 1937-38ஆம் ஆண்டிலேயே மொழிப்போர் என்பது தொடங்கி விட்டது. அப்போது எனக்கு வயது பதினான்குதான். திருவாரூர் உயர்நிலைப் பள்ளியிலே நான் மாணவன். அப்போதிருந்த ஆட்சியாளர்கள் கல்வி நிலையங்களில்

இந்தி கட்டாயப் பாடம், இந்தி படித்து அதில் போதிய மதிப்பெண் பெற்றால்தான் அடுத்த வகுப்புக்குச் செல்ல முடியும் என்று ஓர் ஆணையைப் பிறப்பித்த போது, அதனை எதிர்த்து தமிழகமே போர்க் கோலம் பூண்டது. அப்போது பள்ளி மாணவனாக இருந்த நான், கையிலே ஒரு பதாகையை ஏந்திக் கொண்டு புறப்பட்டு விட்டேன். அதில்,

"வாருங்கள் எல்லோரும் இந்திப்
போருக்குச் சென்றிடுவோம்; வந்திருக்கும்
இந்திப் பேயை விரட்டித் திரும்பிடுவோம்!
ஓடி வந்த இந்திப் பெண்ணே கேள்! நீ
தேடி வந்த கோழையுள்ள நாடிதல்லவே;
வீரத் தமிழ் கொஞ்சும் நாட்டிலே – நாங்கள்
சாரமில்லாச் சொற்கள் ஏற்க மாட்டோம் வீட்டிலே!"

என்று நானே எழுதிய கவிதை வரிகள்! அந்தக் கவிதை வரிகளைப் பாடிக் கொண்டே தேரோடும் திருவாரூர் வீதிகளிலே மாணவர் பட்டாளத்தை உடன் அழைத்துக் கொண்டு பேரணி ஒன்றை நடத்தினேன். அந்த நாளே, என்னை அரசியலில், பொது வாழ்க்கையில் அடி எடுத்து வைக்கச் செய்த நாள். என்னையும் ஒரு கவிஞனாக்கிய நாளும் அந்த நாள்தான்! 1938இல் தொடங்கிய எனது அரசியல் பயணம், இதோ 92 வயதிலும் தொடருகிறது - அதே உணர்வுகளோடு இது மேலும் தொடரும்!

1950இல் நிறைவேற்றப்பட்ட இந்திய அரசியல் சட்டத்தில் 15 ஆண்டுகளுக்குள் அதாவது 1965ஆம் ஆண்டுக்குள் ஆங்கிலம் இருந்த அத்தனை இடத்திலும், இந்தி மொழியே இருக்கும் என்கிற வகையில் ஒரே ஒரு வாக்கு வித்தியாசத்தில் சட்டம் இயற்றப்பட்டு விட்டதும், அதுபற்றி அவ்வப்போது இந்தி பேசாத மாநில மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வந்ததும் அனைவருக்கும் தெரிந்தவைதான். 1937ஆம் ஆண்டின் இந்தி எதிர்ப்புச் சரித்திரம் 1957 ஆம் ஆண்டில் தமிழகத்தில் மீண்டும் சுழன்றது. அடுத்தடுத்துப் படை எடுத்து வந்த பாரசீகர்களின் ஒவ்வொரு போராட்டத்திலும், கூடுதலான பலத்தோடு மோதிப் பொருதிய கிரேக்க மக்களைப் போல, 1937ஆம் ஆண்டைக் காட்டிலும், அதிகப்படியான பலத்தோடும், வேகத்தோடும், உறுதியோடும் இந்தியை தமிழகத்தில் நுழைய விடாமல் தடுத்த பெருமை நம்முடைய கழகத்திற்கு உண்டு.

அதன் காரணமாக 1957 செப்டம்பர் 21 அன்று திருவண்ணாமலையில் "இந்தி எதிர்ப்பு மாநாடு" நடத்தப்பட்டது. அந்த மாநாட்டின் நடவடிக்கைகளும், முடிவுகளும்தான் இன்றளவும் இந்தியை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கும் நமக்கெல்லாம் பலத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. அந்த மாநாட்டுக்கு துறவி அருணகிரி அடிகள் தலைமை தாங்க, சி.வி.எம். அண்ணாமலை திறந்து வைக்க, ப.உ. சண்முகம் வரவேற்புக் குழுச் செயலாளராக இருந்தார். பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்று பேசுவதற்கு எடுத்துக் கொண்ட நேரத்தைப் போல, வேறு எந்த மாநாட்டிலும், நிகழ்ச்சிகளிலும் எடுத்துக் கொண்டதில்லை.

அதன் பின்னர் 1963ஆம் ஆண்டு ஜூன் 8, 9, 10 ஆகிய நாட்களில் கழகத்தின் தலைமைச் செயற்குழுவும், பொதுக்குழுவும் கூட்டப்பட்டன. இந்தியை எதிர்த்துப் போராட்டத்தை நெடுங்காலம் நடத்திடத்தக்க அளவுக்கு செயல் திட்டங்களை வகுப்பதற்காக, அந்தப் பொதுக் குழு அமைத்த போராட்டக் குழுவுக்கு என்னைத்தான் தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள். 1953இல் நடைபெற்ற சிதம்பரம் மாநாட்டில் கல்லக்குடிப் போராட்டத்திற்குத் தலைவராக என்னை அண்ணா அவர்கள் அறிவித்த போது, எனக்கேற்பட்ட அளவிலா மகிழ்ச்சியே, பெரிதென அதுவரை கருதியிருந்த நான், இந்தி எதிர்ப்புப் போராட்டச் செயல் திட்டக் குழுவின் தலைவராக என்னைத் தேர்ந்தெடுத்ததும், பொதுக் குழுவினருக்கு நன்றி கூறவே திணறிடும் அளவுக்கு மகிழ்ச்சியிலே ஆழ்ந்தேன். அந்தத் தீர்மானத்தின் இறுதிப் பகுதியை மீண்டும் நினைவு கூர வேண்டுமென்றால், "ஆட்சி மொழிகள் மசோதாவும், அரசாங்க உத்தரவுகளும் திட்டங்களும் இந்தித் திணிப்பைத் தீவிரப்படுத்துகின்ற காரணத்தால், நமது மொழி உரிமைகளைக் காக்கவும், இந்தி ஆதிக்க ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்தவும், நம்மை இரண்டாந்தரக் குடிமக்களாக்கும் சூழ்ச்சியை எதிர்த்து ஒழிக்கவும், தென்னக மக்கள் உரிமையை நிலைநாட்டவும், தி.மு. கழகம் நேரடிப் போராட்டத்தைத் துவக்கி விட வேண்டும் என இப்பொதுக் குழு முடிவெடுக்கிறது. இதற்கெனத் தோழர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையில், தோழர் என்.வி. நடராசன் அவர்களும், மாவட்டச் செயலாளர்களும், மாநில அமைப் பாளர்களும் கொண்ட ஒரு போராட்டக் குழுவை இப்பொதுக்குழு அமைக்கிறது" என்ற அந்தத் தீர்மானத்தை முன்மொழிந்தவர்

யார் தெரியுமா? இன்றளவும் எனக்கு இளைய அண்ணனாக இருந்து துணை புரிந்து வரும் நம்முடைய இனமானப் பேராசிரியர் அன்பழகனார் அவர்கள்தான்!

பொதுக் குழு முடிந்து, சென்னை எஸ்.ஐ.ஏ.ஏ. திடலில் நடைபெற்ற பொதுக் குழுத் தீர்மான விளக்கக் கூட்டத்தில் நான் பேசும்போது, "திராவிட முன்னேற்றக் கழகம் நடத்தப் போகிற மிக முக்கியமான போராட்டம் இது. நம்முடைய நாடு மட்டுமல்ல - இந்தத் துணைக் கண்டமே - அனைத்துலகமே - மிக ஆவலோடு எதிர்பார்க்கின்ற இந்த மிகப் பிரம்மாண்டமான போராட்டத் திட்டத்தை வகுக்கவும் வகைப்படுத்தவும் ஆலோசனைகளை மேற்கொள்ளவும் உருவாகியிருக்கின்ற குழுவிலே தலைமை வகித்து நடத்துகின்ற பொறுப்புக்கு - நான் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதை என் வாழ்நாளில் பெற்றுள்ள பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்" என்று தொடங்கித்தான் பேச்சையே அமைத்துக் கொண்டேன்.

அந்தக் கூட்டத்தில் பேசும்போதுதான், பேரறிஞர் அண்ணா அவர்கள், "நமது போராட்டம் வெள்ளிக் கிழமை ஆரம்பித்துப் புதன்கிழமை தலை தேய்த்து முழுகுவதற்கு வீட்டிற்கு வந்து விடக் கூடியதாக இருக்காது. கர்ப்பிணியாக இருக்கும் மனைவியை விட்டு விட்டுச் சிறை செல்பவர்கள் "குழந்தை பிறந்து தொட்டிலில் படுத்திருக்கும்போது சிறையிலிருந்து வந்து விடலாம்" என்று கருத வேண்டாம். இந்தப் போராட்டம் ஒரு நித்திய நிகழ்ச்சியாக - மாதக் கணக்கில் ஆண்டுக் கணக்கில் நடைபெறும். இந்தப் போராட்டத்தில் ஆர்வம் உள்ளவர்கள் மட்டும் ஈடுபட்டால் போதாது. ஆர்வமும் அவசரமும் கலந்தால் பயனில்லை. யாருடைய ஆர்வம் நீடித்திருக்கிறதோ - யார் யாருடைய வீர உணர்ச்சி நிலைத்திருக்குமோ - யார் யார் கஷ்ட நஷ்டங்களை ஏற்றுக் கொள்ள முடியுமோ, அப்படிப் பட்டவர்கள்தான் போராட்டத்தில் ஈடுபடலாம்" என்று முரசறிவித்தார்.

நம்முடைய போராட்ட அறிவிப்பு எந்த வகையில் விளைவு களை ஏற்படுத்தியது என்றால், ஐதராபாத்தில் ஜூலை 21 அன்று விழா ஒன்றில் பேசிய லால்பகதூர் சாஸ்திரி, "தி.மு. கழகத் தலைவர்கள் இந்தியை எதிர்த்து நடத்தவிருக்கும் போராட்டத்தைக் கை விட வேண்டும். இந்தி ஆட்சி மொழி ஆவதை எதிர்த்து அவர்கள் போராட முடிவு செய்துள்ளது மிகவும்

வருந்தத்தக்கதாகும். இந்தி, கொஞ்சம் கொஞ்சமாக ஆங்கிலத்தை அகற்றி அந்த இடத்தைப் பிடித்துக் கொள்ளும், இந்தி நமக்கு அந்நிய மொழி அன்று" என்று பேசினார். இதற்குப் பதிலளித்த அண்ணா அவர்கள், தனது அறிக்கையில், "ஆளுங்கட்சியின் இதயத்தில் இரத்தப் பசி கொண்ட ஓநாய் குடியிருக்கிறது. அதன் பசி அடங்குவதற்கு எவ்வளவு இரத்தம் வேண்டுமானாலும் தருவதற்குத் தி.மு. கழகம் தயாராக இருக்கிறது. எங்களுடைய இரத்தத்தைச் சுவைத்த பிறகாவது அதன் வெறி அடங்கி ஓடி விடுமா என்பதைப் பரிசோதித்துப் பார்க்கும் விதத்திலேயே தி.மு. கழகத்தின் கிளர்ச்சி இருக்கும். இன்னல்களை ஏற்றுக் கொள்வோம், எல்லாத் தியாகங்களையும் புரிவோம்" என்றெல்லாம் அண்ணா அறிவித்தார்.

4-8-1963 அன்று சேலத்திலும், 25-8-1963 அன்று தஞ்சையிலும், 22-9-1963 அன்று திருநெல்வேலியிலும் இந்தி எதிர்ப்பு மாநாடுகள் நடைபெற்றன. நெல்லையில் நடைபெற்ற மாநாட்டில்தான் அண்ணா, "போராட்ட இரயில் புறப்பட்டு விட்டது, இந்தி ஆதிக்கம் நீடிக்கிற வரை இடையிலே அது நிற்காது" என்று முழக்கமிட்டார். 23-9-1963 அன்று தேனியில் நடைபெற்ற விழாவில், அண்ணா அவர்கள் போராட்டக் குழுத் தலைவனான எனக்கு வெள்ளி வீரவாளையும், கேடயத்தையும் பரிசாக வழங்கியதோடு, பாராட்டு மொழியாக,

> "என்னைப் பொறுத்தவரையில் கருணாநிதியின் தொண்டிலேயே மறக்க முடியாத நிகழ்ச்சி எதுவென்றால் திருவண்ணாமலை வெற்றிக்கு உழைத்தது மட்டுமல்ல; மாநகராட்சி நம் வசம் ஆக அவர் ஆற்றிய தொண்டும் அல்ல; அவர் சிறு வாலிபராகக் கொள்கைப் பிரச்சாரம் நடத்திய போது, அவர் பிரச்சாரத்தால் முறுக்கேறிய மாற்றுக் கட்சியினர் அவரை அடி அடியென அடித்து, "ஆள் தொலைந்து விட்டான்" எனக் கருதும் அளவுக்கு உதைத்து, ஆளுங்கட்சியினர் கொட்டத்தை அம்பலப்படுத்தும் போக்கிரிச் சிறுவனை ஒழித்து விட்டோம்" என இரத்தம் பீறிடும் அளவிற்கும் புதுவையிலே காட்டுமிராண்டித்தனமாக வெறித்தனமாக தாக்கிய சம்பவம்தான்.

வண்ணங்கள் பல இருந்தாலும், அந்த வண்ணங்கள் மூலம் நல்ல ஓவியத்தை உருவாக்க ஓவியப் புலவன் தேவை. அது போல ஒரு கட்சியில் பல தரப்பட்டவர்கள் இருந்தாலும், அவர்களைச் சிறப்பாகச் செயல்பட வைக்கும் திறமை உள்ளவர்கள் வேண்டும். தம்பி கருணாநிதி அந்தச் சிறப்புக்களை நன்கு பெற்றவர்களில் ஒருவர். கலைத் துறையிலே கருணாநிதி பெற்ற புகழ் கொஞ்ச நஞ்சமல்ல; "பராசக்தி" மூலம் அவர் அடைந்த புகழோடு மேலும் மேலும் பல திரைப்படங்களாலும் அவர் புகழடைந்தார். கருணாநிதி அந்தப் புகழை நம்பி, அந்தத் துறையிலேயே சென்றிருந்தால் பணத்தோடும் வாழலாம், பகட்டோடும் வாழலாம். ஆனால் அவர் கொண்ட இலட்சியத்தை மறந்து விடவில்லை . கழகத்தை மறவாது, எந்தப் புகழுக்கும் மயங்காது பணியாற்றுபவர் கருணாநிதி"

- என்றெல்லாம் பேசியது மறக்கக் கூடிய வார்த்தைகளா?

இந்தி எதிர்ப்பு அறப்போராட்டத்தில் ஒரு கட்டமாகத்தான் திருச்சி ரயில்வே சந்திப்பிற்கு எதிரேயுள்ள திறந்த வெளியில் சிங்கத் தமிழன் சின்னச்சாமி என்ற கழகக் காளை தீக்குளித்து மாண்டார். அந்தத் தியாகச் சுடரின் திருவுருவப் படத்தினை 6-12-1964இல் திருச்சி தேவர் மன்றத்தில் நான் திறந்து வைத்தேன்.

பேரறிஞர் அண்ணா 25-1-1965 அன்று நள்ளிரவில் கைது செய்யப்பட்டார். குளித்தலையில் கூட்டத்தை முடித்துக் கொண்டு கோவை கூட்டத்தில் கலந்து கொள்ளப் பயணம் செய்து கொண்டிருந்த என்னை இரவு ஒரு மணி அளவில் கரூர் - பசுபதிபாளையத்தில் வழியிலே வந்து கைது செய்தனர். மற்றும் தலைவர்களும் இரவோடு இரவாகக் கைது செய்யப்பட்டனர். அந்த ஆண்டு குடியரசு தினம் துக்க நாளாகக் கழகத்தினால் கடைப்பிடிக்கப்பட்டது. சிவலிங்கம் என்ற கழகத் தோழர் சென்னையில் 26-1-1965 அன்றும், 27-1-65 அன்று விருகம்பாக்கத்தில் அரங்கநாதன் என்ற கழகத் தோழரும், கீரனூரில் முத்துவும் இந்தித் திணிப்பை எதிர்த்து தங்கள் உயிரைத் தியாகம் செய்தனர். சிதம்பரத்தில் மாணவர்கள் மீது பாய்ந்த ஆட்சியினரின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இராசேந்திரன், இளங்கோவன் என்ற மாணவர்கள் பலியானார்கள். 1965 பிப்ரவரி

தொடக்கத்தில் நாங்கள் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட போதிலும், இரண்டாவது வாரத்தில் தமிழகத்திலே துப்பாக்கிக் குண்டுகளின் வெடிச் சத்தங்களே விண்ணைப் பிளந்தன. ஒரே நாளில் ஒன்பது இடங்களில் துப்பாக்கிச் சூடுகள் நடைபெற்றன. ரயில்கள் நிறுத்தப்பட்டன. பேருந்துகள் கொளுத்தப்பட்டன. தந்திக் கம்பிகள் அறுக்கப்பட்டன. தண்டவாளங்கள் பெயர்க் கப்பட்டன. மாயவரம் சாரங்கபாணி உடலுக்குத் தீ வைத்துக் கொண்டு கல்லூரிக்கு எதிரிலேயே கருகிச் செத்தான். இந்தப் பட்டியலில் அய்யன்பாளையம் வீரப்பன், ரங்க சமுத்திரம் முத்து, விராலிமலை சண்முகம், பீளமேடு தண்டபாணி போன்றவர்களும் இணைக்கப்பட வேண்டியவர்களாவர். 1965ஆம் ஆண்டு பிப்ரவரி 16. மறக்க முடியாத நாள். அன்று தான் என்னை சென்னையிலே கைது செய்து, லாரியிலே ஏற்றி பாளையங்கோட்டை வரை கொண்டு சென்று, தனிமைச் சிறையிலே அடைத்தார்கள். என்னைத் தொடர்ந்து 25-3-1965 அன்று சென்னையில் முரசொலிமாறன் இந்தியப் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டார் என்ற செய்தி பாளைச் சிறையிலே இருந்த என்னை வந்தடைந்தது. இதற்கிடையே சிறையிலே இருந்த என்னைப் பார்க்க அண்ணாவே வருகிறார் என்று கூறினார்கள். அண்ணா சிறையிலே என்னை வந்து பார்த்ததும், பேசியதும், அன்று நெல்லையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், "என் தம்பி, கருணாநிதி தனிமைச் சிறையில் கிடக்கும் இந்த இடம் தான் இனி எனக்கு யாத்திரை செய்ய வேண்டிய புனித பூமி" என்று கூறியதும், அதன் பிறகு "காஞ்சி" இதழிலே என்னைச் சந்தித்தது பற்றி அண்ணா எழுதியதும், என்னாலோ, கழகத்தினாலோ மறக்கக்கூடிய நிகழ்ச்சிகளா? இவற்றையெல்லாம் நினைவு கூர வேண்டிய நாள் தான் ஜனவரி 25, வீர வணக்க நாள்.

1938லும் 1965லும் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டம் பற்றி கூறிக் கொண்டே போகலாம். நேரம் தான் இடம் தரவில்லை. நம்முடைய போராட்டத்தின் விளைவாகத்தான் இந்திய நாடாளுமன்றத்தில் பிரதமர்கள் எல்லாம் நமக்கு வாக்குறுதி அளித்தார்கள். 1959ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 7ஆம் நாள் பண்டித நேரு கூறும்போது, "(இந்தி) திணிப்பு கூடவே கூடாது. இரண்டாவதாக, காலவரம்பற்ற நீண்ட காலத்திற்கு - அது எவ்வளவு காலம் என்பது எனக்குத் தெரியாது - ஆங்கிலத்தை கூட்டு ஆட்சி மொழியாக நீடிக்க விரும்புகிறேன். மக்கள்

விரும்புகிற வரை ஆங்கிலத்தை நீடிக்க வைப்பேன். ஆங்கிலம் இனி நீடிக்கக் கூடாது என்கிற முடிவினை நான் இந்தி பேசும் மக்களிடம் விட மாட்டேன். அதை முடிவு செய்ய வேண்டியது இந்தி பேசாத மக்களே" என்றார். மீண்டும் நேரு அவர்கள் 1963ஆம் ஆண்டும் நாடாளுமன்றத்திலே இந்தி பேசாத மக்களின் பூரண சம்மதத்தைப் பெறுகிற வரையில் ஆங்கிலம் அல்லது இந்தி நிலையில் எந்தவித மாற்றமும் செய்யப்படக் கூடாது என்றார். இதே உறுதி மொழிகளைத்தான் 1965ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12ஆம் தேதியன்று பிரதமராக இருந்த லால்பகதூர் சாஸ்திரி அவர்களும், அதன் பின்னர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களும் தெரிவித்தார்கள். ஆனால் அந்த மூன்று பிரதமர்களும் இந்தி பேசாத மக்களுக்கு அளித்த உறுதிமொழியை இன்றைய பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் காப்பாற்றுவாரா? அல்லது இந்தி, சமஸ்கிருத மொழித் திணிப்பைக் கொண்டு வர முனையும் சிலருடைய தூண்டுதலுக்கு இரையாகி விடுவாரோ என்ற அச்சம் ஏற்பட்டு வரும் நேரத்திலேதான் இந்த ஆண்டு வீர வணக்க நாள் நடைபெறுகிறது. அந்த உறுதிமொழியை அளிக்க வேண்டுமென்று பிரதமரை வலியுறுத்தும் நாளாக இந்த ஆண்டு அமைய வேண்டுமென்பதை தமிழ் மக்களிடையே விளக்கிக் கூறுவதைத்தான் நம்முடைய பேச்சாளர்கள் நாளைய கூட்டத்தில் முக்கியமாக வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முன்னாள் பிரதமர்களின் உறுதிமொழி, இந்நாள் பிரதமர் திரு. நரேந்திரமோடி அவர்களால் காப்பாற்றப்படுமா?

அன்புள்ள,

மு.க.

24-01-2015

3951. அகதிகள் பிரச்சினையில் அ.தி.மு.க. அரசின் பொறுப்பற்ற செயல்!

உடன்பிறப்பே,

தமிழக முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வத்தை எந்த அளவுக்கு அமைச்சர்களும், அதிகாரிகளும், ஆளுங்கட்சியினரும் மதித்து நடந்து கொள்கிறார்கள் என்பதைக் குடியரசு தின விழா அணி வகுப்பின்போதே கண்டோம். அதற்குப் பிறகு, நேற்றையதினம் அவர் பிரதமருக்கு ஒரு கடிதம் எழுதியதாக "தினத்தந்தி" நாளேடு, "டெல்லியில் நடைபெறும் கூட்டத்திற்குத் தமிழக அரசு எதிர்ப்பு - பிரதமர் நரேந்திர மோடிக்கு முதல் அமைச்சர் கடிதம்" என்ற தலைப்போடு முதல் பக்கத்தில் வெளியிட்டிருப்பதைக் கண்டேன். அந்தக் கடிதத்தில் "இலங்கைத் தமிழ் அகதிகள் தாங்களாகவே இலங்கைக்குத் திரும்பிச் செல்வது குறித்து, நாளை நடைபெறவுள்ள அமைச்சர்கள் நிலையிலான கூட்டத்தில் பங்கேற்கத் தமிழக அரசின் மூத்த அதிகாரி ஒருவரை அனுப்பி வைக்குமாறு தமிழக அரசுக்கு மத்திய வெளியுறவு அமைச்சகம் கடிதம் அனுப்பியுள்ளது" என்று தொடங்கி "இலங்கைத் தமிழ் அகதிகள் தாங்களாகவே நாடு திரும்புவது குறித்து நடைபெறவுள்ள அமைச்சர்கள் நிலையிலான ஆலோசனைக் கூட்டம் அவசியமற்றது என தமிழக அரசு கருதுகிறது. எனவே தற்போதைய நிலையில் இந்தக் கூட்டத்தை ஒத்திவைக்க வேண்டும்" என்று முதலமைச்சர் கடிதத்தை முடித்திருக்கிறார்.

இலங்கை அகதிகளும், இலங்கையிலே முன்னாள் அதிபர் ராஜபக்ஷே அரசின் கொடுமையினால் புலம் பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்களும், தாங்கள் மீண்டும் தாயகம் திரும்பி, நிம்மதியாக வாழ வேண்டுமென்று விரும்புவது ஒருபுறம் இருந்தாலும், தற்போது அப்படி அங்கே சென்றால் அமைதியான வாழ்வுக்கான வழி ஏற்படுமா? அல்லது முன்பு போலவே கொடுமை தொடருமா? என்றே தெரியாத நிலையில்; இலங்கைக்குத் திரும்பினால் என்ன நடக்கும்? என்பது தெளிவற்ற தெரியாத நிலையில், மத்திய அரசு முக்கியமானதொரு கூட்டத்தைக்

கூட்டியுள்ளபோது, அதிலே தமிழக மூத்த அதிகாரி ஒருவர் கலந்துகொண்டு, அவதிப்படுகின்ற இலங்கைத் தமிழர்களின் நிலைமைகள் பற்றியும், இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள நிலையில் ஈழத் தமிழர் நல்வாழ்வுக்கு ஆற்றிட வேண்டிய பணிகள் பற்றியும் எடுத்துரைக்கக் கிடைத்த அருமையான வாய்ப்பினை இழக்கின்ற அளவுக்கு முதல் அமைச்சரின் கடிதம் உள்ளது. அந்தக் கூட்டத்திலே கலந்துகொண்டு, தமிழ் அகதிகள் அங்கே சென்றால் இலங்கை அரசு அவர்களை நல்ல முறையில் வாழ வைக்க வேண்டும், அதற்கான உறுதியைத் தர வேண்டும் என்ற செய்தியையாவது தெரிவிக்க வேண்டியது தமிழக அரசின் கடமை அல்லவா?

முதல்அமைச்சர் தன் கடிதத்தில், "தமிழ் அகதிகள் தங்கள் சொந்த நாட்டிற்குத் திரும்புவதற்கு உகந்த சுமூகமான நிலை, இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இப்போதும் இல்லை என்பதைப் பதிவுசெய்ய விரும்புகிறேன்" என்றும் எழுதியிருக்கிறார். இந்தக் கருத்தையே, டெல்லிக்குச் சென்று, அந்தக் கூட்டத்திலே தமிழக அரசின் கருத்தாகத் தெரிவித்து, அதற்கொரு முடிவினைக் காண முயற்சித்திருக்கலாம் அல்லவா?

மேலும் முதலமைச்சர் தன்னுடைய கடிதத்தில், "மதிப்பிற்குரிய எங்கள் தலைவர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலில் செயல்படும் தமிழக அரசு" என்று தொடங்கி, "இலங்கைத் தமிழ் அகதிகள் தங்குவதற்கு, மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழக அரசு இட வசதியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது" என்றும், இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு அ.தி.மு.க. ஆட்சியிலேதான் சலுகைகள் செய்து தரப்பட்டன என்றும் டெல்லிக்குப் பிரதமருக்கு எழுதிய கடிதத்திலே பட்டியலிட்டிருக்கிறார். அகதிகளாக உள்ள இலங்கைத் தமிழர்களுக்கு அ.தி.மு.க. ஆட்சியிலேதான் சலுகைகள் செய்யப்பட்டன என்றும், அதற்கு முன்பிருந்த கழக ஆட்சியிலே எதுவும் செய்யப்படவில்லை என்பது போலவும் பன்னீர்செல்வம் எழுதிய காரணத்தால்தான், இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு தி.மு.கழக ஆட்சியில் என்னென்ன செய்யப்பட்டன என்பதை நினைவு கூர்ந்திட வேண்டிய கட்டாயத்திற்கு நான் வந்தேன்.

24-10-2009 அன்று "இந்து" நாளிதழில் "Facilities at Refugee Camps good : U.S. Consul-General" என்ற தலைப்பில் - "U.S.

Consul-General Andres T. Simkin, on Friday expressed satisfaction with the facilities provided to refugees living in camps in Tamil Nadu" என்ற வரிகளைத்தான் இந்த நேரத்தில் பன்னீருக்கு நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். கழக ஆட்சியில் இலங்கைத் தமிழ் அகதிகளுக்காகச் செய்யப்பட்ட சலுகைகளைச் சுருக்கமாக நினைவூட்ட வேண்டுமேயானால், இதோ பட்டியல் :-

தமிழ்நாட்டில், 26 மாவட்டங்களில் 115 முகாம்களில் (2 சிறப்பு முகாம்கள் உள்பட) இலங்கைத்தமிழர்கள் குடியமர்த்தப்பட்டிருந்தனர். இவற்றில், 19,340 குடும்பங்களைச் சார்ந்த 73,241 பேர் முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்தனர். சுமார் 11,288 குடும்பங்களைச் சார்ந்த 31,802 பேர் முகாம்களுக்கு வெளியில் தங்கியிருந்தனர்.

2006-ஆம் ஆண்டில் தி.மு.க. ஆட்சியில், ரூ. 2 கோடியே 80 லட்சம் செலவில், 9562 வீடுகளின் மேற்கூரைகள் சீர் செய்யப்பட்டன. ரூ.3 கோடி செலவில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டன. 86 முகாம்களில் அடிப்படை வசதிகளான கழிப்பறைகள் மற்றும் குடிநீர் வசதிகள் ரூ.9 கோடியே 12 லட்சம் செலவில் செய்துகொடுக்கப்பட்டன. 2007-2008ஆம் ஆண்டில் 50 முகாம்களில் புதியதாகக் கழிப்பறைகள் மற்றும் குடிநீர்வசதிகள் ரூ.5 கோடியே 24 லட்சம் செலவில் செய்து முடிக்கப்பட்டன. 2008ம் ஆண்டில் 72 முகாம்களில் வீடுகள் புதுப்பிக்கவும், மற்றும் கழிப்பறைகள், குடிநீர் வசதிகள் செய்து கொடுக்கவும் ரூ.3 கோடியே 12 லட்சம் செலவிடப்பட்டது. 2009-10ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ஐந்து கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு இத்தகைய பராமரிப்பு பணிகளைச் செய்வதற்காகச் செய்யப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டான் என்னுமிடத்தில் 96 வீடுகள் ரூ.1.20 கோடி செலவிலும், நாட்டரசன்கோட்டை, சென்னலகுடியில் 90 வீடுகள் ரூ.30.80 இலட்சம் செலவிலும், வேலூர் மாவட்டம் குடியாத்தம் முகாமில் 62 வீடுகள் ரூ.21.08 இலட்சம் செலவிலும், ஈரோடு மாவட்டம் காங்கேயத்தில் 63 வீடுகள் ரூ.22.68 இலட்சத்திலும், திருநெல்வேலி மாவட்டம் பாவூர்சத்திரத்தில் 26 வீடுகள் ரூ.8.84 இலட்சத்திலும் கட்டிமுடிக்கப்பட்டு இலங்கைத் தமிழர்கள் குடியமர்த்தப்பட்டனர்.

கரூர் மாவட்டம், ஆச்சிமங்கலம் என்ற இடத்தில் ரூ.1.16 கோடி செலவில் 450 வீடுகள் கட்ட அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டன. கோவை மாவட்டம், வேடர் காலனி முகாமில் புதியதாக 150 வீடுகள் ரூ.86 இலட்சம் செலவிலும், திருமூர்த்தி நகர் முகாமில் புதியதாக 115 வீடுகள் ரூ.98 இலட்சம் செலவிலும், வேலூர் மாவட்டம் சின்னப்பள்ளிக்குப்பம் முகாமில் புதியதாக 87 வீடுகள் ரூ.68.80 இலட்சம் செலவிலும், திருநெல்வேலி மாவட்டம் நாராயணம்மாள்புரத்தில் புதியதாக 9 வீடுகள் ரூ.7.74 இலட்சம் செலவிலும், ஆலடியூர் முகாமில் 46 வீடுகள் ரூ.39.56 இலட்சம் செலவிலும், அத்தியடிப்பிள்ளையார் கோவில் அகதிகள் முகாமில் 60 வீடுகள், ரூ.51.60 இலட்சம் செலவிலும் புதியதாகக் கட்ட அனுமதி வழங்கப்பட்டு பணிகள் துவங்கப்பட்டன.

அகதிகள் முகாம்களில் வசிப்பவர்களுக்கு அரசின் சார்பில் ரொக்க நிதி உதவி அ.தி.மு.க. ஆட்சியில் எந்த அளவுக்கு உயர்த்தப்பட்டது என்பதையும் முதல் அமைச்சர் டெல்லிக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்திருக்கிறார். ஆனால் 1.8.2006 முதலே, தி.மு.கழக ஆட்சியில், மத்திய - மாநில அரசுகள் வழங்கும் பணக் கொடை குடும்பத் தலைவர்களுக்கு ரூபாய் 200 என்பதிலிருந்து 400 ரூபாயாகவும், குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு வயது வந்தோருக்கும் ரூபாய் 144 என்பதிலிருந்து ரூபாய் 288 ரூபாயாகவும், குடும்பத்தில் உள்ள முதல் குழந்தைக்கு ரூபாய் 90 என்பதிலிருந்து 180 ரூபாயாகவும், குடும்பத்தில் உள்ள மற்ற குழந்தைகளுக்கு ரூபாய் 45 என்பதிலிருந்து 90 ரூபாயாகவும் இரண்டு மடங்காக உயர்த்தப்பட்டு வழங்கப்பட்டது என்பதைப் பன்னீர்செல்வத்தின் கவனத்திற்கு அதிகாரிகள் கொண்டு வரவில்லை போலும்!

கர்ப்பிணிப் பெண்களுக்கான; டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறுக்கான ஆறாயிரம் ரூபாய் நிதியுதவித் திட்டம் 2007 முதல் முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு, சுமார் 1000 பேருக்கு 2007-08-ம் ஆண்டிலும், 2242 நபர்களுக்கு 2008-09ம் ஆண்டிலும் வழங்கப்பட்டது.

முதலமைச்சர் பன்னீர்செல்வம் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில், இலங்கைத் தமிழ் அகதிகளின் குழந்தைகள் 12ஆம் வகுப்புவரை கட்டணமில்லா கல்விபயில தகுதி அளிக்கப்பட்டதுடன் அவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள்,

பாடப் புத்தகங்கள் எல்லாம் வழங்குவதற்கும் அவர்களுடைய ஆட்சியிலே அறிவிக்கப்பட்டதாக எழுதியிருக்கிறார். ஆனால் தி.மு. கழக ஆட்சிக் காலத்திலேயே முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் இல்லத்து மாணவ மாணவியர்களுக்கு 12ம் வகுப்பு வரை இலவசக் கல்வியும், இலவசப் புத்தகம், நோட்டுப் புத்தகம், சீருடை, மதிய உணவு மற்றும் +1 மாணவ மாணவியருக்கு இலவச மிதிவண்டியும் வழங்கப்பட்டது. 2008-09-ஆம் ஆண்டில் 20,106 மாணவ மாணவியர்களும், 2009-10இல் 19,737 மாணவ மாணவியர்களும் பயன்பெற்றனர் என்பதுதான் உண்மை.

2008-09 மற்றும் 2009-10-ஆம் ஆண்டுகளில் கலைக் கல்லூரிகளில் இலங்கை மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள உரிய அனுமதி மற்றும் ஆணைகள் வழங்கப்பட்டு 2008-09ஆம் ஆண்டில் 917 மாணவ மாணவியர்களும், 2009-10ல் 1084 மாணவ மாணவியர்களும் பயின்றனர்.

2009-10ஆம் ஆண்டில் இலங்கைத் தமிழ் மாணவ மாணவியரைச் சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் சேர்க்க அரசின் ஆணைகள் வழங்கப்பட்டன.

அனைத்து முகாம்களிலும் உள்ள இலங்கைத் தமிழர்களுக்குப் பொதுச் சுகாதார வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இலங்கைத் தமிழர் சிறப்பு நிவாரண நிதியில் இருந்து ரூ.15,000/- விபத்து மற்றும் உயிர்காக்கும் மருத்துவச் சிகிச்சைகளுக்காக வழங்கப்பட்டது.

2006ஆம் ஆண்டிற்கு முன் வரை இரவு 6 மணியில் இருந்து காலை 6 மணி வரை மட்டுமே மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது. 2006-ஆம் ஆண்டிற்குப் பிறகு 24 மணி நேரமும் தொடர்ந்து மின்சாரம் வழங்க கழக ஆட்சியில் ஆணையிடப்பட்டு வழங்கப்பட்டது.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்கள் தங்கள் வாழ்வாதாரத்தினைப் பெருக்கிக்கொள்ளும் பொருட்டுக் காலை 6 மணி முதல் மாலை 6 வரை வேறு இடங்களுக்கு சென்று வேலை செய்ய அனுமதிக்கப்பட்டனர். இது தவிர வெளியூர்களில் சென்று தங்கி வேலை செய்ய விரும்புபவர்களுக்குச் சிறப்பு அனுமதிகள் வழங்கப்பட்டுப் பணக்கொடை வழங்கப்படும் நாளில் மட்டும் வந்து பணக்கொடைகள் பெற்றுச் செல்ல ஆணைகள் வழங்கப்பட்டன.

அந்த முகாம்களில் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கு ஒரு நிரந்தரமான விடிவு காலம் பிறக்க வேண்டும் என்பதற்காக 26-9-2009 அன்று காஞ்சியில் நடைபெற்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவில் இறுதித் தீர்மானமாக துணை முதல்வர் தம்பி மு.க. ஸ்டாலின் படித்தபோது, "இவற்றிற்கெல்லாம் மேலாக; இவர்களை இந்தியக் குடியுரிமைச் சட்டம் மற்றும் தொடர்புடைய ஏனைய சட்டங்களின்கீழ், மறு குடியமர்த்தும் முயற்சியாக மத்திய அரசோடு கலந்து பேசி; அவர்கள் விருப்பம் தெரிவித்தால் தமிழகத்திலே நிரந்தரமாகக் குடியிருக்க வழிவகை செய்துதர வேண்டுமென்றும், அவர்கள் தங்குவதற்கும் அவர்களின் வாழ்வாதாரத்திற்குமான ஏற்பாடுகளையும் செய்து தர வேண்டுமென்று" கேட்டுக் கொண்டதோடு மட்டுமல்லாமல், அதற்கடுத்த மறுநாளே 27-9-2009 அன்று நான் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில், "I request your kind intervention on humanitarian grounds and use of your esteemed offices to resolve this larger issue occupying the centre stage of attention of the Tamil people enabling the permanent settlement of Sri Lankan Tamil Refugees in Tamil Nadu. Once their stay is legally regularised, the Government of Tamil Nadu will be able to take up necessary steps for the betterment of their livelihood, economically and socially" என்று எழுதியிருந்தேன்.

இலங்கைத் தமிழர் அகதிகள் முகாம்களில் வாழ்வோரின் நிலை குறித்து அறிய தி.மு. கழக ஆட்சியில் அமைச்சர்களையெல்லாம் நேரில் சென்று பார்த்து நிலைமை அறிந்து எனக்கு அறிக்கை தர வேண்டுமென்று என் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்திலேயே முடிவெடுத்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தி.மு.கழக அரசைப் பொறுத்தவரையில் - அவர்கள் இலங்கைத் தமிழ் அகதிகள் அல்ல; அவர்களும் தமிழர்கள்தான் - நம்மோடு தொப்புள் கொடி உறவு கொண்டவர்கள்தான் - அவர்களை வாழ்விக்கச் செய்யும் அனைத்து முயற்சிகளும் நம்மை நாமே வாழ்வித்துக் கொள்ள மேற்கொள்ளும் முயற்சிகள்தான் என்ற உணர்வுபூர்வமான நோக்கோடு செயல்பட்டது என்பதுதான் உண்மை. ஆனால் பன்னீர்செல்வம் தற்போது பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில், அவருடைய மரியாதைக்குரிய அம்மா அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலே தீர்மானம்

நிறைவேற்றியதாகவும் தெரிவித்திருக்கிறார். உண்மைதான்! "விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை இலங்கை அரசு உடனடியாகக் கைது செய்து இந்திய அரசிடம் ஒப்படைப்பதற்கு மத்திய அரசு உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்; தடை செய்யப்பட்ட புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த எவரையும் இந்தியாவுக்குள் நுழைய அனுமதிக்கக்கூடாது. இலங்கை அரசால் பிரபாகரனைப் பிடித்து நாடு கடத்த இயலவில்லை யென்றால் இலங்கை அரசின் அனுமதியோடு, இந்திய ராணுவத்தை இலங்கை அரசின் உதவிக்கு அனுப்பி, பிரபாகரனைச் சிறைபிடிப்பதற்கு உரிய முயற்சிகளை மத்திய அரசு மேற்கொள்ளவேண்டும்" என்றெல்லாம் ஜெயலலிதா தமிழகச் சட்டப்பேரவையில் தீர்மானங்களை முன்மொழிந்து நிறைவேற்றிய நிகழ்வுகளை மறக்க முடியுமா? அவைகளைத்தான் மறைமுகமாகப் பன்னீர்செல்வம் நினைவுபடுத்தியிருக்கிறார் என்று கருதுகிறேன்.

இலங்கைத் தமிழ் அகதிகள் பிரச்சினையில், அ.தி.மு.க. ஆட்சியில் கடந்த ஆண்டு செங்கல்பட்டு சிறப்பு முகாமிலிருந்து பூவிருந்தவல்லி முகாமிற்கு மாற்றப்பட்ட செந்தூரன் என்பவர், சிறப்பு முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள அகதிகளை விடுதலை செய்ய வேண்டுமென்ற கோரிக்கையினை முன்வைத்துத் தொடர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டதையும், அவரது உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்டதையும், தமிழக அரசு உடனடியாக இந்தப் பிரச்சினையில் தலையிட்டுச் செந்தூரன் உயிரைக் காப்பதற்கான முயற்சியிலே ஈடுபட வேண்டுமென்று கழகத்தின் சார்பில் நான் குறிப்பிட்டதையும் மறக்க முடியுமா?

இவற்றையெல்லாம் மறைத்துவிட்டு, பிரதமருக்கு முதலமைச்சர் எழுதிய கடிதத்தில் தேவையில்லாமல் "அம்மா" புகழ் பாடியிருப்பதையும், டெல்லி கூட்டத்திலே கலந்து கொண்டு, இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு உரிய நிவாரணங்கள் விரைவில் காணப்பட வேண்டுமென்று நேருக்கு நேர் நின்று குரல் எழுப்பாமல், அந்தக் கூட்டத்தைத் தவிர்ப்பதற்கு நொண்டிச் சமாதானம் கூறிக் கடிதம் எழுதியிருப்பதையும் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

31-1-2015

3952. நம்பிக்கை வீண் போகலாமா?

உடன்பிறப்பே,

13-2-2015- திருவரங்கம் தொகுதியில் இடைத் தேர்தல்! ஏன் இந்த இடைத் தேர்தல்? அந்தத் தொகுதி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, முதல் அமைச்சர் பொறுப்பிலே அமர்ந்தவர் மீதான சொத்துக் குவிப்பு வழக்கில் சிறப்பு நீதிமன்றம், நான்காண்டு சிறைத் தண்டனையும், நூறு கோடி ரூபாய் அபராத மும் விதித்த காரணத்தால், அவர் வகித்த முதலமைச்சர் பதவியும், ஏன் திருவரங்கம் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் என்ற தகுதியும் காலியான நிலையில், அந்தத் தொகுதிக்கான இடைத் தேர்தல் திணிக்கப்பட்டு நடைபெறுகிறது. அந்தத் தொகுதி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் மீது சிறப்பு நீதிமன்றத்தால் அளிக்கப்பட்ட தண்டனையே, தற்போது அந்தக் கட்சிக்கு மீண்டும் வாக்களித்து ஏமாறக்கூடாது என்பதற்கான தக்க அடிப்படையாக அமைந்திருக்கிறது.

அ.தி.மு.க. வேட்பாளருக்கு ஆதரவு கேட்டு ஜெயலலிதா எழுதிய கடிதம் ஒன்று, தொகுதியில் அ.தி.மு.க. சார்பில் வழங்கப்படுவதாக ஏடுகளில் செய்தி வந்துள்ளது. அந்தக் கடிதத்தில், "என் மீது போடப்பட்ட வழக்கின் தீர்ப்பின் காரணமாக ஏற்படுத்தப்பட்ட இடைத்தேர்தல். சதியும், விதியும் இணைந்து செய்த சதிராட்டத்தால் விளைந்திட்ட இடைத்தேர்தல்" என்று ஜெயலலிதா கூறியிருக்கிறார். நீதிமன்றங்கள் அளித்த தீர்ப்பைத்தான் ஜெயலலிதா இவ்வாறு சதியென்று விமர்சித்திருக் கிறார் என்பதை நீதிமன்றங்கள்தான் கவனிக்க வேண்டும். அவருக்குக் கிடைத்த தண்டனை விதியோ, சதியோ அல்ல; அவரே தன்னிச்சையாகத் தேடிக் கொண்டதே தவிர வேறல்ல!

திருவரங்கம் தொகுதியில் கழகத்தின் சார்பில் நம்முடைய உடன்பிறப்புகள் எந்த அளவுக்கு ஆக்கப் பூர்வமாக ஆர்வத்தோடு பணியாற்றுகிறார்கள் என்பதை அன்றாடம் நான் அறிந்து வருகிறேன். பெரியவர் பக்தவத்சலம் அவர்களாலேயே,

"சிங்கிள் டீ குடித்து விட்டு தேர்தல் பணியாற்றக்கூடிய கழகத் தோழர்கள்" என்ற பாராட்டுக்கு உரியவர்கள் அல்லவா நமது உடன்பிறப்புகள். அந்த அளவுக்கு இந்த இடைத்தேர்தலிலும் கழகத்தினர் ஓடியாடிப் பணியாற்றுவதை அறிந்து நான் மகிழ்ச்சி கொள்கிறேன். ஒரேயொரு தொகுதி இடைத்தேர்தல் என்பதாலும், என்னுடைய உடல்நிலை காரணமாகவும் நான் நேரடியாகத் தேர்தல் பிரச்சாரத்திற்கு வர வேண்டாமென்று கழகப் பொதுச் செயலாளர் இனமானப் பேராசிரியரும், கழகப் பொருளாளர் தம்பி மு.க. ஸ்டாலினும் வலியுறுத்தி, என்னை சிரமப்படக் கூடாது என்று கூறித் தடுத்து விட்டார்கள். நான் அங்கே வரவில்லை என்றாலும், என்னுடைய நினைவு முழுவதும் இந்த இடைத்தேர்தலைப் பற்றியேதான் இருக்கும் என்பதை நீ நன்றாகவே அறிவாய்! நான் நேரில் வராவிட்டாலும், நம்முடைய பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் வருகிறார்; தேர்தல் பணிகளை பொருளாளர், தம்பி ஸ்டாலினே நேரில் வந்து தொடங்கி வைத்திருப்பதோடு, தேர்தல் பணிகளைத் தொடர்ந்து ஆய்வு செய்து முடுக்கி விட்டு வருகிறார். முதன்மைச் செயலாளர் தம்பி துரைமுருகன் அங்கே வந்திருக்கிறார்; துணைப் பொதுச் செயலாளராகப் புதிதாகப் பொறுப்பேற்றுள்ள திண்டுக்கல் ஐ. பெரியசாமி அங்கே பிரச்சாரம் செய்து வருகிறார். தொடர்ந்து மகளிர் அணிச் செயலாளர் கவிஞர் கனிமொழி, எம்.பி., தலைமையில் மகளிர் அணியினர் பிரச்சாரத்தில் அங்கே ஈடுபடவிருக்கிறார்கள். மற்றும் பல்வேறு அணிகளைச் சேர்ந்தவர்கள் எல்லாம் இடைத் தேர்தல் பணிகளை முறையே ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள். கழகத்தைச் சேர்ந்த கலையுலகத்தினர் திருவரங்கத்தில் பிரச்சாரம் செய்யவிருக்கிறார்கள். பொருளாளர் தம்பி ஸ்டாலின் இறுதிக் கட்டத்திலும் அங்கே பிரச்சாரத்தில் ஈடுபட வுள்ளார். திருவரங்கம் தொகுதி இடைத் தேர்தல் பொறுப்பினை ஏற்றிருக்கும் தேர்தல் பணிக் குழுத் தலைவர், தம்பி கே.என்.நேரு இரவு பகல் பாராமல் பம்பரமாகச் சுற்றிச்சுழன்று பணியாற்றி வருவதோடு, அவருக்குத் துணையாகப் பணியாற்றிடும் குழுவினரையும் நன்கு வேலை வாங்கி வருகிறார் என்பதை பலர் வாயிலாக நான் அறிந்திருக்கிறேன். மற்ற மாவட்டக் கழகச் செயலாளர்கள் அனுபவப்பட்டவர்களும், புதிதாகப் பொறுப்பேற்றிருப்போரும் திருவரங்கத்திலேயே தங்கி, வீடு வீடாகச் சென்று வாக்காளர்களிடம் வாக்குக் கேட்டுக்

கொண்டிருக்கும் செய்திகளும் எனக்கு அவ்வப்போது வந்து கொண்டே உள்ளன.

ஆளுங்கட்சியின் அமைச்சர்கள் அங்கே படையெடுத்து தாங்கள் தவறான வழியில் சம்பாதித்துக் குவித்திருக்கும் ஊழல் பணத்தை வாரி இறைத்து பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளார்கள் என்று செய்தி வந்துள்ளது. திருவரங்கம் சட்டசபைத் தொகுதிக்கு உட்பட்ட பேட்டைவாய்த்தலை கிராமத்தில், தென்னந் தோப்பில் அ.தி.மு.க. சார்பில் மிகப் பெரிய சமையல் அறை, உணவு அருந்தும் கூடம் அமைக்கப்பட்டு, அங்கே பிரியாணி மற்றும் பல்வேறு வகையான உணவு தயாரிக்கப்பட்டு, ஆயிரக்கணக்கான வாக்காளர்களுக்கு மூன்று வேளை உணவு வழங்கப்படுவது பற்றியும், அதுபற்றி காவல் துறையினரிடம் கூறியும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது பற்றியும் தேர்தல் ஆணையத்திடம் கழகத்தின் சார்பில் புகைப்பட ஆதாரங்களோடு புகார் தரப்பட்டுள்ளது. தமிழகத் தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. சந்தீப் சக்சேனா, இந்தப் புகார் பற்றி சம்பந்தப்பட்ட இடத்திற்கு நேரில் சென்று விசாரிக்கும்படி திருச்சி மாவட்ட கலெக்டருக்கு உத்தரவிட்டிருப்பதாகவும், வாக்காளர்களுக்கு உணவு வழங்கியிருந்தால், அது குற்றம் என்றும், அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்படும் என்றும் தெரிவித்திருக்கிறார். ஆனால் திருச்சி மாவட்டக் கலெக்டர் தேர்தல் அறிவிப்புக்கு சில நாட்களுக்கு முன்புதான் மாற்றப்பட்டு அங்கே பொறுப்பேற்றுள்ளார். அவர் ஏற்கனவே, தற்போது முதல்வராக உள்ள பன்னீர்செல்வம் அவர்களின் சொந்த மாவட்டமான தேனி மாவட்டத்தின் கலெக்டராக இருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அமைச்சர்கள் எல்லாம் திருவரங்கத்தில் முகாமிட்டிருக்கின்ற காரணத்தால் தலைமைச் செயலகத்தில் எந்தப் பணிகளும் நடைபெறாமல் முடங்கிக் கிடக்கின்றன என்று ஏடுகளிலே செய்திகள் வந்துள்ளன. பேரறிஞர் அண்ணா நினைவுநாளையொட்டி, அண்ணா நினைவிடத்திற்கு முதலமைச்சரைத் தவிர வேறு எந்த அமைச்சர்களும் வரவில்லை. அந்த நாளில் ஆண்டுதோறும் கோவில்களில் நடைபெறும் சமபந்தி போஜனமும் இந்த ஆண்டு நடைபெறவில்லை. இன்னும் இடையிலே உள்ள இந்த ஐந்தாறு நாட்களில் ஆளுங்கட்சியினரும், அமைச்சர்களும் என்னென்ன வன்முறைச் சேட்டைகளில் அங்கே ஈடுபடுவார்களோ? அமைச்சர்கள் தேர்தல் பணியிலே ஈடுபட்டிருப்பதால், அந்த

அமைச்சர்களின் கீழ் பணியாற்றும் அரசு அதிகாரிகள் ஆளுங்கட்சி வேட்பாளருக்கு ஆதரவாகச் செயல்படுகிறார்கள். போலி வாக்காளர்களை நீக்க வேண்டுமென்று தேர்தல் ஆணையத்திடம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தரப்பட்ட கோரிக்கை மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாத தால், நம்முடைய கழக வேட்பாளர் தம்பி ஆனந்த் சார்பில் உயர் நீதிமன்றத்தில் கழக வழக்கறிஞர்கள் கிரிராஜன், நீலகண்டன், பரந்தாமன் ஆகியோர் வழக்கு ஒன்றினைத் தாக்கல் செய்தார்கள். அந்த வழக்கு தலைமை நீதிபதி கவுல், நீதிபதி சுந்தரேசன் ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்துள்ளது. கழகத்தின் சார்பில் வாதாடிய நம்முடைய வழக்கறிஞர் தம்பி வில்சன், "வாக்காளர் பட்டியலில் போலி வாக்காளர்கள் அதிகமாக உள்ளனர். இறந்தவர்கள், போலி வாக்காளர் கள், ஒரே வாக்காளர் பெயர் இரண்டு முறை வருவது என்பது போன்ற முறைகேடுகள் பரவலாக உள்ளன. போலி வாக்காளர் பட்டியலை நீக்கி விட்டுத்தான் தேர்தல் நடத்த வேண்டும்" என்று கூறியிருக்கிறார். இந்த வழக்கில் உயர் நீதிமன்றத்தின் முதன்மை அமர்வு, போலி வாக்காளர்களை நீக்கி, திருத்தப்பட்ட கூடுதல் வாக்காளர் பட்டியலை தேர்தலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு வெளியிட வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறது. கழக வழக்கறிஞர்கள் தேவராஜ், முத்துக்குமார், அருண், அனிதா ஆகியோர் இந்த வழக்கில் ஆஜராகியிருக்கிறார்கள்.

ஜனநாயக முறைக்கு எதிராக இந்த ஆட்சியினர் தொடர்ந்து நடத்தி வரும் அராஜகங்களுக்கு ஓர் எச்சரிக்கை, அறிவுறுத்தல் செய்யப்பட வேண்டாமா? அதற்காகத்தான் இந்த இடைத் தேர்தல்! இந்தத் தேர்தலிலும் அவர்களையே வெற்றி பெறச் செய்து விட்டால், தங்களை எதிர்க்க யாருமே இல்லை என்ற அகம்பாவத்தோடும், ஆணவத்தோடும் மேலும் மேலும் மக்கள் விரோத - ஜனநாயக விரோதச் செயல்களில் ஆளுங்கட்சியினர் ஈடுபட்டு ஆட்டம்போட நேரிடும்.

அ.தி.மு.க. ஆட்சியின் சாதனைகள்தான் என்ன? மின் கட்டணம் உயர்ந்து விட்டது - அந்த மின்சாரமும் எப்போது வரும் என்று தெரியாது - ஆட்சிக்கு வந்த நாள் முதல் இனிமேல் மின் வெட்டு இருக்காது என்ற வாய்ச்சவடால்தான் பல முறை கூறப்படுகிறதே தவிர, ஒழுங்கான மின்சாரத்திற்கு வழியில்லை. அதன் காரணமாக தொழிற்சாலைகள் எல்லாம் மூடு விழா

நடத்திக் கொண்டிருக்கின்றன. "நோக்கியா" போய் விட்டது, "பாக்ஸ்கான்" போய் விட்டது, அதைப் பற்றிக் கவலைப்படுகின்ற ஆட்சி தமிழகத்திலே கிடையாது. பால் விலை உயர்வு, ஆவின் பால் நிறுவனத்திலோ ஊழலோ ஊழல். ஆளுங்கட்சியே அதை உணர்ந்து அதற்குப் பொறுப்பேற்ற அமைச்சரையே வீட்டுக்கு அனுப்பி விட்டது என்றால், எந்த அளவுக்கு ஊழல் அங்கே நடைபெற்றது என்பதை அ.தி.மு.க.வே ஒப்புக் கொண்டு விட்டது என்றுதானே பொருள். பேருந்துக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. விலைவாசி உயர்வு கடந்த மாதம் துவரம் பருப்பு ஒரு கிலோ 85 ரூபாய்க்கு விற்றது, தற்போது 95 ரூபாய்; உளுத்தம் பருப்பு கடந்த மாதம் கிலோ 80 ரூபாய், இந்த மாதம் 90 ரூபாய்; பாசிப் பருப்பு கடந்த மாதம் 105 ரூபாய், இந்த மாதம் 115 ரூபாய்; கடலைப் பருப்பு கடந்த மாதம் 45 ரூபாய், இந்த மாதம் 55 ரூபாய்; மலைப் பூண்டு 120 ரூபாயிலிருந்து 150 ரூபாயாகவும், நாட்டுப் பூண்டு 90 ரூபாயிலிருந்து 130 ரூபாயாகவும் விலை உயர்ந்துள்ளது. சிமெண்ட் விலை கேட்கவே தேவையில்லை. "அம்மா" சிமெண்ட் என்றெல்லாம் அறிவித்தார்கள். கோவையில் கடந்த நவம்பர் மாதம் ஒரு மூட்டை சிமெண்ட் 330 ரூபாய் முதல் 340 ரூபாய் வரை விற்றது. கடந்த டிசம்பர் மாதம் 9ஆம் தேதியன்று ஒரு மூட்டை சிமெண்ட் விலை 370 ரூபாய், 12ஆம் தேதி 375 ரூபாய், 26ஆம் தேதி 380 ரூபாய், ஜனவரி 3ஆம் தேதி 385 ரூபாய் என்று படிப்படியாக உயர்ந்து, நேற்று முன்தினம் முதல் சிமெண்ட் மூட்டைக்கு 10 ரூபாய் உயர்த்தப்பட்டு, 395 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. சில்லரை விற்பனைக் கடைகளில் 400 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. தமிழகத்திலிருந்து கர்நாடகா மாநிலத்திற்கு அனுமதி இல்லாமல் மணல் கடத்திச் சென்ற 258 லாரிகளை மாநில எல்லையான அத்திப்பள்ளியில், கர்நாடக வருவாய்த் துறை அதிகாரிகள் நேற்று பறிமுதல் செய்திருக்கிறார்கள். தமிழக அதிகாரிகள் கண்டுகொள்ளாமல் விட்டது கர்நாடகாவில் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. மவுலிவாக்கத்தில் கட்டப்பட்ட 11 மாடிக் கட்டிடம் இடிந்து விழுந்து அறுபதுக்கு மேற்பட்டவர்கள் இறந்து விட்டார்கள். இதோ இரண்டு நாட்களுக்கு முன்பு ராணிப்பேட்டை அருகே சிப்காட் தொழிற்சாலை அருகில் பத்து தொழிலாளர்கள் கழிவு நீரில் மூழ்கிச் செத்திருக் கிறார்கள். முன்னாள் முதலமைச்சர் பொறுப்பிலே இருந்த போது நாளேடுகளில் அன்றாடம் தன் பெயரில் அறிவிப்பு

வர வேண்டுமென்பதற்காக, பேரவையில் ஒவ்வொரு நாளும் 110வது விதியின் கீழ் ஏதோ ஒரு அறிக்கையைப் படித்தார். அந்த அறிக்கையிலே அறிவித்த திட்டங்கள் எல்லாம் என்னவாயிற்று? பேரவையிலே அதுபற்றிக் கேட்ட போது, தற்போது முதல்வராகப் பொறுப்பேற்றுள்ள ஓ. பன்னீர்செல்வம் ஒரு சில அறிவிப்புகளைப் பற்றி மட்டும் பதில் அளித்தாரே தவிர எஞ்சிய அறிவிப்புகள் என்னவாயின என்று கூறவில்லை. சட்டம், ஒழுங்கு சந்திக்குச் சந்தி சிரிப்பாய்ச் சிரிக்கிறது. செயின் பறிப்பு, வழிப்பறி, கொலை, கொள்ளை நடக்காத நாளே அ.தி.மு.க. ஆட்சியில் கிடையாது. இன்று ஒரு நாளில் மட்டும் வெளிவந்த செய்திகளைப் பார்த்தால் - "தினமலர்" நாளேட்டிலேயே "நேற்றைய செயின் பறிப்பு நிலவரம்" என்ற தலைப்பில் கட்டம் கட்டி, பட்டியலிட்டு செய்தி வெளியிட்டிருக்கிறது. மேலும் அந்தப் பத்திரிகையில்,

"70 அலைபேசிகள், அரிசி மூட்டை, 10 பேன்ட்டுகள் திருட்டு" என்ற தலைப்பில் ஒரு செய்தி! "தினமணி" இதழ், "7 கடைகளின் பூட்டை உடைத்து திருட்டு" என்ற தலைப்பில் ஒரு பட்டியலை வெளியிட்டுள்ளது. "தினத்தந்தி" நாளேடு, "சேலையூர் அருகே வீட்டில் தனியாக இருந்த இளம்பெண்ணை கட்டிப்போட்டு பத்து சவரன் நகை கொள்ளை" என்ற தலைப்பில், 18 சம்பவங்களை வரிசையாகத் தொகுத்து மூன்று பத்தியாகச் செய்தி வெளியிட்டிருக்கின்றது. இது தவிர, மேலும் அந்த இதழில் "மயக்க மருந்து தெளித்து வியாபாரியிடம் ஒன்பதரை லட்சம் ரூபாய் பறிப்பு" என்ற செய்தியும், "நான்கு கோவில்களில் உண்டியல் உடைப்பு" என்ற செய்தியும், "அயனாவரத்தில் கடைகளில் பூட்டை உடைத்து துணிகரக் கொள்ளை" என்ற செய்தியும், "குரோம்பேட்டையில் பெண் என்ஜினீயரிடம் நகை பறிப்பு" என்ற செய்தியும் அ.தி.மு.க.வின் ஆட்சித் திறமை பற்றி பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. நேற்றையதினம் ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவர் கடற்கரை சாலையில் காலையில் "வாக்கிங்" சென்ற போது கொள்ளையர் அவரைப் பிடித்துத் தள்ளி கையில் இருந்த "செல்போனை"ப் பிடுங்கிச் சென்றிருக்கிறார்கள்.

ஆவடி, திருமுல்லை வாயல், அண்ணா நகரில் 42 வயதான அன்னலதா என்பவரை வீடு புகுந்து கொள்ளையர் தாக்கி, அதனால் கோமா நிலைக்குச் சென்ற பெண் நினைவு திரும்பாமல் நேற்றிரவு இறந்திருக்கிறார். எழும்பூர்

நீதிமன்றத்திலேயே சில நாட்களுக்கு முன்பு வழக்கறிஞர் ஒருவர் கொலை செய்யப்பட்டார். கும்முடிப்பூண்டி அருகே நேற்றைய தினம் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த தாய் லட்சுமியும், மகள் நிரோஷாவும் வெட்டிக் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். தமிழகமே பாதுகாப்பற்ற பூமியாக மாறி வரும் இந்த லட்சணத்தில்தான் தமிழகத்திலே அ.தி.மு.க. ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

புதிதாகப் பொறுப்பேற்ற முதலமைச்சர் என்ன செய்கிறார் என்றே தெரியவில்லை! பாவம், அவர் முதலமைச்சராகப் பொறுப்பேற்று 125 நாட்கள் ஆன போதும், இன்னமும் முதலமைச்சர் அறைக்குச் செல்லவே முடியவில்லை, ஏற்கனவே இருந்த நிதித் துறை அமைச்சர் அறையிலேதான் தங்கியிருக்கிறார். கேவலம், இந்த ஆட்சியினரால் வெளியிடப்பட்டுள்ள "காலண்டரில்" கூட முறைப்படி முதல் அமைச்சர் என்று அவருடைய புகைப்படத்தை வெளியிட முடியவில்லை. அனைத்து அரசு அறிவிப்புகளும் "மக்கள் முதல்வர் அம்மா" பெயரில்தானே வெளிவருகின்றன. குடியரசு தின விழா அணிவகுப்பில் பங்கேற்ற அனைத்து வாகனங்களிலும், தண்டனை பெற்ற குற்றவாளியின் படங்கள்தான் பெரிதாகப் போடப்பட்டிருந்ததே தவிர, இன்றைய முதல்வரின் படம் ஒன்று கூடக் காணப்படவில்லை. அண்ணா நினைவு நாள் அஞ்சலி செலுத்தக்கூட, ஒரு அமைச்சர்கூட உடன் வராமல், தனியாக முதல்வர் மட்டும் செல்வது புகைப்படமாக வெளிவந்துள்ளது. முதல்வரே இல்லாத மாநிலமாகத்தான் தமிழகம் காட்சியளிக்கிறது. அதுபற்றியெல்லாம் வார இதழ்கள் பக்கம் பக்கமாக முதலமைச்சர் பற்றியும், இந்த அரசினரைப் பற்றியும் விமர்சித்து எழுதிய போதிலும், ஆளுங்கட்சியினர் அதனைக் காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை; சிறிதும் கவலையோ, நாணமோ கொள்ளவில்லை!

இவற்றுக்கெல்லாம் ஜனநாயக ரீதியாகப் பாடம் கற்பிக்க வேண்டாமா? அதற்கொரு நல் வாய்ப்பாக அமைந்திருப்பது தான் திருவரங்கம் இடைத்தேர்தல். எனவே வரும் 13ஆம் தேதி நடைபெறும் திருவரங்கம் இடைத் தேர்தலில் தமிழக ஆளுங்கட்சியான அ.தி.மு.க.விற்குத் தக்க பாடம் கற்பிக்க, அவர்களும் திருந்தி மிச்ச நாட்களிலாவது மக்களைப் பற்றி அக்கறையோடு நடந்து கொள்வதற்கு ஒரு வாய்ப்பினை வழங்கிட,

கழக வேட்பாளர் தம்பி ஆனந்துக்கு உதய சூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றியினைத் தேடித் தர வேண்டுமென்று திருவரங்கம் தொகுதி வாக்காளப் பெருமக்களையெல்லாம் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். "திருவரங்கம் தொகுதி இடைத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி" என்ற செய்தியினை வழங்கிட அன்புடன் வேண்டுகின்றேன். நிச்சயம் வழங்குவீர்கள் என்று நம்புகின்றேன்! நம்பிக்கை வீண் போகலாமா?

அன்புள்ள,

மு.க.

05-02-2015

3953. அதிர்ச்சி வைத்தியம் அவசியம் அல்லவா?

அன்பிற்குரிய திருவரங்கம் தொகுதி வாக்காளப் பெருமக்களே!

வணக்கம். ஒவ்வொரு தேர்தலின் போதும் நேரில் வந்து பிரச்சாரக் கூட்டங்களின் வாயிலாக வாக்காளர்களைச் சந்தித்து, கழக வேட்பாளருக்கும், கூட்டணி வேட்பாளர்களுக்கும் ஆதரவு கோருவதை வாடிக்கையாகவும், ஜனநாயகக் கடமையாகவும் கொண்ட நான்; நாளை (13-2-2015) நடைபெறவுள்ள திருவரங்கம் தொகுதி இடைத் தேர்தலில் வாக்களிக்கப் போகும் வாக்காளப் பெருமக்களிடம் இந்த என்னுடைய அறிக்கையின் மூலம் வாக்குகளைக் கழக வேட்பாளர் தம்பி என். ஆனந்துக்கு உதயசூரியன் சின்னத்திலே வழங்கிட வேண்டுமென்று பெரிதும் விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். கடந்தமுறை திருவரங்கம் தொகுதியில் அ.தி.மு.க. வேட்பாளராக நின்று உங்களுடைய பொன்னான வாக்குகளைப் பெற்று, முதலமைச்சராகவே ஆனவர், இந்த முறை அறிக்கை வாயிலாக வாக்குகளைக் கேட்கும்போது, நான் அறிக்கை வாயிலாக வாக்குக் கேட்கக் கூடாதா?

திருவரங்கம் தொகுதியிலே இந்த இடைத்தேர்தல் திணிக்கப்பட்டதற்கு என்ன காரணம்? பொதுவாக வெற்றி பெற்ற சட்டப்பேரவை உறுப்பினர்கள் மறைந்து விடுவார்களானால், அந்தத் தொகுதிக்குத்தான் இடைத்தேர்தல் நடைபெறும். ஆனால் இந்த இடைத் தேர்தல் அப்படியல்ல! ஏற்கனவே நீங்கள் பெருவாரியான வாக்குகளை அளித்து வெற்றிபெறச் செய்த ஜெயலலிதா, 1991 முதல் 1996 வரை முதலமைச்சராகப் பதவி வகித்தபோது, தன்னுடைய வருமானத்திற்கும் அதிகமாக 66 கோடி ரூபாய்க்கான சொத்துக்களைக் குவித்த காரணத்தால், இத்தனை ஆண்டுக் காலம் வேண்டுமென்றே வழக்கு இழுத்தடிக்கப்பட்டு, இறுதியாகக் கடந்த 2014 செப்டம்பர் 27 ஆம் தேதியன்று பெங்களூர் சிறப்பு

நீதிமன்றத்தால் நான்காண்டுகள் சிறைத் தண்டனையும், 100 கோடி ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்ட காரணத்தால், ஜெயலலிதா முதலமைச்சர் பதவியை இழந்து, அவர் வகித்த சட்டப் பேரவை உறுப்பினர் பதவியும் காலியாகி, அந்த இடத் திற்காகத்தான் இந்த இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

ஜெயலலிதா பதவியிலே இவ்வாறு அமர்வதும், பதவிக் காலத்திலேயே நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டு வீட்டுக்கு அனுப்பப்படுவது என்பதும் இது முதல் முறையல்ல! ஏற்கனவே ஒரு முறை நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டு - சட்டத்துக்குப் புறம்பாக நான்கு தொகுதிகளிலே போட்டியிட்டு - வேட்பு மனு செல்லாமல் போய் - பிறகு அவருடைய கட்சி பெரும்பான்மையாக வெற்றி பெற்றபோது, அரசியல் சட்டரீதியாகத் தகுதியற்ற நிலையிலும்தானே ஆளுநரைக்கையிலே போட்டுக்கொண்டு அவசர அவசரமாகப் பதவியேற்றுப் பின்னர் அவர் அவ்வாறு பதவியேற்றது செல்லாது என்று இந்திய உச்ச நீதிமன்றத்தால் பதவி நீக்கம் செய்யப்பட்டுத் தண்டிக்கப்பட்டவர்தான் ஜெயலலிதா. தற்போதும் அவர் ஒருவர் செய்த தவறு காரணமாகவும், தண்டனை காரணமாகவும் திருவரங்கம் தொகுதியிலே உள்ள மக்களுக்கும், ஏன் அங்கே போட்டியிடும் அரசியல் கட்சிகளுக்கும், அவற்றின் உறுப்பினர்களுக்கும்தான் வீண் அலைச்சலும், அவதியும். அரசுக்கும் வீண் செலவு. எனவே இப்போது அந்தத் தொகுதியிலே இடைத் தேர்தல் வருவதற்குக் காரணமாக இருந்த கட்சிக்கும், அதன் தலைமைக்கும் தக்கதொரு பாடம் கற்பிக்கவாவது நீங்கள் இந்த இடைத்தேர்தலில் தி.மு.கழக வேட்பாளருக்கு உங்கள் வாக்குகளை வழங்கிட வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஜெயலலிதா திருவரங்கம் இடைத்தேர்தலையொட்டி விடுத்துள்ள வேண்டுகோளில், "இந்த இடைத்தேர்தல் சதிகாரர்களால் போடப்பட்ட வழக்கின் தீர்ப்பு காரணமாக ஏற்படுத்தப்பட்ட இடைத்தேர்தல்" என்று சொல்லியிருக்கிறார். ஜெயலலிதாவின் "அகராதி"யில், ஜெயலலிதா சொத்துக் குவித்தது பற்றி வழக்கு தொடுத்தவர்களும், விரிவாக விசாரித்துத் தீர்ப்பு வழங்கியவரும் சதிகாரர்களாம்! அப்படியென்றால் அந்த வழக்கில் நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டவருக்கு என்ன பெயர்? உத்தமரா? புனிதரா? தவறு நடைபெற்றதை எதிர்த்து வழக்கு

தொடுத்தால், புரிந்த குற்றத்திற்கேற்ற தண்டனை வழங்கினால் அவர்கள் எல்லாம் சதிகாரர்களா?

"தி.மு.கழகம் அல்லது எதிர்க்கட்சி வேட்பாளர்களை ஆதரிப்பதால் எந்தவித நன்மையும் வாக்காளர்களுக்குக் கிடைக்காது" என்றும் ஜெயலலிதா தனது வேண்டுகோள் அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கிறார். உண்மைதான்! அ.தி.மு.க. வேட்பாளரை ஆதரித்தால், வாக்குக்கு இரண்டாயிரம் ரூபாய் வீதம் கிடைக்கும் என்பதைத்தான் இவ்வாறு சூசகமாகச் சுட்டிக் காட்டியிருக்கிறாரோ, என்னவோ?

ஆளுங்கட்சிக்கு இந்த இடைத்தேர்தலில் ஒரு படிப்பினையைக் கற்பித்து எச்சரிக்க வேண்டுமென்பதற்காகத்தான், தி.மு.கழகத்தின் சார்பாக ஏற்கனவே ஜெயலலிதாவை எதிர்த்துப் போட்டியிட்ட வேட்பாளரையே மீண்டும் நிறுத்தி, எதிர்க்கட்சிகளின் வாக்குகள் சிதறக்கூடாது என்பதற்காக, கழக வேட்பாளருக்கு அனைத்து எதிர்க்கட்சிகளும் ஆதரவு நல்கிட வேண்டுமென்று முதன் முதலாக நான் அறிக்கை வாயிலாகக் கேட்டுக்கொண்டேன். ஆனாலும் பா.ஜ.க., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகள் என்ன காரணத்தினாலோ தனியாக வேட்பாளரை அங்கே நிறுத்தியுள்ளன. கழகத்தைப் பொறுத்தவரை, இந்த இடைத்தேர்தலில் திருவரங்கம் தொகுதியிலே கழகத் தோழர்கள் ஆற்றியிருக்கும் பணி, சாதாரணமானதல்ல. கழகத்தின் முன்னணியினரும், தோழர்களும் தங்கள் தங்கள் சொந்தச் செலவில் அங்கே வந்து தங்கிக்கொண்டு உணவு கிடைக்கிறதோ இல்லையோ, தங்குவதற்கு இட வசதி உள்ளதோ இல்லையோ, எதையும் பொருட்படுத்தாமல், "கண் துஞ்சாது பசி நோக்காது மெய் வருத்தம் பாராது" திருவரங்கம் தொகுதியிலே திசையெங்கும் சுற்றிச் சுழன்று தேர்தல் பணியாற்றி வருகிறார்கள் என்ற செய்தி எனக்குத் தொடர்ந்து வந்து என்னைக் களிப்பில் ஆழ்த்திக் கொண்டிருக்கின்றது. அந்த மாவட்டத்தைச் சேர்ந்த கழக முன்னணியினர் உள்கட்சிப் பிரச்சினைகளையெல்லாம் உதைத்து விரட்டிவிட்டு அங்கே தேர்தல் பணியாற்றுகிறார்கள் என்பதையும் அறிந்து, "எல்லோரும் என் உடன்பிறப்புகள் அன்றோ" என உவகை கொண்டேன். எல்லாவற்றுக்கும் மேலாக, பணிக் குழுத் தலைவராகப் பணியாற்றும் தம்பி நேருவின் உழைப்பு வெறும் சொற்களால் விளக்கிடக் கூடியதல்ல. இந்த இடைத் தேர்தலில்

கழக வேட்பாளர் என். ஆனந்த் என்பது அதிகாரப்பூர்வமானது என்றாலும், அந்த வேட்பாளரைவிட அதிகமாக, தன்னையே ஒரு வேட்பாளரைப் போல ஆக்கிக்கொண்டு நேரு சுறுசுறுப்புடன் பம்பரமாகச் சுற்றி வருகிறார் என்றால் அது மிகையல்ல. நேரு வேட்பாளராக மாறிவிட்டார் என்றால், கழகப் பொருளாளர் தம்பி மு.க. ஸ்டாலின், தொடக்கத்திலிருந்தே இடைத் தேர்தல் பணிக் குழுத் தலைவராகவே மாறித் தன்னுடைய நேரத்தையும் நினைப்பையும் அதற்காகவே செலவிட்டு வருகிறார் என்று தான் கூற வேண்டும். பொதுச் செயலாளர், பேராசிரியர் அவர்களும் நேரில் என்னைச் சந்தித்து, நானும் திருவரங்கம் சென்று சில கூட்டங்களில் பேசிவிட்டு வருகிறேன் என்று ஆர்வத்தோடு புறப்பட்டு விட்டார்.

திருவரங்கம் தொகுதியில் இந்த இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து ஆளுங்கட்சியினர் ஜனநாயக விரோத, சட்ட விரோத, அராஜக நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதை நீங்களே நேரில் கண்டு அறிந்திருக்கிறீர்கள். போலி வாக்காளர் சேர்த்திருப்பது பற்றி உரிய நேரத்தில் கழகத்தின் சார்பில் தேர்தல் ஆணையத்திற்குத் தெரிவிக்கப்பட்டது. நானும் அதைப்பற்றி விரிவாகத் தெரிவித்திருக்கிறேன். தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்காததால், இதைப் பற்றி உயர் நீதிமன்றத்தில் கழகத்தின் சார்பில் கடந்த வாரம் வழக்கு தொடுத்து, வாதாடிய போது, தலைமை நீதிபதி கவுல், நீதிபதி சுந்தரேஷ் ஆகியோர் அளித்த தீர்ப்பில், "திருவரங்கம் தொகுதி வாக்காளர் பட்டியலில் உள்ள குறைபாடுகளைச் சரி செய்து, சரியான வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம், இடைத்தேர்தல் நடப்பதற்கு 2 நாட்கள் முன்பாக வெளியிட வேண்டும்" என்று உத்தர விட்டார்கள். ஆனால் உயர் நீதிமன்றத்தின் இந்த ஆணையை ஏற்காமல், தேர்தல் ஆணையத்தின் சார்பில் 9-2-2015 அன்று உயர்நீதிமன்றத்தில், "தேர்தலுக்கு முன்னதாக திருத்தப்பட்ட பட்டியலை வெளியிட முடியாது. நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை மாற்ற வேண்டும்" என்று கேட்டதற்கு, நீதிபதிகள் அதை ஏற்க மறுத்ததோடு, "தேர்தல் ஆணையத்தின் சார்பில் கொடுத்த உத்தரவாதத்தின் அடிப்படையில்தான் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதை எப்படி மாற்ற முடியும்" என்று கண்டிப்புடன் கூறி, தனியாக மனு தாக்கல் செய்யும்படி உத்தரவிட்டிருக்கிறார்கள்.

திருவரங்கம் தொகுதியில் பெரும்பாலும் அரசுப் பள்ளிகளில் மாணவர்கள் வருகை குறைந்திருப்பதாக ஆசிரியர்கள் சொல்கிறார்கள் என்றும், அதுவும் கல்வி அமைச்சர் வீரமணி என்பவர் பிரச்சாரத்துக்குச் செல்லும் இடங்களில் பள்ளி மாணவர்கள் தான் அ.தி.மு.க. கொடியைப் பிடித்தபடி நிற்கிறார்கள் என்றும், கொடிகளைப் பிடிக்கும் மாணவர்களுக்கு "ஸ்பெஷல்" கவனிப்பு உண்டு என்றும் வார இதழ் ஒன்றே விரிவாக எழுதியிருக்கின்றது.

மற்றொரு வார இதழ், "மணப்பாறை பகுதியில் உள்ள 7 ஊராட்சிகளுக்குப் பொறுப்பான அமைச்சர் செந்தில் பாலாஜியும், எம்.பி. தம்பிதுரையும் தினமும் மாலையில் மட்டும் பிரச்சாரம் செய்தனர். பத்து நாட்களாக அ.தி.மு.க. வேட்பாளர் இந்தப் பக்கமே போகவில்லை. பிப். 1 அன்று வேட்பாளர் வளர்மதி வருகிறார் என்றதும், காலை 7.30 மணிக்கே தம்பிதுரை ஆஜர். 100 நாள் வேலைத் திட்டத்து ஆட்களைத் திரட்டிவைத்திருந்தனர். ஆளுக்கு ஒரு மணி நேரத்துக்கு 200 ரூபாய் பேசிக் கூட்டி வந்திருந்தனர். இங்குக் கூடுதலாக, புதுக்கோட்டையில் இருந்து குத்தாட்டக் குழுவினரைக் கொண்டுவந்து ஆட வைத்தனர். அச்சடித்ததைப் படிப்பதைப் போல வேட்பாளர் வளர்மதி, திரும்பத் திரும்ப ஜெயலலிதாதான் தெய்வம் என உருகினார். மணி 1.30 ஆனதும் மறவனூரில் வேட்பாளர் உட்பட அனைவருக்கும் சிக்கன் பிரியாணி, மட்டன் பிரியாணி, தக்காளிச் சோறு, எலுமிச்சை சோறு, மீன் வறுவல் என பலவகை உணவுகளும் தயாராக இருந்தன" என்றெல்லாம் எழுதியுள்ளது.

தேர்தல் நடத்தை விதிகளை அப்பட்டமாக மீறுகின்ற வகையில், அ.தி.மு.க. சார்பாக மிகப் பெரிய பந்தல் போட்டு, வாக்காளர்களுக்கு டோக்கன் அளித்து மூன்று வேளையும் பிரியாணி மற்றும் இதர கறி வகைகளைப் பரிமாறவில்லையா? அதற்கான புகைப்படங்களைத் தலைமைத் தேர்தல் அதிகாரியிடம் கழக அமைப்புச் செயலாளர் தம்பி ஆர்.எஸ். பாரதி எடுத்துச் சென்று தர வில்லையா? தலைமைத் தேர்தல் அதிகாரியே நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி கூறவில்லையா? எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

தி.மு.க. மற்றும் எதிர்க்கட்சியினர் மீது ஆளுங்கட்சியினர் புகார் கூறினால் உடனடியாகக் காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்கிறார்கள் என்றும், அதே நேரத்தில் அ.தி.மு.க.வினர்

மீது புகார் என்றால் கண்டு கொள்வதே இல்லை என்றும் செய்திகள் வருகின்றன. இன்றைய முதலமைச்சர், நேரடியாகத் தொகுதிக்குள் வராவிட்டாலும், அவருடைய மகன்கள் இரண்டு பேரும் தொகுதியிலேயே தங்கியிருப்பதாகவும், அனைத்துப் பிரச்சினைகளிலும் அவர்களது ஆணையின் பேரில்தான் நடவடிக்கை எடுப்பதாகவும் வார இதழ்கள் பக்கம் பக்கமாக எழுதியுள்ளன.

திருவரங்கம் தொகுதியில் மகளிர் அணியுடன் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்ட மகளிர் அணிச் செயலாளர், கவிஞர் கனிமொழி, எம்.பி, நேரில் டெல்லி சென்று தலைமைத் தேர்தல் ஆணையரைச் சந்தித்து கழகத்தின் சார்பில் அளித்த மனுவில் போலி வாக்காளர்பட்டியல் பற்றியும், 63 புகார்கள் அளிக்கப்பட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது பற்றியும், சம்பந்தப்பட்ட தேர்தல் அதிகாரிகளை உடனடியாக நீக்கிவிட்டுப் புதிய அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என்பது பற்றியும் தெரிவித்திருக்கிறார். குறிப்பாக மண்டல வருவாய் அதிகாரியான மனோகரன் என்பவர் வாக்காளர் பதிவு அதிகாரியாக இருந்து தொகுதி தேர்தல் அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்றும், அவர் ஏற்கனவே அ.தி.மு.க. சார்பில் வேட்பாளராகப் போட்டியிட அந்தக் கட்சியிடம் மனு செய்தவர் என்றும் தெரிவித்திருக்கிறார். அவர் மனுவிலே குறிப்பிட்டது உண்மை என்பதை நிரூபிக்கும் வகையில், நேற்றையதினம் அந்த அதிகாரி தேர்தல் ஆணையத்தினாலே அவசர அவசரமாக மாற்றப்பட்டிருக்கிறார். இதிலிருந்தே அ.தி.மு.க. எந்த அளவுக்கு இந்த இடைத்தேர்தலில் முறைகேடுகளில் ஈடுபட்டிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

2011ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலில் ஜெயலலிதா இதே திருவரங்கம் தொகுதியைச் சுற்றி வந்து பிரச்சாரம் செய்தபோது கொடுத்த வாக்குறுதிகளான, நூறாண்டுக் கால அடிமனை பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் என்பது நிறைவேற்றப்பட்டதா? இஸ்லாமியர்களுக்கான இட ஒதுக்கீடு உயர்த்தி வழங்கப்படும் என்று சொன்னாரே, செய்தாரா? திருவரங்கம் தொகுதியிலே அனைத்துப் பிரச்சினைகளுக்கும் உடனடித் தீர்வு காணப்படும் என்று சொன்னாரே, தீர்வு காணப்பட்டுவிட்டதா? அந்தத் தொகுதிக்கு மாத்திரமல்ல!

தமிழ்நாட்டுக்கே எத்தனை எத்தனை திட்டங்களை ஜெயலலிதா அறிவித்தார்? சட்டப்பேரவை நடைபெறும்போது ஒவ்வொரு நாளும் 110வது விதியின் கீழ் அவர் அறிவிப்பு வெளியிடாத நாள் உண்டா? வேறு எந்த ஒரு அமைச்சரையாவது, அவரவர் துறையின் கீழான அறிக்கைகளைப் படிக்க இந்த ஆட்சியில் அனுமதி உண்டா? அந்த அறிவிப்புகளில் நிறைவேற்றப்பட வேண்டியவை இன்னும் எத்தனை இருக்கின்றன? முதலமைச்சர் ஜெயலலிதா அந்தத் தொகுதியின் வாக்காளப் பெருமக்களுக்கு விடுத்த வேண்டு கோளில், கடந்த 2006 முதல் 2011ஆம் ஆண்டு வரை நடைபெற்ற மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், மின்வெட்டால் தமிழகமே இருள் சூழ்ந்த நிலைக்குத் தள்ளப்பட்டது என்றும், அ.தி.மு.க. ஆட்சியை மீண்டும் ஏற்படுத்தி, தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு சென்றுள்ளேன் என்றும் தெரிவித்திருக்கிறார். ஆனால் உண்மை நிலை என்ன? மின் கட்டணம் எந்த அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது? மின் வாரியத்தின் இழப்பு எவ்வளவு? பால் விலையை எந்த அளவுக்கு உயர்த்தியிருக்கிறார்கள்? ஆவின் நிறுவனத்திலே நடைபெற்ற ஊழல், அமைச்சரையே வீட்டுக்கு அனுப்பவில்லையா? டீசல் விலை உயர்வைக் காரணமாகக் கூறிப் பேருந்து கட்டணம் உயர்த்தப்பட்டதே, தற்போது டீசல் விலை ஆறு முறை குறைக்கப்பட்டு விட்டதே, பேருந்துக் கட்டணம் குறைக்கப்பட்டதா? டாஸ்மாக் நிறுவனத்திலே எத்தனை ஊழல்? கேவலம், பேருந்துக் கழகங்களுக்கு ஓட்டுநர், நடத்துநர் பணிக்கு ஆட்களைத் தேர்ந்தெடுப்பதிலேகூட லஞ்சம் தலைவிரித்தாடுகிறதே? இந்த ஆட்சியில் பாதிக்கப்படாத வர்க்கத்தினர்தான் யார்? விவசாயிகள் படும் இன்னல்களுக்கு அளவுண்டா? தொழிலாளர்களின் நிலை என்ன? தொழிற்சாலைகள் வரிசையாக மூடு விழா நடத்திக் கொண்டிருக்கவில்லையா? இன்று கூட ஒரு தொழிற்சாலை மூடுவது பற்றி ஏடுகளில் செய்தி வந்திருக்கிறதே! நெசவாளர்கள் நிம்மதி இழந்து விட்டார்களே; மீனவர் துன்பம் குறைந்தபாடில்லையே? மாணவர்களின் பிரச்சினைகள் என்றால் ஆட்சியிலே இருக்கும் மதோன்மத்தர்கள் காட்டிடும் அலட்சியம் தான் என்ன? அரசு அலுவலர்களை மதித்து ஒரு முறையாவது முதலமைச்சர் அழைத்துப் பேசியது உண்டா? சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு நிர்வாகம் நிலை தடுமாறி லஞ்ச ஊழல், எங்கணும் பெருகி நாடு காடாகி வருகிறதே!

இதற்கெல்லாம் ஒரு விடிவு காலம் வர வேண்டாமா? இருள் மறைந்து ஒளி பரவிட வேண்டாமா? இந்தக் கொடுமைகளுக்கு ஒரு தடைக்கல் போடக் கிடைத்த வாய்ப்பாகத்தான் திருவரங்கம் இடைத் தேர்தல் வந்துள்ளது. இந்த இடைத்தேர்தல் காரணமாக ஆட்சி மாற்றம் ஏற்பட்டுவிடப் போவதில்லை. ஆனால் நடைபெறுகின்ற கொடுமைகளுக்கும் அதிகாரமமதையில் ஆட்டம் போடுவோருக்கும் ஓர் அதிர்ச்சி வைத்தியம் அளித்திட வேண்டாமா?

அப்படிக் கிடைத்த நல்வாய்ப்பாகக் கருதி, சிந்திக்கும் திறனும் சீர்தூக்கிப் பார்க்கும் சிறப்பும் கொண்ட திருவரங்கம் தொகுதி வாக்காளப் பெருமக்களே, கட்சி பேதங்களையெல்லாம் பார்க்காமல், நடைபெறுகின்ற அராஜக, ஆணவ ஆட்சிக்கு ஒரு பாடம் கற்பித்திட, உங்களுடைய மேலான வாக்குகளை அன்புத் தம்பி என். ஆனந்துக்கு "உதயசூரியன்" சின்னத்திலே அளித்து, பெரும்பான்மையான வாக்குகளில் அவரை வெற்றி பெறச் செய்ய வேண்டுமென்று மீண்டும் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

12-2-2015

3954. நீதித்துறை வழங்கியது பாராட்டுரையா? இடித்துரையா?

உடன்பிறப்பே,

ஆளுநர் உரையில் பத்தி 3இல் இந்த ஆட்சியில் சட்டம், ஒழுங்கு சிறப்பாகப் பராமரிக் கப்படுவதாகவும், மாநிலத்தில் அமைதியை நிலைநாட்டியிருப்பதாகவும் குறிப்பிட்டு, ஆட்சியினர் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆளுநர் அவ்வாறு தனது உரையில் பெருமைப்பட்டுக் கொண்டதற்கான அடிப்படை ஆதாரங்கள் எதையும் கூறவில்லை. இருந்தாலும் இந்த மாதத்தில் இருபது நாட்களில் நடைபெற்ற சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள் மட்டும் பின்வருமாறு :-

1-2-2015

- சென்னை எழும்பூர் நீதிமன்ற வளாகத்தில் இருதரப்பு மோதல். வழக்கறிஞர் ஸ்டாலின் (வயது 38) படுகொலை!
- பவானி அம்மாபேட்டை பழைய மாரியம்மன் கோயில் வீதியைச் சேர்ந்த சாகத்யா (வயது 19) என்பவரின் கழுத்து, கைகளில் பிளேடால் அறுத்துக் கொலை செய்ய முயற்சி!
- சீர்காழியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ராணுவ கேப்டன் ஜெயராமனின் மகள் ரேணுகா (வயது 28) என்பவருக்கு பாலியல் தொந்தரவு!
- கோவையில் வெங்கடேசன், விஜயகுமார், பிரகாஷ் ஆகியோரிடமிருந்து ஆறு கிலோ தங்கக்கட்டி கொள்ளை!
- மயிலாப்பூர் வடக்கு மாடவீதியில் பிரபல நகைக்கடையில் 2 கிலோ தங்க நகைகள் திருட்டு!

- திருவாரூரைச் சேர்ந்த கார்த்திக் (வயது 33) என்பவரை சென்னை, போரூர் அருகே மிரட்டி அவரிடமிருந்து ரூ.49 ஆயிரம் ரொக்கம் பறிப்பு!
- கூடுவாஞ்சேரி அடுத்த பெருமாட்டு நல்லூர், மாரியம்மன்கோயில் தெருவைச் சேர்ந்த பிரதாப் (வயது 25) மீது நாட்டு வெடிகுண்டு வீசி கொலை!
- குமரி மாவட்டம், ஆரல்வாய்மொழி அடுத்த தாழக்குடி தெற்கு தெருவைச் சேர்ந்த 19வயது இளம் கல்லூரி மாணவி ஒருவர் 50 சவரன் நகையுடன் கடத்தல்!
- சேலம் வியாபாரி கார்த்திகேயன் (வயது 32) என்பவரிடம் காஞ்சிபுரம் பட்டு சேலை வியாபாரி ரூ.2 கோடி மோசடி!
- சூளைமேடு அடுக்குமாடிக் குடியிருப்புக்கு ஆட்டோவில் 5 பேர் 70 கிலோ கஞ்சா கடத்தல்!

2-2-2015

- சென்னை மேற்குத் தாம்பரம் ஏழுமலை தெருவைச் சேர்ந்த மூதாட்டி முத்துலட்சுமி அம்மாள் என்பவரிடம் 15 சவரன் தாலிச் செயின் பறிப்பு!
- கிருஷ்ணகிரி மாவட்டம் குத்தாராப்பள்ளி அருகே ராமாபுரத்தில் பாங்க் ஆப் பரோடா கிளை வங்கிக் கதவை உடைத்து 48 கிலோ தங்க நகைகள் கொள்ளை!
- தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டியைச் சேர்ந்த ராஜா என்பவரிடம் ரயில்வேயில் வேலை வாங்கித் தருவதாக ஏமாற்றி ரூபாய் 89 லட்சம் மோசடி!

4-2-2015

- நாகர்கோவில் வெட்டூர்ணிமடம் குமரி காலனி பகுதியைச் சேர்ந்த வினோத் (வயது 36) ஓட்டல் நடத்தி வருகிறார். இவரது வீட்டுக்குள் புகுந்த 3 பேர் இவரைச் சரமாரியாக வெட்டிக் கொலை செய்தனர்!
- தாம்பரம் அடுத்த செம்பாக்கம் ஷாம் அவென்யூ காவேரி தெருவைச் சேர்ந்த சுகன்யா (வயது 27) என்பவரிடம் 10 சவரன் நகை கொள்ளை!

- கும்மிடிப்பூண்டி அருகே சின்ன சோழியம் பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த லட்சுமி (வயது 48), இவரது மகள் நிரோஷா ஆகியோர் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தபோது வெட்டிக் கொலை!
- சென்னை விமான நிலையத்தில் 12 துப்பாக்கிக் குண்டுகள் கடத்தல்!
- சென்னை பல்கலைக் கழகம் அருகே நடைப் பயிற்சி சென்றபோது கர்நாடக ஐ.ஏ.எஸ். அதிகாரி பிரசாத்குமார் மிஸ்ராவைத் தள்ளிவிட்டு செல்போன் பறிப்பு!
- திருச்சி கோட்டைப் பகுதியைச் சேர்ந்த முத்துரத் தினாவதி என்பவர் கொலை செய்யப்பட்டு 5 சவரன் சங்கிலி, 3 சவரன் வளையல்கள், 1 சவரன் தோடு கொள்ளை!
- பேஸ்புக் மூலம் பழகிப் பெண்களிடமிருந்து ரகமத்துல்லா என்பவர் 40 சவரன் நகை பறிப்பு!
- திருமுல்லைவாயலில் சப்-இன்ஸ்பெக்டரின் மகன் ராஜா மற்றும் சைமன் ராஜா என்பவர்கள் கள்ளத்துப்பாக்கி வைத்திருந்தனர்!
- செங்குன்றம் அடுத்த ஆட்டதாங்கல் பெருமாள் கோவில் தெருவைச் சேர்ந்த மணி (எ) மணிகண்டனுக்குச் சரமாரியாக வெட்டு!
- சென்னை, தியாகராயர் நகர், ஜி.என்.செட்டி ரோடு பகுதியைச் சேர்ந்த சுதா (வயது 24) என்பவர் சாப்ட்வேர் என்ஜினியர். இவரை இரண்டு மர்ம நபர்கள் தாக்கி லேப்டாப், ஏ.டி.எம். கார்டு, கிரிடிட் கார்டு மற்றும் பணத்தைப் பறித்துச் சென்றனர்!

5-2-2015

- பள்ளிக்கரணை, கணபதிபுரம், 3வது தெருவைச் சேர்ந்த ரஷியா பேகம் (வயது 36) என்பவரின் வீட்டின் பூட்டை உடைத்து 20 சவரன் நகைகள் கொள்ளை!
- பழவந்தாங்கல் எம்.ஜி.ஆர்.ரோட்டில் சந்தீப் ஜெயின் என்பவர் கடையில் திருட்டு நகை அடகு வைத்ததாகக்

கூறப்பட்டதை விசாரணை செய்த இன்ஸ்பெக்டர் புருசோத்தமன் என்பவர், கடையின் கேமராவை ஆப்செய்து விட்டு 30 சவரன் நகைகள் அபேஸ்.

- சென்னை, புதுவண்ணாரப்பேட்டை பகுதியில் ரபி (வயது 22) என்பவருக்கு அரிவாள் வெட்டு!

9-2-2015

- சென்னை மாநிலக் கல்லூரிக்குள் புகுந்து காவலாளி நடராஜ் மீது ஆட்டோவில் வந்த ஆறுபேர் தாக்குதல்!
- ஓட்டேரியில் பின்னி மில்லில் இயந்திர உதிரி பாகங்கள் திருட்டு!
- மதுரை - திருமங்கலம் அருகே ரெட்டியப்பட்டியைச் சேர்ந்த அறிவு ராஜா (வயது 32) அடித்துக் கொலை!
- திருப்பூர் மாவட்டம் , தாராபுரம் அருகே கள்ளி வலசு பகுதியில் அடையாளம் தெரியாத ஒரு வாலிபர் பிணமாகக் கிடந்தார்!

10-2-2015

- ஆதம்பாக்கம் டாக்டர் அம்பேத்கர் நகரைச் சேர்ந்த டி.வி. செந்தில் (வயது 45) என்பவர் எழும்பூரில் உள்ள ஒரு திரையரங்கம் அருகில் நின்றிருந்தபோது வெட்டிக் கொலை!
- சென்னை அமைந்தகரை அய்யாவு நாயுடு காலனி நரசிம்மன் தெருவில் சிட்டி டெவலப்பர்ஸ் என்ற கட்டுமான அலுவலகத்தின் உரிமையாளர்கள் பழனிசாமி (எ) பால்ராஜ் (வயது 48), அவரது மனைவிலில்லி (வயது 33) என்பவர்கள் வீடுகட்டித் தருவதாகக் கூறி ரூ.1.20 கோடி மோசடி!
- சென்னை வில்லிவாக்கம், சிட்கோ நகர் சி. டைப் 27-வது தெருவைச் சேர்ந்த இந்திராணி (வயது 45) என்பவர் மீது மயக்க மருந்து தெளித்துப் பட்டப்பகலில் 14 சவரன் நகைக் கொள்ளை!
- இரும்புலியூர், திலகவதி நகர், செந்தில் முருகன் தெருவைச் சேர்ந்த அருள்சாமி (வயது 50) என்பவரின்

வீட்டின் கூரை உடைக்கப்பட்டு 2 சவரன் நகை, ரூ.2 லட்சம் ரொக்கம், 3 கேஸ் சிலிண்டர்கள் கொள்ளை!

- சென்னையை அடுத்த பாலவாக்கம், கிருஷ்ணாநகர் 3-வது தெருவைச் சேர்ந்த சிவரஞ்சனி (வயது 20) கழுத்தில் கிடந்த 3 சவரன் செயின் பறிப்பு!
- குரோம்பேட்டை அடுத்த நெமிலிச்சேரியைச் சேர்ந்த பிரியதர்ஷினியிடம் வயது (29) 10 சவரன் நகை பறிப்பு!

11-2-2015

- தஞ்சாவூர் நாஞ்சிக் கோட்டை அ.தி.மு.க. ஊராட்சி மன்றத் தலைவர் ப.சேகர் என்பவர் பட்டப் பகலில் ஓட ஓட விரட்டி வெட்டிப் படுகொலை!
- சென்னை சேலையூர் காமராஜபுரத்தைச் சேர்ந்த பள்ளி மாணவிக்கு பாலியல் தொந்தரவு!
- அம்பத்தூர் திருவேங்கடம் நகரைச் சேர்ந்த எல்.ஐ.சி. முகவர் சம்பத் என்பவரை வழி மறித்து ரூபாய் 5 லட்சம் பறிப்பு!
- ஆலந்தூர் ஈஸ்வரன் கோவில் தெருவைச் சேர்ந்த பாரதி என்பவரின் வீட்டின் பூட்டை உடைத்து ரூபாய் 80 ஆயிரம் திருட்டு!
- திருவள்ளூர் மாவட்டம் மணலி புதூர் அத்திப் பட்டு அரசு குடியிருப்பில் வசிக்கும் தீயணைப்பு வீரர் அரிகரசுதன் என்பவரின் மோட்டார் சைக்கிளில் இருந்து ரூபாய் 50 ஆயிரம் கொள்ளை!
- அமைந்தகரை என்.எஸ்.கே. நகரைச் சேர்ந்த ஆட்டோ டிரைவர் செல்வம் என்பவருக்குச் சரமாரியாக அரிவாள் வெட்டு!
- கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் அருகே உள்ள கத்திக்குப்பம் பகுதியைச் சேர்ந்த பள்ளி ஆசிரியை பாத்திமா என்பவரிடம் பட்டப் பகலில் 3 பவுன் தங்க நகை பறிப்பு!

- ஆதம்பாக்கம் பாலாஜி நகர் 10வது தெருவைச் சேர்ந்த மூதாட்டி இராஜேஸ்வரி அம்மாள் என்பவரிடம் 6 சவரன் தாலிச் செயின் பறிப்பு!

12-2-2015

- சென்னை இராயப்பேட்டையில் மாநிலக் கல்லூரி மாணவர் சதீஷ்குமார் என்பவருக்குச் சரமாரியாக அடி உதை!
- சென்னை துரைப்பாக்கம் கண்ணகி நகரைச் சேர்ந்த பிரபல ரவுடி அப்பு என்பவன் பட்டப்பகலில் சரமாரியாக வெட்டிப் படுகொலை!
- கொடுங்கையூர் முத்தமிழ் நகரைச் சேர்ந்த பள்ளி மாணவி கடத்தப்பட்டார்!
- சூளைமேடு சிவகாமி தெருவைச் சேர்ந்த வழக்கறிஞர் சந்திரன் என்பவர் கழுத்தை அறுத்துப் படுகொலை!
- புதுக்கோட்டை மூன்றாம் வீதியைச் சேர்ந்த வங்கி ஊழியர் இராஜகோபால் என்பவரின் வீட்டின் பூட்டை உடைத்து 45 சவரன் தங்க நகை கொள்ளை!
- கொளத்தூர் முருகன் கோவில் தெருவைச் சேர்ந்த கூலித் தொழிலாளி சின்னம்மாள் (வயது 64) என்ற மூதாட்டியிடம் பட்டப் பகலில் 5 சவரன் தங்கச் சங்கிலி பறிப்பு!

13-2-2015

- சீட்டுப் பணத் தகராறில் சைதை. சின்ன மலை, வெங்கடாபுரம் மாற்றுத்திறனாளி சண்முகம் (வயது 45) எரித்துக் கொலை.
- திருவொற்றியூர், காலாடிப்பேட்டை, மேற்கு மாட வீதியில் வசித்துவந்த ராம்புகார் சவுத்திரி (வயது 27) என்பவரை மாடியிலிருந்து கீழே தள்ளிக் கொலை!
- திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு அடுத்த தும்பூரில் கோமதியும் (வயது 24), அவரது இரண்டு வயது மகளும் கொலை!

- சென்னையை அடுத்த புழல் புத்தகரம் அய்யப்பன் நகரைச் சேர்ந்த அரிகிருஷ்ணன் (வயது 50) என்பவரின் கார் திருட்டு!

- சென்னை ஓட்டேரியில் மோட்டார் சைக்கிளில் சென்ற பச்சையப்பன் கல்லூரி மாணவர் மணிகண்டனுக்கு (வயது 19) அரிவாள் வெட்டு!

- சென்னையை அடுத்த பம்மல் பகுதியைச் சேர்ந்த தருண் (வயது 28) என்பவரிடமிருந்து 4 சவரன் நகை பறிப்பு!

14-2-2015

- காஞ்சிபுரம், பிள்ளையார்பாளையம், ஆனந்த பண்டிதர் ஜோதி தெருவைச் சேர்ந்த ஹரிகரன் (வயது 30) படுகொலை! தடுத்த அவரது மனைவி ராஜேஸ்வரிக்கும் கத்திக் குத்து!

- நங்கநல்லூர் 41வது தெருவில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பில் வசிக்கும் சந்திர சேகர் வீட்டின் பின்பக்கக் கதவு உடைக்கப்பட்டு 10 சவரன் நகைகள், கலர் டி.வி. கொள்ளை!

- பூவிருந்தவல்லி செம்பரம்பாக்கம் தனியார் கல்லூரி தேவாலயத்தில் ஊழியராக வேலை பார்த்துவந்த லில்லி (வயது 43) திருவள்ளூர் வங்கியில் ரூ.50 ஆயிரத்தை எடுத்துக்கொண்டு அரசுப் பேருந்தில் பூவிருந்தவல்லி நோக்கி வந்தபோது பணம் திருட்டு!

- குமரன் நகர் வ.உ.சி. நகர் பகுதியைச் சேர்ந்த இந்திராணியின் 3 சவரன் செயின் பறிப்பு!

- ஆவடியை அடுத்த பட்டாபிராம் கோபாலபுரம், தென்றல் நகர் பகுதியைச் சேர்ந்த உமாதேவி (வயது 25) என்பவரிடம் இரண்டரை சவரன் சங்கிலி, செல்போன் பறிப்பு!

15-2-2015

- தேனாம்பேட்டை எல்டாம்ஸ் சாலையைச் சேர்ந்த ரா.சுமதி (வயது 25) என்பவரிடமிருந்து 5 சவரன் சங்கிலி பறிப்பு!
- கொடுங்கையூர், எருக்கஞ்சேரி ஜே.பி. தெருவைச் சேர்ந்த ரூபன் (வயது 27) என்பவருக்கு அரிவாள் வெட்டு!
- சென்னையை அடுத்த பழவந்தாங்கல் பகுதியைச் சேர்ந்த 16 வயது பெண் கற்பழிப்பு!

16-2-2015

- மாதவரம் சின்ன மாத்தூர் பகுதியைச் சேர்ந்த தனலட்சுமி என்ற மூதாட்டி கத்தியால் குத்திப் படுகொலை!
- செங்கல்பட்டையடுத்த காட்டாங்குளத்தூரில் காளத்தீஸ்வரர் கோவில் கதவை உடைத்து ஐம்பொன்சிலைகள் திருட்டு!

அன்புள்ள,

மு.க.

22-2-2015

3955. பூ சுற்றும் கதை எவ்வளவு நாளைக்கு?

உடன்பிறப்பே,

தமிழகச் சட்டப்பேரவையில் இன்றைய முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர் செல்வம் பேசும்போது 2011ஆம் ஆண்டு ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. அரசு பொறுப்பேற்ற பின்னர் இதுவரை முடிக்கப்பட்ட திட்டங்கள், நடுத்தர கால மற்றும் நீண்ட காலக் கொள்முதல் வாயிலாக 4,640 மெகாவாட் மின்சாரம் பெறப்படுகிறது என்று பொத்தாம் பொதுவாக, குறிப்பிட்டுச் சுட்டிக்காட்டும் புள்ளி விபரங்கள் இல்லாமல் அறிவித்திருக்கிறார்.

17-2-2015 அன்று இந்த அரசின் சார்பாக ஆளுநர் ஆற்றிய உரையில், பக்கம் 25இல், "மொத்தமாக மாநிலத்தின் மின் உற்பத்தித் திறன் கடந்த நான்காண்டுகளில் 3,358 மெகாவாட் அளவு அதிகரித்துள்ளது" என்று கூறப்பட்டுள்ளது. எதிர்க் கட்சியான தே.மு.தி.க. எம்.எல்.ஏ., திரு.மோகன்ராஜ் இது பற்றிக் கூறும்போது, "தகவல் அறியும் சட்டத்தின்" அடிப்படையில் மின் உற்பத்தி பற்றி விவரம் கேட்டதாகவும், அதற்கு ஒரு மெகாவாட் மின்சாரம்கூட அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தபிறகு மின் உற்பத்தி செய்யப்படவில்லை என்று தெரிய வந்ததாகவும் தெரிவித்திருக்கிறார். அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தபிறகு புதிய உற்பத்தித் திட்டத்தை உருவாக்கி, நிறைவேற்றி, அதன் மூலம் இதுவரை ஒரு மெகாவாட் மின்சாரம்கூட உற்பத்தி செய்ய வில்லை என்றுஆதாரங்களோடு ஏடுகளும் எழுதியிருக்கின்றன. ஆனாலும் உண்மை என்ன என்பதைக் கூற ஆட்சியினர் இதுவரை முன்வரவில்லை.

15-9-2014 அன்று கோவையில் பேசிய செல்வி ஜெயலலிதா, "கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் 2,793 மெகாவாட் கூடுதல் மின் நிறுவு திறன் சேர்க்கப்பட்டுள்ளது" என்று தெரிவித்தார்.

தற்போது முதலமைச்சர் பன்னீர்செல்வம் பேரவையில், 4,640 மெகாவாட் அளவுக்கு மின் உற்பத்தித் திறன் அதிகரிக்கப் பட்டதாகத் தெரிவித்திருப்பது பற்றி பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் 21-2-2015 அன்று விடுத்துள்ள அறிக்கையில், "இவை எதுவுமே அ.தி.மு.க. அரசால் செயல்படுத்தப்பட்டவை அல்ல. முந்தைய தி.மு.க. ஆட்சியிலும், மத்தியப் பொதுத்துறை மின் நிறுவனங்களுடனான கூட்டு முயற்சியிலும் செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் பயனாகத்தான் இந்தக் கூடுதல் மின்சாரம் கிடைத்தது" என்று விளக்கியிருக்கிறார். அடுத்த சில மாதங்களில் 2,163 மெகாவாட் மின்சாரம் கிடைக்குமென்று பன்னீர் செல்வம் தெரிவித்திருப்பது பற்றிக்கூட, அதற்கும் காரணம் அ.தி.மு.க. ஆட்சியாளர்கள் அல்ல என்பதே உண்மை என்றும், பன்னீர் செல்வம் பட்டியலிட்டுள்ள திட்டங்களில் பெரும்பாலானவை 2010ஆம் ஆண்டுக்கு முன்பே (தி.மு.கழக ஆட்சியில்) அறிவிக்கப்பட்டவையாகும் என்றும் டாக்டர் ராமதாஸ் பதிலளித்திருக்கிறார். மேலும் அவருடைய அறிக்கையில், "அழும் குழந்தைக்கு வாழைப்பழத்தைக் காட்டி அமைதிப்படுத்துவதைப் போல, தமிழகத்தில் மின்வெட்டால் பாதிக்கப்படும் மக்களைச் சமாதானப்படுத்துவதற்காக இத்தகைய புள்ளி விவரங்களை அ.தி.மு.க. அரசு கூறிவருகிறது. பெரிய அளவில் மின் திட்டங்களை அறிவிப்பதில் பெருமைப்பட்டுக் கொள்ளும் அ.தி.மு.க. அரசு, அதைச் செயல்படுத்துவதில் ஆர்வம் காட்டவில்லை என்பதுதான் உண்மை. தனியாரிடம் மின்சாரம் வாங்குவது ஊழலுக்குத்தான் வழிவகுக்கும்" என்றும் விளக்கியிருக்கிறார்.

மேலும் முதலமைச்சர் பன்னீர்செல்வம் அவர்கள் தனது பேச்சில், "660 மெகாவாட் திறன் கொண்ட எண்ணூர் அனல் மின் திட்டத்திற்கான சுற்றுச் சூழல் அனுமதி மத்திய அரசால் 24-1-2013 அன்று வழங்கப்பட்டது. கொள்முதல் கட்டுமானப் பணிக்கான தொழில் நுட்ப வணிக ஒப்பந்தப் புள்ளிகள் 15-3-2013 அன்று திறக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து 12-8-2013 அன்று விலைப் புள்ளிகள் திறக்கப்பட்டு, 27-2-2014 அன்று இந்தத் திட்டத்திற்கான பணி ஆணை லேண்கோ இன்ப்ரா டெக் லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது" என்றும் சொல்லியிருக்கிறார். மத்திய அரசு 24-1-2013 அன்றே அனுமதி வழங்கி, இரண்டாண்டுகள் முடிந்துவிட்டன. இன்னும் மின்

உற்பத்தி தொடங்கப்படாததற்கு என்ன காரணம்? தாமதத்திற்கு இந்த அரசுதானே பொறுப்பு? இந்தத் திட்டம் பற்றி,

29-3-2012 அன்று தமிழகச் சட்டப்பேரவையில் ஜெயலலிதா அவர்கள் 110வது விதியின்கீழ் படித்த அறிக்கையில், "660 மெகாவாட் திறன் கொண்ட எண்ணூர் அனல் மின் விரிவாக்கத் திட்டம் என்னும் ஒரு புதிய திட்டத்தைச் செயல்படுத்த எனது தலைமையிலான அரசு தற்போது முடிவு செய்துள்ளது. இந்த அனல் மின் திட்டம் 2015ஆம் ஆண்டு இறுதிக்குள் தனது உற்பத்தியைத் தொடங்கும்" என்று அறிவித்தார். ஆனால் நேற்றையதினம் முதலமைச்சர் ஓ. பன்னீர் செல்வம் அவர்கள் அதே சட்டப் பேரவையில் இந்தத் திட்டத்திற்கான கட்டுமானப் பணிகள்தான் தற்போது தொடங்கி நடந்து வருவதாகச் சொல்கிறார் என்றால், 2015ஆம் ஆண்டு இறுதிக்குள் எப்படி இந்தத் திட்டம் மின் உற்பத்தியைத் தொடங்கும்? ஜெயலலிதா 110வது விதியின் கீழ்ப் பேரவையில் படித்தது பொய்யான தகவல் தானே? மக்களைத் திசை திருப்பி ஏமாற்றும் செயல்தானே? அதைத்தானே இன்றைய முதலமைச்சர் பன்னீர்செல்வம் பேரவையில் தெளிவாக்கி, "ஜெயலலிதாதான் திட்டத்தை அறிவித்தார், அது இப்போதுதான் கட்டுமானப் பணியைத் தொடங்குகிறது" என்று கூறியிருக்கிறார்.

இதிலே இன்னும் வேடிக்கை, ஜெயலலிதா, 2015இல் இந்தத் திட்டம் மின் உற்பத்தியைத் தொடங்கும் என்றார். கடந்த 2014ஆம் ஆண்டு டிசம்பர் 29ஆம் தேதி மின்துறை அமைச்சர் நத்தம் விசுவநாதன் வெளியிட்ட அறிக்கையில், எண்ணூர் அனல் மின் திட்டம் பற்றிக் குறிப்பிட்டு, அந்தத் திட்டம் 42 மாதங்களுக்குப் பிறகு 2018இல் மின் உற்பத்தியைத் தொடங்குமென்று தெரிவித்தார். இன்றைய முதலமைச்சரோ, நமக்கேன் வம்பு என்று எப்போது இந்தத் திட்டம் தொடங்குமென்றே தெரிவிக்காமல், தற்போதுதான் கட்டுமானப் பணிகளை நிறுவனம் தொடங்கியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார். உண்மையைச் சொன்னால்தானே ஒரே மாதிரியாகச் சொல்ல முடியும்? பொய் சொல்லும்போது முரண்பாடுகள் எழுவது என்பது எல்லோருக்கும் தெரிந்தது தானே? மின்சாரத்தைப் பொறுத்தவரையிலும்கூட, அ.தி.மு.க. ஆட்சியினர் அண்டப் புளுகு, ஆகாசப்புளுகு என வரிசையாக அடுக்கிக் கொண்டே போகிறார்கள்.

மேலும் முதலமைச்சர் பன்னீர்செல்வம், 1,600 மெகாவாட் மின் திறன் கொண்ட உப்பூர் மின் திட்டத்திற்கான வரைவு விதிமுறைகளை மத்திய அரசின் சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் 28-5-2012 அன்று பரிந்துரை செய்தது என்றும், இத்திட்டத்திற்கான திட்ட விளக்க அறிக்கை ஜனவரி 2014 அன்று இறுதி செய்யப்பட்டது என்றும், 2019-2020இல் இந்தத் திட்டம் இயக்கத்திற்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் சொல்லியிருக்கிறார். 2012இல் மத்திய அரசு அனுமதித்த திட்டம், இன்னும் நான்காண்டுகளுக்குப் பிறகு, 2019-2020இல் இயக்கத்திற்கு வரும் என்று எதிர்பார்ப்பதாக முதலமைச்சர் கூறுகிறார் என்றால், அ.தி.மு.க. அரசுக்கு இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் உள்ள ஈடுபாட்டினைப் புரிந்துகொள்ள முடிகிறதா அல்லவா? அது மாத்திரமல்ல; 29-3-2012 அன்று சட்டப்பேரவையில் ஜெயலலிதா 110வது விதியின்கீழ், படித்த அறிக்கையில், "1600 மெகாவாட் திறன் கொண்ட உப்பூர் அனல் மின் திட்டத்திற்கான முன் சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் திட்ட வரைபடம் ஆகியவை இறுதிசெய்யப்பட்டு விட்டன. இந்தத் திட்டம் 2015ஆம் ஆண்டு இறுதிக்குள் செயல்பாட்டிற்கு வரும்" என்று பலத்த வரவேற்புக்கிடையே படித்து ஏடுகள் எல்லாம் அதனைக் கொட்டை எழுத்துக்களில் வெளியிட்டன. ஆனால் ஜெயலலிதா அறிக்கை படித்து மூன்றாண்டு காலத்திற்குப் பிறகு, இன்றைய முதலமைச்சர் பன்னீர்செல்வம், இந்த உப்பூர் மின் திட்டம் 2019-2020இல் இயக்கத்திற்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுவதாகப் பேரவையில் சொல்கிறார் என்றால், யாரை ஏமாற்றுவதற்காக இப்படி யெல்லாம் பொய்யையே திரும்பத் திரும்பச் சொல்லி நாடகம் நடத்துகிறார்கள் என்றுதானே கேட்க வேண்டியிருக்கிறது.

25-10-2013 அன்று சட்டப்பேரவையில் பேசிய ஜெயலலிதா, "உறுப்பினர்கள் யாரும் கவலை கொள்ளத் தேவையில்லை, வெகு விரைவில், மிக விரைவில், தமிழ்நாடு மின் மிகை மாநிலமாக ஆக்கப்படும் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைச் சாதித்தே தீருவோம்" என்றார். அதற்கு அடுத்த மாதமே, 28-11-2013 அன்று ஏற்காடு இடைத் தேர்தலில் உரையாற்றிய ஜெயலலிதா, "மத்திய அரசினால்தான் மின் வெட்டு ஏற்பட்டுள்ளது; அந்தச் சூழ்நிலையையும் வெற்றிகரமாக எதிர் கொண்டு தமிழகத்தில் ஏற்பட்டுள்ள மின் பற்றாக் குறையைச்

சரி செய்து, மின் வெட்டே இல்லாத ஒளிமயமான சுபீட்சமான நிலைமையை விரைவில் உருவாக்கியே தீருவேன்" என்றார். ஜெயலலிதா சொன்ன எதுவும் நிறைவேற்றப்பட வில்லை; ஆனால், நாட்டு மக்களை ஏமாற்றியதும், ஏடுகளின் மூலம் விளம்பரம் கிடைத்ததும் அவருக்கு வரவுதானே?

சூரிய ஒளி மின்சாரம் பற்றியும் பேரவையில் பன்னீர்செல்வம், 2011ஆம் ஆண்டு இந்த அரசு பொறுப்பேற்றபின் 112 மெகாவாட் சூரிய ஒளி மின்சக்தி உற்பத்தி நிலையங்கள், தனியார் மூலம் நிறுவப்பட்டு, அந்த மின்சாரம் நமக்குக் கிடைத்து வருகிறது என்று கூறியிருக்கிறார். ஆனால் சூரிய ஒளி மின்சாரம் பற்றி இந்த ஆட்சியினர் என்ன கூறினார்கள் தெரியுமா? சூரிய சக்தியைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்வதிலும் தமிழ்நாடு முன்னிலையிலே இருக்க வேண்டுமென்ற அடிப்படையில் மூன்றாண்டுகளில் 3000 மெகாவாட் அளவுக்குச் சூரிய ஒளி மூலம் மின் உற்பத்தி செய்யப் போவதாக ஜெயலலிதா அறிவித்தார். சூரிய சக்தி மூலம், 2013இல் ஆயிரம் மெகாவாட், 2014இல் ஆயிரம் மெகாவாட், 2015இல் ஆயிரம் மெகாவாட் என்று மூன்றாண்டுகளுக்குள் 3,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப் போவதாகப் பேரவையிலேயே அறிவித்தார். அவ்வாறு 3000 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்போவதாக அறிவித்ததில்தான் தற்போது 112 மெகாவாட் சூரிய ஒளி மின் சக்தி கிடைப்பதாகப் பேரவையிலே பன்னீர் செல்வம் சொல்லியிருக்கிறார் என்றால், எப்படி யெல்லாம் தமிழ்நாட்டு மக்களிடம் சந்தர்ப்பத்திற்கேற்ற வாறு சாகசம் செய்து, "வானத்தை வில்லாக வளைப்போம், மணலைக் கயிறாகத் திரிப்போம்" என்று இயலாதவற்றைச் சொல்லி ஏமாற்றியிருக்கிறார்கள் என்பதை அனைவரும் புரிந்துகொள்ளத் தொடங்கிவிட்டார்கள்.

2011ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப் பேற்றவுடன் வைத்த கொள்கை விளக்கக் குறிப்பில், தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டங்களான வட சென்னை நிலை 2, மேட்டூர் நிலை 3, தமிழ்நாடு மின்சார வாரியமும் தேசிய அனல் மின் கழகமும் கூட்டு முயற்சியில் தொடங்கிய வல்லூர், தமிழ்நாடு மின்சார வாரியமும் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனமும் கூட்டு முயற்சியில் உருவாக்கிய தூத்துக்குடி ஆகிய நான்கு திட்டங்களின் மூலம், 2012ஆம் ஆண்டு இறுதிக்குள் 3,228

மெகாவாட் மின்சாரம் கிடைக்கும் என்று தெரிவித்தார்களே, அந்த நான்கு திட்டங்களை நிறைவேற்றுவதில் அ.தி.மு.க. ஆட்சியினர் ஒழுங்காகத் தேவையான அக்கறை காட்டியிருந்தாலே, மின் வெட்டு என்ற நிலைமையே தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்காது. ஆனாலும், தி.மு. கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட வடசென்னை விரிவாக்கத் திட்டத்தின் மூலம் 1,200 மெகாவாட், வல்லூர் 1,000 மெகாவாட், மேட்டூர் விரிவாக்கத் திட்டத்தின் மூலம் 600 மெகாவாட் என்று இந்த புதிய அனல் மின் நிலையங்களிலிருந்து 2013ஆம் ஆண்டு முதல் கூடுதலாகச் சராசரியாக 2,000 மெகாவாட் மின்சாரம் தமிழகத்திற்குக் கிடைக்கிறது. இதன் காரணமாகத்தான் தமிழகத்தில் அ.தி.மு.க. ஆட்சியில் இருந்த மின் தடை அறிவிப்பை 2014 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் விலக்கிக்கொள்வதாக அறிவித்தார்கள். ஆனால் அதன் பிறகு காற்றாலை மின் உற்பத்தி பெரிதும் பாதிப்புக்குள்ளானது. அதன் காரணமாக மின்தடை மீண்டும் நடைமுறைக்கு வந்து, கடந்த செப்டம்பர் 23ஆம் தேதி முதல் தொழிற் சாலைகளுக்கு 20 சதவிகிதம் மின்வெட்டு செய்யப் பட்டது.

இன்றைய தினம் "தினமலர்" வெளியிட்டுள்ள செய்திப்படி, நேற்றைய மின் தேவை 13,170 மெகாவாட்; ஆனால் மின் உற்பத்தி 12,170 மெகாவாட் தான். அதனால் 1,000 மெகாவாட் மின் பற்றாக்குறை. இதன் காரணமாக மாநிலம் முழுவதும், குடியிருப்புகளுக்கு அறிவிக்கப்படாமல், இரண்டு முதல், மூன்று மணி நேரம் வரை மின்தடை செய்யப்பட்டது. வரும் ஏப்ரல், மே மாதங்களில் வெயிலின் தாக்கம் மிகவும் கடுமையாக இருக்கும் என்பதால், மின் தேவை 15 ஆயிரம் மெகாவாட்டைத் தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் பல மணி நேரம் மின் தடை செய்யப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். இந்த அபாயத்தை மறைக்க என்னென்ன அறிவிப்பை அ.தி.மு.க. ஆட்சியினர் செய்யவிருக்கிறார்களோ?

25-4-2013 அன்று ஜெயலலிதா சட்டப் பேரவை யில் 110வது விதியின் கீழ் ஓர் அறிக்கை படித்தார். மீண்டும் 30-4-2013 அன்று, முதலில் படித்த அறிக்கைக்கு விளக்க உரை என்று ஒன்றைப் படித்தார். அதில் நீலகிரி மாவட்டத் தில் 2000 மெகாவாட் மின் திறன் கொண்ட சில்லஹல்லா நீரேற்று புனல் மின் திட்டம் 7,000 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், மின் நிலையங்கள்

மற்றும் மின் தொடர் பாதைகள் அமைக்கும் திட்டம் 8,000 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், 20 ஆயிரம் புதிய மின்மாற்றிகள் அமைக்கும் திட்டம் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், 15 ஆயிரம் கிலோ மீட்டர் நீளத்திற்கு மின் வழித்தடங்கள் அமைக்கும் திட்டம் 850 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், ஆக மொத்தம் 16,350 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்றும், இந்த நடவடிக்கைகள் மூலம் தமிழகம் விரைவில் மின் மிகை மாநிலமாக மாறும் என்பதோடு, மின் நுகர்வோருக்குத் தடையற்ற சீரான மின்சாரம் வழங்குவது உறுதி செய்யப்படும் என்றும் அறிவித்தார். என்ன ஆயிற்று இந்த அறிவிப்புகள்? அறிவிப்புகளைக் கேட்டதும் அன்று "ஆகா" "ஓகோ" வென விழிகளை அகலத்திறந்தவர்கள், இன்று வாய் புதைத்தல்லவா நிற்கிறார்கள்!

இந்த அறிவிப்புகளையெல்லாம் யார் நினைவில் வைத்துக் கொண்டிருக்கப்போகிறார்கள்; நம்மைப் பார்த்துக் கேள்வி கேட்பவர்கள் இந்த நானிலத்தில் உண்டோ? என்ற எண்ணத்தோடுதான் தமிழகச் சட்டப்பேரவையில் இன்றைய முதலமைச்சர், "மின் பற்றாக்குறை வெகுவாகக் குறைக்கப்பட்டு மின் தேவையை தன்னிறைவை எய்தும் நிலையை எட்டிக் கொண்டிருக்கிறோம்" என்று கூறியிருக்கிறார். இதே கதையைத்தான் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவும், இந்நாள் முதல்வர் பன்னீர்செல்வமும், இந்தத் துறை அமைச்சர் விசுவநாதனும் கடந்த மூன்றரை ஆண்டுக் காலமாகத் திரும்பத் திரும்பக் கூறித் தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றி, அவர்களின் காதுகளில் பூ சுற்றும் காரியத்தில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்கள். இதே கற்பனைக் கதையை இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் தமிழ்நாட்டு மக்கள் கேட்க வேண்டுமோ? அ.தி.மு.க. ஆட்சியினர் இருக்கும்வரை கதையும் முடியாது; மின்வெட்டும் தீராது; வேதனையும் மறையாது!

அன்புள்ள,

மு.க.

23-2-2015

3956. அ.தி.மு.க. ஆட்சியில் இருட்டு, புரட்டு - அனைத்தும் உண்டு!

உடன்பிறப்பே,

தமிழக ஆளுநர் 17-2-2015 அன்று ஆற்றிய உரை மீதான விவாதத்திற்குத் தமிழக முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் 23ஆம் தேதி பதிலளித்திருக்கிறார். ஆளுநர் உரை விவாதத்திற்கு, எதிர்க் கட்சி உறுப்பினர்கள் ஆற்றிய உரைக்குப் பதில் சொல்வதைவிட, முன்னாள் முதல் அமைச்சர், பெங்களூர் சிறப்பு நீதிமன்ற நீதிபதியால் நான்காண்டுகள் சிறைத் தண்டனையும், 100 கோடி ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டு, பதவி இழந்த தன்னுடைய கட்சியின் பொதுச் செயலாளர் ஜெயலலிதாவுக்குப் பேரவையில் பிறந்த நாள் வாழ்த்துக் கூறுவதைத்தான் திரு. பன்னீர்செல்வம் முக்கிய கடமையாகக் கருதியிருப்பார் போலும்!

பேரவையில் ஆற்றிய உரையில் "அம்மா அரியணை யில் மீண்டும் அமர்ந்திடுவார், இது உறுதி" என்று கூறிய போதிலும், அவர்களுடைய கட்சி நாளேட்டில், முதல் அமைச்சர் பன்னீர்செல்வம் கொடுத்துள்ள இரண்டு பக்க விளம்பரத்தில் "ஆற்றலை ஆயுதமாக்கி அரசாட்சி நடத்திவரும் அம்மா அவர்களே, தங்களின் 67வது பிறந்த நாள் தமிழகத்தின் திருநாள், பல்லாண்டு, புகழுடன் வாழ இறைவனைப் பிரார்த்திக்கிறேன்" என்றுதான் உள்ளதே தவிர, அதிலே "மீண்டும் அரியணையில் அமர்ந்திடுவார்" என்பதைக் குறிப்பிடாமல் விட்டிருப்பதில் இருந்தே அவரது ஆழ்ந்த உள்ளக்கிடக்கை தெளிவாகத் தெரிகிறது. ஆனால் கவனமாக அந்த விளம்பரத்தைக்கூட, கட்சியின் பொருளாளர் என்ற முறையில்தான் தந்திருக்கிறாரே தவிர, "முதலமைச்சர்" என்று அந்த விளம்பரத்தில் குறிப்பிட்டுக் கொள்ளவில்லை. ஒருவேளை, அவருடைய விளம்பரத்திலே கூறியிருப்பதைப் போல "அரசாட்சி நடத்தி வருவதாகத்" தெரிவித்திருப்பதால், தன்னை

முதலமைச்சர் என்று போடக் கூடாது என்று நினைத்திருப்பாரோ என்னவோ?

குற்றம் புரிந்தவர் என்று நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்ட ஒருவருக்குச் சட்டப்பேரவையில் பிறந்த நாள் வாழ்த்துக் கூறலாமா? ஆனால் இந்த ஆட்சியில் மரபுகளையெல்லாம் எடுத்தெறிந்து விட்டு எதை வேண்டுமானாலும் செய்வார்கள்! எதிர்க்கட்சித் தலைவரைக் "குடிமகன்" என்று பேரவையில் விமர்சனம் செய்வார்கள்; அதை எதிர்த்துக் கருத்துக் கூற அந்தக் கட்சியின் சார்பில் எழுந்தால் ஜனநாயக ரீதியாக அனுமதி அளிக்காமல், அவையிலிருந்தே வெளியேற்றுவார்கள்; காவலர்களைவிட்டே வெளியேற்றுவார்கள்; பின்னர் அந்தக் காவலர்களில் ஒருவரை மருத்துவமனையிலே அனுமதிக்கச் செய்து, அவரிடமே புகார் மனு எழுதி, எதிர்க் கட்சியைச் சேர்ந்த சட்டப்பேரவை உறுப்பினர்களைக் கைதுசெய்ய முற்படுவார்கள்! இவையனைத்தும் சரியான நடைமுறைகளா என்பதைப் பத்திரிகையாளர்கள்தான் நாட்டு மக்களுக்கு எடுத்துக்கூற வேண்டும். நடந்ததாகச் சொல்லப்படும் ஒரு செயலுக்கு, உரிமைக் குழு நடவடிக்கை, காவல் துறை நடவடிக்கை எனப் பலமுனை நடவடிக்கை இயற்கை நீதிக்கு ஏற்றதுதானா என்பது ஆழ்ந்து பரிசீலிக்க வேண்டிய அம்சமாகும்.

ஆளுநர் உரை பற்றி நான் கருத்துக் கூறும்போது, "ஆளுநர் உரை கடந்த ஆண்டில் இந்த ஆட்சியினர் என்னென்ன செய்தார்கள் என்பது பற்றிய விளம்பர உரையாக இருக்கிறதே தவிர, அடுத்த ஆண்டுக்கான ஆக்கப்பூர்வமான திட்டங்கள் எதுவும் அறிவிக்கப்பட வில்லை" என்று தெரிவித்திருந்தேன். என்னுடைய இந்தக் கருத்திற்கு மேலும் வலு சேர்க்கும் வகையில், முதல் அமைச்சரின் பதிலுரையும், கடந்த காலத்தில் இந்த ஆட்சியினர் என்னென்ன செய்தார்கள் என்பது பற்றியே இருக்கிறதே தவிர, இந்த ஆண்டு என்ன செய்யப் போகிறார்கள் என்று கூறப்படவில்லை.

நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்து, அதன் பொது விவாதத்திற்குப் பதில் அளிப்பது போலத்தான் முதலமைச்சரின் உரை அமைந்துள்ளது. நிதியமைச்சராக இருந்தவர் அல்லவா, அவருக்கு இன்னமும் முதல்வராகப் பொறுப்பேற்ற நினைவே வரவில்லைபோலும்! கேட்டால், "நாங்கள் ஏதாவது செய்வதாக இருந்தால்தானே, இந்த ஆண்டு ஆளுநர் உரையிலே அதனைக்

குறிப்பிட முடியும். எங்களிடம் நிதி ஆதாரம் வற்றிப்போய் விட்டதால் திட்டம் எதுவும் இல்லாதபோது நாங்கள் எப்படி அதைப் பற்றியெல்லாம் சொல்ல முடியும்? திட்டம் தீட்டுவதாக இருந்தால், கடந்த ஆண்டு இறுதியில் ஆண்டுதோறும் கூட்டுகின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி விவாதித்திருக்க மாட்டோமா? நானாக ஏதாவது திட்டங்களை அறிவித்து விட்டால், பிறகு இந்தப் பதவியில் நீடித்திருக்க வேண்டாமா?" என்றெல்லாம் விளக்கம் அளிக்கக்கூடும்!

தண்டனை பெற்ற ஒருவருக்கு ஆளுநர் உரையிலே பாராட்டு தெரிவிக்கலாமா என்று கேட்டிருந்தேன். அதுவும் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா என்று கூட ஆளுநர் உரையிலே குறிப்பிடப்படவில்லை. சாதாரணமாக "செல்வி ஜெ. ஜெயலலிதா" என்றுதான் இருக்கிறது. அதைப் பற்றியெல்லாம் பன்னீர்செல்வம் தனது பதிலுரையில் கூறுவார் என்று எதிர்பார்த்தோம். ஆனால் அதைப் பற்றி முதல்வர் பன்னீர்செல்வம் வாயே திறக்கவில்லை!

செம்மொழி பற்றியும், தமிழ் மொழிக்கு உரிய முக்கியத்துவம் தராதது பற்றியும், அரசுப் பள்ளிகளில் ஆங்கில வழிக்கல்வியைப் புகுத்தியதைப் பற்றியும் தெரிவித்திருந்தேன். முதல் அமைச்சரின் பதிலிலே அது பற்றி எதுவும் இல்லை. "மத்திய அரசு திட்டக் குழுவை மாற்றியிருப்பது பற்றி ஆளுநர் உரையில் வரவேற்றிருக் கிறீர்களே, அப்படியானால் மாநிலத்தில் திட்டக் குழுவின் கதி என்ன" என்று கேட்டிருந்தேன். பேரவையில் முதலமைச்சர் அளித்த பதிலில் இதைப் பற்றி எதுவுமே கூறவில்லை. "அ.தி.மு.க. ஆட்சியினால் அறிவிக்கப்பட்ட விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின் விசிறி போன்றவை இன்னும் 90 லட்சம் பேர்களுக்கு இந்த ஆண்டு வழங்கப்படவில்லை என்றும், வழங்கப்பட்ட ஆடு, மாடுகளும் சந்தைகளிலே விற்கப்படுகிறது என்றும் வந்த செய்திகளுக்கு என்ன விளக்கம்" என்று கேட்டிருந்தேன். அதற்கு "நான் என்ன செய்வேன்?" என்பதைப் போல முதலமைச்சர் பதில் கூறவே இல்லை.

நெடுஞ்சாலைத் திட்டப் பணிகளையெல்லாம் தனியாரிடம் தாரை வார்ப்பதற்கு என்ன விளக்கம் சொல்லப் போகிறீர்கள் என்று கேட்டிருந்தேன். கடந்த ஆண்டு அக்டோபர்த் திங்களில் உலக அளவில் முதலீட்டாளர்களை ஈர்க்கும் மாநாடு நடத்தப்போவதாகக் கடந்த ஆண்டு அறிவித்திருந்தீர்களே, இப்போது அந்த மாநாடே

நடைபெறாமல், வரும் மே மாதத்தில்தான் அந்த மாநாட்டினைக் கூட்டப் போவதாகத் தெரிவிக்க என்ன காரணம் என்று வினவியிருந்தேன். இதற்கெல்லாம் முதல்வர் பன்னீர்செல்வம் "நீ யார் கேட்க, நான் யார் பதில் சொல்ல; நான் அம்மாவின் முதன்மைச் சீடன்" என்ற ரீதியில் இருந்திருக்கிறார்.

தி.மு. கழகத்தின் சார்பில் பேரவையில் ஆளுநர் உரைமீது உரையாற்றிய தம்பி ஐ. பெரியசாமியும், தம்பி எஸ்.எஸ். சிவசங்கரும், மற்ற எதிர்க்கட்சிகளின் சார்பில் உரையாற்றியவர்களும் அடுக்கடுக்கான பிரச்சினைகளை எழுப்பி, அவற்றிற்கெல்லாம் பதில் எங்கே என்று கேட்டார்களே, எதற்காவது பன்னீர்செல்வம் பதில் சொன்னாரா என்றால் கிடையாது. ஏற்கனவே மின் திட்டங்கள் பற்றிப் பேரவையிலே அவர் படித்த அறிக்கையையே மீண்டும் ஒரு முறை படித்திருக்கிறார். எண்ணூர் மாற்று அனல் மின் திட்டம் மற்றும் உப்பூர் அனல் மின் திட்டம் ஆகியவை என்னவாயிற்று என்று கேட்டிருந்தேன். அதற்கு அந்தத் திட்டங்களின் மூலம் மின்சாரம் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று முதல் அமைச்சர் பேரவையிலே பதில் கூறியிருக்கிறார். வடசென்னை அனல் மின் திட்டம், மூன்றாம் நிலை, உடன்குடி அனல் மின் திட்ட விரிவாக்கம், தூத்துக்குடி அனல் மின் திட்டத்திற்கான மாற்றுத் திட்டம் இவைகள் எல்லாம் என்ன ஆயிற்று என்றால், இந்த மின்சாரத் திட்டங்களுக்கான சுற்றுச் சூழல் அனுமதி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பதிலளித்திருக்கிறார் பன்னீர்செல்வம்!

செய்யூர் அனல் மின் நிலையம் எங்கே என்றால், இதற்கான நிலம் கையகப்படுத்தும் பணிகள் அரசால் முடிக்கப்பட்டுள்ளன என்பதுதான் முதல் அமைச்சரின் பதில். 25-4-2013 அன்று ஜெயலலிதா சட்டப்பேரவையில் 110வது விதியின்கீழ், படித்த அறிக்கையில், நீலகிரி மாவட்டத்தில் 2000 மெகாவாட் மின் திறன் கொண்ட சில்லஹல்லா நீரேற்று புனல் மின் திட்டம் 7,000 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், மின் நிலையங்கள் மற்றும் மின் தொடர் பாதைகள் அமைக்கும் திட்டம் 8,000 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், 20 ஆயிரம் புதிய மின் மாற்றிகள் அமைக்கும் திட்டம் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், 15 ஆயிரம் கிலோ மீட்டர் நீளத்திற்கு மின் வழித்தடங்கள் அமைக்கும் திட்டம் 850 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் ஆக மொத்தம் 16,350 கோடி ரூபாய் மதிப்பீட்டில்

திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்றும், இந்த நடவடிக்கைகள் மூலம் தமிழகம் விரைவில் மின்மிகை மாநிலமாக மாறும் என்பதோடு, மின் நுகர்வோருக்குத் தடையற்ற சீரான மின்சாரம் வழங்குவது உறுதி செய்யப்படும் என்றும் அறிவித்தாரே, என்ன ஆயிற்று இந்த அறிவிப்புகள்? - என்று நான் கேட்டிருந்தேன். அதற்குப் பேரவையில் நேற்று முதலமைச்சர் அளித்த பதில் என்ன தெரியுமா? "2000 மெகாவாட் திறனுள்ள மின் திட்டத்திற்கான ஆய்வுப் பணி முனைப்புடன் நடைபெற்று வருகின்றன" என்பதுதான்! "விரைவில்" என்ற சொல்லுக்கு இந்த ஆட்சியில் என்ன பொருளோ? ஒரு வாரமா? ஒரு மாதமா? ஓராண்டா? - ஒன்றும் புரியவில்லை; அல்லது "எப்போதும் இல்லை; நடக்கவே நடக்காது" என்பதுதான் பொருளா?

மேலும் முதலமைச்சர் பன்னீர்செல்வம், தனது பதிலுரையில் "மொத்தம் 22 ஆயிரத்து 440 மெகாவாட் மின்சாரம் கிடைக்க இந்த அரசால் வழிவகை செய்யப்பட்டுள்ளது" என்று சொல்லியிருக்கிறார். இந்த அளவுக்கு மின்சாரம் கிடைக்க இந்த அரசு வழி வகை செய்திருக்கிறது என்பது உண்மையானால்; நீண்ட கால ஒப்பந்தங்களின் அடிப்படையில் 3 ஆயிரத்து 330 மெகாவாட் மின்சாரமும், நடுத்தரக் காலக் கொள்முதல் மூலம் 500 மெகாவாட் மின்சாரமும் வாங்குவதற்குத் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் ஒப்பந்தம் செய்திருப்பது ஏன்? விளக்கம் அளிக்க வேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறதா, இல்லையா?

அடுத்து, முதலமைச்சர் தனது பதில் உரையில் 2011-12இல் 101.52 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி செய்யப்பட்டதாகவும், 2013-2014இல் 110.02 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி செய்யப்பட்டதாகவும் தெரிவித்திருக்கிறார். இடையில் 2012-2013இல் உணவு தானிய உற்பத்தியில் தொய்வு ஏற்பட என்ன காரணம்? அப்போதும் அ.தி.மு.க. ஆட்சிதானே? தொடர்ந்து மூன்று ஆண்டுகள், டெல்டா மாவட்டங்களில் குறுவைச் சாகுபடி பொய்த்துப் போய்விட்ட நிலையில், கொடுத்திருக்கும் உற்பத்தி குறித்த புள்ளி விபரம் உண்மையானதுதானா என்று விவசாயிகளே சந்தேகிக்கிறார்கள்!

2012-13இல் வறட்சி நிவாரணமாக 20 லட்சத்து 89 ஆயிரத்து 554 விவசாயிகளுக்கு 1,328.50 கோடி ரூபாய் வழங்கப்பட்டது என்று பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறார்

முதலமைச்சர்! பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் நிவாரணம் முழுமையாக முறையாக வழங்கப்பட்டு விட்டதா? தி.மு. கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பே விவசாயிகள் வாங்கிய சுமார் 7,000 கோடி ரூபாய் கூட்டுறவு விவசாயக் கடன்கள் தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவித்து, அவ்வாறே செய்யப்பட்டதின் காரணமாக 22 இலட்சத்து 40 ஆயிரத்து 739 விவசாயக் குடும்பங்கள், அதிலே பெரும்பாலும் அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்களும் பயன் பெற்றார்கள் என்பதையும் பன்னீர்செல்வம் மறந்து விட்டாரா?

பால் கொள்முதல் விலையை லிட்டர் ஒன்றுக்கு 28 ரூபாயாக உயர்த்தியதைத் தனது பதிலுரையில் முதலமைச்சர் சுட்டிக்காட்டியிருக்கிறார். கொள்முதல் விலையைக் குறிப்பிட்ட முதலமைச்சர் பால் விற்பனை விலையைச் சுட்டிக்காட்டியிருக்க வேண்டாமா? ஆட்சிக்கு வந்தவுடன் 2011ஆம் ஆண்டிலேயே, கழக ஆட்சியில் பாலின் விலை லிட்டர் ஒன்றுக்கு 17 ரூபாய் 75 பைசா என்றிருந்த நிலையினை மாற்றி, 24 ரூபாயாக, அதாவது லிட்டர் ஒன்றுக்கு 6 ரூபாய் 25 பைசா அளவுக்கு உயர்த்தினார்கள். 2014ஆம் ஆண்டு அக்டோபரில் 24 ரூபாய் என்பதிலேயிருந்து மேலும் லிட்டருக்கு 10 ரூபாய் உயர்த்தி, 34 ரூபாய் என்று ஆக்கினார்கள். பால் விற்பனை விலையை இரண்டு மடங்காக உயர்த்திய அந்தச் சாதனையைப் பன்னீர் செல்வம் பேரவையில் மறைக்கலாமா? ஆவின் பால் நிறுவனத்தில் நடைபெற்ற ஊழல் பற்றி முதல் அமைச்சர் வாயே திறக்கவில்லையே? அமைச்சர் ஒருவரையே வீட்டிற்கு அனுப்பினார்களே? ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவரே கைது செய்யப்பட்டாரே? மடியில் கனமில்லை என்றால், அந்த விவரங்களையும் பேரவையில் நேர்மையுடன் தெரிவித்திருக்க வேண்டாமா?

கால்நடைத் துறை பற்றிப் பதிலளித்த பன்னீர்செல்வம், அ.தி.மு.க. ஆட்சியில் 585 கால்நடைக் கிளை நிலையங்கள் ஊரகக் கால்நடை மருந்தகங்களாகவும், 20 கால்நடை மருந்தகங்கள் புதியதாக ஏற்படுத்தப்பட்டதாகவும் பேரவையில் பேசியிருக்கிறார். தி.மு.கழக ஆட்சியில் 2007-2008இல் 888 கால்நடைக் கிளை நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்ட கால்நடை நிலையங்களாக ஆக்கப்பட்டன. மேலும் 51 புதிய கால் நடை மருந்தகங்கள், 30 கால்நடைக் கிளை நிலையங்கள் மற்றும் 55 பார்வைக் கிளை

நிலையங்கள் 218.24 லட்சம் ரூபாய் செலவில்துவக்கப்பட்டன என்பதையும்; ஆசியாவிலேயே முதல் கால்நடைப் பல்கலைக் கழகம் கழக ஆட்சியிலேதான் உருவாக்கப்பட்ட தென்பதையும் முதல் அமைச்சருக்கு நினைவூட்டுகிறேன்.

மீனவர்களின் நலன் பேணும் வகையில் கடல் மீனவ குடும்பங்களுக்கு மீன்பிடித் தடைக் காலத்தில் வழங்கப்பட்டு வந்த 1000 ரூபாய் உதவித் தொகையை 2000 ரூபாயாக அ.தி.மு.க. ஆட்சியில் உயர்த்தப்பட்டதாக முதலமைச்சர் பன்னீர்செல்வம் கூறியிருக்கிறார். இந்த உதவித் தொகையை வழங்கும் திட்டத்தின் கீழ் ஏற்கனவே 500 ரூபாய் என்றிருந்ததை 800 ரூபாயாகவும், அதன் பிறகு 1000 ரூபாயாகவும், இரட்டிப்பாக்கி உத்தரவு பிறப்பித்தது தி.மு.கழக ஆட்சிதான். அதன் பிறகுதான் இவர்கள் ஆட்சியில் அதனை இரண்டு மடங்காக உயர்த்தியிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், மத்திய - மாநில அரசுகளின் நிதி உதவியுடன் கூடிய தேசிய மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின்கீழ் ஆண்டிற்கு 1,80,000 மீனவர்களுக்கு மே 2006 முதல் ஜனவரி 2011 வரை 88 கோடியே 57 லட்சத்து 1029 ரூபாய் நிவாரணமாக கழக ஆட்சியில் வழங்கப்பட்டது. இது தவிர வேறு பல நிவாரணத் திட்டங்களும் மீனவர் நலனுக்காகக் கழக ஆட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டன.

தமிழக இலங்கை மீனவர்களிடையே 5-3-2015 அன்று சென்னையில் பேச்சுவார்த்தை நடத்திட மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது என்று பன்னீர்செல்வம் தனது உரையிலே கூறியிருக்கிறார். ஆனால் அந்தப் பேச்சுவார்த்தை 5ஆம் தேதி கிடையாதென்றும், அது ஒத்திவைக்கப்பட்டு விட்டது என்பதையும் அவருக்கு நான் நினைவூட்டுகிறேன்.

பள்ளிக் கல்வித் துறையில் அ.தி.மு.க. ஆட்சியில் தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகள் எத்தனை என்ற புள்ளி விவரத்தைப் பேரவையில் முதலமைச்சர் படித்திருக்கிறார். அதில், “182 தொடக்கப்பள்ளிகள் புதியதாகத் தொடங்கப்பட்டுள்ளன. 107 தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப்பள்ளிகளாகவும், 810 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப்பள்ளிகளாகவும், 400 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த் தப்பட்டுள்ளன” என்று சுட்டிக்காட்டியிருக்கிறார். தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் 2006 முதல் 2010-2011 வரையில், 569 புதிய

தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டதுடன், 2,626 தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகளாகவும், 645 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 570 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டன என்பதை நினைவூட்டுவதோடு, முதலமைச்சர் பன்னீர்செல்வம் பேரவையில் படித்த இந்த விவரங்கள் அனைத்தும், பொதுவாக மானியக் கோரிக்கைகளின்போது, அந்தந்த துறை அமைச்சர்கள் தங்கள் பதிலுரையிலும், கொள்கை விளக்கக் குறிப்பிலும் சுட்டிக்காட்டுகின்ற புள்ளி விவரங்களாகும் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். எனவே பன்னீர்செல்வம் அமைச்சர் என்ற நிலையிலிருந்து விடுபட்டு முதல் அமைச்சராகப் பதில் சொல்ல இனியாவது முயற்சிக்க வேண்டும்.

சட்டம், ஒழுங்கு பற்றியும் முதலமைச்சர் ஏதோ பதில் சொல்ல முயற்சி செய்திருக்கிறார். அதற்கு நான் பதில் கூற வேண்டியதில்லை. தினந்தோறும் தமிழகத்தில் நடைபெறும் கொலைகளும், கொள்ளைகளும், வழிப்பறிகளும், செயின் திருட்டுகளும், மோசடிகளும் பற்றிய விபரங்கள் நாளேடுகள் மூலம் வெளியாகி அவற்றைத் தமிழ்நாட்டு மக்கள் முறையாகப் படித்துத் தெரிந்திருக்கிறார்கள். ஆனால் இவற்றையெல்லாம் வசதியாக மறைத்துவிட்டுத் திரு. பன்னீர்செல்வம், "கடந்த கால மைனாரிட்டி ஆட்சி போல, இருட்டு இல்லை, திருட்டு இல்லை, புரட்டு இல்லை, புனை சுருட்டு இல்லை" என்றெல்லாம் பேசியிருக்கிறார். அதே பாணியில் "குற்றவாளி ஜெயலலிதா ஆட்சியில் இருட்டும் உண்டு, திருட்டும் உண்டு, புரட்டும் உண்டு, புனை சுருட்டும் உண்டு" என்று அவர் பாணியிலேயே பதிலளிக்க எவ்வளவு நேரமாகும்?

அன்புள்ள,

மு.க.

26-2-2015

3957. கொள்கை காத்திட குவியட்டும் தேர்தல் நிதி!

உடன்பிறப்பே,

2016ஆம் ஆண்டு ஏப்ரல், மே திங்களில் தமிழக அரசின் பொதுத் தேர்தல் வரவுள்ளது. ஐந்தாண்டுக் காலம் இந்த நாட்டு மக்கள் பட்ட துன்பங்களுக்கெல்லாம் விடிவு காலம் ஏற்படவிருக்கிறது. மக்கள் படும் வேதனைகளை எண்ணிப் பார்க்கும்போது, ஆளுங் கட்சிக்கு விடை கொடுத்து அனுப்பத் தயாராகி விட்டார்கள் என்ற போதிலும், "அவர்கள் இல்லாவிட்டால் நாம்தானே", என்ற மதமதப்போடு நாம் இருந்து விடக் கூடாது. எதிர்க்கட்சிகளிடம் ஒற்றுமை இல்லை என்ற எண்ணம் ஆளுங்கட்சியினரிடம் அதிகமாகவே உள்ளது. எதிர்க்கட்சிகளிடம் கூட்டணி இல்லை என்ற தைரியம் ஒரு புறம்! அதே நேரத்தில் ஆட்சி புரிந்த ஐந்தாண்டுகளில் எந்தெந்த வகையில் எல்லாம் பணத்தைக் குவிக்க முடியுமோ, அந்த வழிகளில் எல்லாம் ஆயிரக்கணக்கான கோடி நிதியைக் குவித்து வைத்துள்ள ஆளுங்கட்சி, திருவரங்கத்தில் வாக்குக்கு இரண்டாயிரம் ரூபாய் வீதம் வாரி வழங்கி, வெற்றியைச் சுலபமாக ஈட்டியதைப் போல, கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றியைப் பெற்றதைப் போல, 2016 சட்டப்பேரவைத் தேர்தலிலும் சுலபமாக வெற்றி பெற்று விடலாம் என்ற கனவோடு இருக்கிறார்கள்.

சட்டப்பேரவையில் உள்ள பெரும்பான்மை பலம் காரணமாக, எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற பாணியில், யாரையும் மதிக்காமல் அதிலும் எதிர்க் கட்சியினர் எழுந்தாலே உட்கார வைத்து விடுகிறார்கள். மீறி எழுந்தால் அவையிலிருந்தே வெளியேற்றி விடுகிறார்கள். "கொல்லைப்புறமாக குவித்து வைத்துள்ள நிதி, அதிகாரப் பலம், காவல் துறையினரின் துணை, இவைகளே போதும் எங்கள் வெற்றிக்கு" என்ற நினைப்போடு

அ.தி.மு.க. தேர்தலைச் சந்திக்க விருக்கிறது. அவர்களை எதிர்த்துப் போட்டியிட - வாக்குகளுக்கு அவர்களைப் போல நிதி கொடுக்க - ஆடம்பரச் செலவுகளைச் செய்திட நம்மிடம் நிதியில்லை என்ற போதிலும், அத்யாவசியமான, அவசியமான செலவுகளைச் செய்திட ஓரளவு நிதியையாவது நாம் சேர்க்க வேண்டாமா? ஆளுங் கட்சி, பட்டுப் புடவை கட்டிக் கொண்டு, பார், பார் நான் அணிந்திருக்கும் நகைக்கடையை என்று ஒய்யார நடைபோட்டு வரும்போது, எளிய கூறைப் புடவையையாவது கட்டிக் கொண்டு; தங்க வளையல் இல்லாவிட்டாலும், கண்ணாடி வளையல்களையாவது அணிந்து கொண்டு வர வேண்டாமா? அதற்கான வேண்டுகோளை உனக்குத் தெரிவிக்கத்தான் இந்தக் கடிதம்! நான் கேட்டபோதெல்லாம் இல்லை என்று மறுக்காமல் வாரி வழங்கிய உயிரனைய உடன்பிறப்பல்லவா நீ! உன்னிடம் கேட்காமல், நான் வேறு யாரிடம் சென்று கேட்பேன்? அதற்காகவே இந்த நினைவூட்டும் மடல்!

இந்தத் தேர்தலில் - எதிர் முகாமில் மலையென நிதி குவிக்கப்பட்டுள்ளது. நிதி யென்று அதற்குப் பெயர் இல்லை. "தலைவிதியே" என்று பயந்து கொண்டு பலர் தந்தது. பலன் பெற்றதற்குப் பதிலாகப் பலர் தந்தது. அந்தப் பணத் தோட்டாக்கள்தான் இந்தத் தேர்தலில் நம்மீது பாயக் காத்துக் கொண்டிருக்கிறது. பாயும் அந்தத் தோட்டாக்கள், பட்டெனத் தெறித்து விழுமளவுக்கு பலம் வாய்ந்த நெஞ்சுரம் கொண்டது நம்முடைய கழகப் பட்டாளம் என்பதிலே சந்தேகமில்லை. அதனால் நமக்கு அச்சமும் இல்லை.

மேலும் தேர்தல் நிதி திரட்டுவதென்பது நம் கட்சிக்குப் புதிதல்ல; 1967 ஆம் ஆண்டு தேர்தலுக்காக பேரறிஞர் அண்ணா அவர்களின் ஆணையை ஏற்று, எத்தனை எத்தனை சிற்றூர் பேரூர்களில்; கொடியேற்ற வேண்டுமா? கொடுங்கள் 500 ரூபாய்; சிறிய வரவேற்பா? ஆயிரம் ரூபாய்; வீட்டிற்குள் வந்து "டீ, காபி" அருந்த வேண்டுமா? ஐந்தாயிரம் ரூபாய் தேர்தல் நிதி; சிறப்புக் கூட்டமா? ஒரு இலட்ச ரூபாய் தரத் தயாரா? என்று கேட்டுக் கேட்டுப் பெற்று, விருகம்பாக்கத்தில் நடைபெற்ற தேர்தல் மாநாட்டில் அண்ணா அவர்களிடம் 11 இலட்ச ரூபாய் நிதியை நான் கொடுத்த போது, அவர் முகத்திலே தான் எவ்வளவு மகிழ்ச்சி?

அந்த மகிழ்ச்சியோடு, வேட்பாளர்களின் பெயர்களை அறிவித்த போது, சைதாப்பேட்டை தொகுதியில் யார் வேட்பாளர் தெரியுமா? "பதினோறு இலட்சம்" என்று கரவொலிக்கிடையே மகிழ்ச்சியோடு அறிவித்தாரே; மறக்கக்கூடிய செய்தியா அது? அப்போது அந்த 11 இலட்சத்துக்கே அந்த மகிழ்ச்சி - அந்தத் துள்ளல் - இன்ப, துன்பம் இரண்டையும் அளவோடு வெளிப்படுத்தும் இயல்பு கொண்ட அண்ணாவே பரவசத்தின் எல்லைக்குச் சென்றாரே, அப்போது அந்த 11 இலட்சம் பெருந்தொகை. இப்போது ஆளுங் கட்சியாக உள்ள கட்சிக்கு அந்த 11 இலட்சம் என்பது மிகச் சாதாரணம்! ஏனென்றால் அவர்கள் இந்தத் தேர்தலில் செலவழிக்கப் போவதெல்லாம் கோடி கோடியாக! அந்தக் கோடிகளைச் சந்திக்க நீயும், உன் போன்ற உடன்பிறப்புகளும் தரவிருக்கின்ற தேர்தல் நிதி எவ்வளவு?

இன்னும் சரியாக ஓராண்டுதான் - ஆம் பன்னிரண்டே மாதங்கள்! அதற்குள் நாம் ஆற்ற வேண்டிய ஜனநாயகப் பணிகள் ஏராளம் - அதிலே ஒன்றுதான் தேர்தல் நிதி திரட்டும் பணி. இப்பணி மட்டுமல்ல, கழகப் பணி எதுவாயினும் முகம் சுளிக்காமல் கடிதில் அதனை நிறைவேற்ற, கழகக் காளைகள் ஆயிரம் ஆயிரம் பேர் தயாராக இருக்கிறீர்கள் என்பதை நான் நன்கறிவேன். கழகத்தின் சார்பில் 65 மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு, மாவட்டக் கழகச் செயலாளர்களாக வந்துள்ள அனுபவம் பெற்ற மூத்த தளகர்த்தர் களும் - புதிதாகப் பொறுப்பேற்றுள்ள இளங்காளையரும் இந்தத் தேர்தல் நிதியளிப்பு நிகழ்ச்சியைப் போட்டியாகவே ஏற்றுக் கொள்வார்கள் என்பதில் அய்யமில்லை. ஒன்றியச் செயலாளர்களோ ஒருவருக்கொருவர் கடும் போட்டியிட்டுக் கொண்டு, தேர்தல் நிதி வசூலில் எந்த ஒன்றியம் அதிக நிதியைச் சேர்த்துக் கொடுத்தது என்ற அறிவிப்பின் வாசகத்தைக் கேட்கத் தயாராகிட வேண்டும். ஒன்றியச் செயலாளர்களோடு போட்டியிட நகரக் கழகச் செயலாளர்களுக்கும் நல்லதோர் வாய்ப்பு! சிற்றூர் - பேரூர் - நகரம் - மாநகரம் என்று ஒன்றுக்கொன்று சளைத்ததல்ல என்பதை நிரூபித்திட நாளை முதலே தயாராக வேண்டும். இந்தத் தேர்தல் நிதிக் குவிப்பில், கழக முன்னோடிகளும், முன்னணியினரும், தலைமைக் கழகச் செயலாளர்களும், அணிச் செயலாளர்களும், தேர்தல் பணிச் செயலாளர்களும், மாவட்டக்

கழகச் செயலாளர்களோடு இணைந்து பெருநிதிச் சேர்க்க அதிக நேரத்தைச் செலவிட வேண்டும்.

தேர்தல் நிதிக்கான நன்கொடைச் சீட்டுகள் தலைமைக் கழகத்தில் முறைப்படி அச்சிடப்பட்டு மாவட்டக் கழகச் செயலாளர்கள் வாயிலாக உங்களுக்கு வழங்கப்படவுள்ளன. கழக அமைப்புகளில் அமர்ந்து விட்டோம், அப்பாடா என்று ஓய்வெடுக்க நினைக்காமல், உனக்கிருக்கும் அளப்பரிய பணிகளிடையே முதல் இடத்தை தேர்தல் நிதி திரட்டுவதற்காக என்று நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். உள்ளூர்களிலே உள்ள கழகத் தோழர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து கிராமந்தோறும், வீடுகள் தோறும் படிப்படியாக ஏறி, மக்களிடையே இந்த ஆட்சியில் அவர்கள் படும் இன்னல்களைக் கூறி, அவற்றைக் களைந்திட உங்களால் முடிந்த நிதியினைத் தாருங்கள் என்று கேட்டுப் பெற வேண்டும்.

"தாய் எட்டடி பாய்ந்தால், குட்டி பதினாறு அடி பாயும்" என்று முப்பெரும் விழா நிகழ்ச்சியில் முதன்மைச் செயலாளர் தம்பி துரைமுருகன், நம்முடைய கழகப் பொருளாளர் பற்றிக் கூறிய போது, "பதினாறு அடி என்ன, நான் முப்பத்திரண்டு அடி கூட பாயத் தயார்" என்று பொருளாளர், தம்பி தளபதி ஸ்டாலின் சொன்னாரே, அதனை நிரூபிக்க நல்ல வாய்ப்பு இது. தேர்தல் நிதி கேட்டு கடிதம் எழுத வேண்டுமென்று என்னிடம் நினைவூட்டியவரே அவர்தான். எனவே இந்த முயற்சியில் அவர் வெற்றி பெறுவார் என்றே நான் நம்புகிறேன். ஏனென்றால் கழகத்தின் தளகர்த்தர்களும், அவரோடு ஒத்த வயதுடைய கழகக் காளையர்களும் கழகப் பணிகளில் அவருக்கு தரும் ஒத்துழைப்பைப் போலவே இந்தத் தேர்தல் நிதி சேர்ப்பதிலும் பெரிதும் உதவியாக இருப்பார்கள் என்பதை நான் நன்கறிவேன்.

உடன்பிறப்பே, நாம் சாதாரணமானவர்கள்தான்; சாமான்யமானவர்கள்தான்! இந்தச் சாதாரணமானவர்கள்தான் எதிர்க்கட்சியாக இருந்த போது - பல்வேறு போராட்டங்களை நடத்திக் கொண்டு - கழகத் தளபதிகள் சிறைச்சாலைக்கும் அடிக்கடி சென்று வந்து - பயங்கரமான பொய் வழக்குகளுக்காக நீதிமன்றத்தின் நெடிய படிக்கட்டுகளிலே ஏறி இறங்கிக் கொண்டு; வேதனைகளை, சோதனைகளைத் தாங்கிக் கொண்டு கட்சியைக் கட்டிக் காத்து வருகிறோம்.

நானோ, பொதுச் செயலாளரோ, பொருளாளரோ - கலந்து கொள்ளும் கழக நிகழ்ச்சிகள் எதிலும் தேர்தல் நிதியளிப்பு அவசியம் இருந்திட வேண்டும். கழக நிகழ்ச்சிகளிலோ அல்லது நேரிலோ; எங்களைக் காண வருவோர் - வரும்போது மாலை ஒன்று கொண்டு வருவதற்குப் பதிலாக - கைத்தறி ஆடை ஒன்று அணிவிப்பதற்குப் பதிலாக - நூறோ, இருநூறோ என்று தேர்தல் நிதி கொண்டு வரவேண்டும். அதையும் ஒரு கவருக்குள் வைத்து, கவரின் மீது உங்களுடைய முகவரியும், எவ்வளவு ரூபாய் என்பதையும் தெளிவாக எழுதிக் கொண்டு வர வேண்டும். அப்போதுதான் நீ வழங்கிய தொகை தலைமைக் கழகத்திலே சேர்ந்து விட்டது என்பதை ஏடுகளின் வாயிலாக அறிவிக்க இயலும். நிதிக் கணக்கில் உன் பெயரைப் பார்த்தால் உனக்கு ஒரு மகிழ்ச்சி ஏற்படும். தமிழ்ச் சமுதாயத்தின் அணையா விளக்காம் கழகத்திற்குத் துணை நிற்கிறோம், வரும் தேர்தலில் ஜனநாயகத்திற்கு விரோதமாக சர்வாதிகாரமாக நடைபெறும் ஆட்சியை வீட்டுக்கு அனுப்ப இந்தத் தேர்தல் நிதி பயன்படும் என்ற எண்ணம் உனக்குத் தோன்றிடும். மேடைகளில், மாலையும், துண்டுகளும் அணிவித்து முடிக்கவே அரை மணி நேரமாகிறது. ஏன், இப்போது அன்றாடம் நான் மாலையில் வீட்டிலிருந்து அறிவாலயம் புறப்படுகிறேன் என்றால், வீட்டின் கீழே அரை மணி நேரம் வந்தவர்கள் அனைவரையும் சந்தித்து விட்டு, குழந்தைகளுக்கு பெயர் சூட்டி விட்டு, பிறந்த நாள் வாழ்த்து, மண நாள் வாழ்த்து என்று வருபவர்களை யெல்லாம் சந்தித்து விட்டுத்தான் வருகிறேன். அப்படி என்னைச் சந்திக்க வருபவர்கள் இனி தேர்தல் நிதியோடுதான் வர வேண்டும். மாலை அணிவித்தால் மேடையுடன் போய் விடுகிறது; கைத்தறி ஆடை ஒரு சிறிது நேரம்தான் என் கையிலே தரப்படுகிறது; அவற்றுக்குப் பதிலாக தேர்தல் நிதியாகக் கொடுத்தால், தலைமைக் கழகத்திற்கு அந்த நிதி சென்றடைந்து, வருகின்ற தேர்தலைச் சந்திக்க உன்னுடைய பங்கும் உதவியாக அமைந்திடும் என்ற பெரு மகிழ்ச்சி உனக்கு ஏற்படும்.

உடன்பிறப்பே, நான் எத்தனையோ முறை கேட்டிருக்கிறேன். நீயும் வாரி வாரி வழங்கி யிருக்கிறாய்; உண்மைதான்! நான் கேட்டவுடன் ஒன்றும் இல்லை என்று சொல்லாமல், அள்ளிக் கொடுத்த உடன்பிறப்பு அல்லவா நீ; உன்னைத்தான் மீண்டும் கேட்கிறேன்! பணக்காரர்களிடம், பல கோடி வைத்திருப்

போரிடம் கேட்டுப் பழக்கப்பட்டவனல்ல நான்; உன்னிடம்தான் திரும்பத் திரும்பக் கேட்கிறேன், நீயும் கொடுத்துக் கொண்டே இருக்கிறாய்; இப்போதும் கொடுப்பாய் என்ற நம்பிக்கையோடுதான் இருக்கிறேன். என்ன; தேர்தல் நிதி கேட்டு நான் இன்னும் விரிவாக எழுத வேண்டுமென்று கருதுகிறாயா! என் அன்பு உடன்பிறப்புக்கு நான் ஒரு குறிப்புக் காட்டினால் போதாதா! வெட்டி வா என்றால் கட்டி வரும் உடன்பிறப்பாயிற்றே நீ! குன்றனைய நம் கொள்கை காத்திட குவியட்டும் பெரு நிதி; அதுவே நம் தேர்தல் நிதி.

அன்புள்ள,

மு.க.

12-03-2015

3958. நீதி என்றும் வெல்லும்; நிச்சயமாக வெல்லும்!

உடன்பிறப்பே,

ஜெயலலிதாவின் 66 கோடி ரூபாய் சொத்துக் குவிப்பு வழக்கின் மேல் முறையீட்டு விசாரணை, 5-1-2015 அன்று தொடங்கி, கர்நாடகா உயர் நீதிமன்றத்தில் மின்னல் வேகத்தில் வழக்கறிஞர்களின் வாதங்கள் முற்றுப்பெற்று நேற்றையதினம் நீதிபதி அவர்கள் தேதி குறிப்பிடாமல் தீர்ப்பை ஒத்திவைப்பதாகத் தெரிவித்திருக்கிறார். இந்த நேரத்தில், இதுவரை விசாரணை நடைபெற்ற 38 நாட்களில், நீதிபதி குமாரசாமி அவர்கள் அவ்வப்போது குறுக்கிட்டுத் தெரிவித்த கருத்துகளை, தீர்ப்புக்கு முன்பு அனைவர்க்கும் நினைவூட்டவே இந்தக் கடிதம்!

16-2-2015 அன்று ஜெயலலிதா தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், பி. குமார் “இது அரசியல் ரீதியாகப் பழி வாங்கும் நோக்கத்தில் தொடரப்பட்டுள்ள பொய் வழக்கு” என்றார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதி சி.ஆர். குமாரசாமி அவர்கள், “இது பொய் வழக்கு, பொய் வழக்கு என்று மூச்சுக்கு முன்னூறு முறை சொல்கிறீர்கள். ஆனால், **குற்றவாளிகள் மீது கூறியுள்ள புகார் உண்மையில்லை என்பதை உறுதி செய்வதற்கான எந்த ஆதாரத்தையும் முழுமையாகக் காட்டாமல், வாய் வழியாகப் பொய் வழக்கு என்று சொன்னால் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்?** அரசுத் தரப்பில் 259 சாட்சிகள் வாக்குமூலம் கொடுத்துள்ளனர். புகார் உண்மை என்பதை நிரூபிக்கும் வகையில் 2 ஆயிரத்து 341 ஆவணங்கள் தாக்கல் செய்து உறுதிப்படுத்தியுள்ளனர். குற்றவாளிகள் தரப்பில் 99 சாட்சிகளும் 385 ஆவணங்கள் மட்டுமே தாக்கல் செய்துள்ளீர்கள். அதிலும் **அரசுத் தரப்புக் குற்றத்தை முறியடிப்பதற்கான ஆதாரங்கள் சொல்லிக் கொள்ளும் வகையில் இல்லை”** என்றார் நீதிபதி குமாரசாமி அவர்கள்.

ஜெ. வழக்கறிஞர் குமார், ஜெயலலிதா முதல்வராக இருக்கும்போது, ஒரு ரூபாய் மட்டுமே சம்பளமாக வாங்கினார் என்று கூறியபோது, நீதிபதி குமாரசாமி அவர்கள், "**முதல்வர் பதவியில் இருப்பவர் ரூ. 1 சம்பளம் வாங்கினாலும், பொது ஊழியராகத்தான் கருதப்படுவார். சட்டத்திற்கு முன் அனைவரும் சமம் எனும்போது, ஒரு ரூபாய் சம்பளம் வாங்கிய ஜெயலலிதாவுக்கு 66 கோடி ரூபாய் வருமானம் உள்ளதை லஞ்ச ஒழிப்பு கண்காணிப்புத் துறை உறுதிப்படுத்தியுள்ளது. ஆனால் இல்லை என்பதற்கு உங்கள் தரப்பில் எந்த ஆதாரமும் கொடுக்கவில்லையே**" என்று நீதிபதி சொல்லியிருக்கிறார்.

சுதாகரன் திருமணச் செலவு பற்றிய விவாதம் நடைபெற்ற போது, குறுக்கிட்ட நீதிபதி குமாரசாமி அவர்கள் , "இத்தனை கோடி ரூபாய் செலவு செய்து இவ்வளவு பிரமாண்டமாகத் திருமணம் செய்ய சுதாகரன் என்ன அ.தி.மு.க. தொண்டரா? அல்லது ஜெயலலிதாவின் மகனா? இதுவரை 28 நாட்கள் வாதம் செய்துள்ளீர்கள். தனி நீதிமன்ற நீதிபதி தவறாகத் தீர்ப்பு வழங்கியுள்ளதாகக் குற்றம் சாட்டுகிறீர்கள். அவர் வழங்கியுள்ள தீர்ப்பில் என்ன குறை என்பதை 20 நாளில் உங்களால் உறுதி செய்ய முடியவில்லை. இப்படி இருந்தால் நான் மட்டும் என்ன செய்ய முடியும்? **தனி நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை நானும் உறுதி செய்ய வேண்டிய சூழ்நிலைதான் தற்போது நிலவுகிறது.** ரூபாய் 66 கோடி வருமானத்திற்குச் சொத்துள்ளது என்பதை இல்லை என்று மறுக்கும் வகையில் ஆதாரமில்லையே? ஒன்று, வாதத்திற்குத் தேவையான ஆதாரம் கொடுங்கள். இல்லையெனில் நானே ஒரு ஆடிட்டரை நியமனம் செய்துகொண்டு கணக்குகளைச் சரிபார்க்கிறேன். அரசு வழக்கறிஞர் பவானிசிங்கின் வாதமும் அவசியமில்லை நானே ஆடிட்டிங் செய்து தீர்ப்பு வழங்கி விடுகிறேன். இது தவிர எனக்கு வேறு வழி தெரியவில்லை" என்று நீதிபதி குமாரசாமி கூறியிருக்கிறார்.

சுதாகரன், இளவரசி சார்பாக முன்னாள் நீதியரசர், சுதந்திரம் வாதத்தைத் தொடங்கும்போது,

நீதிபதி குமாரசாமி :- இந்த வழக்கில் முக்கியமானது 120 பி - கூட்டுச் சதி, 109 குற்றத்துக்கு உடந்தையாக இருத்தல். ஜெயலலிதா அரசு பதவியில் இருந்தபோது சம்பாதித்த பணத்தை வைத்து, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோருடன்

கூட்டுச் சதி செய்து சொத்துகள் வாங்கியதாகவும், ஜெயலலிதா குற்றங்கள் செய்ய சசிகலா, சுதாகரன், இளவரசி உடந்தையாக இருந்ததாகவும், தமிழக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை பதிவு செய்திருக்கிறது. இதைப்பற்றிச் சரியாக யாரும் வாதிட வில்லை. நீங்கள் 120பி, 109 பற்றி வாதிடுங்கள்.

சுதந்திரம் :- ஊழல் தடுப்புச் சட்டம் 13 (1) இ-யில் 120 பி, 109 வராது. ஏ.1 ஜெயலலிதா கூட்டுச் சதியில் ஈடுபட்டதற்கான எந்த ஆதாரமும் தமிழக ஊழல் தடுப்பு போலீசாரால் நிரூபிக்கப்படவில்லை.

நீதிபதி :- ஜெயலலிதாவை ஏன் காப்பாற்ற நினைக்கிறீர்கள்? உங்கள் தரப்பு குற்றச்சாட்டுகளுக்காக மட்டும் வாதிடுங்கள். **ஏ.1 (ஜெயலலிதா) வுக்காக வாதிட்ட வரும், ஏ.2 (சசிகலா) வுக்காக வாதிட்டவரும் சாட்சியங்களின் ஆதாரங்களைச் சுட்டிக்காட்டி வாதிடவில்லை. நீங்களாவது குற்றப் பின்னணி கொண்டவர்கள் கூட்டுச் சதி, குற்றத்துக்கு உடந்தையாக இருந்தது இல்லை என சாட்சிகளின் ஆதாரங்களைச் சுட்டிக்காட்டி வாதிட வேண்டும்.**

வழக்கறிஞர் மணி சங்கர் (சசிகலாவின் வழக்கறிஞர்) :- ஜெயலலிதா குற்றம் செய்ய உடந்தையாக சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் இருந்தனர் என எந்த ஓர் அடிப்படை ஆதாரமும் இல்லாமல் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

நீதிபதி :- கூட்டுச் சதியில் ஈடுபடாதவர்களை எப்படித் தனி நீதிமன்றம் தண்டித்து இருக்கும்? தமிழக ஊழல் தடுப்புப் போலீசார் ஆதாரங்கள் இல்லாமல் வழக்கைப் பதிவு செய்யத்தான் முடியுமா? இல்லை, இந்த வழக்கை 18 ஆண்டுகள் நடத்தி இருக்கத்தான் முடியுமா? இல்லை, இதையெல்லாம் ஆராயாமல் தனி நீதிமன்றம் தீர்ப்பை வழங்கியிருக்கத்தான் முடியுமா? தேவை இல்லாததைப் பேசி நீதிமன்றத்தின் நேரத்தை வீணாக்குவதைவிட, தனி நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் தவறுகள் இருந்தால் அவற்றை உங்கள் தரப்பு ஆதாரங்களோடு நிரூபியுங்கள். **இதுவரை 65க்கும் மேற்பட்ட வழக்குகளின் தீர்ப்புகளை மேற்கோள்காட்டித் தேவையில்லாமல் வாதிட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.** இதுவரை 20 சதவிகிதம் கூட ஆதாரங்களோடு வாதிடவில்லை.

சுதந்திரம் :- பவானி சிங் எங்கள் மீதுள்ள குற்றச்சாட்டுகளைக் கூறி வாதிடட்டும், அதற்குப் பதில் சொல்கிறோம்.

நீதிபதி :- இதுபோன்ற கிரிமினல் வழக்குகளை எதன் அடிப்படையில் வாதிட வேண்டும் என்பது தெரியுமா? ஜெயலலிதாவைப் பற்றியே கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் மனுதாரரைப் பற்றிக் கவலைப்படுங்கள். அவர்களுடைய குற்றச்சாட்டுகளைப் பற்றி வாதிடுங்கள். வாதத்தின் அடிப்படையில்தான் தீர்ப்பு அமையும்.

வழக்கறிஞர் குமார் :- ஜெயலலிதா செலவுப்பட்டியலில் இருந்து சுதாகரன் திருமணச் செலவு 6.45 கோடி ரூபாயை நீக்க வேண்டும்.

நீதிபதி :- உங்கள் தரப்பு வாதங்களை இப்படி வாய்மொழியாகவே பேசி வருகிறீர்கள். கட்டட மராமத்துப் பணிக்காக நீங்கள் செய்த செலவுக்கான ஆதாரங்கள் என்ன? அதற்கான சாட்சியங்கள் என்ன என்பதை நிரூபிக்க வேண்டும். ஆனால் **தமிழக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை உங்கள் மீதுள்ள குற்றச்சாட்டுகளுக்குத் தகுந்த சாட்சியங்களோடும் ஆதாரங்களோடும் 82 - 92 சதவிகிதம் நிரூபித்திருக்கிறார்கள்.** ஆனால் நீங்கள் இதுவரை சாட்சிய ஆதாரங்களை காட்டவும் இல்லை. 30 - 35 சதவிகிதம் வரைதான் வாதிட்டிருக்கிறீர்கள்.

குமார் :- 35 மார்க் எடுத்தாலே பாஸ்தான்.

நீதிபதி :- பள்ளிக்கூடத்தில் 35 மார்க் எடுத்தால் பாஸாக இருக்கலாம். ஆனால் நீதிமன்றத்தில் எதிர்தரப்பை விட அதிக மார்க் வாங்கினால்தான் பாஸ் பண்ண முடியும். அப்படிப் பார்த்தால் உங்களைவிட அவர்கள் 65 மார்க் அதிகமாக வாங்கியிருக்கிறார்கள். அதனால் அவர்கள்தான் பாஸ்.

18-2-2015 அன்று விசாரணை :-

சுதாகரன், இளவரசி ஆகியோரின் வழக்கறிஞர் சுதந்திரம், வழக்கு காலத்தில் அவர்களுக்கு இருந்த சொத்து தொடர்பான விவரப் பட்டியலை நீதிபதியிடம் அளித்து அது பற்றி விரிவான விவாதம் நடத்த அனுமதிக்க வேண்டுமென்றார். அதற்கு நீதிபதி குமாரசாமி அவர்கள், "கடந்த 18 ஆண்டுகளாக இந்த வழக்கு நடந்த போது சொல்லாமல், இப்போது விரிவாகச் சொல்கிறோம் என்பது என்ன நியாயம்? கொடுத்த பட்டியலிலே என்ன இருக்கிறது" என்று கேட்டார். அதற்கு சுதந்திரம், சுதாகரனுக்கு

2 கோடியே 12 இலட்சத்து 47 ஆயிரத்து 978 ரூபாய் வருமானம் இருந்தது. அதில் 1 கோடியே 10 லட்சத்து 4 ஆயிரத்து 961 ரூபாய்க்கு அசையா சொத்து வாங்கினார். இந்தக் கணக்கை வக்கீல் சுதந்திரம் சரியாகச் சொல்லாமல் தடுமாறியபோது, நீதிபதியே தனது கையில் வைத்திருந்த கால்குலேட்டரைப் பயன்படுத்திச் சரியான கணக்கைத் தெரிவித்தார்.

"நீங்கள் இங்கே கூறிய கணக்கு பட்டியலை வருமான வரித் துறையில் காட்டிச் சான்றிதழ் பெற்றீர்களா" என்று நீதிபதி கேட்டதற்கு சுதந்திரம் "இல்லை" என்றார். அதற்கு நீதிபதி, "வருமானவரித் துறையில் தாக்கல் செய்யாத பட்டியலை இங்கே சொல்வது ஏன்? வழக்கு காலத்தில் இவ்வளவு சொத்து எப்படி வந்தது" என்று கேட்டார். அதற்கு சுதந்திரம், சுதாகரன் பல நிறுவனங்களில் இயக்குனராக இருந்தார், அதன் மூலம் பல வழிகளில் நடந்த வர்த்தகத்தில் வருமானம் கிடைத்தது என்று கூறியதோடு, **தமிழகச் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மாநிலம் முழுவதும் நடத்திய கண்காட்சிக்குத் தேவையான வாகனம், புரஜெக்டர்கள் உட்பட பல பொருள்கள் சப்ளை செய்யும் பொறுப்பு சூப்பர் டூப்பர் டி.வி. நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.** பொருட்கள் சப்ளை செய்ததற்காக 42 லட்சம் ரூபாய் கட்டணம் வழங்க பில் கொடுத்தோம், சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 39.50 லட்சம் வங்கி வரைவோலை மூலம் வழங்கியுள்ளனர். அதை வருமானமாக எடுத்துக் கொள்ளாமல், வருமானத்திற்கு அதிகமாகச் சொத்து சேர்த்ததாக லஞ்ச ஊழல் மற்றும் ஊழல் கண்காணிப்புத் துறை கூறியுள்ளது" என்று தெரிவித்திருக்கிறார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதி குமாரசாமி அவர்கள், **"அம்மா முதல்வராக இருக்கும்போது, மகனுக்குச் சொந்தமான கம்பெனிக்கு அரசுப் பணியைக் குத்தகை கொடுப்பது சட்டப்படி நியாயமா? இது அதிகார துஷ்பிரயோகம் இல்லையா?"** என்று நீதிபதி கேள்வி எழுப்ப வக்கீல் சுதந்திரத்தால் பதில் கூற முடியவில்லை. அப்போது நீதிபதி, "நான் கடந்த 28 நாட்களாகத் தனி நீதிமன்றத் தீர்ப்புக்கு உட்பட்டு வாதம் செய்யுங்கள் என்று வலியுறுத்தி வருகிறேன். ஆனால் நீங்கள் நான் சொல்வதை சீரியசாக எடுத்துக் கொள்ளவில்லை. பழைய சம்பவங்களை அசைபோட வேண்டாமென்று கூறியும், அதையே செய்கிறீர்கள். எப்படியோ நீங்கள் படிப்பதைப் படியுங்கள். **இறுதியில் நானே**

உண்மையை ஆராய்ந்து அதற்கேற்றபடி எனது தீர்ப்பை வழங்குகிறேன்” என்றார்.

வழக்கறிஞர் சுதந்திரம் 19ஆம் தேதியன்று விசாரணையின் போது, “பெங்களூர் சிறப்பு நீதிமன்ற நீதிபதி, சுதாகரன், இளவரசியிடம் அரசு தரப்பு சாட்சிகளின் வாக்குமூலம் குறித்து கேள்வி எழுப்பவில்லை. அவ்வாறு கேட்கப்படாத குற்றச்சாட்டை ஆதாரமாகக் கொண்டு தீர்ப்பளிக்கக் கூடாது” என்றார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதி, “அரசு தரப்பு சாட்சியங்களின் அடிப்படையில் இளவரசியிடம் சுமார் 650 கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. அதில் 95 சதவீதத்துக்கும் அதிகமான கேள்விகளுக்கு “ஆம், இல்லை” என்று மட்டுமே பதில் அளித்துள்ளார். உங்களுக்குச் சந்தேகம் இருந்தால், இளவரசி நீதிமன்றத்தில் அளித்த வாக்குமூலத்தைப் படியுங்கள்” என்றார்.

மேலும் நீதிபதி, “குற்றவாளிகள் தரப்பில் வாய்மொழியாக முன் வைக்கும் வாதங்களை வைத்துத் தீர்ப்பு வழங்க முடியாது. ஆதாரங்கள், ஆவணங்கள் மற்றும் சாட்சிகள் அடிப்படையில் தான் தீர்ப்பு வழங்க முடியும். ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது அவரது வருமானத்தைப் பயன்படுத்தி சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் சொத்து குவித்தார்கள் என்பதுதான் குற்றச்சாட்டு. அதனை எப்படி ஆதாரத்துடன் பொய் என்று நிரூபிக்கப் போகிறீர்கள்? **சுதாகர னும், இளவரசியும் சட்ட விரோதமாக சொத்து குவிக்கவில்லை என்பதற்கு உங்களிடம் என்ன ஆதாரம், ஆவணங்கள் இருக்கின்றன? அந்தக் குற்றச்சாட்டு பொய் என நிரூபிக்கும் எந்த ஆதாரத்தையும் ஆவணத்தையும் நீங்கள் இதுவரை தாக்கல் செய்யவில்லை”** என்று நீதிபதி குமாரசாமி தெரிவித்தார்.

20ஆம் தேதியன்று விசாரணையின் போது நீதிபதி குமாரசாமி, வழக்கறிஞர் சுதந்திரத்தைப் பார்த்து, “உங்கள் தரப்பு வாதத்தை முடித்து விட்டீர்களா?” என்ற போது “ஆம்” என்றார். அதைத் தொடர்ந்து நீதிபதி, **“கடந்த 31 நாட்களாக விசாரணை நடந்தது. டி.வி.ஏ.சி. பொய் வழக்கு போட்டுள்ளதாகக் கூறினீர்கள். ஆனால் அதற்கான ஆதாரம் கொடுங்கள் என்று நான் கேட்டதைக் கொடுக்காமலே, வாதத்தை நிறைவு செய்துள்ளீர்கள்”** என்றார்.

கம்பெனிகள் சார்பில் வாதாடிய வழக்கறிஞர், "எங்கள் நிறுவனங்களைக் குற்றவாளிகளுக்குச் சொந்தமானது என்று தனி நீதிமன்றம் தனது தீர்ப்பில் உறுதிப்படுத்திச் சேர்த்துள்ளது. அது தவறு. வழக்கிலிருந்து கம்பெனிகளை நீக்க வேண்டும்" என்றார்.

அப்போது நீதிபதி குமாரசாமி அவர்கள், "சொத்துக் குவிப்பு வழக்கில் கம்பெனிகளைச் சேர்த்தபோது ஏன் எதிர்த்து மனு தாக்கல் செய்ய வில்லை? அப்போது அமைதியாக இருந்து விட்டு 18 ஆண்டுகளுக்குப் பின் இப்போது கேட்பதின் நோக்கம் என்ன?" என்று அந்த வழக்கறிஞரிடம் கேட்டபோது, வழக்கறிஞர் அமைதியாக இருந்திருக்கிறார்.

கர்நாடக உயர் நீதிமன்றத்தில் நீதிபதி குமாரசாமி, ஜெ. தரப்பு வழக்கறிஞர்களிடம் **"நீங்கள் உரிய ஆவணங்களைக் காட்டாமல் வாயாலேயே சொல்லிக் கொண்டிருந்தீங்கன்னா, குன்ஹா கொடுத்த தீர்ப்பைத்தான் நானும் கொடுக்கவேண்டி வரும்"** என்று நீதி மன்றத்திலேயே வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார்.

ஜெயலலிதாவின் வழக்கறிஞர் நாகேஸ்வரராவ், ஜெயலலிதாவுக்குக் கிடைத்த பரிசுப் பொருள்கள் அனைத்தும் அவரது வருமானத்திற்கு உட்பட்டது. அது தொடர்பாக வருமான வரித்துறையிலும் கணக்குக் காட்டியுள்ளோம். அதை தனி நீதிமன்றம் ஏற்று தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது என்றார். அப்போது குறுக்கிட்ட நீதிபதி குமாரசாமி அவர்கள், "வருமானவரித் துறை அதிகாரிகளின் நோக்கம் தனி மனிதர் யார் வந்து தனக்கு இவ்வளவு சொத்து உள்ளது என்று குறிப்பிட்டால் அதையேற்று அதற்கான வரி எவ்வளவு என்று முடிவுசெய்து வசூல் செய்வது மட்டும்தான். ஆனால் ஊழல் தடுப்புச் சட்டத்தில் தனி மனிதர் சொத்து சேர்த்தால், எந்தச் சொத்து, எப்படி சேர்க்கப்பட்டது என்று கேள்வி கேட்கும் அதிகாரம் உள்ளது. நீங்கள் அடிக்கடி வருமான வரித் துறை தீர்ப்பாயம் வழங்கிய தீர்ப்புகளை மேற்கோள் காட்டுவது ஏன்? 66 கோடி ரூபாய் சொத்து சேர்த்துள்ளது தொடர்பாக விசாரணை நடத்தி வழங்கியுள்ள தீர்ப்பில் என்ன அநியாயம் நடந்துள்ளது என்பதை மட்டும் மையமாகவைத்து வாதம் செய்யுங்கள். தேவையில்லாமல் நீதிமன்ற நேரத்தை வீணாக்காதீர்கள்"என்றார் நீதிபதி.

29-1-2015 அன்று விசாரணையின் போது, நீதிபதி (சசிகலாவின் வழக்கறிஞரைப் பார்த்து) வழக்கில் ஆஜராகி

வாதம் செய்வதற்குமுன் வாதத்திற்குத் தேவையான முழுத் தகவல்களையும் தயார் செய்து கொள்ளுங்கள். நீங்கள் சொல்லும் குற்றச்சாட்டில் உண்மையில்லை. வேண்டுமானால் அரசுத் தரப்பு சாட்சியான கனரா வங்கி அதிகாரி அருணாச்சலம் உட்பட அரசு சாட்சிகள் கொடுத்துள்ள வாக்குமூலத்தைப் படியுங்கள். அப்போதுதான் நீங்கள் சொல்வது தவறான தகவல் என்பது புரியும்.

வழக்கறிஞர் :- வருமானத்திற்கு அதிகமாகச் சொத்து சேர்த்த புகாரில், ஜெயலலிதா மற்றும் சசிகலாவுக்கு எந்தத் தொடர்பும் கிடையாது.

நீதிபதி :- இப்படி பொத்தாம் பொதுவாகத் தொடர்பு கிடையாது என்று சொல்ல வேண்டாம். இவ்வழக்கு 18 ஆண்டுகளாக நடந்துள்ளது. ஜெயாபப்ளிகேஷன்ஸ், சசி எண்டர்பிரைசஸ் நிறுவனங்களில் இருவரும் பங்குதாராராக உள்ளனர். இதைக் குற்றவாளிகள் தரப்பும் ஒப்புக்கொண்டுள்ளது.

வழக்கறிஞர் :- இவ்வழக்கு அரசியல் ரீதியாகப் பழி வாங்கும் நோக்கத்தில் தொடரப்பட்டுள்ளது.

நீதிபதி:- சொத்துக் குவிப்பு வழக்கை முழுமையாக விசாரணை நடத்திய தனி நீதிமன்ற நீதிபதி குற்றவாளிகள் தவறு செய்துள்ளதை உறுதிப்படுத்தும் வகையில் தனது தீர்ப்பில் 150 முடிச்சுகள் போட்டுள்ளார். மேல்முறையீட்டு மனு விசாரணையில் அந்த முடிச்சுகளை ஒவ்வொன்றாக அவிழ்த்து உரிய ஆதாரங்களுடன் பதில் சொல்ல வேண்டும். ஆனால் இதுவரை இந்த முடிச்சுகளை அவிழ்க்கும் முயற்சியை நீங்கள் யாரும் மேற்கொள்ளவில்லை. அதற்கான ஆதாரங்களையும் காட்டவில்லை.

பசந்த் (சசிகலா வழக்கறிஞர்) :- மீடியாக்கள் எழுதும் தகவல்களை வைத்துத் தீர்ப்பு சொல்லக்கூடாது. இந்த வழக்கில் கீழ் நீதிமன்றம் ஆதாரங்கள் இல்லாமல் தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

நீதிபதி :- சிறப்பு நீதிமன்ற நீதிபதி இந்த வழக்கின் 65 ஆயிரம் பக்கங்கள் கொண்ட ஆவணங்களைப் படித்து, 252 சாட்சிகளிடம் விசாரித்து, உங்கள் தரப்பு, அரசுத் தரப்பு, வழக்கறிஞர்களின் வாதங்களையும் கேட்டு, முழுவதுமாக அலசி ஆராய்ந்துதான் 1,000 பக்கங்கள் கொண்ட தீர்ப்பு

எழுதியிருக்க முடியும். ஆதாரங்கள் இல்லாமல் எப்படிக் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கியிருக்க முடியும்?

இந்த வழக்கில் இன்றுவரை 28 நாட்களாக வாதிட்டு வருகிறீர்கள். கீழமை நீதிமன்ற நீதிபதி தவறாகத் தீர்ப்பு வழங்கியுள்ளதாகக் குற்றம் சாட்டுகிறீர்கள். ஆனால் **அவர் வழங்கியுள்ள தீர்ப்பில் உங்கள் மீது வைத்துள்ள குற்றச்சாட்டுகள் தவறு என்று இந்த 28 நாட்களில் உங்களால் ஆதாரத்தோடு உறுதிப்படுத்த முடியவில்லை. இப்படி இருந்தால் நான் மட்டும் என்ன செய்ய முடியும்? கீழமை நீதிமன்ற நீதிபதி குன்ஹா வழங்கிய தீர்ப்பையே நானும் உறுதிசெய்ய வேண்டிய சூழ்நிலையாகத்தான் இருக்கிறது. ஜெயலலிதா ரூ.66 கோடிக்குச் சொத்துகள் சேர்க்கவில்லை என்று சொல்வதற்கு உங்களிடம் எந்த ஆதாரமும் இல்லையே?** இப்படியே வாய்மொழியாகப் பேசி நீதிமன்ற நேரத்தை வீணாக்காமல் வாதத்துக்குத் தேவையான ஆதாரங்களைக் கொடுங்கள். இல்லை என்றால் நானே ஆடிட்டரை நியமனம் செய்து கணக்குகளைச் சரி பார்க்கிறேன். இதில் அரசு வழக்கறிஞர் பவானிசிங்கின் வாதமும் அவசியமில்லை. நானே ஆடிட்டிங் செய்து தீர்ப்பு வழங்கி விடுவேன். இது தவிர, எனக்கு வேறு வழி தெரியவில்லை.

சிறப்பு நீதிமன்ற நீதிபதி உங்கள் தரப்பு நியாயத்தை எடுத்துக் கொள்ளவில்லை என்கிறீர்கள். ஆனால் கட்டிட கட்டுமானச் செலவுகளில் 13 கோடியில் 20 சதவிகிதத்தைக் குறைத்துத்தான் எடுத்துக் கொண்டிருக்கிறார் என்றெல்லாம் நீதிபதி குமாரசாமி கூறியிருக்கிறார்.

சுதந்திரம் (சுதாகரனின் வழக்கறிஞர்) :- சுதாகரனின் மொத்த சொத்து மதிப்பு 2,12,47,978.

நீதிபதி :- ஓகே வருமான வரித்துறையின் ஆவணத்தைக் கொடுங்கள். நீங்கள் கூறுவது, வருமான வரித்துறை கணக்கீட்டுக்கு ஒத்துப்போகிறதா?

சுதந்திரம் :- இல்லை.

நீதிபதி :- பிறகு ஏன் இந்தக் கணக்குகளை எல்லாம் என்னிடம் சொல்கிறீர்கள்? சிறப்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த

கணக்குகளைத்தான் இங்கேயும் தாக்கல் செய்ய வேண்டும். இந்தக் கணக்குகளை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன்.

உடன்பிறப்பே, குற்றவாளிகள் மீது கூறப்பட்டுள்ள புகார் உண்மையில்லை என்பதை உறுதி செய்வதற்கான எந்த ஆதாரத்தையும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் காட்டப்படவில்லை என்பதால் இதைப் பொய் வழக்கு என்று சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும்; ஒரு ரூபாய் மாத ஊதியமாகப் பெற்றதாகச் சொல்லிக்கொள்ளும் ஜெயலலிதாவுக்கு 66 கோடி ரூபாய் சொத்து உள்ளது என்பதை லஞ்ச ஒழிப்புக் கண்காணிப்புத் துறை உறுதிப்படுத்தியுள்ளது என்றும்; தனி நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பையே உறுதிசெய்ய வேண்டிய சூழ்நிலைதான் நிலவுகிறது என்றும்; 65க்கும் மேற்பட்ட வழக்குகளின் தீர்ப்புகளைத் தேவையில்லாமல் சுட்டிக்காட்டியும் கூட, 20 சதவிகித அளவுக்குக் கூட எதிர்த்தரப்பில் ஆதாரங்களோடு வாதாடவில்லை என்றும்; இறுதியில் உண்மைகளை ஆராய்ந்து அதற்கேற்றபடி தீர்ப்பு வழங்குவேன் என்றும்; குற்றச்சாட்டு பொய் என நிரூபிக்கும் எந்த ஆவணத்தையும், ஆதாரத்தையும் எதிர்த் தரப்பினர் தாக்கல் செய்யவில்லை என்றும்; டி.வி.ஏ.சி., பொய் வழக்கு போட்டுள்ளதாகச் சொல்வதற்குத் தேவையான ஆதாரத்தைக் கேட்டும் கொடுக்காமலேயே எதிர்த்தரப்பினர் வாதத்தை நிறைவு செய்துள்ளார்கள் என்றும்; அரசுத் தரப்பில் 259 சாட்சிகளின் வாக்குமூலமும், புகார்கள் உண்மை என்பதை நிரூபிக்கும் வகையில் 2,341 ஆவணங்கள் தாக்கல்செய்து உறுதிப்படுத்தியுள்ளனர் என்றும்; நீதிபதி குன்ஹா அவர்கள் கொடுத்த தீர்ப்பையே தானும் கொடுக்க வேண்டி வரும் என்றும்; கர்நாடக உயர் நீதிமன்ற சிறப்பு நீதிபதி சி.ஆர்.குமாரசாமி அவர்கள் அடுக்கடுக்காக எடுத்துச்சொன்ன காரணங்களையும் கருத்துக்களையும்தான் இங்கே தொகுத்து வழங்கியிருக்கிறேன். தீர்ப்பு இன்னும் சில நாட்களில் வெளிவரவுள்ளது. பொறுத்திருப்போம்; நீதி என்றும் வெல்லும்; நிச்சயமாக வெல்லும்! எந்தக் குறுக்கு வழிகளாலும் அதைத் தடுக்க முடியாது!

அன்புள்ள,

மு.க.

13-3-2015

3959. ஆர்ப்பாட்டப் போர்ப்பாட்டு!

உடன்பிறப்பே,

கடந்த 2013ஆம் ஆண்டு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு கொண்டுவந்த நிலம் கையகப் படுத்துதல் சட்டத்தில் பா.ஜ.க. அரசு, விவசாயிகளின் உரிமைகளைப் பறிக்கும் வகையிலும், பன்னாட்டுத் தொழிலதிபர்களுக்கு உதவிடும் நோக்கத்தோடும் சில திருத்தங்களைப் புகுத்தி, அவசரச் சட்டம் ஒன்றை 29-12-2014 அன்று பிரகடனப்படுத்தி, 10-3-2015 அன்று மக்களவையில் தங்களுக்குள்ள பலத்தைக் கொண்டு நிறைவேற்றியிருக்கின்றது.

மத்திய அரசு பெரும்பான்மை மக்களின் எதிர்ப்பையும் மீறி நிலம் கையகப்படுத்தும் சட்டத் திருத்தங்களை மக்களவையில் நிறைவேற்றிவிட்டு, மாநிலங்களவையிலும் நிறைவேற்றிட முயற்சிப்பதைக் கண்டித்தும்; அரசு அதிகாரி ஒருவரின் தற்கொலைக்குக் காரணமான அமைச்சர் மீது குற்ற நடவடிக்கைகள் எடுத்து, அவரை உடனடியாகக் கைது செய்வதோடு, வழக்கினை சி.பி.ஐ. விசாரணைக்கு ஒப்படைத்திட வேண்டுமென்பதை வலியுறுத்தியும்; திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வரும் 20-3-2015 அன்று வெள்ளிக்கிழமை அன்று காலை 10 மணியளவில், மக்களின் கவனத்தை ஈர்த்திடும் வகையில், மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுமென்றும், மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஒருங்கிணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை வெற்றிகரமாக நடத்திட வேண்டுமென்றும் ஏற்கனவே நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். என்னைச் சந்தித்து, தேர்தல் நிதி வழங்க வந்த பல்வேறு மாவட்டக் கழகங்களின் செயலாளர்களும், 20ஆம் தேதிய ஆர்ப்பாட்டத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதைப் பற்றி என்னிடம் நேரில் விளக்கி வருகிறார்கள்.

உடன்பிறப்பே, மத்திய அரசின் நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தில் செய்யப்பட்டுள்ள திருத்தங்கள் பற்றிச் சமூக ஆர்வலர் மேதாபட்கர் அவர்கள் பேட்டி ஒன்றில் தெளிவாகவே தெரிவித்துள்ளார்.

இந்தியா ஒரு விவசாய நாடு. இந்திய மக்களில் 60 சதவிகிதம் பேர் விவசாயத்தையே தங்களின் வாழ்வாதார மையமாகக் கொண்டுள்ளார்கள். இந்த நிலையில், வேறுபாடுகளை ஆராயாமல் விவசாய நிலங்களைக் கையகப்படுத்துவதால், விவசாய நிலங்களின் பரப்பளவு குறைந்து உணவு உற்பத்தி மேலும் மோசமாகும். உணவுக்காக இந்தியா மற்ற நாடுகளை எதிர்பார்த்துக் கையேந்திட வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும்.

எந்தவொரு நாட்டிலும், அங்கே தனியார் தேவைக்காக, வலுக் கட்டாயமாக அரசாங்கம் நிலங்களைக் கையகப்படுத்திக் கொடுப்பதில்லை. மக்களுடைய சம்மதத்தின்பேரில் கையகப்படுத்தும்போது கூட, நிலத்தின் சொந்தக்காரர்களுக்கான இழப்பீடு, வேலை வாய்ப்பு, மறு வாழ்வு போன்றவற்றை முறையாகச் செய்து கொடுத்துவிட்டுத்தான் செயலிலே இறங்குகிறார்கள். இன்னும் சொல்ல வேண்டுமென்றால், பல நாடுகளில் இவ்வாறு நிலங்களைக் கையகப்படுத்தும்போது, வேலை இல்லாதவர்களுக்கு அரசே மாதச் சம்பளமும் கொடுக்கிறது. பா.ஜ.க. அரசு கொண்டுவந்துள்ள இந்தச் சட்டத்தினால் நிலத்தை இழக்கும் விவசாயிகளுக்கும், அவர்களின் குடும்பத்தினருக்கும் வாழ்க்கையே கேள்விக்குறியாகிவிடும்.

விவசாயிகளையும், பொதுமக்களையும் பெரிதும் பாதிக்கும் பா.ஜ.க. அரசின் இந்த முடிவினை எதிர்த்துப் பெரும்பாலான அரசியல் கட்சிகளும், பொது அமைப்புகளும் போராடுகின்றன. ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு 2013ஆம் ஆண்டு; மத்தியில் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தபோது, நிலத்தை விற்றவருக்கான மறுவாழ்வு, மீள் குடியமர்வு, அந்த நிலத்தை நம்பிப் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான இழப்பீடு என்று சில ஆக்கபூர்வமான நிலைப்பாடுகள் இருந்தன. மேலும் அப்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள், பலதரப்பட்ட மக்கள் என்று அனைத்துத் தரப்பினரிடமும் கருத்துக் கேட்டறிந்து, ஒருமித்த கருத்து அடிப்படையில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அப்போதுள்ள சட்டத்தின் மூலம் நிலம் கையகப்படுத்தும்போது, நகரப் பகுதியாக இருந்தால் 70 சதவிகிதம் பேரின் ஒப்புதலும், கிராமப் பகுதியாக இருந்தால் 80 சதவிகித மக்களின் ஒப்புதலும் பெறப்பட வேண்டும் என்பது நிபந்தனை. மேலும் அப்படிக் கையகப்படுத்தும்

நிலங்களை, தனியாருக்குக் கொடுப்பதாக இருந்தால், நிச்சயமாக மக்களின் ஒப்புதல் பெற்று மட்டுமே செய்ய வேண்டும் என்ற விதிமுறையும் இருந்தது.

ஆனால் பா.ஜ.க. ஆட்சியில் கொண்டு வரப்பட்டுள்ள இந்தத் திருத்த மசோதாவில், கடந்த கால ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தில் இருந்த சில முக்கியமான பிரிவுகளை நீக்கியதோடு, சமூகப் பாதிப்பு ஆய்வு, விசாரணை (Social Impact Assessment, Investigation), நிலம் கையகப்படுத்தும்போது அங்கு வரும் திட்டங்களால் ஏற்படவிருக்கும் ஆபத்துகள், மக்களின் கருத்துகள் போன்றவற்றைக் கேட்டறிந்து ஆய்வறிக்கை தாக்கல் செய்தல்; உணவுப் பாதுகாப்பிற்கான சிறப்பு ஏற்பாடு, நில உரிமையாளர்களிடம் இருந்து ஒப்புதல் பெறுதல் போன்ற பிரிவுகளிலிருந்து மத்திய பா.ஜ.க. அரசு, யாருடைய கருத்தையும் கேட்காமல் விலக்கு அளித்துள்ளது. இவ்வாறு விலக்கு அளித்திருப்பதன் மூலம், யாருடைய ஒப்புதலையும், சம்மதத்தையும் பெறாமலேயே, எவ்வளவு நிலங்களை வேண்டுமென்றாலும் கையகப்படுத்த முடியும். இது ஏகாதிபத்திய நடவடிக்கையாகவே கருதப்பட நேரிடும்.

ஐந்தாண்டு காலத்திற்குள், நிலம் என்ன தேவைக்காகக் கையகப்படுத்தப்பட்டதோ, அந்தத் தேவைக்கு அந்த நிலம் பயன்படுத்தப்படவில்லை என்றால், அந்த நிலம் யாரிடமிருந்து கையகப்படுத்தப்பட்டதோ, அவர்களிடமே திரும்பவும் கொடுத்துவிட வேண்டுமென்ற நிபந்தனை 2013ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டத்தில் இருந்தது. ஆனால் தற்போது, எத்தனை ஆண்டுகளானாலும் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்வரை, உரிமையாளரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட மாட்டாது என்று மத்திய பா.ஜ.க. அரசு திருத்தம் செய்துள்ளது. இதனால் கையகப்படுத்தப்படும் நிலம் எந்த நோக்கத்திற்காகக் கையகப்படுத்தப்படுகிறதோ அந்த நோக்கமே நிறைவேறாமல் போவதற்கும், நிலத்தை வேறு நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதற்கும் வாய்ப்புகள் உருவாகிவிடும் என்பதை மறந்து விடக்கூடாது.

யாருடைய எதிர்ப்பையும் பொருள்படுத்தாமல், தற்போது இந்தச் சட்டத்திலே மீண்டும் சில திருத்தங்களோடு பா.ஜ.க. அரசு, அ.தி.மு.க.வின் துணையோடு நிறைவேற்றுவதின் மூலம்

பெரும் பயன்பெறப் போகிறவர்கள், இந்திய நாட்டிலே உள்ள ஏழை விவசாயிகளா என்றால் நிச்சயமாக இல்லை; இந்தியாவின் பெரும் செல்வந்தர்கள்தான்!

2013ஆம் ஆண்டு, ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் கொண்டு வந்த நிலம் கையகப்படுத்தும் சட்டத்தில் கிராம சபையின் ஒப்புதல் பெற வேண்டும் என்று ஓர் அம்சம் இருந்தது. ஜனநாயக முறையையே அலட்சியப்படுத்திடும் வகையில், தற்போது அந்தப் பிரிவே நீக்கப்பட்டு விட்டது.

பா.ஜ.க. அரசின் நிலம் கையகப்படுத்தும் சட்டத்தை எதிர்த்து, ஒரு மாநிலத்தின் முதல் அமைச்சரே, பீகார் முதல் அமைச்சர் நிதீஷ் குமார் அவர்களே உண்ணா விரதப் போராட்டம் நடத்தியிருக்கிறார். அங்கே அவர் பேசும்போது, "நிலம் கையகப்படுத்தும் மசோதாவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றினாலும், பீகார் மாநிலத்தில் இந்தச் சட்டத்தை அமல்படுத்தமாட்டோம்" என்று கூறியிருக்கிறார். முன்னாள் முதலமைச்சரும், மத்திய அமைச்சராக இருந்தவருமான லாலுபிரசாத்யாதவ் அவர்கள் இந்தச் சட்டத் திருத்தங்களை எதிர்த்துப் பேரணி ஒன்றினை நடத்த விருக்கிறார். சமூக ஆர்வலர் அன்னாஹசாரே அவர்கள் ஏற்கனவே அவர் தொடங்கியிருக்கும் போராட்டத்தின் தொடர்ச்சியாக 1000 கிலோ மீட்டர் போராட்டப் பயணம் நடத்தப்போவதாக அறிவித்திருக்கிறார். தி.மு.க., காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ், சமாஜ்வாதி, ஐக்கிய ஜனதா தளம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்தியக் கம்யூனிஸ்ட், ராஷ்டிரிய ஜனதா தளம், மதச் சார்பற்ற ஜனதா தளம் உள்ளிட்ட கட்சிகளின் சார்பில் டெல்லியில் இந்த மசோதாவை எதிர்த்து நாடாளுமன்றத்திலிருந்து குடியரசுத் தலைவர் மாளிகைக்குப் பேரணியாகச் சென்று ஒருமித்த எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறார்கள்.

பா.ஜ.க.வைப் பொறுத்தவரையில் 2014ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் அந்தக் கட்சியின் சார்பில் வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கையிலேயே "Land acquisition is a contentious issue due to the opacity of the land acquisition process. BJP will adopt a 'National Land Use Policy', which will look at the scientific acquisition of non-cultivable land, and its development; protect the interest of farmers and keep in mind the food production goals and economic goals of the country. It's implementation would be

monitored by the National Land Use Authority, which will work with the State Land Use Authorities to regulate and facilitate land management. The power and functions of the National Land Use Authority would be similar to those of other regulatory bodies" (ஒளிவுமறைவான முறையில் நில எடுப்பு செய்வது விவாதத்திற்குரிய பிரச்சினையாகி இருக்கிறது. பா.ஜ.க. தேசிய அளவில், நில எடுப்புக் கொள்கை ஒன்றை வகுத்துப் பின்பற்றும். அது வேளாண்மைக்குப் பயன்படாத நிலத்தை அறிவியல் முறையை அனுசரித்துக் கையகப்படுத்துல், அதை வளர்ச்சிப் பணிகளுக்குப் பயன்படுத்துதல், விவசாயிகளின் நலன், உணவுப் பொருள் உற்பத்தி மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கான இலக்குகள் ஆகிய அம்சங்களைக் கருத்தில்கொண்டதாக இருக்கும். தேசிய நில எடுப்புக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படுவதை, தேசிய நிலப் பயன்பாட்டு ஆணையம், தீவிரமாகக் கண்காணிக்கும். அந்தத் தேசிய ஆணையம், மாநிலங்களின் நிலப் பயன்பாட்டு ஆணையங்களுடன் இணைந்து, கையகப்படுத்தப்படும் நிலப் பயன்பாட்டை ஒழுங்குபடுத்தும். தேசிய நிலப் பயன்பாட்டு ஆணையத்தின் அதிகாரங்களும் செயல்பாடுகளும், ஏனைய ஒழுங்குபடுத்தும் அமைப்புகளுக்கு ஒத்தவையாக இருக்கும்) என்று அறிவித்ததற்கு மாறாகவும், முற்றிலும் எதிராகவுமே, பா.ஜ.க.வுக்குச் சொல் வேறு, செயல் வேறு என்பதை நிரூபிக்கும் வகையில், இப்போது நாடாளுமன்றத்தில் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்து அ.தி.மு.க.வின் சந்தர்ப்பவாத ஆதரவோடு நிறைவேற்றியுள்ளதைக் கண்டிக்கும் வகையில்தான் 20ஆம் தேதியன்று ஆர்ப்பாட்டம்!

மத்திய அரசுதான் இவ்வாறான மக்கள் விரோத - விவசாயிகள் விரோத நடவடிக்கையில் ஈடுபடுகிறது என்றால் நம்முடைய தமிழக அரசைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். இவர்கள் அனைத்திற்கும் "மேல்" இடம் அல்லவா? அதனால் தமிழகத்தில் தொடர்ந்து நடைபெறும் மக்கள் விரோத, ஜனநாயக விரோத நடவடிக்கைகளும் மத்திய அரசைவிட மேலாகவே இருந்து வருகின்றன.

தமிழகத்தில் வேளாண் துறைக்குப் பொறுப்பேற்றிருந்த அமைச்சர் ஒருவர் கொடுத்த நெருக்கடியின் காரணமாகத் தமிழக வேளாண்மைப் பொறியியல் துறையின் மூத்தப் பொறியாளர்

முத்துக் குமாரசாமி மன உளைச்சலினால் தற்கொலை செய்து கொண்டு, அவருடைய குடும்பத்தையே நட்டாற்றில் விட்டுவிட்டு மறைந்திருக்கிறார். இந்தச் செய்தி ஊடகங்களில் வெளிவந்து, அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் அ.தி.மு.க. அரசுக்கு எதிராகப் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியவுடன் அவசர அவசரமாக அந்த அமைச்சரை, கட்சிப் பொறுப்பிலிருந்தும், அமைச்சரவையிலிருந்தும் விலக்கியிருக்கிறார்கள். முதலில் அந்த முன்னாள் அமைச்சரைக் கைதுசெய்து விசாரிப்பதற்குப் பதிலாக, அவருடைய உதவியாளர்கள் தற்போது விசாரிக்கப்பட்டு வருகிறார்கள். முன்னாள் அமைச்சரைக் காப்பாற்றுவதற்கான திரை மறைவுக் காரியம் தீவிரமாக நடைபெறுகிறதோ என்ற அய்யப்பாடுதான் பரவலாக ஏற்பட்டிருக்கிறது.

இந்த ஆட்சியில் அதிகாரிகள், அமைச்சர்கள் மற்றும் அவர்களின் உதவியாளர்கள் ஆகியோரின் நெருக்கடி காரணமாக அலுவலர்கள் தற்கொலை செய்துகொண்டு மாண்டது என்பது இதுதான் முதல் சம்பவம் அல்ல. ஈரோட்டில் வீட்டு வசதி வாரியத்தில் பணியாற்றிய பழனிசாமி என்ற அதிகாரி; நெல்லை மாவட்டம், அம்பாசமுத்திரத்தில் தாசில்தாராகப் பணியாற்றிய தியாகராஜன்; நெல்லை மாநகராட்சியில் பணியாற்றிய பொறியாளர் ராஜேந்திரன்;

13 ஆயிரம் மக்கள் நலப் பணியாளர்கள் “டிஸ்மிஸ்” செய்யப்பட்டு வீட்டுக்கு அனுப்பப்பட்ட காரணத்தால் விரக்தியாலும், வேதனையாலும் பதினைந்து மக்கள் நலப் பணியாளர்கள் தற்கொலை செய்துகொண்டு மாண்டிருக்கிறார்கள்.

பார்வையற்ற முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் 200 பேருக்கு உடனடியாக ஆசிரியர் பணியிடங்கள் வழங்க வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி 9 நாட்களாக சென்னையில் பல இடங்களில் சாலை மறியல், உண்ணாவிரதம் போன்ற போராட்டங்களில் ஈடுபட்டு வருகிறார்கள்.

காவேரியில் அணை கட்டுவதற்காக கர்நாடக மாநில அரசு நிதிநிலை அறிக்கையில் நிதியினை ஒதுக்கியுள்ளது. அந்த மாநில அரசின் முதலமைச்சர் இந்தப் பிரச்சினைக்காக அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துக் கருத்துகளைக் கேட்கிறார். அவர்கள் அனைவரையும் அழைத்துக்கொண்டு, டெல்லி சென்று

பிரதமரையும், துறையின் அமைச்சரையும் சந்திக்கிறார். ஆனால் அ.தி.மு.க. அரசோ மத்திய அரசுக்குக் கடிதம் எழுதிவிட்டாலே தங்கள் கடமை முடிந்துவிட்டதாகக் கருதுகிறது.

மத்திய பா.ஜ.க. அரசு தேர்தலின்போது கொடுத்த வாக்குறுதியை மறந்து, விவசாயிகளின் முதுகெலும்பை முறிப்பதைப் போன்றதொரு கறுப்பு மசோதாவைச் சட்டமாக்கிட முனைந்திருக்கிறது. தங்களின் சுயநலப் பாதுகாப்புக்காக, விவசாயிகளின் நலனைப் பலியிட்டு, மத்திய அரசின் முயற்சிக்கு வலியச் சென்று துணை செய்யும் காரியத்தில் அ.தி.மு.க. இறங்கியிருக்கிறது.

தமிழகத்தில், காணுமிடமெல்லாம் லஞ்சம் - ஊழல் - சட்டம் - ஒழுங்கு சரிவு - நிர்வாகச் சீர்கேடு, செய்ய வேண்டியவற்றைச் செய்யாமல், செய்யக் கூடாதவற்றையே செய்வதால் அனைத்து முனைகளிலும் மக்களின் அதிருப்தி - அவலம் - ஆத்திரம், படையெடுத்து வரும் பல்லாயிரம் பிரச்சினைகள், எதையும் தீர்த்திட இயலாத - செயலற்ற அரசு, கடன்கள் நாளும் வளர்ந்து அரசே திவாலாகும் நிலை எனக் கவலையும் கண்ணீரும்தான் நாட்டில் பெருகி வருகிறதே தவிர, துளியேனும் ஒளியில்லை.

மத்திய - மாநில அரசுகளின் இத்தகைய தவறான பாதையை நம் மக்களுக்குக் காட்டி உணர்த்திட வேண்டிய கடமை வீட்டுக்கு விளக்காகவும், நாட்டுக்குத் தொண்டனாகவும் இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உண்டு. அதனால்தான் பெருந்திரள் கண்டன ஆர்ப்பாட்டம் நாளை மறுநாள், 20ஆம் தேதியன்று மாநிலமெங்கும் நடைபெறுகிறது. "இப்படை தோற்கின், எப்படை வெல்லும்" என்றார் பேரறிஞர் அண்ணா. பாரதிரக் கழகத்தின் படை திரளட்டும்! மத்திய - மாநில அரசுகளுக்குக் கண்டனக் குரல் எல்லாத் திசைகளிலும் எதிரொலிக்கட்டும்!

அன்புள்ள,

மு.க.

18-3-2015

3960. "நீதியே, நீ இன்னும் இருக்கின்றாயா?"

உடன்பிறப்பே,

13-4-2015 தேதிய "டெக்கான் கிரானிகல்" நாளிதழில் ஒரு செய்தி!

"Karnataka Chief Justice to move to Orissa" என்ற தலைப்பில் வெளிவந்துள்ள அந்தச் செய்தியில், "In a surprise move the Chief Justice of Karnataka High Court Dhirendra Hirala Waghela has been shifted as Chief Justice of Orissa High Court. ....Highly placed sources told Deccan Chronicle that, soon after the Supreme Court collegium of Judges headed by the Chief Justice of India H.L. Dattu recommended the transfer, Justice Waghela is understood to have expressed certain reservations in accepting it on the ground that the Orissa High Court is a smaller High Court compared to Karnataka High Court". (ஆச்சரியமடையக் கூடிய வகையில், கர்நாடக உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி திரேந்திர ஹிராலா வகேலா அவர்கள் ஒரிசா உயர் நீதி மன்றத் தலைமை நீதிபதியாக மாற்றப்பட்டுள்ளார். . . . . "டெக்கான் கிரானிகல்" இதழுக்குச் சில உயர் மட்டத்திலிருந்து கிடைத்த தகவல்படி - உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி எச்.எல். தத்து அவர்களின் தலைமையிலான நீதிபதிகள் குழு, நீதிபதி வகேலா வின் மாறுதலுக்குப் பரிந்துரை செய்தபோது, நீதிபதி வகேலா - ஒரிசா உயர் நீதிமன்றம், கர்நாடக உயர் நீதிமன்றத்தைவிடச் சிறிய நீதிமன்றம் என்பதால், அதனை ஏற்றுக்கொள்வதில் தனக்குள்ள அதிருப்தியை வெளிப்படுத்தியிருக்கிறார்.)

"டெக்கான் கிரானிகல்" - தினகரன் - தி இந்து (தமிழ்) போன்ற ஒரு சில நாளிதழ்களில் மட்டுமே பெங்களூர் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியின் மாறுதல் பற்றிச் செய்திவந்துள்ளது. "தினகரன்" நாளிதழ் இவரது மாறுதல் பற்றிக் குறிப்பிடும்போது, "கர்நாடக உயர் நீதி மன்றத் தலைமை நீதிபதியாக வகேலா கடந்த 2013 மார்ச் 7ஆம் தேதி பொறுப்பேற்றார். ஜெயலலிதா

மீதான சொத்துக் குவிப்பு வழக்கு பெங்களூர் தனி நீதிமன்றத்தில் நடந்து கொண்டிருந்தபோது, அதை விசாரணை நடத்திய நீதிபதி குன்ஹாவுக்குப் பக்க பலமாக இருந்து வழக்கை முடிவுக்குக் கொண்டு வர உதவினார். கடந்த மார்ச் இரண்டாவது வாரத்தில் இவரை ஒரிசா மாநிலத் தலைமை நீதிபதியாகப் பணி இடமாற்றம் செய்து உத்தரவிடப்பட்டது. அவருக்குப் பதிலாக தலைமை நீதிபதியாக கே.எல்.மஞ்சுநாத் நியமனம் செய்யப்பட்டார். இடையில் ஒரு வாரத்திற்குப்பின், மீண்டும் தலைமை நீதிபதி பணியை வகேலா தொடர்ந்து வருகிறார். தற்போது மீண்டும் ஒரிசா மாநிலத் தலைமை நீதிபதியாகப் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். வகேலா மாற்றத்தின் பின்னால் பலமான அரசியல் தலையீடு இருக்கும் வாய்ப்பு உள்ளதாக வக்கீல்கள் இடையே சந்தேகம் எழுந்துள்ளது" என்றெல்லாம் எழுதப்பட்டுள்ளது.

கர்நாடக உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி தற்போது ஒரிசா உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியாக மாற்றப்பட்டிருந்த போதிலும், நமது "முரசொலி" நாளிதழில் 29-12-2014 அன்று ஒரு பெட்டிச் செய்தி வெளிவந்தது. அதில்,

"நீதி மன்ற வட்டாரங்களில் பேசப்படும்
இந்தச் செய்திகள் உண்மையா?

- ஜெயலலிதா சொத்துக் குவிப்பு வழக்கில் மேல் முறையீட்டு விசாரணை தொடர்பாக, கர்நாடக உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி, நேர்மையோடு நடந்துகொள்வதால், அவரிடம் கருத்து வேறுபாடு ஏற்பட்டு, விரைவில் மாற்றப்படவிருப்பது உண்மையா?
- கர்நாடக உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி வகேலாவை மாற்றிவிட்டு, அவருக்கு அடுத்த இடத்திலே உள்ள நீதிபதி மஞ்சுநாத் அவர்களைக் கூடுதல் பொறுப்பில் நியமிக்க விருப்பது உண்மையா?
- மத்திய அரசின் சார்பாக ஒருவர் இதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார் என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா?

நீதிமன்ற வட்டாரங்களில் பேசப்படுவதாக வந்த அந்தச் செய்தியை மெய்ப்பிக்கும் வகையில் அல்லவா தற்போது கர்நாடக உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி மாற்றப்பட்டிருக்கிறார்.

கர்நாடக உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்த நீதிபதி வகேலா அவர்கள் திடீரென்று, வேறொரு சிறிய உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியாக மாற்றப்பட்டதற்கும் நமக்கும் என்ன சம்பந்தம் என்பதைத் தெரிந்துகொள்வதற்கு முன்பு, வகேலா பற்றிய சில விவரங்களை உனக்கு நான் தெரிவிக்கிறேன்.

2-2-2015 அன்று கர்நாடக உயர் நீதிமன்றத்தில், பவானிசிங் இந்த வழக்கில் அரசு வழக்கறிஞராக நீடிக்கலாமா என்ற விசாரணை வந்தபோது, தலைமை நீதிபதி வகேலா அவர்களே, "சி.ஆர்.பி.சி. 24(1)ன்படி, கிரிமினல் வழக்கு ஒரு மாநிலத்தில் இருந்து இன்னொரு மாநிலத்துக்கு மாற்றம் செய்யும்போது எந்த மாநிலத்துக்கு மாற்றப்படுகிறதோ, அந்த மாநில அரசுதான் அரசு வழக்கறிஞரை நியமிக்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது" என்று தெரிவித்திருக்கிறார்.

மேலும் தலைமை நீதிபதி வகேலா அவர்கள், "இந்த மேல்முறையீட்டு மனுவில் நீங்கள் (பவானி சிங்) ஆஜராகியிருப்பது சட்டத்துக்குப் புறம்பானது, 24 (1)ஐப் படித்துப் பாருங்கள். இந்த வழக்கில் அரசு வழக்கறிஞரை நியமிக்கத் தமிழக அரசுக்கு அதிகாரம் இல்லை; கர்நாடக அரசு இந்த வழக்கில் அரசு வழக்கறிஞரை நியமிக்காதபோது, பவானிசிங் ஆஜராகியிருப்பது சட்டத்துக்குப் புறம்பானது" என்றெல்லாம் வகேலா உறுதிபடக் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

தலைமை நீதிபதி இவ்வாறு, பவானிசிங் அரசு வழக்கறிஞராக நீடிப்பதற்குச் சட்டப்படியான எதிர்க் கருத்துகளைத் தெரிவித்ததால், பவானி சிங்குக்காக ஆஜரான வழக்கறிஞர் செபாஸ்டியன் எழுந்து, இந்த வழக்கினைத் தலைமை நீதிபதி வகேலா விசாரிக்கக் கூடாது என்றும், வேறு அமர்வுக்கு மாற்ற வேண்டுமென்றும் கோரியதால், வழக்கினை வேறு அமர்வு விசாரிக்கட்டும் என்று தலைமை நீதிபதி வகேலா தானாக முன் வந்து கூறினார்.

இன்னும் விளக்கமாகச் சொல்ல வேண்டுமேயானால், வழக்கு விசாரணையின் தொடக்கத்திலேயே, தலைமை

நீதிபதி வகேலா அவர்களே, தான் இந்த வழக்கை விசாரிப்பதில் ஆட்சேபணை ஏதும் உண்டா என்று பவானிசிங்கின் வழக்கறிஞர் செபாஸ்டியனிடம் கேட்டு, அவர் எந்த ஆட்சேபணையும் இல்லை என்று கூறியதைத் தொடர்ந்துதான் வழக்கினை விசாரித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அப்போது ஆட்சேபணை இல்லை என்று தெரிவித்துவிட்டு, தலைமை நீதிபதி வகேலா அவர்கள் விசாரணையின்போது விதிமுறைகளையொட்டிச் சில கருத்து களைத் தெரிவித்த பிறகு, அவர் அந்த வழக்கினை விசாரிப்பதற்கு செபாஸ்டியன் ஆட்சேபணையைத் தெரிவித்தார். இந்தக் குறிப்புகள் எல்லாம் கர்நாடக மாநில உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி வகேலா யார் என்பதைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான்!

இவை மாத்திரமல்ல; செல்வி ஜெயலலிதா தரப்பினர் மீது பெங்களூரு தனி நீதிமன்றத்தில் நடைபெற்ற சொத்துக் குவிப்பு வழக்கு விசாரணையின்போது, பவானிசிங்குக்கு முன்பாக, அந்தப் பதவியில், அரசுத் தரப்பு வழக்கறிஞராகப் பணியாற்றிய திரு.பி.வி. ஆச்சார்யா, தனது வாழ்க்கைப் பயணத்தை "அனைத் தும் நினைவுகளிலிருந்து (All from Memory)" என்ற தலைப்பில், ஆங்கிலத்தில் நூல் ஒன்றை எழுதி இருக்கிறார்.

அந்த ஆங்கில நூலின், இருபத்தைந்தாவது அத்தியாயத்தின் தலைப்பே, "Case Against Selvi J.Jayalalitha - Chief Minister of Tamil Nadu" என்பதுதான்! அதில் 206ஆம் பக்கம் முதல் 220ஆம் பக்கம்வரை, ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கில் அரசு வழக்கறிஞராகத் தான் இருந்தபோது எப்படிப்பட்ட அனுபவம் தனக்கு ஏற்பட்டது, என்னென்ன தவறுகள், முறைகேடுகள் அந்த விசாரணையில் நடைபெற்றன என்பதையெல்லாம் எழுதியிருக்கிறார். இந்தப் புத்தகத்தை வெளியிட்டவர் யார் தெரியுமா? இந்த நூலைப் பெங்களூரில் 15-11-2014 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் கர்நாடக உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு.வகேலாதான் வெளியிட்டிருக்கிறார். நீதிபதி திரு.வேணுகோபால் அவர்களும், மத்திய அரசின் முன்னாள் சட்டத்துறை அமைச்சர் திரு.வீரப்பமொய்லி அவர்களும் நூல் வெளியீட்டு நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருக்கிறார்கள். இந்தப் பின்னணியையும் இந்தத் தருணத்தில் நினைவுபடுத்திக் கொள்வது பொருத்தமானது அல்லவா?

வகேலா அவர்கள் மாற்றப்பட்டிருக்கும் இந்த நேரத்தில், ஒருசில நாட்களுக்கு முன்பு ஜெயலலிதாவுக்கு உச்ச நீதிமன்றம் ஜாமீன் வழங்கியது குறித்து, மக்கள் உரிமைப் பாதுகாப்பு மைய மாநில ஒருங்கிணைப்பாளர் ராஜு செய்தியாளர்களிடம் கூறிய தாவது :-

"சொத்துக் குவிப்பு வழக்கில் குற்றம்சாட்டப்பட்டு நான்காண்டுகள் சிறைத் தண்டனை பெற்ற முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்குச் சட்டத்தின் மரபுகளுக்கு முரணாகச் செயல்பட்டு, தலைமை நீதிபதி தத்து ஜாமீன் வழங்கியிருக்கிறார். சாதாரண வழக்கு என்றாலுங்கூட, குற்றவாளிக்கு ஜாமீன் வழங்குவதற்கு முன் எதிர்த்தரப்பினரிடம் விளக்கம் கேட்கப்படும். ஆனால் இந்த வழக்கில் எதிர்த்தரப்பான கர்நாடக அரசையும், தமிழ்நாடு லஞ்ச ஒழிப்புத் துறையையும் விசாரிக்காமலேயே ஒரு தலைப்பட்சமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஊழல் குற்றவாளிகள் தொடர்பான மேல் முறையீட்டு வழக்குகளில் ஜாமீன் வழங்கும்போது அதற்கான காரணங்களைத் தெளிவாகக் கூற வேண்டுமென ஏற்கனவே உச்ச நீதிமன்றமே தீர்ப்பளித்திருக்கிறது. இதற்கு மாறாக, கர்நாடக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை ரத்து செய்வதற்கான காரணம் எதையுமே கூறாமல், நான்கே வரிகளில் தலைமை நீதிபதி தத்து, ஜாமீன் உத்தரவை வழங்கியுள்ளார். இவ்வளவு ஏன்? ஜெயலலிதா உட்பட நான்கு குற்றவாளிகளுக்கு ஜாமீன் மறுப்பதற்கான காரணங்களைக் கர்நாடக உயர் நீதிமன்றமே நாற்பது பக்க உத்தரவில் தெளிவாகக் கூறியுள்ளது. இவற்றிற்கெல்லாம் மேலாக ஜெயலலிதா உட்பட நான்கு பேரும் ஜாமீன் கேட்டு மட்டுமே மனு செய்த வழக்கில் (குற்றவாளிகள் கோரிக்கை எதுவும் வைக்காத நிலையிலேயே) மேல் முறையீட்டு மனுவையும் விரைந்து முடிக்கவேண்டுமென்று தலைமை நீதிபதி தத்து உத்தரவிட்டுள்ளார். கர்நாடக உயர் நீதிமன்றத்தில் நூற்றுக்கணக்கான வழக்குகள் நிலுவையில் இருக்கும்போது, ஜெயலலிதாவுக்குத் தலைமை நீதிபதி தத்து வழங்கியிருக்கும் இந்தச் "சூப்பர்" சிறப்புச் சலுகை முறைகேடானது. ஒரு ஊழல் குற்றவாளி தொடர்பான வழக்கிலேயே இப்படி யொரு முறைகேடான தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பது மக்களுக்கு விடப்பட்டிருக்கும் அபாய எச்சரிக்கையாகும்"

-என்றெல்லாம் கூறியதோடு, மக்கள் உரிமைப் பாதுகாப்பு மைய அமைப்பைச் சேர்ந்தவர்கள் ஆயிரம் வழக்கறிஞர்களின் கையெழுத்துக்களுடன் குடியரசுத் தலைவரிடம் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி தத்து அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஜெயலலிதாவின் சொத்துக் குவிப்பு வழக்கில் ஜாமீன் கோரிக்கை உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வருவதற்கு முன்பே சமூக ஆர்வலர் டிராபிக் ராமசாமி, பாலி நாரிமனின் மகன் உச்ச நீதிமன்ற நீதிபதியாக இருப்பதால், பாலி நாரிமன் ஜெயலலிதா சார்பில் உச்ச நீதிமன்றத்தில் ஆஜராவது பார் கவுன்சில் விதித்துள்ள நெறிகளுக்கு எதிரானது என்று புகார் அளித்துள்ளார். "இந்த வழக்கு தொடர்பாக உங்கள் மீது ஊழல் புகார் இருப்பதால், விசாரிப்பதிலிருந்து நீங்கள் விலகிக்கொள்ள வேண்டும்" என்று டிராபிக் ராமசாமி தலைமை நீதிபதி தத்துவுக்கே மனு அளித்துள்ளார் என்பதும் நினைவிலே கொள்ளத்தக்கது.

கர்நாடக உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி வகேலா அவர்கள் ஒரிசா உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியாக மாற்றப்பட்டுள்ளார். உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி எச்.எல்.தத்து அவர்கள் தலைமையிலான நீதிபதிகள் அடங்கிய கொலேஜியம் இந்த உத்தரவை 12ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை இரவு பிறப்பித்துள்ளது.

நமது மதிப்பு மிக்க நீதித்துறை நிலுவையில் உள்ள வழக்குகளைத் தீர்ப்பதில் விரைந்து நடவடிக்கை எடுக்கும் என்பது அனைவரும் எதிர்பார்க்கும் ஒன்று. ஆனால் "மாறுதல்கள்" போடுவதில் இவ்வளவு விரைந்து செயல்படுவது ஆச்சர்யத்தை ஏற்படுத்துகிறது. இந்த நாட்டின் மீது அக்கறை கொண்ட குடிமகன் என்ற முறையில் சட்டம் மற்றும் நீதியின் பாதுகாவலர்களிடமிருந்து சில நியாயமான கேள்விகளுக்குப் பதில்கோர விரும்புகிறேன்.

ஒரிசா உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி பதவி கடந்த பிப்ரவரி மாதம் 2015லிருந்து காலியாக இருக்கும்போது, திடீரென்று ஏன் ஞாயிற்றுக்கிழமை அன்று இந்த "டிரான்ஸ்பர்" போடப்பட்டது? தேசிய நீதித்துறை நியமனக் கமிஷனுக்கான அறிவிக்கை திங்கள்கிழமை அன்று வெளியிடப்படவுள்ள

நிலையில், அதற்கு முதல் நாள் இந்த மாறுதலைச் செய்ய வேண்டிய காரணம் என்ன?

நீதிபதிகள் நியமனத்தில் வெளிப்படைத் தன்மையைக் கொண்டுவர உருவாக்கப்பட்ட "தேசிய நீதிபதிகள் நியமன ஆணையத்தை" எதிர்த்துத் தொடரப்பட்ட வழக்கு ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வுக்கு முன்பு 15-4-2015 அன்று விசாரணைக்கு வருவதற்குள் ஏன் இந்த மாற்றல் உத்தரவு போடப்பட்டது?

கர்நாடக உயர் நீதிமன்றத்தில் உள்ள சொத்துக் குவிப்பு வழக்கில் வாதாடிய அரசு சிறப்பு வழக்கறிஞர் நியமனம் செல்லாது என்று தொடரப்பட்ட வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளியாவதற்கு முன்பும், அதே சொத்துக் குவிப்பு வழக்கில் கர்நாடக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளிவருவதற்கு முன்பும் இப்படியொரு மாறுதல் செய்யப்பட்டுள்ளதை நாம் இந்த நேரத்தில் மறந்துவிட முடியாது. எனவே இந்த மாறுதல் பற்றி யாருக்காவது சந்தேகம் எழுந்தால் அதிலே தவறு இருக்க முடியுமா?

உச்ச நீதிமன்றத்தில் 15ஆம் தேதியன்று அளிக்கப்படும் தீர்ப்பில் பவானிசிங் நியமனம் தவறானது தான் என்று ஒருவேளை சொல்லப்படுமேயானால், சொத்துக் குவிப்பு வழக்கின் மேல் முறையீட்டினை விசாரிப்பதற்குப் புதிய நீதிபதி ஒருவரைக் கர்நாடக உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதிதான் நியமிக்க வேண்டும். மேலும் அரசு புதிய வழக்கறிஞராகப் பவானிசிங் அவர்களுக்குப் பதிலாக வேறு ஒருவரை நியமனம் செய்ய வேண்டிய பொறுப்பும், கர்நாடக உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதிக்குத்தான் உண்டு. மேலும் தற்போது ஜெயலலிதாவின் மேல் முறையீட்டினை விசாரித்து வரும் நீதிபதி குமாரசாமி அவர்கள் வரும் ஆகஸ்ட் திங்களில் ஓய்வுபெறவிருப்பதால், அவருக்குப் பதிலாக இந்த முக்கியமான வழக்கினை விசாரிக்க வேண்டிய நீதிபதியையும் நியமிக்க வேண்டிய பொறுப்பும் கர்நாடக உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதிக்கே உண்டு. இந்தநிலையில்தான் அவர் மாற்றப்பட்டுள்ளார்.

இந்த உச்சக்கட்ட ஊழலுக்கெல்லாம் முழு முதற்காரணம் யார்? எதற்காக இந்த மாறுதல்? இதையெல்லாம் உன்னுடைய யூகத்திற்கே விட்டுவிடுகிறேன்.

நீதித் துறையின் சுதந்திரம், நேர்மை, நடுநிலை - ஆகியவற்றின் மீது மிக உயர்ந்த மதிப்பு வைத்திருக்கிறோம். நாடு முழுவதும் ஒளிவு மறைவில்லாத வெளிப்படையான நிர்வாகத்திற்கான கோரிக்கை வலுப்பெற்று வரும் இந்தக் காலகட்டத்தில், அரசின் முடிவுகள் அனைத்தும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு வரும் வேளையில், நீதித்துறையின் நிர்வாக முடிவுகள் மட்டும் வேறு ஒரு தளத்தில் ஆய்வுக்கு உட்படுத்தப்படாமல் ஏன் இருக்க வேண்டும் என்று சில மூத்த வழக்கறிஞர்களும், நடுநிலையாளர்களும், பத்திரிகையாளர்களும் நம்மிடம் கேட்கும்போது நாம் என்ன பதில் கூறுவது?

நமது ஜனநாயக நாட்டில் அனைத்துக்கும் மேலானது நீதித்துறைதான்; ஜனநாயகத்தின் அனைத்து அங்கங்களையும் கண்காணிப்பதே நீதித்துறைதான். அப்படிப்பட்ட உயிர்நாடியான அந்தத் துறையின் மீதே, இதுவரையில் இல்லாத அளவுக்கு, இப்படியெல்லாம் விமர்சனங்கள் வருவது நம் நாட்டுக்கும், நாம் போற்றிப் பாதுகாத்து வரும் ஜனநாயகத்திற்கும், வாய்மையே வெல்லும் - (சத்தியமேவ ஜயதே) என்று நாம் கொண்டாடிவரும் கோட்பாட்டுக்கும் உகந்ததுதானா?

அன்புள்ள,

மு.க.

15-4-2015

3961. கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவர்கள்!

உடன்பிறப்பே,

13-2-2014 அன்று தமிழகச் சட்டப் பேரவையில், அ.தி.மு.க. அரசின் சார்பாக நிதிநிலை அறிக்கையைப் படித்த இன்றைய முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம், அந்த அறிக்கையின் பக்கம் 31இல் "நமது மாநிலத்தில் தொழில் வளத்தையும் கட்டமைப்பையும் மேலும் ஊக்குவிக்க இந்த அரசு வரும் அக்டோபர் மாதத்தில் சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டைச் சென்னையில் நடத்தும் என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவிக்க விரும்புகிறேன். இதற்காக இந்த வரவு செலவுத் திட்டத்தில் 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது" என்று படித்தார்.

இது சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் படித்த அறிவிப்பு! ஆனால் அமைச்சர் பேரவையில் படித்தபடி அக்டோபர் மாதத்தில் முதலீட்டாளர் மாநாடு நடைபெற்றதா என்றால் அதுதான் இல்லை. நிதிநிலை அறிக்கையிலே கூறப்பட்ட அறிவிப்புக்கே இந்தக்கதி என்றால், மற்ற அறிவிப்புகளுக்கு ஏதாவது பொருள் இருக்க முடியுமா? மாநாடு நடத்துவதாக அறிவித்து, ஐந்து மாதங்கள் கழிந்த பிறகும் நடத்தாமல் அதனை ஒத்திவைப்பது என்பது எத்தகைய புத்திசாலித்தனம் என்பதை அ.தி.மு.க. ஆட்சியினர்தான் விளக்க வேண்டும்.

2012ஆம் ஆண்டிலேயே ஒரு முறை ஒரே நாளில் 12 கம்பெனிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடுவதாகவும், அதன் மூலம் 36,855 பேருக்கு வேலை கிடைக்குமென்றும், 20 ஆயிரத்து 925 கோடி ரூபாய் முதலீட்டில் தொழிற்சாலைகள் தொடங்குமென்றும் பூதாகாரமாக அறிவிப்பெல்லாம் செய்து, ஏடுகளில் எல்லாம் பெரிதாகச் செய்தி வெளியிட்டார்கள். அந்த 12 கம்பெனிகளின் முதலீடும் தமிழகத்திற்கு வந்து அவர்கள் எல்லாம் தொழில்களைத் தொடங்கி

விட்டார்களா, அந்தக் கம்பெனிகளில் 36 ஆயிரத்து 855 பேர் வேலைவாய்ப்புப் பெற்றிருக்கிறார்களா என்ற விவரங்களை யெல்லாம் அரசின் சார்பில் மக்களுக்குத் தெரிவித்தால் நல்லது என்று கேட்டுக்கொண்டோம். ஆனால் ஆட்சியினர் வாயே திறக்கவில்லை. நடந்திருந்தால் அல்லவா நாவசைத்துச் சொல்ல முடியும்!

மீண்டும் ஒரு முறை 5,081 கோடி ரூபாய்க்கு 16 நிறுவனங்களுடன் ஒப்பந்தம் கையெழுத்தானது என்றும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட தொழில் நிறுவனங்கள் இன்னமும் உற்பத்தி பணியைத் துவக்கவில்லை என்றும் செய்தி வந்தது. மேலும் கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில், 26,625 கோடி ரூபாய் அளவிற்கு மொத்த முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு, அதன் தொடர்ச்சியாக 10,660 கோடி ரூபாய் அளவிலான முதலீடுகள் மட்டுமே செய்யப்பட்டுள்ளன என்றும், இதனால் 10,022 பேருக்குக் கூடுதல் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார்கள்.

அதன் பிறகு, 2015ஆம் ஆண்டு மே மாதத்தில் முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெறும் என்று இன்றைய முதலமைச்சர் பன்னீர்செல்வம் அறிவித்தார். சட்டப்பேரவைக்கான பொதுத் தேர்தல் நடைபெறுவதற்கு அடுத்து ஓராண்டே உள்ள நிலையில், 2015 மே மாதத்தில் மாநாடு நடத்தி என்ன பயன் ஏற்படப் போகிறது என்று நான் அப்போதே கேட்டிருந்தேன். அதற்கும் பதிலளிக்கவில்லை.

மே மாதம் நடக்கவிருந்த இந்த மாநாட்டை யொட்டி 13-2-2015 அன்று சென்னையில் நடைபெற்ற முன்னோட்ட மாநாட்டில் 18 ஆயிரம் கோடி ரூபாய்க்கு ஏழு நிறுவனங்களோடு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என்று மிகப் பெரிய விளம்பரம் செய்தார்களே தவிர அங்கே அந்த நிகழ்ச்சியே அந்த முன்னோட்ட மாநாட்டில் நடைபெறவில்லை என்பது வெட்கக்கேடு அல்லவா?

தமிழக அரசின் தொழில் அமைச்சர் “குறைந்த விலைக்கு நிலம் தருகிறோம், வரிச் சலுகையும் தருகிறோம் என்று சொல்லி, ஆந்திர மாநிலத்திற்கு அழைக்கிறார்கள். அதுபோல ஆந்திர முதல்வர் இந்த வழியாகச் சென்னைக்கு வந்து செல்லும்போதெல்லாம்

நம் தொழிலதிபர்களை அழைத்துக் குறைந்த விலைக்கு நிலம் தருகிறோம் என்று பேசுவார்" என்று கூறியதிலிருந்தே தமிழகத்தின் நிலைமை என்ன என்று தெரிகிறதே; இவர்கள் ஆளுகின்ற ஒரு மாநிலத்திற்கு வேறொரு மாநில முதல் அமைச்சர் வந்து கூட்டம் போட்டுத் தொழில் முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுக்கிறார்கள் என்றால், அதற்காக இவர்கள் வெட்கப்பட வேண்டுமே தவிர, எங்கள் மீது பாய்ந்து விழுந்து என்ன பயன் என்று நான் கேட்டிருந்தேன்.

இந்தியாவில் எத்தனையோ மாநிலங்கள் இருக்க, கர்நாடக மாநில முதலமைச்சர் தமிழகத்திலே உள்ள ஒரு நகரில், தமிழகத்திலே உள்ள தொழில் அதிபர்களையெல்லாம் அழைத்துக் கர்நாடகாவில் வந்து தொழில் தொடங்குங்கள் என்று அழைக்கிறார் என்றால், அதற்கு என்ன அர்த்தம் என்பதைச் சாதாரண ஒரு தொழில் அதிபர்கூடப் புரிந்துகொள்ள முடியும் என்றும் கூறியிருந்தேன்.

கர்நாடக முதலமைச்சர் கோவையில் கூட்டம் போட்டுத் தமிழக தொழில் முதலீட்டாளர்களை அழைக்கிறார் என்று நாங்கள் கற்பனையாகச் சொல்லிவிடவில்லை. "தினமலர்" நாளேடு தி.மு.கழக இதழ் அல்ல! தி.மு.க.வைக் கடுமையாக விமர்சிக்கின்ற ஏடுதான். அந்த இதழில் ஜனவரி 22ஆம் தேதி ஒரு செய்தி வந்தது. அதன் தலைப்பே, "தள்ளி விடும் தமிழகம்; கவர்ந்திழுக்கும் கர்நாடகம் - கை நழுவிய 12 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு" என்பதாகும்.

முதலமைச்சர் ஜெயலலிதா கோவையில் பேசும்போது, அவருடைய மூன்றாண்டு கால ஆட்சியில் 33 இந்திய மற்றும் பன்னாட்டு நிறுவனங்களுடன் 31,706 கோடி ரூபாய் முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்து கொண்டிருப்பதாகத் தெரிவித்திருந்தார். இவ்வாறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்ட 33 நிறுவனங்களில், இதுவரை எத்தனை நிறுவனங்கள் தமிழகத்தில் தொழிலைத் தொடங்கியிருக்கின்றன என்ற விவரத்தைத் தெரிவிக்க முடியுமா? புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பல நிறுவனங்களுடன் போடலாம். உண்மையில் தொழில் தொடங்கினால்தானே பயனளிக்கும்!

இந்த நிலையில் இப்போது, இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த நிறுவனங்கள் அதிக அளவில் தமிழகத்தில் முதலீடு செய்வது குறித்து, அந்நாட்டு வர்த்தகத் துறை அமைச்சருடனும், அதைப்போலத் தமிழகத்தில் மேலும் முதலீடு செய்வது குறித்து அமெரிக்காவின் தெற்கு கரோலினா மாகாணத்தின் கவர்னருடனும் பன்னீர்செல்வம் பேச்சுவார்த்தை நடத்தியதாக ஒரு செய்தி வந்தது. அதுவும் என்னவாயிற்று என்று தெரியவில்லை.

சர்வதேச முதலீட்டாளர் மாநாடு மே மாதம் 23 மற்றும் 24 ஆம் தேதிகளில் நடைபெறும் என்று அறிவித்து, அதற்காக முன்னோட்ட மாநாடு என்ற ஒன்றை நடத்தி, அதிலே முதலீட்டாளர்களுடன் ஒப்பந்தம் என்று விளம்பரம் செய்து, அதுவும் நடக்கவில்லை. இதற்கிடையே மே மாதம் நடைபெறவிருக்கும் முதலீட்டாளர்கள் மாநாட்டிற்காக வெளி நாட்டினரைக் கவர்ந்திழுக்கச் செல்வதாக ஒரு பிரச்சாரம் செய்யப்பட்டு, அதற்காக அதிகாரிகள் எல்லாம் வெளிநாடுகளுக்குப் படையெடுத்த செய்தியும் வந்தது. தமிழக அரசின் தொழில் அமைச்சர் சென்னையில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் வெளிநாடுகளில் இருந்து ஏராளமான தொழில் அதிபர்கள் வர உள்ளதாகவும், அதன் மூலம் ஒரு இலட்சம் கோடி ரூபாய் தமிழகத்திலே முதலீடு செய்ய வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவித்தார். அவர் அவ்வாறு அறிவித்த ஒரு சில நாட்களிலேயே முதலீட்டாளர்கள் மாநாடு மேலும் தள்ளிவைக்கப்படுவதாக அரசினால் நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்க உள்ளூர் தொழில் அதிபர்களை அழைப்பதற்கான ஆலோசனைக் கூட்டம் சேலத்தில் நேற்று நடைபெற்றதாகவும், அந்தக் கூட்டத்தில் தொழில் துறை அமைச்சர், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர், தொழில் துறையின் சிறப்புச் செயலாளர் ஆகியோர் கலந்துகொண்டதாகவும், அதிலே அமைச்சர்கள் பேசியபோது மே மாதத்தில் மாநாடு நடைபெறும் என்றுதான் பேசியிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்குத் தெரியாமலேயே, மாநாடு ஒத்திவைக்கப்பட்டு செப்டம்பரிலே நடைபெறும் என்று சென்னையில் அறிவிப்பு வந்துள்ளது. அமைச்சரவை எந்த அளவுக்கு ஒருங்கிணைப்போடு செயல்படுகிறது என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு!

இந்த முதலீட்டாளர்கள் மாநாடு இவ்வாறு தள்ளிவைக்கக் கூடக் காரணம், ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு மேல் முறையீட்டு வழக்கில் ஜெயலலிதா விடுதலையாகி, அவர் முதலமைச்சர் பொறுப்பிலே இருக்கிறபோது இந்த மாநாடு நடைபெற வேண்டும் என்பதற்காகத்தான் மாநாடு மீண்டும் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது. இந்த மாநாடு மாத்திரமல்ல; தமிழக அரசின் வேறு சில திட்டங்களும் நிறைவேற்றப்பட்டு முடிந்த போதிலும், ஜெயலலிதா முதல் அமைச்சராக இல்லாத நேரத்தில், அந்தத் திட்டங்களைத் தொடங்கி வைத்துவிடக் கூடாது என்பதற்காகவே திறப்பு விழாக்கள் ஒத்திவைக்கப்பட்டு வருவதாகச் சொல்லப்படுகிறது. குறிப்பாக நூற்றுக்கணக்கான பேருந்துகள் அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் பயன்பாட்டுக்காக வாங்கப்பட்டவை தொடங்கி வைக்கப்படாத காரணத்தால், அந்தப் பேருந்துகள் வீணாகக் கிடப்பதாகவும், அதனால் போக்குவரத்துக் கழகங்களுக்குப் பெரும் இழப்பு என்று செய்திகள் வருகின்றன. அதைப் போலவே மெட்ரோ ரெயில் திட்டங்கள் போன்றவைகளின் திறப்பு விழாக்களும் நடைபெறவில்லை.

இவ்வாறு மாநாட்டுத் தேதியை ஒத்திவைக்கக் காரணம், மே மாதம் கடுமையான கோடை என்று சொல்லியிருக்கிறார்கள்.

மே மாதத்தில் கடுமையான கோடை என்பது தற்போதுதான் தெரிந்ததா? மே மாதத்தில் மாநாடு என்று முன்பு அறிவித்த போது, அந்த மாதத்தில் கடுமையான கோடை என்பது இந்த அரசினருக்குத் தெரியவில்லையா? செப்டம்பர் மாதத்திற்குத் தற்போது ஒத்திவைத்திருக்கிறார்களே, அந்த மாதத்தில் மழை கடுமையாக இருக்குமே; ஜெயலலிதா வழக்கில் அதற்குள் தீர்ப்பு வரவில்லை என்றால், செப்டம்பரில் மழை என்பதால் மீண்டும் இந்த முதலீட்டாளர்கள் மாநாடு ஒத்திவைக்கப்படுமா?

நமது மாநிலத்தில் முதலீடுகளைச் செய்வதற்காக வெளிநாடுகளைச் சேர்ந்த முதலீட்டாளர்கள் மிகுந்த ஆர்வத்தோடு இருப்பதாகவும், அந்த நாடுகளில் கருத்தரங்குகளை நடத்தியபோது இது தெரியவந்ததாகவும் அரசுத் தரப்பில் கூறியிருக்கிறார்கள். அந்த அளவுக்கு முதலீட்டாளர்கள் ஆர்வம் காட்டுகின்றபோது, தமிழக அரசு அந்த மாநாட்டினை நடத்தாமல் காலதாமதம் செய்வது முறை தானா? அ.தி.மு.க.

ஆட்சிப் பொறுப்பேற்று நான்காண்டுகள் முடிந்த பிறகு, சர்வதேச முதலீட்டாளர் மாநாட்டிற்கான தேதியினை மூன்றாவது முறையாக ஒத்திவைக்கிறது என்றால் தொழில் வளர்ச்சியிலே அ.தி.மு.க. அரசுக்கு உள்ள அக்கறை எத்தகையது என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறதல்லவா? ஆனால் தமிழகத்தின் தொழில் வளர்ச்சியிலே தங்களுக்குத்தான் பொறுப்பு என்பதைப் போல அ.தி.மு.க. ஆட்சியினர் பேசிவருகிறார்கள். "கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவர்கள், வானத்தைக் கீறி வைகுண்டத்திற்கு வழி காட்டுகிறோம்" என்று வாய்ச் சவடால் அடிப்பவர்களுக்கும், இந்த ஆட்சியினருக்கும் வேறுபாடு உண்டா என்ன?

அன்புள்ள,

மு.க.

23-4-2015

3962. மெட்ரோ, மோனோ ரெயில் திட்டங்கள் - ஒரு விளக்கம்!

உடன்பிறப்பே,

24-4-2015 தேதிய "தினத்தந்தி" நாளிதழில் "சென்னையில் மோனோ ரெயில் திட்டத்தை நிறைவேற்ற 2 நிறுவனங்கள் தேர்வு - குறைந்த தொகையைக் குறிப்பிடும் நிறுவனத்துக்கு மே மாதம் பணி ஆணை வழங்கப்படும்" என்ற தலைப்பில் ஒரு விளக்கப் படத்துடன் செய்தி வெளிவந்துள்ளது. வேறு எந்த நாளேட்டிலும் இந்த முக்கியமான செய்தி வந்ததாகத் தெரியவில்லை. ஏன், முக்கியமான செய்தி என்று கூறுகிறேன் என்றால்,

2011ஆம் ஆண்டில், ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், அ.தி.மு.க. அரசு 3-6-2011 அன்று படித்த ஆளுநர் உரையில் "சென்னை மாநகருக்குத் தற்போதுள்ள போக்குவரத்து முறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட "மோனோ" இரயில் திட்டத்தை அரசு செயல்படுத்தும். முதற்கட்டமாக 111 கிலோ மீட்டருக்கு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு, படிப்படியாக 300 கிலோ மீட்டர்வரை விரிவுபடுத்தப்படும். கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சி போன்ற மாநகராட்சிகளிலும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க "மோனோ ரெயில்" திட்டம் செயல்படுத்த உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்" என்று அறிவித்தது.

அதற்குப் பிறகு ஜெயலலிதா வழிகாட்டுதல்படி;

4-8-2011 அன்று படித்த நிதிநிலை அறிக்கையில் நிதியமைச்சர் ஓ. பன்னீர் செல்வம், இன்றைய முதலமைச்சர், "மோனோ ரெயில்" திட்டத்தை விரைவில் தொடங்குவதற்குத் தேவையான நிதி ஆதாரம் இந்த ஆண்டிலேயே கண்டறியப்படும் என்றார். கண்டறிந்தார்களா? என்ன ஆயிற்று அந்தத் திட்டம்?

இந்த "மோனோ" திட்டத்தை 2011ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் ஜெயலலிதா அறிவிக்க என்ன காரணம் தெரியுமா?

2011ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு முன்பாக தி.மு. கழக ஆட்சியில் ஆளுநர் உரை 7-1-2011 அன்று திரு. சுர்ஜித் சிங் பர்னாலா அவர்களால் படிக்கப்பட்டபோதே, அந்த உரையில் பத்தி 21இல், "சென்னையில் போக்குவரத்து நெரிசலைக் குறைத்துப் பாதுகாப்பான விரைவான பயணத்திற்கு வழிசெய்ய ரூபாய் 14,600 கோடி செலவில் 45 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஜப்பான் நாட்டு நிதி உதவியுடனும், மத்திய அரசு நிதி உதவியுடனும் சென்னை மெட்ரோ இரயில் திட்டம் அனுமதிக்கப்பட்டு மிக விரைவாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொடர்ந்து இந்த மெட்ரோ ரயில் இணைப்பு ரூபாய் 3001 கோடி மதிப்பீட்டில் திருவொற்றியூர்வரை நீட்டிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது" என்று குறிப்பிடப்பட்டிருந்தது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இவ்வாறு முனைப்போடு தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வந்த திட்டம்தான் "மெட்ரோ ரயில்" திட்டம். அந்தத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறலாமா? அதனால்தான் "மோனோ" திட்டத்தையே ஜெயலலிதா அறிவித்தார். அறிவித்தது மட்டுமல்ல; மெட்ரோ ரெயில் திட்டத்தைவிட மோனோ ரெயில் திட்டமே சிறந்தது என்று வாதிட்டார்.

மீண்டும் 30-1-2012 அன்று ஆளுநர் உரையில் "மோனோ ரெயில் திட்டத்தைச்" செயல்படுத்த ஒப்பந்தப்புள்ளி கோரும் பணிகள் விரைவாக நடைபெற்று வருவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்" என்று சொன்னார்கள். அதன் பிறகு 26-3-2012 அன்று படித்த நிதிநிலை அறிக்கையில் மோனோ ரெயில் 4 வழித் தடங்களில் இயங்கும் என்றும், எந்தெந்த வழித் தடங்கள் என்றும் விரிவாகப் படித்தார்கள். அதன் பிறகு 16-6-2012 தேதிய "தினமணி"யில் 34 இடங்களில் மோனோ ரயில் நிலையங்கள் என்றும், அமைச்சர் தலைமையில் 2 மணி நேரத்திற்கு மேல் ஆலோசனை நடைபெற்றது என்றும் செய்தி வந்தது. மொத்தத்தில் "மோனோ" ரெயில் திட்டமே, தி.மு. கழக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட "மெட்ரோ" ரெயில் திட்டத்தினை ஏற்கக்கூடாது என்ற ஜெயலலிதாவின் வழக்கமான காழ்ப்புணர்ச்சி காரணமாக அறிவிக்கப்பட்ட போட்டித்திட்டம் என்பது தமிழ்நாட்டிலுள்ள அனைவருக்கும் நன்றாகத் தெரியும்.

முதலமைச்சர் ஜெயலலிதா ஏற்கனவே மெட்ரோ ரெயில் திட்டம் கூடாது என்றும், மோனோ ரெயில் திட்டத்தைத்தான்

நடைமுறைப்படுத்தப் போவதாகவும் கூறிய போதிலும், 2013 ஆம் ஆண்டு ஆளுநர் உரையிலே வண்ணாரப்பேட்டையிலிருந்து திருவொற்றியூருக்கு மெட்ரோ ரெயில் திட்டத்தை நடைமுறைப் படுத்தப் போவதாகக் கூறப்பட்டது.

அதைக்கூட இது ஏதோ அ.தி.மு.க. ஆட்சியில்தான் திருவொற்றியூருக்கு மெட்ரோ ரெயில் திட்டத்தை அறிவித்திருப்பதைப் போல ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருந்தார்கள். ஆளுநர் உரையில் அப்போது வேறு எதுவும் தலைப்பாக அறிவிப்பதற்குக் கிடைக்காத காரணத்தால், ஏடுகள் எல்லாம் திருவொற்றியூருக்கு மெட்ரோ ரெயில் திட்டம் அறிவிக்கப்பட்டிருப்பதாகப் பெரிதாகச் செய்தி வெளியிட்டார்கள். ஆனால் உண்மையில் திருவொற்றியூருக்கு மெட்ரோ ரெயில் திட்டம் தி.மு.கழக ஆட்சியிலேயே அறிவிக்கப்பட்டதுதான்!

இந்த "மோனோ" திட்டம் பற்றி 3-6-2014 அன்று "டைம்ஸ் ஆப் இந்தியா" இதழ், "ஜெயலலிதா மிகவும் ஆர்வத்தோடு செயல்படுத்த விரும்பும் "மோனோ" ரெயில் திட்டம் நகர மறுக்கிறது. இதற்காக ஒப்பந்தப் புள்ளி அளிப்பதற்காக குறிக்கப்பட்டிருந்த காலம் மே மாதம் இறுதியாகும். அதற்குப் பின்னரும்கூட ஒப்பந்ததாரர்கள் அந்தத் திட்டத்தில் ஆர்வம் காட்டவில்லை" என்றெல்லாம் எழுதியிருந்தது.

"மோனோ" திட்டம் பற்றிய முடிவினைப் பின்னர் ஜெயலலிதா மாற்றிக்கொண்டு, சென்னை மெட்ரோ ரயில் திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருவதை மகிழ்வோடு வரவேற்பதாகவும், முதலமைச்சர் சோதனை ஓட்டத்தைத் தொடங்கி வைத்திருப்பதாகவும் கடந்த ஆண்டு ஆளுநர் உரையிலே தெரிவித்தார்கள். "மோனோ" திட்டத்தை ஏற்கனவே பாராட்டிய இந்த அரசினர், கடந்த ஆண்டு ஆளுநர் உரையில் அதைப் பற்றி ஒரு வரி கூடக் குறிப்பிடவில்லை. "மெட்ரோ" திட்டத்தைத் தொடக்கத்தில் வரவேற்காத ஜெயலலிதா கடந்த ஆண்டு பிரதமரைச் சந்தித்த நேரத்தில், மெட்ரோ ரெயிலின் 76 கிலோ மீட்டர் நீளம் கொண்ட இரண்டாம் பாகப் பணிகளை நிறைவேற்ற 36 ஆயிரத்து 100 கோடி ரூபாய் தேவைப்படும் நிலையில், மத்திய அரசின் முழு உதவி நாடப்படுகிறது என்று தெரிவித்தார். மெட்ரோ திட்டமே கூடாது என்று சொன்னவர்கள், அந்தத் திட்டத்தை

நிறைவேற்ற மறுத்தவர்கள், பிறகு டெல்லிக்குச் சென்று அதே மெட்ரோ திட்டத்திற்கு நிதி வேண்டுமென்று கேட்டார்கள்.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் முதல் வாரத்தில், அசோக் நகர் முதல் ஆலந்தூர்வரை மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம் நடைபெற்றது. அப்போதே மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் செய்தியாளர்களிடம் கூறும்போது, "கோயம்பேடு முதல் ஆலந்தூர் வரை திட்டமிட்டபடி அக்டோபர் மாதம் பயணிகள் ரெயில் சேவை தொடங்கவுள்ளது; இதற்காகக் கடந்த பிப்ரவரி மாதத்திலிருந்து தற்போதுவரை சோதனை ஓட்டம் வெற்றிகரமாக நடந்து வருகிறது. இந்தச் சோதனை ஓட்டத்தின் போது ரெயில் பாதைகள், மின்சார இணைப்புகள், சிக்னல்கள் சரிவர அமைக்கப்பட்டுள்ளதா என்று சோதனை செய்யப்பட்டது. இவை அனைத்தும் வெற்றிகரமாகவே இருந்தது" என்று தெரிவித்தார்கள். ஆனால் அக்டோபர் மாதம் முடிந்து ஆறு மாதங்கள் ஆகியும் மெட்ரோ ரெயில் ஓடுகிறதா என்றால் இல்லை!

சென்னையில் "மெட்ரோ ரெயில்" சோதனை ஓட்டத்தை முதல் அமைச்சர் ஜெயலலிதாவே தொடங்கிவைத்தார். அனைத்து நாளேடுகளிலும் அதைப் பற்றி முதல் பக்கத்திலேயே பெரிதாகச் செய்திகள் வந்தன. 14,600 கோடி ரூபாய்க்கான திட்டம் அது. அந்தத் திட்டத்தைத் தொடங்கிவைத்த முதலமைச்சர் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. அன்றாடம் தலைமைச் செயலகத்திலிருந்து "காணொலி காட்சிகள்" மூலமாகப் பல திட்டங்களைத் தொடங்கி வைப்பதைப் போல இல்லாமல், இந்தத் திட்டத்திற்கு நேரிலே வந்து தொடங்கிவைத்தார். அந்தத் திட்டத்தைப் பற்றி அதனைத் தொடங்கி வைக்கும் விழாவிலே பேசியிருந்தால், அந்தத் திட்டம் எந்த ஆட்சியில், எந்த ஆண்டு தொடங்கப்பட்டது என்பதைப் பற்றியெல்லாம் கூற வேண்டுமல்லவா? அதனால் அங்கே விழாப் பேருரை எதுவும் இல்லாமல் கொடி அசைத்து, மெட்ரோ ரெயிலின் சோதனையோட்டத்தைத் தொடங்கி வைத்துவிட்டார். அவர் அங்கே உரையாற்றாவிட்டாலும், அந்தத் திட்டத்தைப் பற்றிய குறிப்பு தமிழக அரசினால் தரப்பட்டது. அதிலே அந்தத் திட்டத்தைப் பற்றிய குறிப்புகள் விவரிக்கப்பட்ட போதிலும், கவனமாக அது எந்த ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டது என்பதை விட்டு விட்டார்கள். அந்தத் திட்டம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், நான் முதலமைச்சராக இருந்தபோது,

தொடங்கப்பட்ட திட்டம். எப்படி அதை வெளியிடுவார்கள்? இவ்வாறு சோதனை ஓட்டங்கள் வெற்றிகரமாக நடைபெற்ற போதிலும், அது தி.மு.கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டம் என்பதற்காகவும், ஜெயலலிதா முதலமைச்சராக இல்லை என்பதாலும், மெட்ரோ ரெயில் திட்டத்தைப் பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்து, போக்குவரத்து நெரிசலைக் குறைக்கக்கூட முன்வராமல் இருக்கிறார்கள்.

இதுபற்றிக்கூட நேற்றையதினம் "தினமலர்" நாளேடு முதல் பக்கத்திலே வெளியிட்ட செய்தியில், "அ.தி.மு.க. பொதுச் செயலர், ஜெயலலிதா, முதல்வர் பதவியிலிருந்து விலகிய பிறகு, தமிழகத்தில், கட்டடங்கள் திறப்பு விழா, திட்டம் துவக்க விழா, அடிக்கல் நாட்டு விழா எதுவும் நடைபெறவில்லை. சென்னையில், மெட்ரோ ரயில் துவக்கமும் தள்ளிப் போடப்படுகிறது. ஜெயலலிதா மீண்டும் முதல்வரான பின்னரே, இப்பணிகளை மேற்கொள்ள வேண்டுமென, ஆட்சியில் உள்ளவர்கள் நினைப்பதால், திருப்பணி முடிந்தும், 85 கோவில்கள், கும்பாபிஷேகத்திற்காக, காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

மேலும், சென்னையில் மெட்ரோ ரயில் திட்ட விரிவாக்கத்தை இடையிலே அ.தி.மு.க. அரசு நிறுத்தி வைத்தது. அப்போதுதான் டெல்லி மெட்ரோ ரயில் கார்ப்பரேஷன் முதன்மை ஆலோசகரான திரு. இ. ஸ்ரீதரன் 11-4-2012 அன்று சென்னையில் அளித்த பேட்டியில், "சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாவது கட்டத்தைக் கைவிட்டதன் மூலம் தமிழக அரசு மிக மோசமான தவறைச் செய்கிறது. மூன்று மாதங்களுக்கு முன்பு நான் இது குறித்து தமிழகஅரசின் தலைமைச் செயலாளருக்கு எழுதிய கடிதத்திற்கு இதுவரை அரசிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லை. மெட்ரோ ரயில் திட்ட விரிவாக்கத்தைக் கைவிடும் தமிழக அரசின் முடிவு வருத்தம் அளிக்கிறது. சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், மெட்ரோ ரயில் பணிகளைத் தொழில்நீதியில் சிறப்பாகச் செய்து வருகிறது. முதல் கட்டத்துக்கும், இரண்டாவது கட்டத்துக்கும் இடையில் இந்த அளவிற்கு இடைவெளி விழுவது நல்லதல்ல. மெட்ரோ ரயில் மூலம் செல்லும் பயணிகளில் நான்கில் ஒரு பங்குதான் மோனோ ரயிலில் பயணம் செய்ய இயலும். பெரும்பாலான நகரங்களில் மோனோ ரயில் திட்டம் தோல்வி அடைந்திருப்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. பெருவாரியாக

மக்கள் பயணம் செய்ய மெட்ரோ ரயில் திட்டம்தான் உகந்தது. மோனோ ரயில் சாதாரண ஒன்றுதான். அதில் அதிகம் பேர் பயணம் செய்யமுடியாது. மோனோ ரயில் திட்டம் வெற்றிகரமான திட்டம் இல்லை. தற்போது அந்த ரயில் பயன்படுத்தப்படும் ஜப்பானில்கூட, சிறு சிறு நகரங்களில்தான் பயன்படுத்தப்படுகிறது. சென்னை, மும்பை போன்ற பெருநகரங்களில் மெட்ரோ ரயில் திட்டம்தான் அவசியமாகும். அதேசமயம் மெட்ரோ ரயில் செலவும் குறைவாகும். மெட்ரோ ரயிலுடன் ஒப்பிடும்போது மோனோ ரயில் திட்டத்திற்கான செலவு 50 சதவிகிதம் அதிகமாகும்" என்று அனுபவத்தின் அடிப்படையில் திரு. இ. ஸ்ரீதரன் தெரிவித்த கருத்தை அ.தி.மு.க. அரசு காதில் போட்டுக்கொள்ளவில்லை.

சேது சமுத்திரத் திட்டத்தையும், மதுரவாயல்-துறைமுகம் பறக்கும் சாலைத் திட்டத்தையும் முடக்கி வைத்திருப்பதைப் போல, இந்த மெட்ரோ ரெயில் திட்டத்தின் விரிவாக்கத்தையும் முடக்கி வைத்தவர்கள்தான் அதன் பிறகு, மெட்ரோ ரெயில் திட்டத்தின் சோதனை ஓட்டத்தைத் தொடங்கிவைத்து, தாங்கள்தான் அந்தத் திட்டத்திற்கே காரணகர்த்தா என்பதைப் போலப் பெருமை தேடிக்கொள்ள முயன்றார்கள். ஆனால் தமிழ்நாட்டு மக்களுக்கு மெட்ரோ ரெயில் திட்டம் யாருடைய ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டது என்ற உண்மை நன்றாகவே தெரியும்.

இந்த நிலையில்தான் நேற்றையதினம் "தினத்தந்தி" நாளேட்டில் மோனோ ரெயில் திட்டத்தை நிறைவேற்ற இரண்டு நிறுவனங்கள் தேர்வு பெற்றிருப்பதாகவும் - குறைந்த தொகையைக் குறிப்பிடும் நிறுவனத்துக்கு மே மாதம் பணி ஆணை வழங்கப்படும் என்றும் தெரிவித்திருப்பதோடு, மெட்ரோ ரெயில் திட்டத்தைவிட, மோனோ ரெயில் திட்டம்தான் சிறந்தது என்றும் சென்னையில் மோனோ ரெயில் இன்னும் இரண்டாண்டுகளில் ஓடத் தொடங்கிவிடும் என்றும் இந்தச் செய்திகளை மோனோ ரெயில் வட்டாரங்கள் தெரிவிப்பதாகவும் எழுதியிருக்கிறார்கள். இந்த "மோனோ" ரெயில் திட்டத்தைப் பற்றி 3-4-2014 தேதிய "டைம்ஸ் ஆப் இந்தியா" நாளேட்டில், "The difficulty in finding bidders for Chennai's Mono Rail Project has not stopped the State Government from planning a similar project in Coimbatore. The Plan for a Mono Rail Project in Coimbatore appears far-fetched as the

State Transport Department has not been able to find takers for its project in Chennai" (சென்னை மோனோ ரெயில் திட்டத்தைச் செயலாக்கத்திற்குக் கொண்டு வருவதற்குத் தேவையான தகுதி படைத்தவர்கள் யாரும் இதுவரையில் கிடைத்தபாடில்லை. எனினும் தமிழக அரசு; கோவைக்கு என்று தனியே மோனோ ரெயில் திட்டம் ஒன்றைக் கொண்டு வருவதற்குச் செய்த அறிவிப்பைக் கைவிட்டதாகத் தெரியவில்லை. சென்னை மோனோ ரெயில் திட்டத்திற்குத் தகுதி படைத்தவர்கள் யாரும் முன்வராத காரணத்தால் திட்டம் செயலாக்கத்திற்கு வருவது தாமதமாகிக் கொண்டிருக்கிறது. எனவே கோவை மோனோ ரெயில் திட்டமும் செயலாக்கத்திற்கு வரும் என்று தோன்றவில்லை) என்று செய்தி வெளிவந்திருக்கிறது என்றால், இந்த ஆட்சியில் எந்தத் திட்டத்தையும் எடுத்து நடத்துவதற்கு யாரும் முன்வருவதில்லை; அதனால் எந்த அறிவிப்பும் செயலாக்கம் பெறுவதுமில்லை என்பதுதான் உண்மை.

2011ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தவுடன், கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட மெட்ரோ ரெயில் திட்டத்தை ஒதுக்கிவைத்து விட்டு மோனோ ரெயில் திட்டம் என்று ஜெயலலிதா அறிவித்தார். மெட்ரோ திட்டத்தைவிட மோனோ திட்டமே சிறந்தது என்றார். அதற்குள் மெட்ரோ திட்டம் ஓரளவுக்கு முடிந்த நிலையில் அதைக் கைவிடவும் முடியவில்லை. அதே நேரத்தில் அதன் காரணமாகத் தி.மு.க.வுக்குப் பெயர் வந்து விடவும் விரும்பவில்லை. இத்தகைய காழ்ப்புணர்ச்சியோடுதான் இன்றளவும் மெட்ரோ திட்டப் பணிகள் முடிவுற்ற பிறகும் அதனைத் தொடங்கிவைக்காமல் கிடப்பிலே போட எண்ணுகிறார்.

2011ஆம் ஆண்டு மே திங்களில் ஆட்சிக்கு வந்தபோது ஜெயலலிதா அறிவித்த திட்டம் - 3-6-2011 அன்று ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்ட திட்டம் - நான்காண்டுகளுக்குப் பிறகும் தொடங்கப்படவில்லை என்பதும், இன்னும் இரண்டாண்டுகளில் மோனோ ரெயில் ஓடத் தொடங்கிவிடும் என்பதும் "யார் காதில் பூ சுற்றப் பார்க்கிறார்கள்" என்ற கேள்வியைத்தானே கேட்கத் தோன்றும்!

அன்புள்ள,

மு.க.

26-4-2015

3963. அரசு அலுவலர்களும், அ.தி.மு.க. அரசும்,

உடன்பிறப்பே,

அரசு அலுவலர்கள் என்றாலும், ஆசிரியர்கள் என்றாலும், அ.தி.மு.க. ஆட்சியினருக்கு எப்படிப்பட்ட "அலர்ஜி" என்பது, இந்த முறை ஆட்சிக்கு வந்த பிறகு அல்ல; இதற்கு முன்பு ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த 1991 முதல் 1996ஆம் ஆண்டுகளிலும் சரி; 2001 முதல் 2006ஆம் ஆண்டுகளிலும் எந்த அளவுக்குக் கடுமையாக நடந்து கொண்டார்கள் என்பதை நான் புதிதாக நினைவுபடுத்த வேண்டியதில்லை.

அரசு அலுவலர்கள் ஜனநாயக ரீதியாக அமைதியாக அறப்போராட்டம் நடத்துவதையே ஒடுக்குவதற்காக அ.தி.மு.க. ஆட்சியில் புதிய சட்டமே கொண்டு வரப்பட்டது. அந்தச் சட்டத்தை மீறி வேலை நிறுத்தம் செய்பவர்கள், மற்றும் அதைத் தூண்டுபவர்கள் ஆகியோருக்கு மூன்றாண்டு சிறைத் தண்டனை அல்லது ரூபாய் ஐந்தாயிரம் அபராதம் அல்லது இரண்டும் விதிக்க ஏதோ "இட்லர்" காலம் போலச் சட்டத்திலே வழி செய்யப்பட்டிருந்தது. முன்பு முதல்வராக இருந்த ஜெயலலலிதா தமிழகச் சட்டப்பேரவையில் ஒருமுறை பேசும்போது, "போராட்டத்தில் ஈடுபடுகின்ற அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் 31-10-2002க்குள் பணிக்குத் திரும்பாவிட்டால், அவர்கள் மீது "எஸ்மா" சட்டம் உட்பட இன்னும் என்னென்ன சட்டங்கள் இருக்கின்றனவோ அத்தனை சட்டங்களும் அவர்கள் மீது பாயும். படிப்படியாக பணியிலிருந்து அவர்கள் நீக்கப்பட்டு, புதிய ஊழியர்கள் நியமிக்கப்படுவார்கள்" என்றே அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் எதிரிகள் - அவர்கள் மீது போர் தொடுக்க ஆயத்தம் செய்து கொண்டிருப்பதைப் போலக் கூறினார். இன்னும் சொல்ல வேண்டுமேயானால், 13-4-2003 முதல் அரசு அலுவலர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில்

ஈடுபட்ட அனைத்துச் சங்கங்களின் அங்கீகாரத்தையும் இரத்து செய்து அ.தி.மு.க. ஆட்சி உத்தரவிட்டது. போராட்டத்தை ஒடுக்கும் வகையில் அரசு ஊழியர் சங்கத் தலைவர்கள் இரவோடு இரவாக "எஸ்மா" சட்டத்தின்கீழ் வீடு புகுந்து போலீசாரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் 1 இலட்சத்து 70 ஆயிரம் பேர் ஒரே உத்தரவின் பேரில் கூண்டோடு "டிஸ்மிஸ்" செய்யப்பட்டார்கள். இந்திய அரசியல் வரலாற்றில் இத்தகைய கொடிய உத்தரவை எந்த முதல் அமைச்சரும் பிறப்பித்ததாகச் செய்தியில்லை என்று ஏடுகள் எல்லாம் அப்போது எழுதின. நடந்த நிகழ்வுகள் எல்லாம் தமிழகத்தில் சர்வாதிகார ஆட்சி கோர தாண்டவம் ஆடிக் கொண்டிருந்தது என்பதை நிரூபித்துக் காட்டின.

இப்படியெல்லாம் கடந்த காலத்தில் அரசு அலுவலர்கள் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இடையறாத இன்னல்களுக்கு ஆளானார்கள் என்றால், தற்போது தொடர்ந்து அரசு அலுவலர்கள் இந்த அ.தி.மு.க. ஆட்சியில் தற்கொலை செய்து கொண்டும், தற்கொலை செய்து கொள்ள முயற்சித்தும் வருவதென்பது தொடர்கதையாக நீண்டு கொண்டிருக்கின்றது.

அ.தி.மு.க. ஆட்சியினரே எவ்வளவோ முயற்சித்தும் மறைக்க முடியாமல் மாட்டிக் கொண்டு, ஒரு அமைச்சரை பலிக்கடாவாக்கி கைது செய்திருக்கிறார்களே, அந்த நிகழ்ச்சியில் முத்துக்குமாரசாமி என்ற அதிகாரி தன் குடும்பத்தினரைத் தவிக்க தவிக்க அனாதைகளாக விட்டு விட்டு ரெயிலுக்கு முன் பாய்ந்து தன் உயிரை மாய்த்துக் கொண்டாரே; எத்தகைய கொடுமை? அவர் எந்த அளவுக்கு ஆட்சியினரால் மன ரீதியாக அவதிக்கு ஆளாக்கப்பட்டிருந்தால் தற்கொலை செய்து கொள்கின்ற முடிவினை எடுத்திருப்பார்? அந்த வழக்கு விசாரணையைத் திசை திருப்பிட இந்த ஆட்சியினர் எப்படியெல்லாம் சட்டத்துக்குப் புறம்பாகச் செயல்படுகிறார்கள்? அவரிடம் விசாரணை, இவரிடம் விசாரணை என்றெல்லாம் ஏடுகளில் செய்திகள் வந்ததே தவிர, அவர்கள் கூறியது என்ன என்பதை விசாரணை நடத்துவோர் வெளியிடாமல் ஒளித்து வைப்பதன் மர்மம் என்ன? யாரைக் காப்பாற்றுவதற்காக காவல் துறையினர் அப்படியெல்லாம் அரும்பாடுபடு கிறார்கள்? அதற்காக ஓர் அமைச்சரைப் பதவி நீக்கம்

செய்தார்களே! அந்த அமைச்சர் அவருக்காகத்தான் நிதி வசூலில் ஈடுபட்டாரா? "அம்மா"வுக்கு எல்லாம் தெரியும் என்று கைதான அந்த அமைச்சர் பேட்டி கொடுத்திருந்தாரே, அதன் முழு விவரம் என்ன?

அமைச்சர் "அக்ரி" மட்டும்தான் இந்த அளவுக்குக் கட்டாய வசூலில் இந்த ஆட்சியிலே ஈடுபட்டாரா? அவரை விட; கூடுதலாகவே அதிகார ஆணவத்தோடு சேட்டை செய்யும் அமைச்சர்கள் மேலும் பலர், இந்த அமைச் சரவையிலே இல்லையா? அவர்களைப் பற்றிய உண்மை விவரங்கள் எல்லாம் தற்போது வெளி வராமல் இருக்கலாம். சாதாரணமான அரசு அலுவலர்கள் மட்டுமல்ல, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அதிகாரிகள் எல்லாம் இந்த ஆட்சியிலே எந்த அளவுக்குக் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்! ஒரு சில அதிகாரிகள் "புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்" என்பதைப் போலத் தங்களுக்கும் ஏதோ கிடைக்கிறது என்ற அளவில் ஒத்துழைப்பு நல்கலாம். ஆனால் நேர்மையாக நடக்க வேண்டுமென்று எண்ணுகின்ற அதிகாரிகள், இந்த ஆட்சியினரால் எந்த அளவுக்கு ஓட ஓட நிர்வாகத்தின் ஓரத்திற்கே விரட்டப்படுகிறார்கள்? "முத்துக்குமாரசாமியைப் போல் இவர்கள் தற்கொலை செய்து கொள்ளவில்லையே தவிர, ஒவ்வொரு நிமிடமும் செத்துப் பிழைத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்" என்று ஒரு வாரப் பத்திரிகையிலேயே கட்டுரை வந்ததே! -

"வேளாண் துறை அதிகாரி செந்தில் என்பவர், மறைந்த முத்துக்குமார சாமியை வலியுறுத்தி, மிரட்டிப் பணம் வசூலிக்கும்படி அமைச்சர் கூறினார், எனவே நான் அவ்வாறு அந்த அதிகாரியை மிரட்டினேன்" என்று வாக்குமூலம் கொடுத்ததாகக் கூறப்பட்டதே, அது உண்மை தானா? அந்த அதிகாரியைப் போலவே, முன்னாள் அமைச்சர் "அக்ரி"யும் உண்மை வாக்குமூலம் கொடுத்தால், யார் யார் மாட்டிக் கொள்வார்கள்?

இது போன்ற குற்ற வழக்குகளில் ஒருவர் கைது செய்யப்பட்டால், உடனடியாக அவரது வீடு, அலுவலகம் போன்றவை சோதனையிடப்படும். ஆனால் "அக்ரி" கிருஷ்ணமூர்த்தி கைது செய்யப்பட்ட பிறகு அப்படிப்பட்ட சோதனை ஏன் நடத்தப்படவில்லை? மேலும் இதைப்போன்ற வழக்குகளில் யாராவது கைது செய்யப்பட்டால், அவர்களை உடனடியாக போலீஸ் விசாரணைக்கு எடுக்க வேண்டுமென்று

கோரிக்கை வைக்கப்படும். அதுவும் இவரது விஷயத்தில் கேட்கப்பட வில்லை. மூன்றாவதாக அக்ரி கிருஷ்ண மூர்த்தியை நீதிபதியிடம் ஆஜர்படுத்திய போது, முதல் கட்ட விசாரணையின்போது, அவரிடம் பெற்ற வாக்குமூலத்தின் நகல் ஒன்றைத் தாக்கல் செய்வார்கள். அதுவும் இந்தப் பிரச்சினையிலே நடந்ததாகத் தெரியவில்லை. நான்காவதாக, இவரிடம் செய்தியாளர்கள் இதைப் பற்றிக் கேட்ட போது, "எல்லாம் அம்மாவுக்குத் தெரியும்" என்றார். அதுபற்றி சி.பி., சி.ஐ.டி, விசாரணை நடத்துவோர் காதிலே போட்டுக் கொண்டதாகவே தெரிய வில்லை. இதையெல்லாம் கூட்டிப் பார்த்தால், இதுவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை எதிர்க் கட்சிகளை ஏமாற்றுவதற்காகவே திட்டமிட்டு நடத்தப்பட்ட கண் துடைப்பு நாடகமாகத்தான் தெரிகிறது. ஆனால் "அக்ரி" கிருஷ்ண மூர்த்தியை வேண்டுமானால் தப்ப வைக்கலாம்; அவரும், இந்த ஆட்சியினரும்தான் வேளாண் துறை அதிகாரி முத்துக்குமாரசாமியின் தற்கொலைக்குக் காரணம் என்று தமிழகம் முழுவதும் பொதுமக்கள் பேசிக் கொள்வதை யாராலும் மூடி மறைக்க முடியாது என்பதுதான் உண்மை.

அரசு அலுவலர்களின் தற்கொலை ஒரேயொரு முத்துக்குமாரசாமியுடன் முடிந்து விட்டதா? சில நாட்களுக்கு முன்பு ராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் உள்ள சத்துணவுப் பிரிவு அலுவலகத்தில் சண்முகவேல் என்ற அரசு அலுவலர், மின் விசிறியில் தூக்கு மாட்டிக் கொண்டு தற்கொலை செய்து கொண்டாரே, அதுபற்றிய உண்மைகள் என்ன?

திருச்சியில் அரசு பொது மருத்துவமனையில் ஆர்.எம்.ஓ., நேரு என்பவர் மேலிடத்திலே இருப்பவர்களின் தொல்லை காரணமாக தற்கொலை செய்து கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டதும் இந்த அ.தி.மு.க. ஆட்சியில்தான்!

நெல்லை மாவட்டம், அம்பாசமுத்திரத்தில் தாசில்தாராகப் பணியாற்றிய தியாகராஜன் - நெல்லை மாநகராட்சியில் பணியாற்றிய பொறியாளர் ராஜேந்திரன் ஆகியோர் தற்கொலை செய்து கொண்டு மாண்டதும் இந்த அ.தி.மு.க. ஆட்சியிலேதான்.

சென்னை தங்கசாலை பகுதியில் ரேஷன் கடை அலுவலர் இளங்கோ என்பவர் தற்கொலை செய்து கொண்டு மாண்டாரே;

அதிகாரிகள் மிரட்டல் காரணமாகத்தான் தற்கொலை செய்து கொண்டதாகச் செய்திகள் வந்ததே! அது பற்றிய விவரம் என்ன ?

இதோ; என்னுடைய தொகுதியான திருவாரூர் அருகே, அதிகாரியின் "டார்ச்சர்" தாங்க முடியாமல் தீக்குளித்த அரசு அலுவலர் ஒருவர், மருத்துவமனையிலே உயிரிழந்திருக்கிறாரே; அவருடைய குடும்பத்திற்கு இந்த ஆட்சியினர் தரப் போகின்ற பதில் என்ன? திருவாரூர் அருகே யுள்ள அம்மையம்மன் கிராமத்தைச் சேர்ந்த 38 வயதுடைய முத்துக்கிருஷ்ணன், நன்னிலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் "ஓவர்சியராக" பணியாற்றி வந்திருக்கிறார். 3ஆம் தேதி மாலையில் தீக்குளித்து, மருத்துவமனையிலே சேர்க்கப்பட்ட முத்துக் கிருஷ்ணன், 4ஆம் தேதி அதிகாலையில் இறந்தார். தீக்குளித்த போதே இறந்து விடாமல் முத்துக்கிருஷ்ணன், தான் இறப்பதற்கு முன்பு போலீசாரிடமும், திருவாரூர் குற்றவியல் நடுவர் நீதிமன்ற நீதிபதி கவிதா அவர்களிடமும் மரண வாக்குமூலமே அளித்திருக்கிறார். அவரது வாக்குமூலத்தின் அடிப்படையில் காவல் துறையினரால் செயற்பொறியாளர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதுபோலவே, கோவையில் சக்திவேல் என்பவரும், அவருடைய சகோதரி வசந்தா என்பவரும் ரேஷன் கடைகளில் பணியாற்றி வருகிறார்கள். வசந்தாவுக்கும், கோவை மாநகராட்சி 62வது வார்டு அ.தி.மு.க. கவுன்சிலருக்கும் இடையே கடன் தொடர்பான பிரச்சினை எழுந்து, வசந்தா அதுபற்றிக் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருக்கிறார். அந்தப் புகாரைத் திரும்பப் பெறக் கோரி, அ.தி.மு.க. கவுன்சிலர் மிரட்டியதன் காரணமாக வசந்தாவின் சகோதரரான சக்திவேல் 16 தூக்க மாத்திரைகளைத் தின்று தற்கொலைக்கு முயன்றிருக்கிறார். அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அவர் தன் சாவுக்கு மூல காரணம் அ.தி.மு.க. கவுன்சிலர் தான் என்று தன் கைப்பட கடிதமே எழுதி வைத்திருக்கிறார்.

இதற்கெல்லாம் முன்பாக ஈரோட்டில் வீட்டு வசதி வாரியத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த பழனிச்சாமி என்பவர் இந்த ஆட்சியினரின் தொந்தரவு தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டு மாண்டிருக்கிறார்.

ஏன், இதற்கெல்லாம் முன்பு 13 ஆயிரம் மக்கள் நலப் பணியாளர்களை, அவர்கள் தி.மு. கழக ஆட்சியில் நியமனம் செய்யப்பட்டவர்கள் என்ற ஒரே காரணத்திற்காக, "டிஸ்மிஸ்" செய்த காரணத்தால், சுமார் பதினைந்து பேர் தற்கொலை செய்து மாண்டதும் இந்த அ.தி.மு.க. ஆட்சியிலேதான்!

எனவே அ.தி.மு.க. ஆட்சியில், அரசு அலுவலர்கள் தற்கொலை செய்து கொள்வது தொடர்ந்து நடைபெறும் சோக நிகழ்வாகத்தான் இருந்து வருகிறது. இன்னும் சொல்லப்போனால், "புதிய தலைமுறை" வார இதழில் கடந்த மாதம் "மனசாட்சி உள்ள அதிகாரிகள் மன அழுத்தத்தோடு போராடுகின்றனர். ஆட்சியாளர்களால் பழி வாங்கப்பட்டு பந்தாடப்படுகிறார்கள் அதிகாரிகள்" என்ற தலைப்பில் நீண்ட கட்டுரை ஒன்றையே வெளியிட்டிருந்தது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்ற போது, "கட்சிக்காரர்கள் அதிகாரிகளை நேரடியாக அணுகிக் காரியம் சாதிக்கும் முறை நமது ஆட்சியிலே இருக்கக் கூடாது" என்று குறிப்பிட்டதை, இன்றைய ஆட்சியாளர்கள் படித்திருந்தால், பல அரசு அதிகாரிகளை தற்கொலை செய்யத் தூண்டுமளவுக்குக் கடுமையாக நடந்து கொண்டிருக்க மாட்டார்கள். தாங்கள் செய்கின்ற ஊழல்களுக்கு, பலவீனமான சில அதிகாரிகளையும் பங்குதாரர்களாக ஆக்கிக் கொண்டு, கூட்டுக் கொள்ளை நடத்திட முடிவு செய்து விட்டால், ஆட்சி என்ற ஒன்று தேடித் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியதொரு பொருளாகி விடும். இவைகளைப் பற்றியெல்லாம் கவலைப்படுகின்ற, ஏன் சிறிதாவது எண்ணிப் பார்க்கின்ற அளவுக்கு இப்போது இருக்கின்ற ஆட்சியாளர்களுக்கு நேரம் இல்லை. அவர்களுடைய கவலை எல்லாம் என்ன என்று; உடன்பிறப்பே, உனக்குத் தெரியாதா என்ன?

அன்புள்ள,

மு.க.

06-05-2015

3964. இந்த ஆட்சிக்குத்தான் எத்தனை பெயர்கள்?

உடன்பிறப்பே,

அ.தி.மு.க. ஆட்சியில் "ஊழல்" "ஊழல்" எனக் கொடி கட்டி உயர உயரப் பறக்கிறது! எந்த ஊழலை எடுத்துச் சொல்வது, எந்த ஊழலை வேண்டாம் என விடுவது என்றே தெரியவில்லை. ஏடுகளைப் பிரித்தால், பக்கம் பக்கமாகத் தமிழக அரசின் ஊழல்கள்தான்! ஊழலிலும் முந்திக்கொண்டு முதல் இடத்திலே இருப்பது பொதுப்பணித் துறைதான். முதல் அமைச்சரின் பொறுப்பிலே இருப்பதல்லவா? அதனால் முதல் இடத்தைப் பிடித்துள்ளது. சென்னை மாநகரில், அரசு அலுவலகங்கள் குவிந்திருக்கும் இடம் "எழிலகம்" பகுதி. கடற்கரைச் சாலையில் உள்ள அந்த எழிலகத்தின் வாசலிலே ஒரு மிகப் பெரிய "டிஜிட்டல் பேனர்" வைக்கப்பட்டுள்ளது. அந்தப் பேனரை யாரோ பெயர் இல்லாமல் கொண்டுவந்து இரவோடு இரவாக வைத்துவிட்டுப் போய்விடவில்லை. "தமிழ்நாடு பொதுப்பணித் துறைப் பொறியியல் ஒப்பந்ததாரர்கள் சங்கம், சென்னை" என்றே குறிப்பிட்டு, அவர்கள் சார்பில் அந்தப் "பேனர்" வைக்கப்பட்டுள்ளது. அந்தப் பேனரின் தலைப்பு என்ன தெரியுமா? "தமிழகப் பொதுப்பணித் துறையில் 2014-2015இல் மாபெரும் ஊழல் செய்த முதல் பொறியாளர் யார்" என்பதுதான்!

தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையில் மிகப் பெரிய செலவினத்தைக் கொண்டிருப்பது பொதுப்பணித் துறை. அந்தத் துறையின் மூலமாகத்தான் அரசுக்கட்டிடங்கள், மருத்துவமனைகள், அணைகள்-கால்வாய்கள் சீரமைப்பு, ஏரி-குளங்கள் பராமரிப்பு என கோடிக்கணக்கான ரூபாய் செலவழிக்கப்படுகிறது. அந்தப் பணிகளை நிறைவேற்றுகின்ற ஒப்பந்ததாரர்கள் தமிழகம் முழுவதும் 15 ஆயிரம் பேர் இருக்கிறார்கள். சென்னை நகரிலே மட்டும் 600 ஒப்பந்ததாரர்கள் உள்ளார்கள். அந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து 35 சதவிகிதம்

முதல் 45 சதவிகிதம்வரை கமிஷனாக ஆளுங்கட்சி தரப்பினரால் உயர் மட்டத்திலிருந்து அடி மட்டம்வரை அவரவர் பங்குக்கு வாங்கப்படுகிறது என்று புகார் கூறப்பட்டும், எழுதப்பட்டும் வந்தது. ஆனால் அந்தச் செய்தியை உறுதிப்படுத்துகின்ற வகையில் எழிலகம் வாசலில், பொதுப்பணித் துறை பொறியியல் ஒப்பந்ததாரர்கள் சங்கத்தின் சார்பிலேயே, "மாபெரும் ஊழல் செய்த முதல் பொறியாளர் யார்?" என்று டிஜிட்டல் பேனர் வைக்கப்படுகிறது என்றால் இதைவிட வேறு எந்த அவமானமாவது அல்லது தலைகுனிவாவது இந்த ஆட்சிக்குத் தேவையா? ஊழல் செய்த முதல் பொறியாளர் யார் என்பதை விளம்பரப் பலகை மூலமாகவே தெரிவிப்பதாகச் சங்கத்தின் சார்பில் தைரியமாக முன்வந்து தெரிவிக்கிறார்கள் என்றால் அதற்கு என்ன பொருள்? இந்தத் துறைக்குப் பொறுப்பேற்றிருப்பவர், தமிழகத்தின் முதல் அமைச்சர்!

இதுமாத்திரமல்ல; பொதுப்பணித் துறை ஒப்பந்ததாரர் ஒருவரும், பொதுப்பணித் துறையில் பணியாற்றும் ஒரு அதிகாரியும் கொடுக்கல்-வாங்கல் பற்றித் தொலைபேசியில் பேசுகின்ற பேச்சும் "வாட்ஸ்-அப்" மூலமாகவும், "தினமலர்", "தினகரன்" போன்ற ஏடுகள் வாயிலாகவும் அப்படியே வெளிவந்து கலக்கியுள்ளது.

பொதுப்பணித் துறையிலே அதிகமாக லஞ்சம் வாங்குகின்ற பத்து அதிகாரிகளின் பெயர்ப் பட்டியலை வெளியிடுவோம் என்று பொதுப்பணித் துறைப் பொறியியல் ஒப்பந்ததாரர் சங்கத்தின் மாநிலத் தலைவர் குணமணி, பொருளாளர் குமார் ஆகியோர் பேட்டியே கொடுத்து, அந்தப் பேட்டியும் ஏடுகளில் வந்துள்ளது. அவர்கள் அளித்த பேட்டியில், "பொதுப்பணித் துறையில், ஒப்பந்தப் பணிகளை மேற்கொள்ள 35 சதவிகிதக் கமிஷனை, தலைமைப் பொறியாளர், கண்காணிப்புப் பொறியாளர், செயற் பொறியாளர், உதவிச் செயற்பொறியாளர், உதவிப் பொறியாளர், பணி ஆய்வாளர் உள்ளிட்டோருக்குப் பகிர்ந்து அளிக்க வேண்டும். இத்துடன் 5 சதவிகிதக் கமிஷனைத் துறையின் முக்கியப் புள்ளிக்குத் தர வேண்டும். இரண்டாண்டுகளாகத் துறையின் முக்கியப் புள்ளிக்கு மட்டுமின்றி, மருத்துவப் பணிக்கான கமிஷனை, அந்தத் துறையின் முக்கியப் புள்ளிக்குத் தர வேண்டும் என்ற விதி அமலுக்கு வந்துள்ளது. இதற்குத் தனியாக 5 சதவிகிதம் கமிஷன் கேட்கின் றனர். மொத்தமாக 45 சதவிகிதம் கமிஷனாகக்

கொடுப்பது மட்டுமின்றி வருமான வரிக்காக 2 சதவிகிதம், விற்பனை வரிக்காக 2 சதவிகிதம் செலுத்துகிறோம். மீதமுள்ள குறைந்த பணத்தைக் கொண்டு பணிகளை முறையாகச் செய்ய முடியாது என்று கூறியதால், புதுக்கோட்டையைச் சேர்ந்த நண்பர் ஒருவருக்கு மருத்துவத் துறையின் முக்கியப் புள்ளி ஒப்பந்தப் பணிகளை வழங்கி வருகிறார். எங்களுக்குப் பணிகள் வழங்காதது மட்டுமின்றி, 13 மாதங்களாகச் செய்த பணிக்கான பணத்தையும் தரவில்லை" என்றெல்லாம் தெரிவித்திருக்கிறார்கள். நடப்பது என்ன அரசாங்கமா? அரசாங்கம் என்ற பெயரில் நடைபெறும் பகல்கொள்ளையா? அரசு அலுவலகங்கள் என்ன வியாபாரக் கேந்திரங்களா அல்லது ஏல மையங்களா?

இதிலே 5 சதவிகிதம் லஞ்சம் பெறும் முக்கியப் புள்ளி யார்? ஒப்பந்தப் பணிகளை பெறுகின்ற புதுக்கோட்டை நண்பர் யார்? 45 சதவிகிதம் லஞ்சமாகப் பெறப்படுவது உண்மையா இல்லையா? ஒரு பணிக்கான மொத்தத் தொகையில் 45 சதவிகிதம் லஞ்சமாகவே தரப்பட்டு விட்டால், மீதித் தொகையில் செய்யப்படும் பணிகளின் தரம் எவ்வாறு இருக்கும்? ஒப்பந்தங்களைப் பெறுகின்றவர் அந்தப் பணிகளை எந்த அளவுக்கு மோசமாகச் செய்வார்? ஐஸ் கட்டி கை மாறி கை மாறிப் பல கைகள் மாறிச் செல்லும்போது கடைசியில் மிஞ்சப் போவது ஒரு துளிகூட இருக்காதல்லவா? இந்தக் கேள்விக்கெல்லாம் அ.தி.மு.க. அரசின் பதில் என்ன?

ஒப்பந்தக்காரர் சங்கத்தினர் பேட்டியிலே அதை மட்டுமா கூறியிருக்கிறார்கள்? மேலும், அந்தப் பேட்டியில், "லஞ்சப் பணத்தில் அதிகாரிகளும், அவர்களது குடும்பத்தினரும் பிரிட்டன், பிரான்ஸ், துருக்கி என்று வெளிநாடுகளுக்குச் சுற்றுலா செல்கின்றனர். கடந்த 2014-15இல் மருத்துவமனை உள்ளிட்ட கட்டடங்கள் பராமரிப்புச் செலவிற்காக 60 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இந்தப் பணம் முழுவதும் செலவிடப்பட்டுவிட்டதாக அதிகாரிகள் கூறுகின்றனர். ஆனால் முறையாக எங்கும் பணிகள் நடக்கவில்லை. ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் கட்டப்பட்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக் கட்டிட நிதியிலும் முறைகேடு நடந்துள்ளது. பொறுத்தது போதும் என்ற முடிவுக்கு வந்துவிட்டோம். அதிகம் லஞ்சம் வாங்கிய பத்து அதிகாரிகளின் பெயரை வெளியிட முடிவுசெய்துள்ளோம். இன்று ஊழல் மற்றும் லஞ்ச ஒழிப்புப் பிரிவில், இதுகுறித்துப்

புகார் செய்யவுள்ளோம். அவர்கள் நடவடிக்கை எடுக்காவிடில், பெயர்ப் பட்டியலை வெளியிடுவோம்" என்று பகிரங்கமாகத் தெரிவித்திருக்கிறார்கள் என்றால், அவர்கள் எந்த அளவுக்கு விரக்தியில் மனம் நொந்து போயிருப்பார்கள் என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறதல்லவா?

லஞ்சப் பணத்தில் ஒரு சில அதிகாரிகள் வெளிநாடுகளுக்குச் சுற்றுலா சென்றிருக்கிறார்கள் என்றால் அந்த அதிகாரிகள் யார்? பராமரிப்புச் செலவுக்காக அரசு சார்பில் ஒதுக்கப்பட்ட பணம் செலவிடப்பட்டதாக அதிகாரிகள் கூறிய போதிலும், அந்தப் பணிகள் முறையாகவோ, முழுமையாகவோ எங்கும் நடக்கவில்லை என்று ஒப்பந்ததாரர்களின் சங்கத்தினரே தெரிவிக்கிறார்கள் என்றால், மக்கள் தந்த வரிப்பணம் எப்படியெல்லாம் அ.தி.மு.க. ஆட்சியில் விரயமாகியுள்ளது என்பதைப் புரிந்துகொள்ள இதைவிட வேறு என்ன சாட்சி வேண்டும்? ஓமந்தூரார் மாளிகையில் தலைமைச் செயலகம், சட்டப்பேரவை வளாகம் உருவாக வேண்டும் என்பதற் காக நான் பொறுப்பிலே இருந்த போது ஒவ்வொரு நாளும் அங்கே சென்று பணிகளை நேரடியாகப் பார்வையிட்டு அதிகாரிகளுக்கு அறிவுரைகள் வழங்கி வந்தேனே, அந்தக் கட்டிடத்திலே முறைகேடு நடந்ததாகக்கூறி எங்கள் மீது அ.தி.மு.க. அரசு பொத்தாம் பொதுவில் பழி தூற்றி வழக்கு போட்டது; ஆனால் உண்மையில் அந்த வளாகத்திற்குள் அ.தி.மு.க. ஆட்சியில் கட்டப்பட்ட மருத்துவக் கல்லூரி, மருத்துவமனை கட்டட நிதியிலும் முறைகேடு நடந்துள்ளதாகப் பொதுப்பணித் துறை பொறியியல் ஒப்பந்ததாரர் சங்கத்தின் முக்கியப் பொறுப்பிலே உள்ளவர்களே தெரிவித்திருக்கிறார்களே, இதற்கு அ.தி.மு.க. அரசின் பதில் என்ன?

ஆனால் இவர்களைச் சமாதானப்படுத்தும் முயற்சியில் அரசு தரப்பிலே ஈடுபட்டு, இந்த ஒப்பந்ததாரர்களை அழைத்துக் கட்டிடங்கள் பிரிவிலே உள்ள முக்கிய அதிகாரி ஒருவர் ஒரு மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தி, பிரச்சினையைப் பெரிதுபடுத்த வேண்டாம் என்றெல்லாம் அமைதிப்படுத்தி மூடிமறைத்திட முயன்றிருக்கிறார்.

இந்த ஊழலுக்குச் சான்று பகர்வது போலப் பொதுப்பணித் துறையைச் சேர்ந்த ஒரு அதிகாரி ஒப்பந்ததாரருடன் ஆற்றிய தொலைபேசி உரையாடல் முழுவதும் அப்படியே

ஏடுகளில் வெளிவந்துள்ளது. அந்த உரையாடலில், அதிகாரி ஒப்பந்ததாரரிடம் ஏன் பேசியபடி பணத்தைக் கொடுக்கவில்லை என்றும், தாமதத்திற்கு என்ன காரணம் என்றும், தன் சொந்தப் பணம் 90 ஆயிரத்தைக் கொடுத்திருப்பதாகவும், தன் வயிறு எரிகிறது என்றும், தன் காசு கிடைக்காவிட்டால் என்ன செய்வது என்று தெரியாது என்றும், தன் வாழ்க்கையும் முத்துக்குமாரசாமி கதையாக ஆகிவிடும் என்றும், கார்த்திக், லெனின் போன்ற வர்கள் எல்லாம் முறையாகத் தரவில்லையா என்றும் நீண்ட நேரம் பேசியிருக்கிறார். அந்தப் பேச்சில், அந்த ஒப்பந்ததாரரை விளிக்கும்போது கிருஷ்ணமூர்த்தி என்று பெயர் சொல்லிப் பேசியிருக்கிறார். யார் அந்தக் கிருஷ்ணமூர்த்தி? அவருடன் பேசிய அரசு அதிகாரி யார்? எதற்காகப் பணம் கேட்கிறார்? யாருக்குக் கொடுக்க வேண்டுமென்கிறார்? எந்தப் பணிக்காகப் பணம் கேட்கிறார்? இதுபற்றிய உண்மைகள் என்ன? இதற்கெல்லாம் அ.தி.மு.க. அரசு தமிழ்நாட்டு மக்களுக்கு உடனடியாகப் பதில் சொல்ல வேண்டும்.

"தினமலர்" நாளேடு தி.மு.க. நாளேடு அல்ல! அந்த ஏட்டில் இன்று (8-5-2015) "தமிழக அரசுக்குப் புது பெயர்" என்ற தலைப்பில் வெளிவந்துள்ள செய்தியில் "பினாமி அரசு, செயல்படாத அரசு, பொம்மை அரசு, ஆலோசகர் அரசு என, பல பெயர்களைப் பெற்றுள்ள தமிழக அரசுக்குப் புதிதாக, தற்போது "45 சதவிகித அரசு" என்ற பெயர் கிடைத்துள்ளது. பொதுப்பணித் துறையில், எந்தப் பணி செய்வதாக இருந்தாலும், ஒப்பந்தத் தொகையில், 45 சதவிகிதத்தை, கமிஷனாகக் கொடுக்கவேண்டியுள்ளது என்று ஒப்பந்ததாரர்கள் கூறிய குற்றச்சாட்டு, தமிழகத்தையே உலுக்கியுள்ளது. கமிஷனாக 45 சதவிகிதம் கொடுத்துவிட்டால் வேலையின் தரம் எப்படியிருக்கும் என்ற கேள்வி எழுந்துள்ளது" என்று எழுதியதோடு, பொதுப்பணித்துறையில் நடைபெற்றுள்ள இந்த ஊழல் குறித்துத் தமிழகத்திலே உள்ள முக்கியமானவர்கள் தெரிவித்த கருத்துகளையும் வாங்கி வெளியிட்டுள்ளது.

பொதுப்பணித் துறை ஒப்பந்ததாரர் சங்க நிர்வாகிகள் "தினகரன்" செய்தியாளரிடம் நேற்று கூறும்போது, "பொதுப்பணித் துறையில் ஒப்பந்த வேலை தொடங்குவதற்கு முன்பே அதிகாரிகள், அமைச்சர் வரை கமிஷன் கொடுக்க வேண்டியுள்ளது. இல்லையென்றால் டெண்டர் எடுக்க விடுவதில்லை. அதிலும்,

சமீப காலமாக முக்கியப் பிரமுகரின் மகன் குறுக்கீடு அதிகம் உள்ளது. அவர் கை காட்டும் ஒப்பந்ததாரர்களுக்கே ஒப்பந்தப் புள்ளி வழங்கப்படுகிறது. கடந்த 4ஆம் தேதி 90 கோடி ரூபாய்ச் செலவில் கிருஷ்ணா கால்வாய்ச் சீரமைப்பு, கொசஸ்தலை ஆறு, ஆரணி ஆறு கோட்டத்தில் இரண்டு பணிகளுக்கும் கூவம் சீரமைப்புப் பணிக்கும் டெண்டர் விடப்பட்டது. இதில் முக்கியப் பிரமுகரின் மகன் பரிந்துரையின் பேரில் மதுரை மாணிக்கம், ஜெயக்குமார், தேனியைச் சேர்ந்த சுப்பையா, திருவள்ளூரைச் சேர்ந்த நிறுவனம் ஒன்று, ஈரோடு பகுதியைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றுக்கு ஒப்பந்தம் கொடுக்கப்பட்டுள்ளது. ஒருவர்கூடச் சென்னை மண்டல ஒப்பந்ததாரர்கள் இல்லை" என்றெல்லாம் கூறியிருக்கிறார்கள் என்றால், இந்த ஊழலுக்குக் காரணமான அந்த "முக்கியப் பிரமுகரின் மகன்" யார்? அவர் கை காட்டியவர்களுக்குப் பணிகள் தரப்பட்டுள்ளதா இல்லையா? அ.தி.மு.க. அரசு பதில் கூற வேண்டாமா?

அ.தி.மு.க. ஆட்சியில் ஒவ்வொரு துறையிலும் இது போன்ற ஊழல்தான் மண்டிக்கிடக்கிறது. ஆனால் இப்போதுதான் வெளிப்படையான சான்றுகளுடன் வெளிவரத் தொடங்கியுள்ளது. அமைச்சர்கள் எல்லாம் என்ன செய்கிறார்கள்? ஆட்சி இன்னும் ஓராண்டுதான்; அதற்குள் முடிந்தவரை சுரண்டியது இலாபம் என்ற அளவில்தானே பணியாற்றுகிறார்கள். அமைச்சர்கள் இப்போது ஆற்றுகின்ற பணி எல்லாம் ஒவ்வொரு கோயிலாகச் சென்று யாகம் என்றும், தேர் இழுப்பது என்றும், தீ மிதிப்பது என்றும் வேண்டுதலிலேதான் ஈடுபட்டுள்ளார்கள். சொத்துக் குவிப்பு வழக்கிலிருந்து ஜெயலலிதாவின் விடுதலைக்காக அவற்றையெல்லாம் செய்வதாக அவர்கள் கூறிக்கொண்டாலும், உண்மையிலே விசாரித்தால் ஒவ்வொருவரும் தங்களின் அமைச்சர் பதவி போய்விடக் கூடாது, தாங்கள் எதிலும் மாட்டிக்கொள்ளக் கூடாது என்பதற்காகத்தான் அந்தக் கோவில் திருப்பணிகளிலே ஈடுபடுகிறார்களாம். அம்மையாரின் விடுதலைக்காக அந்தப் பணிகளைச் செய்வதாகக் கூறிக்கொண்டு நடத்தப்படுகின்ற பூஜை, புனருத் தாரணங்களில் எத்தனை கலெக்டர்கள் கலந்துகொள்கிறார்கள்? அவர்கள் எல்லாம் யார்? ஐ.ஏ.எஸ். அதிகாரிகளா? அல்லது ஆளுங்கட்சியின் எடுபிடிகளா? அவர்கள் மீதெல்லாம் தலைமைச் செயலாளரோ, ஆளுனரோ இதுவரை ஏன் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை? இன்றைக்கு

வேண்டுமானால் இந்த அதிகாரிகள் தப்பித்துக் கொள்ளலாம், ஆனால் வருங்காலத்தில் இவர்கள் எல்லாம் விசாரணைக் கமிஷன் முன்னால் நின்று பதில்சொல்ல வேண்டிய நிலைமை நிச்சயம் உருவாகும்.

"எழிலகம்" வாசலில் "டிஜிட்டல் பேனர்" வைக்கப்பட்டிருக்கின்ற செய்தி கிடைத்ததும், உடனடியாகக் காவல் துறை அங்கே வந்து அந்தப் பேனரை அகற்றுகின்ற முயற்சியிலே ஈடுபட்டுள்ளது. அதை மட்டும் அகற்ற சங்கத்தினர் எதிர்ப்புத் தெரிவித்ததால், காவல் துறையினர் அந்தப் பகுதியிலே உள்ள அனைத்து "பேனர்"களையும் அகற்றுவதாகக் கூறி இந்தப் "பேனரை" அகற்ற முனைந்திருக்கிறார்கள். ஆனால் இப்படியெல்லாம் செய்து இந்த ஆட்சியினரின் ஊழல்களைத் திரை போட்டு மறைக்கக் காவல் துறையினராலும் முடியாது; காவல் துறையினருக்குத் தலைமை தாங்கி, அ.தி.மு.க. ஆட்சியைத் தாங்கிக் காப்பாற்றுகின்ற முயற்சியிலே ஈடுபட்டுள்ள காவல் துறையின் "ஆலோசக"ராலும் முடியாது. சிலரைப் பல நாள் ஏமாற்றலாம்; பலரைச் சில நாள் ஏமாற்றலாம்; ஆனால் எல்லோரையும் எல்லா நாட்களும் ஏமாற்ற முடியாது. அ.தி.மு.க. ஆட்சியின் ஊழல்கள் பற்றிய உண்மைகள் அனைத்தையும் மக்கள் புரிந்துகொள்ள ஆரம்பித்து விட்டார்கள். இனியும் அவர்களைச் "செய்வீர்களா? செய்வீர்களா?" என்று கேட்டுத் திசை திருப்ப முடியாது!

அன்புள்ள,

மு.க.

9-5-2015

3965. காயப்படுத்தப்படும் நீதி; கட்டாயம் எழுந்து நின்று ஜெயிக்கும்!

உடன்பிறப்பே,

ஜெயலலிதா மீது தொடரப்பட்ட சொத்துக் குவிப்பு வழக்கில், கர்நாடக சிறப்பு நீதிமன்றம் 27-9-2014 அன்று அவருக்கு நான்காண்டுகள் சிறைத் தண்டனையும், 100 கோடி ரூபாய் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தது. ஜெயலலிதா சிறையிலே அடைக்கப்பட்டார். முதலமைச்சர் பதவியை இழந்தார். சிறையிலிருந்து ஜாமீனில் வெளியே வர உச்ச நீதிமன்றம் வரை சென்றார். உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்களே ஜெயலலிதாவை ஜாமீனில் விடுதலை செய்தார். ஆனால் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியின் தீர்ப்பு பற்றி அப்போதே சில விமர்சனங்கள் வந்தன.

குறிப்பாக, "சொத்துக் குவிப்பு வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டு, 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்ற ஜெயலலிதாவுக்கு சட்டத்தின் மரபுகளுக்கு முரணாகச் செயல்பட்டு, தலைமை நீதிபதி தத்து, ஜாமீன் வழங்கியிருக்கிறார். சாதாரண வழக்கு என்றாலுங்கூட, குற்றவாளிக்கு ஜாமீன் வழங்குவதற்கு முன்பு எதிர்த் தரப்பினரிடம் விளக்கம் கேட்கப்படும். ஆனால் இந்த வழக்கில் எதிர்த் தரப்பான கர்நாடக அரசையும், தமிழ்நாடு லஞ்ச ஒழிப்புத் துறையையும் விசாரிக்காமலேயே ஒருதலைப் பட்சமாக தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. **ஊழல் குற்றவாளிகள் தொடர்பான மேல் முறையீட்டு வழக்குகளில் ஜாமீன் வழங்கும் போது அதற்கான காரணங்களைத் தெளிவாகக் கூற வேண்டுமென ஏற்கனவே உச்ச நீதிமன்றமே தீர்ப்பளித்திருக்கிறது.** இதற்கு மாறாக, கர்நாடக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை ரத்து செய்வதற்கான காரணம் எதையுமே கூறாமல், நான்கே வரிகளில் தலைமை நீதிபதி தத்து ஜாமீன் உத்தரவை வழங்கியுள்ளார். இவ்வளவு ஏன்? ஜெயலலிதா உட்பட நான்கு குற்றவாளிகளுக்கு ஜாமீன் மறுப்பதற்கான காரணங்களை கர்நாடக உயர்

நீதிமன்றமே நாற்பது பக்க உத்தரவில் தெளிவாகக் கூறியுள்ளது. இவற்றிற்கெல்லாம் மேலாக ஜெயலலிதா உட்பட நான்கு பேரும் ஜாமீன் கேட்டு மட்டுமே மனுச் செய்த வழக்கில் (குற்றவாளிகள் கோரிக்கை எதுவும் வைக்காத நிலையிலேயே) மேல் முறையீட்டு மனுவையும் விரைந்து முடிக்க வேண்டுமென்று தலைமை நீதிபதி தத்து உத்தரவிட்டுள்ளார். கர்நாடக உயர் நீதிமன்றத்தில் நூற்றுக்கணக்கான வழக்குகள் நிலுவையில் இருக்கும்போது, ஜெயலலிதாவுக்கு தலைமை நீதிபதி தத்து வழங்கியிருக்கும் இந்த "சூப்பர்" சிறப்புச் சலுகை முறைகேடானது. ஒரு ஊழல் குற்றவாளி தொடர்பான வழக்கிலேயே இப்படியொரு முறைகேடான தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பது மக்களுக்கு விடப்பட்டிருக்கும் அபாய எச்சரிக்கையாகும்" என்றெல்லாம் கூறியதோடு, குறிப்பாக, மக்கள் உரிமைப் பாதுகாப்பு மைய அமைப்பைச் சேர்ந்தவர்கள், ஆயிரம் வழக்கறிஞர்களின் கையெழுத்துக்களுடன் குடியரசுத் தலைவரிடம் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி தத்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரினார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஜெயலலிதாவின் சொத்துக் குவிப்பு வழக்கில் ஜாமீன் கோரிக்கை உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வருவதற்கு முன்பே சமூக ஆர்வலர் டிராபிக் ராமசாமி, பாலி நாரிமனின் மகன் உச்ச நீதிமன்ற நீதிபதியாக இருப்பதால், பாலி நாரிமன் ஜெயலலிதா சார்பில் உச்ச நீதிமன்றத்தில் ஆஜராவது பார் கவுன்சில் விதித்துள்ள நெறிகளுக்கு எதிரானது என்று புகார் அளித்துள்ளார். "இந்த வழக்கு தொடர்பாக உங்கள் மீது ஊழல் புகார் இருப்பதால், விசாரிப்பதிலிருந்து நீங்கள் விலகிக் கொள்ள வேண்டும்" என்று டிராபிக் ராமசாமி தலைமை நீதிபதி தத்துவுக்கே மனு அளித்துள்ளார் என்பதும் நினைவிலே கொள்ளத்தக்கது.

ஜாமீனில் வெளியே வந்த ஜெயலலிதா தன் வீட்டிற்குள்ளேயே இருந்து கொண்டு உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தார். அந்த வழக்கு விசாரணை மூன்று மாதம் நடந்து முடிந்த நிலையில் 11-5-2015 அன்று நீதிபதி குமாரசாமி, சொத்துக் குவிப்பு வழக்கிலிருந்து ஜெயலலிதா உட்பட நான்கு பேரையும் விடுதலை செய்து தீர்ப்பளித்திருக்கிறார்.

இந்த வழக்கில் அரசு வழக்கறிஞராக தற்போது நியமிக்கப்பட்டுள்ள திரு. ஆச்சார்யா அவர்கள் இந்தத் தீர்ப்பு

பற்றி கருத்துக் கூறும்போது, "The entire appeal proceedings were conducted without making Karnataka State a Party, though it was a necessary legal requirement. Counsel for the accused allowed to make oral arguments for nearly two months, but no prosecutor authorised by Karnataka was present during such arguments. Thereby the principles of natural justice were denied to the prosecution during the appeal proceedings" என்றெல்லாம் கூறியதோடு, "எனது 58 ஆண்டு கால வக்கீல் தொழிலில் இப்படியொரு தீர்ப்பைப் பார்த்தது இல்லை. இது ஒருதலைப்பட்சமான தீர்ப்பு. வழக்கில் குற்றவாளிகள் மீது என்னென்ன குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன என்பதை தீர்ப்பில் குறிப்பிடவில்லை. உச்ச நீதிமன்றம் அரசுத் தரப்பு வாதத்தைத் தாக்கல் செய்ய ஒரு நாள்தான் கொடுத்தது. அதுவும் நேரடியாக வாதாட அனுமதி கொடுக்காமல் எழுத்துப்பூர்வமான வாதத்தைத்தான் தாக்கல் செய்ய உத்தரவிட்டது" என்றும் வருத்தப்பட்டிருக்கிறார்.

நீதிபதி குமாரசாமி ஜெயலலிதா தரப்பினரை விடுதலை செய்த போதிலும், அந்த மேல் முறையீட்டு வழக்கினை அவர் விசாரித்த போது, இடையிடையே அவர் வெளியிட்ட கருத்துக்களுக்கும், இறுதியாக அவர் எழுதிய தீர்ப்புக்கும் இடையே ஏராளமான முரண்பாடுகள் இருப்பதை நாடு கண்டது. உதாரணமாக ஒருசில வற்றை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

சுதாகரன் திருமணச் செலவு பற்றிய விவாதம் நடைபெற்ற போது, குறுக்கிட்ட நீதிபதி குமாரசாமி அவர்கள், "இத்தனை கோடி ரூபாய் செலவு செய்து இவ்வளவு பிரமாண்டமாக திருமணம் செய்ய சுதாகரன் என்ன அ.தி.மு.க. தொண்டரா? அல்லது ஜெயலலிதாவின் மகனா? இதுவரை 28 நாட்கள் வாதம் செய்துள்ளீர்கள். தனி நீதிமன்ற நீதிபதி தவறாகத் தீர்ப்பு வழங்கியுள்ளதாகக் குற்றம் சாட்டுகிறீர்கள். அவர் வழங்கியுள்ள தீர்ப்பில் என்ன குறை என்பதை 20 நாளில் உங்களால் உறுதி செய்ய முடியவில்லை. இப்படி இருந்தால் நான் மட்டும் என்ன செய்ய முடியும்? **தனி நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை நானும் உறுதி செய்ய வேண்டிய சூழ்நிலைதான் தற்போது நிலவுகிறது.** ரூபாய் 66 கோடி வருமானத்திற்கு சொத்து உள்ளது என்பதை இல்லை என்று மறுக்கும் வகையில் ஆதாரமில்லையே? ஒன்று, வாதத்திற்குத் தேவையான ஆதாரம் கொடுங்கள்.

இல்லையெனில் நானே ஒரு ஆடிட்டரை நியமனம் செய்து கொண்டு கணக்குகளைச் சரி பார்க்கிறேன். அரசு வழக்கறிஞர் பவானிசிங்கின் வாதமும் அவசியமில்லை. நானே ஆடிட்டிங் செய்து தீர்ப்பு வழங்கி விடுகிறேன். இது தவிர எனக்கு வேறு வழி தெரியவில்லை" என்று நீதிபதி குமாரசாமி விசாரணையின் போதே கூறியிருக்கிறார். சுதாகரன் திருமணத்திற்காக கோடிக் கணக்கில் செலவு செய்யப்பட்டதாக நீதிமன்ற விசாரணையின் போது கூறிய நீதிபதி குமாரசாமி, தனது தீர்ப்பில் ஒரு சில இலட்சங்கள்தான் அந்தத் திருமணத்திற்காக ஜெயலலிதா செலவிட்டார் என்று எழுதியிருப்பது முரண்பாடு இல்லையா?

16-2-2015 அன்று ஜெயலலிதா தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், பி. குமார், "இது அரசியல் ரீதியாகப் பழி வாங்கும் நோக்கத்தில் தொடரப்பட்டுள்ள பொய் வழக்கு" என்றபோது, குறுக்கிட்ட நீதிபதி சி.ஆர். குமாரசாமி அவர்கள், "இது பொய் வழக்கு, பொய் வழக்கு என்று மூச்சுக்கு முன்னூறு முறை சொல்கிறீர்கள். ஆனால், **குற்றவாளிகள் மீது கூறியுள்ள புகார் உண்மையில்லை என்பதை உறுதி செய்வதற்கான எந்த ஆதாரத்தையும் முழுமையாகக் காட்டாமல், வாய் வழியாக பொய் வழக்கு என்று சொன்னால் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்?** அரசுத் தரப்பில் 259 சாட்சிகள் வாக்குமூலம் கொடுத்துள்ளனர். புகார் உண்மை என்பதை நிரூபிக்கும் வகையில் 2 ஆயிரத்து 341 ஆவணங்கள் தாக்கல் செய்து உறுதிப்படுத்தி யுள்ளனர். குற்றவாளிகள் தரப்பில் 99 சாட்சிகளும் 385 ஆவணங்கள் மட்டுமே தாக்கல் செய்துள்ளீர்கள். அதிலும் **அரசுத் தரப்புக் குற்றத்தை முறியடிப்பதற்கான ஆதாரங்கள் சொல்லிக் கொள்ளும் வகையில் இல்லை"** என்றார்.

ஜெ. வழக்கறிஞர் குமார், ஜெயலலிதா முதல்வராக இருக்கும்போது, ஒரு ரூபாய் மட்டுமே சம்பளமாக வாங்கினார் என்று கூறிய போது, நீதிபதி குமாரசாமி அவர்கள், "**முதல்வர் பதவியில் இருப்பவர் ரூ. 1 சம்பளம் வாங்கினாலும், பொது ஊழியராகத்தான் கருதப்படுவார். சட்டத்திற்கு முன் அனைவரும் சமம் எனும் போது, ஒரு ரூபாய் சம்பளம் வாங்கிய ஜெயலலிதாவுக்கு 66 கோடி ரூபாய் வருமானம் உள்ளதை லஞ்ச ஒழிப்பு கண்காணிப்புத் துறை உறுதிப்படுத்தியுள்ளது. ஆனால் இல்லை என்பதற்கு உங்கள் தரப்பில் எந்த ஆதாரமும்**

கொடுக்க வில்லையே” என்று நீதிபதி கூறி, அப்போதே அது ஏடுகளிலே வெளி வந்தது.

சசிகலாவின் வழக்கறிஞர் மணிசங்கர், ஜெயலலிதா குற்றம் செய்ய உடந்தையாக சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் இருந்தனர் என எந்த ஓர் அடிப்படை ஆதாரமும் இல்லாமல் தண்டனை வழங்கப்பட்டுள்ளது என்று கூறிய போது, நீதிபதி குமாரசாமி, “கூட்டுச் சதியில் ஈடுபடாதவர்களை எப்படி தனி நீதிமன்றம் தண்டித்து இருக்கும்? தமிழக ஊழல் தடுப்புப் போலீசார் ஆதாரங்கள் இல்லாமல் வழக்கைப் பதிவு செய்யத்தான் முடியுமா? இல்லை, இந்த வழக்கை 18 ஆண்டுகள் நடத்தி இருக்கத்தான் முடியுமா? இல்லை, இதையெல்லாம் ஆராயாமல் தனி நீதிமன்றம் தீர்ப்பை வழங்கியிருக்கத்தான் முடியுமா? தேவை இல்லாததைப் பேசி நீதிமன்றத்தின் நேரத்தை வீணாக்குவதை விட, தனி நீதிமன்றம் வழங்கிய - தீர்ப்பில் தவறுகள் இருந்தால் அவற்றை உங்கள் தரப்பு ஆதாரங்களோடு நிரூபியுங்கள். தேவையில்லாமல் வாதிட்டுக் கொண்டிருக்கிறீர்கள். இதுவரை 20 சதவிகிதம் கூட ஆதாரங்களோடு வாதிடவில்லை ” என்று கூறினார்.

மீண்டும் ஒரு முறை, நீதிபதி குமாரசாமி, “தமிழக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை உங்கள் மீதுள்ள குற்றச்சாட்டுகளுக்கு தகுந்த சாட்சியங்களோடும் ஆதாரங்களோடும் 82 - 92 சதவிகிதம் நிரூபித்திருக்கிறார்கள். ஆனால் நீங்கள் குறிப்பிட்ட ஆதாரங்களைக் காட்டவும் இல்லை. 30 - 35 சதவிகிதம் வரைதான் வாதிட்டிருக்கிறீர்கள். பள்ளிக் கூடத்தில் 35 மார்க் எடுத்தால் பாஸாக இருக்கலாம். ஆனால் நீதிமன்றத்தில் எதிர்த் தரப்பை விட அதிக மார்க் வாங்கினால்தான் பாஸ் பண்ண முடியும். அப்படிப் பார்த்தால் உங்களை விட அவர்கள் 65 மார்க் அதிகமாக வாங்கியிருக்கிறார்கள். அதனால் அவர்கள்தான் பாஸ்” என்று தெரிவித்தார். ஆனால் தனது தீர்ப்பில், 65 மதிப்பெண் பெற்றவர்களைத் தேர்ந்தெடுக்காமல், 35 மதிப்பெண் பெற்றவருக்கு “பாஸ்” போட என்ன காரணம்?

மேலும் நீதிபதி குமாரசாமி, “குற்றவாளிகள் தரப்பில் வாய்மொழியாக முன் வைக்கும் வாதங்களை வைத்து தீர்ப்பு வழங்க முடியாது. ஆதாரங்கள், ஆவணங்கள் மற்றும் சாட்சிகள் அடிப்படையில் தான் தீர்ப்பு வழங்க முடியும். ஜெயலலிதா முதல்வராக இருந்த போது அவரது வருமானத்தைப் பயன்படுத்தி

சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் சொத்துக் குவித் தார்கள் என்பதுதான் குற்றச்சாட்டு. அதனை எப்படி ஆதாரத்துடன் பொய் என்று நிரூபிக்கப் போகிறீர்கள்? சுதாகரனும், இளவரசியும் சட்ட விரோதமாக சொத்து குவிக்கவில்லை என்பதற்கு உங்களிடம் என்ன ஆதாரம், ஆவணங்கள் இருக்கின்றன? அந்தக் குற்றச்சாட்டு பொய் என நிரூபிக்கும் எந்த ஆதாரத்தையும் ஆவணத்தையும் நீங்கள் இதுவரை தாக்கல் செய்யவில்லை" என்று தெரிவித்தார்.

20ஆம் தேதியன்று விசாரணையின் போது நீதிபதி குமாரசாமி, வழக்கறிஞர் சுதந்திரத்தைப் பார்த்து, "உங்கள் தரப்பு வாதத்தை முடித்து விட்டீர்களா?"

என்ற போது "ஆம்" என்றார். அதைத் தொடர்ந்து நீதிபதி, "கடந்த 31 நாட்களாக விசாரணை நடந்தது. டி.வி.ஏ.சி. பொய் வழக்குப் போட்டுள்ளதாகக் கூறினீர்கள். ஆனால் அதற்கான ஆதாரம் கொடுங்கள் என்று நான் கேட்டதைக் கொடுக்காமலே, வாதத்தை நிறைவு செய்துள்ளீர்கள்" என்றார்.

மேலும், "சொத்துக்குவிப்பு வழக்கை முழுமையாக விசாரணை நடத்திய தனி நீதிமன்ற நீதிபதி, குற்றவாளிகள் தவறு செய்துள்ளதை உறுதிப்படுத்தும் வகையில் தனது தீர்ப்பில் 150 முடிச்சுகள் போட்டுள்ளார். மேல்முறையீட்டு மனு விசாரணையில் அந்த முடிச்சுகளை ஒவ்வொன்றாக அவிழ்த்து உரிய ஆதாரங்களுடன் பதில் சொல்ல வேண்டும். ஆனால் இதுவரை இந்த முடிச்சுகளை அவிழ்க்கும் முயற்சியை நீங்கள் யாரும் மேற்கொள்ளவில்லை. அதற்கான ஆதாரங்களையும் காட்டவில்லை" என்று சிறப்பு நீதிபதி போட்ட எந்த முடிச்சும் மேல் முறையீட்டு விசாரணையின்போது அவிழ்க்கப்படவே இல்லை என்பதை நீதிபதி குமாரசாமி தெளிவுபடுத்தி யிருந்தார்.

"சிறப்பு நீதிமன்ற நீதிபதி இந்த வழக்கின் 65 ஆயிரம் பக்கங்கள் கொண்ட ஆவணங்களைப் படித்து, 252 சாட்சிகளிடம் விசாரித்து, உங்கள் தரப்பு, அரசுத் தரப்பு, வழக்கறிஞர்களின் வாதங்களையும் கேட்டு, முழுவதுமாக அலசி ஆராய்ந்துதான் 1,000 பக்கங்கள் கொண்ட தீர்ப்பு எழுதியிருக்க முடியும். ஆதாரங்கள் இல்லாமல் எப்படிக் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கியிருக்க முடியும்? **அவர் வழங்கியுள்ள தீர்ப்பில், உங்கள் மீது வைத்துள்ள குற்றச்சாட்டுகள் தவறு என்று இந்த 28 நாட்களில் உங்களால்**

ஆதாரத்தோடு உறுதிப்படுத்த முடியவில்லை. இப்படி இருந்தால் நான் மட்டும் என்ன செய்ய முடியும்? கீழமை நீதிமன்ற நீதிபதி குன்ஹா வழங்கிய தீர்ப்பையே நானும் உறுதி செய்ய வேண்டிய சூழ்நிலையாகத்தான் இருக்கிறது. ஜெயலலிதா ரூ. 66 கோடிக்கு சொத்துகள் சேர்க்கவில்லை என்று சொல்வதற்கு உங்களிடம் எந்த ஆதாரமும் இல்லையே?" என்று உறுதிபடக் கருத்துத் தெரிவித்தவர்தான் நீதிபதி குமாரசாமி.

இப்படியெல்லாம் நீதிமன்றத்தில் மனதில் பட்ட கருத்துகளைப் பளிச்சென வெளியிட்ட நீதிபதி குமாரசாமிதான் தன்னுடைய தீர்ப்பில், ஜெயலலிதா தரப்பினரை விடுதலை செய்து உத்தரவிட்டார். தீர்ப்பு வெளிவந்ததும், தமிழகம் முழுவதுமுள்ள அ.தி.மு.க. தொண்டர்கள் கொண்டாடினார்கள். அவர்களுடைய கட்சி நாளேட்டில் நூற்றுக்கு மேற்பட்ட பக்கங்களில் ஜெயலலிதாவைப் பாராட்டி விளம்பரங்கள் வெளிவந்தன. இது பற்றியெல்லாம் நமக்கு எந்த விதமான காழ்ப்புணர்ச்சியும் கிடையாது. உண்மையில் சொல்லப்போனால், ஜெயலலிதாவை சிறைக்கு அனுப்ப வேண்டும் என்பதோ, அவர் தண்டனை அனுபவித்திட வேண்டும் என்பதோ நம்முடைய விருப்பமே அல்ல. ஆனால் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதும், சட்டத்தின் ஆட்சியும் நீதியின் தனிச் சிறப்பான மாண்பும் நிலை நாட்டப்பட வேண்டும் என்பதே அனைவருடைய எதிர்பார்ப்பும் ஆகும்.

அதைத்தான் உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்ற "டான்சி" வழக்கில் நீதிபதி அவர்களே தனது தீர்ப்பில் கூறும்போது, "பொதுத் துறைக்குச் சொந்தமான நிலங்கள் ஜெயலலிதா பங்குதாரராக உள்ள கம்பெனிகளுக்கு, அவர் முதலமைச்சராக பதவியிலே இருந்த காலத்தில் விற்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது. டான்சி நிறுவனத்தின் விதிமுறைகளின்படி அதை விற்பனை செய்வதற்கு முன்பு அரசிடமிருந்து ஒப்புதல் பெற்றாக வேண்டும். அது வரை விற்பனை முழுமை அடைந்ததாகாது. விற்பனை தொடர்புடைய ஆவணங்களில் ஜெயலலிதா தன்னைச் சம்பந்தப்படுத்திக் கொள்ளா விட்டாலும், அந்த அனுமதியினை அரசு இயந்திரம் உடனடியாக வழங்கியுள்ளது. வழக்கு சம்பந்தப்பட்ட சொத்துக்களின் மதிப்பு குறித்து எங்களின் முடிவு எதுவாக இருந்த போதிலும், அதிலே ஜெயலலிதாவிற்கு

லாபம் இருந்ததா இல்லையா என்பதை விட, முதல் அமைச்சரே வழக்கு சொத்துக்களை வாங்க எத்தனித்துவிட்ட நிலையில், அதிகார வர்க்கம் அளவுக்கு மீறி அதிலே ஆர்வம் காட்டி, இந்த விற்பனையை சுமுகமாக, முதலமைச்சர் ஜெயலலிதா விரும்பும் விலைக்கே முடித்திருக்கிறார்கள் என்பதை எங்களால் தெரிந்து கொள்ள முடிகிறது.

எந்த நிலையிலும், ஜெயலலிதாவின் இந்தச் செயல்கள் நடத்தை விதிகளின் உட்பொருளுக்கு விரோதமானதாகும். நியாயமாகப் பேசவேண்டுமென்றால், அரசின் சாதாரண அதிகாரிகளுக்காக ஒரு சட்டமும், முதல் அமைச்சருக்காக ஒரு சட்டமும் இருக்க முடியுமா? இதுபோன்ற நிலைகளில், நன்னடத்தை விதி என்பது அருங்காட்சியகத்திலே வைக்கப்பட வேண்டிய வெறும் ஆடம்பரப் பொருள் மட்டும் தானா? அது கடைப்பிடிக்கப்பட வேண்டிய ஒன்று அல்லவா? இவைகள் தான் எங்களுடைய மனச் சாட்சியைத் துன்புறுத்துகிறது. முதல் குற்றவாளியான ஜெயலலிதா, தான் இந்த வழக்கிலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக டான்சி நிலப் பத்திரத்திலே உள்ள, அவருடைய ஆடிட்டரும் அரசு அதிகாரிகளும் ஏற்றுக் கொண்ட அவருடைய கையெழுத்தையே, இல்லை என்று மறுக்கக்கூடிய அளவிற்குச் சென்றிருக்கிறார்" என்றெல்லாம் தெரிவித்தார்.

அதைப் போலவேதான் தற்போது இந்த வழக்கும் நடைபெற்று, டான்சி வழக்கில் அவரை விடுதலை செய்ததைப் போலவே இந்த வழக்கிலிருந்தும் நீதிபதி குமாரசாமி அவரை விடுவித்திருக்கிறார். ஆனால் நீதிபதி குமாரசாமி வழங்கிய தீர்ப்பு முறையானது தானா? நீதிமன்ற வரலாற்றில் இதுவரை வந்த தீர்ப்பு களில் நீதிபதி குமாரசாமி அளித்த தீர்ப்பில் உள்ள குளறுபடிகள், தவறுகள் போல வேறு எந்தத் தீர்ப்பிலாவது நடந்தது உண்டா? நீதித் துறையைச் சார்ந்த வழக்கறிஞர்கள், நீதிபதிகள் எல்லாம் நீதிபதி குமாரசாமி அளித்த தீர்ப்பை ஏற்றுக் கொள்வார்களா?

பள்ளிப் பிள்ளைகள் கூட்டல் கணக்கில் தவறு செய்தால், அதனை ஏற்றுக் கொள்ளலாம். முக்கியமானதொரு தீர்ப்பிலேயே கூட்டுத் தொகையிலே மாபெரும் தவறு செய்து, யாரும் எளிதில் கண்டுணரக் கூடிய தவறான அந்தக் கூட்டுத் தொகையின் அடிப்படையிலேயே தீர்ப்பும் வழங்கப்பட்டுள்ள நிலையில்,

அதனைச் சட்டப்படி முறையான சரியான தீர்ப்பென்று ஏற்றுக் கொள்ள ஏதும் முகாந்திரம் உண்டா ? எட்டும், ஏழும் சேர்ந்தால் எவ்வளவு கூட்டுத் தொகை என்று நீதிபதி தீர்ப்பிலே எழுதியிருக்கிறார் தெரியுமா? எட்டையும், ஏழையும் கூட்டினால் 35 என்று நீதிபதி தீர்ப்பிலே எழுதியிருக்கிறார் என்றால், இதைவிட வேறு என்ன தவறு இருக்க முடியும்? ஜெயலலிதா தரப்பினர் பல நிறுவனங்களைத் தொடங்க வங்கியில் பத்து முறை கடன் வாங்கியிருக்கிறார்கள். ஒவ்வொரு முறையும் யார் பெயரில் எவ்வளவு வாங்கினார்கள் என்று குறிப்பிட்ட நீதிபதி, இறுதியாக மொத்தமாக எவ்வளவு வாங்கினார்கள் என்று குறிப்பிடும்போது, 24 கோடி ரூபாய் கடனாகப் பெற்றிருக்கிறார்கள் என்று தீர்ப்பிலே சொல்கிறார். ஆனால் பத்து முறை பெற்ற கடனையும் யார் எப்படிக் கூட்டினாலும் பத்து கோடி ரூபாய்தான் வருகிறது. எனவே பத்து கோடி ரூபாய் என்பதை தவறுதலாக 24 கோடி ரூபாய் என்று குறிப்பிட்டு, இந்த 24 கோடி ரூபாயை வருமானமாக எடுத்துக் கொண்டு, ஜெயலலிதா 66 கோடி ரூபாய் சொத்துக் குவிப்பு செய்யவில்லை, வருவாய்க்கு மேல் 2 கோடி ரூபாய்தான் சொத்து சேர்த்தார், 2 கோடி ரூபாய் என்பது அவரது வருவாயில் 8 சதவிகிதம் தான், எனவே அவரை தண்டனையிலிருந்து விடுவிக்கிறேன் என்றுதான் நீதிபதி குமாரசாமி தீர்ப்பளித்திருக்கிறார்.

கூட்டுத் தொகை 24 கோடி ரூபாய் என்று நீதிபதி தவறுதலாகக் குறிப்பிடாமல், உண்மையான கூட்டுத் தொகையான 10 கோடி ரூபாய் என்று கணக் கெடுத்தால், ஜெயலலிதாவின் சொத்து மதிப்பு 8 சதவிகிதம் என்பதற்குப் பதிலாக 76 சதவிகிதம் என்றாகிறது. அப்போது ஜெயலலிதா தண்டனைக்கு உரியவர் ஆகிறார் அல்லவா? நீதிபதி இவ்வாறு தவறுதலாகக் கணக்கிட்ட காரணத்தால், ஒரு பெரிய வழக்கில் தண்டனை அளிப்பதற்கு மாறாக, விடுதலை அளித்திருக்கிறார். அது எவ்வளவு பெரிய தவறு? சிறப்பு நீதிமன்ற நீதிபதி குன்ஹா அவர்கள் இந்த வழக்கினை எத்தனை மாதங்கள் நடத்தி, எவ்வளவு சிரமப்பட்டு ஆவணங்களையும், சாட்சியங்களையும், வாதங்களையும் மிகக் கவனமாக ஆய்வு செய்து ஒரு தீர்ப்பினை எழுதி, ஜெயலலிதாவுக்குத் தண்டனை விதித்திருக்கின்ற நிலையில், அந்தத் தண்டனையை அப்படியே தலைகீழாக மாற்றி வேறொரு தீர்ப்பு எழுதுகின்ற நேரத்தில், இந்தத் தவறுகளை உயர் நீதிமன்ற நீதிபதி குமாரசாமி செய்திருக்கலாமா?

இது மிகப் பெரிய தவறு. இதைத் தவிர தீர்ப்பில் வேறு சில தவறுகளையும் வழக்கறிஞர்களும், அரசியல் தெரிந்தவர்களும் கூறுகிறார்கள். ஒரு மூத்த பெண் வழக்கறிஞர், " நீதிபதி குமாரசாமி எழுதிய தீர்ப்பில் குறிப்பிட்டுள்ள கடன்களில் பலவற்றை வட்டியுடன் திருப்பி அடைத்திருப்பார்களே, அந்தத் தொகைக்கான வருமானத்தை நீதிபதி கணக்கிட்டிருக்க வேண்டாமா" என்று வாதத்தை எழுப்புகிறார்.

ஜெயலலிதாவின் இந்தச் சொத்துக் குவிப்பு வழக்கில் அரசு வழக்கறிஞராக இருந்து செயல்பட்டவர் பவானிசிங். இவர் குற்றவாளிகளான ஜெயலலிதா தரப்பினருக்கு எதிராக வாதிட வேண்டியவர். ஆனால் அவ்வாறு அவர் வாதிடவில்லை என்றும், அவர் நீக்கப்பட வேண்டுமென்றும் பிறிதொரு வழக்கு உச்ச நீதிமன்றம் வரை நடைபெற்றது. இவர் முறையாக வாதிடவில்லை என்பதற்கு ஒரே ஒரு உதாரணம், இவர் தான் அரசு வழக்கறிஞராக நீடிக்க வேண்டுமென்று ஜெயலலிதா தரப்பினரே உச்ச நீதிமன்றம் வரை இவருக்காக வாதாடினார்கள் என்பதிலிருந்தே தெரிந்து கொள்ள முடிகிறது அல்லவா?

இறுதியாக உச்ச நீதிமன்றம் வரை அந்த வழக்கு சென்று, உச்ச நீதிமன்ற நீதிபதிகள் மூன்று பேர் இணைந்து அளித்த தீர்ப்பில் பவானி சிங்கை நீக்க வேண்டுமென்றும், அவருடைய வாதத்தை நீதிபதி ஏற்றுக் கொள்ளக் கூடாது என்றும், அவருக்குப் பதிலாக கர்நாடக மாநில அரசு வேறொருவரை அரசு வழக்கறிஞராக நியமிக்க வேண்டுமென்றும் தீர்ப்பளித்தார்கள். அந்தத் தீர்ப்பில், உச்ச நீதிமன்ற நீதிபதி திரு. ஜெ. தீபக் மிஸ்ரா அவர்கள் கூறும்போது, "We are absolutely sure that the learned Single Judge, as the appellate Judge, shall keep in mind the real functioning of an appellate court. The appellate court has a duty to make a complete and comprehensive appreciation of all vital features of the case. The evidence brought on record in entirety has to be scrutinized with care and caution. It is the duty of the Judge to see that justice is appropriately administered for that is the paramount consideration of a Judge. The said responsibiity cannot be abdicated or abandoned or ostracized, even remotely, solely because there might not have been proper assistance by the counsel appearing for the parties. The appellate Court is required to weigh the materials, ascribe concrete reasons and the filament of reasoning must

logically flow from the requisite analysis of the material on record. The approach cannot be cryptic. It cannot be perverse. The duty of the Judge is to consider the evidence objectively and dispassionately. The reasonings in appeal are to be well deliberated. They are to be resolutely expressed. An objective judgment of the evidence reflects the greatness of mind - sans passion and sans prejudice. The reflective attitude of the Judge must be demonstrable from the judgment itself. A judge must avoid all kind of weakness and vacillation. That is the sole test. That is the litmus test. This being the position of a Judge, which is more elevated as the appellate Judge, we are of the considered opinion that there is no justification for rehearing of the appeal as the matter has been heard at length and reserved for verdict" என்று எழுதியிருக்கிறார்கள். உச்சநீதிமன்ற நீதிபதிகள் இத்தகைய முக்கியமான அறிவுரைகளை முன் கூட்டியே தெரிவிக்க என்ன காரணம்? ஏதாவது தவறு நடைபெறக்கூடும் என்று எதிர்பார்த்தார்களோ என்று தானே தற்போது வெளிவந்துள்ள தீர்ப்பைப் பார்க்கும் போது தெரிகிறது. உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்த அந்த அறிவுரைகள் கர்நாடக உயர் நீதிமன்ற நீதிபதி குமாரசாமியால் பின்பற்றப்பட்டிருக்கிறதா?

ஒரு கடைக்காரர் கூட்டுத் தொகையில் தவறு செய்தால், ஒரு சில ரூபாய்கள் இழப்புடன் பிரச்சினை முடிந்து விடும். ஆனால் ஒரு பெரிய வழக்கில், ஏராளமான பிரச்சினைகளை எழுப்பக்கூடிய விதத்தில், ஒரு தீர்ப்பிலே இவ்வளவு அபத்தமாக கூட்டுத் தொகையில் நீதிபதி செய்த தவறுக்கு என்ன பிராயச்சித்தம்?

At page 853 of Judgement of Justice Kumarasamy,a headingisgiven "Gifts as income". Judge takes Rs. 77 lacs foreign remittance as income (page 854). There is a CBI prosecution for receiving this amount and the case is pending in SC. According to conduct rules Minister cannot receive gifts. If gifts and foreign money remittances are accepts as lawful income that will breed corruption.

நீதிபதி குமாரசாமி, தனது தீர்ப்பில், "இந்த வழக்கின் முதல் எதிரி ஜெயலலிதா தனக்கு ரூ. 2.15 கோடி மதிப்புள்ள பரிசுப் பொருள்கள் வந்ததாகவும் - ரூ. 7 இலட்சம் மதிப்புள்ள வெளிநாட்டுப் பணம் வந்ததாகவும் கூறியுள்ளார். ஜெயலலிதா அவரது பிறந்த நாளைக் கொண்டாடியுள்ளார். அவரது வளர்ப்பு மகனுக்குத் திருமணம் செய்து வைத்துள்ளார். அதன்

அடிப்படையில் ஜெயலலிதாவுக்கு வந்த பரிசுப் பொருள்கள் மூலம் அவருக்கு ரூ. 1.50 கோடி வருமானம் கிடைத்ததாக மதிப்பீடு செய்கிறேன்" என்று நீதிபதி குமாரசாமி தமது தீர்ப்பில் தெரிவித்திருக்கிறார். இதில் ஒரு விஷயம் மிகவும் கவனமாகத் தவிர்க்கப்பட்டிருக்கிறது.

ஜெயலலிதா அரசியல் கட்சித் தலைவராக இந்தப் பரிசுப் பொருள்களை வாங்கவில்லை. முதல் அமைச்சராக இருந்து கொண்டு இந்தப் பரிசுகளை வாங்கியுள்ளார் என்பது தீர்ப்பு ஆணையில் மறைக்கப்பட்டிருக்கிறது. அமைச்சர்களாக இருப்பவர்கள் எந்தவித பரிசுப் பொருள்களையும் வாங்கக்கூடாது என்று நடத்தை விதிகளில் கூறப்பட்டுள்ளது. அதை மீறி ஜெயலலிதா பரிசு வாங்கியதே குற்றம். அதை எப்படி வருவாயாக எடுத்துக் கொள்ள முடியும்?

ஜெயலலிதா இவ்வாறு விதிகளை மீறி பரிசுப் பொருள்களைப் பெற்றது தொடர்பாக, அவர் மீது நடுவண் புலனாய்வுப் பிரிவு தொடர்ந்த வழக்கு உச்ச நீதி மன்றத்தில் விசாரணையில் உள்ளது. இந்த நிலையில் ஜெயலலிதா பரிசுகளாக வாங்கிய பொருள் களை வருமானமாக நீதிபதி அறிவித்திருப்பது எப்படிச் சரியாகும்?

ஊழல் வழக்கில் தண்டனை அடைந்த அரசியல் வாதிகள் தங்கள் பதவியை இழக்கும் வகையில் தேர்தல் ஆணையச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரக் காரணமான வழக்கை உச்ச நீதிமன்றத்தில் தொடுத்தவர் 82 வயதான உச்ச நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் லில்லி தாமஸ். அவர் கூறும்போது, "லாலு பிரசாத் யாதவ் உட்பட பலரது மேல் முறையீட்டு வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில் ஜெயலலிதாவுக்கு மட்டும் விரைந்து தீர்ப்பு வெளியாகக் காரணம் என்ன? இது எதன் அடிப்படையில் அளிக்கப்பட்டது என்பது தனி விஷயமாக இருப்பினும், அதனால் ஏற்பட்டுள்ள சூழல் கவலைக்குரியதாக உள்ளது" என்று தெரிவித்திருக்கிறார்.

ஜெயலலிதா தரப்பினர் தங்களின் சொத்துக்களுக்கு வருமான வரித் துறையிடம் கணக்குக் காட்டி, அதை வருமான வரித் துறை ஏற்றுக் கொண்டுள்ளது என்பதைக் காரணம் காட்டியே ஜெயலலிதா தரப்பை அனைத்துக் குற்றச்சாட்டுகளில் இருந்தும் குமாரசாமி விடுவித்திருக்கிறார். ஆனால், ஜெ. சொத்துக் குவிப்பு

வழக்குத் தொடரப்பட்ட பிறகே ஜெயலலிதா, தமது சொத்துக்கள் குறித்த வருமான வரிக் கணக்கைக் காட்டினார் என்பதையும், அந்த விஷயத்தில் வருமான வரித் துறையின் முடிவு நீதிமன்றங்களைக் கட்டுப்படுத்தாது என்பதையும் நீதிபதி குமாரசாமி கருத்திலே கொள்ளவில்லை.

இந்தத் தவறான தீர்ப்பு காரணமாக தண்டனையிலிருந்து விடுவிக்கப்பட்ட ஜெயலலிதா 17ஆம் தேதியன்றே மீண்டும் முதலமைச்சராக பதவியேற்கப் போவதாகவும், அதற்குப் பிறகுதான் சட்டப்பேரவையில் நிலுவையிலே உள்ள மானியக் கோரிக்கைகள் மீதான விவாதங்கள் நடைபெறும் என்றும், தமிழகத்திலே திட்டங்கள் முடிவுற்று திறக்கப்படாமல் உள்ள பல்வேறு திட்டங்களுக்கு விடிவு காலம் பிறக்குமென்றும் சொல்லப்பட்டது. ஆனால் ஏடுகளில் தீர்ப்பு பற்றி வெளியிடப்பட்ட தவறுகளையெல்லாம் கண்டவுடன் ஜெயலலிதாவுக்கே வெளியேவரத் தயக்கம். எம்.எல்.ஏ.க்களின் கூட்டமும் 17ஆம் தேதி நடைபெற வில்லை. ஆனால் 22ஆம் தேதியன்று சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தைக் கூட்டி, அன்றைக்கே முதலமைச்சராக ஜெயலலிதா பதவியேற்க இருப்பதாகச் செய்திகள் வருகின்றன.

இப்படித்தான் 2000ஆம் ஆண்டு ஜெயலலிதாவுக்கு எதிரான டான்சி நில பேரம் தொடர்பான இரண்டு வழக்குகளில் 9-10-2000 அன்று சென்னை சிறப்பு நீதிமன்றம் அவருக்கு சிறைத் தண்டனை விதித்தது. அதனைத் தொடர்ந்து 2001ஆம் ஆண்டு சட்டப்பேரவை பொதுத் தேர்தலில் ஜெயலலிதா நான்கு இடங்களில் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்த போதும், போட்டியிடத் தகுதியில்லை என்று தேர்தல் அதிகாரிகளால் வேட்பு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. இதனால் அவர் போட்டியிடவில்லை. ஆனாலும் அந்தத் தேர்தலில் அ.தி.மு.க. பெரும்பான்மையான இடங்களில் வெற்றி பெற்றதால், அவசர அவசரமாக அ.தி.மு.க. சட்டப் பேரவை உறுப்பினர்களின் கூட்டத்தைக் கூட்டி, அதிலே தன்னை சட்டப்பேரவைக் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுத்துக் கொண்டு, ஆளுநராக இருந்த பாத்திமா பீவியின் உதவியோடு முதலமைச்சராக 14-5-2001 அன்று பதவியேற்றுக் கொண்டார். ஆனால் அவ்வாறு பதவியேற்றது செல்லாது என்று உச்ச நீதிமன்றத்தில் வழக்குத்

தொடுத்து, உச்ச நீதிமன்றம், ஜெயலலிதா முதல் அமைச்சராகப் பதவியேற்றது செல்லாது என்று 21-9-2001 அன்று தீர்ப்பளித்தது.

2000ஆம் ஆண்டில் ஜெயலலிதாவுக்கு எதிராகத் தொடரப்பட்ட கொடைக்கானல் பிளசண்ட் ஸ்டே ஓட்டல் வழக்கில் சென்னை சிறப்பு நீதிமன்றம் ஜெயலலிதாவுக்கு ஓராண்டுக் காலம் கடுங்காவல் தண்டனை விதித்தது. அதை எதிர்த்து தொடரப்பட்ட மேல் முறையீட்டு வழக்கில் ஜெயலலிதா விடுவிக்கப்பட்டார்.

இந்த ஒரு வழக்கிலே மாத்திரமல்ல; 1991-1996ஆம் ஆண்டுகளில் ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த போது வெளிநாடுகளிலிருந்து மூன்று இலட்சம் டாலர்களுக்கான வரைவோலைகளை ஜெயலலிதா பெற்ற நேரத்தில், யார் அனுப்பியது என்று தனக்குத் தெரியாது என்று ஜெயலலிதா கூறினார். இருந்தாலும் அந்த வரைவோலைகளை தனது கணக்கிலே வரவு வைத்துக் கொண்டார். இதற்காக அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. ஆனால் இந்த வழக்கிலிருந்தும் ஜெயலலிதா பின்னர் விடுவிக்கப்பட்டார்.

அதுபோலவே, இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டதில் நடைபெற்ற ஊழல் குறித்தும், தரமற்ற நிலக்கரி வாங்கியதில் மின்சார வாரியத்திற்கு ஏற்பட்ட பெரும் இழப்பு குறித்தும், 'டிட்கோ 'விடம் இருந்த ஸ்பிக் நிறுவனப் பங்குகளைத் திருப்பிக் கொடுத்ததில் ஏற்பட்ட இழப்பு குறித்தும், மற்றும் பல்வேறு ஊழல்கள் குறித்தும் வழக்குகள் தொடரப்பட்டு ஒருசிலவற்றில் தண்டனை பெற்றும் கூட, மேல் முறையீட்டு வழக்குகளில் தன்னை எப்படியோ விடுவித்துக் கொண்டார்.

அதைப்போல தற்போது சொத்துக் குவிப்பு வழக்கிலும், இந்த வழக்கு எப்படியும் உச்ச நீதிமன்றத்திலே மேல் முறையீட்டுக்குச் செல்லும் என்ற நிலைமை இருந்த போதிலும், அதைப் பற்றிக் கவலைப்படாமல் ஜெயலலிதா முதல் அமைச்சராகப் பதவியேற்க எண்ணுகிறார்.

இந்த நிலையில் தமிழகத்திலே உள்ள பல்வேறு அரசியல் கட்சிகள் தங்கள் தங்கள் கருத்துகளை வெளியிட்டு வருகின்றன. பெரும்பாலான கட்சிகள் இந்த வழக்கில் தீர்ப்பினை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட வேண்டு மென்ற நிலையினை எடுத்துள்ளன. மத்திய அரசை ஆளும் பா.ஜ.க.வின்

செயல்பாடுகள் பற்றி இந்தத் தீர்ப்பைத் தொடர்புபடுத்தி சில அய்யப்பாடுகள் வெளியிடப்பட்டு வருகின்றன. ஏனென்றால் நீதிபதி குமாரசாமி ஜெயலலிதாவை விடுவித்து தீர்ப்பளித்ததும் இந்தியப் பிரதமரே அவருக்கு தொலைபேசி வாயிலாக வாழ்த்துத் தெரிவித்திருக்கிறார். இன்னும் மத்திய அமைச்சர் சுஷ்மா சுவராஜ் வாழ்த்தியிருக்கிறார். நமது ஊரைச் சேர்ந்த பா.ஜ.க. அமைச்சர் பொன். இராதாகிருஷ்ணன் வாழ்த்துத் தெரிவித்ததோடு, தமிழக முதல் அமைச்சராக ஜெயலலிதா வர வேண்டுமென்றும் பேட்டியளித்திருக்கிறார். இவர்களுக்கெல்லாம் மேலாக, மத்திய நிதி அமைச்சர் அருண் ஜெட்லி இந்தத் தீர்ப்புக்கு முன்பாகவே ஜெயலலிதா வீட்டுக்கே சென்று விட்டு வந்திருக்கிறார். அ.தி.மு.க. ஆட்சி மீது குறை கூறி வந்த பா.ஜ.க.வின் இந்த மாற்றத்திற்கு என்ன காரணம் என்ற விமர்சனம் பெரிதும் வைக்கப்படுகிறது. இன்னும் சொல்லப்போனால் காங்கிரஸ் கட்சியின் தமிழகத் தலைவர், தம்பி ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், தீர்ப்புக்கும் பா.ஜ.க. அரசுக்கும் சம்பந்தம் உண்டு என்றே கருத்துத் தெரிவித்திருக் கிறார். ஜெயலலிதா மீது சொத்துக் குவிப்பு வழக்கை முதன் முதலில் தாக்கல் செய்தவரே திரு. சுப்பிர மணிய சுவாமி அவர்கள்தான். அவர் இப்போது பா.ஜ.க.விலே தான் இருக்கிறார். அந்த வழக்கிலே விடுவிக்கப்பட்டவருக்கு, அதே பா.ஜ.க.வின் முன்னோடிகள் வாழ்த்துத் தெரிவிக்கிறார்கள் என்றால் "பீம்சிங், இது என்ன புது குழப்பம்?" என்றுதானே கேட்க வேண்டியுள்ளது.

இதற்கிடையே நீதிபதி குமாரசாமி, தனது தீர்ப்பிலே மிகப் பெரிய தவறு இருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டு, அவரே தனது தீர்ப்பில் மாற்றம் செய்யக் கூடும் என்ற ஒரு கருத்தும் கூறப்பட்டது. ஆனால் அதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் கர்நாடக உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்களே தீர்ப்பில் திருத்தங்களை மேற்கொள்ளத் தடை விதித்திருக்கிறார்.

ஜெயலலிதா தரப்பினரை இந்த வழக்கிலிருந்து விடுவிக்க நீதிபதி குமாரசாமி என்ன புள்ளி விவரங்களை தனது தீர்ப்பிலே அடிப்படையாக வைத்திருக்கிறாரோ, அந்த அடிப்படை அஸ்திவாரமே நொறுங்கிப் போய் விட்ட நிலையில், இதற்கெல்லாம் என்னதான் முடிவு என்று தமிழக மக்கள் எல்லோரும் எதிர்பார்த்து நிற்கிறார்கள். இந்தியாவில் உள்ள அனைத்து ஊடகங்களும், இந்தத் தீர்ப்பின் காரணமாக தமிழக நிர்வாகத்தில் ஏற்பட்டுள்ள

நிச்சயமற்ற தன்மையினை விரிவாக விளக்கி யிருக்கின்றன. இந்த நேரத்தில் நீதிக்கே பங்கம் நேர்ந்து விட்டதோ என்று அனைவரும் கவலை கொண்டிருக்கின்ற நிலையில், நீதியைக் காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பு நமது ஜனநாயகத்திலும், அரசியல் சட்டத்திலும் நம்பிக்கை உள்ள ஒவ்வொருவருக்கும் உண்டு. குறிப்பாக இந்த நேரத்தில் கர்நாடக அரசுக்கு உண்டு. ஏனென்றால் அவர்கள் தான் இந்த வழக்கில் மேல் முறையீடு செய்ய முதல் உரிமை பெற்றவர்கள். ஆனால் அவர்களையும் திசை திருப்புவதற்கான முயற்சிகள் நடைபெறுவதாகக் கூறுகிறார்கள். எனவே அத்தகைய விமர்சனங்களுக்கெல்லாம் இடம் தராமல், கர்நாடக அரசு நீதியின் முக்கியத்துவத்தை உணர்ந்து, உடனடியாக உச்ச நீதிமன்றத்திலே மேல் முறையீடு செய்வதுதான் ஏற்பட்டுள்ள தவறைக் களைவதற்கு வழிவகுக்கும் என்பதால், அதற்கான அறிவிப்பினைச் செய்ய வேண்டுமென்று மீண்டும் ஒரு முறை வலியுறுத்துகிறேன்.

அன்புள்ள,

மு.க.

17-05-2015



1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

செப்டம்பர் 2022